
।। मूकपञ्चशती ।।

மூகபஞ்சஶதி



॥ मूकपञ्चशती ॥

மூகபஞ்சஸதீ

ஜி.வி. கணேசய்யரின் முதல் இரண்டு பதிப்பினை
அச்சிட்டு வெளியிட்டவர்
ஸ்ரீ எஸ். கல்யாண சுந்தரம்
ஜனார்த்தனா பிரஸ், கும்பகோணம்

ஆர்யா ஶதகம்	:	மூன்றாவது பதிப்பு	நவம்பர் 1954
ஸ்துதி ஶதகம்	:	முதல் பதிப்பு	அக்டோபர் 1951
	:	இரண்டாம் பதிப்பு	நவம்பர் 1965
பாதாரவிந்த ஶதகம்	:	முதல் பதிப்பு	ஜனவரி 1943
	:	இரண்டாம் பதிப்பு	செப்டம்பர் 1961
கடாக்ஷ ஶதகம்	:	முதல் பதிப்பு	நவம்பர் 1948
மந்தஸ்மித ஶதகம்	:	முதல் பதிப்பு	டிசம்பர் 1953

விலை : 500.00

Copies Available at

SRI VIGNESWARA VENKATESWARA TRUST

No. 218, T.T.K. Road, 2nd Floor,
Alwarpet, Chennai - 600 018
Phone : 2499 2155

Typeset & Printed at

JAI GANESH OFFSET PRINTERS

No. 19, Venkatasamy Lane, Santhome,
Chennai - 600 004 INDIA
Phone : 9840111457
E.mail : jaiganeshoffset@yahoo.co.in

மூக பஞ்ச சதீயில் உள்ள 5 சதகங்களையும்
கீழ்க்கண்ட வரிசையில் பாராயணம் செய்யும்படி
ஸ்ரீசரணர்கள் 1944ல் கொடுத்த
ஸ்ரீமுகத்தில் ஆஞ்யித்திருக்கிறார்கள்.

1. ஆர்ய சதகம், 2. பாதாரவிந்த சதகம்,
3. ஸ்துதி சதகம், 4. கடாக்ஷ சதகம்,
5. மந்தஸ்மித சதகம்

என்கிற வரிசையில் பாராயணம் செய்யும் படி
கேட்டுக் கொள்கிறோம்.

பொருளடக்கம்

☎ 044-27222115
Fax : 044-27224305, 372090080

Email : skmkanci@md3.vsnl.net.in

Sri Chandramouleeswaraya Namaha
Sri Sankara Bhagavatpadacharya Paramparagatha Moolamnaya Sarvagnapeeta

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

Srimatam Samsthanam

No. 1, Salai Street, Kanchipuram - 631 502.

Date ____________

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வர ॥

ஆதி சங்கர பகவத் பாதாள் விவேக சூடாமணி என்கிற மிக உயர்ந்த ஸ்தோத்திர க்ரந்தத்தில் जन्तूनां नर जन्म दुर्लभम् (ஜந்தூனாம் நர ஜன்ம துர்லபம்) மனிதப்பிறவி மிக மிக அரிது என்பதை சொல்லியிருக்கிறார்கள். அனேக பிறவி எடுத்த பிறகு தான் இந்த மனிதப் பிறவி கிடைக்கும். மனிதப் பிறவியில் விசேஷம் என்னவென்றால் பிறவி இல்லாமல் செய்து கொள்வது என்பது மனிதப் பிறவியில் தான் முடியும், மற்ற பிறவிகளில் அது முடியாது. ஏனென்றால் பகவானை துதிப்பதற்கு நாக்கும், தரிசனம் பண்ணுவதற்கு கண்ணும், பகவான் குணத்தை கேட்பதற்கு காதும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி சகல இந்திரியங்களையும் கொடுத்து பகவத் விஷயத்திற்காக பயன்படுத்தி கொள்வதற்கு ஏற்ற ஜென்மம் இந்த மனிதப்பிறவி தான். ஆகையால் இப்படி கிடைக்கதற்கரிய மனிதப் பிறவியை வீணாக்காமல் பிறவி இல்லாமல் செய்து கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். பிறவி இல்லாமல் செய்து கொள்வதற்கு நவவிதமான பக்தி (9 விதமான பக்தி) சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு யுகத்திலும் பகவானை அடைவதற்கு ஒவ்வொரு விதமான உபாயங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ध्यायन् कृते यजन् यज्ञयैः त्रेतायाम् द्वापरेर्चयन् । यदाप्नोति तदाप्नोति कलो संकीर्त्य केशवम् ॥ தியானத்தால் பகவானை அடைவதற்கு க்ருத யுகத்தில் முடியும். பகவானை யாகம் , யக்ஞம் செய்து அடைவதற்கு த்ரேதா யுகத்தில் முடியும். துவாபர யுகத்தில் பகவானை துளசியால் அர்ச்சனை / பூஜை செய்து அடையலாம்.

பகவான் நாமத்தை உச்சரித்து பகவானை சுலபமாக அடையலாம் என்று கலியுகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (कलौ संकीर्त्य केशवम् ।।). அப்படி பகவானை அடைந்த அனேக கவிகள் அனேக ஸ்தோத்திரங்களை செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 20வது பீடாதிபதியாக விளங்கிய ஸ்ரீ மூக சங்கரர் என்ற நாமத்தையுடைய யதீந்திரர் பூர்வாஸ்ரமத்தில் பிறவி ஊமையாக இருந்தார். அவருடைய பூர்வாஸ்ரம பெயரோ மற்ற விபரமோ தெரியவில்லை. பிறவி ஊமையாக இருந்த அவரை மூகர் என்றே சொன்னார்கள். அவர் சிறந்த பக்திமானாக விளங்கி பாரத தேசத்தின் நாபிஸ்தானமும், மோக்ஷபுரியான, முக்தியை தரும் சக்தி ஸ்தாபனத்திற்கு பிரதானமாய் இருக்கின்ற காஞ்சி க்ஷேத்திரத்தில் வசித்து வந்தார். ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோவிலை நித்யம் பிரதக்ஷிணம் செய்வதை வழக்கமாக கொண்டிருந்தார். அப்படி ஒரு சமயம் பிரதக்ஷிணம் செய்து கொண்டிருந்த போது தெற்கு கோபுர வாயிலை அடைந்த அவருக்கு ஜல், ஜல் என்று ஒரு சப்தம் கேட்டது. சப்தம் வந்த திசையை நோக்கிய போது அங்கே சர்வலங்காரத்தோடு அம்பாள் ப்ரத்யக்ஷமானாள். அப்பொழுது அவருக்கு இப்படிப்பட்ட அம்பாளின் திவ்யமான சொரூபத்தை ஸ்லோகங்களால் வர்ணிக்க முடியவில்லையே என்ற மனத்தாங்கல் ஏற்பட்டது. அதை அறிந்த அம்பாள் தன்னுடைய திரு முகத்தில் உள்ள தாம்பூலத்தை மூக கவியின் வாயில் அர்ப்பணித்தாள். அதை உள்வாங்கிய மூககவி அந்த தாம்பூல ரசம் நாக்கில் பட்டவுடன் அவருக்கு ஒரு தேஜஸ் உண்டாகி, ஞான ஒளியேற்பட்டு, ஊமை சப்தம் போய் பேசும் சக்தி உண்டாகி முதலில் அவர் வாக்கில் வந்தது:

कारणपरचिद्रूपा काञ्चीपुरसीम्नि कामपीठगता।
काचन विहरति करुणा काश्मीरस्तबककोमलाङ्गलता।।१।।

என்று ஆரம்பித்து மிக உயர்ந்த ஐந்நூறு ஸ்லோகங்களினால் அம்பாளை துதித்தார். இதற்கு **மூகபஞ்சஶதீ** என்று பெயர் ஏற்பட்டது. இந்நூலை ஆர்யா, பாதாரவிந்தம், ஸ்துதி, கடாக்ஷம், மந்தஸ்மிதம் என்று ஐந்து சதகங்களாக பிரித்து அனுக்ரஹித்துள்ளார். **மூகபஞ்சஶதீ** மிக உயர்ந்த ஸ்தோத்திரமாக மட்டுமில்லாமல் ஒரு சிறந்த காவியமாகவும் அமைந்திருக்கிறது. இந்த மூகபஞ்சஶதீ ஸ்தோத்திரத்தை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது பீடாதிபதியாக விளங்கிய மஹாபெரியவாள் என்று எல்லோராலும் போற்றப் பெற்ற ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸ்வாமிகள் 1944ம் வருடம் ஸ்ரீ காமாட்சி அம்பாளின் ஆலய மஹா கும்பாபிஷேகம் மஹோத்ஸவத்தில் இந்த **மூகபஞ்சஶதீ** ஸ்தோத்திரத்தை ஸ்ரீ எஸ். கல்யாண சுந்தரம் ஐயர், ஜனார்தனா பிரிண்டர்ஸ், அவர்கள் மூலம் அச்சிட்டு தனது பொன்னான திருக்கரங்களால் வெளியிட்டார். தனது ஸ்ரீ முகத்தின் மூலமாகவும், அப்பொழுது நிகழ்த்திய அனுக்ரஹ பாஷணத்தில் விளக்கமாக கூறிய விஷயம் என்னவென்றால் ஆர்யா சதகம் முதலாவது என்றும், இரண்டாவதுமாக பாதார விந்தம் என்றும், மூன்றாவதாக ஸ்துதி சதகம் என்றும், நான்காவது கடாக்ஷ சதகம் என்றும், ஐந்தாவது மந்தஸ்மித சதகம் என்று வரிசையாக ஏன் அமையவேண்டும் என்ற விபரம் மூகபஞ்சஶதீயிலேயே அமைந்துள்ளது என்பதைப் பற்றி விரிவாக கீழ்க்கண்டவாறு எடுத்துரைத்துள்ளார்.

आर्यामेव विभावयन्मनसि यः पादारविन्दं पुरः
पश्यन्नारभते स्तुतिं स नियतं लब्ध्वा कटाक्षच्छविम् ।
कामाक्ष्या मृदुलस्मितांशुलहरीज्योत्स्नावयस्यान्वितां
आरोहत्यपवर्गसौधवलभीं आनन्दवीचीमयीम् ।।

ஐந்நூறு பாடல்களைக் கொண்டதான இந்த நூலிலே, சதகங்களின் தொடர்ச்சியிலே இந்தச் சிறப்பு ஒன்று காணப்படுகிறது. அதாவது ஒரு பச்சைக் குழந்தை கண் முதலிய இந்திரியங்களுக்குப் பலமேற்படுவதற்கு முன்பு, மனோவிருத்தியினாலே மட்டும் தன் விருப்பத்தை வெளியிடுகின்றது. இவ்வாறே கவிச்ரேஷ்டரும் பக்தனாகிய சிசுவின் மனப் ப்ரவிருத்தியை அம்பிகையின் ஸ்வரூபத்தை இடையறாது நினைப்பதிலே திறமையாகச் செலுத்துகின்றார். இக்கருத்து அந்தரபி பஹிரபித்வம் (ஆர்யா 98) என்னும் சுலோகத்தாலே குறிப்பிடப்பட்டது.

अन्तरपि बहिरपि त्वं जन्तुततेरन्तकान्तकृदहन्ते।
चिन्तितसन्तानवतां सन्ततमपि तन्तनीषि महिमानम्।।९८।।

இரண்டாவது சதகத்திலே, (ஐம்பொறிகளால்) கிரஹிக்கும் திறமை சிறிது விருத்தியடைந்த பாலகன் தன்னருகிலே காணப்படும் பொருளைக் காண்பது தொடுவது முதலியவற்றால் களிப்படைகின்றதைப் போல பக்தனாகிய பாலகனும் மிகவும் தாழ்ந்த இடத்திலே, தன்னருகிலேயிருப்பதாலே காணப்படுகின்றதும் இடையறாத தியானத்தின் பயனாகப் பெற்றதுமான ஜகன்மாதாவின் பாதாரவிந்தங்களைக் காண்பதாகிய அமிர்தத்தைப் பெறுகிறான் என்னும் இந்தக் கருத்து

மராளீனாம் (பாதா 3)

मरालीनां यानाभ्यसनकलनामूलगुरवे
दरिद्राणां त्राणव्यतिकरसुरोद्यानतरवे।
तमस्काण्डप्रौढिप्रकटनतिरस्कारपटवे
जनोऽयं कामाक्ष्याश्चरणनलिनाय स्पृहयते।।३।।

என்னும் சுலோகத்தால் குறிப்பிடப் பெற்றது. எவ்வாறு மனதும் ஞானேந்திரியங்களும் புஷ்டியடைந்த பிறகே வாக்கு வெளிக்கிளம்புகின்றதோ, அது போலவே, ஆர்யா சதகமும், பாதாரவிந்த சதகமும், ஆன பிறகு தன்னுடைய பிரேமைக்கு உரியதான பொருளைத் தடங்களின்றிப் புகழ்ந்து பேசத் தொடங்குகிறார். பாண்டித்யம் பரமேஸ்வரி என்று தொடங்கும் ஸ்துதி சதகத்தாலே.

पाण्डित्यं परमेश्वरि स्तुतिविधौ नैवाश्रयन्ते गिरां
वैरिञ्चान्यपि गुम्फनानि विगलद्गर्वाणि शर्वाणि ते।
स्तोतुं त्वां परिफुल्लनीलनलिनश्यामाक्षि कामाक्षि मां
वाचालीकुरुते तथापि नितरां त्वत्पादसेवादरः।।१।।

லௌகிக ஞானம் முதலியவற்றிலே தேர்ச்சியடைந்த இளைஞன் எவ்வாறு லௌகிக செல்வங்களைப் பெறுவதற்கு உரியவனாகின்றானோ, அதுபோலவே முன்னாலே செய்த ஸ்துதியின் பயனாக பக்தன் அம்பிகையின் சிறந்த கடாக்ஷத்தைப் பெற்று மிகச்சிறந்த ஸம்வித்ஞானானுபவத்திற்கு ஏற்றவையான தேஜஸின் புஷ்டி முதலிய வற்றிற்குப் பாத்திரனாகின்றான் என்னும் இக்கருத்து அஸ்தம் க்ஷணாந் நயதுமே பரிதாப ஸ⁻ர்யம் (கடாக்ஷ 6)

अस्तं क्षणान्नयतु मे परितापसूर्यम्
आनन्दचन्द्रमसं आनयतां प्रकाशम्।
कालान्धकारसुषमां कलयन्दिगन्ते
कामाक्षि कोमलकटाक्षनिशागमस्ते॥६॥

என்பது முதலான வர்ணனைகளாலே கடாக்ஷ சக்தியே குறிப்பிடப் பெற்றது.

இந்த வசந்த நவராத்திரி என்கிற மகா புண்ணியகால சமயத்தில் 1944ம் வருடம் இந்த ஸ்தோத்திர புத்தகத்தை அச்சடித்தவரான **ஸ்ரீ ஜனார்த்தனா பிரிண்டிங் பிரஸ்**, கல்யாண ஸுந்தரம் ஐயர் குடும்பத்தினர் வெகு சிரத்தையாக அந்த புத்தகத்தை லோக க்ஷேமத்தை முன்னிட்டு மீண்டும் **ஜெய் கணேஷ் அச்சகத்தின்** மூலம் வெகு சிரத்தையாக அச்சிட்டு வெளியாவதைப் பற்றி மிகவும் சந்தோஷிக்கிறோம். இந்த நூலில் ஸமஸ்க்ருதம் மட்டுமில்லாமல் எல்லோரும் படிக்கும்படியாக தமிழாக்கமும் செய்து அர்த்தங்களையும் மிக அழகாக மறு வெளியிடுவதைப் பற்றி மிகவும் சந்தோஷிக்கிறோம். பக்தி மிகுதியால் அதிசீக்கிரத்தில் இந்த புஸ்தகத்தை அச்சிட்டு சமர்ப்பிக்கின்றவர்களுக்கும், இதை வெளியிடும் விஷயத்தில் உதவியவர்களுக்கும், இந்நூலை படித்து பயன்பெறுபவருக்கும் ஸ்ரீ காமாட்சி அம்பாளின் கடாக்ஷமும் பரிபூர்ணமாக அமைவதற்கு ஆசீர்வதிக்கின்றோம்.

முகாம் : சென்னை
ஸ்ரீ ஶாங்கர ஸம்வத்ஸரம் 2523
ஸ்ரீ ஜய பால்குன அமாவாஸ்யா

நாராயணஸ்ம்ருதி

முகவுரை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது மடாதிபதியாக திகழ்ந்த ஜகத்குரு பூஜ்யஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் ஆக்ஞையை சிரமேற்கொண்டு ஆன்மீக புத்தகங்களை அச்சிட்டு வழங்கவும், நமது மதமாகிய சனாதன தர்மத்தின் சிறந்த அம்சங்களை விளக்கும் வகையில் கட்டுரைகள் பிரசுரம் செய்வதற்கும் ஸ்ரீ ஜனார்தனா பிரிண்டிங் பிரஸ் என்ற தனியார் நிறுவனம் எங்கள் தகப்பனார் ஸ்ரீ எஸ். கல்யாண சுந்தரம் அவர்களின் தலைமையில் 1935 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

மேற்கொண்ட குறிக்கோள்களை நிறைவேற்றவும், ஆஸ்திகர்களின் பயனை கருத்தில் கொண்டும் ஆர்ய தர்மம் என்ற இதழ் மாதமிருமுறை இலவசமாக வெளியிடப்பட்டது. மேலும் ஸ்ரீ வித்யா உபாசன மார்க்கத்தில் முக்கியமாக கருதப்படும் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம், ஸௌந்தர்ய லஹரி என்ற க்ரந்தங்கள் மூலம் தேவநாகரியிலும் ஸ்ரீ வித்யா உபாசகர் ஸ்ரீ ஜி.வி. கணேசய்யர் அவர்களால் வழங்கப்பட்ட தமிழ் மொழி பெயர்ப்புடனும், விளக்க உரையுடனும் அச்சிடப்பட்டு நியாயமான விலையில் பிரசுரிக்கப்பட்டன.

புராதன காலமாக செவி வழியாக கேட்டு வழக்கத்தில் உள்ள நித்ய தெய்வ வழிபாட்டு முறையில் முக்கியமாக விளங்கும் ஸ்ரீ கணேச பஞ்சரத்னம், ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம், ஆதித்ய ஹ்ருதயம் போன்ற ஸ்தோத்திரங்கள், பக்தர்கள் அன்றாடம் படித்து

பயன்படும் வகையில் சிறு பிரசுரங்களாக தமிழில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன.

கும்பகோண க்ஷேத்ர மஹாத்மியம் என்ற புத்தகம் திருக்குடந்தையில் உள்ள அநேக கோவில்களின் மூர்த்தி, தலம், தீர்த்தம் இவைகளின் விசேஷ மஹிமைகளை விளக்கும் வகையிலும் யாத்ரீகர்களுக்கு பயன்படும் நோக்கத்துடன் தொகுக்கப்பட்டு வெளிவந்தது.

ஸ்ரீ வித்யா பூஜாக்ரமம் திதிநித்யாக்ரமம் என்ற வெளியீடுகள் ஸ்ரீ வித்யா உபாசகர்களுக்கு பொக்கிஷமாக பயன்படும் வகையில் அமைந்தன.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரித்த ஸ்ரீ மூககவியால் இயற்றப்பட்ட 500 ஸ்லோகங்கள் கொண்ட மூகபஞ்சசதி, 5 பாகங்களாக தனித்தனியாக முதல் மற்றும் இரண்டாம் பாகம் 1940 முதல் 1965 வரை பிரசுரிக்கப்பட்டது. இதன் க்ரந்தகர்த்தாவான ஸ்ரீ மூககவியின் மேதா விலாசத்தை விளக்கி ஸ்ரீ வித்யா உபாசகர் ஸ்ரீ ஜி.வி கணேச ஐயர் அவர்கள் பல ஆதாரங்களை மேற்கோள் காட்டி, மூலம் ஸம்ஸ்கிருதத்திலும், தமிழில் பதவுரை பொழிப்புரை, விளக்க உரையுடன் தொகுத்துள்ளார்.

ஒவ்வொரு சதகத்திற்கும் விருத்தங்கள் வெவ்வேறாக அமைந்திருப்பது இக் க்ரந்தத்தின் தனிச் சிறப்பாகும்.

ஆர்யா சதகம்

ஆர்யா விருத்தத்தில் (அதாவது மனதில் எளிதில் பதியத்தக்க சொற்கட்டு உடையது) அமைந்த சதகமாகும். மேலும் ஆர்யாவான (உன்னத பெருமை வாய்ந்த பூஜிக்கத்தக்க) ஸ்ரீ காமாக்ஷியின் பெருமைகளைப் போற்றும் உயர்ந்த சதகமாகும். இந்த ஸ்தோத்ரங்களைத் தினமும் பாராயணம் செய்தால் மேதா விலாஸமும், வாக்கு வன்மையும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

பாதாரவிந்த சதகம்

பாதாரவிந்த சதகம் ஸ்ரீ காமாக்ஷியின் பாதங்களின் பெருமைகளைப் போற்றும் சதகமாகும். தன் கருணையால் அம்பாள் ஜகத்தை ரக்ஷித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை அவளின் பாதகமலங்கள் தவக்கோலம் பூண்டு ஜகத் ரக்ஷணமென்னும் தபஸ்ஸை எப்போதும் அனுஷ்டிக்கின்றன என்று கூறப்பட்டுள்ளது.

ஸ்துதி சதகம்

ஸ்ரீ காமாக்ஷியின் மஹோன்னத பெருமைகளைப் போற்றி பாடுவது ஸ்துதி சதகமாகும். இந்த ஸ்துதி சதகத்தை எவன் பிரதிதினமும் நாம பாராயணத்துடன் சேர்த்துப் படிக்கிறானோ அவன் தேவர்களால் ஸேவிக்கப்படுவதுடன், சந்த்ர கலையும், உன்னத தேஜஸ்ஸூம் பெற்று, காமகோடி ஸ்ரீ காமாக்ஷியாகவே ஆகிவிடுகிறான் என்று கூறப்பட்டுள்ளது.

கடாக்ஷ சதகம்

பக்தர்களை தன் கருணை நிறைந்த அருள் பார்வையால் காத்தருளும் ஸ்ரீ காமாக்ஷியின் கடாக்ஷ ப்ரபாவத்தைப் போற்றும் சதகமாகும். பாபம் நிறைந்த ஸம்ஸார ஸமுத்திரத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஜனங்களை அம்பிகையின் கடாக்ஷமானது, பத்திரமாக கரைசேர்க்கும் கப்பலாகும் என்று கூறப்பட்டுள்ளது.

ஸாம்ஸாரிக தாபத்ரயத்தினால் பீடிக்கப்பட்டு சிரமப்படுகிற பலர் இந்த மூக பஞ்சசதியை தினமும் விடாமல் பாராயணம் செய்து வந்தால் ஸகல சிரமங்களும் நீங்கி மிகுந்த ஸௌக்யத்தை அடையலாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மேலும் அவர்களுக்கு ஸ்ரீ காமாக்ஷி ப்ரஸன்னமாகி வேண்டும் வரங்களைக் கொடுப்பாள் என்று இக் க்ரந்தத்தின் பலஸ்ருதியில் கூறப்பட்டுள்ளது.

மந்தஸ்மித சதகம்

ஸ்ரீ காமாக்ஷியின் புன்சிரிப்பின் பெருமைகளைப் போற்றும் சதகமாகும். ஸம்ஸாரம் எனும் அனற்குவியலில் விழுந்து தவிக்கும் ஜனங்களை, அமுத மழை போன்றதும், குளிர்ச்சியின் இருப்பிடமானதுமான அம்பிகையின் புன்னகை ஒளித் திவலைகள் நனைத்துக் குளிர்விக்கின்றன என்று கூறப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த புத்தகத்தை பல ஆண்டுகள் கழித்து மூன்றாவது பதிப்பாக வெளியிட ஸ்ரீ

விக்னேஸ்வரா வெங்கடேஸ்வரா டிரஸ்ட் முன்வந்துள்ளார்கள். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் இறைப்பணியில், தன் வாழ்நாள் முழுவதும் ஈடுபட்ட எங்கள் தகப்பனார் ஸ்ரீ எஸ். கல்யாண சுந்தரம் அவர்களின் எளிய வாழ்க்கையும், இன் சொல்லும் உயர்ந்த பண்பும் சமூக சத் சங்கத்தில் அவர் காட்டிய ஈடுபாட்டையும் பக்தி பிரசுரங்களை வெளியிட்டதன் மூலமாக அவர் செய்த சமூக சேவையையும் நினைவு கூறும் வகையில் இந்த மூன்றாம் பதிப்பு வெளிகொண்டு வரப்பட்டுள்ளது.

எங்கள் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து இந்த நற்பணியை சிறப்புடன் செய்ய முன்வந்துள்ள **ஸ்ரீ விக்னேஸ்வரா வெங்கடேஸ்வரா டிரஸ்ட்** நிறுவனத்திற்கு எங்கள் குடும்ப நபர்களின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இப் ப்ரசுரம் வெளிவர எங்களை ஊக்குவித்தும், பிழைகளை திருத்தியும், பேருதவி புரிந்த, ஸ்ரீ வித்யா உபாஸகர் திருவையாறு ஸ்ரீ ப. நடராஜ சர்மாவிற்கும், இப்பதிப்பு வெளிவர பெரிதும் உதவிய கும்பகோணம் M.S.கோபால கிருஷ்ணன் அவர்களுக்கும் எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்புத்தகம் வெளிவர நல்ல முறையில் கணினி தட்டச்சு செய்து கொடுத்த M. உமா மகேஸ்வரி மற்றும் R. லக்ஷ்மி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி.


மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்ட போது **திரு. ஸ்ரீராம்** அவர்கள் முன்வந்து பிழைகளை திருத்தி செய்த உதவியை எங்கள் குடும்பம் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறது.


இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டு கொடுத்த **ஜெய் கணேஷ் ஆப்செட் உரிமையாளர் திரு. ரவி** அவர்களுக்கும் மேல் அட்டைப் படம் நல்ல முறையில் செய்து கொடுத்த **திரு. சுரேஷ்** அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம்.


காவ்யரஸம் நிரம்பிய இந்த பக்தி நூலில் திகழும் ஸ்துதி பாடல்களை ஆஸ்திகர்கள் பருகி, சுவைத்து, மனம் உருகி பாராயணம் செய்து ஸ்ரீ காமகோடி பீட வாஹினி அன்னை ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாளின் பரிபூரண கிருபைக்கு பாத்திரர்களாக வேண்டுமென ப்ரார்த்திக்கிறோம்.


மூன்றாம் பதிப்பை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரிக்கும் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் பொற்பாத கமலங்களில் சமர்ப்பிக்கிறோம்.


ஸ்ரீ கல்யாண சுந்தரம்
குடும்பத்தினர்





சில்பி











This book is dedicated to

Smt. Mangalam Kalyanasundaram

& Sri. S. Kalyana Sundaram



உரை

ஜி.வி. கணேசய்யர் B.A. B.L.,

உ

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

அவதாரிகை

★★★★★★★★

அம்பிகையைப்பற்றிய ஸ்தோத்திரங்களைச் செய்தவர்களில் ஸ்ரீமதாசார்யாள் முதன்மையானவர்களென்று சொல்வதில் யாதொரு ஆக்ஷேபமுமிருக்காது. அவருக்கு அடுத்த படியிலிருப்பவராக மூக கவியைச் சொல்ல வேண்டும். அதாவது மூக கவியை விடச்சிறந்த வாக் விசேஷத்தையுடைய கவி யாரென்று கேட்டால் நமது ஆசார்யாளைச் சொல்லவேண்டுமே தவிர வேறு ஒருவரையும் சொல்லமுடியாது.

மூகருடைய ஜீவிய சரித்திரத்தைப் பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்வதற்கு நமக்கு ஆதாரங்கள் யாதொன்றுமில்லை. ஊமையொருவர் காஞ்சீபுரத்தில் ஸ்ரீகாமாக்ஷியின் ஸன்னிதியிலிருந்து கொண்டு அம்பிகை யை உபாஸித்து வந்தாரென்றும், அப்போது ப்ரஸன்ன மான அம்பிகையின் உச்சிஷ்டம் தெறித்து அந்த உச்சிஷ்டமே அம்ருதரூபமாக ஏற்பட்டு அவருக்கு உயர்ந்த வாக்கை உண்டாக்கவும் அவர் மஹா கவியாக ஆனாரென்றும் தற்காலம் காமகோடி பீடத்தில் விளங்கிவரும் ஸ்ரீ சங்கராசார்யாள் சொல்லியிருக்கிறார்கள்.[1]

தவிர, காஞ்சீ ஸ்ரீ காமகோடி பீடத்திய குரு பரம்பரையில் (இரண்டாவது) வித்யாகனர் என்பவருக்கு அடுத்தாற்போல் வந்த (நான்காவது) சங்கரர் என்பவர் தான் மூக கவியென்பதாக ஒரு அபிப்பிராயமும் உண்டு. இவர் ஆதியில் ஊமையாக இருந்ததாகவும் ஸ்ரீ வித்யாகனேந்த்ர ஸரஸ்வதியவர்களுடைய அனுக்ரஹத்தினால் அவ்விதக்

---

[1] (நன்மொழிகள் பக்கம் 103).

குறை நீங்கப்பெற்று மஹா கவியாக மாறி அவருக்கு அடுத்தாற்போல் காமகோடி பீடத்திலும் இருந்து விளங்கினாரென்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இவருடைய பெயர் மூகசங்கரரென்றும் சொல்லப்படும். இவர் A.D.398ல் பீடாரோஹணம் செய்து A.D.437ல் ஸித்தியடைந்ததாகவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

மூகரால் இயற்றப்பட்ட ஐந்நூறு (ச்லோகங்கள்) என்பதாக இவருடைய ஸ்தோத்திரத்தை 'மூகபஞ்சசதீ' என்று ஆதிகாலம் முதல்நாளது வரையில் சொல்வது வழக்கமே தவிர, இந்த ஸ்தோத்திரத்திற்கு வேறு பெயர் கிடையாது. இது நூறு நூறு ச்லோகங்கள் கொண்டதாக ஐந்து சதகங்கள் அடங்கியது. அவற்றின் பெயர்கள் 'ஆர்யா சதகம்'[2], பாதாரவிந்த சதகம், மந்தஸ்மித சதகம், கடாக்ஷ சதகம், ஸ்துதி சதகம், என்பவை. முதலாவதும் கடைசியதும் ஸ்ரீ காமாக்ஷியைப் பொதுவாக ஸ்தோத்திரம் செய்கையில் பாக்கி மூன்றையும் முறையே ஸ்ரீ காமாக்ஷியினுடைய பாதாரவிந்தத்தையும், புன் சிரிப்பையும், கடாக்ஷத்தையும் வர்ணிக்கின்றன. ச்லோகங்களின் வ்ருத்தங்களும் ஒவ்வொரு சதகத்திற்கும் வெவ்வேறாக அமைந்திருக்கின்றன.

மூக கவியினுடைய வாக்கின் மாதுர்யமானது ச்லோகங்களின் மூலத்தை வாசித்து அறிகின்றவர்களுக்குத் தான் தெரியவரும். பதங்களெல்லாம் ஜிலுஜிலுலென்று மிகவும் லலிதமாயும், காதுக்கு இனிமையாயும்

---

2 மற்ற சதகங்களும் மொழிபெயர்ப்புடன் கூடிய அர்த்த வியாக்யானங்களுடனும் வெளிவந்திருக்கிறது. இந்த ஐந்து சதகங்களுடைய ஸ்தோத்திரம் மட்டும் நாகரி லிபியில் வெளிவந்து இருக்கிறது.

அமைந்திருப்பதுடன் அர்த்த பாவமானது பக்தியைப் பெருகச் செய்து அம்பிகையின் மனதிலுள்ள கருணைக் கடலை கொந்தளிக்கும்படியாகச் செய்யக்கூடிய விதமாயிருக்கிறது. ஒவ்வொரு ச்லோகத்திலும் ஸ்ரீ காமாக்ஷி, காமகோடிபீடம், ஏகாம்ர நாதர், காஞ்சீ, கம்பாநதீ இம்மாதிரியான காஞ்சீ புரத்தைப்பற்றிய அம்சங்கள் ஒன்றாவது சொல்லப்பட்டிருப்பது இந்த ஸ்தோத்திரத்தின் அழகுகளில் ஒன்றாகும்.

இந்த ஸ்தோத்திரத்தில் ப்ரதிபாதிக்கப்பட்ட ஸ்ரீ காமாக்ஷி தேவியானவள் ஸ்ரீ லலிதாம்பிகையே.

பஶ்சாத் சதுர்புஜா ஜாதா ஸா பரா த்ரிபுராருணா।
பாஶாங்குஶேக்ஷு கோதண்டபஞ்சபாணலஸத்கரா ।
லலிதா ஸைவ காமாக்ஷி காஞ்ச்யாம் வ்யாதிர்பாகதா ।।

பக்தர்களுடைய காமங்களையெல்லாம் தன் த்ருஷ்டிபட்ட மாத்திரத்திலேயே பூர்த்தி செய்விப்பதால் லலிதாம்பிகைக்கு காமாக்ஷீ என்ற பெயர் ஏற்பட்டது.

'யத் யத் வாஞ்சந்தி தத்ரஸ்த்தா: மனஸைவ மஹாஜனா: ।
ஸர்வக்ஞா ஸாக்ஷிபாதேன தத்தத் காமான் அபூரயத் ।।
தத் த்ருஷ்ட்வா சரிதம் தேவ்யா: ப்ரம்ஹா லோகபிதாமஹ:।
காமாக்ஷீதி ததாபிக்யாம் ததெள காமேஶ்வரீதி ச ।।
(லலிதோபாக்யானம்)

காஞ்சீக்ஷேத்ரத்தின் மஹிமையானது வர்ணனையிலடங் காதது.

'நேத்ரத்வயம் மஹேஶஸ்ய காஶீ காஞ்சீ புரீத்வயம் ।'

ப்ரளயகாலத்திலும் அழிவில்லாதது. ஸ்ரீசக்ராகாரமாக

அமைக்கப்பெற்றது. ஸ்ரீ காமாக்ஷியானவள் அந்த காம கோடி பீடத்தில் வீற்றிருந்து பக்தானுக்ரஹம் செய்து கொண்டிருக்கிறாள். அம்பிகையின் பதியான காமேச்வரரானவர் அங்கு ஏகாம்ரநாதர் என்ற பெயருடன் விளங்கிக் கொண்டிருக்கிறார். ஈச்வரனுடைய பெயரில் குறிக்கப்பட்ட ஏகாம்ரமானது (ஒற்றை மாமரமானது) இன்னமிருந்து கொண்டிருக்கிறது. இந்த ஆம்ரத்தின் ஸ்வரூபமானது.

'ஶிவபீஜ ஸமுத்பூதம் வேதஶாகாபிருஜ்வலம் ।
ம்ருகண்டு தனயாதாரம் ரஸாலம் தம் நமாம்யஹம் ॥

என்றபடி வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அம்பாளுடைய ஸ்ரீ க்ருஹத்தின் வாயுபாகத்தில் ருத்ரகோடியில் ஸ்ரீ ஏகாம்ர நாதருடைய ஆலயமும் ஏகாம்ரமும், ஆக்னேய பாகத்தில் ஸ்ரீ புண்யகோடியில் ஸ்ரீ வரதராஜருடைய ஆலயமும் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

'ஆதி ஸ்ரீ மந்திரஸ்யாஸ்ய வாயுபாகே மஹேசிது: ।
விஸ்த்ருதம் புவனஶ்ரேஷ்டம் கல்பிதம் பரமேஷ்டிணா ॥
ஸ்ரீக்ருஹஸ்யாக்னிபாகே து விசித்ரம் விஷ்ணுமந்திரம் ॥

பரப்ரம்ஹஸ்வரூபிணியான மஹா காமேச்வரியானவள் ஸ்ரீ காமாக்ஷியாகவும், (ஸ்ரீ ஏகாம்ரநாதரென்ற) ஸ்ரீ மஹா காமேசஸ்வரூபிணியாகவும், (ஸ்ரீ வரதராஜரென்ற) ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸ்வரூபிணியாயுமிருப்பதுடன் ஸ்ரீ காம கோடியில் ஸ்ரீ காமராஜபீடத்தில் பிலாகாச ரூபிணியாயும் விளங்கிக் கொண்டிருக்கிறாள்.

இந்த மஹாபிலமானது நாதபிந்து யுக்தமான பரமாகாச ஸ்வரூபமென்றும், ப்ரம்ஹ சரீரமென்றும்,

ஜகத்காமகலாகாரமென்றும் பலவிதமான பெயர்களால் குறிக்கபடும். அம்பாள் பிலாகாச ஸ்வரூபிணியா யிருக்கையில் லோககண்டகணான பந்தகாஸுரன் என்பவனை ஸம்ஹரிப்பதற்காக கன்யகாரூபமாய் வெளியில் வந்ததும், அவனுடைய ஸம்ஹாரமான பிறகு அம்பிகையின் கட்டளையால் அந்த மஹாபிலத்தின் த்வாரத்தின் பேரில் காயத்ரீ ஸ்வரூபமான மண்டபமானது தேவதைகளால் கட்டப்பட்டு பிலத்திற்கு மறை விடமாயிருப்பதும், மற்ற விஷயங்களும் 'ஸ்ரீ காமாக்ஷி விலாஸ'த்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

'காயத்ரீ மண்டபாதாரம் நாபிஸ்தானம் புவ: பரம்।
புருஷார்த்தப்ரதம் ஶம்போ: பிலப்ராந்தம் நமாம்யஹம்॥

இந்த பிலத்தில் ஆகாசரூபிணியாயிருந்த அம்பாளு டைய உக்ரஸ்வரூபத்தை சமனம் செய்வதற்காக ஸ்ரீமதா சார்யாளால் ஸ்ரீசக்ர ப்ரதிஷ்டாபனம் செய்யப்பட்டு அம்பாள் அவ்விடத்தில் ஆகர்ஷணம் செய்யப்பட்டு அங்கு ஸான்னித்யத்தோடிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

முன்னொரு காலத்தில் கைலாஸத்தில் அம்பிகை யானவள் லீலையாகத் தன் பதியின் நேத்திரங்களைத் தன் கைகளால் மறைக்கவும், அந்த ஒரு க்ஷணத்தில் லோகங்களிலெல்லாம் அந்தகாரமேற்பட்டு தத்தளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த பரமசிவன் அம்பிகையின் மீது கோபிக்கவும், அதற்கு விமோசனமாக காஞ்சீபுரியில் தன்னைக் குறித்து தவம் செய்து மீண்டும் தன்னை அடையுமாறு சொல்லப்பட்ட தேவியானவள் அவ்விதம் காஞ்சிக்கு வந்து கடினமான நியமத்தோடு ஆம்ர மரத்தினடியில் மணலைக்கொண்டு லிங்கமூர்த்தியைக் கல்பித்து கடுந்தவமியற்றுகையில் அம்பிகையின் ப்ரேமாதிசயத்தின் அளவைக் கண்டு ஆனந்திக்க எண்ணங்

கொண்ட பரமேச்வரன் கங்கையையழைத்து ப்ரவாஹ ரூபமாய் அம்பிகையின் தவத்திற்கு இடையூறு செய்யும்படிச் சொல்லவும், அப்படியே கங்கையானவள் பயங்கரமான ப்ரவாஹமாய் வந்து அம்பிகை தவம் செய்யுமிடத்தை நெருங்கவும் அம்பாள் லிங்கரூபமாயிருக்கும் தன் பதிக்கு ஆபத்து நேரிடுமோவென்று பயந்து கலங்கி வேறொன்றும் செய்வதற்குத் தோன்றாமல் தன் கைவளைகள் பதியவும் இரு ஸ்தனங்கள் குழையவும் தன் பதியைக் கட்டி ஆலிங்கனம் செய்தவுடன் அதினால் பரமானந்தமடைந்த பரமேச்வரன் ப்ரஸன்னமாகி ப்ரவாஹத்தைத் தடுத்து அம்பிகையின் அபீஷ்டத்தைக் கொடுத்ததாகவும் சொல்லப்படும். [இந்த நதியினால் அம்பிகைக்கு கம்பம் (நடுக்கம்) உண்டான காரணத்தைக் கொண்டு அதற்கு கம்பா என்று பெயர் ஏற்பட்டது].

இங்குள்ள பரமசிவனுடைய லிங்கமூர்த்தியானது அம்பாளால் ஆலிங்கனம் செய்யப்பட்டபோது அம்பாளுடைய ஸ்தன, கங்கணங்கள் அழுந்தியதினால் ஏற்பட்ட அடையாளங்களோடிருப்பதாகச் சொல்லப்படும்.

'உமாலிங்கன ஸங்க்ராந்த குசகங்கணமுத்ரிதம்।
லிங்கம் ஏகாம்ரநாதஸ்ய ஸைகதம் ஸமுபாஸ்மஹே॥'

இவ்விதமான லீலைகள் நடந்த புண்யக்ஷேத்ர மாகிய காஞ்சியில், பக்தகோடிகளுக்கு ஸமஸ்தமான காமங்களையும் கொடுக்கும் கருணாரூபிணியான ஜகன் மாதாவானவள் ஸ்ரீ காமாக்ஷீ என்ற அஸாதாரணமான நாமத்துடன் பக்தானுக்ரஹார்த்தமாக விளங்கிக்கொண்டிருக்கிறாள். அப்பேர்ப்பட்ட பரதேவதையின் க்ருபையை அடைவதற்கு மூக கவியால் அருளிச் செய்யப்பட்ட இந்த *'பஞ்சசதீ'* என்ற ஸ்தோத்ரமானது முக்யமான ஸாதனமாகும். வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் அம்பிகையினிடம் பக்தியையும் பெருகச்செய்யும் இந்த திவ்யமான

ஸ்தோத்திரத்தை யாவரும் எளிதிலறியும் விதமாக தமிழில் மொழி பெயர்த்து இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது. பக்தர்களனைவரும் இதை வாசித்து மூககவியினுடைய பேருபகாரத்தினால் ஸ்ரீலலிதா மஹா த்ரிபுரஸுந்தரியாகிய ஸ்ரீ காமாக்ஷியின் ஸ்வரூப ஞானமடைந்து அவளுடைய க்ருபைக்குப் பாத்ரர்களாக வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இக்ஷு கோதண்ட புஷ்பேஷு பாஶாங்குஶலஸத்கராம்।
உத்யத்ஸூர்ய நிபாம் வந்தே மஹாத்ரிபுரஸுந்தரீம்॥
விஶ்வகாரண நேத்ராட்யாம் மஹாத்ரிபுரஸுந்தரீம்।
பந்தகாஸுர ஸம்ஹர்த்ரீம் காமாக்ஷீம் தாமஹம் பஜே॥
ஸ்வர்ணாங்கீம் ரத்னபூஷாட்யாம் ஶுகஹஸ்தாம் சுசிஸ்மிதாம்।
காஞ்சீ நிவாஸினீம் வந்தே காமாக்ஷீம் காமிதார்த்ததாம்॥

G.V.G.

உ

श्री गुरुभ्यो नमः

श्रीकामाक्ष्यै नमः

मूककविना विरचिता

।। मूकपञ्चशती ।।

आर्या शतकम्

*****

மூக கவி இயற்றிய "மூகபஞ்சஶதி"

ஆர்யா சதகம்

*****

कारणपरचिद्रूपा काञ्चीपुरसीम्नि कामपीठगता।
काचन विहरति करुणा काश्मीरस्तबककोमलाङ्गलता।।१।।

காரண பரசித்ரூபா காஞ்சீபுரஸீம்னி காமபீடகதா ।
காசன விஹரதி கருணா காஶ்மீரஸ்தபககோமலாங்கலதா।।1

காரண பரசித்ரூபா	*காரணபரசித் ரூபிணியும்*
காஞ்சீபுரஸீம்னி	*காஞ்சீபுரத்தின் எல்லைக்குள் (காஞ்சீபுரத்தில் இருக்கும்)*
காமபீடகதா	*காமகோடி பீடத்திலிருப்பவளும்*

காஸ்மீரஸ்தபக	*குங்குமப்பூவின் கொத்து போல்*
கோமலாங்கலதா	*ம்ருதுவான சரீரத்தையுடைய யவ்வநமான*
கருணா	*கருணாரூபியானவள்*
விஹரதி	*விளையாடிக் கொண்டிருக்கிறாள்.*

1. சித் என்றால் ஞானம், உணர்ச்சி என்றர்த்தம்.

2. நிஷ்களமும் நிருபாதிகமுமான பரப்ரம்ஹமானது பராஸம்வித்ரூபமானது. இதையே தான் பரசித்ரூபமென்று சொல்லப்படும். இப்படியிருக்கும் போது அது யாதொரு விதமான உணர்ச்சியாவது நினைவாவது இல்லாத நிலையோடிருக்கும். அதற்கு அஹம் (நான்) என்றாவது, இதம் (இது, அதாவது தன்னை தவிர்த்ததான ஒன்று) என்றாவது பாவங்கள் தனியாக அப்போது கிடையாது. அதாவது, அவ்விரண்டு பாவங்களும் இரண்டறக்கலந்து அவற்றுள் பாகுபாடில்லாமல் இருப்பது (நிர்குண) பரப்ரம்ஹத்தின் ஸ்வரூபம்.

3. இதையே தான் சிவசக்தி ஸாமரஸ்யமான ரூபமென்று சொல்லப்படும். இவையிரண்டில் சிவனென்பது பரப்ரம்ஹத்தின் ப்ரகாசாம்சமென்றும், சக்தியென்பது விமர்சாம்சமென்றும் சொல்லப்படும். திரும்பவும் சித் என்பதே சிவனென்றும் ப்ரகாசாம்சமென்றும் சொல்லப்படும். விமர்சாம்சமான சக்தியானது இருவகைப்பட்டது. பரப்ரம்ஹத்தில் சிவனோடு ஆமர்சமாக (இரண்டற) கலந்திருக்கும்போது அது ஸூக்ஷ்மமான ரூபத்தோடிருக்கிறது. அப்போது அதை சித்ரூபிணீ, சைதன்யரூபா என்று சொல்லப்படும். [ரூபமென்ற பதத்தின் விசேஷமென்னவென்றால் சித்தாக இருந்தபோதிலும் (பிறகு ஜகத்தாகப்பரினமிப்பதால்) அதினின்றும் வேறுபட்டது போன்றது என்பது தாத்பர்யம்] ஆகவே

சிவனை சித் என்றும், சக்தியை சித்ரூபிணியென்றும் சொல்லப்படும். இவ்விரண்டும் பரப்ரம்ஹத்தில் தனித்தனியாக இராமல் சேர்ந்திருப்பதால் பரப்ரம்ஹத்தை ப்ரகாச விமர்ச ஸாமரஸ்ய ரூபமென்று சொல்லப்படும்.

4. ப்ரளயகாலத்தில் ஸகல ஜகத்தும் நசித்துப்போய் ப்ரம்ஹம் மட்டும் எஞ்சியிருக்கும்போது அதற்கு வேறு வஸ்துக்கள் தேவையில்லாமல் தன்னை மறந்து ஸ்வாத்மாராமமாய் நிருபாதிக ஸம்வித் ரூபமாயிருக்கிறது. பிறகு ப்ராணிகளுடைய பூர்வ கர்மாக்களின் விசேஷத்தினால் ஸ்ருஷ்டி ஏற்பட வேண்டிய ஸமயம் வரும்போது ப்ரம்ஹத்திற்கு ஒருவிதமான ஸ்ருஷ்டி யோன் முகமான உணர்ச்சி உண்டாகி (முந்தி இரண்டறக் கலந்திருந்த) அதனுடைய ப்ரகாச, விமர்சாம்சங்கள் எழுச்சியடைகின்றன. அப்போது ப்ரகாசாம்சமானது அனன்யோன்முகமான 'அஹம்' என்ற பாவத்தோடிருக்கையில் விமர்சாம்சமான சக்தியானது 'இதம்' என்று சொல்லப்படுவதான ஜகத்திற்குக் காரணமாயிருந்து அவ்வித ஜகத்தாகவும் பரிணமிக்கிறது. அதாவது சக்தியானவள் ஸூக்ஷ்மரூபத்தில் விச்வோத்தீர் ணையாக (ஜகத்தை கடந்தவளாக) பரப்ரம்ஹத்தில் சித்ரூபிணியாயிருந்தவள், ஸ்ருஷ்டி காலத்தில் ஸ்தூல ரூபத்தில் விச்வாத்மிகையாக (ஜகத்தாக) தோன்றுகிறாள். இப்படி, ப்ரம்ஹமானது ஸ்ருஷ்டியோன்முகமாகி ப்ரவ்ருத்திப்பதும், அஹம், இதம் என்ற பாவங்கள் தனிப்பட்டு அதனால் இதம் என்று குறிப்பிடப்படும் ஜகத்தானது உண்டாவதும், பரப்ரம்ஹத்தின் விமர்சாம்சத்தின் செயல்கள்.

5. இவ்விதம் ஜகத்திற்குக்காரணமும், பராஸம்வித் (பராசித்) ஸ்வரூபமான பரப்ரம்ஹத்தின் விமர்சாம்சரூபமான சக்தியாக அம்பிகை இருப்பதை இங்கு 'காரண பரசித்ரூபா' என்று சொல்லப்பட்டது. [இவ்வித விமர்சாம்சமானது ப்ரகாசாம்சமான பரமசிவனுடன் ஸாமரஸ்யமடைவதின் பேரில் ஜகத்தானது உண்டாகிறதே தவிர கேவலம் சிவனாலாவது சக்தியினாலாவது ஜகத் ஸ்ருஷ்டி ஏற்படுவதில்லை என்பது ஸித்தாந்தம்.]

6. அம்பிகையின் பீடங்கள் ஐம்பத்தியொன்று என்று சொல்லப்படுகையில் அவற்றில் முக்கியமானவை ஓட்யாண, ஜாலந்தர, பூர்ணகிரி, காமராஜபீடங்க ளென்றும், அவற்றிலும் காமராஜபீடமென்பது தான் முக்ய மானதென்றும் சொல்லப்படும். அந்த பீடமானது காஞ்சி யிலிருப்பதாகவும் அதின் மத்தியில் அம்பிகை இருப்ப தாகவும் இங்கு சொல்லப்பட்டது. இதையே காமபீட மென்றும் காமகோடிபீடமென்றும் சொல்லப்படும்.

7. அம்பிகையானவள் தன் குழந்தைகளான நம்மிடம் பரமகருணையோடிருப்பது இந்த ஸ்தோத்திரத்திலும் இதர ஸ்தோத்திரங்களிலும் விசேஷமாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது.

कञ्चन काञ्चीनिलयं करधृतकोदण्डबाणसृणिपाशम्।
कठिनस्तनभरनम्रं कैवल्यानन्दकन्दमवलम्बे।।२।।

கஞ்சன காஞ்சீ நிலயம் கரத்ருத கோதண்டபாண ஸ்ருணிபாசம்।
கடினஸ்தனபர நம்ரம் கைவல்யானந்த கந்தம் அவலம்பே।।2।।

காஞ்சீ நிலயம்	காஞ்சியை வாசஸ்தானமாயு-டையதும்
கரத்ருதகோதண்ட பாண - ஸ்ருணி பாசம்	கைகளில் தரித்த (இக்ஷு) கோதண்ட, (புஷ்ப) பாண அங்குச, பாசங்களோடு கூடியதும்
கடினஸ்தனபர நம்ரம்	உறுதியான ஸ்தனபாரத்தினால் வளைந்திருப்பதும்
கைவல்யானந்தகந்தம்	கைவல்யமென்ற மோக்ஷத்தின் ஆனந்தத்திற்கு வித்தாகியிருப்-பதுமான
கஞ்சன	ஓரானொரு பரம்பொருளை
அவலம்பே	சரணமடைகிறேன்.

1. ஸ்ரீ லலிதாம்பிகையே ஸ்ரீ காமாக்ஷியாகையால் அதே ஆயுதங்களை கைகளில் வைத்திருப்பதாகச் சொல்லப் பட்டது.

2. 'காஞ்சீ திலகம்' என்ற பாடாந்தரத்தில் காஞ்சீபுரிக்குத் திலகம் போல் விளங்குகிறவள் என்றர்த்தம்.

चिन्तितफलपरिपोषणचिन्तामणिरेव काञ्चिनिलया मे।
चिरतरसुचरितसुलभा चित्तं शिशिरयतु चित्सुधाधारा।।३।।

சிந்தித பல பரிபோஷன சிந்தா மணிரேவ காஞ்சிநிலயா மே।
சிரதரஸுசரித ஸுலபா சித்தம் ஶிஶிரயது சித் ஸுதாதாரா।।3।।

காஞ்சிநிலயா	*காஞ்சியிலிருப்பவளும்*
சிரதர ஸுசரித ஸுலபா	*வெகு நீண்ட காலமாகச் செய்யப்பட்ட ஸத்கார்யங்களால் எளிதில் அடையக் கூடியவளும்*
சிந்தித பலபரிபோஷண-	*நினைத்த பலன்களைக் கிடைக்கச் செய்வதில்*
சிந்தாமணிரேவ	*சிந்தாமணியைப் போலவே இருப்பவளுமான*
சித்ஸுதாதாரா	*சித்ரூபமான அம்ருத தாரையான (ஸ்ரீகாமாக்ஷியான)வள்*
மே	*என்னுடைய*
சித்தம்	*மனதை*
ஶிஶிரயது	*குளிரச்செய்யட்டும்.*

कुटिलकचं कठिनकुचं कुन्दस्मितकान्ति कुङ्कुमच्छायम्।
कुरुते विहृतिं काञ्च्यां कुलपर्वतसार्वभौमसर्वस्वम्॥४॥

குடிலகசம் கடினகுசம் குந்தஸ்மிதகாந்தி குங்குமச்சாயம்।
குருதே விஹ்ருதிம் காஞ்ச்யாம் குலபர்வத
ஸார்வபௌமஸர்வஸ்வம்॥4॥

குடிலகசம்	வளைந்த கூந்தல்களையுடையதும்
கடினகுசம்	கெட்டியான ஸ்தனங்களை யுடையதும்
குந்த ஸ்மித காந்தி	குந்த புஷ்பம் போன்ற காந்தியுடைய புன்சிரிப்பையுடையதும்

குங்குமச்சாயம்	குங்குமம் போன்ற நிறத்தை-யுடையதும்
குலபர்வதஸார்வ- பௌம	குலபர்வதங்களின் சக்ரவர்த்தியான ஹிமவானுடைய
ஸர்வஸ்வம்	ஸமஸ்த ஸௌபாக்யரூபமா-யிருப்பதுமான ஒரு மூர்த்தியானது
காஞ்ச்யாம்	காஞ்சீபுரியில்
விஹ்ருதிம் குருதே	விளையாடிக்கொண்டிருக்கிறது

பூமியிலிருக்கும் பர்வதங்களில் முக்யமான ஏழு பர்வதங்களை . குல பர்வதங்களென்று சொல்லப்படும். அவற்றின் பெயர்கள்:-

மஹேந்த்ரோ மலய: ஸஹ்ய: சுக்திமான் ருக்ஷபர்வத:।
விந்த்யச்ச பரியாத்ரச்ச ஸப்தைதே குலபர்வதா:॥

அவற்றிற்கெல்லாம் சக்ரவர்த்தியாக ஹிமவானைச் சொல்லப்படும்.

'ஶைலானாம் ஹிமவந்தம் ச நதீனாம் சைவ ஸாகரம்।
கந்தர்வாணாம் அதிபதிம் சக்ரே சித்ரரதம் விதி:॥'

(ப்ரம்ஹாண்ட புராணம்)

पञ्चशरशास्त्रबोधनपरमाचार्येण दृष्टिपातेन ।
काञ्चीसीम्नि कुमारी काचन मोहयति कामजेतारम् ।। ५।।

பஞ்சஶர ஶாஸ்த்ர போதனபரமாசார்யேண
த்ருஷ்டிபாதேன।
காஞ்சீ ஸீம்னி குமாரீ காசன மோஹயதி காமஜேதாரம்॥5॥

காஞ்சீ ஸீம்னி	*காஞ்சீபுரியில்*
காசன குமாரீ	*ஓரானொரு குமாரியானவள்*
பஞ்சஶர ஶாஸ்த்ர	*காம சாஸ்த்ரத்தை*
போதன	*போதிப்பதில்*
பரமாசார்யேண	*ச்ரேஷ்டமான குருவாயிருக்கும்*
த்ருஷ்டிபாதேன	*(தன்னுடைய) பார்வையினால்*
காமஜேதாரம்	*பரமேச்வரனை*
மோஹயதி	*மோஹமடையச் செய்கிறாள்*

'அரவிந்தம் அஶோகஞ்ச சூதம் ச நவமல்லிகா।
நீலோத்பலம் ச பஞ்சைதே பஞ்சபாணஸ்ய ஸாயகா:॥'

என்று சொல்லப்பட்ட ஐந்து (புஷ்ப) பாணங்களையுடையவனாக இருப்பதால் மன்மதனுக்கு பஞ்சரனென்று பெயர்.

லலிதாம்பிகையானவள் ச்ருங்காரரஸ ப்ரதானையாதலால் அவளுடைய பார்வையானது காம சாஸ்த்ரத்தை போதிப்பதில் பரமாசார்ய ரூபமாயிருப்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டது. அதற்கு அத்தாக்ஷியாக அந்தப் பார்வையானது மன்மதனை ஜயித்தவரான பரமேச்வரனைக் கூட மோஹமடையும் படிச்செய்வதைச் சொல்லப்பட்டது.

परया काञ्चीपुरया पर्वतपर्यायपीनकुचभरया ।
परतन्त्रा वयम् अनया पङ्कजसब्रह्मचारिलोचनया ।।६।।

பரயா காஞ்சீபுரயா பர்வதபர்யாய பீனகுசபரயா ।
பரதந்த்ரா வயமனயா பங்கஜ ஸப்ரம்ஹசாரிலோசனயா ॥6॥

காஞ்சீபுரயா	காஞ்சீபுரியிலிருப்பவளும்
பர்வதபர்யாய – பீனகுசபரயா	பர்வதங்களின் உருவம் போல் பருத்ததுமான குசபாரங்களையுடையவளும்
பங்கஜ ஸப்ரம்ஹசாரி – லோசனயா	தாமரை புஷ்பங்களுக்கு ஸமமான கண்களையுடை-யவளுமான
அனயா பரயா	இந்த பரதேவதையினால்
வயம்	நாம்
பரதந்த்ரா	பரவசமாகிவிட்டோம்.

ऐश्वर्यमिन्दुमौले: ऐकात्म्यप्रकृति काञ्चिमध्यगतम्।
ऐन्दवकिशोरशेखरं ऐदंपयर्यम् चकास्ति निगमानम्।।७।।

ஐஶ்வர்யம் இந்துமௌலே: ஐகாத்ம்ய ப்ரக்ருதி
காஞ்சிமத்யகதம்।
ஐந்தவகிஶோர ஶேகரம் ஐதம்பர்யம் சகாஸ்தி
நிகமானாம்।।7।।

ஐகாத்ம்ய ப்ரக்ருதி	பரப்ரம்ஹத்தோடு அபேதமா-யிருக்கும் ப்ரக்ருதி ரூபமானதும்
காஞ்சிமத்யகதம்	காஞ்சீபுரியின் மத்தியிலிருப்பதும்
ஐந்தவகிஶோரஶேகரம்	பாலசந்திரனை சிரோபூஷணமாக உடையதுமான
இந்து மௌலே: – ஐசுவர்யம்	சந்த்ரமௌளீச்வரருடைய ஐச்வர்யமானது

நிகமானாம் ஐதம்பர்யம்	வேதங்களுக்கெல்லாம் பரம தாத்பர்யமாக
சகாஸ்தி	விளங்குகிறது.

1. ஸகல ப்ரபஞ்சமும் உண்டாவதற்குக் காரணமாயிருக்கும் வஸ்துவுக்கு ப்ரக்ருதி என்று பெயர். இதையே மூலப்ரக்ருதி என்றும் சொல்லுவார். இதுவேதான் அம்பிகையின் ஸ்வரூபம். இது புருஷனென்னப்படும் பரமசிவனுடன் அபேதமாயிருக்கிறதென்பது சாக்தர்களுடைய ஸித்தாந்தம். (ப்ரக்ருதியானது ஜட வஸ்து என்றும் புருஷனின்று வேறுபட்டதென்றும் ஸாங்க்யர்கள் சொல்வதை சாக்தர்கள் ஒப்புக்கொள்வதில்லை.

1. பரமசிவனுக்கு இருப்பதுபோல் அம்பிகைக்கும் சிரஸில் சந்த்ரகலை உண்டு.

2. வேதசிரோபாகங்களான உபநிஷத்துக்களில் அம்பிகை ப்ரதிபாதிக்கப்படுவது.

ஶ்ருதிஸீமந்த ஸிந்தூரீக்ருத பாதாப்ஜ தூலிகா।
ஸகலாகம ஸந்தோஹ ஶுக்தி ஸம்புடமௌக்திகா॥

என்று 'ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்திலும்'

'ஶ்ருதீனாம் மூர்த்தானோ தததி தவ யௌ ஶேகரதயா।
மமாப்யேதௌ மாத: ஶிரஸி தயயா தேஹி சரணௌ॥

என்று 'ஸௌந்தர்யலஹரி'யிலும் வர்ணிக்கப் பட்டிருக்கிறது.

3. அம்பிகையினால் தான் பரமசிவனுக்கு ஸகல ஐச்வர்யமும் ஏற்பட்டிருக்கிறது என்பது 'சிவ: சக்த்யா யுக்தோ' என்ற ஸௌந்தர்யலஹரி ச்லோகத்தில் சொல்லப்பட்டிருப்பதுடன்

'அக்ஞாதஸம்பவம் அனாகலிதான்வவரயம்
பிக்ஷும் கபாலினம் அவாஸஸம் அத்விதீயம்।
பூர்வம் கரக்ரஹண மங்களதோ பவத்யா:
ஶம்பும் க ஏவ புபுதே கிரிராஜகன்யே।।

என்பதாக 'அம்பாஸ்துதி'யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

श्रितकम्पासीमानं शिथिलितपरमशिवधैर्यमहिमानम्।
कलये पाटलिमानं कञ्चन कञ्चुकितभुवनभूमानम्।।८।।

ஶ்ரிதகம்பாஸீமானம் ஶிதிலித பரமஶிவ தைர்ய
மஹிமானம்।
கலயே பாடலிமானம் கஞ்சன கஞ்சுகித புவன
பூமானம்।।8।।

ஶ்ரிதகம்பாஸீமானம்	*கம்பாநதியின் கரையிலிருப்பதும்*
பரம ஶிவ தைர்ய	*பரமசிவனுடைய தைர்யத்தை (மன உறுதியை)*
ஶிதிலித	*நழுவச் செய்ததான (கைவிடும்படிச்செய்ததான)*
மஹிமானம்	*மஹிமையோடு கூடியதும்*
கஞ்சுகிதபுவன- பூமானம்	*ஸகலபுவனங்களையும் கஞ்சுகம்போல் தரித்திருப்பதும்*
பாடலிமானம்	*வெண்சிவப்பு நிறத்தோடு கூடியதுமான*
கஞ்சன	*ஒரு வஸ்துவை (மூர்த்தியை)*
கலயே	*த்யானிக்கிறேன்.*

முன்பு மன்மதன் தன் மீது புஷ்பபாணத்தை ப்ரயோகம் செய்ய எத்தனித்த போது அதற்கு இடங்கொடாமல் தன் நேத்ராக்னியினால் அவனை எரித்த பரமசிவனானவர் அம்பிகையின் சௌந்தர்யத்தில் ஈடுபட்டு மனத்தளர்ச்சியடைந்து மோஹமடைந்ததை 'சிதிலித பரமசிவ தைர்ய மஹிமானாம்' என்று இங்கு சொல்லப்பட்டது.

आदृतकाञ्चीनिलयां आद्यां आरूढयौवनाटोपाम्।
आगमवतंसकलिकां आनन्दाद्वैतकन्दलीं वन्दे।।१।।

ஆத்ருதகாஞ்சீநிலயாம் ஆத்யாமாரூடயௌவனாடோபாம்।
ஆகமவதம்சகலிகாம் ஆனந்தாத்வைதகந்தலீம் வந்தே।।௧।।

ஆத்ருத காஞ்சீ நிலயாம்	காஞ்சீபுரியை வாஸஸ்தான-மாகக் கொண்டிருப்பவளும்
ஆத்யாம்	ப்ரபஞ்சத்திற்கெல்லாம் ஆதியாய் இருப்பவளும்
ஆரூட யௌவனாடோபாம்	யௌவனத்தின் ஆடம்பரத்-தோடு நிறைந்தவளும்
ஆகமவதம்சகலிகாம்	வேதங்களின் சிரோபாகத்-திற்கு பூஷணமான உபநிஷதங்களில் மொக்கு போலிருப்பவளும்
ஆனந்தாத்வைதகந்தலீம்	ஆனந்தத்திற்கு ஒரே துளிர் போலிருப்பவளுமான (ஸ்ரீ காமாக்ஷியை)
வந்தே	நமஸ்கரிக்கிறேன்.

1. அவதம்ஸமென்றால் சிரோபூஷணமென்று அர்த்தம். கலிகா என்றால் மொக்கு (மொட்டு) என்று அர்த்தம். கிரீடத்தில் மொக்கை அலங்காரமாக தரிப்பது வழக்கம். உதாஹரணமாக 'முகுளித கரோத்தம்ஸ மகுடா:' என்றும் 'கோத்ராதரபதி குலோத்தம் ஸகலிகே' என்றும் 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இங்கு அம்பிகையை 'ஆகமவதம்ஸகலிகா' என்பதினால் வேதங்களின் சிரோபாகமான உபநிஷத்துக்களுக்கு முடிவான தாத்பர்யமாக இருப்பது சொல்லப்பட்டது.

2. 'அத்வைதானந்தகலீம்' என்றும் சொல்லலாம். அத்வைதானந்தம் என்றால் ஜகத்தும் ப்ரம்ஹமும் ஒன்று என்பதான அறிவு ஏற்படும்போது உண்டாகும் ஆனந்தம் என்று அர்த்தம்.

तुङ्गाभिरामकुचभरशृङ्गारितम् आश्रयामि काञ्चिगतम्।
गङ्गाधरपरतन्त्रं शृङ्गाराद्वैततन्त्रसिद्धान्तम्।।१०।।

துங்காபிராமகுசபரஶ்ருங்காரிதம் ஆஶ்ரயாமி
காஞ்சிகதம்।
கங்காதரபரதந்த்ரம் ச்ருங்காராத்வைததந்த்ர
ஸித்தாந்தம்।।10।।

துங்காபிராமகுசபர – ஶ்ருங்காரிதம்	உன்னதமும் அழகுள்ளதுமான குசபாரத்தால் அலங்கரிக்கப்பட்டதும்
காஞ்சிகதம்	காஞ்சீபுரியிலிருப்பதும்
ஶ்ருங்காரத்வைத-தந்த்ர-ஸித்தாந்தம்	ச்ருங்காரமாகிற அத்வைத தந்த்ரத்தின் முடிவாயுமிருக்கும்
கங்காதர பரதந்த்ரம்	சிவனுடைய பத்னியை
ஆஶ்ரயாமி	சரணமடைகிறேன்

1. பரதந்த்ரமென்றால் பிறருக்கு வசப்பட்டிருப்பது என்று அர்த்தமாகையால் இங்கு (புருஷனுக்கு வசப்பட்டிருப்பதால்) பதிவ்ரதையைக் குறிக்கும். அம்பிகையினுடைய பாதிவ்ரத்யத்தைப் பற்றி மிகவும் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'களத்ரம் வைதாத்ரம் கதி கதி பஜந்தே ந கவய:
ஶ்ரியோ தேவ்யா: கோ வா ந பவதி பதி: கைரபி தனை:।
மஹாதேவம் ஹித்வா தவ ஸதி ஸதீனாமசரமே
குசாப்யாம் ஆஸங்க: குரவகதரோரப்யஸுலப:॥'

(ஸௌந்தர்யலஹரீ)

2. இந்த ஸ்தோத்ரத்திய எல்லா சதகங்களிலும் ச்ருங்கார சாஸ்த்திரத்தின் ஸித்தாந்தமாக அம்பிகை இருப்பதாக இங்கும் பிற இடங்களிலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ச்ருங்காரசாஸ்த்திரத்திற்கும் அம்பிகையின் உபாஸனைக்கும் என்ன ஸம்பந்தம் இருக்கிறதென்பதாக ஸந்தேஹம் தோன்றக்கூடும். ச்ருங்கார ரஸமென்பது ஸ்த்ரீ புமான்களுக்குள் பரஸ்பரமிருக்கும் ஆசைக்கும் செய்கைகளுக்கும் காரண மானது. அதையே ரஸங் களுக்குள் முதன்மையானது (ஆதிரஸம்) என்று சொல்லப்படும். இதைப் பற்றி வெட்கப்பட வேண்டியாவது வெறுக்க வேண்டியாவது யாதொரு அம்சமும் ஸரியாக யோசிப்பவர்கள் மனதில் தோன்றுவதற்கு நியாயமில்லை. இது ஸத்வ குணத்திலிருந்து ஏற்படுகிறதென்றும், அகண்டமும், ஸ்வப்ரகாச முமான ஆனந்தரூபமென்றும், சின்மயமான தென்றும், சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ரஸத்திலி ருந்து ஏற்படும் ஆனந்தத்தினால் மற்ற வஸ்துக்களெல்லாம் மறக்கப்பட்டு அனன்யமான தீவ்ர மனோபாவமானது ஏற்படுவதால், அவ்வித ஆனந்தத்தை

ப்ரம்ஹா னந்தத்திற்கு உடன் பிறந்ததாக (ப்ரம்ஹாச்வாத ஸஹோதர மென்று) சொல்லப்பட்டிருக்கிறது, இதற்கு மேலாக ஸ்தூல சரீரத்திற்கு ஏற்படக்கூடிய ஆனந்தம் வேறு யாதொன்றும் கிடையாதாகையால் சிவசக்திகளுடைய ஸாமரஸ்ய ரூபமான ப்ரம்ஹானந்தத்தை இதற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது.

ஸ்வஸம்வேத்யம் இதம் ப்ரம்ஹ குமாரீ ஸ்த்ரீஸுகம் யதா।
(தக்ஷதர்ம சாஸ்த்ரம்)

ஸாமரஸ்யமென்பதே

'ஸ்த்ரீபும்யோகம் து யத் ஸௌக்யம் ஸாமரஸ்யம் ப்ரகீர்த்திதம்।'

என்றபடி ஸ்த்ரீபுமான்களுடைய சேர்க்கையிலேற்படும் ஸுகத்தைக்குறிக்கும். லயஸித்தி யோகத்தை அப்ய ஸிக்கும் ஸாதகனும் தன்னை சக்தியாக பாவித்து பரமாத்மாவான புருஷனுடன் ஸங்கமமடைவதாகவும் அவ்வித ஸங்கமத்தால் ஏற்படும் ஆனந்தத்தில் தன்னையும் ஜகத்தையும் மறந்து விடுவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் ஷட்சக்ரபேதனம் செய்து குண்டலினியை ஸஹஸ்ராரத்திற்குக் கொண்டுப் போவதின் உத்தேசம் அவ்விடமிருக்கும் பரமசிவனுடன் குண்டலினீ சக்திக்கு ஸாமரஸ்யமேற்படுத்துவது என்பது தான். இவ்விதமான சேர்க்கையை ஸ்ரீமதாசார்யாளும்,

'மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டானே ஹ்ருதி மருதம் ஆகாஶமுபரி।
மனோऽபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே॥'

என்று 'சௌந்தர்யலஹரியில்' வர்ணித்திருக்கிறார்கள்.

குண்டலினியின் ஸஞ்சாரத்தைப்பற்றியே பின்வருமாறும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'குலாங்கனேஷாப்யத ராஜவீதி:
ப்ரவிஶ்ய ஸங்கேத க்ருஹாந்தரேஷு।
விஶ்ரம்ய விஶ்ரம்ய வரேண பும்ஸா
ஸங்கம்ய ஸங்கம்ய ரஸம் ப்ரஸூதே॥'

இவ்விதமான சேர்க்கையினால் அம்ருதப்ரவாஹம் உண்டாகிறதென்றும் அதனால் தேஹத்திலுள்ள ஸகல நாடிகளும் நனையப்பெற்று முடிவாக நித்யமான சரீரமேற்படுகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

வ்யோமனி சித்சசி மண்டல மத்யேத்வகுலேன ஸங்கம்ய।
உபயாங்க ஸங்கஜன்யம் ப்ரவாஹயந்தி ஸுதாபூரம்॥
(வரிவஸ்யா ரஹஸ்யம்)

ஸுதா தாரா ஸாரை: சரணயுகளாந்தர்விகளிதை:।
ப்ரபஞ்சம் ஸிஞ்சந்தீ.. ... -----------------॥
(சௌந்தர்யலஹரீ)

3. பக்தியென்பதே ஈச்வரனிடத்தில் பரானுராக ஸ்வரூபமென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது உத்தம மான பக்தர்கள் ஈச்வரனுக்கும் தங்களுக்கும் நாயக, நாயகீ பாவத்தைக் கல்பித்து கொண்டு அந்த மனோபாவத்துடனேயே உபாஸிப்பதை ஆதிகாலம் முதல் நாம் பார்க்கிறோம்.

4. ஆகவே, சிவசக்திகளுடைய ஸமாயோகமே யோகமென்பதாகவும், அவ்வித ஸம்யோகத்தினால்

உண்டாகும் ஸுகமே பரமானந்தத்தின் லக்ஷணமென்பதாகவும் ஏற்படுகிறது. இவ்விதமான ஸம்யோக மானது ஸூக்ஷ்ம ஸாமரஸ்யமெனப்படும். ஸ்தூல ஸாமரஸ்யமானது ஸூக்ஷ்ம ஸாமரஸ்யமான சிவ-சக்தி ஸம்யோகத்திற்கு அறிகுறியாகவும், அதைப்போன்றதான ப்ரதிபிம்பமாகவுமிருக்கிற படியால் அவ்வித ஸ்தூல ஸாமரஸ்யத்தை போதிக்கும் ச்ருங்கார சாஸ்த்ரமானது (ஸ்த்ரீ புமான்கள் இரண்டறக் கலப்பதைப் பற்றியதால்) அத்வைத தந்த்ரமென்றும், அதற்கு அதிஷ்டான தேவதையாக அம்பிகை இருக்கிறாள் என்றும் சொல்வதில் யாதொரு பிசகும் இல்லை. (ச்ருங்கார சாஸ்த்ரமானது பிறருடைய ஸ்திரிகளை அடைவதற்காக ஏற்பட்டதல்லவென்று ஞாபகப்படுத்திக்கொண்டால் மேலே சொல்லியதற்கு யாதொரு ஆக்ஷேபமும் தோன்றுவதற்கு இடமில்லை. இந்த விஷயத்தைப்பற்றி அறிய விரும்புவோர்கள் பாஸ்கரராயருடைய க்ரந்தங்களையும், ஆர்தர் ஏவலனுடைய புஸ்தகங்களையும் பார்க்கலாம்)

काञ्चीरत्नविभूषां कामपि कन्दर्पसूतिकापाङ्गीम्।
परमां कलामुपासे परशिववामाङ्कपीठिकासीनाम्।।११।।

காஞ்சீரத்னவிபூஷாம் காமபி கந்தர்பஸூதிகாபாங்கீம்।
பரமாம் கலாமுபாஸே பரஶிவவாமாங்கபீடிகாஸீநாம்।।11।।

காஞ்சீரத்ன விபூஷாம்	காஞ்சியாகிற ரத்னத்தை அலங்காரமாயுடையவளும்
கந்தர்ப்பஸூதிகா- பாங்கீம்	மன்மதனுக்குப் பிறப்பிடமாக இருக்கும் கடாக்ஷத்தையுடை-யவளும்

பரமஶிவவாமாங்க - பீடிகாஸீனாம்	பரமசிவனுடைய இடது தொடையில் வீற்றிருப்பவளுமான
காமபி	ஒரானொரு
பரமாம் கலாம்	பரம்பொருளை
உபாஸே	உபாஸிக்கிறேன்

1. காஞ்சீ என்றால் ஸ்த்ரீகள் இடுப்பில் தரிக்கும் மேகலை (ஒட்டியாணம்) என்று அர்த்தம். அதில் இழைக்கப்பட்ட ரத்னங்களால் அலங்கரிக்கப் பட்டவள், "காஞ்சீரத்ன விபூஷா" என்றும் சொல்லலாம்.

2. பரமசிவனுடைய நேத்ராக்னியினால் மன்மதன் எரிக்கப்பட்ட பிறகு லலிதாம்பிகையும் காமேச்வரரும் தோன்றியதைப்பற்றியும், பண்டாஸுர ஸம்ஹாரமான பிறகு தேவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி அம்பிகையானவள் மன்மதனைத் தன் கடைக்கண் பார்வையினால் பிழைப்பு மூட்டியதைப் பற்றியும், லலிதோபாக்யானத்தில் விஸ்தாரமாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது. தன் புருஷன் இறந்ததினால் மிகவும் துக்கித்திருக் கும் ரதிதேவியை அம்பிகை பார்த்தவுடன், மன்மதன் உண்டானது பின்வருமாறு:-

அத தத் தர்ஶனோத்பன்ன காருண்யா பரமேஶ்வரீ।
காந்தம் கடாக்ஷயாமாஸ காமேஶ்வரம் அநிந்திதா॥
தத: கடாக்ஷாத் உத்பன்ன: ஸ்மயமான முகாம்புஜ:।
பூர்வதேஹாதிகருசி: மன்மதோ மதமேதுர:॥
த்விபுஜ: ஸர்வபூஷாட்ய: புஷ்பேஷு:புண்ட்ரகார்முக:॥
ஆனந்தயன் கடாக்ஷேண பூர்வஜன்மப்ரியாம் ரதிம்॥

இவ்விதம் மன்மதனுடைய (மறு) பிறப்பானது அம்பிகையின் கடாக்ஷத்தினால் ஏற்பட்டதால் அந்த கடாக்ஷத்தை அவன் பிறந்த இடமாக (ஸூதிகா க்ருஹமாக) வர்ணிக்கப்பட்டது.

कम्पातीरचराणां करुणाकोरकितदृष्टिपातानाम्।
केलीवनं मनो मे केषाञ्चिद्भवतु चिद्विलासानाम्।।१२।।

கம்பாதீர சராணாம் கருணாகோரகித த்ருஷ்டிபாதானாம்।
கேலீவனம் மனோ மே கேஷாம்சித் பவது
சித்விலாஸானாம்।।12।।

கம்பாதீரசராணாம்	*கம்பா நதியின் தீரத்தில் ஸஞ்சரிப்பவைகளும்*
கருணாகோரகித	*கருணை பூத்த*
த்ருஷ்டிபாதானாம்	*பார்வையோடு கூடியவைகளுமான*
கேஷாஞ்சித்	*சில*
சித்விலாஸானாம்	*சின்மயமான விலாஸங்களுக்கு*
மே மன:	*என்னுடைய மனதானது*
கேலீவனம் பவது	*க்ரீடிக்கும் உத்யானவன-மாகட்டும்*

கோரகமென்றால் மொக்கு என்று அர்த்தம். அம்பாளுடைய பார்வைகள் கருணையால் நிறைந்தவைகளென்பது இங்கு வர்ணிக்கப்பட்டிருப்பதின் தாத்பர்யம்.

आम्रतरुमूलवसतेरादिमपुरुषस्य नयनपीयूषम्।
आराब्धयौवनोत्सवमाम्नायरहस्यमन्तरवलम्बे।।१३।।

ஆம்ரதருமூல வஸதே: ஆதிம புருஷஸ்ய நயன பீயூஷம்।
ஆரப்த யௌவனோத்ஸவம் ஆம்னாயரஹஸ்யம்
அந்தரவலம்பே॥13॥

ஆம்ரதருமூல வஸதே:	ஏகாம்ர மரத்தின் அடியை வாஸஸ்தானமாகவுடைய
ஆதிம புருஷஸ்ய	ஆதி (புருஷனான) பரமசிவனுடைய
நயன பீயூஷம்	கண்களுக்கு அம்ருதமாயிருப்பதும்
ஆரப்த யௌவனோத்ஸவம்	யௌவனத்தின் ஸந்தோஷத்தினுடைய ஆரம்பத்தையுடையதும்
ஆம்னாய ரஹஸ்யம்	வேதங்களின் ஸாரமாயிருப் பதுமான பரம்பொருளை
அந்தரவலம்பே	என் மனதிற்குள் கடைப் பிடித்திருக்கிறேன். (த்ருட மாக த்யானித்திருக்கிறேன்).

1. காமேச்வரரானவர் பஞ்சப்ரம்ஹமயமான மஞ்சத்தில் காமேச்வரியை (ஸ்ரீ லலிதாம்பிகையை) தன் இடது துடையின் மீது வைத்துக்கொண்டு ஸதாகாலமும் அம்பிகையின் அழகில் ஈடுபட்டு ஆனந்தத்தில் மூழ்கி அம்பிகையையே பார்த்தவண்ணமாய் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இருவரும் ஒரேவிதமான வயது சௌந்தர்யம், ஆயுதங்கள் முதலியவைகளுடன் பொருந்தி யிருப்பவர்களாகச் சொல்லப்படும். அவரும் ஸதாஷோட ஶவார்ஷிக:, அம்பிகையும் ஸதா ஷோடஶவர்ஷீயா.

(அதினால் தான் இங்கு ஆரப்தயௌவனோத்ஸவமென்று சொல்லப்பட்டது).

2. ஸ்த்ரீகளை வயதின் க்ரமமாக வர்ணிக்கையில் பதினாறு வயது வரையில் பாலை என்றும், அதற்குமேல் இருபது வரையில் தருணீ (யௌவனை) என்றும், அதற்குமேல் ஐம்பது வரையில் ப்ரௌடை என்றும், அதற்குமேல் வ்ருத்தையென்றும் சொல்லப்படும்.

பாலா ஸ்யாத் ஷோடஶாப்தா ததுபரி
தருணீவிம்ஶதேர்யாவதூர்த்வம்
ப்ரௌடாஸ்யாத் பஞ்ச பஞ்சா-
ஶதவதி பரதோ வ்ருத்ததாமேதி நாரீ॥

அம்பிகை ஸதாஷோடசவர்ஷீயாகச் சொல்லப்படுவதால் இங்கு "ஆரப்தயௌவனோத்ஸவம்" என்றும், இதற்கு முன்வந்த 9-வது ஸ்லோகத்தில் "ஆருடயௌவனாடோபாம்" என்றும் சொல்லப்பட்டது.

3. ஆம்னாயமென்பது வேதங்களைக் குறிப்பதுடன் தந்த்ர சாஸ்திரங்களையும் குறிக்கும்.

4. காஞ்சீபுரியிலிருக்கும் பரமசிவனுடைய மூர்த்திக்கு ஏகாம்ரநாதர் என்று பெயர். அவரே காமேஶவர ஸ்வரூபமென்று சொல்லப்படும். கைலாஸத்தில் ஒரு ஸமயம் பரமசிவனானவர் அந்தபுரத்தில் பார்வதீ தேவிக்கு அர்த்தாஸனம் கொடுத்து ஆனந்தமாக இருக்கும்போது அறுபத்திநாலு கலைகளின் ரூபிணிகளும் அவருக்கு மிகவும் ப்ரியைகளாயுமுள்ள சக்திகள் சற்று அகங்காரம் கொண்டவர்களாய் பரம சிவனை நோக்கத் தங்களுக்கும் பார்வதீதேவி மாதிரி

அர்த்தாஸனம் கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். அப்போது பரமசிவன் அவர்களை நோக்கி கைலாஸத்திலிருக்கும் ஸகல புருஷர்களும் தன்னுடைய அம்சங்களென்றும், கைலாஸத்திய ஸ்திரீகளெல்லோரும் கௌரியினுடைய அம்சங்களென்றும், அப்படியிருந்தும் புருஷர்களுக்குள் தான் ச்ரேஷ்டமாயிருப்பது போலவே ஸ்திரீகளுக்குள் கௌரியே ச்ரேஷ்டமானவளென்றும். ஆகவே கௌரீ தான் தன்னுடைய அர்த்தாஸனத்தில் வீற்றிருக்கத் தகுதியானவள் என்பதாக,

மமாம்ஶா ஜாதா: கைலாஸே பும் ரூபேண ஸமன்விதா:।
ததா கௌர்யாம்ஶ ஸம்பூதா: மம காந்தா ஹி ஸர்வஶ:॥
பும் ரூபாணாம்ஸ்து ஸர்வேஷாம் வரோஹம் புருஷேஶ்வர:।
ததா ஸ்த்ரீணாம் வரா கௌரீ மம காந்தாஸ் ஸஶக்தய:।
தஸ்மாத் யூயம் மஹாகௌர்யா: கிஞ்சின் ந்யூனதயான்விதா:॥
ஸர்வாஸாம் சைவ சக்தீனாம் ஏஷோத்க்ருஷ்டா ஹி பார்வதி।
ஸமாஸனே ஸமாஸீனா வஸத்யந்த: புரோ ஸதா।
ததாஸனம் ந தாதவயம் யுஷ்மப்யம் உமயா ஸஹ॥

என்று பதில் சொன்னார்.

அப்போது, தாங்கள் கௌரியின் அம்சங்கள் தானென்றும் ஆகவே அவளுக்குக் கீழ்பட்டவர்களென்றும் அதினால் பரமசிவனுடன் ஸமமான ஆஸனத்திற்குத் தகுதியற்றவர்களென்றும், சொல்லப்பட்ட அந்த சக்திகள் மிகவும் கோபங்கொண்டு தாங்கள் கௌரிக்குத்

தாழ்ந்தவர்களல்லவென்றும் தங்களுடைய அம்சமாகத்தான் கௌரியானவள் தோன்றிணாளென்றும் அதற்கு மாறாக பரமசிவன் அவளிடத்திலுள்ள பக்ஷபாதத்தினால் சொன்னாரென்றும்,

கிம் ப்ரவீஷி மஹாதேவ பக்ஷபாதம் ஸமாஶ்ரித:।
கௌர்யாம் ச ஜாதா ந வயம் ஸாஸ்மதம் ச ஸமுத்பவா।।

என்று சொல்லி, கௌரியானவள் தங்களைவிட எந்த குணத்தில் உயர்ந்தவளென்று கேட்கவும் பரமசிவன் நகைத்து அவர்களுடைய கர்வத்தைப் போக்க உத்தேசித்து ஸமகாலத்தில் அவர்களெல்லோருடைய வஸ்த்ரங்களும் நழுவும்படிச்செய்தார். உடனே அவர்கள் லஜ்ஜை அடைந்து தங்கள் மர்ம ப்ரதேசங்களை மறைப்பதற்காக பூமியில் விழுந்து விட்டார்கள். அப்போது அவர்களுடைய மானத்தைக் காப்பாற்று வதற்காக அம்பிகையானவள் அவர்கள் வஸ்த்ரங்களைத் திரும்பவும் உடுத்திக் கொள்ளும் வரையில் பரம சிவனுடைய நேத்ரங்களைத் தன் கைகளால் மறைத்தாள். அப்படி மறைத்தது முகூர்த்த காலமாய் இருந்த போதிலும் (தேவலோகத்திய கால மாதலால்) லோகங்களிலெல்லாம் இருள் சூழ்ந்து ஸூர்ய சந்திரர்கள் ஒளி இழந்து படவாமுகாக்னியானது அனைந்து ஸமுத்ரங்கள் கரைபுறண்டன. அந்த ஸமயம் -

''ததஸ் ஸமஸ்தலோகேஷு தேவமான முஹூர்த்தத:।
ஸூர்யசந்த்ரமஸௌநஷ்டௌ நஷ்டோக்னிர்பாடவஸ் ததா।।
ப்ரச்சன்ன நேத்ர மாஹாத்ம்யாத் சந்த்ர ஸூர்யாக்ன்ய தர்ஶனாத்

காடாந்தகார ஸம்வீதே ஜகத்யேகார்ணவீக்ருதே
ஸம்பூதே ப்ரளயே கோரே------------------------''

என்றபடி கோரமான ப்ரளயமேற்பட்டு விட்டது. அவ்வித ஸமயங்களிலும் அழியாத வரம் பெற்றிருக்கும் மார்க்கண்டேயரானவர் ஜலத்தில் மிதந்துகொண்டு தங்குவதற்கு இடமொன்றும் தோன்றாமல் பரமசிவனை ப்ரார்த்திக்க, பரமக்ருபாநிதியாகிய பரமசிவன் காஞ்சியில் ருத்ரசாலையில் அவ்யக்தமான தேஜஸ்ஸின் சித்ரூபியாய் சூதபீஜாக்ருதியோடு விளங்கினார். அப்போது அந்த பீஜத்திலிருந்து ஒரு மா மரமானது கிளம்பி நான்கு வேதங்களாகிற நான்கு கிளைகளுடன் ப்ரளய ஜலத்திற்கு மேல்பட்டதாக வளர்ந்தது. அதைக்கண்ட மார்கண்டேயரானவர் அதின் கிளைகளில் ஏறிக்கொண்டார். அதற்கு மேல் அவர் தைர்யமடைந்து அந்த சூதவ்ருக்ஷத்தின் மூலத்தில் ப்ரவேசிக்கவும், அங்கு அந்த மரத்தின் பழங்களைத் தின்று கொண்டிருந்த ஸுப்ரஹ்மண்யரைப் பார்த்து அந்த அதிசயங்களைப் பற்றிக்கேட்டார். அப்போது ஸுப்ரஹ்மண்யரானவர் அந்த நகரம் காஞ்சீ க்ஷேத்ரமென்றும் அதை அம்பிகையானவள் ப்ரளய காலத்திலும் நாசமடையாத வண்ணம் தன்னுடைய தேஜஸ்ஸினால் காப்பாற்றி வருகிறாளென்றும், அதினாலேயே அந்த நகரத்திற்கு ப்ரளயஜித் என்று பெயரென்றும், அந்த சூதவ்ருக்ஷமானது ஸாக்ஷாத் சங்கருடைய ஸ்வரூபமென்றும், அம்பிகையின் பதியான காமேச்வரரே அந்த வ்ருக்ஷத்தின் பீஜரூபமாயிருக்கிறாரென்றும், அதனால் தான் அவருக்கு ஏகாம்ரநாதர் என்ற பெயர் என்றும் சொன்னார்.

காஞ்சீ நாமான்விதம் க்ஷேத்ரம் மஹாப்ரளயஜித்புரம்।
யதா யதா ஸமாயாந்தி ப்ரளாயாச்ச முஹுர்முஹு:॥
ததா ததா மஹாதேவீ தேஜஸா ரக்ஷிதா புரீ।
தஸ்மான் நாம்னா ப்ரளயஜித் காஞ்சீக்ஷேத்ரமிதம் முனே॥
ஏதத் ரஸால வ்ருக்ஷம் ச வித்தி த்வம் சங்கராத்மகம்।
மஹாத்ரிபுரஸுந்தர்யா: நாத: காமேஸ்வராஹ்வய:।
ஸ்வயம் பீஜாக்ருதிர் பூத்வா சூதரூபேண சோபதே॥

1. மா மரத்திற்கு ஆம்ரமென்றும், சூதமென்றும், ரஸாலமென்றும் பெயர்களாகையால் காஞ்சியிலிருக்கும் காமேச்வரருக்கு ஏகாம்ரநாதரென்றும், ஏகசூதபதி யென்றும், ரஸாலேச்வரரென்றும் பெயர்கள் சொல்லப்படும்.

अधिकाञ्चि परमयोगिभि:आदिमपरपीठसीम्नि दृश्येन।
अनुबद्धं मम मानसं अरुणिमसर्वस्वसम्प्रदायेन।।१४।।

அதிகாஞ்சி பரமயோகிபி: ஆதிம பரபீடஸீம்னி த்ருய்யேன।
அனுபத்தம் மம மானஸம் அருணிம ஸர்வஸ்வ ஸம்ப்ரதாயேன।।14।।

பரமயோகிபி:	*யோகிச்ரேஷ்டர்களால்*
அதிகாஞ்சி	*காஞ்சிபுரியில்*
ஆதிம பரபீடஸீம்னி	*எல்லா பீடங்களுக்கும் ஆதியாயும் ச்ரேஷ்டமுமான காமகோடி பீடத்தில்*
த்ருய்யேன	*பார்க்கப்படுவதும்*
அருணிம ஸர்வஸ்வ – ஸம்ப்ரதாயேன	*சிகப்பு என்பதையே முக்யமாக (ஸாரமாக) உடைய ஸம்ப்ரதாய ரூபமாயிருக்கும் ஸ்ரீ காமாக்ஷியால்*
மம மானஸம்	*என்னுடைய மனதானது*
அனுபத்தம்	*சேர்க்கப்பட்டு (ஈடுபட்டு) இருக்கிறது*

1. பஞ்சாசத் (ஐம்பது) கோடி விஸ்தீர்ணமான பூமண்டலத்தில் இருக்கும் தேவீ பீடங்களில் 64,000

பீடங்கள் முக்யமானவை என்றும், அவற்றிலும் (மாத்ருகைகளின் கணக்கையனுஸரித்து) ஐம்பத்தொரு பீடங்கள் முக்ய மானவை என்றும், அவற்றிற்குள் (தத்வங்களின் கணக்கை அனுசரித்து) 36 பீடங்கள் சிறந்தவையென்றும், அவற்றிற்குள்ளும் 18 பீடங்கள் முக்யமானவையென்றும், அவற்றிலும் காமராஜ, ஜாலாந்தர, ஒட்யானபீடங்கள் என்ற மூன்று தான் ச்ரேஷ்டமென்றும், அவைகளுக்குள்ளும் காமராஜ பீடமென்பதுதான் உத்தமோத்தமமான தென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (தத்வங்களின்கணக் கானது 94, 36, 24 என்று பலவிதமாகச் சொல்லப் படும். மாத்ருகைகளின் கணக்கும் 50 என்றும் 51 என்றும் சொல்லப்படும்).

பஞ்சாஶத் கோடி விஸ்தீர்ணே வர்தந்தே ப்ருதிவீதலே।
காமகோடி மஹாபீடான்யுத்தமானி ஹி தேஷ்வபி॥
சதுஷ்ஷஷ்டி ஸஹஸ்ராணி தேஷு சாஷ்டாஷ்டகானி ஹி।
மாத்ருகா ஸங்க்யயா தேஷு தேஷு தத்வானுஸங்க்யயா॥
தேஷு சாஷ்டாதஶ ச்ரேஷ்டான் யேஷு பீடத்ரயம்பரம்।
தத் த்ரயோ காமராஜாக்யம் ப்ரதமம் ஹி ப்ரசஸ்யதே॥

ஆகையினால் தான் அதை இங்கு 'ஆதிம பர பீட' மென்று சொல்லப்பட்டது.

2. லலிதாம்பிகையானவள் அருண வர்ணமாயிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உதாஹரணமாக, த்யான ச்லோ கத்தில் 'அருணாம் கருணாதரங்கி தாக்ஷீம்' என்றும், 'லௌஹித்யமேவ தஸ்ய ஸர்வஸ்ய விமர்ச: என்பதாக பாவனோபனிஷத்திலும் 'லௌஹித்யம் தத் விமர்ச: ஸ்யாத்' என்பதாக தந்த்ர ராஜத்திலும்

வசனங்களிருக்கின்றன. அம்பிகையானவள் ப்ரகாச ரூபமாயிருக்கும்போது சுக்ல வர்ணமாயிருக்கையில் இச்சாரூபிணியாயிருக்கும்போது விமர்சரூபமாய் அருண வர்ணமாயிருக்கிறாள். ஆகையால் ராக (இச்சா) ஸ்வரூபமான அம்பாளுடைய பாசத்தை சிகப்பு வர்ணமாக பாவனை செய்வது வழக்கம்.

3. ச்ருங்கார ரஸத்திற்கு இச்சை காரணமானதால் அதையும் சிகப்பு வர்ணமாக வர்ணிப்பது வழக்கம். லலிதாம்பிகை யானவள் ச்ருங்கார ரஸ ப்ரதானை யாகையால் அந்தக் காரணத்தைக்கொண்டும் அருணவர்ணமாயிருப்பதாகச் சொல்வது நியாயமாக இருக்கிறது.

கதாஸ்தே மஞ்சத்வம் த்ருஹிண ஹரி ருத்ரேச்வர ப்ருத:
சிவ: ஸ்வச்சச்சாயா ஜடித கபடப்ரச்சதபட:।
த்வதீயானாம் பாஸாம் ப்ரதிபலனராகாருணதயா
சரீரீ ச்ருங்காரோ ரஸ இவ த்ருசாம் தோக்தி குதுகம்।।
(ஸௌந்தர்யலஹரீ)

अङ्कितशङ्करदेहां अङ्कुरितोरोजकङ्कणाश्लेषैः।
अधिकाञ्चि नित्यतरुणीम् अद्राक्षं काञ्चित् अद्भुतां बालाम्।।१५।।

அங்கித ஶங்கர தேஹாம் அங்குரிதோரோஜ
கங்கணாஶ்லேஷை:।
அதிகாஞ்சி நித்யதருணீம் அத்ராக்ஷம்
காஞ்சித் அத்புதாம் பாலாம்।।15।।

அங்குரிதோரோஜ – கங்கணாஶ்லேஷை:	*அங்குரிதமான ஸ்தனங்கள், வளையல்கள் இவைகளோடு பொருந்தியஆலிங்கனங்களால்*

அங்கித ஶங்கரதேஹாம்	தன் பதியான பரமசிவனுடைய சரீரத்தை அரை பாகங்களோடு இருக்கச்செய்தவளும்
நித்யதருணீம்	நித்யமானயௌவனத்தோடு கூடியவளுமான
காஞ்சித் அத்புதாம் – பாலாம்	ஏதோ ஒரு அத்புதமான பாலையை
அதிகாஞ்சி	காஞ்சீபுரியில்
அத்ராக்ஷம்	பார்த்தேன்

1. அம்பிகையானவள் தன் பதியைத் திரும்பவும் அடைவதற்காக காஞ்சீபுரிக்கு வந்தபோது அங்கு வந்த நாரத மஹர்ஷியானவர் அம்பிகைக்கு பஞ்சபாண மந்த்ரத்தை உபதேசித்து அதை ஜபித்து தபஸ் செய்யும்படி சொல்லிப்போனார்.

‘சந்த்ரசூடாஸ்ய பார்யாத்வம் இச்சந்தீ கிரிநந்தினீ।
உபாயம் முனிஶார்தூலம் அப்ருச்சத் வினயான்விதா।।
அத தத்ர முநிஶ்ரேஷ்ட: ஸந்துஷ்ட: கன்யகார்ச்சனை:।
சிவப்ராப்த்யை ஸுகோபாயம் பஞ்சபாண மனும் முனி:।
உபதிஶ்ய ததா கௌர்யை கதவான் தக்ஷிணாம் திஶம்।।’

அதன்பேரில் ஸைகதத்தால் (மணலால்) லிங்கத்தை ஸ்தாபித்து தன் பதியை தியானித்து அம்பிகையானவள் உக்ரமான தபஸ் செய்யும்போது பஞ்சபாணமந்த்ர ஜபத்திணாலுண்டான காமாக்னியினால் பீடிக்கப்பட்ட பரமசிவன் அம்பிகையின் ப்ரேமாதிசயத்தை அறிய விரும்பி, கங்கையை அழைத்து ப்ரவாஹரூபமாய் அம்பிகையின் பூஜைக்கு இடையூறு செய்யும்படி ஆக்ஞாபித்தார்.

அப்போது வந்த கோரமான ப்ரளயத்தைக்கண்டு கர்பத்தை (நடுக்கத்தை) அடைந்த அம்பிகையானவள்,

'ததைவாத மஹா கௌரீ ப்ரளயோதே ஸமாகதே
சிவ ஏவ கதிர் மேsத்ய தஸ்மின்னேகாக்ர மானஸா।
ப்ரளயாம்பு விசோஷாய லிங்கமாலிங்க்ய ஸம்ஸ்திதா॥'

என்றபடி லிங்கமூர்த்தியை இறுகத் தழுவவும், பகவான் ப்ரஸன்னமாகி அம்பிகையைத் தன்னிருகைகளாலும் எடுத்துத் தன்னுடைய இடது பக்கத்தில் வீற்றிருக்கச் செய்தார்.

'தத: ஸ பகவான் ஈஶ: ஸ்வகீயார்த்தாஸனே சுபே।
கௌரீமுத்த்ருத்ய ஹஸ்தாப்யாம் ஸ்தாபயாமாஸ
வாமத:॥
ததோ விமுக்த பாபா ச தப்த காஞ்சன ஸன்னிபா
ப்ரணம்ய ஶிரஸா நாதம் ஸுப்ரஸன்னம் மஹேஶ்வரம்।
சிவார்த்தாஸனமாருஹ்ய பபௌ ஶ்ருங்காரவேஷத:॥'

2. இப்படி ஆலிங்கனம் செய்யப்பட்டபோது அம்பிகையின் ஸ்தனங்கள் அங்குரித்து அவற்றின் தழும்பும் கை வளையல்களின் தழும்பும் லிங்கமூர்த்தியில் ஏற்பட்டதை இங்கு 'அங்கித சங்கரதேஹாம் அங்குரிதோரோஜ கங்கணாச்லேஷை:' என்று சொல்லப்பட்டது.

3. பரப்ரம்ஹ ஸ்வரூபிணியான அம்பிகையானவள் 'அஜரோsம்ருத:' என்று ச்ருதியில் சொல்லப்பட்டபடி நித்ய யௌவனத்தோடு கூடியவளாகையால் தருணீ யென்று இங்கு சொல்லப்பட்டது.

मधुरधनुषा महीधरजनुषा नन्दामि सुरभिबाणजनुषा।
चिद्वपुषा काञ्चिपुरे केलिजुषा बन्धुजीवकान्तिमुषा।।१६।।

மதுரதனுஷா மஹீதரஜனுஷா நந்தாமி ஸுரபி
பாணஜுஷா।
சித்வபுஷா காஞ்சிபுரே கேலிஜுஷா பந்துஜீவகாந்தி
முஷா।।16।।

மதுரதனுஷா	*இனிப்போடு கூடிய வில்லையுடையதும்*
மஹீதரஜனுஷா	*பர்வதராஜனிடமிருந்து பிறப்பையுடையதும்*
ஸுரபி பாணஜுஷா	*மணமுள்ள பாணங்களை-யுடையதும்*
காஞ்சிபுரே	*காஞ்சீபுரியில்*
கேளிஜுஷா	*விளையாடிக்கொண்டிருக்- கிறதும்*
பந்து ஜீவ காந்திமுஷா	*செம்பரத்தம்பூவின் காந்தியை அபஹரித்ததுமான (தோற்கடித்த காந்தியோடுகூடிய)*
சித்வபுஷா	*சித்ஸ்வரூபத்தோடு கூடிய ஒரு மூர்த்தியினால்*
நந்தாமி	*ஆனந்தமடைகிறேன்*

அம்பாளுடைய வில்லானது கரும்பாகையால் மதுர தனுஸ் என்றும், பாணங்கள் ஐந்து புஷ்பங்களாகை யால் ஸுரபி பாணங்களென்றும், அம்பாளுடைய நிறமானது அருணமாகையால் பந்துஜீவ புஷ்பத்தின் காந்தியை

அதிசயித்ததென்றும் சொல்லப்பட்டது. அம்பிகையின் பாணங்கள்

கமலம் கைரவம் ரக்தம் கல்ஹாரேந்தீவரே ததா।
ஸஹகாரகமித்யுக்தம் புஷ்ப பஞ்சகமீஶ்வரி॥

என்று சொல்லப்படும்.

मधुरस्मितेन रमते मांसलकुचभारमन्दगमनेन।
मध्येकाञ्चि मनो मे मनसिजसाम्राज्यगर्वबीजेन॥१७॥

மதுர ஸ்மிதேன ரமதே மாம்ஸல குசபார மந்த கமனேன।
மத்யே காஞ்சி மனோ மே மனஸிஜ ஸாம்ராஜ்ய கர்வ பீஜேன॥17॥

மதுரஸ்மிதேன	அழகான மந்தஹாஸத்- தோடு கூடியதும்
மாம்ஸலகுசபார	பருத்ததான ஸ்தனங்களின் பாரத்தால்
மந்தகமனேன	மெதுவான நடையோடு கூடியதும்
மத்யே காஞ்சி	காஞ்சீபுரியின் மத்தியிலி- ருக்கும்
மனஸிஜஸாம்ராஜ்யகர்வ	மன்மதன் ராஜ்யபாரம் நடத்துவதிலுள்ள கர்வத்திற்கு
பீஜேன	காரணமாயிருப்பதுமான ஒரு பரம்பொருளால்
மே மன:	என்னுடைய மனதானது
ரமதே	களித்துக்கொண்டிருக்கிறது

பூர்வம் பரமசிவனுடைய நேத்ராக்னியினால் பஸ்மீகரிக்கப்பட்ட மன்மதனானவன் காமேச்வரியின் கடாக்ஷத்தினால் மீண்டும் உயிர் பெற்றவனாய் அவன் அம்பிகையை நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்த போது. அம்பிகையானவள் அவனுக்கு ஸகல லோகங்களிலும் ஸாம்ராஜ்யத்தைக் கொடுத்து அவனுக்கு வசப்படாதவர்களும் அவனை நிந்திப்பவர்களும் பாபிகளாவார்களென்றும், தன் பக்தர்களுக்கு அவன் வசப்பட்டு அவர்களுடைய காமங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றும் அனுக்ரஹித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

கச்ச வத்ஸ மனோஜன்மன் அபயம் தவ வித்யதே।
மத் ப்ரஸாதாத் ஜகத் ஸர்வம் மோஹய அவ்யாஹதாசுக:॥

----------- -------- -------- ------

அத்ய ப்ரப்ருதி கந்தர்ப்ப மத் ப்ரஸாதாத் மஹீயஸ:।
அத்ருஶ்யமூர்த்தி: ஸர்வேஷாம் ப்ராணினாம் பவ மோஹக:॥

த்வன் நிந்தாம் யே கரிஷ்யந்தி த்வயி வா விமுகாசயா:
அவஶ்யம் க்லீபதைவ ஸ்யாத் தேஷாம் ஜன்மனி ஜன்மனி।

யே பாபிஷ்டா துராத்மானோ மத்பக்த த்ரோஹிணஶ்ச யே
தான் அகம்யாஸு நாரீஷு பாதயித்வா வினாஶய॥
யேஷாம் மதீய பூஜாஸு மத்பக்தேஷ்வாத்ருதம் மன:।
தேஷாம் காமஸுகம் ஸர்வம் ஸம்பாதய ஸமீப்ஸிதம்॥

இவ்விதம் மன்மதனுக்கு தடையில்லாத ஸாம்ராஜ்ய மேற்பட்டதற்கு அம்பிகையின் அனுக்ரஹமானது காரணமாயிருப்பதால் அவனுடைய கர்வத்திற்கு பீஜமாயிருப்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டது.

धरणिमयीं तरणिमयीं पवनमयीं गगनदहनहोतृमयीम्।
अम्बुमयीं इन्दुमयीं अम्बां अनुकम्पं आदिमामीक्षे।।१८।।

தரணிமயீம் தரணிமயீம் பவனமயீம் ககன தஹன
ஹோத்ருமயீம்।
அம்புமயீம் இந்துமயீம் அம்பாம் அனுகம்பம் ஆதிமாம்
ஈக்ஷே।।18।।

தரணிமயீம்	பூமியின் ஸ்வரூபமாயும்
தரணிமயீம்	ஸூர்ய ஸ்வரூபமாயும்
பவனமயீம்	வாயுஸ்வரூபமாயும்
ககனதஹன ஹோத்ருமயீம்	ஆகாசம், அக்னி, ஹோதா இவர்களின் ஸ்வரூபமாயும்
அம்புமயீம்	ஜலஸ்வரூபமமாயும்
இந்துமயீம்	சந்த்ர ஸ்வரூபமாயுமிருக்கிற
ஆதிமாம் அம்பாம்	ப்ரபஞ்சத்திற்கெல்லாம் ஆதியான தாயாரை
அனுகம்பம்	கம்பாநதியின் கரையில்
ஈக்ஷே	பார்கிறேன்.

1. பரமசிவனுக்குச் சொல்லப்படும் அஷ்டமூர்த்திகளும் அம்பிகைக்குமிருப்பதாகச் சொல்லப்படும். இந்த அஷ்டமூர்த்திகள் ப்ருதிவீ, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசங்களாகிய பஞ்ச பூதங்கள், ஸூர்யன், சந்திரன், யஜமானன் (ஹோதா) என்றவை. அவை இங்கு முறையே தரணி, அம்பு, தஹன, பவன, சுகன, தரணி, இந்து, ஹோத்ரு என்று சொல்லப்பட்டன. பரமசிவனுக்கு இந்த எட்டு மூர்த்திகளிருப்பது,

ஜலம் வன்ஹிஸ் ததா யஷ்டா ஸூர்ய சந்த்ரமஸௌ ததா।
ஆகாஶம் வாயுரவனீ மூர்த்தயோऽஷ்டௌ பினாகின:॥

என்றும்,

'யா ஸ்ருஷ்டி: ஸ்ரஷ்டுராத்யா வஹதி
விதிஹுதம் யா ஹவிர் யா ச ஹோத்ரீ
யே த்வே காலம் விதத்த: ஶ்ருதி விஷயகுணா
யா ஸ்திதா வ்யாப்ய விஶ்வம்।
யாமாஹு: ஸர்வபூதப்ரக்ருதிரிதி ச
யயா ப்ராணின: ப்ராணவந்த:
ப்ரத்யக்ஷாபி: ப்ரபன்னஸ்தனுபிரவது
வஸ்தாபிரஷ்டாபிரீஶ: ॥'

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பிகைக்கு இவை யிருப்பது

'புவி பயஸி க்ருஶானௌ மாருதே கே ஶஶாங்கே
ஸவிதரி யஜமானேऽப்யஷ்டதா சக்திரேகா।
வஹதி குசபராப்யாம் யாऽவனம்ராபி விஶ்வம்
ஸகலஜனனி ஸா த்வம் பாஹிமாம் அத்யவஶ்யம்'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

2. இங்கு தரணி என்று இரண்டு இடங்களில் வருவதில் முதலிலுள்ள 'த' ($த_4$) என்பதை தனுஸ் என்பதிலிருப்பது போலும், இரண்டாவதிலுள்ள 'த' என்பதை தமிழ் என்பதிலிருப்பது போலும் உச்சரிக்கவேண்டும்.

लीनस्थितिमुनिहृदये ध्यानस्तिमितं तपस्यदुपकम्पम्।
पीनस्तनभरमीडे मीनध्वजतन्त्रपरमतात्पर्यम्॥११॥

லீன ஸ்திதி முனிஹ்ருதயே த்யான ஸ்திமிதம் தபஸ்யத்
உபகம்பம்।
பீனஸ்தனபரம் ஈடே மீனத்வஜ தந்த்ர பரம
தாத்பர்யம்॥19॥

முனிஹ்ருதயே	முனீச்வரர்களுடைய ஹ்ருதயத்தில்
லீன ஸ்திதி	லயத்தையடைந்திருப்பது
உபகம்பம்	கம்பாநதிக்கரையில்
த்யானஸ்திமிதம்	த்யானத்தில் அசைவற்று
தபஸ்யத்	தபஸ் செய்கிறதும்
பீனஸ்தனபரம்	பருத்த ஸ்தனபாரங்களு-டையதுமான
மீனத்வஜ தந்த்ர பரம – தாத்பர்யம்	மன்மத சாஸ்த்ரத்தின் ஸாராம்சத்தை
ஈடே	ஸ்தோத்திரம் செய்கிறேன்

காஞ்சீபுரியில் தன்னைக் குறித்து எப்படி தபஸ் செய்யவேண்டுமென்பதை பரமசிவன் அம்பிகைக்குச் சொல்லும்போது, பஞ்சாக்னிமத்தியில் ஊசி முனையில் நின்றுகொண்டு தன்னை த்யானித்துத் தபஸ் செய்ய வேண்டுமென்று சொன்னதாக சொல்லப்பட்டிருக்கிறது.

கரே த்ருத்வா ஶுகஶ்ரேஷ்டம் பஞ்சாக்னௌ
ஸூசிகோபரி।
ஸ்தித்வா மாம் த்யாயதீ பக்த்யா தப: குரு ஸுதுச்சரம்॥

श्वेता मन्थरहसिते शाता मध्ये च वाङ्मनोतीता।
शीता लोचनपाते स्फीता कुचसीम्नि शाश्वतीमाता॥२०॥

**ஶ்வேதா மந்தர ஹஸிதே ஶாதா மத்யே ச வாங்மனோதீதா।
ஶீதா லோசனபாதே ஸ்பீதா குசஸீம்னி ஶாஶ்வதீ
மாதா॥20॥**

ஶாஶ்வதீ மாதா	அழிவில்லாத தாயாரான ஸ்ரீ காமாக்ஷியானவள்
மந்தரஹஸிதே	மந்தஹாஸத்தில்
ஶ்வேதா	வெளுப்பான நிறத்தோடும்
மத்யே	இடையில்
ஶாதா	இளைத்தவளாயும்
ச	இன்னும்
வாங்மனோதீதா	வாக்குக்கும் மனதிற்கும் எட்டாதவளாயும்
லோசனபாதே	பார்வையில்
ஶீதா	குளிர்ச்சியோடு கூடியவளும்
குசஸீம்னி	ஸ்தனப்ரதேசத்தில்
ஸ்பீதா	பருத்தும் (விளங்குகிறாள்).

புன்சிரிப்பை வெண்ணிலவுக்கு ஒப்பிடப்படுவது வழக்கமாகையால் அது வெளுப்பான நிறத்தோடி ருப்பதாக இங்கு சொல்லப்பட்டது. அம்பிகையினுடைய முகமாகிய சந்த்ரனிடமிருக்கும் புன்சிரிப்பாகிற வெண்ணிலவானது ஸாமான்யமான சந்த்ரனின் நிலவைவிட எத்தனையோ மடங்கு ச்ரேஷ்டமானதென்பதாக 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

**ஸ்மித ஜ்யோத்ஸ்னா ஜாலம் தவ வதன சந்த்ரஸ்ய பிபதாம்
சகோராணாம் ஆஸித் அதிரஸதயா சஞ்சுஜடிமா।**

அதஸ்தே ஶீதாம்ஶோ: அம்ருத லஹரீம் ஆம்ல ருசய:
பிபந்தி ஸ்வச்சந்தம் நிஶி நிஶி ப்ருஶம் காஞ்சிகதியா॥

இங்கு அம்பிகையைப் பலவிதமாக வர்ணித்திருப்பதுபோல் ஆசார்யாளும் 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

அராளா கேஶேஷு ப்ரக்ருதிஸரளா மந்தஹஸிதே
ஶிரீஷாபா சித்தே த்ருஷதுபல ஶோபா குசதடே।
ப்ருஶம் தன்வீ மத்யே ப்ருதுருரஸிஜாரோஹ விஷயே
ஜகத்த்ராதும் ஶம்போர் ஜயதி கருணா காசித் அருணா॥

पुरतः कदा नु करवै पुरवैरिविमर्दपुलकिताङ्गलताम्।
पुनतीं काञ्चीदेशं पुष्पायुधवीर्यसरसपरिपाटीम्।।२१।।

புரத: கதா நு கரவை புரவைரி விமர்த புலகிதாங்கலதாம்।
புனதீம் காஞ்சீதேஶம் புஷ்பாயுதவீர்ய ஸரஸ
பரிபாடீம்॥21॥

புரவைரி விமர்த்த	*(புரங்களையெரித்த) பரமசிவ-னுடைய காடாலிங்கத்தினால்*
புலகிதாங்கலதாம்	*புளகமடைந்த சரீரத்தை-யுடையவளும்*
காஞ்சீதேசம் புனதீம்	*காஞ்சீபுரியை பாவனமாகச் செய்பவளும்*
புஷ்பாயுத வீர்ய	*மன்மதனுடைய ப்ரபாவத்தின்*
ஸரஸ பரிபாடீம்	*அழகான முறையின் ஸ்வரூபமாயிருப்பவளுமான ஸ்ரீ காமாக்ஷியை*

புரத:	என் முன்பாக
கதா கரவை நு	எப்போது தான் இருக்கச் செய்வேனோ!

அதாவது, அவ்விதமாயிருக்கும் ஸ்ரீ காமாக்ஷியை தனக்கு எப்போது பார்க்கக் கிடைக்குமோ என்று சொல்லுகிறார்.

पुण्या कापि पुरन्ध्री पुङ्खितकंदर्पसंपदा वपुषा।
पुलिनचरी कम्पाया: पुरमथनं पुलकनिचुलितं कुरुते।।२२।।

புண்யா காபி புரந்த்ரீ புங்கித கந்தர்ப்ப ஸம்பதா வபுஷா।
புலினசரீ கம்பாயா: புரமதனம் புலக நிசுலிதம்
குருதே।।22।।

கம்பாயா: புலினசரீ	கம்பாநதியின் மணல் திட்டுகளில் ஸஞ்சரிப்பவளும்
புண்யா புரந்த்ரீ	புண்யம் நிறைந்த க்ருஹிணி-யாயுமிருக்கும்
காபி	வர்ணிக்கமுடியாத ஒருவள்
புங்கித கந்தர்ப்ப ஸம்பதா	மன்மதனுடைய ஸம்பத்து நிறைந்ததான
வபுஷா	தன் சரீரத்தினால்
புரமதனம்	முப்புரங்களையெரித்தவரான பரமசிவனை
புலக நிசுலிதம்	மயிர்க்கூச்சல் நிறைந்தவராக
குருதே	செய்கிறாள்

1. புளினமென்பது நதிகளிலிருக்கும் மணல் திட்டையைக் குறிப்பதுடன் அவற்றின் கரையையும் குறிக்கும்.

2. புரந்த்ரீ என்றால் வீட்டிலிருக்கும் ஜனங்களைத் தாங்கும் ஸுமங்கலி ஸ்த்ரீ அல்லது, உயிருடனிருக்கும் பதி புத்ரர்களையுடைய (ஸுமங்கலி) ஸ்திரீ என்று அர்த்தம்.

तनिमाद्वैतवलग्नं तरुणारुणसंप्रदायतनुलेखम्।
तटसीमनि कंपायास्तरुणिमसर्वस्वमाद्यमद्राक्षम्।।२३।।

தனிமாத்வைதவலக்னம் தருணாருண ஸம்ப்ரதாய
தனுலேகம்।
தடஸீமனி கம்பாயா: தருணிம ஸர்வஸ்வம் ஆத்யம்
அத்ராக்ஷம்।।23।।

தனிமாத்வைதவலக்னம்	*மிகவும் மெல்லியதான இடுப்பையுடையதும்*
தருணாருண ஸம்ப்ரதாய	*சரியான சிகப்பு நிறத்தை வழக்கமாக உடைய*
தனுலேகம்	*மெல்லிய சரீரத்தோடு கூடியதும்*
தருணிம ஸர்வஸ்வம்	*யௌவனமே நிரம்பியுள்ளதுமான*
ஆத்யம்	*ஆதி பரம்பொருளை*
கம்பாயா: தடஸீமனி	*கம்பா நதியின் கரையில்*
அத்ராக்ஷம்	*பார்த்தேன்.*

पौष्टिककर्मविपाकं पौष्पशरं सविधसीम्नि कम्पायाः।
अद्राक्षमात्तयौवनम् अभ्युदयं कश्चिदर्धशशिमौलेः।।२४।।

பௌஷ்டிக கர்ம விபாகம் பௌஷ்பஶரம் ஸவிதஸீம்னி
கம்பாயா:।
அத்ராக்ஷம் ஆத்தயௌவனம் அப்யுதயம் கஞ்சித்
அர்த்தஶஶிமௌலே:॥24॥

பௌஷ்பஶரம்	*(மன்மதனுடைய ஆட்சிக்குட் பட்டதான) காமத்தை*
பௌஷ்டிக கர்ம விபாகம்	*புஷ்டியாக ஏற்படச் செய்வதும்*
ஆத்த யௌவனம்	*யௌவனம் நிறைந்ததும்*
அர்த்தஶஶி மௌலெ:	*அர்த்த சந்த்ரனை சிரஸில் தரித்தவரான ஏகாம்பரநாதருடைய*
கஞ்சித் அப்யுதயம்	*ஏதோ ஒரு (வர்ணனையில டங்காத)மேன்மையாயிருப்பது-மான மூர்த்தியை*
கம்பாயா:	*கம்பா நதியுடைய*
ஸவிதஸீம்னி	*கரையின் ப்ரதேசத்தில்*
அத்ராக்ஷம்	*பார்த்தேன்.*

संश्रितकाञ्चीदेशे सरसिजदौर्भाग्यजाग्रदुत्तंसे।
संविन्मये विलीये सारस्वतपुरुषकारसाम्राज्ये॥२५॥

ஸம்ஶ்ரித காஞ்சீ தேஶே ஸரஸிஜ தௌர்பாக்ய ஜாக்ரத்
உத்தம்ஸே।
ஸம்வின்மயே விலீயே ஸாரஸ்வத புருஷகார
ஸாம்ராஜ்யே॥25॥

ஸம்ஶ்ரித காஞ்சீதேஶே	*காஞ்சீபுரியை அடைந்ததும்*
ஸரஸிஜதௌர்பாக்ய ஜாக்ரத் உத்தம்ஸே	*சந்த்ரனை சிரோபூஷணமா-யுடையதும்*

ஸாரஸ்வத புருஷகார ஸாம்ராஜ்யே	வாக்கினுடைய ஸாமர்த்தி-யத்தைப்பற்றிய ஸாம்ராஜ்-யத்தோடு கூடியதும்
ஸம்வின்மயே	ஞான ஸ்வரூபமாயிருப்பது- மான ஒரு மூர்த்தியிடத்தில்
விலீயே	நான் லயித்திருக்கிறேன்

1. தாமரஸ புஷ்பமானது பகலில் மலர்ந்து இரவில் மூடுவதினால் அதற்கு ஸூர்யன் மித்ரனாகவும் சந்த்ரன், சத்ருவாகவுமிருப்பதாகச் சொல்வது கவிகளின் ஸம்ப் ரதாயம். அதையொட்டி இங்கு சந்த்ரனை ஸரஸிஜ தௌர்பாக்யனென்றும், அவன் அம்பிகையினுடைய உத்தம்ஸமாக விளங்குவதால் 'சரஸிஜ தௌர்பாக்ய ஜாக்ரத் உத்தம்ஸே' என்று அம்பிகையை வர்ணிக்கப் பட்டது.

2. புருஷகாரமென்றால் வீர்யம், ஸாமர்த்யம், பௌருஷம் என்று அர்த்தம். அம்பிகை ஸர்வ வித்யா ரூபிணியாயும் வர்ணமயியாகவும் இருக்கிறபடியால் வாக்கின் ஸாமர்த் யத்தைப்பற்றிய ஸாம்ராஜ்யத்தோடிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது. அம்பிகையின் உபாஸகர்கள் புருஷ ரூபமடைந்த ஸரஸ்வதீ தேவிமாதிரி ஆகிவிடுவதாகச் சொல்லப்படும். அம்பிகையின் பாதோதகத்திற்கே இவ் விதமான வாக்விலாஸத்தைக் கொடுக்கும் மஹிமை யுண்டென்பதாக

'கதா காலே மாத: கதய கலிதாலக்தகரஸம்
பிபேயம் வித்யார்த்தீ தவ சரண நிர்ணேஜன ஜலம்।
ப்ரக்ருத்யா மூகானாமபி ச கவிதா காரணதயா
கதா தத்தே வாணீ முக கமல தாம்பூல ரஸதாம்'

என்று 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. இவ்விதமான பலனையுத்தேசித்துச் செய்யப்படும் உபாஸனா க்ரமங்களுக்கு ஸாரஸ்வத ப்ரயோகங்களென்று பெயர்.

मोदितमधुकरविशिखं स्वादिमसमुदायसारकोदण्डम्।
आदृतकाञ्चीखेलनं आदिमं आरुण्यभेदं आकलये।।२६।।

மோதித மதுகர விஶிகம் ஸ்வாதிம ஸமுதாய ஸார கோதண்டம்।
ஆத்ருத காஞ்சீ கேலனம் ஆதிமம் ஆருண்யபேதம் ஆகலயே।।26।।

மோதித மதுகர விஶிகம்	வண்டுகளுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கும் (புஷ்ப) பாணங்களையுடையதும்
ஸ்வாதிம ஸமுதாய	தித்திப்பெல்லாம் சேர்ந்து
ஸார கோதண்டம்	ஸாரமாயிருக்கும் (இக்ஷு) கோதண்டத்தையுடையதும்
ஆத்ருத காஞ்சீ கேலனம்	காஞ்சீபுரியில் விளையாடுவதை ஆதரித்ததும்
ஆதிமம்	எல்லாவற்றிற்கும் ஆதியாயிருப்பதுமான
ஆருண்யபேதம்	சிவந்ததொரு மூர்த்தியை
ஆகலயே	தியானிக்கிறேன்.

उररीकृतकाञ्चिपुरीं ऊपनिषदरविन्दकुहरमधुधाराम्।
उन्नम्रस्तनकलशीं ऊत्सवलहरीमुपास्महे शम्भोः ।।२७।।

உரரீக்ருதகாஞ்சிபுரீம் உபநிஷதரவிந்தகுஹரமதுதாராம்।
உந்நம்ரஸ்தனகலசீம் உத்ஸவலஹரீமுபாஸ்மஹே
ஶம்போ:॥27॥

உரரீக்ருத காஞ்சிபுரீம்	காஞ்சீபுரியை விளங்கச்செய்பவளும்
உபநிஷதரவிந்த	உபநிஷத்துக்களாகிய தாமரை புஷ்பத்தின்
குஹரமது தாராம்	நடுவிலிருந்து பெருகும் மகரந்தப்பெருக்கு மாதிரியிருப்பவளும்
உன்னம்ர ஸ்தனகலசீம்	வளையாத (நிமிர்ந்திருக்கும்) ஸ்தன கலசங்களையுடையவளும்
ஶம்போ	பரமசிவனுடைய
உத்ஸவ லஹரீம்	பேரானந்தத்தின் அலைபோன்ற வளுமான ஸ்ரீ காமாக்ஷியை
உபாஸ்மஹே	உபாஸிக்கிறோம்

புஷ்பங்களிலிருந்து தேன் (பூத்தேன்) பெருகுவது மாதிரி உபநிஷத்துக்களாகிய தாமரை புஷ்பங்களிலிருந்து பெருகும் தேனாக அம்பிகையைச் சொல்லப்பட்டது. சகல உபநிஷத்துக்களுக்கும் முடிவான தாத்பர்யமாக அம்பிகை இருப்பதால் இம்மாதிரி சொல்லப்பட்டது.

एणशिशुदीर्घलोचनं एन: परिपन्थिसन्ततं नमताम्।
एकाम्रनाथजीवितं एवं पददूरमेकमवलम्बे।।२८।।

ஏண ஶிஶுதீர்கலோசனம் ஏன: பரிபந்தி ஸந்ததம் நமதாம்।
ஏகாம்ரனாத ஜீவிதம் ஏவம் பத தூரம் ஏகம்
அவலம்பே॥28॥

ஏணசிசுதீர்க்க-லோசனம்	மான்குட்டியினுடையதைப் போன்ற நீண்ட கண்களையுடையதும்
ஸந்ததம்	எப்போதும்
நமதாம்	நமஸ்கரிக்கும் பக்தர்களுடைய
ஏன: பரிபந்த்தி	பாபத்தை தடுப்பதும் (போக்குவதும்)
ஏகாம்ரநாத ஜீவிதம்	ஏகாம்ரநாதருடைய பிராணனாயிருப்பதும்
ஏவம் பத தூரம்	இம்மாதிரி என்று சொல்வதற்கு எட்டாததுமான
ஏகம்	ஒரு பரம்பொருளை
அவலம்பே	சரணமடைகிறேன்.

அம்பிகையினுடைய ஸ்வரூபமானது இம்மாதிரி தானிருக்கிறதென்பதாக ஒருவராலும் சொல்லமுடியாது என்று இங்கு சொல்லப்பட்டது. இதே மாதிரி 'ஏவமித்யா கமாபோத்யா' 'ஏதத்தத் இத்யனிர்தேச்யா' என்பதாக ஸ்ரீலலிதாத்ரிசதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

स्मयमानमुखं काञ्चीमयमानं कमपि देवताभेदम्।
दयमानं वीक्ष्य मुहुर्वयमानन्दामृताम्बुधौ मग्नाः ।।२९।।

ஸ்மயமானமுகம் காஞ்சீமயமானம் கமபி தேவதாபேதம்।
தயமானம் வீக்ஷ்ய முஹுர்வயமானந்தாம்ருதாம்புதௌ மக்னா:।।29।।

ஸ்மயமானமுகம்	சிரித்த முகத்தையுடையதும்
காஞ்சீமயமானம்	காஞ்சீபுரியை வியாபித்து விளங்குவதும்

தயமானம்	கருணையோடு கூடியதுமான
கமபி தேவதாபேதம்	ஒரு தேவதையை
முஹுர் வீக்ஷ்ய	அடிக்கடி பார்த்து
வயம்	நாம்
ஆனந்தாம்ருதாம்புதௌ	ஆனந்தமென்ற அம்ருத ஸமுத்ரத்தில்
மக்னா:	மூழ்கியிருக்கிறோம்.

कुतुकजुषि काञ्चिदेशे कुमुदतपोराशिपाकशेखरिते।
कुरुते जनो मनोऽयं कुलगिरिपरिबृढकुलैकमणिदीपे।।३०।।

குதுகஜுஷி காஞ்சிதேஶே குமுத தபோராஶி பாக ஶேகரிதே।
குருதே ஜனோ மனோऽயம் குலகிரி பரிப்ருட குலைக மணிதீபே।।30।।

காஞ்சிதேசே	காஞ்சீபுரியில்
குதுகஜுஷி	உத்ஸாஹத்தோடு வஸிப்பதும்
குமுத	நீலோத்பலங்களின்
தபோராஶிபாக	தபஸ்ஸின் பரிபாகமான சந்த்ரனை
ஶேகரிதே	சிரோபூஷணமாய் உடையதும்
குலகிரி பரிப்ருட	குலபர்வதங்களுக்குத் தலைவனான ஹிமவானுடைய
குலைக மணிதீபே	குலத்திற்கு ஒரே ஒரு (முக்யமான) ரத்ன தீபமாய் விளங்கும் ஒரு ரூபத்தில்
அயம் ஜன:	இந்த ஜனமானவன்
மன: குருதே	மனத்தைச் செலுத்துகிறான்

1. அதாவது, தான் அவ்விதமாக த்யானம் செய்வதை 'அயம் ஜன: மன: குருதே' என்று சொல்லுகிறார்.

2. அம்பிகையானவள் தன் பிதாவான ஹிமவானுடைய குலத்திற்கு ரத்ன தீபமாய், குன்றாவிளக்காய், இருப்பதை நமது ஆசார்யாளும் 'ரூபாதிகா சிகரி பூபாலவம்ச மணிதீபாயிதா பகவதீ' என்பதாக 'அம்பாஷ்டகத்தில் வர்ணித்திருக்கிறார்கள்.

वीक्षेमहि काञ्चिपुरे विपुलस्तनकलशगरिमपरवशितम्।
विद्रुमसहचरदेहं विभ्रमसमवायसारसन्नाहम्॥३१॥

வீக்ஷேமஹி காஞ்சிபுரே விபுல
ஸ்தனகலஶ கரிம பரவஶிதம்।
வித்ரும ஸஹசர தேஹம் விப்ரம
ஸமவாய ஸார ஸன்னாஹம்॥31॥

விபுல ஸ்தனகலஶ கரிம	பருத்ததான ஸ்தனபாரங்களின் கனத்தினால்
பரவஶிதம்	மிகவும் குனிந்ததாயும்
வித்ருமஸஹசரதேஹம்	பவழம் போன்றதான சரீரத்தை யுடையதும்
விப்ரம ஸமவாய ஸார ஸன்னாஹம்	காமகேளிகளுடைய சேர்க்கையின் ஸாரமாகிற (யுத்த)கோலத்தோடு கூடியதுமான ஒரு மூர்த்தியை
காஞ்சிபுரே	காஞ்சீபுரியில்
வீக்ஷேமஹி	பார்க்கிறோம்.

कुरुविन्दगोत्रगात्रं कूलचरं कमपि नौमि कम्पायाः।
कूलङ्कषकुचकुम्भं कुसुमायुधवीर्यसारसंरम्भम्।।३२।।

குருவிந்த கோத்ர காத்ரம் கூலசரம் கமபி நௌமி கம்பாயா:।
கூலங்கஷ குசகும்பம் குஸுமாயுத வீர்ய ஸார ஸம்ரம்பம்।।32।।

குருவிந்த கோத்ர காத்ரம்	சிகப்பு ரத்னத்திலுண்டானது போன்ற சரீரத்தையுடையதும்
கம்பாயா: கூலசரம்	கம்பா நதியின் கரையில் ஸஞ்சரிப்பதும்
கூலங்கஷ குசகும்பம்	(ரவிக்கையாகிற) கரையைக் கிழித்ததான ஸ்தனங்களை-யுடையதும்
குஸுமாயுத	மன்மதனுடைய
வீர்ய ஸார ஸம்ரம்பம்	வீர்யத்தின் ஸாரமாகிய வேகத்தோடு கூடியதுமான
கமபி	ஒரு (வர்ணிக்க முடியாத) மூர்த்தியை
நௌமி	நமஸ்கரிக்கிறேன்.

1. அம்பாளுடைய வக்ஷ: ப்ரதேசத்தை இதே மாதிரி ஆசார்யாளும்,

குசௌ ஸத்ய: ஸ்வித்யத் தடகடித கூர்ப்பாஸ பிதுரௌ।
கஷந்தௌ தோர்மூலே கனக கலசாபௌ கலயதா।।

என்பதாக 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

இவ்விதம் ஸ்தனங்களை வர்ணிப்பதானது அம்பாளுடைய ஸௌந்தர்யத்தைக் காட்டுவது தவிர, ஜகன்மாதாவான அம்பாளுடைய மஹோத்க்ருஷ்டமான மாத்ருத்வத்தைக் காட்டுவதற்காக இம்மாதிரி அடிக்கடி சொல்லப்படுகிறது.

कुड्मलितकुचकिशोरैः कुर्वाणैः काञ्चिदेशसौहार्दम्।
कुङ्कुमशोणैर्निचितं कुशलपथं शम्भुसुकृतसंभारैः॥३३॥

குட்மலித குச கிஶோரை: குர்வாணை: காஞ்சிதேஶ ஸௌஹார்தம்।
குங்கும ஶோணைர் நிசிதம் குசல பதம் ஶம்புஸுக்ருத ஸம்பாரை:॥33॥

குட்மலித குச கிஶோரை:	கொஞ்சம் மலர்ந்தது போன்ற இளம் ஸ்தனங்களையுடையதும்
காஞ்சிதேஶ	காஞ்சிதேசத்தில்
ஸௌஹார்தம் குர்வாணை:	பற்றுதலை செய்வதும் (உடையதும்)
குங்குமஶோணை:	குங்குமப் பூவைப்போல் (அல்லது, குங்குமத்தைப் போல்) சிகப்பு நிறமுடையதும்
ஶம்பு ஸுக்ருத ஸம்பாரை:	பரமசிவனுடைய ஸுக்ருதங்களின் சேர்க்கையாயிருப்பதுமான ஒரு மூர்த்தியால்
குசலபதம்	(பக்தர்களுடைய) க்ஷேம மார்கமானது
நிசிதம்	போடப்பட்டிருக்கிறது. (ஏற்படுத்தப்பட்டிருக்கிறது)

अङ्कितकचेन केनचिदन्धङ्करणौषधेन कमलानाम्।
अन्त:पुरेण शम्भोरलंक्रिया कापि कल्प्यते काञ्च्याम्।।३४।।

அங்கித கசேன கேனசித் அந்தங்கரணௌஷதேன கமலானாம்।
அந்த:புரேண ஶம்போ: அலங்க்ரியா காபி கல்ப்யதே காஞ்ச்யாம்।।34।।

கமலானாம்	*தாமரை புஷ்பங்களுக்கு*
கேனசித்	*ஏதோ ஒரு*
அந்தங்கரணௌஷதேன	*இருட்டைச்செய்யும் மருந்தினால் (அதாவது, அவற்றை மூடச்செய்யும் சந்த்ரனால்)*
அங்கித கசேன	*அலங்கரிக்கப்பட்ட கேசங்களையுடையவளான*
ஶம்போ:	*பரமசிவனுடைய*
அந்த: புரேண	*பத்னியால்*
காஞ்ச்யாம்	*காஞ்சீபுரியில் (காஞ்சீபுரிக்கு)*
காபி அலங்க்ரியா	*ஒரு (வர்ணனையிலடங்காத) அழகானது*
கல்ப்யதே	*ஏற்படுத்தப்படுகிறது.*

उररीकरोमि सन्ततमूष्मलफालेन लालितं पुंसा।
उपकम्पमुचितखेलनं उर्वीधरवंशसंपदुन्मेषम्।।३५।।

உரரீகரோமி ஸந்ததம் ஊஷ்மல பாலேன லாலிதம் பும்ஸா ।
உபகம்பம் உசிதகேலனம் உர்வீதர வம்ஶ ஸம்பத் உன்மேஷம்।।35।।

ஊஷ்மல பாலேன	*சுடுகிற நெற்றியையுடைய (அதாவது அக்னியை நேத்ரமாக உடைய)*
பும்ஸா	*புருஷனால் (அதாவது, பரமசிவனால்)*
லாலிதம்	*சீராட்டப்படுகிறதும்*
உபகம்பம்	*கம்பா நதியின் ஸமீபத்தில்*
உசிதகேலனம்	*விளையாடுவதில் ப்ரியத்தோடு (அல்லது, பழக்கத்தோடு) கூடியதும்*
உர்வீதர வம்ஶ	*ஹிமவானுடைய வம்சத்தின்*
ஸம்பத் உன்மேஷம்	*ஸம்பத்தை விளங்கச் செய்வதுமான ஒரு மூர்த்தியை*
ஸந்ததம்	*எப்போதும்*
உரரீகரோமி	*த்யானித்துக் கொண்டிருக்கிறேன்.*

अङ्कुरितस्तनकोरकमं अङ्कालङ्कारमेकचूतपते:।
आलोकेमहि कोमलम् आगमसंलापसारयाथार्थ्यम् ।।३६।।

அங்குரித ஸ்தனகோரகம் அங்காலங்காரம் ஏகசூதபதே:।
ஆலோகேமஹி கோமலம் ஆகம ஸம்லாப ஸார
யாதார்த்யம்।।36।।

அங்குரித ஸ்தனகோரகம்	மொட்டுக்கள் போன்ற ஸ்தனங்களையுடையதும்
கோமலம்	ம்ருதுவானதும்
ஆகம ஸம்லாப	வேதவாக்குகளின்

ஸார யாதார்த்யம்	ஸாரமான தாத்பர்யமாய் இருப்பதும்
ஏகசூதபதே:	ஏகாம்ரநாதருடைய
அங்காலங்காரம்	மடியின் அலங்காரமாயிருப்-பதுமான ஒரு மூர்த்தியை
ஆலோகேமஹி	பார்த்துக்கொண்டிருக்கிறோம்

पुञ्जितकरुणमुदञ्चितशिञ्चित मणिकाञ्चि किमपि काञ्चिपुरे।
मञ्जरितमृदुलहासं पिञ्जरतनुरुचि पिनाकिमूलधनम्॥३७॥

புஞ்சித கருணம் உதஞ்சித சிஞ்ஜித மணி காஞ்சி கிமபி காஞ்சிபுரே।
மஞ்ஜரித ம்ருதுல ஹாஸம் பிஞ்ஜர தனுருசி பினாகி மூலதனம்॥37॥

புஞ்ஜித கருணம்	கருணை நிறைந்ததும்
உதஞ்சித சிஞ்சித மணிகாஞ்சி	ரத்னமயமான ஒட்யாணத்தின் சலங்கைகளின் சப்தத்தை வெளிப்படுத்துவதும்
மஞ்ஜரித ம்ருதுல ஹாஸம்	மந்தஹாஸம் நிறைந்ததும்
பிஞ்ஜரதனுருசி	பொன் போன்ற தேஹகாந்தி யுடையதும்
பினாகி மூலதனம்	பரமசிவனுக்கு மூல தனமாயிருப்பதுமான
கிமபி	ஏதோ ஒரு மூர்த்தியானது
காஞ்சிபுரே	காஞ்சீபுரியில் (விளங்குகின்றது)

(குறிப்பு:- மூலத்திலிருக்கும் ஒவ்வொரு பதத்திற்கும் தனித்தனியாக அர்த்தம் சொல்லி அந்த பதத்தினால்

ச்லோகத்தில் என்ன அர்த்தம் ஏற்படுகிறது என்று காட்டுவதாயிருந்தால் ஒவ்வொரு ச்லோகத்திற்கும் ஏராளமான இடம் வேண்டும். ஆகவே இந்த ஸ்தோத்ரத்தின் மொழி பெயர்ப்பில் பதங்களின் சேர்க்கைக்கு எது ஸாரமான பாவமோ அதுமட்டும் காட்டப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது)

लोलहृदयोऽस्मि शम्भोर्लोचनयुगलेन लेह्यमानायाम्।
लालितपरमशिवायां लावण्यामृततरङ्गमालायाम्।।३८।।

லோல ஹ்ருதயோऽஸ்மி ஶம்போ: லோசநயுகலேந லேஹ்யமாநாயாம்।
லாலித பரமஶிவாயாம் லாவண்யாம்ருததரங்க-மாலாயாம்।।38।।

ஶம்போ:	*பரமசிவனுடைய*
லோசநயுகலேந	*இரு கண்களாலும்*
லேஹ்யமாநாயாம்	*ஆசையோடு அனுபவிக்கப் படுவதும்*
லாலித பரமஶிவாயாம்	*பரமசிவனை மோஹிக்கச் செய்வதும்*
லாவண்யாம்ருத-தரங்க-மாலாயாம்	*ஸௌந்தர்யமாகிற அம்ருத ஸமுத்ரத்தின் அலைகளின் கூட்டம் போலிருப்பதுமான ஒரு மூர்த்தியினிடத்தில்*
லோலஹ்ருதய: அஸ்மி	*ஊசலாடும் (அல்லது, ஆசையோடு கூடிய) மனதோடிருக்கிறேன்*

1. அம்பிகையின் அழகைத் தன் கண்களால் பருகிவிடுவது போல் பரமசிவன் பார்ப்பதாக 'லோசநயுகளேந லேஹ்ய மாநாயாம்' என்பதால் சொல்லப்பட்டது.

2. ஸௌந்தர்யமாகிற ஸமுத்ரத்தில் அடுத்தடுத்து வரும் அலைகள்போல் அம்பிகை இருப்பது 'லாவண்யாம்ருத தரங்க மாலாயாம்' என்பதால் சொல்லப்பட்டது. அடுத்தடுத்து வரும் அலைகளின் சேர்க்கைக்கு (தரங்கமாலைக்கு) லஹரி என்று பெயர். அம்பிகை இவ்விதமான ஸௌந்தர்யலஹரீ ரூபமாயிருப்பதால் அந்த ஸௌந்தர்யத்தைப்பற்றித் தான் எழுதிய ஸ்தோத்ரத்திற்கே ஸ்ரீமதாசார்யாள் 'ஸௌந்தர்யலஹரீ' என்று பெயர் வைத்தார்கள்.

मधुकरसहचरचिकुरैर्मदनागमसमयदीक्षितकटाक्षैः।
मण्डितकम्पातीरैर्मङ्गलकन्दैर्ममास्तु सारूप्यम्॥३९॥

மதுகர ஸஹசர சிகுரை: மதநாகம ஸமயதீக்ஷித
கடாக்ஷை:।
மண்டித கம்பாதீரைர்மங்கலகந்தைர் மமாஸ்து
ஸாரூப்யம்॥39॥

மதுகர ஸஹசர சிகுரை:	வண்டுகள் போன்றதான(கறுத்த) கூந்தல்களையுடையதும்
மதந ஆகம ஸமய	காமசாஸ்த்ரத்தைப் போதிப்பதென்பதான
தீக்ஷித	தீக்ஷையோடு கூடிய
கடாக்ஷை:	கடாக்ஷங்களையுடையதும்

மண்டித கம்பா தீரை:	கம்பா நதியின் கரையை அலங்கரிப்பதும்
மங்கலகந்தை:	மங்களத்தின் மூலம் போன்றதுமான ஒரு மூர்த்தியோடு
ஸாரூப்யம்	ஸாரூப்யமானது
மம அஸ்து	எனக்கு ஏற்படட்டும்.

वदनारविन्दवक्षोर्वामाङ्कतटीवशंवदीभूता।
पुरुषत्रितये त्रेधा पुरन्ध्रिरूपा त्वमेव कामाक्षि ।।४०।।

வதநாரவிந்தவக்ஷோர்வாமாங்க தடீ வஶம்வதீபூதா।
புருஷ த்ரிதயே த்ரேதா புரந்த்ரி ரூபா த்வமேவ
காமாக்ஷி।।40।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி தேவி!
புருஷ த்ரிதயே	ப்ரம்ஹா, விஷ்ணு, சிவன் என்ற மூன்று பதிகளிடத்தில்
வதநாரவிந்த வக்ஷோர் – வாமாங்கதடீ	முறையே அவர்களுடைய முகக் கமலத்திலும் மார்பிலும், இடதுமடியிலும்
வஶம்வதீ பூதா	எப்போதும் இருந்துகொண்டு
த்ரேதா	மூன்று ரூபங்களோடு கூடிய
புரந்த்ரிரூபா	பத்னீ ஸ்வரூபமாக
த்வமேவ	நீயே (இருக்கிறாய்).

இதனால் ஸரஸ்வதீ, லக்ஷ்மீ, பார்வதீ என்ற மூவரும் பரப்ரம்ஹ ஸ்வரூபிணியான அம்பிகையின் ரூபங்களென்பது சொல்லப்பட்டது.

बाधाकरीं भवाब्धेः आधाराद्यम्बुजेषु विचरन्तीम्।
आधारीकृतकाञ्चीं बोधामृतवीचिमेव विमृशामः।।४१।।

பாதாகரீம் பவாப்தே: ஆதாராத்யம்புஜேஷு விசரந்தீம்।
ஆதாரீக்ருத காஞ்சீம் போதாம்ருத வீசிமேவ
விம்ருஶாம:।।41।।

பவாப்தே:	*ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்திற்கு*
பாதாகரீம்	*இடையூறைச் செய்பவளும்*
ஆதாராதி அம்புஜேஷு	*மூலாதாரம் முதலான கமலங்களில்*
விசரந்தீம்	*ஸஞ்சரிப்பவளும்*
ஆதாரீக்ருத காஞ்சீம்	*காஞ்சீபுரியை வாஸஸ்தானமாக உடையவளும்*
போதாம்ருத வீசிம் ஏவ	*ஞானாம்ருத(ஸமுத்ர)த்தின் அலையாயிருப்பவளுமான ஸ்ரீ காமாக்ஷியையே*
விம்ருஶாம:	*த்யானம் செய்கிறோம்.*

1. 'பவாப்தே: பாதாகரீம்' என்பதினால் பக்தர்களை ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்திலிருந்து கரையேறச்செய்து விடுவிப்பவளாக அம்பிகையைப் பற்றிச் சொல்லப் பட்டது. இதே மாதிரி ஆசார்யாளால்

'------------------ ஜன்மஜலதௌ
நிமக்நாநாம் தம்ஷ்ட்ரா முரரிபு வராஹஸ்ய பவதி'

என்று 'ஸௌந்தர்யலஹரி'யிலும்

'ஸம்ஸார பங்க நிர்மக்ந ஸமுத்தரண பண்டிதா।

என்று லலிதா ஸஹஸ்ரநாமத்திலும் சொல்லப் பட்டிருக்கிறது.'

2. அம்பிகையானவள் குண்டலினி ரூபிணியாய் மூலாதாரம் முதலான ஷட் சக்ரங்களிலும் ஸஞ்சரிப்பது 'ஆதாராத்யம்புஜைக விஹரந்தீம்' என்பதால் இங்கு சொல்லப்பட்டது. இதைவிரிவாக ஆசார்யாள் 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

'மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹூதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டாநே ஹ்ருதி மருதம் ஆகாசமுபரி।
மநோSபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே।।'
ஸுதாதாராஸாரை: சரணயுகளாந்தர் விகளிதை:
ப்ரபஞ்சம் ஸிஞ்சந்தீ புநரபி ரஸாம்நாய மஹஸ:।
அவாப்ய ஸ்வாம் பூமிம் புஜகநிபம் அத்யுஷ்ட வலயம்
ஸ்வமாத்மாநம் க்ருத்வா ஸ்வபிஷி குலகுண்டே
குஹரிணி।।

कलयाम्यन्त: शशधरकलयाङ्कितमौलिं अमलचिद्वलयाम्।
अलयां आगमपीठीनिलयां वलयाङ्कसुन्दरीमम्बाम्।।४२।।

கலயாம்யந்த: ஶஶதர கலயாங்கித மௌலிம் அமல
சித்வலயாம்।
அலயாம் ஆகமபீடிநிலயாம் வலயாங்க ஸுந்தரீம்
அம்பாம்।।42।।

ஶஶதர கலயா அங்கித மௌளிம்	*சந்த்ரனுடைய கலையினால் அலங்கரிக்கப்பட்ட கிரீடத்தையுடையவளும்*
அமல சித்வலயாம்	*நிர்மலமான சித்ரூபமாயிருப்பவளும்*
அலயாம்	*அழிவில்லாதவளும்*

ஆகமபீடி நிலயாம்	வேதங்களாகிற பீடத்திலிருப்பவளும்
வலயாங்க ஸுந்தரீம்	வளைகளையணிந்த ஸுந்தரியான
அம்பாம்	ஜகன்மாதாவை
அந்த: கலயாமி	என்மனதில் எப்போதும் த்யானம் செய்கிறேன்.

शर्वादि परमसाधकगुर्वानीताय कामपीठजुषे।
सर्वाकृतये शोणिमगर्वाय अस्मै समर्प्यते हृदयम्।।४३।।

ஶர்வாதி பரம ஸாதக குர்வாநீதாய காமபீடஜுஷே।
ஸர்வாக்ருதயே ஶோணிமகர்வாய ஸமர்ப்யதே
ஹ்ருதயம்।।43।।

ஶர்வாதி	பரமசிவன் முதலான
பரமஸாதக குரு ஆநீதாய	உத்தமமான ஸாதகர்களான குருக்களால் வரவழைக்கப் பட்டதும் (உபாஸிக்கப் பட்டதும்)
காம பீடஜுஷே	காமகோடி பீடத்தில் விளங்குவதும்
ஸர்வாக்ருதயே	ஸகலமான ஜகத்தின் ரூபமாயிருப்பதும்
ஶோணிம கர்வாய	உயர்ந்ததான சிகப்பு நிறத்தை யுடையதுமான ஒரு மூர்த்தி-யிடத்தில்
அஸ்மை ஹ்ருதயம்	என்னுடைய மனதானது
ஸமர்ப்யதே	அர்ப்பணம் பண்ணப்படுகிறது.

அம்பிகையின் உபாஸகர்களில் பரமசிவன் முதன்மையாகச் சொல்லப்படுவர். இதனால் அவரை

ஆதிகுரு, ஆதிநாதரென்று சொல்வது ஸம்ப்ரதாயம். அம்பிகையை ப்ரதிபாதிக்கும் சாஸ்த்ரங்களாகிய தந்த்ரங்கள் பரமசிவனால் தன்னுடைய இரு அம்சங்களான சிவ, சக்தி ரூபங்களில் குரு, சிஷ்ய பாவத்தோடிருந்து வெளியிடப்பட்டவையாகச் சொல்லப்படுகிறது.

'குரு சிஷ்ய பதே ஸ்தித்வா ஸ்வயமேவ ஸதாசிவ:।
ப்ரச்நோத்தர பதைர் வாக்யை: தந்த்ரம் ஸமவதாரயத்॥'

குருமண்டலத்தைச் சொல்லும்போதும் 'ஸதாசிவ ஸமாரம்பாம்' என்று சொல்வது வழக்கம்.

समया सांध्यमयूखैः समया बुद्ध्या सदैव शीलितया।
उमया काञ्चीरतया न मया लभ्येत किं नु तादात्म्यम्॥४४॥

ஸமயா ஸாந்த்யமயூகை: ஸமயா புத்யா ஸதைவ
ஶீலிதயா।
உமயா காஞ்சீரதயா ந மயா லப்யேத கிம் நு
தாதாத்ம்யம்॥44॥

ஸாந்த்யமயூகை:	*ஸந்த்யாகாலத்து (ஸூர்ய) கிரணங்களுக்கு*
ஸமயா	*ஸமானமான காந்தியையுடையவளும்*
ஸமயா புத்யா	*பேதமில்லாமல் ஸமமான புத்தியுடன் (அதாவது, அவ்வித மான புத்தியுள்ளவர்களால்)*
ஸதைவ ஶீலிதயா	*ஸதாகாலமும் உபாஸிக்கப்-பட்டவளும்*
காஞ்சீரதயா	*காஞ்சீபுரியில் ப்ரீதியுள்ள-வளாயுமிருக்கிற*

உமயா	உமாதேவியோடு
தாதாத்ம்யம்	ஐக்யபாவனையானது (அல்லது, ஸாயுஜ்யமானது)
மயா	என்னால்
ந லப்யேத கிம் நு	அடையப்படமுடியாததா?

இங்கு சொல்லப்பட்ட ஸம புத்தியைப்பற்றிப் பின்வரும் 50வது ச்லோகத்தில் விஸ்தரிக்கப்படுகிறது.

जन्तोस्तव पदपूजन सन्तोषतरङ्गितस्य कामाक्षि।
बन्धो यदि भवति पुन: सिन्धोरम्भ:सु बम्भ्रमीति शिला।।४५।।

ஜந்தோஸ்தவ பதபூஜன ஸந்தோஷதரங்கிதஸ்ய காமாக்ஷி।
பந்தோ யதி பவதி புன: ஸிந்தோரம்பஸ்ஸு பம்ப்ரமீதி ஶிலா।।45।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி தேவியே!
தவ பத பூஜந	உன் பாதங்களைப் பூஜிப்பதினால் ஏற்படும்
ஸந்தோஷ தரங்கிதஸ்ய	ஸந்தோஷம் நிறைந்த
ஜந்தோ:	ப்ராணிக்கு (மனுஷ்யனுக்கு)
பந்த:	ஜன்ம (அல்லது கர்ம) ஸம்பந்தமானது
புந: பவதி யதி	திரும்பவும் ஏற்படுமென்றால் (அது)
ஸிந்தோ: அம்பஸ்ஸு	நதீ ஜலத்தில்
ஶிலா	கற்பாறையானது
பம்ப்ரமீதி	சுழலும் (என்று சொல்வது மாதிரி ஆகும்)

அதாவது, ஜலத்தில் கற்பாறையானது மிதக்கிறது என்று சொன்னால் எவ்வளவு அஸம்பாவிதமாயிருக்குமோ, அதே மாதிரி அம்பிகையின் உபாஸனை பண்ணுபவனுக்கு புனர்ஜன்மம் உண்டு என்று சொல்வது ஆகும் என்று தாத்பர்யம்.

कुण्डलि कुमारि कुटिले चण्डि चराचरसवित्रि चामुण्डे।
गुणिनि गुहारिणि गुह्ये गुरुमूर्त्ते त्वां नमामि कामाक्षि।।४६।।

குண்டலி குமாரி குடிலே சண்டி சராசர ஸவித்ரி சாமுண்டே।
குணிநி குஹாரணி குஹ்யே குருமூர்த்தே த்வாம் நமாமி காமாக்ஷி।।46।।

குண்டலி	*குண்டலங்களை (அதாவது, தாடங்கங்களை) உடையவளும்*
குமாரி	*பால்யமான வயதுடையவளும் (அல்லது பாலா ரூபிணியாயி-ருப்பவளும்)*
குடிலே	*குண்டலினீ ஸ்வரூபமாயிருப்-பவளும்*
சண்டி	*சண்டிரூபிணியாயிருப்பவளும், (அல்லது மங்களத்தைச் செய் பவளும்)*
சராசரஸவித்ரி	*ஜங்கம ஸ்தாவரத்மயமான ஸகல ஜகத்தையும் ஸ்ருஷ்டித்தவளும்*
சாமுண்டே	*சாமுண்டாரூபிணியாயிருப்பவளும்*
குணிநி	*த்ரி குணங்களோடிருப்பவளும்*

குஹாரணி	(மனதிலிருக்கும்) அந்தகாரத்தைப் போக்கடிப்பவளும்
குஹ்யே	ரஹஸ்யமான ஸ்வரூபத்தோடிருப்பவளும்
குருமூர்த்தே	குரு ஸ்வரூபியாயிருப்பவளு- மான
காமாக்ஷி	ஹே காமாக்ஷியே!
த்வாம் நமாமி	உன்னை நமஸ்கரிக்கிறேன்.

இந்த ச்லோகத்தில் அம்பிகையானவள் பலவிதமான நாமங்களால் சொல்லப்பட்டிருக்கிறாள். அம்பிகையின் ரூபமான குண்டலினீ சக்தியானவள் ''புஜகநிபம் அத்யுஷ்டவலயம்'' என்றபடி மூன்றரைச் சுற்றுக்களுடைய ஸர்ப்பாகாரமாக சுருண்டிருப்பதால் குடிலையென்று பெயர் ஏற்பட்டது. பக்தர்களுக்கு விரோதிகளாயிருப்பவர்களிடத்தில் அம்பிகை கோபத் தோடிருப்பதால் சண்டீ என்று பெயர். (தேவீ மாஹாத்ம்யத்தின் மூன்றாவது பாகமான உத்தர சரித்ரத்தில் ப்ரதிபாதிக்கப்படும் அம்பிகையின் முக்யமான ரூபத்திற்கு சண்டி என்று பெயர். இதிலிருந்து தேவீ மாஹாத்ம்யத்திற்கே சண்டி என்ற பெயரும் உண்டு). அம்பிகையின் ரூபமான காளிகாதேவியானவள் சண்டன், முண்டன் என்ற இரு அஸுரர்களை ஸம்ஹாரம் செய்ததினால் அவளுக்குச் சாமுண்டா என்று பெயர் ஏற்பட்டது.

யஸ்மாத் சண்டம் ச முண்டம் க்ருஹீத்வா த்வம் உபாகதா।
சாமுண்டேதி ததோ லோகே க்யாதா தேவி பவிஷ்யஸி॥

(துர்காதேவியின் மந்த்ரமான நவார்ண மந்த்ரத்தில் சாமுண்டாதேவியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது).

மூலப்ரக்ருதி ரூபமாய் அம்பிகை இருக்கும் போது ஸத்வ, ரஜஸ், தமோகுணங்களாகிய மூன்று குணங்களும் ஸமமான நிலையோடு அவளிடத்திலிருப்பவளாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

'ஸத்வம் ரஜஸ் தம இதி குணத்ரயமுதாஹ்ருதம்।
ஸாம்யாவஸ்திதிரேதேஷாம் அவ்யக்திம் ப்ரக்ருதிம் விது:॥'

இந்தக் குணங்கள் தனித்தனியாக மேலிட்டிருக்கும்போது வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ என்ற சக்தி ரூபங்களும், ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரர்களும் அம்பிகையிடமிருந்து ஏற்படுவதாகச் சொல்லப்படும். ஆகவே அம்பிகையை இங்கு குணிநி என்று சொல்லப்பட்டது. 'கு' என்ற அக்ஷரமானது மனதிலிருக்கும் அந்தகாரத்தைக் (இருட்டை, அக்ஞானத்தைக்) குறிக்கும். அம்பிகை அவ்விதமான இருட்டை போக்குவதால் 'கு'ஹாரிணி என்று இங்கு சொல்லப்பட்டது. அம்பிகை குருமூர்த்தியாயிருப்பது ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாமத்திலும் 'குருமூர்த்தி', 'குருமண்டலரூபிணீ', 'தக்ஷிணாமூர்த்தி ரூபிணீ', என்ற நாமங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

अभिदाकृतिर्भिदाकृति: अचिदाकृतिरपिचिदाकृतिर्मात:।
अनहन्ता त्वमहन्ता भ्रमयसि कामाक्षि शाश्वती विश्वम्॥४७॥

அபிதாக்ருதிர் பிதாக்ருதிரசிதா க்ருதிரபி சிதாக்ருதிர் மாத:।
அநஹந்தா த்வமஹந்தா ப்ரமயஸி காமாக்ஷி ஶாஶ்வதீ விஶ்வம்॥47॥

மாத: காமாக்ஷி	ஜகன்மாதாவான ஹே காமாக்ஷி!
ஶாஶ்வதீ த்வம்	அழிவில்லாத ஸ்வரூபத்தையுடைய நீ
அபிதாக்ருதி:	பேதமில்லாத ரூபத்தோடும்
பிதாக்ருதி:	பேதங்களான ரூபங்களோடும்
அசிதாக்ருதிரபி	சித்ரூபமாயில்லாமலும்
சிதாக்ருதி:	சித்ஸ்வரூபிணியாயும்
அநஹந்தா	அஹங்காரமில்லாதவளாயும்
அஹந்தா	அஹங்கார ஸ்வரூபிணியாயும் இருந்துகொண்டு
விஶ்வம்	ஜகத்தை
ப்ரமயஸி	சுழற்றிக்கொண்டிருக்கிறாய்.

இதிலும் இதற்கு முந்திய ச்லோகங்களிலும் சொல்லப்பட்டபடி அம்பிகையானவள் பலவிதமான குணங்களுடனும் பலவிதமான ரூபங்களுடனும் இருப்பதாகத்தோன்றிய போதிலும், பரமார்த்தத்தில் ஒருவளாகவே இருந்துக்கொண்டு வருவதை ஒரு நடிகையானவள் பல வேஷங்களைத் தரித்து நடிப்பதற்கு ஒப்பிட்டு "அம்பாஸ்தவ"த்தில் வர்ணித்திருக்கிறது.

தாக்ஷாயணீதி குடிலேதி குஹாரிணீதி
காத்யாயநீதி கமலேதி கலாவதீதி।
ஏகா ஸதீ பகவதீ பரமார்த்ததோऽபி
ஸந்த்ருச்யஸே பஹுவிதா நநு நர்த்தகீவ॥

शिव शिव पश्यन्ति समं श्रीकामाक्षीकटाक्षिता: पुरुषा:।
विपिनं भवनममित्रं मित्रं लोष्टं च युवतिबिम्बोष्ठम्॥४८॥

ஶிவ ஶிவ பஶ்யந்தி ஸமம் ஸ்ரீ காமாக்ஷீ கடாக்ஷிதா:
புருஷா:।
விபிநம் பவநம் அமித்ரம் மித்ரம் லோஷ்டம் ச
யுவதிபிம்போஷ்டம்॥48॥

ஸ்ரீ காமாக்ஷி கடாக்ஷிதா: புருஷா:	*ஸ்ரீ காமாக்ஷியால் கடாக்ஷிக்கப் பட்டவர்கள்*
விபிநம்	*காட்டை*
பவநம்	*வீடாகவும்*
அமித்ரம்	*சத்ருவை*
மித்ரம்	*ஸ்நேஹிதனாகவும்*
யுவதி பிம்போஷ்டம் ச	*யுவதிகளுடைய கோவைக் கனி போன்ற அதரத்தையும்*
லோஷ்டம்	*ஓட்டாஞ்சல்லிபோலும்*
ஸமம் பஶ்யந்தி	*ஸமமாகப் பார்க்கிறார்கள்*
சிவ சிவ	*அஹோ ஆச்சர்யம்!*

அதாவது, ஸ்ரீ காமாக்ஷியின் கடாக்ஷம் பக்தன்மீது பட்டவுடன் அவனுக்கு ஸமத்ருஷ்டி ஏற்பட்டு, வீடு, காடு என்றாவது, மித்ரன், சத்ரு, என்றாவது, பேதமான பாவமில்லாதவனாக ஆகிவிடுகிறானென்று சொல்லப் பட்டது. அவனுக்கு ப்ரியம், அப்ரியம் என்ற இரண்டு சித்த வ்ருத்திகளும் இல்லாமல் போய் விடுவதால் அவன் யுவதிகளுடைய பிம்பபலம் போன்ற அதரத்தைக்கூட ஓட்டாஞ்சல்லிக்கு ஸமானமாக மதிப்பானென்று சொல்லப்பட்டது.

कामपरिपन्थिकामिनि कामेश्वरि कामपीठमध्यगते।
कामदुघा भव कमले कामकले कामकोटि कामाक्षि।।४९।।

காம பரிபந்த்தி காமிநி காமேஶ்வரி காமபீட மத்யகதே।
காம துகா பவ கமலே காமகலே காமகோடி காமாக்ஷி।।49।।

காம பரிபந்த்தி காமிநி	*மன்மதனுக்குச் சத்ருவான பரம சிவனுடைய நாயகியாயும்*
காமேஶ்வரி	*காமேச்வரி (லலிதாம்பிகா) ஸ்வரூபிணியாயும்*
காமபீட மத்யகதே	*காமராஜபீடத்தின் மத்தியிலிருப்பவளாயும்*
கமலே	*லக்ஷ்மீ ஸ்வரூபிணியாயும்*
காமகலே	*காமகலா ஸ்வரூபிணியாயும்*
காமகோடி	*காமகோடியென்ற பெயருள்ளவளாயுமிருக்கும்*
காமாக்ஷி	*ஹே காமாக்ஷி தேவியே!*
காமதுகா பவ	*(என்னுடைய) விருப்பங்களைக் கொடுப்பவளாய் ஆகுவாயாக.*

1. அம்பிகை சிதக்னி குண்டத்திலிருந்து லலிதா தேவியாக ஆவிர்பவித்த பிறகு தேவர்கள் அவளை விவாஹம் செய்ய அவளுக்கு எவ்வகையிலும் தகுந்தவரான புருஷன் கிடைக்க வேண்டுமே என்ற கவலையோடிருக்கும்போது பரமேச்வரன் காமேச்வரரூபமாக,

''கோடி கந்தர்ப லாவண்ய யுக்தோ திவ்ய சரீரவாந்
திவ்யாம்பரதர: ஸ்ரக்வீ திவ்யகந்தாநுலேபந:।।

க்ரீடஹாரகேயூர குண்டலாத்யைரலங்க்ருத:
ப்ராதுர்பபூவ புருஷோ ஜகந்மோஹந ரூபத்ருக்।।''

என்றபடி அங்கு வந்ததாகவும், பிறகு இருவருக்கும் விவாஹமான வ்ருத்தாந்தமும் லலிதோபாக்யானத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காமேச்வரரைப் பதியாக அடைந்ததினால் லலிதாம்பிகைக்குக் காமேச்வரீ என்று பெயர் ஏற்பட்டது.

2. *கமலா என்ற பதத்தினால் மஹாவிஷ்ணுவின் பத்னியான லக்ஷ்மீ ரூபமாக அம்பிகையிருப்பது சொல்லப்பட்டது. இது தவிர, லக்ஷ்மீ என்ற பெயரே அம்பிகைக்கு உண்டென்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.*

''தஸ்யாங்க மண்டலாரூடா சக்திர் மாஹேச்வரீ பரா।
மஹாலக்ஷ்மீரிதி க்யாதா ச்யாமா ஸர்வமநோஹரா।।''
(விஷ்ணுபுராணம்)

''ச்ரியம் லக்ஷ்மீம் அம்பிகாம் ஔபலாம் ''
(ஆயுஷ்யஸூக்தம்)

3. *பரப்ரம்ஹஸ்வரூபிணியான அம்பிகையானவள் சிவசக்தி ஸாமரஸ்யரூபிணியானதாலும், அவ்வித ரூபத்தில் காமேச்வரரான சிவனானவர் ஒரு கோடியாக (ஏகதேசமாக) இருப்பதாலும் அம்பிகைக்குக் காமகோடி யென்று பெயர் ஏற்பட்டது. (காமனென்ற பதமானது காமேச்வரரைக் குறிக்கும்).*

4. *காஞ்சீபுரியிலிருக்கும் பிலத்திற்கே காமகோடியென்று பெயர். அது ஸர்வதீர்த்தத்திற்கு மூன்று அம்சம் ஈசான்ய பாகத்தில் ஸ்ரீ காமாக்ஷியின் ஆலயத்திற் குள்ளிருக்கிறது. அதற்குப் பலவிதமான பெயர்களுண்டு.*

''ஜகத் காமகலாகாரம் பூமே: குண்டலீநீ பதம்।

தத் காமநகரம் திவ்யம் அகக்நம் ஸர்வஸித்திதம்।''
தப: ஸ்தாகம் பிலம் ஸூக்ஷ்மபரமம் வ்யோம தத்
ஸ்ம்ருதம்॥
ஆதிபௌதிக மர்மாங்கம் நாபிஸ்தாநம் புவ: பரம்।
ததேவ ப்ரம்ஹணா: சம்போ: சரீரமிதி கத்யதே
லோகாநாம் வ்யங்க்ய சப்தத்வாத் நாபிரித்யபி ஸஜ்ஞிதம்।
ஸ்ரீபுரஸ்ய த்ரிமூர்த்தீநாம் ஈச்வராணாம் திசாமபி॥
லோகாநாம் மேருசைலஸ்ய கோரூபாயாவநேரபி।
நவத்வாரஸ்ய மார்க்கம் தம் பூயோநிஸ் தந் மஹாபிலம்॥

5. காமகோஷ்டம் (காமகோட்டம்) என்பது மேலே சொல்லிய காமகோடியென்ற பில மடங்கிய பெரிய ப்ரதேசத்திற்குப் பெயர். இது ருத்ரசாலைக்கும் விஷ்ணு சாலைக்கும் நடுவிலுள்ளது. பெரிய நான்கெல்லையை யுடையது. இதற்கு பஞ்சபாண நிகேதனம் என்றும் பெயர் உண்டு. இது காஞ்சியின் மத்ய ப்ரதேசம். ஸ்ரீ காமாக்ஷியின் ஆலயம் அடங்கியது. இங்கு எவர்கள் தங்கள் இஷ்ட தேவதையின் மந்த்ரத்தை ஜபிக்கிறார்களோ அதற்குக்கோடி மடங்கான பலனை அடைவார்க ளென்றும், காமங்களை விரும்புவோர்கள் இவற்றைக் கோடிக்கணக்காக அடைவார்களென்றும் சொல்லப் பட்டிருக்கிறது.

'ஏதத் சதுர்திங்மத்யஸ்த்தம் பஞ்சபாண நிகேதனம்।
தஸ்மாத் தத் காமகோஷ்டாக்யம் காஞ்ச்யாம்
மத்யமபூதலம்
யோ ஜபேத் காமகோஷ்டேऽஸ்மிந்
மந்த்ரமிஷ்டார்த்ததைவதம்

கோடிவர்ணபலம் ப்ராப்ய முத்திலோகம் ச கச்சதி॥'
காமாநாம் வர்ணதாத்பர்யாத் தத்கோடி குணஸங்க்யயா।
காமகோடீதி விக்யாதம் காமகோஷ்டதராதலம்॥

6. மேலே சொல்லிய பில ப்ரதேசத்திற்குக் காமகோடி யென்று பெயர் வந்ததற்கு அனேகம் காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. காமம் என்ற பதமானது பொதுவாக விருப்பத்தைக் (அதாவது, புருஷார்த்தத்தை) குறிக்கும். ஜனங்கள் விரும்பும் புருஷார்த்தங்கள் தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்களென்கிற நான்கு வகைப் பட்டனவாகச் சொல்லப்படும். இந்த வரிசையில் காமத்திற்கு அடுத்தாற்போல் (அடுத்த கோடியாக) மோக்ஷம் வருவதாலும், மோக்ஷமே (காமங்களுக்குள்) மற்ற புருஷார்த்தங்களைவிட உத்க்ருஷ்டமானதாலும் (பரமகோடியாயிருப்பதாலும்) காமகோடி என்ற பதமே மோக்ஷத்தையும் குறிக்கும். ஆகவே இந்தக்காமகோடி க்ஷேத்திரத்தில் ஒருவன் மேலே சொல்லிய காமங்களில் ஏதாவது ஒன்றையுத்தேசித்து உபாஸித்தாலும் அவனுக்கு அந்தக்காமமானது கோடி மடங்காகக் கிடைப்பதுடன் மற்ற புருஷார்த்தங்களும் கிடைத்து, கடைசியாக (காமகோடியாகிய) மோக்ஷமும் (அவன் உத்தேசிக்கா விட்டாலும்) அவனுக்குக் கிடைக்கப் பெறுமென்று சொல்லப்படுவதால் அந்த க்ஷேத்திரத்திற்குக் 'காமகோடி' என்று பெயர் ஏற்பட்டது.

'யத்ர காமக்ருதோ தர்மோ ஜந்துநா யேந கேந வா
ஸக்ருத்வாபி ஸுதர்மாணாம் பலம் பலதி கோடிச:
தேநேதம் காமகோடீதி பிலத்வாரம் ப்ரஸித்திமத்
---- ---- ---- ---- ------------------------------'

அத காமஸ் த்ருதீயார்த்த: புருஷார்த்தேஷு விச்ருத:।
தத் பரஸ்தாத் ச்ருதோ மோக்ஷ: கோடி சப்தேந சப்தித:।।
காமகோடி ச்ருதோ மோக்ஷ: புருஷார்த்த சதுர்த்தக:
அர்த்தோऽதவா ச்ருத: காம: காமேசோ தநத: ஸ்ம்ருத:।
தத்கோடிதா பீடசக்தி: காமகோடீ விச்ருதா।।

7. *அம்பிகையே அந்தக் காமகோடியெனப்படும் பிலாகாச ஸ்வரூபிணியாயிருப்பதால் அந்தப் பெயரே அம்பிகைக்கும் ஏற்பட்டதென்று சொல்லப்படும்.*

8. *அம்பிகையின் ரூபங்கள் ஸ்தூல, ஸூக்ஷ்ம பரரூபங்களென்ற மூன்றில் ஸ்தூலமென்பது கரசரணாதி அவயவங்களையுடையது. ஸூக்ஷ்ம மென்பது மந்த்ரமய மானது. பரமென்பது வாஸனா மயமானது. திரும்பவும் ஸூக்ஷ்மமான ஸூக்ஷ்ம, ஸூக்ஷ்மதர, ஸூக்ஷ்மதமமென்பதாக மூன்று பிரிவையுடையது. ஸூக்ஷ்மமென்பது பஞ்சதசீ வித்யா ரூபமானது. ஸூக்ஷ்மதரமென்பது காம கலாக்ஷர ரூபமானது, ஸூக்ஷ்மதமமென்பது குண்டலீனீ ரூபம்.*

9. *இந்தக் காமகலையானது மிகவும் ரஹஸ்யமானதால் அதிலுடைய விபரங்களைக் குருமுகமாகவே அறிந்து கொள்ள வேண்டியது. ஆயினும் அவைகளைக் காமகலா விலாஸம், என்ற க்ரந்தத்திலும் பாஸ்கரராயர், ஆர்தர் ஏவலன் முதலான பெரியோர்கள் எழுதிய க்ரந்தங்களிலும் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். அம்பிகையின் காமகலா ஸ்வரூபமானது மூன்று பிந்துக்களும் ஹகாரார்த்தமும் சேர்ந்ததாகவும், அவையிருக்குமிடம்,*

'அக்ர பிந்து பரிகல்பிதாநநாம்
அந்ய பிந்து ரசித ஸ்தநத்வயீம்'
நாதபிந்து ரசநா குணாஸ்பதாம்
நௌமி தே பரசிவே பராம் கலாம்॥

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீஆசார்யாளும் 'ஸௌந்தர்யலஹரி'யில்

'முகம் பிந்தும் க்ருத்வா குசயுகம் அதச்தஸ்ய தததோ।
ஹரார்தம் த்யாயேத் யோ ஹரமஹிஷி தே மன்மத கலாம்॥'

என்று சொல்லியிருக்கிறார்கள்.

मध्ये हृदयं मध्ये निटिलं मध्ये शिरोऽपि वास्तव्याम्।
चण्डकरचक्रकार्मुकचन्द्रसमाभां नमामि कामाक्षीम्॥५०॥

மத்யே ஹ்ருதயம் மத்யே நிடிலம் மத்யே ஶிரோऽபி வாஸ்தவ்யாம்।
சண்டகரசக்ரகார்முக சந்த்ரஸமாபாம் நமாமி காமாக்ஷீம்॥50॥

மத்யே ஹ்ருதயம்	ஹ்ருதயத்தின் மத்தியிலும்
மத்யே நிடிலம்	நெற்றியின் நடுவிலும்
மத்யே சிரோऽபி	சிரஸின் நடுவிலும் (முறையே)
சண்டகர	*ஸூர்யன்*
சக்ர கார்முக	*இந்த்ரதனுஸ்*
சந்த்ர	*சந்த்ரன் (இவர்களுக்கு)*
ஸமாபாம்	*ஸமமான காந்தியுடையவளாய்*
வாஸ்தவ்யாம்	*இருப்பவளான*
காமாக்ஷீம்	*காமாக்ஷியை*
நமாமி	*நமஸ்கரிக்கிறேன்*

அம்பிகையானவள் பக்தனுடைய சரீரத்தில், சிரஸில் சந்த்ரன் போலவும், நெற்றியில் இந்த்ர தனுஸ் மாதிரியும், ஹ்ருதயத்தில் ஸூர்யன் போலவும், காந்தியோடிருப்பவளாக சொல்லப்பட்டிருக்கிறது. இதை ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில்,

'சிரஸ்த்திதா சந்த்ரநிபா பாலஸ்த்தா இந்த்ர தநுஷ்ப்ரபா।
ஹ்ருதயஸ்த்தா ரவிப்ரக்யா --- - --- --- --- -------॥'

என்று சொல்லியிருக்கிறது. 'லகுஸ்துதி'யில் பின்வருமாறும் சொல்லப்பட்டிருக்கிறது:

ஐந்த்ரஸ்யேவ சராஸநஸ்ய தததீ மத்யே லலாடம் ப்ரபாம்
சௌக்லீம் காந்தீம் அநுஷ்ணகோரிவ சிரஸ்யாதவந்தீ ஸர்வத:।
ஏஷாஸௌ த்ரிபுரா ஹ்ருதி த்யுதிரிவோஷ்ணாம்சோ: ஸதாஹ்ஸ்த்திதா
சிந்த்யான் ந: ஸஹஸா பதைஸ் த்ரிபிரகம் ஜ்யோதிர்மயம் வாங்மயம்॥

अधिकाञ्चि केलिलोलैः अखिलागमयन्त्रतन्त्रमन्त्रमयैः।
अतिशीतं मम मानसं असमशरद्रोहिजीवनोपायैः॥५१॥

அதிகாஞ்சி கேலிலோலைரகிலாகம-
யந்த்ரதந்த்ரமந்த்ரமயை:।
அதிஶீதம் மம மானஸம் அஸமசரத்ரோஹி
ஜீவனோபாயை:॥51॥

அதிகாஞ்சி	காஞ்சீபுரியில்
கேலிலோலை:	விளையாடுவதில் மிகவும் ப்ரியமுள்ளதாயும்

அகில ஆகமயந்த்ர தந்த்ரமந்த்ரமயை:	எல்லா வேதங்களாயும் யந்த்ரங்களாயும், தந்த்ரங்களாயும், மந்த்ரங்களாயுமிருப்பதும்
அஸமசர	மன்மதனுடைய
த்ரோஹி	சத்ருவான பரமசிவனுடைய
ஜீவநோபாயை:	ப்ராணனுக்கு ஆதாரமாயிருப்பதாயுமிருக்கிற ஒரு மூர்த்தியினால்
மம மாநஸம்	என்னுடைய மனதானது
அதி ஶீதம்	மிகவும் குளிர்ந்திருக்கிறது

'விஷமசர' என்ற பாடாந்தரத்திலும் மன்மதன் என்றுதான் அர்த்தம்.

नन्दति मम हृदि काचन मन्दिरयन्ती निरन्तरं काञ्चीम्।
इन्दुरविमण्डलकुचा बिन्दुवियन्नादपरिणता तरुणी ।।५२।।

நந்ததி மம ஹ்ருதி காசந மந்திரயந்தீ நிரந்தரம் காஞ்சீம்।
இந்துரவிமண்டலகுசா பிந்துவியன் நாதபரிணதா தருணீ।।52।।

காஞ்சீம்	காஞ்சீபுரியை
நிரந்தரம்	எப்பொழுதும்
மந்திரயந்தீ	வாஸஸ்தானமாக உடையவளும்
இந்து ரவி மண்டல	சந்த்ர ஸூர்ய மண்டலங்களை
குசா	ஸ்தனங்களாக உடையவளும்
பிந்துவியந் நாத பரிணதா	பிந்து, (வியத்) ஆகாசம், நாதம் இம்மூன்று விதமான வேறு ரூபங்களையுடையவளுமான
காசந தருணீ	ஒரு யௌவன ஸ்திரீயானவள்

மம ஹ்ருதி	என்னுடைய மனதில்
நந்ததி	ஆனந்தத்தோடிருக்கிறாள்

1. சந்த்ர ஸூரியர்கள் அம்பிகையினுடைய ஸ்தனங்களாகவும் நேத்ரங்களாகவும் (காதிலணிந்த) தாடங்கங்ளாகவுமிருப்பதாகச் சொல்லப்படுவார்கள்.

'ஸூர்ய சந்த்ரௌ ஸ்தநௌ' தேவ்யா: தாவேவ நயநே ஸ்ம்ருதௌ।
உபௌ தாடங்கயுகளம் இத்யேஷா வைதிகீ ச்ருதி:॥

2. வ்யோம, பிந்து, நாத - இவை நாதப்ரம்ஹ வித்யையில் சொல்லப்படும் பதங்கள். பரமசிவன் சுக்லபிந்து ரூபமாகவும் சக்தியானவள் சோணபிந்து ரூபமாகவுமிருப்பதாகவும், அவர்கள் பரஸ்பரம் ப்ரவேசிப்பதால் மிச்ரபிந்துவானது உண்டாகி அந்த பிந்துவிலிருந்து வ்யோமமும் நாதமும் ஏற்பட்டு அவற்றிலிருந்து ஸகல ஜகத்தும் உண்டாவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் விபரங்களை 'காமகலாவிலாஸம்', 'சாரதாதிலகம்' முதலிய க்ரந்தங்களில் பார்க்கவும். இம்மூன்றும் அம்பிகையின் பரிணாமங்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'வ்யோமேதி பிந்துரிதி நாதேதீந்துலேகாரூபேதி
வாக்பவ-தநூரிதி மாத்ருகேதி'
நி:ஸ்யந்தமாந ஸுகபோத ஸுதாஸ்வரூபா
வித்யோதஸே மநஸி பாக்யவதாம் ஜநாநாம்॥

(அம்பாஸ்தவம்)

शम्पालतासवर्णम् सम्पादयितुं भवज्वरचिकित्साम्।
लिम्पामि मनसि किञ्चन कम्पातटरोहि सिद्धभैषज्यम्।।५३।।

சம்பாலதாஸவர்ணம் ஸம்பாதயிதும் பவஜ்வர-சிகித்ஸாம்।
லிம்பாமி மநஸி கிஞ்சந கம்பாதடரோஹி
ஸித்தபைஷஜ்யம்।।53।।

பவஜ்வர சிகித்ஸாம்	*ஸம்ஸாரமாகிற ஜ்வரத்திற்குச் சிகித்ஸையை*
ஸம்பாதயிதும்	*அடைவதற்காக*
சம்பா-லதா-ஸவர்ணம்	*மின்னல்கொடி போன்ற நிறமுள்ளதும்*
கம்பா-தட-ரோஹி	*கம்பா நதிக்கரையில் முளைத்ததுமான*
கிஞ்சந	*ஒரு*
ஸித்த பைஷஜ்யம்	*ஸித்தௌஷதத்தை*
மனஸி	*மனதில் (மனதால்)*
லிம்பாமி	*பூசிக்கொள்ளுகிறேன் (சிந்திக்கின்றேன்)*

1. ஸம்ஸாரமாகிற ஜ்வரத்தைப்போக்கும் ஸித்தௌஷதமாக அம்பிகை இங்கு வர்ணிக்கப்பட்டாள். அந்த ஸித்தௌஷதம் மின்னல்கொடி போன்ற ரூபத்தையுடையது. அது (கொடியென்ற உபமானத்தை மேலும் அனுஸரித்து) கம்பாநதிக்கரையில் படர்ந்தது. இப்பேற்பட்ட ஔஷதத்தை (ஸாதாரணமான ஜ்வரங்களைப் போக்குவதற்கு ஔஷதங்களை மேலே பூசுவதுமாதிரி) தான் மனதால் பூசிக்கொண்டதாக கவி இங்கு வர்ணிப்பதினால், தான் அந்த

ஔஷதத்திற்கு உபமிக்கப்பட்ட அம்பிகையை மனதால் எப்போதும் த்யானம் செய்வதாகச் சொல்லப்பட்டது.

1. சம்பா என்றால் மின்னல். மின்னலாவது கொடிபோல் தோன்றுவதால் அது லதையாகச் சொல்லப்பட்டது.

अनुमितकुचकाठिन्याम् अधिवक्षःपीठमङ्गजन्मरिपोः।
आनन्ददां भजे ताम् आनङ्गब्रह्मतत्त्वबोधिसिराम्॥५४॥

அநுமிதகுசகாடின்யாம் அதிவக்ஷ: பீடமங்கஜன்மரிபோ:।
ஆனந்ததாம் பஜே தாம் ஆநங்கப்ரஹ்ம தத்வ
போதிஸிராம்॥54॥

அநுமித குச காடிந்யாம்	ஊஹித்தறியவேண்டிய காடின்யத்தையுடைய (உறுதியையுடைய) ஸ்தனங்களையுடையவளும்
அங்க ஜன்மரிபோ:	மன்மதனுடைய சத்ருவான பரமசிவனுடைய
அதி வக்ஷ: பீடம்	மனதில் (மனத்திற்கு)
ஆனந்ததாம்	ஆனந்தத்தைக் கொடுப்பவளும்
அநங்க ப்ரம்ஹதத்வ	காமசாஸ்திரத்தை
போதி ஸிராம்	போதிக்கும் நாடியாயுமுள்ள
தாம்	அந்த ஸ்ரீ காமாக்ஷியை
பஜே	பஜிக்கிறேன்

(அங்கமென்றால் மனது என்றர்த்தம். காமமானது மனதிலிருந்து உண்டாவதால் மன்மதனை மனதிலிருந்து பிறந்தவனாக அங்கஜனென்றும் மநஸிஜனென்றும் சொல்வது வழக்கம்.

அங்கஜன்மரிபோ:-மந்மத சத்ருவான பரமசிவனுடைய, அதிவக்ஷ:பீடம்-மார்பாகும் பீடத்தின்கண், அநுமித குச காடிந்யாம்-ஊஹித்து அறியக்கூடிய ஸ்தநங்களின் காடின்யத்தையுடையதும், ஆனந்தத்தைத் தருவதான ச்ருங்கார ப்ரம்ம தத்துவத்தைத் தெரிவிக்கும் நாடியான அந்த காமாக்ஷியை நான் பஜிக்கின்றேன். அம்பாளுடைய குச காடிந்யம் பரமசிவனின் மார்பினால் தான் அறியக் கூடியது என்பது பொருள்.)

ऐक्षिषि पाशाङ्कुशधरहस्तान्तं विस्मयार्हवृत्तान्तम्।
अधिकाञ्चि निगमवाचां सिद्धान्तं शूलपाणिशुद्धान्तम्।।५५।

ஐக்ஷிஷி பாஶாங்குஶ தர ஹஸ்தாந்தம்
விஸ்மயார்ஹ வ்ருத்தாந்தம்।
அதிகாஞ்சி நிகமவாசாம் ஸித்தாந்தம்
சூலபாணி சுத்தாந்தம்।।55।।

பாஶாங்குஶதர ஹஸ்தாந்தம்	*பாசம், அங்குசம் இவற்றைக் கைகளிலுடையவளும்*
விஸ்மயார்ஹ வ்ருத்தாந்தம்	*ஆச்சர்யப்படத்தக்க சரித்திரத்தையுடையவளும்*
நிகமவாசாம்	*வேத வாக்யங்களுக்கு (அதாவது வேதங்களுக்கு)*
ஸித்தாந்தம்	*முடிவான தாத்பர்யமா-யிருப்பவளுமான*
சூலபாணி சுத்தாந்தம்	*பரமசிவனுடைய அந்தப் புரமான ஸ்ரீ காமாக்ஷியை*
அதிகாஞ்சி	*காஞ்சீபுரியில்*
ஐக்ஷிஷி	*பார்த்தேன்*

''விஸ்மயார்ஹ வ்ருத்தாந்தம்'' - இதே மாதிரி ''அத்புதசாரித்ரா'' என்று ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் ஒரு நாமமிருக்கிறது. இதனால் அம்பிகையைப் பற்றிய பண்டாஸுரவதம், மஹிஷாஸுர வதம் முதலியவைகள் சொல்லப்பட்டன. அத்துடன் குறிப்பாக ஸ்ரீ காமாக்ஷியால் செய்யப்பட்ட தபஸ், பந்தகாஸுரவதம், ஸ்வர்ண காமாக்ஷி ப்ராதுர்பாவம் முதலிய (ஸ்ரீ காமாக்ஷீ விலாஸத்தில் சொல்லப்பட்ட) வ்ருத்தாந்தங்களும் குறிக்கப்பட்டன.

आहितविलासभङ्गीम् आब्रह्मस्तम्बशिल्पकल्पनया।
आश्रितकाञ्चीं अतुलां आद्यां विस्फूर्तिम् आद्रिये विद्याम्॥५६॥

ஆஹித விலாஸ பங்கீம் ஆப்ரம்ஹ ஸ்தம்ப சில்ப கல்பநயா।
ஆம்ரித காஞ்சீம் அதுலாம் ஆத்யாம் விஸ்பூர்த்திம் ஆத்ரியே வித்யாம்॥56॥

ஆப்ரம்ஹ ஸ்தம்ப	ப்ரம்ஹா முதல் புழு முடிய எல்லா ஜீவன்களையும்
சில்ப கல்பநயா	ஸ்ருஷ்டிப்பதனால்
ஆஹித விலாஸ பங்கீம்	செய்யப்பட்ட தன் லீலைகளின் பேதங்களையுடையவளும்
ஆம்ரித காஞ்சீம்	காஞ்சீபுரியை அடைந்தவளும்
அதுலாம்	ஒப்பற்றவளும்
ஆத்யாம் விஸ்பூர்த்திம்	ப்ரம்ஹத்தின் முதன் முதலான உணர்ச்சியாயிருப்பவளுமான
வித்யாம்	வித்யா(ஞான) ரூபிணியை
ஆத்ரியே	ஆச்ரயிக்கிறேன்.

1. அம்பிகையானவள் ஸகல ஜீவன்களுடைய ஸ்ருஷ்டிக்கும் காரணமாயிருப்பதால் 'ஆப்ரம்ஹ கீட ஜநநீ' என்றும், 'ஆப்ரம்ஹாதிபிபீலிகாந்த ஜநநீ' என்றும் இங்கு சொல்லப்பட்டது மாதிரி வர்ணிப்பது வழக்கம். ப்ரம்ஹா என்ற பதமானது ஸகல ஜீவன்களுடைய ஸ்தூல சரீரங்களின் ஸமஷ்டி ரூபமான ஹிரண்யகர்ப்பரைக் குறிக்கும். ஜீவன்களுக்குள் முக்யமான அவரையும், ஜீவன்களில் கடைசியாக இருக்கும் புழு, எறும்பு முதலியவற்றையும் சொல்லியிருப்பதால் நடுவாக இருக்கும் ஸகல ஜீவன்களும் சேர்த்துச் சொல்லப் பட்டார்கள். ஸ்தம்பமென்பது அதீந்த்ரியமானதும் (இந்த்ரியங்களுக்குத் தென்படாததும்), வைத்ய சாஸ்த்ரங்களில் ககேருகம், மகேருகம் என்று இரு பெயர்களால் சொல்லப்படுவதுமான புழுப்போன்ற ஜீவ விசேஷம்.

2. ப்ரளயகாலத்தின் போது (மறுபடியும் ஜனிக்க வேண்டிய) ஸகல ஜீவன்களையும் தன்னிடம் அடக்கிக் கொண்டு ப்ரம்ஹமானது ஸ்வாத்மாராம மாய் இருக்கும்போது, அவ்விதமான ஜீவன்களுடைய கர்ம வாஸனை யால் திரும்பவும் ஸ்ருஷ்டியுண்டாக வேண்டிய காலம் வந்தவுடன், அப்படி ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்பதான ஒரு உணர்ச்சியானது ப்ரம்ஹத்தினிடம் உண்டாகிறது. இதுவே ச்ருதியில் 'ஸோऽகாமயத்' என்பது முதலான வாக்கியங்களினால் சொல்லப்பட்டிருக்கிறது, இவ்விதமான உணர்ச்சியை ஸ்புரணம், ஸ்பூர்த்தி, ஸ்பந்தம் என்று சொல்வது வழக்கம். இது (பாலானது காய்ச்சப்படும்போது) பொங்குவதற்கு முன்னாக இருக்கும் தோற்றத்திற்கு (கொதிப்புக்கு)

உபமிக்கப்படும். இந்த ஸ்பூர்த்தியானது மாயையின் (அம்பிகையின்) கார்யமானதால் அதையே அம்பிகையின் ரூபமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவே ஸ்ருஷ்டிக்கு முதல் முதலாக ஏற்படுவதால் 'ஆத்யாம் விஸ்பூர்த்திம்' என்று இங்கு சொல்லப்பட்டது.

मूकोऽपि जटिलदुर्गति शोकोऽपि स्मरति यः क्षणं भवतीम्।
एको भवति स जन्तुर्लोकोत्तरकीर्तिरेव कामाक्षि।।५७।।

மூகோऽபி ஜடில துர்கதி ஶோகோऽபி ஸ்மரதி ய: க்ஷணம் பவதீம்।
ஏகோ பவதி ஸ ஜந்து: லோகோத்தர கீர்த்திரேவ காமாக்ஷி।।57।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷியே!
ய:	எவனொருவன்
மூகோऽபி	ஊமையாயிருந்தபோதிலும்
ஜடில துர்கதி சோகோऽபி	மிகவும், சிக்கலான கஷ்டங்களால் துக்கப்படுகிறவனாயிருந்த போதிலும்
பவதீம்	உன்னை
க்ஷணம் ஸ்மரதி	ஒரு க்ஷண நேரம் ஸ்மரித்தானேயாகில்
ஸ ஏகோ ஜந்து: ஏவ	அவன் ஒருவன் மட்டுமே
லோகோத்தர கீர்த்தி:	லோகத்தில் மிகவும் மேன்மையான கீர்த்தியுடையவனாக
பவதி	ஆகிறான்

எந்த ஐந்து உம்மை ஒரு க்ஷணம் நினைக்கின்றதோ, அந்த ஐந்து ஊமையாயினும் அடர்ந்த அக்ஞானத்தால் நேர்ந்த துக்கத்தால் சோகமுற்றதாயினும் உலகத்தில் சிறந்த கீர்த்தியுள்ள ஒப்பற்றதாக ஆகிறது என்றும் பொருள் சொல்லலாம்.

पञ्चदशवर्णरूपं कञ्चन काञ्चीविहारधौरेयम्।
पञ्चशरीयं शंभोर्वञ्चनवैदग्ध्यमूलमवलम्बे।।५८।।

பஞ்சதஶ வர்ண ரூபம் கஞ்சந காஞ்சீ விஹார
தௌரேயம்।
பஞ்சஶரீயம் சம்போ: வஞ்சந வைதக்த்ய மூலம்
அவலம்பே।।58।।

பஞ்சதஶவர்ணரூபம்	பஞ்சதசாக்ஷரீ ரூபமுடையதும்
காஞ்சீ விஹார தௌரேயம்	காஞ்சீ பட்டணத்தில் விளையாடுவதில் முன்னிற்பதும்
ஶம்போ: வஞ்சந வைதக்த்ய மூலம்	பரமசிவனை வஞ்சிப்பதில் (மோஹிப்பதில்) ஸாமார்த்-தியத்திற்கு மூலமானதும்
பஞ்சஶரீயம்	மன்மதனைச் சேர்ந்ததான (காமரூபிணியான)
கஞ்சந	ஒரு மூர்த்தியை
அவலம்பே	சரணமடைகிறேன்

பஞ்சதசாக்ஷரீ (ஸ்ரீ) வித்யையானது அம்பிகையின் சரீரமாயிருப்பது,

'ஸ்ரீமத் வாக்பவ கூடைக ஸ்வரூபமுகபங்கஜா।
கண்டாத: கடிபர்யந்த மத்யகூட ஸ்வரூபிணீ॥
சக்தி கூடைகதாபந்ந கட்யதோ பாகதாரிணீ॥'

என்ற 'ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம'த்திய நாமங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

(பஞ்சசரீயம்-மன்மதனுடையதான, சம்போ: பரம சிவனை வஞ்சந வைதக்த்ய மூலம்-மயக்கும் ஸாமார்த் தியத்துக்குக் காரணமான, கஞ்சந - ஒரு தேவதையை, அவலம்பே - சரணம் அடைகிறேன். பரமசிவனை மயக்கும் மன்மத ஸாமார்த்தியத்துக்குக் காரணமான காமாக்ஷியைச் சரணமடைகிறேன் என்றும் பொருள் சொல்லலாம்.)

**परिणतवतीं चतुर्धा पदवीं सुधियां समेत्य सौषुम्नीम्।
पञ्चाशदर्णकल्पित पदशिल्पां तां नमामि कामाक्षीम्।।५९।।**

**பரிணதவதீம் சதுர்த்தா பதவீம் ஸுதியாம் ஸமேத்ய ஸௌஷும்நீம்।
பஞ்சாமதர்ண கல்பித பதசில்பாம் தாம் நமாமி காமாக்ஷீம்॥59॥**

ஸுதியாம்	*ஞானவான்களுடைய*
ஸௌஷும்நீம் பதவீம்	*ஸுஷும்நா மார்க்கத்தை*
ஸமேத்ய	*அடைந்து*
சதுர்தா	*நான்கு விதமாக*
பரிணதவதீம்	*பேதங்களையடைந்திருப்பவளாயும்*
பஞ்சாசதர்ண கல்பித	*ஐம்பது அக்ஷரங்களாலாகிய*

பதசில்பாம்	பதங்களின் ரூபமாயிருப்பவளுமான
தாம் காமாக்ஷீம்	அந்த காமாக்ஷீ தேவியை
நமாமி	நமஸ்கரிக்கிறேன்

1. முந்திய ச்லோகத்தின் அம்பிகை ஸ்ரீ வித்யாரூபிணியாயிருப்பதைச் சொல்லிவிட்டு, இந்த ச்லோகத்தில் சப்தரூபிணியாயிருப்பதைச் சொல்லுகிறார். சப்தமானது (வாக்கானது) பரா, பச்யந்தி, மத்யமா, வைகரீ என்று நான்கு வகைப்படும். நாதமானது மூலாதாரத்தில் இருக்கும் போது பரா என்ற பெயரோடிருக்கும், அங்கிருந்து ஸுஷும்நா மார்க்கமாக மேலே வருகையில் ஸ்வாதிஷ்டானத்திற்கு வரும்போது பச்யந்தீ என்றும் அநாஹதத்திற்கு வரும்போது மத்யமா என்றும், அதற்கு மேலாக விசுத்தி ஸ்தானமான கண்டத்தின் மூலமாய் வெளிவரும்போது மத்யமா என்றும் பெயர்கள்.

'மூலாதாரே ஸமுத்பந்ந: பராக்யோ நாத ஸம்பவ:
ஸ ஏவோர்த்வதயாநீத: ஸ்வாதிஷ்டாநே விஜ்ரும்பித:॥'
பச்யந்த்யாக்யாம் அவாப்நோதி ததைவோர்த்வம் சநை: சநை:।
அநாஹதே புத்தி தத்வ ஸமேதா மத்யமாபித:॥
ததா தயோர்த்வ நுந்நஸ் ஸந் விசுத்தௌ கண்டதேசத:।
வைகர்யாக்ய: ----- ----- ----- ----- ----- ---------॥

இதையே ஸ்ரீமதாசார்யாளும்,

'மூலாதாராத் ப்ரதமமுதிதோ யச்ச பாவ: பராக்ய:
பச்சாத் பச்யந்த்யத ஹ்ருதயகோ புத்தியுக் மத்யாமாக்ய:।

வ்யக்தே வைகர்யத ருருதிஷோஸ் தஸ்ய ஜந்தோ:
ஸுஷும்நா'
பக்தஸ் தஸ்மாத் பவதி பவந ப்ரேரிதா வர்ணஸம்ஞா॥

2. இந்த வைகரீ என்ற வாக்கானது நாம் ஸாதாரணமாகப் பேசுவது. இதையே தான் வாக்கென்று தெரியாதவர்கள் சொல்வார்களே தவிர, அறிஞர்கள் வாக்கானது மேலே சொல்லியபடி நான்குவகைப் பட்டதென்றும் அவற்றில் கடைசியானது தான் வைகரீ வாக்கென்றும் சொல்லுவார்கள்.

'சத்வாரி வாக் பரிமிதா பதாநி
தாநி விதுர் ப்ராஹ்மணா யே மநீஷிண:
குஹா த்ரீணி நிஹிதா நேங்கயந்தி
துரீயம் வாசோ மனுஷ்யா வதந்தி॥'

3. வைகரீ வாக்கானது 'அ' முதல் 'க்ஷ' வரையிலுள்ள ஐம்பது அக்ஷரங்களாலும் அவற்றின் சேர்க்கைகளான பதங்களாலும் உண்டாவது. அது இங்கு 'பஞ்சாசத்வர்ண கல்பித பத சில்பாம்' என்று சொல்லப்பட்டது. வர்ணங்கள் 'அ' முதல் 'க்ஷ' வரையில் இருப்பதால் பஞ்சாசத் வர்ணங்களையும் (வைகரீ வாக்கையும்) அக்ஷமாலை என்று சொல்லுவது வழக்கம்.

'பரா பூஜந்ம பச்யந்தீ வல்லீ குச்சஸமுத்பவா।
மத்யமா ஸௌரபா வைகர்யக்ஷமாலா ஜயத்யஸௌ॥'

4. இந்த நாலுவிதமான வாக்குகளும் அம்பிகையின் ரூபங்களென்பதாக,

'பரா ப்ரத்யக்சிதீ ரூபா பச்யந்தீ பரதேவதா
மத்யமா வைகரீ ரூபா ----- ----- ----- ----- '

என்பதாக 'ஸ்ரீலலிதாஸஹஸ்ரநாம'த்தில் சொல்லப்பட்டது. இதைப்பற்றி அதிகமாகத் தெரிந்துக் கொள்ள விருப்ப முள்ளவர்கள் பாஸ்கரராயருடைய ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்[3] காம கலாவிலாஸம், சாரதா திலகம், ஆர்தர் ஏவலனுடைய க்ரந்தங்கள் முதலியவற்றைப் பார்க்கவும்.

आदिक्षन्मम गुरुराट् आदिक्षान्ताक्षरात्मिकां विद्याम्।
स्वादिष्ठचापदण्डां नेदिष्ठामेव कामपीठगताम्॥६०॥

ஆதிக்ஷத் மம குருராட் ஆதி க்ஷாந்தாக்ஷராத்மிகாம் வித்யாம்।
ஸ்வாதிஷ்டசாபதண்டாம் நேதிஷ்ட்டாமேவ காமபீடகதாம்॥60॥

மம குருராட்	என்னுடைய குருநாதனானவர்
ஸ்வாதிஷ்ட	மிகவும் இனிப்பான
சாபதண்டாம்	(கரும்பு) வில்லையுடை-யவளும்
காமபீடகதாம்	காமகோடிபீடத்திலிருப் பவளும்
ஆதி	அ முதலாக
க்ஷாந்த	க்ஷ முடிவாகவுள்ள
அக்ஷராத்மிகாம்	அக்ஷரங்களின் ஸ்வரூபமாயுள்ள
வித்யாம்	வித்யாரூபிணியுமான ஸ்ரீ காமாக்ஷியை

[3] இப்பாஷ்யத்திற்கு தமிழில் அர்த்த வ்யாக்யானங்களுடன் கூடிய மொழி பெயர்ப்பு ஸ்ரீமான் G.V.கணேசய்யரால் எழுதப்பட்டு, ஸ்ரீ ஜனார்த்தனா அச்சுக்கூடத்தாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 1000 பக்கங்கள் கொண்டது. விலை ரூ.10-0-0

நேதிஷ்டாம் ஏவ	மிகவும் ஸமீபத்திலிருப்பவளாகவே
ஆதிக்ஷத்	காட்டினார் (உபதேசித்தார்)

அதாவது, தன் குருநாதருடைய அனுக்ரஹத் தினால் வித்யா ரூபிணியான ஸ்ரீ காமாக்ஷியின் தர்சனம் தனக்குக் கிடைத்ததாகச் சொல்லுகிறார்.

तुष्यामि हर्षितस्मर शासनया काञ्चिपुरी (र) कृतासनया।
स्वासनया सकलजगद्भासनया कलितशम्बरासनया।।६१।।

துஷ்யாமி ஹர்ஷிதஸ்மர ஶாஸநயா காஞ்சீபுரி(ர) க்ருதாஸநயா।
ஸ்வாஸநயா ஸகல ஜகத் பாஸநயா கலித ஶம்பராஸநயா।।61।।

ஹர்ஷிதஸ்மர ஶாஸநயா	ஸ்மரனை (மன்மதனை)த் தண்டித்தவரான பரமசிவனை ஸந்தோஷப்படுத்தியவளும்
காஞ்சிபுரி	காஞ்சீபுரியில்
க்ருதாஸநயா	வாஸஸ்தானத்தையுடையவளும்
ஸ்வாஸநயா	தன்னிடமே நிலையோடிருப்பவளும்
ஸகல ஜகத் பாஸநயா	ஸகல ஜகத்தையும் ப்ரகாசத் தோடு இருக்கச் செய்பவளும்
கலித ஶம்பராஸநயா	மன்மதன் (திரும்பவும்) உண்டாகும்படி செய்தவளுமான (ஸ்ரீ காமாக்ஷியால்)
துஷ்யாமி	ஸந்தோஷப்படுகிறேன்

1. ஜகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும் ப்ரம்ஹத்தினிடம் நிலையோடிருக்கையில், ப்ரம்மமானது தன்னிடமே நினைத்திருப்பதாகச் சொல்லப்படும். இப்படி தான் நிலைத்திருப்பதற்குப் பிற வஸ்துக்களை அபேக்ஷிக்காமல் தன்னிடமே ப்ரதிஷ்டிதமாக ப்ரம்ஹமிருப்பது 'ஸ்வாஸநயா' என்ற பதத்தினால் இங்கு குறிக்கப்பட்டது.

2. சம்பரன் என்ற மஹா மாயாவியான அஸுரனை மன்மதன் ஸம்ஹாரம் செய்ததால் அவனுக்கு சம்பராஸனன் என்று பெயர். அவனை அம்பாள் உஜ்ஜீவிக்கச் செய்தது 'கலித சம்பராஸநயா' என்பதால் சொல்லப்பட்டது.

3. சம்பரமென்றால் மிகவும் சிரேஷ்டமானது என்றும் அர்த்தமுண்டு. ஸர்வோத்க்ருஷ்டமான ஆஸனமான காமகோடிபீடத்தில் அம்பிகை இருப்பதை 'கலித சம்பராஸநயா' என்று சொன்னதாகவும் சொல்லலாம்.

प्रेमवती कम्पायां स्थेमवती यतिमनःसु भूमवती।
सामवती नित्यगिरा सोमवती शिरसि भाति हैमवती।।६२।।

ப்ரேமவதீ கம்பாயாம் ஸ்தேமவதீ யதிமனஸ்ஸு பூமவதீ।
ஸாமவதீ நித்யகிரா ஸோமவதீ சிரஸி பாதி
ஹைமவதீ।।62।।

ஹைமவதீ	ஹிமவானுடைய பெண்ணான காமாக்ஷியானவள்
கம்பாயாம்	கம்பாநதியிடத்தில்
ப்ரேமவதீ	ப்ரியமுள்ளவளாயும்
யதிமனஸ்ஸு	யதிகளுடைய மனதுகளில்
ஸ்தேமவதீ	ஸ்திரமான நிலையோடிருப்

	பவளும்
பூமவதி	ஐச்வர்யம் (மஹிமை) பொருந்தியவளும்
நித்யகிரா	அழிவில்லாத வாக்காகிய வேதங்களால்
ஸாமவதீ	புகழப்பட்டவளும்
ஶிரஸி	சிரஸில்
ஸோமவதீ	சந்திரனையுடையவளுமாக
பாதி	விளங்குகிறாள்

कौतुकिना कम्पायां कौसुमचापेन कीलितेनान्तः।
कुलदैवतेन महता कुड्मलमुद्रां धुनोतु नः प्रतिभा।।६३।।

கௌதுகிநா கம்பாயாம் கௌஸுமசாபேந கீலிதேநாந்த:।
குலதைவதேந மஹதா குட்மல முத்ராம் துநோது ந:
ப்ரதிபா।।63।।

கம்பாயாம் கௌதுகிநா	கம்பா நதியில் (கம்பாநதீ தீரத்தில் இருப்பதில்) உத்ஸாஹத்தோடு கூடியதும்
அந்த:	(உள்ளுக்குள்) மனதில்
கௌஸும சாபேந	மன்மதனால்
கீலிதேந	செய்யப்பட்ட அடையாளத்தோடு கூடியதுமான (அதாவது, ச்ருங்காரரஸம் நிரம்பிய மனதையுடையதுமான)

மஹதா குலதைவதேந	*உயர்ந்த (ஸர்வோத்க்ருஷ்ட மான) குலதெய்வத்தினால்*
ந: ப்ரதிபா	*நம்முடைய புத்தியானது*
குட்மல முத்ராம் துநோது	*அரும்பின் நிலைமைமாறி மலர்ச்சியடையட்டும்*

1. மன்மதன் புஷ்பங்களாலாகிய தனுஸ்ஸை உடையவனாகையால் இங்கு 'கௌஸும சாபேந' என்று சொல்லப்பட்டது.

2. மலரும் தருணத்திலிருக்கும் மொட்டுக்குக் குட்மளம் என்று பெயர்.

கௌஸும சாபேந - புஷ்ப பாணங்களையுடைய வில்லைத் தரித்துள்ளதும், அல்லது; புஷ்பங்களையே வில்லாகக் கொண்டதும், அந்த: கீலிதேந - எனது உள்ளத்தில் உறைந்திருப்பதும் - என்றும் பொருள் சொல்லலாம்.

यूना केनापि मिलितदेहा स्वाहासहायतिलकेन।
सहकारमूलदेशे संविद्रूपा कुटुम्बिनी रमते।।६४।।

யூநா கேநாபி மிலித தேஹா ஸ்வாஹாஸஹாய திலகேந।
ஸஹகார மூலதேஶே ஸம்வித்ரூபா குடும்பினீ
ரமதே।।64।।

ஸம்வித்ரூபா	*ஞான ரூபிணியான*
குடும்பிநீ	*ஒரு குல ஸ்திரீயானவள்*
ஸ்வாஹா ஸஹாய	*அக்னியை*
திலகேந	*திலகமாகவுடைய (அதாவது அக்னியை நெற்றிக்கண்ணாக உடைய)*

கேநாபி யூநா	யாதோ ஒரு (வர்ணிக்க முடியாத) யௌவன புருஷனுடன்
மிளித தேஹா	சேர்ந்ததான சரீரத்தையுடைய-வளாய்
ஸஹகார மூல தேஶே	ஆம்ரமரத்தின் மூலப்ரதேசத்தில் (அடியில்)
ரமதே	ரமித்துக்கொண்டிருக்கிறாள்.

1. இங்கு சிவதம்பதிகளுடைய அர்த்தநாரீச்வர ஸ்வரூபமானது 'மிளிததேஹா' என்பதினால் சொல்லப்பட்டது.

2. அக்னியினுடைய பத்னிக்கு ஸ்வாஹா என்று பெயராகையால் இங்கு 'ஸ்வாஹா ஸஹாய என்பதால்' அக்னி சொல்லப்பட்டான்.

कुसुमशरगर्वसंपत्कोशगृहं भाति काञ्चिमध्यगतम्।
स्थापितमस्मिन्कथमपि गोपितमन्तर्मया मनोरत्नम्।।६५।।

குஸுமஶர கர்வ ஸம்பத்கோஶக்ருஹம் பாதி
காஞ்சிமத்யகதம்।
ஸ்தாபிதம் அஸ்மின் கதமபி கோபிதம் அந்தர்மயா
மநோரத்னம்।।65।।

குஸுமஶர	புஷ்பங்களைப் பாணங்களாகக் கொண்ட மன்மதனுடைய
கர்வஸம்பத்	கர்வமாகிய தனத்தின்
கோஶக்ருஹம்	பொக்கிஷமானது
காஞ்சிமத்யகதம்	காஞ்சீபுரியின் நடுவிலிருந்து கொண்டு

பாதி	விளங்குகிறது
அஸ்மின் ஸ்தாபிதம்	அதில் ஸ்தாபிக்கப்பட்ட-தாயிருக்கும்
மனோரத்னம்	என் மனோரத்னமானது
மயா	என்னால்
அந்த:	என் மனத்திற்குள்
கதமபி கோபிதம்	எப்படியோ காப்பாற்றப்பட்டு வருகிறது

காஞ்சிமத்யகதமான காமகோடி பீடமானது மன்மதனுடைய கர்வத்திற்குக் காரணமாயிருக்கும் காமத்திற்கு பொக்கிஷம் போல் விளங்குகிறதென்றும், அதில் ஸ்தாபிக்கப்பட்ட மூர்த்தியான ஸ்ரீ காமாக்ஷியானவள் ஒரு ரத்னம்போல் தன் மனதில் விளங்கிக் கொண்டு தன்னால் எப்போதும் காப்பாற்றப்பட்டு (அதாவது, த்யானிக்கப்பட்டு) வருகிறாள் என்றும் கவியால் சொல்லப்பட்டது. அவ்விதமான கோசக்ருஹத்திற்குள் ஸ்தாபிதமான (ஸ்ரீ காமாக்ஷியாகிற) ரத்னத்தைத் தான் கொண்டுவந்து தன் மனதிற்குள் வைத்து எப்படியோ காப்பாற்றிவருவதாக வர்ணித்திருக்கிறார்.

அஸ்மிந் - அந்தப் பொக்கிஷத்தில், மநோரத்நம் - என் மனதென்னும் ரத்னமானது, கதமபி - மிகவும் சிரமப்பட்டு, கோபிதம்-பத்திரப்படுத்தப்பட்டிருக்கின் றது, என்றும் பொருள் சொல்லலாம்.

दग्धषडध्वारण्यं दरदलितकुसुम्भसंभृतारुण्यम्।
कलये नवतारुण्यं कम्पातटसीम्नि किमपि कारुण्यम्।।६६।।

தக்த்த ஷடத்வாரண்யம் தரதலித குஸும்ப
ஸம்ப்ருதாருண்யம்।
கலயே நவதாருண்யம் கம்பாதடஸீம்னி கிமபி
காருண்யம்॥66॥

தக்த ஷடத்வாரண்யம்	ஆறு அத்வாக்களாகிய ஆரண்-யத்தை எரித்ததும் (அதாவது, அவற்றைக் கடந்ததும்)
தரதலித	கொஞ்சம் மலர்ந்ததான
குஸும்ப	குங்குமப்பூவின்
ஸம்ப்ருத	சேர்க்கையான
ஆருண்யம்	சிகப்பு நிறத்தையுடையதும்
நவதாருண்யம்	புதிதான (ஆரம்பித்ததான) யௌவனத்தையுடையதுமான
கிமபி காருண்யம்	ஏதோ ஒரு கருணாரூபிணியை
கம்பாதடஸீம்நி	கம்பா நதிக்கரையில்
கலயே	அறிகிறேன் (த்யானிக்கிறேன்)

1. ஜகத்தானது ஷட் (ஆறு வகையான) அத்வாக்களாய் (வழிகளாய்) சித்ரூபிணியான அம்பிகையிடமிருந்து ஏற்படுகிறது என்று சொல்லபடுகிறது.

'வர்ண: கலா பதம் தத்வம் மந்த்ரோ புவநமேவ ச।
இத்யத்வ ஷட்கம் தேவேசி பாதி த்வயி சிதாத்மநி॥'

இந்த ஆறு அத்வாக்களில் வர்ண, பத, மந்த்ர மென்பவைகள் வாக்கைச் சேர்ந்தவைகளென்றும், கலா, தத்வ, புவனமென்றவைகள் அர்த்தத்தைச் சேர்ந்தவைகளென்றும், அந்த வாக்கும் அர்த்தமும் முறையே ப்ரகாச,

விமர்சாத்மக மானவையென்றும், அவற்றிலிருந்து இந்த ஜகத்தானது ஏற்படுகிறதென்றும் சொல்லப்படும்.

2. அம்பிகை இந்த ஆறு அத்வாக்களுக்கும் அப்பாலிருப்பதை, 'ஷடத்வாதீத ரூபிணீ' என்று 'ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் சொல்லியிருக்கிறது.

3. அல்லது, காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்யங்களென்ற ஷட்ரிபுக்களை 'ஷடத்வா' என்ற பதத்தினால் குறிப்பிட்டதாகவும் சொல்லலாம். அவை காட்டிலுள்ள மரங்கள் மாதிரி மேலுக்குமேல் உண்டாவதால் அவற்றை ஒரு அரண்யத்திற்கு ஸமானமாக வர்ணிப்பது வழக்கம். அம்பிகையின் அனுக்ரஹம் ஏற்பட்டால் அவை நசித்து விடுவதால் 'தக்த ஷடத் வாரண்யம்' என்று சொல்லப்பட்டது.

4. இதே மாதிரி 'ஸகல ஜனனீஸ்தவ'த்திலும் வர்ணிக்கப் பட்டிருக்கிறது.

ஷடத்வாரண்யாநீம் ப்ரளய ரவி கோடி ப்ரதிருசா
ருசா பஸ்மீக்ருத்ய ஸ்வபத கமல ப்ரஹ்வ சிரஸாம்।
விதந்வாந: சைவம் கிமபி வபுரிந்தீவரருசி:
குசாப்யாம் ஆநம்ரஸ்தவ புருஷகாரோ விஜயதே॥

अधिकाञ्चि वर्धमानां अतुलां करवाणि पारणामक्ष्णोः।
आनन्दपाकभेदां अरुणिम१परिणामगर्वपल्लविताम्॥६७॥

அதிகாஞ்சி வர்தமாநாம் அதுலாம் கரவாணி பாரணாம் அக்ஷ்ணோ:।
ஆநந்த பாக பேதாம் அருணிம பரிணாம கர்வபல்லவிதாம்॥67॥

அதிகாஞ்சி	காஞ்சீபுரியில்
வர்தமாநாம்	விருத்தியடைகிறதாயும், (அதாவது, விளங்குகிறதாயும்)
அதுலாம்	தனக்கு ஸமானமில்லாததாயும்
ஆனந்த பாகபேதாம்	ஆனந்தம் நிறைந்த ரூபத்தை-யுடையதாயும்
அருணிமபரிணாம-கர்வபல்லவிதாம்	அதிகமான சிகப்பானது வளர்ந் தோங்கிய துளிர்போலிருப்-பதாயுமுள்ள ஒரு மூர்த்தியை
அக்ஷ்ணோ: பாரணாம்-கரவாணி	என் கண்ணாரப் பார்க்கிறேன்.

बाणसृणिपाशकार्मुकपाणिममुं कमपि कामपीठगतम्।
एणधरकोणचूडं शोणिमपरिपाकभेदमकालये।।६८।।

பாண ஸ்ருணி பாஶ கார்முக பாணிம் அமும் கமபி காமபீடகதம்।
ஏணதரகோணசூடம் ஶோணிம பரிபாக பேதம் ஆகலயே।।68।।

பாண ஸ்ருனி-பாஶகார்முக	(புஷ்ப) பாணம், அங்குசம், பாசம்,(இக்ஷு) கோதண்டம் இவற்றையுடைய
பாணிம்	கைகளையுடையதும்
காமபீடகதம்	காமகோடி பீடத்திலிருப்பதும்
ஏணதரகோண சூடம்	மானைத் தரிக்கும் சந்த்ரனுடைய கலையை சிரஸில் தரித்ததும்
சோணிமபரிபாக பேதம்	உயர்ந்ததான சிகப்பு நிறத்தோடு கூடியதுமான
அமும்	இந்த

கமபி	ஒரு மூர்த்தியை
ஆகலயே	த்யானிக்கிறேன்.

ஏணமென்றால் மான் என்று அர்த்தம், சந்த்ர மண்டலத்திலிருக்கும் களங்கத்தை மானென்று வர்ணிப்பது கவி வழக்கமாகையால், சந்த்ரனுக்கு ஏணதரனென்று பெயர் சொல்லப்படும்.

किं वा फलति ममान्यैर्बिम्बाधरचुम्बिमन्दहासमुखी।
संबाधकरी तमसां अम्बा जागर्ति मनसि कामाक्षी।।६९।।

கிம் வா பலதி மமாந்யை: பிம்பாதரசும்பி மந்தஹாஸமுகீ।
ஸம்பாதகரீ தமஸாம் அம்பா ஜாகர்த்தி மனஸி
காமாக்ஷீ।।69।।

பிம்பாதர சும்பி	கோவைக் கனிபோன்ற அதரங்களில் பரவும்
மந்தஹாஸ முகீ	புன்சிரிப்போடு கூடிய முகத்தையுடையவளும்
தமஸாம் ஸம்பாதகரீ	அக்ஞானத்தை அறவேபோக்-கடிப்பவளுமான
அம்பா காமாக்ஷீ	தாயாரான காமாக்ஷியானவள்
மனஸி	என்னுடைய மனதில்
ஜாகர்த்தி	விளங்கிக் கொண்டிருக்கிறாள்
அந்யை:	பிறரால்
மம	எனக்கு
கிம் வா பலதி	என்ன கார்யம் ஆகவேண்டி-யிருக்கிறது ஒன்றுமில்லை யென்று கருத்து.

मञ्चे सदाशिवमये परशिवमयललितपौष्पपर्यङ्के ।
अधिचक्रमध्यमास्ते कामाक्षी नाम किमपि मम भाग्यम्।।७०।।

மஞ்சே ஸதாஶிவமயே பரஶிவமய லலித பௌஷ்ப பர்யங்கே।
அதிசக்ரமத்த்யம் ஆஸ்தே காமாக்ஷீ நாம கிமபி மம பாக்யம்॥70॥

காமாக்ஷீ நாம	காமாக்ஷீ என்ற பெயரோடு கூடிய
கிமபி	ஏதோ ஒரு
மம பாக்யம்	என்னுடைய பாக்யமானது
அதிசக்ர மத்யம்	ஸ்ரீ சக்ரத்தின் மத்தியில்
ஸதாஶிவமயே மஞ்சே	ஸதாசிவனாகிற மஞ்சத்தில் (கட்டிலில்)
பரஶிவமய	பரசிவனாகிய
லலித	அழகான
பௌஷ்ப பர்யங்கே	புஷ்பமெத்தையின் மீது
ஆஸ்தே	விளங்கிக்கொண்டிருக்கிறது.

1. ஸ்ரீ சக்ரத்தின் நடுநாயகமாக விளங்கும் ஸர்வானந்த மயசக்ரமென்ற பிந்து இங்கு 'அதிசக்ரமத்யம்' என்பதால் சொல்லப்பட்டது. அதில் பஞ்சப்ரம்ஹாகாரமான மஞ்சத்தில் காமேச்வரரும் அவருடைய வாமாங்கத்தில் ஸ்ரீ லலிதாம்பிகையும் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸதநஸ்யோபரி தாஸாம் ஸர்வானந்தமய நாமகே பிந்தௌ।
பஞ்சப்ரம்ஹாகாராம் மஞ்சம் ப்ரணமாமி மணிகணாகீர்ணம்॥'

இந்த மஞ்சத்திற்கு ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன் இந்நால்வரும் கால்களாயிருப்பதாகச் சொல்லப்படுவார்கள்.

பர்யங்கஸ்ய பஜாமஃ பாதாந் பிம்பாம்புதேந்துஹேமருசஃ।
அஜஹரிருத்ரேசமயாந் அநலாஸுர மாருதேசகோண
ஸ்த்தாந்॥

இந்த மஞ்சத்திற்கு ஸதாசிவன் மேல் கட்டாயிருப்பதாகச் சொல்லப்படும்.

'பலகம் ஸதாசிவமயம் ப்ரணௌமி ஸிந்தூர ரேணு கிரணாபம்॥'

மேலே சொல்லிய ஐவரும் தங்களுடைய சக்திகளோடு இல்லாதிருக்கும் போது ப்ரேதங்களாக இருக்கிறபடியால் அவர்களாலான கட்டிலானது 'பஞ்சப்ரேத மஞ்சம்' என்று சொல்லப்படும். (இதைப் பற்றி அதிகமாகத் தெரியவேண்டுமானால் ஞானார் ணவம் முதலியவற்றைப் பார்க்கவும்).

2. இந்த மஞ்சத்தைப் பொதுவாக 'மஞ்சே ஸதா சிவமயே' என்று இங்கு சொல்லியது போல் 'சிவாகாரே மஞ்சே' என்று 'ஸௌந்தர்யலஹரி'யிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்பேர்ப்பட்ட மஞ்சத்தின் மீது காமேச்வரரு டைய வாமாங்கத்தில் அம்பிகை வீற்றிருப்பதால் அவ் விதமான அவருடைய (அழகியதும் புஷ்பம்போல் ம்ருதுவானதுமான) அங்கமானது 'பரமசிவமய லலித பௌஷ்ப பர்யங்கே' என்று இங்கு சொல்லப்பட்டது. இதே மாதிரி ஸ்ரீ மதாச்சார்யாளும்,

'ஶிவாகாரே மஞ்சே பரமசிவ பர்யங்க நிலயாம்'

என்று 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

रक्ष्योऽस्मि कामपीठीलासिकया घनकृपाम्बुराशिकया।
श्रुतियुवतिकुन्दलीमणिमालिकया तुहिनशैलबालिकया।।७१।।

ரக்ஷ்யோSஸ்மி காமபீடீலாஸிகயா கனக்ருபாம்பு
ராஶிகயா।
ஶ்ருதியுவதி குந்தலீமணி மாலிகயா துஹிநஶைல
பாலிகயா।।71।।

காமபீட லாஸிகயா	காமபீடத்தில் நர்த்தனம் செய்கிறவளும்
கனக்ருபாம்பு ராஶிகயா	கனீபூதமான கருணாரஸத்தின் ஸமுத்ரமாக விளங்குபவளும்
ஶ்ருதியுவதி	வேதங்களாகிற யுவதிகளின்
குந்தலீ மணிமாலிகயா	கேசங்களில் அணிந்திருக்கும் ரத்னங்களின் மாலை போன்றவளும்
துஹிந ஶைலபாலிகயா	ஹிமவானுடைய குமாரியாயு-மிருக்கிற ஸ்ரீ காமாக்ஷியால்
ரக்ஷ்யோSஸ்மி	பார்க்க (காப்பாற்ற)த்தக்க-வனாயிருக்கிறேன்.

1. லாஸிகா என்பது நர்த்தனம்செய்யும் ஸ்திரீக்குப்பெயர்.

2. அம்பிகையானவள் ஸகல வேதங்களுக்கும் பரமதாத் பர்யமாயிருப்பதால், வேதங்களை ஸ்திரிகளாகவும், அம்பிகையை அவர்களுடைய சிரஸில் கேசங்களிலணிந் திருக்கும் ரத்னங்களின் கோர்வையாகவும் இங்கு வர்ணிக் கப்பட்டன. அம்பிகையை அந்த ஸ்திரீகள் இடை விடாமல் நமஸ்கரிப்பதால் அவளுடைய பாதங்களின் (செம்பஞ்சுக் குழம்பு கலந்ததால் சிகப்பாயிருக்கும்) தூளிகள்

அவர்களுடைய வகுட்டிலணியப்பட்ட ஸிந்தூர மாயிருப்பதாக,

'ச்ருதி ஸீமந்த ஸிந்தூரி க்ருத பாதாப்ஜ தூலிகா'

என்று 'ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம'த்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

लीये पुरहरजाये माये तव तरुणपल्लवच्छाये।
चरणे चन्द्राभरणे काञ्चीशरणे नतार्तिसंहरणे।।७२।।

லீயே புரஹரஜாயே மாயே தவ தருண பல்லவச்சாயே।
சரணே சந்த்ராபரணே காஞ்சீஶரணே நதார்த்தி ஸம்ஹரணே।।72।।

புரஹர ஜாயே	முப்புரங்களையும் அழித்தவரான பரமசிவனுடைய பத்னியே
மாயே	மஹாமாயாரூபிணியே
தருணபல்லவச்சாயே	இளந்துளிர் போன்ற (சிவந்த) காந்தியுடையவளே
சந்த்ராபரணே	சந்த்ரனை (சிரஸின்) ஆபரணமாக உடையவளே
காஞ்சீ ஶரணே	காஞ்சீபுரியை வாஸஸ்தான மாக உடையவளே
நதார்த்தி ஸம்ஹரணே	நமஸ்கரிக்கின்றவர்களுடைய கஷ்டத்தைப்போக்குகிறவளே
தவ சரணே	உன்னுடைய பாதத்தில்
லீயே	லயித்திருக்கிறேன்

இங்கு வந்த பதங்களில் 'தருணபல்லவச்சாயே', 'காஞ்சீ சரணே', 'நதார்த்திஸம்ஹரணே' என்றவைகள் அம்பாளுடைய சரணத்தைப்பற்றிச் சொன்னதாகவும் சொல்லலாம். இதர தேவதைகள் போலல்லாமல் அம்பாள் தன்னுடைய சரணங்களாலேயே பக்தர்களு டைய பயத்தைப் போக்க வேண்டிய அளவுக்கு மிஞ்சி அனுக்ரஹம் செய்யும் மஹிமை வாய்ந்தவளென்பதாக ஸ்ரீ மதாசார்யாள் 'ஸௌந்தர்ய லஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

'த்வதந்ய: பாணிப்யாம் அபயவரதோ தைவதகண:
த்வமேகா நைவாஸி ப்ரகடித வராऽபீத்யபிநயா।
பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்ச்சா ஸமதிகம்
சர்ண்யே லோகாநாம் தவ ஹி சரணாவேவ நிபுணௌ'।।

मूर्तिमपि मुक्तिबीजे मूर्ध्निस्तबकितचकोरसांराज्ये।
मोदितकम्पाकूले मुहुर्मुहुर्मनसि मुमुदिषाऽस्माकम्।।७३।।

மூர்த்திமதி முக்திபீஜே மூர்த்நி ஸ்தபகித சகோர ஸாம்ராஜ்யே।
மோதித கம்பா கூலே முஹுர் முஹுர்மனஸி முமுதிஷாऽஸ்மாகம்।।73।।

மூர்த்திமதி	உருவத்தோடு கூடிய
முக்திபீஜே	முக்திக்கு வித்தாயிருப்பவளும் (அதாவது முக்திக்கு வித்தே உருவெடுத்தாற் போலிருப் & பவளும்)
மூர்த்நி	சிரஸில்
ஸ்தபகித சகோர ஸாம்ராஜ்யே।	சகோரங்களுக்கு ஸாம்ராஜ்யமான சந்த்ரனைச் செண்டு போல்

	அணிந்திருப்பவளும்
மோதித கம்பா கூலே	கம்பா நதியின் கரையிலிருப்-பதற்கு ப்ரியமுள்ளவளுமான ஒரு மூர்த்தியிடத்தில்
முமுக்ஷா	ஆனந்தமடைய வேண்டுமென்ற ஆசையானது
அஸ்மாகம் மநஸி	நம்முடைய மனதில்
முஹு: முஹு:	அடிக்கடி (மேலுக்கு மேல்), உண்டாகிறது.

சகோர பக்ஷியானது சந்த்ரனுடைய நிலவையே ஆஹாரமாக உடையதென்பதாகச் சொல்லப்படுமாதலால் சந்த்ரனைச் சகோரங்களுக்கு ஸாம்ராஜ்யமாகச் சொல்லப்பட்டது.

वेदमयीं नादमयीं बिन्दुमयीं परपदोद्यदिन्दुमयीम्।
मन्त्रमयीं तन्त्रमयीं प्रकृतिमयीं नौमि विश्वविकृतिमयीम्।।७४।।

வேதமயீம் நாதமயீம் பிந்துமயீம் பரபதோ
த்யத்திந்துமயீம்।
மந்த்ரமயீம் தந்த்ரமயீம் ப்ரக்ருதிமயீம் நௌமி விஶ்வ
விக்ருதிமயீம்।।74।।

வேதமயீம்	வேதங்களின் ரூபமாயும்
நாதமயீம்	நாத ஸ்வரூபிணியாயும்
பிந்துமயீம்	பிந்து ஸ்வரூபிணியாயும்
பரபதோத்யத்	மோக்ஷத்தில் உதிக்கும்
இந்துமயீம்	சந்த்ரரூபிணியாயும்

மந்த்ரமயீம்	மந்த்ரரூபிணியாயும்
தந்த்ரமயீம்	தந்த்ர ரூபிணியாயும்
ப்ரக்ருதிமயீம்	ப்ரக்ருதி ரூபிணியாயும்
விஶ்வ விக்ருதிமயீம்	ஜகத்திலுள்ள எல்லாவற்றையும் தன்னுடைய பரிணாமங்-களாயுடையவளுமான ஸ்ரீ காமாக்ஷியை
நௌமி	நமஸ்கரிக்கிறேன்

1. பரப்ரம்ஹமானது ஸ்ருஷ்டிக்கு உன்முகமாக ஆகும் போது தன்னுடைய விமர்சரூபமான சக்தியிலிருந்து மஹாபிந்துவாக ஆவிர்பவித்து அதிலிருந்து நாதமும், அதிலிருந்து ஸகல ப்ரபஞ்சமும் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது.

'பரசிவ ரவிகர நிகர ப்ரதிபலதி வமர்ச தர்பணே விசதே।'
ப்ரதிருசிருசிரே குட்யே சித்தமயே நிவிசதே மஹாபிந்து:।।
ஸ்புரிதாத்அருணாத்பிந்தோள் நாதப்ரம்ஹாங்குரோரவோ வியக்த:।

தஸ்மாத் ககந ஸமீரணதஹநோதக பூமி வர்ண ஸம்பூதி:।।

2. இவ்விதமாக ஏற்படும் விச்வமானது (ப்ரபஞ்சமானது) ப்ரக்ருதிமயியான (ஆதிகரண வஸ்துவான) அம்பாளுடைய விக்ருதியாக (பரிணாமமாக) இருப் பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படிப் பாலிலிருந்து தயிரும், வெண்ணையும், நெய்யும், விகாரங்களாக (வேறு ரூபங்களாக) ஏற்படுகின்றனவோ, அம்மாதிரி ஸகல ப்ரபஞ்சமும் அம்பாளுடைய விகாரங்களாய் இருப்பதாக சாக்தர்களால் சொல்லப்படும். (இது பரிணாம வாதமென்று

சொல்லப்படும்). இது சாக்தர்களுடைய ஸித்தாந்தம்.

पुरमथनपुण्यकोटी पुञ्जितकविलोकसूक्तिरसाधाटी।
मनसि मम कामकोटी विहरतु करुणाविपाकपरिपाटी।। ७५।।

புரமதந புண்யகோடீ புஞ்ஜித கவிலோக ஸூக்தி ரஸதாடீ।
மநஸி மம காமகோடீ விஹரது கருணா விபாக பரிபாடீ।।75।।

புரமதன	*புரங்களை அழித்த பரமசிவனுடைய*
புண்யகோடீ	*புண்ணியத்தின் எல்லையாயிரு-ப்பவளும் (அதாவது, அவர் செய்த பாக்யத்தால் கிடைக்கப் பெற்றவளும்)*
புஞ்ஜித கவிலோக ஸூக்தி ரஸதாடீ	*கவிலோகத்தினுடைய (கவிகளுடைய) வாக்குகளின் ரஸங்களுடைய சேர்க்கையான ரூபமாயிருப்பவளும், (அதாவது, கவிகளுடைய உயர்ந்ததான வாக்குக்களால் ஸ்துதி செய்யப்பட்டவளும்)*
கருணாவிபாக பரிபாடீ	*அதிகமான கருணையே உருவெடுத்தாற்போல் இருப்பவளுமான*
காமகோடீ	*ஸ்ரீ காமாக்ஷியானவள்*
மம மநஸி	*என்னுடைய மனதில்*
விஹரது	*விளையாடிக் கொண்டிருக்கட்டும்*

कुटिलं चटुलं पृथुलं मृदुलं कचनयनजघनचरणेषु।
अवलोकितं अवलम्बितं अधिकम्पातटं अमेयमस्माभिः॥७६॥

குடிலம் சடுலம் ப்ருதுலம் ம்ருதுலம் கச நயந ஜகந சரணேஷு।
அவலோகிதம் அவலம்பிதம் அதிகம்பாதடம் அமேயம் அஸ்மாபி:॥76॥

கச நயந ஜகந சரணேஷு	*கூந்தல்களிலும், கண்களிலும், நிதம்ப ப்ரதேசத்திலும், சரணங்களிலும்*
குடிலம் சடுலம் ப்ருதுலம் ம்ருதுலம்	*(முறையே) வளைந்தும், சஞ்சலத்தோடும், பருத்தும், ம்ருதுவாயும் இருக்கிற*
அமேயம்	*அளவிடமுடியாத (அதாவது, மனதிற்கு எட்டாததான) ஒரு மூர்த்தியானது*
அஸ்மாபி:	*நம்மால்*
அதி கம்பாதடம்	*கம்பா நதிக்கரையில்*
அவலோகிதம்	*பார்க்கப்பட்டது*
அவலம்பிதம்	*சரணமடையப்பட்டது*

கசங்களில் குடிலமாயும், நயனங்களில் சடுலமாயும், ஜகனத்தில் ப்ருதுளமாயும், சரணங்களில் ம்ருதுளமாயும் அம்பிகையின் ரூபமிருப்பதாக இதில் வர்ணிக்கப்பட்டது. இதேமாதிரி ஸ்ரீ மதாசார்யாளும்,

'அராளா கேசேஷு ப்ரக்ருதிஸரளா மந்தஹஸிதே
சிரிஷாபா சித்தே த்ருஷது பல சோபா குசதடே।

ப்ருசம் தந்வீ மத்யே ப்ருதுருரஸிஜாரோஹவிஷயே
ஜகத் த்ராதும் சம்போர் ஜயதி கருணா காசிதருணா।।'

என்று 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

प्रत्यङ्मुख्या दृष्ट्या प्रसाददीपाङ्कुरेण कामाक्ष्याः।
पश्यामि निस्तुलमहो पचेलिमं किमपि परशिवोल्लासम्।।७७।।

ப்ரத்யங் முக்யா த்ருஷ்ட்யா ப்ரஸாத தீபாங்குரேன
காமாக்ஷ்யா:।
பஶ்யாமி நிஸ்துலமஹோ பசேலிமம் கிமபி
பரஶிவோல்லாஸம்।।77।।

காமாக்ஷ்யா:	*காமாக்ஷியினுடைய*
ப்ரஸாத தீபாங்குரேண	*அனுக்ரஹமாகிற தீபச்சுடரால் (உண்டான)*
ப்ரத்யங்முக்யா	*அந்தர்முகமான*
த்ருஷ்ட்யா	*பார்வையால்*
நிஸ்துலம்	*இணையற்றதும்*
பசேலிமம்	*பழுத்ததுமான*
கிமபி	*ஒரு (வர்ணனையிலடங்காத)*
பரஶிவோல்லாஸம்	*பரமசிவனுடைய உல்லா- ஸத்தை (ஸ்வரூபத்தை, அதாவது மோக்ஷானந்தத்தை)*
பஶ்யாமி	*பார்க்கிறேன்.*

அம்பிகையின் அனுக்ரஹத்தால் சிவஞானம் ஏற்படுவதாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்திலும் 'சிவஞான ப்ரதாயிநீ' என்று சொல்லப்படுகிறது.

विद्ये विधातृविषये कात्यायनि कालि कामकोटि कले।
भारति भैरवि भद्रे शाकिनि शांभवि शिवे स्तुवे भवतीम्।।७८।।

வித்யே விதாத்ரு விஷயே காத்யாயநி காலி காமகோடி கலே।
பாரதி பைரவி பத்ரே ஶாகிநி ஶாம்பவி ஶிவே ஸ்துவே பவதீம்।।78।।

வித்யே	(வித்யா ரூபிணியான) ஸரஸ்வதி ரூபத்தையுடையவளே
விதாத்ரு விஷயே	(அந்த ஸரஸ்வதீ ரூபத்தில்) ப்ரம்ஹாவின் காந்தையாயி-ருப்பவளே
காத்யாயநி காலி காம கோடி கலே பாரதி பைரவி பத்ரே ஶாகினி ஶாம்பவி ஶிவே	காத்யாயனீ, காளீ, காமகோடி, கலா, பாரதீ, பைரவி, பத்ரா, சாகினீ, சாம்பவீ, சிவே என்ற பெயர்களையுடையவளே
பவதீம்	உன்னை
ஸ்துவே	ஸ்துதி செய்கிறேன்.

அம்பிகையானவள் தேவர்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டி காத்யாயன மஹரிஷியுடைய ஆச்ரமத்தில் ஆவிர்பவித்து அவரால் தன் பெண்ணாக ஸ்வீகரிக்கப் பட்டதினால் காத்யாயனீ என்று பெயர் ஏற்பட்டது. காளீ என்ற நாமம் அம்பாளுக்கு ஏற்பட்டதற்கு அனேகம் காரணங்களுண்டு. கருப்பு வர்ணமாய் இருப்பதையும், காலத்திற்கு அதீதமாயிருப்பதையும் இந்தப்பெயருக்கு இரண்டு காரணங்களாகச் சொல்லலாம். 'காலாத்மிகா' 'கலாநாதா' 'கலாமாலா' 'கலாவதீ' என்ற ஸ்ரீ லலிதா

ஸஹஸ்ர நாமத்திய நாமங்களின் பாஷ்யத்தில் கலா என்ற பதத்திற்கு அனேக அர்த்தங்கள் சொல்லப்பட்டிருக் கின்றன. அவைகளின் ரூபமாக அம்பிகையிருப்பதால் கலா என்ற பெயர் ஏற்பட்டது. வித்யா, விதாத்ருவிஷயா, பாரதீ என்றவை ஸரஸ்வதியின் பெயர்கள் பைரவராகிய சிவனுடைய பத்னியாக இருப்பதாலும் பீருக்கள் (ஸ்த்ரீகள்) ஸமூஹரூபமாயிருப்பதாலும் அம்பிகைக்கு பைரவீ என்ற பெயர் ஏற்பட்டது. மங்களரூபிணியாயும் மங்கள ப்ரதையாயுமிருப்பதால் பத்ரா என்று பெயர். சாகினீ என்பது மூலாதார பத்மத்திலிருக்கும் (அம்பிகையின் ரூபிணியான) யோகினிக்குப் பெயர். தவிரவும் தேவீ மாஹாத்ம்யம், தேவீபாகவதம் இவற்றில் சொல்லப்பட்ட (அம்பிகா ரூபிணியான) சாகம்பரீ தேவியைக் குறித்ததாகவும் சொல்லலாம். சாம்பவீ, சிவா என்பவை சம்பு, சிவன் என்ற சிவனுடைய பெயர்களிலிருந்து ஏற்பட்டவை.

'विद्ये विधातृ विषये- 'வித்யே விதாத்ரு அவிஷயே' என்ற பாடத்தில் சதுர்முக ப்ரம்ஹாவிம் ஸிருஷ்டிக்கு அதீதமான வித்யா ஸ்வரூபிணியே - என்பது பொருள்.

मालिनि महेशचारिणि काञ्चीखेलिनि विपक्षकालिनि ते।
शूलिनि विद्रुमशालिनि सुरजनपालिनि कपालिनि नमोऽस्तु।।७९।।

மாலிநி மஹேமு சாரிணி காஞ்சீ கேலிநி விபக்ஷகாலிநி தே।
சூலிநி வித்ருமமுாலிநி ஸுரஜந பாலிநி கபாலிநி நமோSஸ்து।।79।।

மாலிநி	மாலினியாயும்
மஹேமஶாரிணி	பரமசிவனுடைய பத்னியாயும்
காஞ்சீ கேலிநி	காஞ்சீபுரியில் விளையாடிக்-கொண்டிருப்பவளாயும்
விபக்ஷகாலிநி	சத்ருக்களை ஸம்ஹாரம் செய்பவளாயும்
சூலிநி	சூலத்தைத் தரித்தவளாயும்
வித்ருமஶாலிநி	பவழம் போன்ற நிறத்துடன் விளங்குகிறவளாயும்
ஸுரஜனபாலிநி	தேவர்களைக் காப்பாற்றுகிற-வளாயும்
கபாலிநி	கபாலத்தைக் கையில் வைத்திருப்பவளாயுமிருக்கும்
தே	உனக்கு
நம: அஸ்து	நமஸ்காரம் இருக்கட்டும்.

மாலையைத் தரித்திருப்பதாலும், பஞ்சாசத் வர்ணங்களாலான (அக்ஷரங்களாலான) மாலையை (வர்ணமாலையை) தரித்திருப்பதாலும் (அதாவது அக்ஷர ஸ்வரூபிணியாக) இருப்பதாலும் அம்பிகைக்கு மாலினீ என்று பெயர். அம்பிகை தனது ரூபவிசேஷங்களில் சூலம், கபாலம், இவற்றைக் கைகளில் தரித்திருப்பதால் சூலினீ என்றும், கபாலினீ என்றும் பெயர்கள் ஏற்பட்டன. பரமசிவனும் கையில் கபாலத்தைத் தரித்திருப்பதால் அவருக்குக் கபாலியென்றும் அவருடைய பத்னியாகிய அம்பிகைக்கும் கபாலினி யென்றும் பெயர் ஏற்பட்ட தாகவும் சொல்லலாம்.

'महेश चालिनि' (மஹேசசாலிநி) என்ற பாடத்தில், பரமேசுவரனையும் சலிக்கச் செய்பவளாயிருப்பவளே - என்பது பொருள்.

देशिक इति किं शङ्के तत्तादृक्तव तरुणिमोन्मेषः।
कामाक्षि शूलपाणेः कामागमतन्त्रयज्ञदीक्षायाम्॥८०॥

தேஶிக இதி கிம் ஶங்கே தத் தாத்ருக் தவ
தருணிமோன்மேஷ:।
காமாக்ஷி ஶூலபாணே: காமாகம தந்த்ரயஜ்ஞ
தீக்ஷாயாம்॥80॥

காமாக்ஷி	*ஹே காமாக்ஷியே!*
ஶூலபாணே:	*பரமசிவனுடைய*
காமாகம தந்த்ர யக்ஞ தீக்ஷாயாம்	*காம சாஸ்த்திரத்தை அப்யஸிப்பதாகிய யாகத்திற்கு தீக்ஷையடைவதில்*
தவ	*உன்னுடைய*
தாத்ருக்	*அப்பேர்ப்பட்ட (விசேஷமான)*
தத்	*அந்த*
தருணிமோந்மேஷ:	*யௌவனத்தின் விகாஸமானது*
தேஶிக: கிம் இதி	*குருவா என்ன என்று*
ஶங்கே	*ஸந்தேஹப்படுகிறேன்.*

காமாகம ஸமயயஜ்ஞ - என்றும் பாடம். 'தேசிசதி கிமேஷ சிவே' என்ற பாடாந்தரத்தில், ஏ சிவே! - மங்களரூபிணியான காமாக்ஷியே! ஏஷ: - இந்த, தருணிமோந்மேஷ: - யௌவனத்தின் விகாஸமானது, தேசிகேதி - ஆசாரியனாக இருக்கிறது என்று நினைக்கிறேன் என்பது பொருள்.

वेतण्डकुम्भडम्बरवैतण्डिककुचभरार्तमध्याय।
कुङ्कुमरुचे नमस्यां शङ्करनयनामृताय रचयामः।।८१।।

வேதண்டகும்படம்பர-வைதண்டிககுசபரார்தமத்யாய।
குங்குமருசே நமஸ்யாம் சங்கரநயனாம்ருதாய
ரசயாம:।।81।।

வேதண்ட	*யானையின்*
கும்ப	*கும்பங்களின்*
டம்பர	*ஆடம்பரத்தோடு*
வைதண்டிக	*விதண்டாவாதம் போல் போர் செய்யும் (அதாவது - யானையின் மஸ்தகத்தைத் தோற்கச்செய்யும்படியான)*
குச பரார்த்த	*ஸ்தனங்களின் பாரத்தினால் கஷ்டப்படும்*
மத்யாய	*இடுப்பை உடையவளும்*
குங்கும ருசே	*குங்குமம் (குங்குமப்பூ) போன்ற காந்தியுடையவளும்*
சங்கரநயநாம்ருதாய	*பரமசிவனுடைய நேத்ரங்களுக்கு அம்ருதம் போன்றவளுமான ஸ்ரீ காமாக்ஷிக்கு*
நமஸ்யாம் ரசயாம:	*நமஸ்காரத்தைச் செய்கிறோம்.*

अधिकाञ्चितमणिकाञ्चनकाञ्चीम् अधिकाञ्चि काञ्चिदद्राक्षम्।
अवनतजनानुकम्पाम् अनुकम्पाकूलमस्मदनुकूलाम्।।८२।।

அதிகாஞ்சித மணிகாஞ்சந காஞ்சீம் அதிகாஞ்சி காஞ்சித்
அத்ராக்ஷம்।
அவநத ஜநாநுகம்பாம் அநுகம்பாகூலம் அஸ்மத்
அநுகூலாம்॥82॥

அதி காஞ்சிதமணி	அதிகமாக இழைக்கப்பட்ட மணிரத்னங்களோடு கூடிய
காஞ்சந காஞ்சீம்	தங்க ஒட்யாணத்தை-யுடையவளும்
அவநத ஜநாநுகம்பாம்	வணங்கிய ஜனங்களிடத்தில் தயையுடையவளும்
அஸ்மத் அநுகூலாம்	நம்மிடத்தில் அனுகூலமா-யிருப்பவளுமான
காஞ்சித்	ஒரு ஸ்த்ரீயை
அதிகாஞ்சி	காஞ்சீபுரியில்
அநுகம்பாகூலம்	கம்பாநதிக்கரையில்
அத்ராக்ஷம்	பார்த்தேன்.

परिचितकम्पातीरं पर्वतराजन्यसुकृतसन्नाहम्।
परगुरुकृपया वीक्षे परमशिवोत्सङ्गमङ्गलाभरणम्।।८३।।

பரிசித கம்பாதீரம் பர்வதராஜந்ய ஸுக்ருத ஸந்நாஹம்।
பரகுரு க்ருபயா வீக்ஷே பரமஶிவோத்
ஸங்கமங்கலாபரணம்॥83॥

பரிசித கம்பாதீரம்	கம்பா நதிக்கரையில் இருந்து பழக்கப்பட்டதும்

பர்வத ராஜந்ய	பர்வதங்களின் அரசனான ஹிமவானுடைய
ஸுக்ருத ஸந்நாஹம்	புண்யத்தின் ஆவிர்பாவமா-யிருப்பதும்
பரமஶிவ உத்ஸங்க	பரமசிவனுடைய மடிக்கு
மங்கல ஆபரணம்	மங்களமான ஆபரணமாயிருப்பதுமான ஒரு மூர்த்தியை
பரகுருக்ருபயா	என் குருநாதருடைய க்ருபையால்
வீக்ஷே	பார்க்கிறேன்.

दग्धमदनस्य शम्भोः प्रथीयसीं ब्रह्मचर्यवैदग्धीम्।
तव देवि तरुणिमश्रीचतुरिमपाको न चक्षमे मातः॥८४॥

தக்த மதநஸ்ய ஶம்போ: ப்ரதீயஸீம் ப்ரம்ஹசர்ய
வைதக்தீம்।
தவ தேவி தருணிமஶ்ரீ-சதுரிமபாகோ ந சக்ஷமே
மாத:॥84॥

தேவி	தேவியே!
மாத:	ஜனனீ!
தக்த மதநஸ்ய	மன்மதனை எரித்தவரான
ஶம்போ:	பரமசிவனுடைய
ப்ரதீயஸீம்	பெரிதாகச்சொல்லப்பட்ட
ப்ரம்ஹசர்ய வைதக்தீம்	ப்ரம்ஹசர்ய நிலைமையின் ப்ரபாவத்தை
தவ	உன்னுடைய
தருணிம ஶ்ரீ:	யௌவனத்திய அழகின்

சதுரிம பாக:	*ஸாமர்த்தியத்தின் வைபவமானது*
ந சக்ஷுமே	*பொறுக்கிறதில்லை*

காமத்திற்கு அரசனான மன்மதனைக்கூட பரமசிவன் (அவன் வசப்படாமல்) எரித்துவிட்டதால், அவருடைய ப்ரம்ஹசர்ய நியமத்தின் புகழானது எங்கும் பரவத் தலைப்பட்டது. ஆயினும் அம்பிகையின் யௌவனத்தின் ஸௌந்தர்யமானது அதைப் பொறுக்காமல் பங்கப்படுத்தி விட்டதில் பரமசிவனுடைய புகழானது இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிட்டது. இவ்விதமாக அம்பிகையின் ஸௌந்தர்யத்தையும், பரமசிவன் அம்பிகையிடத்தில் கொண்டிருக்கும் மோஹத்தையும் இந்த ஸ்தோத்ரம் முழுவதிலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

இதற்குமேல் அம்பிகையின் ரூபவிசேஷங்கள் தனித்தனியாக வர்ணிக்கப்படுகின்றன.

मदजलतमालपत्रा वसनितपत्रा करादृतखनित्रा।
विहरति पुलिन्दयोषा गुञ्जाभूषा फणीन्द्रकृतवेषा।।८५।।

மதஜல தமால பத்ரா வஸநிதபத்ரா கராத்ருத கநித்ரா।
விஹரதி புலிந்தயோஷா குஞ்ஜாபூஷா பணீந்த்ர க்ருதவேஷா।।85।।

மத ஜலதமால பத்ரா	*மதஜலத்தால் இடப்பட்ட திலகம் முதலிய அலங்காரத்தையுடையவளும்*
வஸநித பத்ரா	*இலைகளை வஸனமாக (ஆடையாக) தரித்தவளும்*

கர ஆத்ருத கநித்ரா	மண்வெட்டியைக் கையில் கொண்டவளும்
குஞ்ஜாபூஷா	குந்து மணிகளாலான அலங்காரங்களை உடையவளும்
பணீந்த்ர க்ருதவேஷா	ஸர்ப்பராஜங்களை அணிந்து கொண்டவளுமான
புலிந்தயோஷா	வேட ஸ்த்ரீயானவள்
விஹரதி	விளையாடிக்கொண்டிருக்கிறாள்

1. இதில் அம்பாளுடைய சபரீ ரூபமானது வர்ணிக்கப் பட்டிருக்கிறது. அர்ஜுனன் பாசுபதாஸ்த்ரத்தையுத்-தேசித்து தபஸ் செய்யும் போது பரமசிவனானவர் அவனுடைய பக்தியின் அதிசயத்தை அறியவேண்டித் தான் கிராத (வேட) வேஷத்தை தரித்தும், வேடஸ்த்ரீ வேஷம்பூண்ட அம்பிகையுடனும் நாய்கள் வேஷ முடைய நான்கு வேதங்களோடும் மற்றும் கிராதர்களுக் குரிய சின்னங்களோடும் அவ்விடம் ஆவிர்பவித்ததும், அப்போது அவருக்கும் அர்ஜுனனுக்கும் யுத்தம் நடந்ததும், பிறகு அவர் அவனுக்கு பாசுபதாஸ்த்ரத்தை அளித்ததும், மஹாபாரதத்திலும் கிராதார்ஜுனீயத்திலும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஸமயம் அம்பிகை கொண்ட வேடஸ்த்ரீ வேஷம் இதில் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. இங்குச் சொல்லப்பட்ட ஆடையா பரணங்களெல்லாம் வேடஸ்த்ரீகள் வழக்கமாக அணிந்து கொள்வதே.

2. அம்பிகையின் சபரீ ரூபம் பின்வருமாறும் வர்ணிக்கப் பட்டிருக்கிறது-

'பர்ஹாவதம்ஸயுத பர்பர கேசபாசாம்
குஞ்ஜாவளீக்ருத கநஸ்தந ஹாரசோபாம்।
ச்யாமாம் ப்ரவாளவதநாம் ஸுகுமாரஹஸ்தாம்
த்வாமேவ நௌமி சபரீம் சபரஸ்ய ஜாயாம்॥'

(அம்பாஸ்தவம்)

'லுடத் குஞ்ஜாஹார ஸ்தநபரநமந் மத்யலதிகாம்
உதஞ்சத் கர்மாம்ப: கண குணித வக்த்ராம்புஜருசம்।
சிவம் பார்த்தத்ராண ப்ரவண ம்ருகயாகாரகுணிதம்
சிவாம் அந்வக் யாந்தீம் சபரமஹம் அந்வேமி சபரீம்॥'

(ஸகல ஜனனீ ஸ்தவம்)

'மாகந்த த்ரும பல்லவாருணபடீம் பூர்ணேந்து
பிம்பாநநாம்
தேவீம் திவ்யமயீம் ப்ரஸந்ந ஹ்ருதயாம் த்யாயேத்
கிராதாவ்ருதாம்'
பர்ஹாபீத கசாபிராமசிகுராம் பிம்போஜ்வலச் சந்த்ரிகாம்
குஞ்ஜாஹார லதாம்சுஜால விலஸத் க்ரீவாம்
மதீரேக்ஷணாம்॥

(ஆகாச பைரவ கல்பம்)

'ச்யாமாம் வன்ஹிகலாப சேகரயுதாம் ஆபத்த
பர்ணாம்சுகாம்
குஞ்ஜாஹாரலஸத் பயோதரநதாம் அஷ்டாஹிபாந்
பிப்ரதீம்।
தாடங்காங்கத மேகலா குணரணந் மஞ்ஜீரதாம்
ப்ராபிதாந்
கைராதீம் வரதாபயோத்யதகராம் தேவீம்
த்ரிநேத்ராம்பஜே॥'

3. அம்பிகைக்கு இங்கு ரூபத்தில் புளிந்திநீ என்ற பெயர். இந்த ரூபத்திய உபாஸனையானது மிகவும் விசேஷமாகச் சொல்லியிருக்கிறது.

4. தமாலமென்றால் நெற்றியிலணியப்படும் (சந்தனம் முதலிய) ஜாதிக்குறி, பத்ரமென்பது ஸ்த்ரீகள் முகம், ஸ்தனம் முதலிய இடங்களில் செய்துகொள்ளும் அலங்கார விசேஷம்.

अङ्के शुकिनी गीते कौतुकिनी परिसरे च गायकिनी।
जयसि सविधेऽम्ब भैरवमण्डलिनी श्रवसि शङ्खकुण्टलिनी॥८६॥

அங்கே ஶுகிநீ கீதே கௌதுகிநீ பரிஸரே ச காயகிநீ।
ஜயஸி ஸவிதேऽம்ப பைரவ மண்டலிநீ ஶ்ரவஸி ஶங்க
குண்டலிநீ॥86॥

அங்கே ஶுகிநீ	முன்கையில் கிளியையுடையவளும்
கீதேகௌதுகிநீ	ஸங்கீதத்தில் உத்ஸாஹமுடையவளும்
பரிஸரே ச	ஸமீபத்திலும் (தன்னைச் சுற்றியும்)
காயகிநீ	காயகர்களையுடையவளும் (அதாவது, பாடிக்கொண்டி ருக்கும் சக்திகளால் சூழப்பட்டவளும்)
ஸவிதே	பக்கத்தில்
பைரவ மண்டலிநீ	பைரவர்களுடைய மண்டலங்களையுடையவளும்
ஶ்ரவஸி	காதில்

ஶங்க குண்டலிநீ	சங்கினாலான குண்டலங்களையுடையவளுமான
அம்ப! ஹே ஜனனி! ஜயஸி	அம்மா! தாயே! (காமாக்ஷி) நீ ஸர்வோத்கர்ஷத்துடன் விளங்குகிறாய்

1. இதில் மந்த்ரிணீ ரூபமாக அம்பாள் வர்ணிக்கப்பட்டு இருக்கிறாள். மந்த்ரிணியானவள் லலிதாம்பிகைக்கு ப்ரதான மந்த்ரீ. அம்பிகையானவள் தனது ஸமஸ்த ராஜ்யபாரத்தையும் அவளிடம் ஒப்புவித்திருப்பதாகச் சொல்லப்படும். ஸங்கீதத்திற்கு அதிஷ்டான தேவதை. கையில் கிளியைத் தரித்திருப்பவளாகவும், ஸங்கீதத்தோடு கூடிய சக்தி ஸமூஹங்களால் சூழப்பட்டவளாகவும் த்யானிப்பது வழக்கம். மந்த்ரிணிக்கு சுகச்யாமளை என்றும், ராஜ ச்யாமளை என்றும், ஸங்கீத ச்யாமளை என்றும் இன்னும் அனேகம் பெயர்களுண்டு.

'ஸங்கீதயோகிநீ ச்யாமா ச்யாமளா மந்த்ரிநாயிகா।
மந்த்ரிணீ ஸசிவேசாநீ ப்ரதாநேசீ சுகப்ரியா॥
வீணாவதீ வைணிகீ ச முத்ரிணீ ப்ரியகப்ரியா।
நீபப்ரியா கதம்பேசீ கதம்பவநவாஸிநீ।
ஸதாமதா ச நாமாநி ஷோடசைதாநி கும்பஜ॥ '
(லலிதோபாக்யானம்)

2. ச்யாமளையின் ஆவரண தேவதைகளில்,

'அஸிதாங்கோ ருரு: சண்ட க்ரோதநோந் மத்தோ பயங்கர:।
கபாலீ பீஷணச்சைவ ஸம்ஹாரீத்யஷ்ட பைரவா:॥'

என்ற பைரவாஷ்டகமடங்கிய பைரவமண்டலமானது ஐந்தாவது ஆவரணத்திலிருப்பதாகச் சொல்லப்படும்.

3. ச்யாமளையின் காதில் சங்ககுண்டலம் தவிர தாளீ பலாஸ தாடங்கம் (பனையோலைச்சுருள்) இருப்ப தாகவும் வர்ணிக்கப்படும்.

प्रणतजनतापवर्गा कृतरणसर्गा ससिंहसंसर्गा।
कामाक्षि मुदितभर्गा हतरिपुवर्गा त्वमेव सा दुर्गा।।८७।।

ப்ரணத ஜநதாபவர்கா க்ருதரணஸர்கா ஸஸிம்ஹ ஸம்ஸர்கா।
காமாக்ஷி முதிதபர்கா ஹதரிபுவர்கா த்வமேவ ஸா துர்கா।।87।।

ப்ரணத ஜநதாSபவர்கா	நமஸ்கரிக்கும் ஜனக்கூட்டங்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பவளும்
க்ருதரணஸர்கா	யுத்தத்துக்குப் போகிறவளும்
ஸஸிம்ஹ ஸம்ஸர்கா	ஸிம்ஹத்தோடிருப்பவளும்
முதித பர்கா	பரமசிவனை ஸந்தோஷிக்கச் செய்தவளும்
ஹதரிபுவர்கா	சத்ருக்கூட்டங்களை நாசம் செய்தவளுமான
ஸா துர்கா	அந்த துர்க்கையானவள்
காமாக்ஷி	ஹே காமாக்ஷி
த்வமேவ	நீ தான்.

இதில் அம்பிகை துர்கா ரூபிணியாக வர்ணிக்கப் பட்டிருக்கிறாள். துர்கா தேவியின் ஆவிர்பாவம், பராக்ரமம்,

அனுக்ரஹம் முதலியவற்றைப் (தேவீ மாஹாத்ம்யம், தேவீ பாகவதம் முதலியவற்றில் பார்க்கவும்.

'कृतबहुसर्गा' 'க்ருதபஹுஸர்க்கா' என்ற பாடத்தில் நாநாவிதமான ஸிருஷ்டியைச் செய்பவளும் என்பது பொருள்.

श्रवणचलद्वेतण्डा समरोद्दण्डा धुतासुरशिखण्डा ।
देवि कलितान्त्रषण्डा धृतनरमुण्डा त्वमेव चामुण्डा ।।८८।।

ச்ரவண சலத் வேதண்டா ஸமரோத்தண்டா
துதாஸுரசிகண்டா।
தேவி கலிதாந்த்ரஷண்டா த்ருத நரமுண்டா த்வமேவ
சாமுண்டா।।88।।

தேவி	ஹே காமாக்ஷி!
ச்ரவணசலத் வேதண்டா	யானைகள் ஆடிடும் காதுகளையுடையவளும்
ஸமரோத்தண்டா	யுத்தத்தில் பயங்கரமாயிருப்பவளும்
த்ருத அஸுர சிகண்டா	அஸுர ச்ரேஷ்டர்களை ஸம்ஹாரம் செய்தவளும்
கலிதாந்த்ர ஷண்டா	குடல்களின் கொத்துக்களை (வாயில்) உடையவளும்
த்ருத நர முண்டா	நரர்களின் முண்டங்களை (மாலையாக) அணிந்த வளுமான
சாமுண்டா	சாமுண்டா தேவியும்
த்வமேவ	நீயே.

இதில் அம்பிகை 'சாமுண்டா' ரூபிணியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறாள். சண்டன், முண்டன் என்ற

இரண்டு அஸுரர்களை ஸம்ஹாரம் செய்ததால் காளிகாதேவிக்குச் சாமுண்டா என்று பெயர் ஏற்பட்டது. காளிகாதேவியைப்பற்றி தேவீமாஹாத்ம்யம் காளிகா புராணம் முதலிய க்ரந்தங்களில் பார்க்கவும்.

'ச்ரவணசலத் வேதண்டா' என்பதற்கு காதில் அசைந்தாடும் தங்க நகைகளுள்ளவளாயும் என்றும் 'கலிதா ந்த்ரஷண்டா' என்பதற்கு நரம்பு மாலையணிந்தவளாயும் என்றும் பொருள் சொல்லலாம்.

उर्वीधरीन्द्रकन्ये दर्वीभरितेन भक्तपूरेण।
गुर्वीमकिञ्चनार्तिम् खर्वीकुरुषे त्वमेव कामाक्षि।।८९।।

உர்வீதரேந்த்ர கந்யே தர்வீபரிதேந பக்த பூரேண।
குர்வீம் அகிஞ்சநார்த்திம் கர்வீகுருஷே த்வமேவ
காமாக்ஷி।।89।।

உர்வீதரேந்த்ர	பர்வதராஜனான ஹிமாவானுடைய
கந்யே	பெண்ணே!
காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
தர்வீபரிதேந	(உன் கையிலுள்ள) கரண்டி நிறைந்ததான
பக்தபூரேண	அன்ன ப்ரவாஹத்தால்
குர்வீம் அகிஞ்சந ஆர்த்திம்	அகிஞ்சனனுடைய (ஒன்றுமே-யில்லாதவனுடைய, பரம ஏழையினுடைய) மிகக் கொடியதான (தாரித்ரியத்தின்) கஷ்டத்தை
த்வமேவ	நீயே
கர்வீகுருஷே	குறைத்து விடுகிறாய் (போக்கடித்து விடுகிறாய்)

இதில் அம்பிகை அன்னபூர்ணா ரூபிணியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறாள். அன்னபூர்ணா தேவியானவள் இடது கையில் அன்னம் நிறைந்த பாத்திரத்தையும், வலது கையில் கரண்டியையும் வைத்துக்கொண்டு பக்தர்களுடைய பசியை (தாரித்ரியத்தை) போக்குவதாகச் சொல்லப் படுவாள்.

'ஆதாய தக்ஷிணகரேண ஸுவர்ண தர்வீம்
துக்தாந்ந பூர்ணமிதரேண ச ரத்நபாத்ரம்।
அந்நப்ரதாந நிரதாம் நவஹேமவர்ணாம்
அம்பாம் பஜே கநகபூஷண மால்யசோபாம்॥'

அன்னபூர்ணா தேவியைப்பற்றி 'நித்யாநந்தகரீ வராபயகரீ' என்று ஆரம்பிக்கும் அழகிய ஸ்தோத்ரமொன்று ஸ்ரீ மதாசார்யாளால் செய்யப்பட்டிருக்கிறது.

ताडितरिपुपरिपीडनभयहरणनिपुणहलमुसला।
क्रोडपति भीषणमुखी क्रीडसि जगति त्वमेव कामाक्षि॥९०॥

தாடிதரிபுபரிபீடநபயஹரண நிபுண ஹலமுஸலா।
க்ரோடபதி பீஷணமுகீ க்ரீடஸி ஜகதி த்வமேவ
காமாக்ஷி॥90॥

தாடித	*அவமானப்படுத்த (தோற்கடிக்கப்பட்ட)*
ரிபு	*சத்ருக்களுடைய*
பரிபீடந பய	*உபத்ரவத்தின் பயத்தை*
ஹரண	*போக்குவதில்*
நிபுண	*ஸாமர்த்யமுள்ள*

ஹல முஸலா	கலப்பையையும், உலக்கை-யையும் கைகளில் வைத்துக் கொண்டிருப்பவளும்
க்ரோடபதி	மஹத்தான வராஹத்தின்
பீஷணமுகீ	பயங்கரமான முகத்தை-யுடையவளுமான வாராஹி ரூபத்துடன்
த்வமேவ	நீயே
ஜகதி க்ரீடஸி காமாக்ஷி	உலகத்தில் விளங்குகிறாய். ஹே காமாக்ஷி

1. இதில் அம்பிகை வாராஹீ ரூபிணியாக வர்ணிக்கப் பட்டிருக்கிறாள். வாராஹியானவள் லலிதாம்பிகையின் சதுரங்க ஸைன்யங்களுக்கு யஜமானி. துஷ்ட நிக்ரஹத்திற்கும் சிஷ்டானுக்ரஹத்திற்கும் பூர்ணமான அதிகாரம் கொடுக்கப்பட்டவள். வாராஹியின் பெயர்கள் பின்வருமாறு -

'பஞ்சமீ தண்டநாதா ச ஸங்கேதா ஸமயேச்வரீ।
ததா ஸமயஸங்கேதா வாராஹீ போத்ரிணீ சிவா॥
வார்த்தாளீ ச மஹாஸேநாப்யாக்ஞாசக்ரேச்வரீ ததா।
அரிக்நீ சேதி ஸம்ப்ரோக்தம் நாமத்வாதசகம் முநே॥'

(லலிதோபாக்யானம்)

1. வாராஹீதேவியின் அனுக்ரஹ சக்தியைப்பற்றியும் நிக்ரஹ சக்தியைப்பற்றியும் இரண்டு அஷ்டகங்கள் இருக்கின்றன.

''करधृतरिपुपरिपीडनभयहरणहलमुसला'' – 'கரத்ருதரிபுபரிபீடந பயஹரண நிபுண ஹலமுஸலா' என்று ஒரு பாடம். கரத்ருத

- கைகளில் தரிக்கப்பட்டதும், ரிபுபரிபீ ந - சத்ருக்களின் பீடையையும், பய - பயத்தையும், ஹரண - போக்குவதில், நிபுண ஸாமார்த்தியமுள்ளதுமான, ஹலமுஸலா - கலப்பை, உலக்கை இவைகளையுடையவள் - என்பது பொருள். **"ताडितरिपुपरिवारा पीडनभयहरणनिपुणहलमुसला"** - 'தாடிதரிபுபரிவாரர் பீடநபயஹரண நிபுணஹலமுஸலா - என்று ஒரு பாடம். தாடிதரிபுபரிவாரா-அடிக்கப்பட்ட சத்ருக்களின் பரிவாரங்களையுடையவளும், பீடந பயஹரண நிபுணஹலமுஸலா - சத்ருக்களின் பீடாபயத்தைப் போக்குவதில் ஸமர்த்தமான கலப்பை, உலக்கை இவைகளையுடையவள்' - என்பது பொருள்.

स्मरमथनवरणलोला मन्मथहेलाविलासमणिशाला।
कनकरुचिचौर्यशीला त्वमम्ब बाला कराब्जधृतमाला।।९१।।

ஸ்மர-மதந-வரண-லோலா மந்மதஹேலாவிலாஸ மணிமாலா।
கநகருசி சௌர்யமீலா த்வமம்ப பாலா கராப்ஜ த்ருதமாலா।।91।।

அம்ப	*தாயே!*
ஸ்மரமதந	*பரமசிவனை*
வரணலோலா	*பாணிக்ரஹணம் செய்து கொள்வதில் பரபரப்புள்ளவளும்*
மன்மத	*மன்மதனுடைய*
ஹேலா விலாஸ	*ச்ருங்கார விலாஸங்களுக்கு (இருப்பிடமான)*
மணிமாலா	*ரத்னக்ருஹமாயிருப்பவளும்*

கநகருசி சௌர்ய ஶீலா	ஸ்வர்ணத்தின் காந்தியை அபஹரிப்பதில் ஸாமார்த்திய-முள்ளவளும்
கராப்ஜ த்ருத மாலா	தாமரை புஷ்பம் போன்ற கையில் மாலையைத் தரித்திருப்பவளுமான
பாலா த்வம்	குமாரீ (பாலாஸ்வரூப- ஸ்வயம்வர கல்யாணியும்) நீ தான்.

இதில் அம்பிகை ஸ்வயம்வரையாக வர்ணிக்கப் பட்டிருக்கிறாள். இந்த ரூபத்திய த்யானம் பின்வருமாறு:

பாலார்க்காயுத ஸூப்ரபாம் கரதலைர்
லோலம்பமாலாகுலாம்
மாலாம் ஸந்ததீம் மநோஹரதநும்
மந்தஸ்மிதோத்யந்முகீம்।
மந்தம் மந்தமுபேயுஷீம் வரயிதும் சம்பும்
ஜகன்மோஹிநீம்
வந்தே தேவமுநீந்த்ர வந்திதபதாம் இஷ்டார்த்ததாம்
பார்வதீம்॥

विमलपटी कमलकुटी पुस्तकरुद्राक्षशस्तहस्तपुटी।
कामाक्षि पक्ष्मलाक्षी कलितविपञ्ची विभासि वैरिञ्ची॥९२॥

விமலபடீ கமலகுடீ புஸ்தக ருத்ராக்ஷ ஶஸ்த ஹஸ்தபுடீ।
காமாக்ஷி பக்ஷ்மலாக்ஷீ கலித விபஞ்சீ விபாஸி
வைரிஞ்சீ॥92॥

காமாக்ஷீ	ஹே காமாக்ஷி!
விமலபடீ	வெண்மையான வஸ்த்ரத்தையுடையவளும்

கமலகுட	தாமரை புஷ்பத்தை வாஸஸ்தானமாக உடையவளும்
புஸ்தக ருத்ராக்ஷ ஶஸ்த ஹஸ்தபுட	புஸ்தகம் ருத்ராக்ஷமாலை இவைகளையுடைய அழகிய கைகளையுடையவளும்
பக்ஷ்மலாக்ஷீ	அழகிய (இமை மயிர்களோடு கூடிய) கண்களையுடையவளும்
கலித விபஞ்சி	வீணையை (கைகளில்) உடையவளுமான
வைரிஞ்சி	(ப்ரம்ஹ பத்னியான) ஸரஸ்வதியாக
விபாஸி	விளங்குகிறாய்.

இதிலும், இதனடுத்துவரும் இரண்டு ச்லோகங்களிலும், முறையே ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள் ப்ரதானமாயிருக்கும் அம்பிகையின் மூன்று ரூப விசேஷங்கள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ச்லோகத்தில் அம்பிகை சாரதா ரூபிணியாக வர்ணிக்கப்பட்டாள்.

कुङ्कमरुचिपिङ्गमसृक्पङ्किलमुण्डालि मण्डितं मातः।
जयति तव रूपधेयं जपपटपुस्तकवराभयाब्जकरम्।।९३।।

குங்குமருசி பிங்கம் அஸ்ருக் பங்கில முண்டாலி
மண்டிதம் மாத:।
ஜயதி தவ ரூபதேயம் ஜபபட புஸ்தக
வராபயாப்ஜகரம்।।93।।

மாத:	தாயே!
குங்குமருசிபிங்கம்	குங்குமம்போல் சிவந்த நிறத்தையுடையதும்
அஸ்ருக் பங்கில	ரத்தம் வழிந்து அழுக்கானது- மான
முண்ட அலி மண்டிதம்	(தலை) முண்டங்களின் வரிசையால் அலங்கரிக்கப்பட்டதும்
ஜபபட புஸ்தக வராபயாப்ஜகரம்	ஜபமாலை, புஸ்தகம், வரதமுத்ரை, அபயமுத்ரை, இவைகளையுடைய கராப்ஜங்களுடையதுமான
தவ ரூபதேயம்	உன்னுடைய ரூபமானது
ஜயதி	ஸர்வோத்கர்ஷமாக விளங்குகிறது.

இதில் அம்பிகையின் த்ரிபுரா என்ற ரூப விசேஷமானது வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இந்த ரூபத்தைப்பற்றி 'ப்ரபஞ்ச ஸாரத்தில்' சொல்லப்பட்டிருப்பது பின் வருமாறு:-

'ஆதாம்ரார்க்காயுதாபாம் கலித சசிகலா ரஞ்சிதப்தாம் த்ரிநேத்ராம்
தேவீம் பூர்ணேந்து வக்த்ராம் வித்ருத ஜபவட புஸ்தகாபீத்ய பீஷ்டாம்।
பீநோத்துங்க ஸ்தநார்த்தாம் வலிலஸித விலக்நாமஸ்ருக் பங்கராஜந்
முண்டஸ்ரங் மண்டிதாங்கீம் அருணதரதுகூலாநுலேபாம் நமாமி॥'

**कनकमणि कलितभूषां कालायस कलहशीलकान्तिकलाम्।
कामाक्षि शीलये त्वां कपालशूलाभिरामकरकमलाम्॥९४॥**

கநக மணி கலித பூஷாம் காலாயஸ கலஹ ஶீல காந்திகலாம்।

காமாக்ஷி ஶ்ரீலயே த்வாம் கபால ஶூலாபிராம
கரகமலாம்॥94॥

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
கநகமணி கலித பூஷாம்	தங்கம் ரத்னங்கள் இவை-யாலான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும்
காலாயஸ கலஹஶீல	எஃகுடன் சண்டை செய்யக் கூடிய (அதாவது, எஃகின் நிறத்தைத் தோற்கடிக்கும்)
காந்திகலாம்	காந்தியை உடையவளும்
கபால ஶூலாபிராம கரகமலாம்	கபாலம், ஶூலம் இவற்று-டனிருக்கும் கரகமலங்க-ளையுடையவளுமாக
த்வாம் ஶீலயே	உன்னை த்யானிக்கிறேன்.

இதில் அம்பிகையின் ப்ரத்யங்கிரா ரூபமானது வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதர்வண வேதத்தில் சொல் லப்பட்டிருக்கும் பத்ரகாளிக்கு ப்ரத்யங்கிரா என்று பெயர்.

लोहितिमपुञ्जमध्ये मोहितभुवने मुदा निरीक्षन्ते।
वदनं तव कुचयुगलं काञ्चीसीमां च केऽपि कामाक्षि॥९५॥

லோஹிதிம புஞ்ஜ மத்யே மோஹித புவனே முதா
நிரீக்ஷந்தே।
வதநம் தவ குசயுகலம் காஞ்சீஸீமாம் ச கே஽பி
காமாக்ஷி॥95॥

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
லோஹித்திம புஞ்ஜ மத்யே	சிகப்பின் ராசி போன்றதான அநாஹத சக்ரத்தில் (அதாவது, மனதில்)
மோஹித புவனே	உலகத்தை மோஹிக்கச் செய்யும்
தவ	உன்னுடைய
வதனம்	முகத்தையும்
குசயுகலம்	இரு ஸ்தனங்களையும்
காஞ்சீ ஸீமாம் ச	காஞ்சீ ப்ரதேசத்தையும்
கே஽பி	சில புண்யவான்கள் மட்டும்
முதா	ஆனந்தத்துடன்
நிரீக்ஷந்தே	பார்க்கிறார்கள்

1. இதில் அம்பிகையின் காமகலாரூபம் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. அது மிகவும் ரஹஸ்யமானதாய் இருந்த போதிலும் சில விபரங்கள் கீழே சொல்லப்படுகின்றன. அதிகமாகத் தெரிந்து கொள்வதானால் ஸேதுபந்தம், காமகலா விலாஸம், ஆர்தர் ஏவலனுடைய கிரந்தங்கள் இவற்றைப் பார்ப்பதோடு குருமுகமாகவும் தெரிந்து கொள்ள வேண்டியது அவச்யம்.

2. இந்த ரூபமானது துரீயஸ்வர ரூபமானது. அதில் முகத்தை ஒரு பிந்துவாகவும், இருஸ்தனங்களை இரண்டு பிந்துக்களாகவும் அவற்றிற்குக் கீழாக குஹ்ய ப்ரதேசத்தையும் த்யானிக்க வேண்டும். அவற்றை இங்கு முறையே வதனம், குசயுகளம், காஞ்சீஸீமா என்று சொல்லியிருக்கிறது.

'பிந்துனா முகம், பிந்துத்வயேன குசெள
ஸபரார்த்தேந யோனிம்
க்ருத்வா காமகலாம் இதி த்யாத்வா।
(பரசுராம கல்பஸூத்ரம்)'

'முகம் பிந்தும் க்ருத்வா குசயுகம் அதஸ்தஸ்ய ததோ
ஹரார்தம் த்யாயேத் யோ ஹரமஹிஷி தே மன்மதகலாம்।'
(ஸௌந்தர்யலஹரி)

3. காஞ்சீஸீமா என்றால் காஞ்சியை (மேகலை, ஒட்டியாணம்) தரிக்குமிடம், அதாவது யோனி ப்ரதேசம் என்று அர்த்தம். இதேமாதிரி யோனியை ரசனாஸ்பதமென்று கீழேகண்ட காம கலாத் தியானத்திலும் சொல்லியிருக்கிறது.

'அக்ரபிந்து பரிகல்பிதாநநாம்
அந்யபிந்து ரசிதஸ்தநத்வயீம்।
நாதபிந்து ரசநாகுணாஸ்பதாம்
நௌமி தே பரசிவே பராம் கலாம்॥'

4. இம்மூன்று பிந்துக்களின் ஸமஷ்டியான காமகலாரூபிணியாக அம்பிகையை த்யானிக்கும் பக்தனே லோகங்களை எல்லாம் மோஹிக்கச் செய்பவனாகச் சொல்லப்பட்டிருக்கிறான்.

'ஸ ஸத்ய: ஸங்க்ஷோபம் நயதி வநிதா இத்யதிலகு
த்ரிலோகீமப்யாசு ப்ரமயதி ரவீந்துஸ்தனயுகாம்॥'
(ஸௌந்தர்யலஹரி)

ஆகவே அம்பிகையின் காமகலா ரூபத்தை 'மோஹித புவனம்' என்று இங்கு சொல்லப்பட்டதின் காரணம் சொல்லத் தேவையில்லை.

जलधिद्विगुणितहुतवहदिशादिनेश्वरकलाश्विनेयदलैः।
नलिनैर्महेशि गच्छसि सर्वोत्तरकरकमलदलममलम्।।९६।।

ஜலதி த்விகுணித ஹுதவஹ திஶா திநேஶ்வர
கலாஶ்விநேயதலை:।
நலிநைர் மஹேஶி கச்சஸி ஸர்வோத்தர
கர கமலதலம் அமலம்।।96।।

மஹேஶி	*மஹேச்வரியாகிய ஹே காமாக்ஷி!*
ஜலதி த்விகுணித ஹுத- வஹ திஶா-திநேஶ்வர, கலா(ஆ)ச்விநேயதலை:	*முறையே 4, 6, 10,12, 16, 2 தளங்களுடைய*
நளினை:	*கமலங்கள் (சக்ரங்கள்) மூலமாக*
அமலம்	*பரிசுத்தமானதும்*
ஸர்வோத்தர	*எல்லாவற்றிற்கும் மேல்பட்டதுமான*
கரகமலதலம்	*ஸஹஸ்ர தள கமலத்தை*
கச்சஸி	*அடைகிறாய்.*

1. இங்கு குண்டலினீ ரூபிணியான அம்பிகையானவள் ஷட்சக்ர பேதநம் செய்து ஸஹஸ்ரார கமலத்திற்குப் போவது சொல்லப்பட்டது. இதைப்பற்றி ஸ்ரீ மதாசார்யாள் 'ஸௌந்தர்யலஹரி'யில்-

'மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டாநே ஹ்ருதி மருதமாகாசமுபரி।

மநோऽபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே॥'

என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வரிசையை அனுஸரித்து ஷட் சக்ரங்கள் (அவற்றின் தளங்களுடைய கணக்கைச் சொல்லி இங்கு சொல்லப்பட்டிருக்கின்றன.

2. இந்த (ஷட்) சக்ரங்களை கமலங்களென்றும் சொல்லுவது வழக்கம். அப்படிச் சொல்லுகையில் மூலாதாராத்திற்கு நான்கும், மணிபூரகத்திற்கு ஆறும், ஸ்வாதிஷ்டானத்திற்குப்பத்தும், அனாஹதத்திற்கு பனிரெண்டும், விசுத்திக்கு பதினாறும் ஆக்ஞாவுக்கு இரண்டும், தளங்களிருப்பதாகச் சொல்லப்படும்.

3. ஜலதியென்றால் ஸமுத்ரம் என்று அர்த்தம். ஸமுத்ரங்களை ஸாதாரணமாக (சதுஸ்ஸாகர, சதுஸ் ஸமுத்ர என்று நான்கு என்று சொல்லப்படுவதால்) ஜலதி என்பது நான்கைக்குறிக்கும். ஹுதவஹ - அக்னி, அக்னியானது கார்ஹபத்யம், ஆஹவநீயம் தக்ஷிணாக்னி என்று மூன்றாகையால், ஹுதவஹம் என்பது மூன்றைக் குறிக்கும். அதை த்விகுணிதமாகச் செய்தால் (இரண்டால் பெருக்கினால்) ஆறு. திக்குகள் பத்து என்று சொல்லப் படுவதால் திசா என்ற பதமானது பத்தைக் குறிக்கும். தினேசர்கள் (ஸூர்யர்கள், ஆதித்யர்கள்) பன்னிரெண்டு பெயர்களென்று சொல்லப்படுவதால் தினேச என்ற பதமானது பன்னிரெண்டைக் குறிக்கும். அச்வினீ தேவர்கள் இருவர்களாகையால் ஆச்விநேய என்ற பதமானது இரண்டைக்குறிக்கும்.

'सर्वोत्तरकुल सहस्रदलकलङ्क' என்றும் பாடம்.

सत्कृतदेशिकचरणाः सबीजनिर्बीजयोगिनिश्रेण्या।
अपवर्गसौधवलभीम् आरोहन्त्यम्ब केऽपि तव कृपया॥९७॥

ஸத்க்ருத தேஶிக சரணா: ஸபீஜ நிர்பீஜ யோக
நிஶ்ரேண்யா।
அபவர்க ஸௌத வலபீம் ஆரோஹந்த்யம்ப கேऽபி
தவக்ருபயா॥97॥

அம்ப	ஜகன் மாதாவே!
ஸத்க்ருத தேஶிக சரணா:	குருநாதருடைய பாதங்களைப் பூஜித்தவர்களான
கேऽபி	சில பாக்கியசாலிகள்
ஸபீஜ நிர்பீஜயோக நிஶ்ரேண்யா	ஸபீஜயோகம் நிர்பீஜயோகம் என்ற மாடிப்படிகள் வழியாக
அபவர்க ஸௌத வலபிம்	மோக்ஷமென்ற மாளிகை யின் உச்சிமாடிக்கு
தவ க்ருபயா	உன்னுடைய அனுக்ரஹத்தினால்
ஆரோஹந்தி	ஏறுகிறார்கள்.

1. இதில் பக்தர்கள் யோகாப்யாஸத்தின் மூலமாக அம்பிகையை உபாஸித்து பரம புருஷார்த்தமான மோக்ஷத்தையடைவதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு முக்யமான ஒத்தாசையானது குருவின் உபதேசமாதலால் அது இங்கு 'ஸத்க்ருத தேசிக சரணா:' என்று சொல்லப்பட்டது.

2. ஸௌதமென்றால் பலமாடிகளையுடைய மாளிகையென்றர்தம். வலபீ என்றால் அப்பேர்ப்பட்ட

மாளிகையின் மாடிகள் எல்லாவற்றிற்கும் மேலான மாடியென்றர்த்தம். மோக்ஷமானது பல மாடிகளுடைய மாளிகையாக 'அபவர்கஸௌத'மென்று இங்கு சொல்லப்பட்டது. மோக்ஷமென்பது ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம், கைவல்யம் என்று மெம்மேலான ஐந்து மாடிகளில் எல்லாவற்றிற்கும் மேலானதான கைவல்ய மோக்ஷம் ''அபவர்க ஸௌதவலபீ'' என்று இங்கு சொல்லப்பட்டது.

3. இப்பேர்ப்பட்ட மாளிகையிலுள்ள மாடிகளை ஏறுவதற்காக ஏற்பட்ட (நிச்ரேணீ) மாடிப்படிகளாக யோகம் சொல்லப்பட்டது. யோகமானது ஸோபானக்ரமமானதாக (படிப்படியானதாக) சொல்லப்படும். அப்படி படிப்படியாக ஏறிவரும்போது முடிவாக ஸபீஜயோக மென்ற ஸம்ப்ரக்ஞாத ஸமாதியானது ஏற்படுகிறது. பீஜமென்பதினால் பூர்வ கர்மாக்களின் ஸம்ஸாரவசத்தால் ஏற்படும் விருத்தியானது குறிப்பிடப்பட்டது. இது ஸம்ப்ரக்ஞாத ஸமாதிகாலத்திலுமிருப்பதால் அதை ஸபீஜயோகமென்று சொல்லப்பட்டது. அதற்கு மேலாக அவ்விதமான வ்ருத்தியும் அற்றுப்போய், கர்ம ஸம்ஸ்காரங்கள் இருந்தும் மனதானது நிராலம்பனமான தாகவும், நிர்விகல்பமாகவும் இருப்பதானது அஸம்ப்ரக்ஞாத ஸமாதியென்றும், நிர்பீஜயோக மென்றும் சொல்லப்படும். இந்த நிலையில் தான் கைவல்ய முக்தியேற்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. (இந்த விஷயங்களை பற்றி அறியவேண்டுமானால் பதஞ்ஜலி மஹர்ஷியின் யோகஸூத்ரங்களையும், ராஜயோகத்தைப் பற்றிய புஸ்தகங்களையும் பார்க்கவும்.)

4. இப்படி யோகாப்யாஸத்தினால் எவ்வளவு முயன் றாலும்

மோக்ஷம் கிடைப்பதானது அம்பிகையின் அனுக்ரஹத்தைப் பொருத்ததாக இருப்பதால் அதையும் இங்கு 'தவக்ருபயா' என்று குறிக்கப்பட்டது.

अन्तरपि बहिरपि त्वं जन्तुततेरन्तकान्तकृदहन्ते।
चिन्तितसन्तानवतां सन्ततमपि तन्तनीषि महिमानम्।।९८।।

அந்தரபி பஹிரபி த்வம் ஜந்துததேரந்தகாந்த
க்ருதஹந்தே।
சிந்தித ஸந்தாநவதாம் ஸந்ததமபி தந்தநீஷி
மஹிமாநம்।।98।।

அந்தகாந்தக்ருத்	அந்தகனுக்கு (யமனுக்கு) அந்தத்தை (மரணத்தை) உண்டு பண்ணின (அதாவது, மார்கண்டேயருக்காகக் காலனை ஸம்ஹாரம் செய்த) பரமசிவனுடைய
அஹந்தே	அஹங்கார ரூபிணியாயிருக்கும்
த்வம்	நீ
ஜந்துததே:	ஸகலபிராணிகளுக்கும்
அந்தரபி	உள்ளிலும்
பஹிரபி	வெளியிலும் இருந்துக் கொண்டு
சிந்தித ஸந்தானவதாம்	இடைவிடாத த்யானத்தை-யுடைய பக்தர்களுக்கு
ஸந்ததமபி	எப்போதும்
மஹிமானம்	மேன்மையை
தந்தநீஷி	அதிகரிக்கச் செய்கிறாய்.

1. *நிருபாதிக ஸம்வித் ரூபமாயிருக்கும் பரப்ரம்ஹத்திற்கு அத்துடன் அபின்னமாயிருக்கும் சக்தியானால் தான் அஹம் என்ற உணர்ச்சியானது ஏற்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரகாச ரூபமானது விமர்ச ரூபமான கண்ணாடியில் தன் ப்ரதிபிம்பத்தைப் பார்த்தவுடன் அது யாரென்ற ஸந்தேஹம் தோன்றி தான் தான் (அஹமஹம்) என்ற உணர்ச்சியானது ஏற்படுகிறது.*

'பரசிவ ரவிகரநிகரே ப்ரதிபலதி விமர்சதர்பணேவிசதே'।
(காமகலாவிலாஸம்)

இதிலிருந்துதான் ஜகத் ஸ்ருஷ்டி ஏற்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம் ப்ரம்ஹ
தத்தைக்ஷத, ஸோயம் தேவதைக்ஷத ப்ரம்ஹ வா இதமக்ர ஆஸீத்
ததாத்மான மேவ வேதாஹம் ப்ரம்ஹாஸ்மீதி ஸ ஈக்ஷத இமான் லோகான் ஸ்ருஜே'
(ச்ருதி)

2. இப்படி ஸகல ஜகத் ஸ்ருஷ்டிக்கும் காரணமான பரம சிவனுடைய அஹம்பாவத்திற்கு அம்பிகை காரண மாயிருப்பதால் அம்பிகையை அவருடைய அஹந்தா ரூபிணியென்றும் அஹங்கார ரூபிணியென்றும் சொல்வது வழக்கம்.

'புரஸ்தாத் ஆஸ்தாம் ந: புரமதிதுராஹோ புருஷிகா।'
(ஸௌந்தர்யலஹரி)

'அஹம்தாம் ஆலம்பே த்ருடதரம் அஹந்தாம் பசுபதே:।'
(நீலகண்டவிஜயம்)

कलमञ्जुलवागनुमितगलपञ्जरशुकग्रहौत्कण्ठ्यात्।
अम्ब रदनाम्बरं ते बिम्बफलं शम्बरारिणा न्यस्तम्।।९९।।

கலமஞ்ஜுள வாகநுமித கலபஞ்ஜர ஶுகக்ரஹௌத்-
கண்ட்யாத்।

அம்ப ரதநாம்பரம் தே பிம்ப பலம் சம்பராரிணா
ந்யஸ்தம்।।99।।

அம்ப	தாயே!
கல மஞ்ஜுள	அத்யந்தம் இனிமையான
வாக்	குரலிலிருந்து
அனுமித	ஊஹிக்கப்பட்ட
கல பஞ்ஜர	கழுத்தாகிற கூட்டிலிருக்கும்
ஶுக	கிளியை
க்ரஹௌத் கண்ட்யாத்	பிடிக்கவேண்டுமென்கிற ஆசையினால்
ஶம்பராரிணா	மன்மதனால்
ந்யஸ்தம்	வைக்கப்பட்ட
பிம்ப-பலம்	கோவைப்பழம் போல்
தே	உன்னுடைய
ரதனாம்பரம்	உதடு (தோன்றுகிறது).

1. அம்பிகையின் உதடானது கோவைப்பழம் போலிருப்பதை இதில் வெகு அழகாக வர்ணித் திருக்கிறது. அம்பிகையின் குரலானது அவளுடைய கழுத்திலிருந்து வெளிவருவதைக் கேட்ட மன்மதனா னவன் அந்தக் கழுத்தாகிற கூண்டிற்குள் ஒரு கிளி இருந்து பேசுவதாக நினைக்கலானான். அதன்பேரில் அதைப்

பிடிக்கவேண்டுமென்ற ஆசை அவனுக்கு உண்டாயிற்று. ஸாதாரணமாக கிளிகளைப் பிடிப்பதற்கு அவற்றிற்குப் பிரியமுள்ள ஒரு ஸாமானை அவற்றினெதிரில் வைத்து அதைத்தின்ன அவைவரும் போது பிடிப்பது வழக்கம். கிளிகளுக்கு கோவைப் பழத்தில் ப்ரியமதிகமென்று மன்மதனுக்குத் தெரியுமாகையால் அம்பிகையின் உதடாகிற கோவைப்பழத்தை வைத்து அந்தக் கிளியைப்பிடிக்க மன்மதன் ஏற்பாடு செய்ததாக இங்கு வர்ணிக்கப்பட்டது அம்பிகையின் கழுத்து கிளிக்கூட்டுக்கும், குரல் கிளியின் குரலுக்கும், அதரம் கோவைக்கனிக்கும் உபமிக்கப்பட்டிருக்கின்றன.

2. சம்பராஸுரன் என்ற மிகவும் மாயாவியான அஸுரனை ஸம்ஹாரம் செய்ததால் மன்மதனுக்குச் சம்பராரியென்று பெயர். இப்படி எல்லாரையும் விட மாயாவியாயும் ஸகல ஜனங்களுடைய மனதையும் மயக்கிக் கலக்குகிறவனு மான மன்மதனே அம்பாளு டைய குரலின் இனிமையைப் பார்த்து மயக்கமடைந்தா னென்றால் அதைப்பற்றி அதிகமாக வர்ணிக்க வேண்டியது அனாவச்யம். மேலும், அப்பேர்ப்பட்டவன் வைக்கும் கோவைப்பழமானது ஸாமான்யமானதாக இருக்கக்கூடியதல்லவாகையால் அம்பிகையின் அதரத் தினழகைப்பற்றியும் அதிகம் சொல்லத்தேவையில்லை.

3. நதனம் என்றால் பல். அதற்கு ஆடையாக இருப்பது ரதநாம்பரம் - உதடு.

4. அம்பிகையின் கழுத்து, குரல், அதரம் இவற்றின் அழகைப்பற்றி ஸ்ரீமதாசார்யாளும் மிகவும் விசேஷமாக (ஸௌந்தர்யலஹரி)யில் வர்ணித்திருப்பதையும் பார்க்கவும்.

जय जय जगदम्ब शिवे जय जय कामाक्षि जय जयाद्रिसुते।
जय जय महेशदयिते जय जय चिद्गगनकौमुदीधारे॥१००॥

ஜய ஜய ஜகதம்ப சிவே ஜய ஜய காமாக்ஷி ஜய ஜயாத்ரிஸுதே।
ஜய ஜய மஹேஶ தயிதே ஜய ஜய சித்ககந கௌமுதீதாரே॥100॥

ஜகதம்ப	*ஜகன்மாதாவே!*
ஶிவே	*பரமசிவனுடைய பத்னியே*
ஜய ஜய	*ஸர்வோத்கர்ஷமாக (என்முன்) விளங்கிக் கொண்டிருக்கவும்*
காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
அத்ரி ஸுதே	*பர்வதராஜன் பெண்ணே! (ஜய ஜய)*
மஹேஶ தயிதே	*பரமேச்வரனுடைய பத்னியானவளே! (ஜய ஜய)*
சித்ககன கௌமுதீதாரே	*சித் என்ற ஆகாசத்திலிருந்து பெருகும் நிலவின் தாரை-யாயிருப்பவளே! (ஜய ஜய)*

இதுவரையில் அம்பிகையைப்பற்றிப் பலவிதமாக வர்ணித்திருந்தும் த்ருப்தியடையாத கவியானவர் அம்பிகையைப் பல பெயர்களாலழைத்துத் தன்னை அனுக்ரஹிக்கவேண்டி, எப்போதும் தன் முன்பாக ஜயத்துடன் விளங்கிக் கொண்டிருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறார். (ஜயஜய என்று அம்பிகையை ஜயத்தோடிருக்க வேண்டுமென்று அசீர்வதிப்பதாவது ஸ்தோத்ரம் செய்வதில் ஒருவிதம்)

இத்துடன் சதகம் முடிந்தது. அடுத்த ச்லோகமானது பலச்ருதியை (இதைச் சொல்வதினால் உண்டாகும் அம்பிகையின் அனுக்ரஹத்தை) சொல்லுகிறது.

आर्याशतकं भक्त्या पठतामार्याकटाक्षेण।
नि:सरति वदनकमलाद्वाणी पीयूषधोरणी दिव्या।।१०१।।

ஆர்யா ஶதகம் பக்த்யா படதாம் ஆர்யா கடாக்ஷேண।
நிஸ்ஸரதி வதனகமலாத்வாணீ பீயூஷதோரணீ திவ்யா।।101।।

பக்த்யா	பக்தியுடன்
ஆர்யா ஶதகம்	இந்த ஆர்யா சதகத்தை
படதாம்	வாசிப்பவர்களுக்கு
ஆர்யா கடாக்ஷேண	ஜகதம்பிகையின் கடாக்ஷத்தினால் (அனுக்ரஹத்தினால்)
வதனகமலாத்	அவர்களுடைய முகாரவிந்தங்களிலிருந்து
திவ்யா வாணீ	திவ்யமான (மிகவும் உயர்ந்த) வாக்கானது
பீயூஷதோரணீ	அம்ருததாரை போல்
நிஸ்ஸரதி	வெளிவருகிறது (ப்ரவஹிக்கிறது).

★★★★★★★★★★★★★

ஆர்யா சதகம் முற்றிற்று

★★★★★★★★★★★★★

कटाक्षशतकम्

கடாக்ஷ ஶதகம்

मोहान्धकारनिवहं विनिहन्तुमीडे
मूकात्मनामपि महाकवितावदान्यान्।
श्रीकाञ्चिदेशशिशिरीकृतिजागरूकान्
एकाम्रनाथतरुणीकरुणावलोकान्॥१॥

மோஹாந்தகாரம் நிவஹம் விநிஹந்தும் ஈடே
மூகாத்மனாம் அபி மஹாகவிதாவதான்யான்।
ஶ்ரீ காஞ்சிதேச ஶிஶிரீக்ருதி ஜாகரூகான்
ஏகாம்ரநாத தருணீ கருணாவலோகான்॥1॥

மூகாத்மனாம் அபி	ஊமையாயிருப்பவர்களுக்குக் கூட
மஹாகவிதா வதான்யான்	உயர்ந்த கவித்வ சக்தியைக் கொடுப்பதில் தாராளமான ஸ்வபாவத்தையுடையவை-களும்
ஶ்ரீகாஞ்சி தேஶ	ஶ்ரீ காஞ்சிதேசத்தை
ஶிஶிரீக்ருதி	குளிர்ச்சி செய்வதில் (ஸந்தோஷமடையச் செய்வதில்)
ஜாகரூகான்	ச்ரத்தையுள்ளவைகளும்
ஏகாம்ரநாத தருணீ	ஏகாம்ரநாதருடை பத்தினியான ஶ்ரீ காமாக்ஷியின்
கருணாவலோகான்	கருணை நிறைந்த பார்வைகளை
மோஹாந்தகாரநிவஹம்	(என்னுடைய) மோஹமாகிற இருள் கூட்டத்தை

வினிஹந்தும் போக்கடிப்பதற்கு வேண்டி
ஈடே ஸ்தோத்ரம் செய்கிறேன்.

1. இதிலிருந்து இந்த சதகம் முழுவதிலும் கவியானவர் அம்பிகையின் கடாக்ஷத்தை (கடைக்கண் பார்வையை) வர்ணிக்கிறார்.

2. 'மூகாத்மனாமபி.....வதான்யான்' என்பதில் கவியான வர் தன்னைப்பற்றிச் சொல்லிக்கொண்ட தாகவும் சொல்லலாம்.

(1) ஊமையாயிருப்பவர்களுக்குக்கூட உயர்ந்த கவித்வ சக்தியைக் கொடுப்பதில் உதார ஸ்வபாவத்தை உடையவைகளும் ஸ்ரீ காஞ்சீ தேசத்தைக் குளிரச் செய்வதில் ச்ரத்தையுள்ளவைகளுமான ஸ்ரீ ஏகாம்ர நாதனுடைய தேவியான ஸ்ரீ காமாக்ஷியினுடைய கருணை நிறைந்த கடாக்ஷங்களை என்னுடைய அக்ஞானமாகிய இருள் கூட்டத்தை விலக்கிக்கொள்ள வேண்டி, நான் ஸ்தோத்திரம் செய்கிறேன்.

मातर्जयन्ति ममताग्रहमोक्षणानि
माहेन्द्रनीलरुचिशिक्षणदक्षिणानि।
कामाक्षि कल्पितजगत्त्रयरक्षणानि
त्वद्वीक्षणानि वरदानविचक्षणानि॥२॥

மாதர்ஜயந்தி மமதாக்ரஹமோக்ஷணானி
மாஹேந்த்ர நீல ருசி ஶிக்ஷண தக்ஷிணானி।
காமாக்ஷி கல்பித ஜகத்ரய ரக்ஷணானி
த்வத் வீக்ஷணானி வரதான விசக்ஷணானி॥2॥

மாத: காமாக்ஷி	தாயே காமாக்ஷி!
மமதாக்ரஹ மோக்ஷணானி	மமதையாகிற பலமான பிடிப்பிலிருந்து விடுதலை செய்கிறவைகளும்
மாஹேந்த்ர நீல ருசி	இந்த்ர நீலக்கல்லின் காந்தியை
ஶிக்ஷண தக்ஷிணானி	தோற்கடிப்பதில் ஸாமர்த்தியமுள்ளவைகளும்
கல்பித ஜகத்ரய ரக்ஷணானி	மூன்று லோகங்களையும் காப்பாற்றுகிறவைகளும்
வரதான விசக்ஷணானி	வரங்களைக் கொடுப்பதில் தேர்ந்தவைகளுமான
த்வத் வீக்ஷணானி	உன்னுடைய பார்வைகள்
ஜயந்தி	விளங்கிக் கொண்டிருக்கின்றன

(2) தாயே! ஶ்ரீ காமாக்ஷியே! அஹம்பாவமென்கிற பிடிப்பிலிருந்து விடுதலை செய்கிறவைகளும், இந்திர நீலக் கல்லின் காந்தியை அடக்குவதில் ஸாமர்த்திய முள்ளவைகளும், மூன்று உலகங்களையும் ரக்ஷிப்பவைகளும் இஷ்டங்களைக் கொடுப்பதில் சக்தி யுள்ளவைகளுமான உனது கடாக்ஷங்கள் உயர்ந்து விளங்குகின்றன.

आनङ्गतन्त्रविधिदर्शितकौशलानाम्
आनन्दमन्दपरिघूर्णितमन्थराणाम्।
तारल्यमम्ब तव ताडितकर्णसीम्नां
कामाक्षि खेलति कटाक्षनिरीक्षणानाम्॥३॥

ஆனங்க தந்த்ர விதி தர்ஶித கௌஶலானாம்
ஆனந்த மந்த பரிகூர்ணித மந்தராணாம்।
தாரல்யம் அம்ப தவ தாடித கர்ணஸீம்னாம்
காமாக்ஷி கேலதி கடாக்ஷ நிரீக்ஷணானாம்॥3॥

அம்ப காமாக்ஷி	*தாயே! காமாக்ஷி!*
ஆனங்க தந்த்ர விதி	*காமசாஸ்திர நியமங்களில்*
தர்ஶித கௌஶலானாம்	*காட்டப்பட்ட ஸாமர்த்தியத் தையுடையவைகளும்*
ஆனந்த-மந்த- பரிகூர்ணித	*ஆனந்தத்தினால் மெதுவாக சுழல்வதை*
மந்தராணாம்	*காட்டுகிறவைகளும்*
தாடித கர்ணஸீம்னாம்	*காதுவரையில் நீண்டிருப்பவைகளுமான*
தவ கடாக்ஷ நிரீக்ஷணானாம்	*உன் கடைக்கண் பார்வைகளுடைய*
தாரல்யம்	*தளதளப்பானது*
கேலதி	*விளையாடிக்கொண்டிருக்கிறது (சோபிக்கிறது).*

(3) அம்பிகையான ஸ்ரீ காமாக்ஷியே! காமசாஸ்திர நியமங்களில் ஸாமர்த்யத்தைக் காட்டுகிறவைகளும் ஸந்தோஷத்தினால் மதுவாகச் சுழன்றுகொண்டிருப்ப வைகளும், காது வரையில் நீண்டிருப்பவைகளுமான, உனது கடைக் கண் பார்வைகளுடைய தளதளப்பான காந்தியானது மிகவும் சோபித்துக் கொண்டிருக்கிறது.

कल्लोलितेन करुणारसवेल्लितेन
कल्माषितेन कमनीयमृदुस्मितेन।
मामञ्चितेन तव किञ्चन कुञ्चितेन
कामाक्षि तेन शिशिरीकुरु वीक्षितेन।।४।।

கல்லோலிதேன கருணாரஸவேல்லிதேன
கல்மாஷிதேன கமனீய ம்ருதுஸ்மிதேன।
மாம் அஞ்சிதேன தவ கிஞ்சன குஞ்சிதேன
காமாக்ஷி தேன ஶிஶிரீகுரு வீக்ஷிதேன।।4।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
கருணாரஸ வேல்லிதேன	கருணாரஸத்தின் (அலைகளின்) அசைவினால்
கல்லோலிதேன	கொந்தளித்ததாயும்
கமனீய ம்ருதுஸ்மிதேன	அழகான மந்தஹாஸத்தினால்
கல்மாஷிதேன	பலநிறத்தோடு கூடியதாகத் தோன்றுவதும்
அஞ்சிதேன	வளைந்ததும்
கிஞ்சன குஞ்சிதேன	கொஞ்சம் குறுகியதுமான
தவ	உன்னுடைய
தேன வீக்ஷணேன	அப்பேர்ப்பட்ட பார்வையினால்
மாம் ஶிஶிரீகுரு	என்னைக்குளிரச் செய்.

1. கருணாரஸத்தை சிகப்பு நிறமாகவும், மந்தஸ்மிதத்தை வெளுப்பாகவும் வர்ணிப்பது வழக்கமாகையால் அவையிரண்டும் சேர்வதை இங்கு 'கல்மாஷிதம்' என்று சொல்லப்பட்டது.

2. அஞ்சிதம், குஞ்சிதம் இரண்டும் பார்வையானது வளைந்து குறுகியிருப்பதைக் குறிக்கும் பதங்கள்.

(4) ஹே! காமாக்ஷி! உனது கருணாரஸத்தின் அலையால் கொந்தளிப்பதாயும், அழகிய உனது மந்தஹாசத்தினால், பலவித வர்ணமுள்ளதுபோல் தோன்றுவதாயும், வளைந்ததும், சிறிது குறுகியதாயுமுள்ள உன்னுடைய அத்தகைய கடாக்ஷத்தினால் என்னைக் குளிரச் செய்வாயாக.

साहाय्यकं गतवती मुहुरर्जुनस्य
मन्दस्मितस्य परितोषितभीमचेताः।

कामाक्षि पाण्डवचमूरिव तावकीना
कर्णान्तिकं चलति हन्त कटाक्षलक्ष्मीः॥५॥

ஸாஹாய்யகம் கதவதீ முஹுரர்ஜுனஸ்ய
மந்தஸ்மிதஸ்ய பரிதோஷித பீம சேதா:।
காமாக்ஷி பாண்டவ சமூரிவ தாவகீனா
கர்ணாந்திகம் சலதி ஹந்த கடாக்ஷலக்ஷ்மீ:॥5॥

காமாக்ஷி	*ஹே காமாக்ஷீ!*
தாவகீனா கடாக்ஷ லக்ஷ்மீ:	*உன்னுடைய கடைக்கண் பார்வையானது*
மந்தஸ்மிதஸ்ய அர்ஜுனஸ்ய	*புன்சிரிப்போடுகூடிய அர்ஜுனனுக்கு*
முஹு: ஸாஹாய்யகம் கதவதீ	*அடிக்கடி ஒத்தாசையை அடைவதாயும்*
பரிதோஷித பீமசேதா:	*பீமசேனனுடைய மனதை ஸந்தோஷப்படுத்துகிறதாயுமுள்ள*
பாண்டவ சமூ: இவ	*பாண்டவர்களுடைய ஸேனைமாதிரி*

[அர்ஜுனஸ்ய மந்தஸ்மிதஸ்ய - வெளுப்பான புன்சிரிப்பினுடைய (அடிக்கடி ஒத்தாசையை அடைவதாயும்), பரிதோஷித பீம சேதா: பரமசிவனுடைய மனதை ஸந்தோஷப்படச் செய்கிறதாயும் (இருந்து கொண்டு)]

கர்ணாந்திகம் சலதி	*கர்ணனுக்கு ஸமீபத்தில் செல்ல ஆரம்பிக்கிறது. (காதுக்கு ஸமீபத்தில் வருகிறது.)*
ஹந்த!	*ஆச்சர்யம்!*

1. இதில் அம்பாளுடைய கடாக்ஷத்தை பாண்டவ சேனைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. அர்ஜுனமென்றால் வெளுப்பு என்று அர்த்தம். அதினாலேயே

அர்ஜுனனுக்கு அம்மாதிரிப் பெயர் ஏற்பட்டது. பீமனென்பது பீமஸேனனைக் குறிப்பதும் தவிர பரமசிவனுடைய அஷ்டமூர்த்திகளில் ஒரு மூர்த்திக்கும் பெயர். கர்ணமென்பது கர்ணனைக் குறிப்பதுடன் காதையும் குறிக்கும்.

2. புன்சிரிப்பை வெளுப்பாகச் சொல்வது வழக்கம். அதனால் தான் இங்கு 'அர்ஜுனஸ்ய மந்தஸ்மிதஸ்ய' என்று சொல்லப்பட்டது.

3. அர்ஜுனன் வீரர்களில் ச்ரேஷ்டமானவனாகையால் அவன் புன்சிரிப்புடன் யுத்தம் செய்வதாக 'மந்தஸ் மிதஸ்ய அர்ஜுனஸ்ய' என்று சொல்லப்பட்டது.

4. உத்தம ஸ்திரீகளுடைய கண்கள் காதுவரையில் நீண்டிருப்பதாக வர்ணிக்கப்படுவதை அனுஸரித்து 'கர்ணாந்திகம் சலதி' என்று சொல்லப்பட்டது. கர்ணன் பாண்டவர்களுக்கு எதிர் கக்ஷியைச் சேர்ந்தவனாகையால் அவனோடு யுத்தம் செய்ய பாண்டவ ஸேனை போவதை 'கர்ணாந்திகம் சலதி' என்று சொல்லப்பட்டது.

5. ஹே! காமாக்ஷி! உன்னுடைய கடைக்கண் பார்வை யான லக்ஷ்மீயானது வெளுப்பான மந்தஸ்மிதமாகிற அர்ஜுனனுக்கு அடிக்கடி உதவி அடைவதாயும், பீமனென்கிற மூர்த்தியான பரமசிவனுடைய மனத்தை சந்தோஷிக்கச் செய்வதாயும் பாண்டவ ஸேனையைப்போல் இருந்துகொண்டு கர்ணத்தின் ஸமீபத்திற்குச் செல்லுகிறது.

अस्तं क्षणान्नयतु मे परितापसूर्यम्
आनन्दचन्द्रमसं आनयतां प्रकाशम्।
कालान्धकारसुषमां कलयन्दिगन्ते
कामाक्षि कोमलकटाक्षनिशागमस्ते।।६।।

அஸ்தம் க்ஷணான்னயது மே பரிதாபஸூர்யம்
ஆனந்த சந்தரமஸம் ஆனயதாம் ப்ரகாஶம்।
காலாந்தகார ஸுஷமாம் கலயன் திகந்தே
காமாக்ஷி கோமல கடாக்ஷ நிஶாகமஸ்தே।।6।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷியே!*
தே	*உன்னுடைய*
கோமல கடாக்ஷ நிஶாகம:	*அழகான கடாக்ஷமாகிற ஸாயங்காலமானது*
திகந்தே	*எல்லா திக்குகளிலும்*
காலாந்தகார ஸுஷமாம்	*கருத்ததான இருட்டின் அழகை*
கலயன்	*உண்டுபண்ணிக்கொண்டு*
மே பரிதாபஸூர்யம்	*என்னுடைய பரிதாபமாகிற ஸூர்யனை*
க்ஷணாத் அஸ்தம் நயது	*ஒரு க்ஷணத்தில் அஸ்தமிக்கச் செய்யட்டும்*
ஆனந்த சந்த்ரமஸம்	*ஆனந்தமாகிற சந்திரனை*
ப்ரகாசம் ஆனயதாம்	*வெளிவரச் செய்யட்டும்*

(6) ஹே! காமாக்ஷி! உன்னுடைய அழகிய கடாக்ஷமாகிற ஸாயங்கால வேளையானது, திக்குகளில் கருத்த இருட்டின் காந்தியை உண்டுபண்ணிக்கொண்டு, என்னுடைய பரிதாபமாகிற ஸூர்யனை ஒரு க்ஷணத்தில் அஸ்தமிக்கச் செய்யட்டும். ஆனந்தமாகிற சந்திரனை பிரகாசமாகும்படி செய்யட்டும்.

ताटङ्कमौक्तिकरुचाङ्कुरदन्तकान्तिः
कारुण्यहस्तिपशिखामणिनाधिरूढः।
उन्मूलयत्वशुभपादपमस्मदीयं
कामाक्षि तावककटाक्षमतङ्गजेन्द्रः।।७।।

தாடங்க மௌக்திக ருசாங்குர தந்த காந்தி:
காருண்ய ஹஸ்திப ஶிகாமணினாதிரூட:।
உன்மூல்யத்வஶுப-பாதபம் அஸ்மதீயம்
காமாக்ஷி தாவக கடாக்ஷ மதங்கஜேந்த்ர: ।। 7 ।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
தாடங்க மௌக்திக	தாடங்கத்திலிருக்கும் முத்துக்களுடைய
ருசாங்குர தந்தகாந்தி	ப்ரகாசமாகிய வேரோடு கூடிய தந்தங்களுடைய காந்தியோடும்
காருண்ய	கருணையாகிற
ஹஸ்திப ஶிரோமணினா	உத்தமமான மாவுத்தனால்
அதிரூட:	ஏற்பட்டதுமான (நடத்தப்பட்டதுமான)
தாவக	உன்னுடைய
கடாக்ஷ மதங்கஜேந்த்ர:	கடாக்ஷமாகிற கஜச்ரேஷ்டமானது
அஸ்மதீயம்	நம்முடைய
அஶுப பாதபம்	அசுபமாகிற வ்ருக்ஷத்தை
உன்மூலயது	வேரோடு களைந்து எறியட்டும்.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை யானைக்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. மதங்கமென்றாலும்

மதங்கஜமென்றாலும் யானைக்குப் பெயர்.

2. அவ்விதமான யானையினுடைய தந்தங்களின் காந்தியாக அம்பிகை காதுகளில் தரித்திருக்கும் தாடங்கங்களுடைய முத்துக்களின் ப்ரகாசத்தைச் சொல்லப்பட்டது.

3. அம்பிகையின் காருண்யத்தினால் கடாக்ஷமானது (பிறரிடம்) ஏற்படுவதால் அதை அவ்வித கடாக்ஷமான யானைக்கு மாவுத்தனாகச் சொல்லப்பட்டது.

4. மரங்களைப் பிடுங்கி எறிவதானது யானைகளுக்கு ஒரு விளையாட்டாகச் சொல்லப்படும். இங்கு அம்பிகையின் கடாக்ஷமாகிற யானையானது பக்தர்களுடைய அசுபமாகிற மரத்தைப்பிடுங்கி வேரோடு களைந்துவிடுவதாகச் சொல்லப்பட்டது. அசுபமென்றால் சுபமல்லாதது - கெடுதல், கஷ்டம் துரத்ருஷ்டம் முதலியவை.)

(7) ஹே! காமாக்ஷி! உனது காதுத் தோடுகளிலுள்ள முத்துக்களுடைய காந்தியால் தந்தத்தின் சோபையை அடைந்ததும், காருண்யமென்ற உத்தம மாவுத்தனால் ஏறிக் கொள்ளப்பட்டதுமான உன்னுடைய கடாக்ஷமென்கிற யானை சிரேஷ்டமானது, எங்களுடைய பாபமாகிற விருக்ஷத்தை வேருடன் களைந்து எறியட்டும்.

छायाभरेण जगतां परितापहारी
ताटङ्करत्नमणितल्लजपल्लवश्रीः।
कारुण्यनाम विकिरन्मकरन्दजालं
कामाक्षि राजति कटाक्षसुरद्रुमस्ते।।८।।

ச்சாயாபரேண ஜகதாம் பரிதாபஹாரீ
தாடங்கரத்னமணிதல்லஜபல்லவஸ்ரீ:।

கா்ருண்யநாம விகிரன் மகரந்த ஜாலம்
காமாக்ஷி ராஜதி கடாக்ஷ ஸுரத்ருமஸ்தே॥8॥

காமாக்ஷி	ஹே காமாக்ஷியே!
தே கடாக்ஷஸுரத்ரும:	உன்னுடைய கடாக்ஷமாகிற கல்பவ்ருக்ஷமானது
ச்சாயாபரேண	தன்னுடைய அதிகமான நிழலினால்
ஜகதாம் பரிதாபஹாரீ	லோகங்களுடைய தாபத்தைப் போக்குகிறதாயும்
தாடங்க ரத்னமணி	தாடங்கத்தின் ரத்னக் கல்லுகளாகிய
தல்லஜ பல்லவஸ்ரீ:	உயர்ந்த துளிர்களின் அழகையுடையதாயும்
காருண்யநாம	காருண்யமென்கிற
மகரந்தஜாலம்	பூந்தேனின் ப்ரவாஹத்தை
விகிரன்	பெருகவிட்டுக்கொண்டும்
ராஜதி	விளங்குகிறது

இதில் அம்பாளுடைய கடாக்ஷத்தை தேவ லோகத்திய வ்ருக்ஷத்திற்கு ஸமமாக வர்ணிக்கப்பட்டது. அவ்வித வ்ருக்ஷங்கள் மந்தாரம், பாரிஜாதம், ஸந்தானம், கல்பவ்ருக்ஷம், ஹரிசந்தனம் என்ற ஐந்து.

(8) காமாக்ஷியே! உன்னுடைய கடாக்ஷமாகிற கல்பக விருக்ஷமானது, தனது நிழலினால் உலகங்களுடைய தாபத்தைப் போக்குகிறதாயும், காதுத் தோடுகளிலுள்ள ரத்ந சிரேஷ்டங்களால், துளிர் நிறைந்து போன்ற சோபையுடையதாயும் காருண்யமென்கிற தேன் குவியலை வர்ஷித்துக் கொண்டிருப்பதாயும் விளங்குகிறது.

सूर्याश्रय प्रणयिनी मणिकुण्डलांशु
लौहित्यकोकनदकानन माननीया।
यान्ती तव स्मरहरानन कान्ति सिन्धुं
कामाक्षि राजति कटाक्षकलिन्दकन्या।।९।।

ஸூர்யாஶ்ரய ப்ரணயினீ மணிகுண்டலாம்ஶு
லௌஹித்ய கோகனத கானன மானனீயா।
யாந்தீ தவ ஸ்மரஹரானன காந்திஸிந்தும்
காமாக்ஷி ராஜதி கடாக்ஷகலிந்தகன்யா।।9।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
தவகடாக்ஷகலிந்த கன்யா	*உன்னுடைய கடாக்ஷமாகிற யமுனாநதியானது*
ஸூர்யாஶ்ரய, ப்ரணயினீ	*ஸூர்யனை (பரமசிவனை) ஆச்ரயிப்பதில் ஆசையுள்ளதாயும்*
மணிகுண்டலாம்ஶு	*ரத்னகுண்டலங்களின் காந்திகளாகிற*
லௌஹித்ய கோகனத கானன	*செந்தாமரைகளின் வர்ணத்தால்*
மானனீயா	*கௌரவிக்கத்தக்கதாயிருந்து-கொண்டு*
ஸ்மரஹரானன காந்தி ஸிந்தும்	*பரமசிவனுடைய முகத்தின் காந்தியாகிற ஸமுத்ரத்தை*
யாந்தீ	*அடைவதாக (அடைந்துகொண்டு)*
ராஜதி	*விளங்குகிறது.*

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை யமுனா நதிக்கு ஸமமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. களிந்தமென்று பெயருடைய பர்வதத்திலிருந்து யமுனையானது

உத்பத்தியாவதால் அதற்கு காளிந்தி, களிந்தகன்யா என்பதான பெயர்கள் ஏற்பட்டன.

2. ஸூர்யனுக்கு யமன் புத்ரனாகவும், யமுனை புத்ரியாகவும் சொல்லப்படுவார்கள்.

3. ஸூர்யனென்று சிவனுக்கு பெயருண்டு.

(9) காமாக்ஷியே! உனது கடாக்ஷமாகிற யமுனா நதி யானது, ஸூர்யனை ஆச்ரயிப்பதில் ஆசையுள்ள தாயும், சிவந்த ரத்நகுண்டலங்களின் காந்தியால், செந்தாமரைக் கூட்டம் உள்ளதுபோல் கொண்டாடத் தக்கதாயும், மன்மத சத்ருவான பரமசிவனின் முககாந்தி யாகிற ஸமுத்ரத்தை அடைகிறதாயும் விளங்குகிறது.

प्राप्नोति यं सुकृतिनं तव पक्षपातात्–
कामाक्षि वीक्षणविलासकलापुरन्ध्री।
सध्यस्तमेव किल मुक्तिवधूर्वृणीते
तस्मान्नितान्तमनयोरिदमैकमत्यम्।। १०।।

ப்ராப்னோதி யம் ஸுக்ருதினம் தவ பக்ஷபாதாத்
காமாக்ஷி வீக்ஷணவிலாஸகலா புரந்த்ரீ।
ஸத்யஸ்தமேவ கில முக்திவதூர் வ்ருணீதே
தஸ்மான் நிதாந்தம் அனயோரிதம் ஐகமத்யம்।।10।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
தவ பக்ஷபாதாத்	*உன்னுடைய கடாக்ஷத்திலிருந்து*
வீக்ஷண விலாஸகலா	*(உன்னுடைய) பார்வையினுடைய அழகின் ஒரு சிறிய பாகமாகிற*
புரந்த்ரீ	*குடும்ப ஸ்த்ரீயானவள்*

யம் ஸுக்ருதினம்	எந்த புண்யசாலியை
ப்ராப்னோதி	அடைகிறாளோ
ஸத்ய:	உடனே
தமேவ	அவனையே
முக்திவதூ:	மோக்ஷமாகிற ஸ்திரீயானவள்
வ்ருணீதே கில!	வரிக்கிறாள் அல்லவா!
தஸ்மாத்	அதிலிருந்து
அனயோ:	அவ்விரு ஸ்த்ரீகளுக்கும்
இதம் ஐகமத்யம்	இவ்விதமான ஒற்றுமையானது
நிதாந்தம்	மிகவும் அதிகமாக (இருக்கிறது).

இதின் தாத்பர்யமென்றால்-அம்பிகையின் க்ருபையினால் அவளுடைய கடாக்ஷலேசமானது ஒருவன்மீது ஏற்பட்டால் அவனுக்கு ஐஹிகமான ஸகல ஸௌபாக்ய ங்களுமேற்படுவதுடன் ஆமுஷ்மிகமான மோக்ஷமென் கிற புருஷார்த்தமும் தானாகவே கிடைக்கிறதென்று சொல்லப்பட்டது. ஸாதாரணமாக, போகம் இருக்கு மிடத்தில் மோக்ஷம் கிடைக்காதென்றும், மோக்ஷமிருக்கு மிடத்தில் போகம் கிடையாதென்றும் நாம் பார்ப்பது வழக்கமாயிருக்கையில், அம்பிகையின் பக்தர்களுக்கு அவையிரண்டும் ஒருங்கே கிடைக்கப்பெறுமென்று சொல்லப்படும்.

'யத்ராஸ்தி போகோ ந து தத்ரமோக்ஷ:
யத்ராஸ்தி மோக்ஷோ ந ச தத்ரபோக:।
ஸ்ரீ ஸுந்தரீ ஸாதக புங்கவானாம்
போகச்ச மோக்ஷச்ச கரஸ்த்த ஏவ।।'

(10) ஹே! காமாக்ஷி! எந்த புண்யசாலியை உன்னுடைய கடாக்ஷ விலாஸமாகிற குலஸ்திரீயானவள் பிரீதியினால் அடை கிறாளோ, அந்த மனிதனையே, முக்தி என்ற ஸ்திரீயும் உடனே வரிக்கிறாள். இந்த இருஸ்திரீகளுக்கும் மிகவும் ஒற்றுமை இருக்கிறது.

यान्ती सदैव मरुतामनुकूलभावं
भ्रूवल्लिशक्रधनुरुल्लसिता रसार्द्रा।
कामाक्षि कौतुकतरङ्गितनीलकण्ठा
कादम्बिनीव तव भाति कटाक्षमाला।।११।।

யாந்தீ ஸதைவ மருதாம் அனுகூலபாவம்
ப்ரூவல்லி சக்ரதனுருல்லஸிதாரஸார்த்ரா।
காமாக்ஷி கௌதுக தரங்கித நீலகண்டா
காதம்பினீவ தவ பாதி கடாக்ஷமாலா।।11।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
தவ கடாக்ஷமாலா	*உன்னுடைய கடாக்ஷங்களின் வரிசையானது*
காதம்பினீவ	*மேகங்களின் நீண்டதோர் வரிசைபோல்*
ஸதைவ	*எப்போதும்*
மருதாம் அனுகூலபாவம்	*காற்றுகளுடைய (தேவர்களுடைய) அநுகூலமான தன்மையை*
ப்ரூவல்லி	*புருவமாகிய*
சக்ரதனுருல்லஸிதா	*வான வில்லினால் ப்ரகாசிப்பதாயும்*

ரஸார்த்ரா	நீர் (கருணாரஸம்) நிறைந்ததாயும்
கௌதுக தரங்கித	ஸந்தோஷத்தினால் அலைபாயும் மனதுடைய
நீலகண்டா	மயிலை (பரமசிவனை) யுடையதாயும்
பாதி	விளங்குகிறது.

இதில் அம்பிகையின் கடாக்ஷங்களான மாலையை காதம்பினிக்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. வரிசையாய் இருக்கும் மேகக் கூட்டத்திற்கு காதம்பினீ என்று பெயர். காற்றானது அனுகூலமாய் இருந்தால்தான் அவ்வித சேர்க்கையானது கலைபடாமலிருக்கு மாகையால் 'மருதாம் அனுகூலபாவம் யாந்தீ' என்று சொல்லப்பட்டது. மருத் என்ற பதமானது தேவ விசேஷங்களையும் குறிக்கும். மேகத்தில் இந்த்ர தனுஸ் இருப்பதுபோல் கடாக்ஷமாலைக்கு அம்பிகையின் புருவங்களாகிய தனுஸ் இருப்பதை 'ப்ரூவல்லிசக்ரதனு ருல்லஸிதா' என்று சொல்லப்பட்டது. புருவங்களின் அமைப்பை வில்லுக்கு ஸமமாக வர்ணிப்பது வழக்கம். மேகம் நீருண்டிருப்பது மாதிரி கடாக்ஷ மாலையானது கருணாரஸம் நிறைந்திருக்கிறது. (ரசம் என்றால் ஜல மென்றும் அர்த்தம்). நீருண்ட மேகத்தைக் கண்டு மயில்கள் நர்த்தனம் செய்யுமென்று சொல்வது வழக்கம். (மயிலுக்கு நீலகண்டபென்று பெயர்). நீலகண்டமென்று பரமசிவனுக்கும் பெயராகையாலும், அவருடைய மனதானது அம்பிகையின் கடாக்ஷ மாலையைப் பார்த்து ஆனந்தமடையுமாகையால் 'கௌதுக தரங்கித நீல கண்டா' என்று சொல்லப்பட்டது.

காமாக்ஷி! உனது கடாக்ஷ வரிசையாகிற மேகக்கூட்டமானது மருத்துக்களுக்கு அதாவது காற்றுக்கும், தேவர்களுக்கும் எப்போதும் அனுகூலமாயிருப்பதாகவும், உனது புருவக் கொடியினால், வானவில்லின் சோபை போல் விளங்குவதாயும், கருணையாகிற ரஸத்தால் (ஜலத்தினால்) நனைந்ததாயும் நீலகண்டனுக்கு (சிவன், மயில்) ஸந்தோஷமாகிற அலையை விருத்தி செய்கிறதாயும் விளங்குகிறது.

गङ्गाम्भसि स्मितमये तपनात्मजेव
गङ्गाधरोरसि नवोत्पलमालिकेव
ववत्रप्रभासरसि शैवलमण्डलीव
कामाक्षि राजति कटाक्षरुचिच्छटा ते ।। १२ ।।

கங்காம்பஸி ஸ்மிதமயே தபனாத்மஜேவ
கங்காதரோரஸி நவோத்பல மாலிகேவ।
வக்த்ர ப்ரபா ஸரஸி ஶைவல மண்டலீவ
காமாக்ஷி ராஜதி கடாக்ஷ ருசிச்சடா தே।।12।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
தே கடாக்ஷ ருசிச்சடா	உன்னுடைய கடாக்ஷத்தின் காந்திகளுடைய கூட்டமானது
ஸ்மிதமயே	(உன்னுடைய) புன்சிரிப்பாகிற
கங்காம்பஸி	கங்கா ஜலத்தில்
தபனாத்மஜேவ	யமுனா நதிபோலும்
கங்காதரோரஸி	பரமசிவனுடைய மார்பில்
நவோத்பல மாலிகேவ	புதிதான கருநெய்தல் புஷ்பங்களின் மாலைபோலும்
வக்த்ரப்ரபாஸரஸி	(உன்னுடைய) முக

	காந்தியாகிற ஸரஸில்
சைவல மண்டலீவ	பாசிக்கூட்டம்போலும்
ராஜதி	விளங்குகிறது

1. கங்காஜலமானது வெளுப்பாகவும், யமுனா நதியின் ஜலம் கருப்பாகவும், இருப்பதாகச் சொல்லப்படும். புன்சிரிப்பை வெளுப்பாகச் சொல்லப்படும். பரம சிவனுடைய சரீரமானது வெளுப்புநிறமாகச் சொல்லப்படும்.

2. தபனென்று ஸூர்யனுக்குப்பெயராகையால் அவனுடைய பெண்ணான யமுனைக்கு தபனாத்மஜா, தபன தனயா என்ற பெயர்கள் உண்டு.

3. கடாக்ஷத்தின் காந்தியினுடைய கூட்டமான சேர்க்கை யானது கருப்பு நிறமாய் இருப்பதாக இங்கு வர்ணிக்கப் பட்டது.

(12) காமாக்ஷியே! உனது கடாக்ஷ சோபையின் கூட்டமானது, உன்னுடைய புன்சிரிப்பாகிய கங்கா ஜலத்தில் யமுனை கலந்தது போலவும், பரமசிவனின் மார்பில் புதிய நீலோத்பலபுஷ்ப மாலைபோலவும், உனது முக காந்தியாகிற தடாகத்தில் பாசிக்கொத்து போன்றும் பிரகாசிக்கிறது.

संस्कारत: किमपि कन्दलितान् रसज्ञ–
केदारसीम्नि सुधियामुपभोगयोग्यान्
कल्याणसूक्तिलहरीकलमाङ्कुरान्न:
कामाक्षि कन्दलयतु त्वदपाङ्गमेघ: ।। १३ ।।

ஸம்ஸ்காரத: கிமபி கந்தலிதான் ரஸஞ-
கேதாரஸீம்னி ஸுதியாம் உபபோக யோக்யான்।

கல்யாண ஸூக்தி லஹரீ கலமாங்குரான் ந:
காமாக்ஷி கந்தலயது த்வத் அபாங்க மேக:।।13।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
த்வத் அபாங்க மேக:	*உனது கடைக்கண் பார்வையென்ற மேகமானது*
ந:	*நம்முடைய*
ரஸக்ஞாகேதாரஸீம்னி	*நாக்காகிற வயலில்*
ஸம்ஸ்காரத:	*செய் நேர்த்தியால்*
கிமபி கந்தலிதான்	*ஒருவிதமாய் (கொஞ்சம்) கிளம்பியிருப்பதும்*
ஸுதியாம்	*(புத்திமான்களுடைய) புத்திமான்களால்*
உபபோக யோக்யான்	*அனுபவிக்கத்தக்கதாயுமுள்ள*
கல்யாணஸூக்தி லஹரீ	*மங்கலகரமான வாக்குகளின்பெருக்காகிற*
கலமாங்குரான்	*சம்பாப் பயிர்களை*
கந்தலயது	*செழுமையாய் வளரச் செய்யட்டும்.*

இதில், பக்தர்களுடைய நாக்காகிற வயலில் சிறந்த வாக்குகளாகிற பயிர்களை செழுமையாய் வளரச் செய்யும் நீருண்ட மேகத்திற்கு ஒப்பிடப்பட்டது. அதாவது, அம்பிகையின் கடாக்ஷமானது கிடைக்கப் பெற்ற பக்தனுக்கு ச்ரேஷ்டமான கவிதா சக்தி ஏற்படுமென்பது தாத்பர்யம்.

(13) ஹே காமாக்ஷி! உனது கடாக்ஷமாகிற மேகமானது என்னுடைய நாக்கு என்கிற வயலில் நல்ல செய் நேர்த்தியால் முளைத்தவைகளும், புத்திமான்களுக்கு அனுபவிக்கத் தக்கவைகளுமாகிய மங்களகரமான வாக்ஜரி

(கவிதா சக்தி), யாகிற சம்பாப் பயிர்களை விருத்தி செய்யட்டும்.

चाञ्चल्यमेव नियतं कलयन्प्रकृत्या
मालिन्यभूः श्रुतिपथाक्रमजागरूकः।
कैवल्यमेव किमु कल्पयते नतानां
कामाक्षि चित्रमपि ते करुणाकटाक्षः।।१४।।

சாஞ்சல்யமேவ நியதம் கலயன் ப்ரக்ருத்யா
மாலின்யபூ: ஶ்ருதிபதாக்ரம ஜாகரூக:।
கைவல்யமேவ கிமு கல்பயதே நதானாம்
காமாக்ஷி சித்ரமபி தே கருணா கடாக்ஷ:।।14।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
தே கருணா கடாக்ஷ:	*உன்னுடைய கருணை நிறைந்த கடாக்ஷமானது*
ப்ரக்ருத்யா	*இயற்கையாகவே*
நியதம்	*எப்போதும்*
சாஞ்சல்யமேவ கலயன்	*சஞ்சல ஸ்வபாவத்தோடே இருந்தும்*
நதானாம்	*நமஸ்கரித்த பக்தர்களுக்கு*
மாலின்யபூ:	*அழுக்கு (அதாவது, பாபம்) நிறைந்த பூமியாகிற ஸம்ஸாரத்தை*
ஶ்ருதி பதாக்கிரம ஜாகரூக:	*வேதங்களாகிய மார்க்கத்தின் வழியாய் (அவர்கள்) கடப்பதில் அக்கரையுள்ளதாய்*
சித்ரம் அபி	*ஆச்சர்யப்படத்தக்கவிதமாய்*
கைவல்யமேவ	*கைவல்ய மோக்ஷத்தையே*
கிமு கல்பயதே	*எப்படி உண்டுபண்ணுகிறது!*

(14) ஹே! காமாக்ஷி! உனது கருணை நிறைந்த கடாக்ஷமானது இயற்கையாகவே எப்போதும் சஞ்சல ஸ்வபாவத்தோடு இருந்தும், நமஸ்கரித்த பக்தர்களுக்கு பாபம் நிறைந்த பூமியாகிற ஸம்ஸாரத்தை, வேதங்களாகிற வழியின் மூலமாகத்தாண்டுவதில் சிரத்தையுள்ளதாய், ஆச்சர்யப்படத் தக்கவிதமாய் மோக்ஷத் தையே எப்படி உண்டுபண்ணுகிறது? ஆச்சர்யம்!!

सञ्जीवने जननि चूत शिलीमुखस्य
संमोहने शशिकिशोरकशेखरस्य।
संस्तम्भने च ममताग्रहचेष्टितस्य
कामाक्षि वीक्षणकला परमौषधं ते।।१५।।

ஸஞ்ஜீவனே ஜனனி சூத ஶிலீமுகஸ்ய
ஸம்மோஹனே ஶஶி கிஶோரக ஶேகரஸ்ய।
ஸம்ஸ்தம்பனே ச மமதாக்ரஹ சேஷ்டிதஸ்ய
காமாக்ஷி வீக்ஷணகலா பரமௌஷதம் தே।।15।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
தே வீக்ஷணகலா	*உனது பார்வையின் அம்சமானது*
சூத ஶிலீமுகஸ்ய	*(மாம்பூவை பாணமாகவுடைய) மன்மதனுக்கு*
ஸஞ்ஜீவனே	*பிழைப்பு மூட்டுவதிலும்*
ஶஶி கிஶோரக ஶேகரஸ்ய	*(சந்த்ரனுடைய கலையை சிரோபூஷணமாயுடைய) பரமசிவனுக்கு*
ஸம்மோஹனே	*நன்றாய் மோஹம் உண்டாக்குவதிலும்*

மமதாக்ரஹ சேஷ்டிதஸ்ய	மமதையாகிய ஆவேசத்தினுடைய சேஷ்டைக்கு
ஸம்ஸ்தம்பனே	அடியோடு நிறுத்துவதிலும்
பரமௌஷதம்	ச்ரேஷ்டமான ஔஷதமாயிருக்கிறது.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை ஒரு சிறந்த ஔஷதமாகச் சொல்லப்பட்டது. அதினுடைய உயர்ந்த குணமானது இதில் வர்ணிக்கப்பட்டபடி ஸஞ்ஜீவனம், ஸம்மோஹனம், ஸம்ஸ்தம்பனம் முதலியவற்றால் வெளியாகிறது.

2. ஸஞ்ஜீவன சக்தியானது இதேமாதிரி.

'ஹரநேத்ராக்னிஸந்தக்த காமஸஞ்ஜீவனௌஷதி:।' என்பதாக 'ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம'த்திலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

(15) ஹே! காமாக்ஷி! கடாக்ஷப்பார்வையான கலையானது மாம்பூவை பாணமாக உடைய மன்மதனை பிழைப்பு மூட்டுவதிலும் சந்திர கலையை சிரோபூஷணமாகக் கொண்ட பரமசிவனை மோகிக்கச் செய்வதிலும், அஹங்கார மென்கிற பூதத்தின் சேஷ்டையை ஸ்தம்பனம் செய்வதிலும், உத்தமமான ஔஷதமாகயிருக்கிறது.

नीलोऽपि रागमधिकं जनयन्पुरारेः–
लोलोऽपि भक्तिमधिकां दृढयन्नराणां।
वक्रोऽपि देवि नमतां समतां वितन्वन्
कामाक्षि नृत्यतु मयि त्वदपाङ्गपातः।।१६।।

நீலோऽபி ராகம் அதிகம் ஜனயன் புராரே:
லோலோऽபி பக்திம் அதிகாம் த்ருடயன் நராணாம்।
வக்ரோऽபி தேவி நமதாம் ஸமதாம் விதன்வன்
காமாக்ஷி ந்ருத்யது மயித்வதபாங்கபாத:।।16।।

தேவி காமாக்ஷி	*ஹே தேவி! காமாக்ஷி!*
த்வத் அபாங்கபாத:	*உனது கடைக்கண் பார்வையானது*
நீலோபேிதான்	*கருத்திருந்தாலும்*
புராரே:	*பரமசிவனுக்கு*
அதிகம் ராகம் ஜனயன்	*அதிகமான ராகத்தை உண்டுபண்ணுகிறதாயும்*
லோலோபேி	*தான் சஞ்சலிப்பதாயிருந்தாலும்*
நராணாம்	*ஜனங்களுக்கு (பக்தர்களுக்கு)*
அதிகாம் பக்திம் த்ருடயன்	*அதிகமான பக்தியை உறுதிப்படுகிறதாயும்*
நமதாம்	*நமஸ்கரிக்கும் பக்தர்களுக்கு*
ஸமதாம் விதன்வன்	*ஸமமாய் (ஒழுங்கான) இருக்கும் தன்மையை உண்டுபண்ணுவதாயும்*
மயி	*என்னிடத்தில்*
ந்ருத்யது	*நர்த்தனம் செய்து கொண்டிருக்கட்டும்*

1. கடாக்ஷமானது கருப்பாயிருப்பதாய்ச் சொல்லப்படும் ராகமென்பது பொதுவாக வர்ணத்தைக்குறிக்கும். ராகமென்றால் ஆசையென்றும் அர்த்தம். ஆசையை (பற்றுதலை) சிகப்புநிறமாக வர்ணிப்பது வழக்கம்.

அம்பிகையின் கடாக்ஷமானது பரமசிவனுடைய மனதில் ஆசையை அதிகரிக்கச் செய்வதால், தான் நீலநிறமாயிருந்தும் அவரிடத்தில் ராகத்தை (சிகப்பு நிறத்தை) உண்டு பண்ணுவதாகச் சொல்லப்பட்டது.

2. அதே விதமாக, தான் சஞ்சலமாயிருந்தாலும் ஜனங்களுடைய பக்தியை கெட்டிப்படுத்துவதாயும், தான் வக்ரமாயிருந்தாலும் பக்தர்களுக்கு ருஜு பாவத்தைக் கொடுப்பதாயும் சொல்லப்பட்டது.

3. இவ்விதம் தனக்கிருக்கும் ஸ்வபாவமான குணங்களுக்கு விரோதமான செய்கைகளோடிருப்பது போல் சொல்லி அம்பிகையின் கடாக்ஷத்தின் மேன்மையை வர்ணித்திருக்கிறார்.

(16) ஹே! காமாக்ஷி தேவியே! உனது கடாக்ஷத்தின் பார்வையானது, கருத்ததாயிருப்பினும், புராரியான பரம சிவனுக்கு அதிகமான ராகத்தை (சிவப்பை, ஆசையை)க் கொடுப்பதாயிருக்கிறது. கடாக்ஷமானது சஞ்சலமா யிருந்தும் பக்தர்களான மனிதர்களுடைய பக்தியை அதிகமாகும்படி உறுதிப்படுத்துகிறது. கடாக்ஷமானது வக்ரமாயிருப்பினும், ஸேவார்த்திகளுக்கு ஸமத்வத்தைக் கொடுப்பதாயிருக்கிறது. அத்தகைய கடாக்ஷமானது என்னிடத்தில் நர்த்தனம் செய்து கொண்டிருக்கவேணும்.

कामद्रुहो हृदययन्त्रणजागरूका
कामाक्षि चञ्चलदृगञ्चलमेखला ते।
आश्चर्यमम्ब भजतां झटिति स्वकीय–
संपर्क एव विधुनोति समस्तबन्धान्।।१७।।

காமத்ருஹோ ஹ்ருதயயந்த்ரண ஜாகரூகா
காமாக்ஷி சஞ்சல த்ருகஞ்சல மேகலா தே।
ஆஶ்சர்யம் அம்ப பஜதாம் ஜடிதி ஸ்வகீய
ஸம்பர்க்க ஏவ விதுனோதி ஸமஸ்த பந்தான்॥17॥

காமாக்ஷி அம்ப	*ஹே காமாக்ஷி! தாயே!*
காமத்ருஹ:	*பரமசிவனுடைய*
ஹ்ருதய யந்த்ரண	*மனதைக் கட்டுவதில்*
ஜாகரூகா	*ஜாக்ரதை (அக்கரை) யோடிருக்கும்*
தே	*உன்னுடைய*
சஞ்சல த்ருகஞ்சல	*சஞ்சலமான பார்வையென்ற*
மேகலா	*சரடானது*
ஸ்வகீய ஸம்பர்க்க ஏவ	*தனது ஸம்பந்தம் ஏற்பட்டமாத்திரத்திலேயே*
பஜதாம்	*பக்தர்களுடைய*
ஸமஸ்த பந்தான்	*ஸகல விதமான பந்தங்களையும்*
ஜடிதி	*சீக்கிரத்தில் (உடனேயே)*
விதுனோதி	*போக்கடித்துவிடுகிறது*
ஆஶ்சர்யம்	*இது ஆச்சர்யம்!*

இதில் அம்பிகையின் கடாக்ஷத்திற்கிருக்கும் பந்தன சக்தியையும் பந்தமோசன சக்தியையும் சொல்லப்பட்டது. மன்மதனுக்கும் வசப்படாத பரம சிவனைக்கூட கட்டிவிட சக்தியுடைய அம்பிகையின் கடாக்ஷமானது பக்தர்களுக்கிருக்கும் எல்லாவிதமான ஸம்ஸார பந்தங்களையும் போக்கடிக்கும் ஸாமர்த்யமுடைய தாயிருக்கிறது. இவ்விதம் அதற்குள்ள ஆச்சர்யகரமான சக்தியை இங்கு வர்ணிக்கப்பட்டது.

(17) ஹே! அம்பிகையே! காமாக்ஷியே! உன்னுடைய சஞ்சலமான காடாக்ஷமென்கிற கயிறானது, பரம சிவனுடைய, மனதைக் கட்டுவதில் ஜாக்கிரதை யுள்ளதாயிருப்பினும், உன்னை ஸேவிப்பவர்களுடைய ஸகலவிதமான பந்தங்களையும் (கட்டுகளையும்) சீக்கிரத்திலேயே அவிழ்த்து உதறிவிடுகிறது. இது ஓர் ஆச்சர்யம்.

कुण्ठीकरोतु विपदं मम कुञ्चितभ्रू-
चापाञ्चित: श्रितविदेह भवानुराग:।
रक्षोपकारमनिशं जनयञ्जगत्यां
कामाक्षि राम इव ते करुणाकटाक्ष:।।१८।।

குண்டீகரோது விபதம் மம குஞ்சித ப்ரூ
சாபாஞ்சித: ஶ்ரித விதேஹ பவானுராக:।
ரக்ஷோபகாரமனிஶம் ஜனயன் ஜகத்யாம்
காமாக்ஷி ராம இவ தே கருணாகடாக்ஷ:।।18।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
தே கருணா கடாக்ஷ:	உன்னுடைய கருணை நிறைந்த கடாக்ஷமானது
ராம இவ	ஸ்ரீ ராமனைப்போல்
குஞ்சித ப்ரூசாபாஞ்சித:	வளைந்த புருவங்களாகிற வில்லையுடையதாயும்
ஶ்ரித விதேஹ பவானுராக:	தன்னையாச்ரயித்த மன்மதனிடத்தில் ப்ரியமுள்ளதாயும்
ஜகத்யாம்	லோகத்தில்
அனிஶம்	எப்போதும்

ரக்ஷோபகாரம்	ரக்ஷணம் என்கிற உபகாரத்தை
ஜனயன்	உண்டுபண்ணிக்கொண்டு
மம விபதம்	என்னுடைய ஆபத்துக்களை
குண்டீகரோது	போக்கடிக்கட்டும்

1. ஸ்ரீ ராமன் கோதண்டத்தை தரித்தவராகையால் 'குஞ்சித சாபாஞ்சித:' தன்னை ஆச்ரயித்த ஸீதா (விதேஹபவா-வைதேஹீ) தேவியிடத்தில் அனுராகத் தோடிருப்பதால் 'ஶ்ரித விதேஹ பவானுராக:' 'ரக்ஷோபகாரம்' என்பதற்கு ரக்ஷையாகிற உபகாரம் என்றும் ராக்ஷஸர்களுக்கு அபகாரம் என்றும் அர்த்தமுண்டு. ஸ்ரீ ராமரானவர் ஜகத்தில் ராக்ஷஸர்களுக்கு உபத்ரவத்தை எப்போதும் செய்தவராகையால் ''ஜகத்யாம் ரக்ஷோபகாரம் அனிஶம் ஜனயன்'' என்று சொல்லப்பட்டது.

2. மேலே வந்த பதங்களெல்லாம் அம்பிகையின் கடாக்ஷத்திற்கும் பொருந்துமாகையால் அதை ஸ்ரீ ராமருக்கு ஸமமாகச் சொல்லப்பட்டது.

(18) ஹே! காமாக்ஷி! உன்னுடைய கருணா கடாக்ஷமானது ஸ்ரீ ராமனைப்போல், வளைந்த உனது புருவங்களாகிற வில்லினால் விளங்குகிறதாயும், ஆச்ரயித்தவனான மன்மதனிடம் (வைதேஹியிடம்) ஆசையுள்ளதாயும், உலகில் எப்போதும் ரக்ஷணமென்கிற உபகாரம் (ராக்ஷஸ அபகாரம்) செய்துவருவதாயும் விளங்குகிறது.

श्रीकामकोटि शिवलोचनशोषितस्य
शृङ्गारबीजविभवस्य पुनः प्ररोहे।
प्रेमाम्भसार्द्रमचिरात्प्रचुरेण शङ्के
केदारमम्ब तव केवलदृष्टिपातम्।।१९।।

ஸ்ரீ காமகோடி சிவலோசன ஶோஷிதஸ்ய
ஶ்ருங்கார பீஜ விபவஸ்ய புன: ப்ரரோஹே।
ப்ரேமாம்பஸார்த்ரம் அசிராத் ப்ரசுரேண ஶங்கே
கேதாரம் அம்ப தவ கேவல த்ருஷ்டிபாதம்॥19॥

ஸ்ரீ காமகோடி அம்ப!	*ஹே காமகோடீ! தாயே!*
தவகேவல த்ருஷ்டிபாதம்	*உன்னுடைய அஸாதாரணமான கடாக்ஷமானது*
சிவலோசன ஶோஷிதஸ்ய	*பரமசிவனுடைய நேத்ராக்னி-யால் கருகிப்போன*
ஶ்ருங்கார பீஜ விபவஸ்ய	*ச்ருங்கார ரஸத்தின் உயர்ந்ததான பீஜத்திற்கு*
புன: ப்ரரோஹே	*திரும்பவும் செழுமையாய் வளர்வதற்கு*
அசிராத்	*உடனேயே*
ப்ரசுரேண ப்ரேமாம்பஸா	*அதிகமான ப்ரேமையாகிற ஜலத்தினால்*
ஆர்த்ரம்	*நனைந்ததான*
கேதாரம்	*வயலாக*
ஶங்கே	*நினைக்கிறேன்.*

இதில் பரமசிவனுடைய நேத்ராக்னியால் எரிக்கப்பட்ட மன்மதனைப் பிழைப்பு மூட்டிய அம்பிகையின் கருணா கடாக்ஷத்தை வர்ணிக்கப்பட்டது. மன்மதனை ச்ருங்கார ரஸத்தின் பீஜச்ரேஷ்டமாகச் சொல்லப்பட்ட அந்த பீஜமானது பரமசிவனுடைய நேத்ராக்னியினால் கருகிப்போய் விட்டது. அப்படி இருந்தும் அது அம்பிகையின் கடாக்ஷமாகிற வயலில் மிகவும் செழுமையாய் வளருகிறது. இதற்குக் காரணம்

அந்தவயலானது கருணையென்ற ரஸம் நிறைந்ததாயிருப்பதினால் கருகிப்போனவரையும் முளைத்துவிடக்கூடியதாயிருக்கிறது.

(19) ஹே! அம்பிகே! ஸ்ரீ காம கோடியே! உன்னுடைய அஸாதரமான கடாக்ஷத்தை பரமசிவனுடைய நேத்ராகினியால் கருகிப்போன, சிருங்கார ரஸத்தின் உயர்ந்ததான விதைக்கு, மறுபடியும் உயிர் கொடுத்துச் செழுமையாய் உடனே வளரச்செய்வதற்காக, பிரேமையாகிற ஜலத்தால் நிறைந்த ஒரு வயலை போல் நான் நினைக்கிறேன்.

माहात्म्यशेवधिरसौ तव दुर्विलंघ्य
संसारविन्ध्यगिरि कुण्टनकेलिचुञ्चुः।
धैर्याम्बुधिं पशुपतेश्चुलकीकरोति
कामाक्षि वीक्षणविजृम्भणकुम्भजन्मा।।२०।।

மாஹாத்ம்ய ஶேவதிரஸௌ தவ துர்விலங்க்ய
ஸம்ஸார விந்த்ய கிரி குண்டன கேலி சுஞ்சு:।
தைர்யாம்புதிம் பஶுபதேஶ்சுலகீ கரோதி
காமாக்ஷி வீக்ஷண விஜ்ரும்பணகும்பஜன்மா।।20।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
மாஹாத்ம்ய ஶேவதி:	மாஹாத்ம்யம் நிறைந்ததான
அஸௌ தவ	இந்த உன்னுடைய
வீக்ஷண விஜ்ரும்பண	பார்வையின் ஆவிர்பவமாகிற
கும்பஜன்மா	அகஸ்த்யரானவர்
துர்விலங்க்ய	தாண்டுவதற்கரிதான
ஸம்ஸாரவிந்த்யகிரி	ஸம்ஸாரமாகிற விந்த்யபர்வதத்தை

குண்டன கேலி சுஞ்சு	அடக்குவதான விளையாட்டில் பெயர் பெற்றவராய்
பஶுபதே:	பரமசிவனுடைய
தைர்யாம்புதிம்	மனவுறுதியாகிற ஸமுத்ரத்தை
சுலகீ கரோதி	உள்ளங்கையளவாகச் செய்துவிடுகிறார்.

1. இதில், அம்பிகையின் கடாக்ஷத்தை அகஸ்த்யருக்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. கும்பத்திலிருந்து உண்டானதால் அகஸ்த்யருக்குக் கும்பஜன்மா என்று பெயர். பரமசிவன் பார்வதியைக் கல்யாணம் செய்து கொள்ளும் போது அதைப்பார்க்க லோகத்தார்களெல்லாம் ஹிமாசலத்திற்கு வந்தவுடன் அது தாழ்ந்து தெற்கு ப்ரதேசமானது எக்கலடித்து மேலே வரவும், பரமசிவன் பூமியை ஸமமாக்குவற்காக அகஸ்த்யரை தெற்கே போயிருக்கச்சொன்னார். அப்படியவர் தெற்கே வந்து கொண்டிருக்கையில் விந்த்யபர்வதமானது வளர்ந்து வழியை மறைத்துக் கொண்டிருந்தது. அவர் அதினுடைய கர்வத்தையடக்கி முன்போலிருக்கச் செய்தார். பிறகு ஒரு ஸமயம் ஸப்த ஸமுத்ரங்களையும் தன் உள்ளங்கையளவு தீர்க்ககமாகச் செய்து பானம் பண்ணினதாகவும் ஒரு வ்ருத்தாந்தம் உண்டு. அவர் இவ்வளவு மஹிமையுள்ளவராகையால் அவரை 'மஹாத்ம்யஶேவதி:' என்று இங்கு சொல்லப்பட்டது.

(2) இவ்விதமான லீலைகள் அம்பிகையின் கடாக்ஷத்தினாலும் செய்யப்பட்டதாக இங்கு வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

(20) ஹே காமாக்ஷி! மாஹாத்ம்யம் நிறைந்த உனது கடாக்ஷ ஆவிர்ப்பாவமென்கிற அகஸ்த்திய முனிவர், தாண்ட முடியாததான ஸம்ஸாரமாகிற விந்த்ய பர்வதத்தை அடக்கும் விளையாட்டில் ஸாமர்த்திய முள்ளவராகி பசுபதியான பகவானுடைய தைர்யமென்கிற ஸமுத்ரத் தை உள்ளங்கையளவாகாச் செய்து விடுகிறார்.

पीयूषवर्षशिशिरास्फुटदुत्पलश्री
मैत्री निसर्गमधुरा कृततारकाप्तिः।
कामाक्षिसंश्रितवती वपुरष्टमूर्तेः
ज्योत्स्नायते भगवति त्वदपाङ्गमाला।।२१।।

பீயூஷ வர்ஷ ஶிஶிரா ஸ்புடத் உத்பலஶ்ரீ
மைத்ரீ நிஸர்க மதுரா க்ருத தாரகாப்தி:।
காமாக்ஷி ஸம்ச்ரிதவதீ வபுரஷ்டமூர்த்தே:
ஜ்யோத்ஸ்னாயதே பகவதி த்வத் அபாங்கமாலா।।21।।

காமாக்ஷி, பகவதி	ஹே காமாக்ஷி! ஹே பகவதி!
த்வத் அபாங்கமாலா	உன்னுடைய கடாக்ஷத்தின் வரிசையானது
பீயூஷவர்ஷி ஶிஶிரா	அம்ருதவர்ஷத்தினால் குளிர்ச்சியுள்ளதாயும்
ஸ்புடத்	மலர்கிற
உத்பலஶ்ரீ மைத்ரீ	கருநெய்தல் புஷ்பத்தின் அழகுக்கு ஸ்நேஹபாவமுள்ளதாயும்
நிஸர்க மதுரா	இயற்கையாகவே இனிமியானதாயும்
க்ருததாரகாப்தி:	நக்ஷத்ரமண்டலத்தை அளாவினதாயும்

அஷ்டமூர்த்தே: வபு:	பரமசிவனுடைய சரீரத்தை
ஸம்ஸ்ப்ரிதவதீ	அடைந்ததாயும்
ஜ்யோத்ஸ்னாயதே	நிலவைப்போலிருக்கிறது

1. இதில் அம்பிகை கடாக்ஷ பரம்பரையை நிலவொளிக்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. சந்த்ரனுடைய கிரணங்கள் அம்ருதவர்ஷம் போல் குளிரச் செய்வதாகச் சொல்லப்படும். புன்சிரிப்பை நிலவாக வர்ணிக்கும்போது வெண்ணிறமாகச் சொல்வது வழக்கமாயிருக்கையில், கடாக்ஷத்திலிருந்து வருவதாகச் சொல்லப்படும் நிலவானது நீல(சற்று கருமை) நிறமுடையதாக வர்ணிக்கப்படும். பரமசிவன் சந்த்ரனை சிரோபூஷணமாக தரித்திருப்பதால் அதின் கிரணங்கள் அவரை அடைவதாகச் சொல்லபடும். அதேமாதிரி அம்பிகையின் பார்வையானது எப்போதும் தன் பதியாகிய பரமசிவனிடமே இருப்பதால் அவ்விதப்பார்வையின் நிலவானது அவரையே அடைவதாகச் சொல்லப்பட்டது.

2. தாரகா என்ற பதமானது நக்ஷத்ரத்தை குறிப்பதுடன் கண்ணின் கருவிழியையும் குறிக்கும். சந்த்ரனின் நிலவானது ஆகாசத்திலுள்ள நக்ஷத்ரங்களை வியாபிக்கையில் கடாக்ஷ நிலவானது கண்விழியை வியாபித்திருப்பதால் இரண்டையும் 'க்ருத தாரகாப்தி:' என்று வர்ணிக்கப்பட்டது.

(21) பகவதியான ஹே காமாக்ஷி! உன்னுடைய கடாக்ஷ வரிசையானது, நிலாவைப்போல், அமிர்தவர்ஷத்தினால் குளிர்ச்சியுள்ளதாயும், மலருகிற நீலோத்பலபுஷ்பத்தின் சோபைக்கு ஸ்நேஹமுள்ளதாயும், இயற்கையாகவே இனிமையானதாயும், நக்ஷத்திரமண்டலத்தை

அளாவினதாயும், அஷ்டமூர்த்தியான பரமசிவனுடைய சரீரத்தை அடைந்ததாகவும் விளங்குகிறது.

अम्ब स्मरप्रतिभटस्यवपुर्मनोज्ञम्
अम्भोजकाननमिवाञ्चितकण्टकाभम्।
भृङ्गीव चुम्बति सदैवसपक्षपाता
कामाक्षि कोमलरुचिस्त्वदपाङ्गमाला।।२२।।

அம்ப ஸ்மர ப்ரதிபடஸ்ய வபுர் மனோக்ஞம்
அம்போஜ கானனம் இவாஞ்சித கண்டகாபம்।
ப்ருங்கீவ சும்பதி ஸதைவ ஸபக்ஷபாதா
காமாக்ஷி கோமலருசிஸ் த்வத் அபாங்கமாலா।।22।।

அம்ப, காமாக்ஷி	*தாயே! காமாக்ஷி!*
கோமலருசி:	*கண்களுக்கினிமையான காந்தியோடு கூடிய*
த்வத் அபாங்கமாலா	*உனது கடாக்ஷங்களின் வரிசையானது*
அம்போஜ கானனமிவ	*தாமரஸபுஷ்பங்களின் வனம்போல்*
அஞ்சித கண்டகாபம்	*மயிர்க்கூச்சலின் அழகோடு கூடியதும்*
மனோக்ஞம்	*மனதை கவருகிறதுமான*
ஸ்மர ப்ரதிபடஸ்ய	*(மன்மதனை யெதிர்த்து யுத்தம் செய்தவரான) பரமசிவனுடைய*
வபு:	*சரீரத்தை*
ப்ருங்கீவ	*வண்டுபோல்*
ஸதைவ	*எப்போதும்*
ஸபக்ஷபாதா	*விசேஷமான ஆசையுடையதாய்*

சும்பதி (முத்தம் கொடுப்பதுமாதிரி) மேலே பட்டுக் கொண்டிருக்கிறது

இதில் அம்பிகையின் கடாக்ஷமாலையை ஒரு வண்டு போலவும் பரமசிவனுடைய சரீரத்தை அந்த வண்டு சுற்றிக் கொண்டிருக்கும் தாமரை வனமாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தாமரைப் புஷ்பத்தின் தண்டானது முள்ளுடனிருக்கிறாற்போல் பரமசிவனுடைய சரீரமானது புளகாங்கிதமாய் மயி கூச்சலோடிருப்பதால் அதை 'அம்போஜகானனம் அஞ்சிதகண்டகாபம்' என்று சொல்லப்பட்டது. இதே மாதிரி பரமசிவனுடைய ஆலிங்கனத்தால் மயிர்க் கூச்சலோடு கூடிய அம்பிகையின் கழுத்தை அவனுடைய முகமாகிற தாமரஸ புஷ்பத்திற்குக் காம்பு போல் இருப்பதாக ஸ்ரீ மதாசார்யாள் 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

'புஜாச்லேஷான்னித்யம் புரதமயிது: கண்டகவதீ
தவ க்ரீவா தத்தே முககமல நாளஶ்ரியமியம்'

இங்கு பரமசிவனுடைய சரீரம் முழுவதையும் அவ்வாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

(22) தாயே! காமாக்ஷி! கண்ணுக்கு இனிமையான தேஜஸ்ஸுடன் கூடிய உனது கடாக்ஷவரிசையானது, தாமரைப் புஷ்பங்களின் வனம்போல், மயிர்கூச்சலின் அழகோடு கூடியதும், மன்மதனுக்கு எதிரியான பரமசிவனுடைய அழகிய சரீரத்தை வண்டுபோல் எப்போதும் விசேஷ ஆசையுடன் முத்தமிடுவது போலிருக்கிறது.

केशप्रभापटलनीलवितानजाले
कामाक्षिकुण्डलमणिच्छविदीपशोभे।

कम्प्रे कटाक्षरुचिरङ्गतले कृपाख्या
शैलूषकी नटते शङ्करवल्लभेते।।२३।।

கேஶப்ரபாபடல நீல விதானஜாலே
காமாக்ஷி குண்டலமணிச்சவி தீபஶோபே।
கம்ரே கடாக்ஷருசிரங்கதலே க்ருபாக்யா
ஶைலூஷகீ நடதி சங்கரவல்லபேதே।।23।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
ஶங்கர வல்லபே	*பரமசிவனுடைய பத்னியே!*
கேஶப்ரபாபடல	*கூந்தலின் காந்தியினுடைய வரிசையாகிற*
நீலவிதானஜாலே	*கருத்ததான அகமானகிரியோடு கூடியதும்*
குண்டல மணிச்சவி	*காதின் குண்டலங்களிலுள்ள ரத்னங்களில் காந்தியாகிற*
தீபஶோபே	*தீபங்களால் ப்ரகாசமுடையதும்*
கம்ரே	*மிகவும் அழகானதுமான*
கடாக்ஷ ருசிரங்கதலே	*உனது கடாக்ஷத்தின் காந்தியாகிற நாடகமேடையில்*
க்ருபாக்யா	*க்ருபையென்கிற*
ஶைலூஷகீ	*நடிகையானவள்*
நடதி	*ஆடிக்கொண்டிருக்கிறாள்*

இதில் அம்பிகையின் கடாக்ஷகாந்தியை ரங்கஸ்தலமாகவும், அம்பிகையின் கருணையானது அதில் நடிக்கும் நடிகையாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது, அதாவது, அம்பிகையின் கடாக்ஷமானது மிகுதியான கருணையோடு கூடியது என்பது தாத்பர்யம்.

(23) சங்கரபத்நியான ஹே காமாக்ஷி! உனது கிருபையாகிற நடிகையானவள், உனது தலைமயிர்காந்தி ஸமூஹமாகிற கருப்பு அகமானகிரியுடன் கூடியதும், உனது காது குண்டலமணியின் காந்தியாகிற தீபத்தினால் விளங்குவதுமான, உனது கடாக்ஷமாகிற நாடக மேடையில் நர்த்தனம் செய்துகொண்டிருக்கிறாள்.

अत्यन्तशीतलमतन्द्रयतु क्षणार्धम्
अस्तोकविभ्रममनङ्गविलासकन्दम्।
अल्पस्मितादृतमपारकृपाप्रवाहम्
अक्षिप्ररोहमचिरान्मयिकामकोटि।।२४।।

அத்யந்த ஶீதலம் அதந்த்ரயது க்ஷணார்த்தம்
அஸ்தோகவிப்ரமம் அனங்கவிலாஸகந்தம்।
அல்ப ஸ்மிதாத்ருதம் அபாரக்ருபா ப்ரவாஹம்
அக்ஷிப்ரரோஹம் அசிரான்மயிகாமகோடி।।24।।

காமகோடி	காமகோடி ஸ்வரூபிணியான ஹே காமாக்ஷி!
அத்யந்த ஶீதலம்	மிகவும் குளிர்ச்சியானதும்
அஸ்தோக விப்ரமம்	மிகுந்த அழகுள்ளதும்
அனங்கவிலாஸகந்தம்	மன்மதனுடைய விலாஸத்திற்குக் காரணமானதும்
அல்பஸ்மிதாத்ருதம்	கொஞ்சம் சிரிப்போடு (புன்சிரிப்போடு) கூடியதும்
அபாரக்ருபாப்ரவாஹம்	கரையில்லாத கருணாப்ரவா-ஹத்தையுடையதுமான
அக்ஷிப்ரோரஹம்	உனது கடாக்ஷமானது

அசிராத்	சீக்ரத்தில்
மயி	என்னிடம்
க்ஷணார்த்தம்	அரைக்ஷணமாவது
அதந்த்ரயது	இருந்து களைப்பாராட்டும்

(24) காமகோடி ஸ்வரூபினியான ஹே காமாக்ஷி! மிகவும் குளிர்ச்சியானதும், அதிக அழகுள்ளதும், மன்மத விலாஸத்திற்குக் காரணமானதும், மந்தஸ்மிதத் தோடு கூடியதும், கரையில்லாத கருணாபிரவாஹத்தை யுடையதுமான உனது கடாக்ஷமானது, சீக்கிரத்தில் என்னிடம் வந்து அரைக்ஷண காலமாகது தங்கிகளைப் பாராட்டும்.

मन्दाक्षरागतरलीकृतिपारतन्त्र्यात्–
कामाक्षि मन्थरतरां त्वदपाङ्गदोलाम्।
आरुह्यमन्दमतिकौतुकशालि चक्षुः
आनन्दमेति मुहुरर्धशशाङ्कमौलेः।।२५।।

மந்தாக்ஷ ராக தரலீக்ருதி பாரதந்த்ர்யாத்
காமாக்ஷி மந்தரதராம் த்வத் அபாங்கதோலாம்।
ஆருஹ்ய மந்தம் அதிகௌதுகஶாலி சக்ஷு:
ஆனந்தமேதிமுஹு: அர்தஶஶாங்க மௌளே:।।25।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
மந்தாக்ஷ ராக	உனது கடாக்ஷத்தின் அழகினால்
தரலீக்ருதி பாரதந்த்ர்யாத்	தரளமான நிலையை அடைந்து பரவசப்பட்டிருப்பதினால்
அதிகௌதுகஶாலி	அதிகமான உத்ஸாஹத்தோடு விளங்கும்
அர்தஶஶாங்கமௌளே:	அர்த்த சந்திரனை சிரஸில் தரித்திருக்கும் பரமசிவனுடைய

சக்ஷுஃ:	கண்ணானது (பார்வையானது)
மந்தரதராம்	மிகவும் மெதுவாக ஆடிக்கொண்டிருக்கும்
த்வத் அபாங்க தோலாம்	உனது கடாக்ஷமாகிற ஊஞ்சலில்
மந்தம் ஆருஹ்ய	மெதுவாக ஏறிக்கொண்டு
முஹுஃ:	ஆனந்தம்
ஏதி	அடிக்கடி (இடைவிடாமல்) ஆனந்தத்தை அடைகிறது

இதில் அம்பிகையினுடைய கடாக்ஷத்தை ஒரு ஊஞ்சலாகவும், அதின்மீது பரமசிவனுடைய பார்வையானது இருந்து ஆடிக்கொண்டிருப்பதாகவும் வர்ணிக்கப்பட்டது. இப்படி அம்பிகையின் கடாக்ஷத்தில் ஈடுபட்ட பார்வையோடு பரமசிவன் இருப்பதாகச் சொல்லியதினால் அவர்களுக்குள் பரஸ்பரமிருக்கும் ப்ரேமாதிசயமானது எடுத்துக் காட்டப்பட்டது.

(25) காமாக்ஷி! அர்த்த சந்திரசேகரனான பரமசிவனுடைய கண்ணானது அதிஸந்தோஷத்துடன் உனது கடாக்ஷமாகிற ஊஞ்சலில் மெதுவாக ஏறிக் கொண்டு இடைவிடாத ஆனந்த மடைகிறது. அந்த கடாக்ஷ ஊஞ்சல் எப்படி யிருக்கிறதென்றால் லஜ்ஜையாலும் அனுராகத்தினாலும் பரவசமாக சஞ்சலமாக்கப்பட்டிருப்பதால் மெதுவாக அசைந்து கொண்டிருக்கிறது.

त्रैयम्बकं त्रिपुरसुन्दरि हर्म्यभूमिः
अङ्गं विहारसरसी करुणाप्रवाहः।
दासाश्च वासवमुखाः परिपालनीयं
कामाक्षि विश्वमपि वीक्षणभूभृतस्ते।।२६।।

த்ரையம்பகம் த்ரிபுரஸுந்தரி ஹர்ம்யபூமி:
அங்கம் விஹாரஸரஸீ கருணாப்ரவாஹ:।
தாஸாஶ்ச வாஸவமுகா: பரிபாலனீயம்
காமாக்ஷி விஶ்வமபி வீக்ஷண பூப்ருதஸ்தே॥26॥

த்ரிபுரஸுந்தரி காமாக்ஷி	ஹே த்ரிபுரஸுந்தரி! ஹே காமாக்ஷி
தே வீக்ஷண பூப்ருத:	உனது பார்வையாகிற ராஜாவுக்கு
த்ரையம்பகம் அங்கம்	பரமசிவனுடைய சரீரமானது
ஹர்ம்யபூமி:	அரண்மனையாகவும்
கர்ணாப்ரவாஹ:	உனது கருணையாகிற ப்ரவாஹமானது
விஹார ஸரஸீ	விளையாடும் குளமாகவும்
வாஸவமுகா:	இந்திரன் முதலான தேவர்கள்
தாஸாஶ்ச	வேலைக்காரர்களாகவும்
விஶ்வம் அபி	உலகம் முழுவதுமே
பரிபாலனீயம்	ஆளுகைக்குட்பட்டதான ராஜ்யமாகவும். (இருக்கிறது)

(26) த்ரிபுரஸுந்தரி! ஹே காமாக்ஷி! உனது கடாக்ஷமாகிற அரசனுக்கு பரமசிவனுடைய சரீரம் அரண்மனை யாகவும், உனது கருணையாகிற பிரவாஹமானது, விளையாடும் குளமாகவும், இந்திரன் முதலான தேவர்கள் வேலைக்காரர்களாகவும், உலகம் முழுவதும் ஆளுகைக்குட்பட்ட ராஜ்யமாகவும் இருக்கிறது.

वागीश्वरी सहचरी नियमेन लक्ष्मी:
भ्रूवल्लरीवशकरी भुवनानि गेहम्।

रूपं त्रिलोकनयनामृतम् अम्ब तेषां
कामाक्षि येषु तव वीक्षणपारतन्त्री ॥२७॥

வாகீஶ்வரீ ஸஹசரீ நியமேந லக்ஷ்மீ:
ப்ரூவல்லரீ வஶகரீ புவனானி கேஹம்।
ரூபம் த்ரிலோக நயனாம்ருதம் அம்ப தேஷாம்
காமாக்ஷி யேஷு தவ வீக்ஷண பாரதந்த்ரீ॥27॥

அம்ப காமாக்ஷி	*தாயே! காமாக்ஷி!*
யேஷு	*எவர்களிடத்தில்*
தவ வீக்ஷண பாரதந்த்ரீ	*உனது பார்வைக்கு வசப்படுவ-தானது (பார்வையானது) ஏற்படுகிறதோ*
தேஷாம்	*அவர்களுக்கு*
நியமேன	*கட்டாயம்*
வாகீஶ்வரீ	*வாக்குக்கு ஈச்வரியான ஸரஸ்வதியானவள்*
ஸஹசரீ	*தோழியாக ஆகிறாள்*
லக்ஷ்மீ:	*லக்ஷ்மிதேவியானவள்*
ப்ரூவல்லரீ வஶகரீ	*கண்ஜாடையை அனுசரித்து நடப்பவளாக ஆகிறாள்*
புவனானி	*சதுர்தச புவனங்களும்*
கேஹம்	*வீடாகவும்*
ரூபம்	*ரூபமானது*
த்ரிலோகநயன அம்ருதம்	*மூன்று லோகங்களிலிருப்-பவர்களுடைய கண்களுக்கு அம்ருதமாகவும் ஏற்படுகிறது*

1. இதில் அம்பிகையின் கடாக்ஷமானது கிடைக்கப் பெற்றவனுக்கு ஏற்படும் பாக்யாதிசயமானது வர்ணிக்கப்பட்டது. அம்பிகையின் பக்தனுக்கு மேன்மையான வாக்கும் அதிகமாக ஸம்பத்தும், மனோஹரமான ரூபமும் இம்மாதிரி ஏற்படுவதைப் பற்றி ஸ்ரீமதாசார்யாள்.

'ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதி ஹரி ஸபத்னோ விஜயதே
ரதே: பாதிவ்ரத்யம் ஶிதிலயதி ரம்யேண வபுஷா'

என்பதாக வர்ணித்திருக்கிறார்கள்.

2. புருவத்தைக் கொடிக்கு ஸமானமாக வர்ணிப்பது வழக்கமாகையால் ப்ரூவல்லரீ, ப்ரூலதா என்ற பதங்கள் ஏற்படுகின்றன.

(27) அம்பிகே! காமாக்ஷி! உனது கடாக்ஷமானது எவர்களிடம் ஏற்படுகிறதோ, அவர்களுக்கு ஸரஸ்வதீ தோழியாகிறாள். மஹாலக்ஷ்மியானவள் கண் ஜாடையை அனுஸரித்து நடப்பவளாக அவர்களுக்கு வசப்படுகிறாள். பதிநான்கு உலகமும் அவர்களுக்கு வீடாகிறது. அவர்களுடைய ரூபமானது மூன்று லோகங்களிருப்ப வர்களுடைய கண்களுக்கு அம்ருதமாகவும் ஏற்படுகிறது.

माहेश्वरं झटिति मानसमीनमम्ब
कामाक्षि धैर्यजलधौ नितरां निमग्नम्।
जालेन शृङ्खलयति त्वदपाङ्गनाम्ना
विस्तारितेन विषमायुधदाशकोऽसौ।।२८।।

மாஹேஶ்வரம் ஜடிதி மானஸமீனமம்ப
காமாக்ஷி தைர்யஜலதௌ நிதராம் நிமக்னம்।
ஜாலேன ச்ருங்கலயதி த்வதபாங்க நாம்னா
விஸ்தாரிதேன விஷமாயுத தாஶகோऽஸௌ।।28।।

அம்ப காமாக்ஷி	தாயே! காமாக்ஷி!
தைர்ய ஜலதௌ	தைர்யமாகிற ஸமுத்ரத்தில்
நிதராம் நிமக்னம்	மிகவும் முழுகியிருந்த
மாஹேஶ்வரம்	பரமசிவனுடைய
மானஸ மீனம்	மனதாகிற மீனை
அஸௌவிஷமாயுத தாஶக:	இந்த மன்மதனென்கிற செம்படவனானவன்
த்வத் அபாங்க நாம்னா	உனது கடாக்ஷமாகிற
விஸ்தாரிதேன ஜாலேன	வீசிப்போடப்பட்ட வலையினால்
ஜடிதி	சீக்கிரத்தில்
ஶ்ருங்கலயதி	கட்டிவிடுகிறான்

(28). அம்ப! காமாக்ஷி! மன்மதனென்கிற இந்த வேடனானவன் உனது கடாக்ஷமென்கிற வலையை விஸ்தரித்து, தைர்யமாகிற ஸமுத்ரத்தில் மூழ்கியிருக்கிற, மஹேச்வரனுடைய மனஸ்ஸான மீனை அந்த வலையில் மாட்டிவிடுகிறான்.

उन्मथ्य बोधकमलाकरमम्बजाड्य–
स्तम्बेरमं मम मनो विपिने भ्रमन्तम्।
कुण्ठीकुरुष्व तरसा कुटिलाग्रसीम्ना
कामाक्षि तावक कटाक्षमहाङ्कुशेन॥२९॥

உன்மத்ய போதகமலாகரம் அம்பஜாட்ய
ஸ்தம்பேரமம் மம மனோ விபினே ப்ரமந்தம்।
குண்டீகுருஷ்வ தரஸா குடிலாக்ரஸீம்னா
காமாக்ஷி தாவக கடாக்ஷ மஹாங்குஶேன॥29॥

அம்ப காமாக்ஷி	தாயே! காமாக்ஷி!
போத கமலாகரம்	எனது அறிவாகிற தாமரஸ புஷ்பத்தை
உன்மத்ய	நசுக்கிக்கொண்டு
மம மனோவிபினே	என்னுடைய மனதாகிற காட்டில்
ப்ரமந்தம்	அலைந்துகொண்டிருக்கும்
ஜாட்ய ஸ்தம்பேரமம்	அக்ஞானமாகிற யானையை
குடிலாக்ரஸீம்னா	வளைந்ததான நுனியையுடைய
தாவக கடாக்ஷ மஹாங்குசேன	உனது கடாக்ஷமாகிற ச்ரேஷ்டமான அங்குசத்தினால்
தரஸா	சீக்கிரமாக
குண்டீகுருஷ்வ	அடக்கிவிடு.

1. காட்டுயானைகள் காடுகளிலுள்ள தடாகங்களில் இறங்கி அங்கிருக்கும் தாமரஸ புஷ்பங்களை மிதித்துக் கொண்டு அலைந்து திரிவதாக வர்ணிக்கப்படுவது வழக்கம்.

2. கடாக்ஷமென்பது கோணலான பார்வையானதாகவும், கண்டாக்கோடாலியானது நுனியில் வளைந்திருக் குமாகையாலும் இரண்டையும் 'குடிலாக்ர ஸீம்னா' என்று வர்ணிக்கப்பட்டது.

3. யானைகளைக்கட்டும் மரத்திற்கு ஸ்தம்பமென்று பெயர். அதில் கட்டியிருந்தும் யானையானது ஆடிக் கொண்டிருக்குமாகையால் அதற்கு 'ஸ்தம்பே ரம:' என்று பெயர்.

(29) தாயே! காமாக்ஷி! உன்னுடைய கடாக்ஷமாகிற, கூறுள்ள நுனியையுடைய அங்குசாயுதத்தினால் எனது அஜ்ஞானமாகிற யானையை அடக்குவாயாக. அந்த யானையானது அறிவாகிற தாமரைப்பூவை நசுக்கி எனது மனதாகிற காட்டில் திரிந்து கொண்டிருக்கிறது.

उद्वेल्लितस्तबकितैर्ललितैर्विलासैः –
उत्थाय देवि तव गाढकटाक्षकुञ्जात्।
दूरं पलाययतु मोहमृगीकुलं मे
कामाक्षि सत्वरमनुग्रह केसरीन्द्रः।।३०।।

உத்வேல்லித ஸ்தபகிதைர் லலிதைர் விலாஸை:
உத்தாய தேவி தவ காட கடாக்ஷகுஞ்ஜாத்।
தூரம் பலாயயது மோஹ ம்ருகீகுலம் மே
காமாக்ஷி ஸத்வரம் அனுக்ரஹ கேஸரீந்த்ர:।।30।।

தேவி! காமாக்ஷி!	*ஹே தேவி! காமாக்ஷி!*
அனுக்ரஹ கேஸரீந்த்ர:	*உனது அனுக்ரஹமாகிற ஸிம்ஹேந்திரமானது*
உத்வேல்லித ஸ்தபகிதை:	*பிடரிமயிர்களை உதருவதான*
லலிதை: - விலாஸை:	*அழகான சேஷ்டையோடு*
தவ காட கடாக்ஷகுஞ்ஜாத்	*உனது கடாக்ஷமாகிற அடர்ந்த புதரிலிருந்து*
உத்தாய	*வெளிக்கிளம்பி*
மே மோஹ ம்ருகீகுலம்	*என்னுடைய மோஹமாகிற (அக்ஞானமாகிற) மான்கூட்டத்தை*
ஸத்வரம்	*வேகத்தோடு*
தூரம் பலாயயது	*தூரத்தில் துரத்திவிடட்டும்.*

(30) தேவி! காமாக்ஷி உனது அநுக்ரஹமாகிற ஸிம்ஹமானது பிடரிரோமத்தை உதருவதாகிய அழகிய சேஷ்டையோடு உனது கடாக்ஷமாகிற அடர்ந்த புதரிலிருந்து வெளிக்கிளம்பி, என்னுடைய அக்ஞானமாகிற மான் கூட்டத்தை வேகத்துடன் தூரத்தில் விரட்டட்டும்.

स्नेहादृतां विदलितोत्पलकान्तिचोरां
जेतारमेव जगदीश्वरि जेतुकाम:।
मानोद्धतो मकरकेतुरसौ धुनीते
कामाक्षि तावककटाक्षकृपाणवल्लीम्॥३१॥

ஸ்னேஹாத்ருதாம் விதலிதோத்பல காந்தி சோராம்।
ஜேதாரமேவ ஜகதீஶ்வரி ஜேதுகாம:।
மானோத்ததோ மகரகேதுரஸௌ துனீதே
காமாக்ஷி தாவக கடாக்ஷக்ருபாணவல்லீம்॥31॥

ஜகதீஶ்வரி காமாக்ஷி	*ஹே ஜகதீச்வரி! ஹே காமாக்ஷி!*
மானோத்தத:	*மிகவும் மானியான*
அஸௌ மகரகேது:	*இந்த மன்மதனானவன்*
ஜேதாரமேவ ஜேதுகாம:	*தன்னை ஜயித்தவரான பரமசிவனையே திரும்பவும் ஜெயிக்க வேண்டுமென்ற ஆசை- யுடையவனாய்*
ஸ்னேகாத்ருதாம்	*எண்ணையினால் கூர்ப்புள்ளதாகச் செய்யப்பட்டதும்*
விதலிதோத்பல காந்தி சோராம்	*மலர்ந்த நீலோத்பலத்தின் காந்தியை அபகரிப்பது- மான*
தாவக கடாக்ஷ	*உனது கடாக்ஷமாகிற*

கடாக்ஷ க்ருபாணவல்லீம்	கத்தியை
துனீதே	சுழட்டி வீசுகிறான்

1\. பரமசிவன் தனக்கு வசப்படாமல் தன்னை ஜயித்து எரித்துவிட்டதினால் அவரிடம் பகைக்குப்பகை தீர்க்க வேண்டிமன்மதனுக்கு ஆசையிருப்பதாக சொல்லப்படும். இதை ஸ்ரீமதாசார்யாள் 'சிராத் அந்த: சல்யம்' தஹனக்ருதம் உன் மூலிதவதா!' என்பதாக 'ஸௌந்தர்ய லஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

2\. ஸ்னேஹமென்பது ப்ரியத்தைக் குறிப்பதுடன் என்னையையும் எண்ணையுடைய வஸ்துக்களையும் குறிக்கும்.

3\. கத்தியானது மெல்லியதாயும், நீண்டும், வளைக்கக் கூடியதாயுமிருப்பதால் அதை கொடிக்கு ஸமமாக வர்ணிப்பது வழக்கம்.

(31) ஜகதீச்வசரியான ஹே காமாக்ஷி! மிகவும் மானமுள்ளவனான இந்த மன்மதன் பரமசிவனை ஜயிக்கவேணுமென்ற ஆசையுள்ளவனாய், ஸ்நேஹத்தால் (எண்ணையால்) மிகவும் கூறாகச் செய்யப்பட்டதும், மலர்ந்த நீலோத்பல புஷ்பத்தின் காந்தியை அபஹரிப் பதுமான உனது கடாக்ஷமாகிற கத்தியைச் சுற்றி வீசுகிறாள்.

श्रौतीं व्रजन्नपि सदा सरणिं मुनीनां
कामाक्षि सन्ततमपि स्मृतिमार्गगामी।
कौटिल्यमम्ब कथमस्थिरतां च धत्ते
चौर्यम् च पङ्कजरुचां त्वदपाङ्गपातः।।३२।।

ஶ்ரௌதீம் வ்ரஜன்னபி ஸதாஸரணிம் முனீனாம்
காமாக்ஷி ஸந்ததமபி ஸ்ம்ருதி மார்க்க காமீ।
கௌடில்யம் அம்ப கதம் அஸ்திரதாம் ச தத்தே
சௌர்யம் ச பங்கஜருசாம் த்வத் அபாங்கபாத:॥32॥

காமாக்ஷி அம்ப	*ஹே காமாக்ஷி! தாயே!*
த்வத் அபாங்க பாத:	*உனது பார்வையானது*
ஸதா	*எப்பொழுதும்*
ஶ்ரௌதீம் ஸரணிம்	*ச்ருதிகளின் போக்கை (வழியை)*
வ்ரஜன் அபி	*அனுசரித்த போதிலும்*
ஸந்ததம்	*ஸதாகாலமும்*
முனீனாம் ஸ்ம்ருதிமார்க காமீ அபி	*முனிச்ரேஷ்டர்களுடைய மனதில் இருந்தபோதிலும்*
கௌடில்யம்	*குடில ஸ்வபாவத்தையும்*
அஸ்திரதாம்	*ஸ்திரமில்லாதிருத்தலையும்*
பங்கஜருசாம் சௌர்யம் ச	*தாமரஸ புஷ்பங்களின் காந்தியைத் திருடுவதையும்*
கதம் தத்தே	*எப்படி கைக்கொள்ளுகிறது?*

1. இதில் அம்பிகையின் கடாக்ஷமானது ச்ருதி, ஸ்ம்ருதிகளின் ஸம்பந்தத்தோடிருந்தும் கெடுதலான ஸ்வபாவத்தோடிருப்பதாக நிந்தாஸ்துதியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. உத்தம ஸ்திரீகளின் கண்கள் கர்ணாந்த விச்ராந்தமாக (காதுவரையில் நீண்டு) இருப்பதாகச் சொல்லப்படுவதால் அம்பிகையின் கடாக்ஷமானது காதுக்கு ஸமீபத்தில் செல்லுவதாக 'ச்ரௌதீம் ஸரணிம் ஸதா வ்ரஜன்' என்று சொல்லப்பட்டது.

2. ஸ்ம்ருதியென்றால் நினைவு, ஞாபகம் என்றும் அர்த்தம்.

3. ஆகவே அம்பிகையின் கடாக்ஷமானது (அம்பிகை யின் காதுகளுடைய) ச்ருதிகளுடைய மார்க்கத்திலும், (முனீச்வரர்களுடைய மனதுகளுடைய) ஸ்ம்ருதிகளு டைய மார்க்கத்திலும், போவதாக ஏற்படுகிறது. இப்படி உத்தமமான பழக்கமிருந்தும் அதற்கு கௌடில்யம் முதலான தோஷங்கள் எப்படி ஏற்பட்டனவென்று கவி ஆச்சர்யப்படுகிறார்.

4. கௌடில்யம் என்பது குடிலமான ஸ்வபாவம். நேராக (ஒழுங்காக) இருப்பதற்கு எதிரிடையானது. அம்பிகையின் கடைக்கண் பார்வையானது இங்கு வர்ணிக்கப்படுவதால் அதற்குக்கௌடில்யம் இருப்பதாகச் சொல் வது பொருத்தமாக இருக்கிறது. அது சஞ்சல ஸ்வபாவ முள்ளதாகையால் அதற்கு அன்திரதா (நிலையில்லா மலிருப்பது) உண்டென்று சொல்வதும் பொருத்தம். மேலும், தாமரஸ புஷ்பங்களின் காந்தியைத் தோற்கடித்த காந்தியோடிருப்பதால் அந்த காந்தியை அபகரிப்பதாகச் சொல்லி அதற்கு சௌர்யம் (திருட்டுத்தனம்) இருப்பதாகச் சொல்வதும் பொருத்தம்.

(32) ஹே! அம்ப! காமாக்ஷி! உனது கடாக்ஷபாதமானது எப்போதும் சுருதிகளின் வழியை அனுஸரிப்ப தாயிருந்தும், ரிஷிகளுடைய ஸம்ருதியாகிற மார்க்கத்தில் எப்போதும் இருந்தபோதிலும், ஏன் இந்த குடில ஸ்வபாவத்தையும், ஸ்திரமிலாத் தன்மையையும், தாமரை யையும், தாமரைப்பூவின் காந்தியைத் திருடும் 'ஸ்வபாவத்தையும், கைகொண்டிருக்கிறது?

नित्यं श्रुतेः परिचितौ यतमानमेव
नीलोत्पलं निजसमीप निवासलोलम्।

प्रित्यैव पाठयति वीक्षणदेशिकेन्द्रः
कामाक्षि किन्नु तव कालिमसंप्रदायम्।।३३।।

நித்யம் ஶ்ருதே: பரிசிதெள யதமானமேவ
நீலோத்பலம் நிஜஸமீப நிவாஸ லோலம்!
ப்ரீத்யைவ பாடயதி வீக்ஷண தேஶிகேந்த்ர:
காமாக்ஷி கிம் நு தவ காலிமஸம்ப்ரதாயம்।।33।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
தவ	*உனது*
வீக்ஷண தேஶிகேந்த்ர:	*பார்வையாகிற குருநாதனானவர்*
நித்யம்	*ஸதாகாலமும்*
ச்ருதே: பரிசிதெள	*ச்ருதியின் அப்யாஸத்தை (தெரிந்து கொள்வதை)*
யதமானம் ஏவ	*முயற்சித்துக்கொண்டே-யிருப்பதும்*
நிஜ ஸமீப நிவாஸ- லோலம்	*தன் ஸமீபத்திலிருப்பதற்கு ஆசைப்படுவதுமான நீலோத்பலம் (கருநெய்தல் புஷ்பத்தை)*
காலிமஸம்ப்ரதாயம்	*கல்மஷத்தின் தன்மையை*
ப்ரீத்யைவ	*ப்ரீதியோடு*
பாடயதி கிம் நு	*சொல்லிவைக்கிறாரா என்ன?*

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை குருவாகவும் நீலோத்பலத்தை அதின் சிஷ்யனாகவும் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. சிஷ்யன் குருவினிடமிருந்து வேதங்களை நித்யமும் அத்யயனம் செய்வானாகையால் 'நித்யம் ச்ருதே: பரிசிதெள யதமானம்' என்று சொல்லப்பட்டது. சிஷ்யன் குருவினுடைய ஸமீபத்திலேயே

இருந்துகொண்டு சுச்ரூஷை செய்வானாகையால் 'நிஜ ஸமீப நிவாஸலோலம்' என்றும் சொல்லப்பட்டது.

2. உத்தமஜாதி ஸ்திரீகள் காதில் நீலோத்பலம் முதலான புஷ்பங்களை அணிந்துகொள்வது வழக்கமாகையால் 'நித்யம் ச்ருதே: பரிசிதெள யதமானம்' என்பது நீலோத்பலத்துக்கும் பொருத்தமாக இருக்கிறது. அப்படியிருக்கையில் (உத்தம ஸ்திரிகளுடைய கண்கள் அவர்களுடைய காதுகள் வரையில் நீண்டிருப்பதாக வர்ணிக்கப்படுவதை அனுஸரித்து) அது கண்ணுக்கு ஸமீபமாயிருக்குமாகையால் 'நிஜ ஸமீப நிவாஸலோலம்' என்பதும் அதற்குப் பொருத்தமாக இருக்கிறது.

3. இவ்விதமான சிஷ்யனுக்கு குரு என்ன உபதேசம் செய்கிறானென்றால் அது 'காளிமஸம்ப்ரதாய'த்தைப் பற்றியது. காளிமமென்றால் கறுப்பாயிருப்பது. ஸ்திரீகளுடைய கடாக்ஷத்தை கறுப்பாகவும் கண்களை நீலோத்பலத்திற்கு ஸமானமாகவும் வர்ணிப்பது கவிகளுடைய ஸம்ப்ரதாயம்.

4. பாபத்தை கறுப்பாக வர்ணிப்பதும் கவிகளுடைய வழக்கம். ஆகவே 'காளிம ஸம்ப்ரதாய'த்தைப்பற்றி சொல்லிக் கொடுப்பதென்றால் பாபத்தை உபதேசிப்பது என்று அர்த்தமாகும், அவ்வித உபதேசத்தை எதற்காக இந்த கடாக்ஷகுரு (அதுவும் ப்ரீதியோடு) செய்கிறார் என்பதாகக் கவி ஆச்சரியப்படுகிறார்.

(33) ஹே! காமாக்ஷி! உனது கடாக்ஷமாகிற ஆசார்யன் எப்போதும் சுருதியின் பரிசயத்தில் முயற்சிப்பதாயும், தன் ஸமீபத்தில் வஸிக்க விரும்புவதுமான நீலோத்பல

புஷ்பத்திற்கு ப்ரீதியுடன் கருப்பாயிருக்கும் தன்மையான ஸம்பிரதாயத்தைச் சொல்லிவைக்கிறானா என்ன?

भ्रान्त्वामुहुः स्तबकितस्मितफेनराशौ
कामाक्षि वक्त्ररुचि सञ्चयवारिराशौ।
आनन्दति त्रिपुरमर्दन नेत्रलक्ष्मीः
आलम्ब्य देवि तव मन्दमपाङ्गसेतुम्।।३४।।

ப்ராந்த்வா முஹு: ஸ்தபகித ஸ்மிதபேனராஶௌ
காமாக்ஷி வக்த்ரருசி ஸஞ்சய வாரிராஶௌ!
ஆனந்ததி த்ரிபுரமர்தன நேத்ரலக்ஷ்மீ
ஆலம்ப்ய தேவி தவ மந்தமபாங்கஸேதும்।।34।।

தேவி காமாக்ஷி	ஹே தேவி! காமாக்ஷி!
த்ரிபுரமர்தன	பரமசிவனுடைய
நேத்ர லக்ஷ்மீ:	பார்வையானது
ஸ்தபகிதஸ்மித	அடுக்கடுக்கான உனது புன்சிரிப்புகளாகிற
பேனராசௌ	நுரைகள் நிறைந்த
வக்த்ர ருசி ஸஞ்சய	உனது முகத்தினுடைய காந்தியின் சேர்க்கையாகிற
வாரி ராஶௌ	ஸமுத்ரத்தில்
முஹு: ப்ராந்த்வா	அடிக்கடி சுழன்றுவிட்டு
தவ அபாங்கணேத்ரம்	உனது கடாக்ஷமாகிற அணையை (கரையை)
மந்தம்	மெதுவாக
ஆலம்ப்ய	அடைந்து
ஆனந்ததி	ஆனந்தப்படுகிறது

1. பரமசிவனுடைய பார்வையானது அம்பிகையின் முககாந்தியாகிற ஸமுத்திரத்தில் சுழன்று தத்தளித்து கடைசியாக கடாக்ஷமாகிற அணையையடைந்து கரையேறக் களித்துக் கொண்டிருப்பதாக இதில் வர்ணிக்கப்பட்டது. புன்சிரிப்பை வெளுப்பாக வர்ணிப்பது ஸம்ப்ரதாயமாகையால் அதை இங்கு அம்பாளுடைய முககாந்தியாகிற ஸமுத்திரத்தி லுண்டாகும் நுரையாக சொல்லப்பட்டது.

(34) ஹே தேவி! காமாக்ஷி! திரிபுர ஸம்ஹாரியான பரமசிவனுடைய நேத்ரலக்ஷ்மீயானவள், உனது புன்சிரிப்புக் கூட்டமாகிற நுரையுடன் கூடிய, உன் முககாந்தி ஸமுத்ரத்தில், உனது கடாக்ஷமாகிற அணையை மெதுவாக அவலம்பித்து கொண்டு, ஆனந்திக்கிறது.

श्यामा तव त्रिपुरसुन्दरि लोचनश्रीः
कामाक्षि कन्दलितमेदुर तारकान्तिः।
ज्योत्स्नावती स्मितरुचापि कथं तनोति
स्पर्धामहो कुवलयैश्च तथा चकोरैः।।३५।।

ஶ்யாமா தவ த்ரிபுரஸுந்தரி லோசனஶ்ரீ:
காமாக்ஷி கந்தலிதமேதுர தாரகாந்தி:।
ஜ்யோத்ஸ்னாவதீ ஸ்மிதருசாபி கதம் தனோதி
ஸ்பர்தாமஹோ குவலயைஶ்ச ததா சகோரை:।।

த்ரிபுரஸுந்தரீ காமாக்ஷி	ஹெ த்ரிபுரஸுந்தரீ! ஹே காமாக்ஷி!
ஶ்யாமா	கருப்பானதும்
கந்தலித மேதுர	மலர்ந்ததும் ம்ருதுவானதுமான
தார காந்தி:	கருவிழியின் காந்தியையுடைய

தவ லோசனஸ்ரீ:	உனது பார்வையானது
ஸ்மிதருசா	உன் புனிசிரிப்பின் காந்தியினால்
ஜ்யோத்ஸ்னாவதி அபி	நிலவோடு கூடியதாயிருந்தும்
குவலயைஸ்ச	கருநெய்தல் புஷ்பங்களோடும்
ததா	அதேமாதிரி
சகோரைச்ச	சகோர பக்ஷிகளோடும் கூட
ஸபர்தாம்	போட்டியை (சண்டையை)
கதம்தனோதி	ஏன்செய்கிறது ?
அஹோ!	ஆச்சர்யம்!

1. ஸ்யாமா என்ற பதமானது கறுப்பு நிறத்தைத் தவிர இரவையும் குறிக்கும்.

2. இங்கு அம்பிகையின் கடாக்ஷத்தை சந்த்ரனுக்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. தாரமென்ற பதமானது கண்ணின் கருவிழியைக் குறிப்பதுடன் நக்ஷத்திரத்தையும் குறிக்கும்.

3. சந்த்ரன் குவலயங்களை மலரச்செய்வதால் அவற்றிற்கு நன்பனாகச் சொல்லப்படுவான். சகோர பக்ஷிகள் நிலவையே பானம் பண்ணுகிற வையாகையால் அவற்றிற்கும் சந்த்ரன் நன்பனாகச் சொல்லப்படுவான். ஆகவே சந்த்ரனைப் போன்றதான அம்பிகையின் கடாக்ஷமானது குவலயங்களுடனும் நட்போடு இருக்க வேண்டியிருக்க அவற்றோடு பகை செய்ய வேண்டிய காரணமென்னவென்று கவியானவர் கேட்கிறார்.

4. உத்தம ஸ்திரீகளுடைய நேத்ரங்களுக்கு குவலயங்களை ஸமமாகச் சொல்வதுடன் சகோர பக்ஷிகளின்

நேத்ரங்களையும் ஒப்பிடுவது வழக்கம். ஆகவே அவற்றோடு போட்டி போடுவதாக அம்பிகையின் லோசனங்களைப்பற்றி இங்கு சொல்லப்பட்டது.

(35) த்ரிபுரஸுந்தரியான ஹே! காமாக்ஷி! கருத்ததும், மலர்ந்ததும், மிருதுவானதுமான கருவிழி காந்தியை உடைய உன்னுடைய கடாக்ஷ சோபையானது, உனது புன்சிரிப்பால் நிலாவுடன் கூடியதாயிருந்த போதிலும், குவலய புஷ்பத்தோடும் சகோர பக்ஷியோடும் ஏன் சண்டை செய்கிறது? இது ஆச்சர்யம்.

कालाञ्जनं च तव देवि निरीक्षणं च
कामाक्षि साम्यसरणिं समुपैति कान्त्या।
नि:शेषनेत्रसुलभं जगतीषु पूर्वम्
अन्यत्रिनेत्र सुलभं तुहिनाद्रिकन्ये।।३६।।

காலாஞ்ஜனம் ச தவதேவி நிரீக்ஷணம் ச
காமாக்ஷி ஸாம்யஸரணிம் ஸமுபைதி காந்த்யா।
நிஶ்ஶேஷ நேத்ர ஸுலபம் ஜகதீஷு பூர்வம்
அன்யத் த்ரிநேத்ர ஸுலபம் துஹினாத்ரி கன்யே।।36।।

தேவீ தேவீ! காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
துஹிநாத்ரிகன்யே	*ஹிமவானுடைய பெண்ணே!*
காலாஞ்ஜனம் ச	*கருப்புமையும்*
தவ நிரீக்ஷணம் ச	*உனது பார்வையும்*
காந்த்யா	*காந்தியினால் (காந்தியில்)*
ஸாம்ய ஸரணிம்	*ஸமமாயிருக்கும் தன்மையை*
ஸமுபைதி	*அடைந்திருக்கின்றன ஆயினும்*

பூர்வம்	முதலில் சொல்லப்பட்ட காலாஞ்ஜனமானது
ஜகதீஷு	லோகங்களில்
நிஸ்சேஷ நேத்ர ஸுலபம்	பரமசிவனுக்கு மாத்திரம் கிடைக்கக்கூடியதாயிருக்கிறது

1. கடாக்ஷமானது கருப்பாயிருப்பதாக வர்ணிப்பதான கவிகளின் ஸம்ப்ரதாயத்தை அனுசரித்து இங்கு அதை காலாஞ்ஜனத்திற்கு ஸமமாகச் சொல்லப்பட்டது. ஆயினும் அவையிரண்டிற்குமுள்ள ஒரு முக்யமான வித்யாஸமும் எடுத்துக்காட்டப்பட்டது. காலாஞ்ஜனமானது எல்லாருடைய கண்களிலும் இட்டுக் கொள்ளப்படுவதாகையால் அதை 'ஜகதீஷு' நிஸ்ஶேஷநேத்ர ஸுலபம்' என்று சொல்லப்பட்டது. இப்படி பிறர் யாருக்கும் ஸுலபமாயிருப்பதால் பரமசிவனுக்கு மட்டுமே கிடைக்கப் பெறுமாதலால் 'த்ரிநேத்ர ஸுலபம்', என்று சொல்லப்பட்டது. அம்பிகையின் கடாக்ஷமோ தன் பதியான பரமசிவனுக்கு மட்டுமே கிடைக்கப் பெறுமாதலால் 'த்ரிநேத்ர ஸுலபம், என்று சொல்லப்பட்டது. இப்படி பிறர் யாருக்கும் ஸுலபமாயில்லாமல் பரமசிவனுக்கு மட்டும் அம்பிகையின் கடாக்ஷமானது ஸுலபமாயிருப்பதால் அதற்குத்தனியான கௌரவம் இருக்கிறது. இதனால் அம்பிகைக்குத்தன் பதியிடமிருக்கும் ப்ரேமாதிசயமானது எடுத்துக் காட்டப்பட்டது.

(36) ஹிமவானுடைய பெண்ணாகிய ஹே தேவி! காமாக்ஷி கருப்பு மையும், உனது பார்வையும் காந்தியால் ஸமமாயிருக்கின்றன. ஆனால் முதலில் சொன்ன கருப்பு மையானது உலகில் எல்லோருடைய நேத்ரங்களுக்கும் ஸுலபமாய் கிடைக்கக் கூடியது. மற்றொன்றான உனது

கடாக்ஷமோவென்றால் முக்கண்ணனுடைய மூன்று கண்களுக்கு மட்டும் ஸுலபமானதென்று நினைக்கிறேன்.

धूमाङ्कुरो मकरकेतनपावकस्य
कामाक्षि नेत्ररुचिनीलिमचातुरी ते।
अत्यन्तं अद्भुतमिदं नयनत्रयस्य
हर्षोदयं जनयते हरिणाङ्कमौले:॥३७॥

தூமாங்குரோ மகரகேதன பாவகஸ்ய
காமாக்ஷி நேத்ரருசி நீலிம சாதுரீ தே।
அத்யந்தம் அத்புதம் இதம் நயனத்ரயஸ்ய
ஹர்ஷோதயம் ஜனயதே ஹரிணாங்க மௌலே:॥37॥

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
மகரகேதன பாவகஸ்ய	*மன்மதாக்னியின்*
தூமாங்குர:	*புகைக்கொடி போன்றதான*
தே	*உன்னுடைய*
நேத்ரருசி நீலிம சாதுரீ	*நேத்ர காந்தியின் கருப்பின் அழகானது*
ஹரிணாங்க மௌலே:	*சந்திரனை சிரஸில் தரித்த பரமசிவனுடைய*
நயனத்ரயஸ்ய	*மூன்று கண்களுக்கும்*
ஹர்ஷோதயம்	*ஆனந்தத்தின் புறப்பாட்டை*
ஜனயதே	*உண்டு பண்ணுகிறது*
இதம்	*இது*
அத்யந்தம் அத்புதம்	*மிகவும் ஆச்சரியம்!*

1. புகையானது கண்களுக்கு கஷ்டத்தை உண்டு பண்ணுவது ஸாமான்யமாகத் தெரிந்திருக்கையில் இங்கு

வர்ணிக்கப்பட்ட புகைக் கொடியானது பரமசிவனுடைய மூன்று நேத்ரங்களுக்கும் ஸந்தோஷத்தை உண்டு பண்ணுவதாகச் சொல்வது மிகுந்த ஆச்சர்யமல்லவா!

2. புகையும் கடாக்ஷமும் கருப்புநிறம். புகையானது நீண்டு மெல்லியதாய் மேலே போவதால் அவை கொடிக்கு ஸமமாகச் சொல்வது கவிகளின் வழக்கம்.

3. மன்மதனுடைய ரதமானது மீனக்கொடி யோடிருப்பதாகச் சொல்லப்படுவதால் அவனுக்கு மீனகேதனன், மகரகேதனன், மகரத்வஜன் என்பதான பெயர்களுண்டு.

4. அம்பிகையானவள் மன்மத சாஸ்திரத்தின் பரமதாத்பர்யமாக இருப்பதாக அடிக்கடி வர்ணித்திருப்பதை அனுஸரித்து இங்கு மன்மதாக்னியின் தூமாங்குரம் (புகைக்கொடி) போலிருப்பதாக வர்ணிக்கப்பட்டது.

5. ஹரிணமென்றால் மானுக்குப் பெயர். சந்த்ரனில் தோன்றும் கலங்கத்தை மானென்று சொல்வது கவிகளின் வழக்கம் ஆகவே சந்த்ரனுக்கு ஹரிணாங்கனென்று பெயர். அவனைப் பரமசிவன் தன்னுடைய மௌளியில் (சிரஸில்) தரித்திருப்பதால் அவருக்கு ஹரிணாங்க மௌளி என்று பெயர்.

(37) ஹே காமாக்ஷி! உனது கடாக்ஷ சோபையின் கருப்பு வர்ணமானது, மன்மதனாகிற நெருப்பின் புகை போலிருந்தும் கூட சந்திரசேகரனான பகவானுடைய மூன்று கண்களுக்கும் ஸந்தோஷத்தைக் கொடுக்கிற தென்பது மிகவும் அத்புதமாயிருக்கிறது.

आरम्भलेशसमये तव वीक्षणस्य
कामाक्षि मूकमपि वीक्षणमात्रनम्रम्।

सर्वज्ञता सकललोकसमक्षमेव
कीर्ति: स्वयंवरणमाल्यवती वृणीते।।३८।।

ஆரம்ப லேஶ ஸமயே தவ வீக்ஷணஸ்ய
காமாக்ஷி மூகமபி வீக்ஷணமாத்ர நம்பரம்।
ஸர்வக்ஞுதா ஸகல லோக ஸமக்ஷமேவ
கீர்த்தி: ஸ்வயம்வரண மால்யவதீ வ்ருணீதே।।38।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
வீக்ஷணமாத்ர நம்ரம்	*உனது கடாக்ஷம் கிடைத்தால் போதுமென்று வணங்கியிருக்கும்*
மூகமபி	*ஊமையாயிருப்பவனையும்*
தவ வீக்ஷணஸ்ய	*உனது பார்வையின்*
ஆரம்ப லேஶ ஸமயே	*ஆரம்பமான சிறியபொழுதிற்குள்ளே*
ஸர்வக்ஞுதா	*பூர்ணமான அறிவாகிற கன்யகையானவள்*
கீர்த்தி:	*கீர்த்தியென்ற*
ஸ்வயம்வரண மால்யவதீ	*ஸ்வயம்வர மாலையை யுடையவளாய்*
ஸகலலோகஸமக்ஷமேவ	*ஸகலலோகங்களுடைய முன்னிலையிலேயே*
வ்ருணீதே	*வரிக்கிறாள்.*

1. அம்பிகையின் கடாக்ஷலேசம் பக்தன் மீது பட்ட மாத்திரத்திலேயே அவன் மூகனாயிருந்தாலும் ஸர்வக்ஞுத்வம் என்ற கன்யகையானவள் கீர்த்தியென்ற மாலையும் கையுமாய் அவனைத் தானாகவே

(ஸ்வயம்வரமாய்) ஸகல லோகங்களும் பார்த்திருக்கத்தன் பதியாக வரிக்கிறாள் என்று இதில் சொல்லப்பட்டது.

2. அதாவது அவனுக்கு ஸர்வக்ஞத்வமும் அதின் மூலமாகலோகோத்தரமான கீர்த்தியும் ஏற்படுவதாகச் சொல்லப்பட்டது.

(38) ஹே! காமாக்ஷி! உனது கடாக்ஷ வீக்ஷணத்தை மட்டும் வேண்டி வணங்கிய ஊமையனையும்கூட, உனது கடாக்ஷம் விழ அரம்பிக்கும் ஸமயத்திலேயே ஸர்வக்ஞத்தை என்கிற கன்னிகையானவள், கீர்த்தியென்கிற ஸ்வயம்வர மாலையை உடையவளாய் எல்லா ஜனங்களின் முன்னிலையிலேயே வரிக்கிறாள்.

कालाम्बुवाह इव ते परितापहारी
कामाक्षि पुष्करमधः कुरुते कटाक्षः।
पूर्वः परं क्षणरुचा समुपैति मैत्रीम्
अन्यस्तु सन्ततरुचिं प्रकटीकरोति।।३९।।

காலாம்புவாஹ இவ தே பரிதாபஹாரீ
காமாக்ஷி புஷ்கரம் அத: குருதே கடாக்ஷ:।
பூர்வ: பரம் க்ஷணருசா ஸமுபைதி மைத்ரீம்
அன்யஸ்து ஸந்ததருசிம் ப்ரகடீகரோதி।।39।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
தே கடாக்ஷ:	உனது கடாக்ஷமானது
காலாம்புவாஹ இவ	காளமேகம் போல
பரிதாபஹாரி	ஜனங்களுடைய தாபத்தைப் போக்கிக்கொண்டு
தே கடாக்ஷ:	உனது கடாக்ஷமானது

புஷ்கரம்	புஷ்கரத்தை (ஜலத்தை) நீலோத்பலத்தை)
அத: குருதே	கீழ்ப்படுத்திவிடுகிறது. ஆயினும்
பூர்வ:	முந்திச் சொல்லப்பட்டதான காளமேகமானது
க்ஷணருசா	க்ஷணப்பொழுது ப்ரகாசிப்பதான மின்னலுடன்
மைத்ரீம் ஸமுபைதி	ஸ்னேகபாவத்தை அடைகிறது
அன்யஸ்து	மற்றொன்றான உனது கடாக்ஷமானது
ஸந்ததருசிம்	எப்போதுமிருப்பதான காந்தியை
ப்ரகடீகரோதி	வெளிப்படுத்துகிறது

1. இந்த ச்லோகத்தில் அம்பிகையின் கடாக்ஷத்தை கானமேகத்திற்கு ஸமமாகச் சொல்லிவிட்டு அதற்குமிதற்குமுள்ள வித்யாஸத்தையும் எடுத்துக் காட்டப்படுகிறது. மேகமானது தனது வர்ஷங்களினால் ஜனங்களுடைய தாபத்தைப் போக்கி குளிரச்செய்கிறது. அம்பிகையின் பார்வையோ ஸகல லோகங்களுடைய (அத்யாத்மிக, அதிபௌதிக, அதிதைவிகங்களென்கிற) தாபத்ரயத்தையும் போக்கடித்து அவர்கள் மனதைக் குளிரச்செய்யும் சக்திவாய்ந்தது.

2. மேகங்கள் ஸாதாரணமாய் கருப்பாயிருக்கையில் மின்னல் தோன்றும்போதெல்லாம் ப்ரகாசத்தோடு இருப்பதாகத் தோன்றும். ஆனால் மின்னலானது க்ஷணருசி - க்ஷணநேரம் காந்தியோடிருந்துவிட்டு மறைந்துவிடும். அம்பிகையின் கடாக்ஷமோ எப்போதும் காந்தியோடு கூடியதாயிருக்கிறது. ஆகவே அம்பிகையின் கடாக்ஷமானது

காளமேகத்தையும் கீழ்படுத்தும் படியான அம்சம் வாய்ந்ததென்பதாக இதில் வர்ணிக்கப்பட்டது.

3. புஷ்கரமென்று ஜலத்திற்கும் நீலோத்பலத்திற்கும் பெயர். மேகமானது ஜலத்தை கீழே வர்ஷிப்பதால் 'புஷ்கரம் அத:குருதே' என்று சொல்லப்பட்டது. அம்பிகையின் கடாக்ஷமானது நீலோத்பலத்தை ஜயித்ததான அழகோடிருப்பதால் அதைக் கீழ்ப்படியச்செய்கிறது என்பதாக 'புஷ்கரம் அத: குருதே' என்று அதைப்பற்றியும் சொல்லப்பட்டது.

(39) ஹே காமாக்ஷி! உனது கடாக்ஷமானது, காளமேகம் போல், ஜனங்களுடைய தாபத்தை நீக்குவதாயிருந்து கொண்டு நீலோத்பலத்தைக் கீழ்ப்படுத்துகிறது. ஆனால் முதலில் கூறப்பட்ட காள மேகமானது க்ஷணிகமான மின்னலுடன் ஸினிஹேத்தை அடைகிறது. மற்றொன்றான உனது கடாக்ஷமானது சாச்வதமான காந்தியை வெளிப்படுத்துகிறது.

सूक्ष्मेऽपि दुर्गमतरेऽपि गुरुप्रसाद
साहाय्यकेन विचरन्नपवर्गमार्गे।
संसारपङ्कनिचये न पतत्यमूम् ते
कामाक्षि गाढमवलम्ब्य कटाक्षयष्टिम्।।४०।।

ஸூக்ஷ்மேऽபி துர்கமதரேऽபி குருப்ரஸாத
ஸாஹாய்யகேன விசரன்னபவர்கமார்கே।
ஸம்ஸார பங்க நிசயே ந பதத்யமூம் தே
காமாக்ஷி காடம் அவலம்ப்ய கடாக்ஷயஷ்டிம்।।40।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
ஸூக்ஷ்மேऽபி	மிகவும் நுண்ணியதாயிருந்த போதிலும்
துர்கமதரேऽபி	செல்லமுடியாததாயிருந்த போதிலும்
அபவர்க மார்கே	மோக்ஷ மார்க்கத்தில்
குருப்ரஸாத ஸாஹாய்யகேன	குருவின் அநுக்ரஹமென்ற துணையோடு
விசரன்	போய்க்கொண்டிருக்கிறவன்
அமும் தே கடாக்ஷ யஷ்டிம்	இந்த உன்னுடையதான கடாக்ஷமென்ற ஊன்றுகோலை
காடம் அவலம்ப்ய	கெட்டியாக பிடித்துக்கொண்டு (போனால்)
ஸம்ஸார பங்க நிசயே	ஸம்ஸார மென்ற சேற்றுக்கும்பலில்
ந பததி	விழுகிறதில்லை

(40) ஹே! காமாக்ஷி! எந்த மனிதனும், மிகவும் குறுகியதும், நடக்க முடியாததுமான, மோக்ஷ மார்க்கத்தில், ஆசார்யகிருபையால் நடந்து கொண்டிருப்பவன், உனது இந்த கடாக்ஷமாகிற ஊன்று கோலைப் பிடித்துக் கொண்டால், ஸம்ஸாரமாகிற சேற்றில் விழாமல் தப்புவான்.

कामाक्षि संततमसौ हरिनीलरत्न–
स्तम्भे कटाक्षरुचिपुञ्जमये भवत्याः।
बद्धोऽपि भक्तिनिगलैर्मम चित्तहस्ती
स्तम्भं च बन्धमपि मुञ्चति हन्त चित्रम्॥४१॥

காமாக்ஷி ஸந்ததமஸௌ ஹரிநீலரத்ன
ஸ்தம்பே கடாக்ஷருசி புஞ்ஜமயே பவத்யா:।
பத்தோऽபி பக்திநிகலைர் மம சித்தஹஸ்தீ
ஸ்தம்பம் ச பந்தமபி முஞ்சதி ஹந்த சித்ரம்॥41॥

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
அஸௌ மம சித்தஹஸ்தீ	*இந்த என்னுடைய மனமாகிற யானையானது*
பவத்யா:	*உன்னுடைய*
கடாக்ஷருசி புஞ்ஜமயே	*உன்னுடைய கடாக்ஷத்தின் காந்திக்கூட்டமென்ற*
ஹரிநீலரத்ன ஸ்தம்பே	*இந்த்ர நீல ரத்ன ஸ்தம்பத்தில்*
பக்தி நிகலை:	*பக்தியாகிற சங்கிலிகளால்*
ஸந்ததம் பத்தோऽபி	*எப்போதும் கட்டப்பட்டிருந்த போதிலும்*
ஸ்தம்பம் ச	*அந்த ஸ்தம்பத்தையும்*
பந்தம் அபி	*அந்தக்கட்டையையும்*
முஞ்சதி	*விட்டுவிட்டு ஓடிப்போகிறது*
ஹந்த சித்ரம்	*என்ன ஆச்சர்யம்!*

(41) ஹே! காமாக்ஷி! எனது மனஸ் என்கிற யானையானது உனது கடாக்ஷ காந்தி ஸமூஹமாகிற இந்திர நீல ரத்தக் கம்பத்தில், பக்தி என்கிற சங்கிலியால் கட்டப்பட்டிருந்த போதிலும், ஸ்தம்பத்தை (ஸ்தம்பித்திருத்தல)யும், கட்டையும் (ஸம்ஸாரபந்தம்) விட்டு ஓடிவிட்டது. ஆச்சர்யம்!

कामाक्षि काष्ण्यर्मपि सन्ततमञ्जनं च
बिभ्रन्निसर्गतरलोऽपि भवत्कटाक्षः।

वैमल्यमन्वहमनञ्जनतां च भूयः
स्थैर्यम् च भक्तहृदयाय कथं ददाति।।४२।।

காமாக்ஷி கார்ஷ்ண்யமபி ஸந்ததம் அஞ்ஜனம் ச
பிப்ரன் நிஸர்க தரலோபிபவத் கடாக்ஷ:।
வைமல்யமன்வஹமனஞ்ஜனதாம் ச பூய:
ஸ்தைர்யம் ச பக்த ஹ்ருதயாய கதம் ததாதி।।42।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
ஸந்ததம்	*எப்போதும்*
கார்ஷ்ண்யம் அபி	*கருப்பு நிறத்தையும்*
அஞ்ஜனம் ச	*மையையும்*
பிப்ரன்	*தரித்துக்கொண்டு*
நிஸர்க தரல: அபி	*இயற்கையாகவே சஞ்சலமாயிருப்பதுமான*
பகவத் கடாக்ஷ:	*உனது கடாக்ஷமானது*
பக்த ஹ்ருதயாய	*பக்தர்களுடைய மனதிற்கு*
அன்வஹம்	*எப்பொழுதும்*
வைமல்யம்	*மாலின்யமற்ற தன்மையையும்*
அனஞ்ஜனதாம் ச	*களங்கமில்லாமையையும்*
பூய:	*இன்னும்*
ஸ்தைர்யம் ச	*ஸ்திரமான நிலைமையையும்*
கதம் ததாதி	*எப்படிக்கொடுக்கிறது!*

கடாக்ஷமானது க்ருஷ்ண (கருப்பு) வர்ணமாகச் சொல்லப்படுவதால் அதற்கு கார்ஷ்ண்யமிருப்பதாகச் சொல்லப்பட்டது. பாபத்தைக் கருப்பு நிறமுள்ளதாக வர்ணிப்பது வழக்கம்.

கடாக்ஷமானது தான் கார்ஷ்ண்யத்தோடிருந்தாலும், பக்தர்களுடைய மனதில் கருப்பில்லாத நிலைமையை (வைமல்யத்தை - மாலின்யமில்லாத தன்மையை - பாபமில்லாத நிலைமையை) உண்டு பண்ணுகிறது. தான் அஞ்ஜனத்தை தரித்திருந்தாலும் பக்தர்களுடைய மனதை அஞ்ஜனமில்லாததாக களங்கமில்லாததாக) செய்து விடுகிறது. மேலும் தான் சஞ்சல ஸ்வபாவத்தோடிருந்த போதிலும் பக்தர்களுடைய மனதிற்கு ஸ்தைர்யத்தை (ஸ்திரமாயிருக்கும் தன்மையை - உறுதியான நிலையை) கொடுக்கிறது, ஆகவே கடாக்ஷமானது தனக்கிருக்கும் குண விசேஷங்களுக்கு மாறான பலன்களை பக்தர்களுக்குக் கொடுப்பதினால் அதில் தனக்கு உண்டாகும் ஆச்சர்யத்தை கவி இதில் வெளியிடுகிறார்.

(42) காமாக்ஷி! உனது கடாக்ஷமானது எப்போதும், கருத்ததாயும், மையை தரித்ததாயும், ஸ்வபாவத்திலேயே சஞ்சலமாயுமிருந்த போதிலும், பக்தர்கள் ஹ்ருதயத்திற்கு, நித்யம், வெளுமையையும், களங்கமற்ற தன்மையையும் ஸ்திரமாயிருக்கும் தன்மையையும் எப்படிக் கொடுக்கிறதோ?

मन्दस्मितस्तबकितं मणिकुण्डलांशु–
स्तोमप्रवालरुचिरं शिशिरीकृताशम्।
कामाक्षि राजति कटाक्षरुचेः कदम्बम्
उद्यानमम्ब करुणा हरिणे क्षणायाः।।४३।।

மந்தஸ்மித ஸ்தபகிதம் மணிகுண்டலாம்ஶு-
ஸ்தோம ப்ரவால ருசிரம் ஶிஶிரீக்ருதாஶம்।
காமாக்ஷி ராஜதி கடாக்ஷருசே: கதம்பம்
உத்யானமம்ப கருணா ஹரிணேக்ஷணாயா:।।43।।

காமாக்ஷி அம்ப	ஹே காமாக்ஷி! தாயே!
மந்தஸ்மித ஸ்தபகிதம்	புன்சிரிப்பாகிற பூங்கொத்துக்களுள்ளதும்
மணி குண்டலாம்ஶு ஸ்தோம	ரத்ன குண்டலங்களின் காந்திக் கூட்டங்களாகிற
ப்ரவாலருசிரம்	துளிர்களோடு அழகானதும்
ஶிஶிரீ க்ருதாஶம்	குளிரச்செய்யப்பட்ட திக்குக்களையுடையதுமான (எங்கும் குளிர்ச்சியுடையதுமான
கடாக்ஷருசே: கதம்பம்	உனது கடாக்ஷத்தின் காந்திகளின் கூட்டமானது
கருணாஹரிணேக்ஷணாயா:	கருணையென்ற ஸ்த்ரீயினுடைய
உத்யானம்	உத்யானமாக
ராஜதி	விளங்குகிறது

(43) தாயே! காமாக்ஷி! புன்சிரிப்பாகிற பூங்கொத்துள்ளதும், மணிமயமான குண்டலங்களின் காந்தியாகிற தளிரோடு கூடியதும் திசைகளைக் குளிரச் செய்வதுமான உனது கடாக்ஷ காந்தியினுடைய ஸமூஹமானது, கருணை யென்கிற ஸ்திரீயினுடைய உத்யான வனம்போல் விளங்குகிறது.

कामाक्षि तावककटाक्ष महेन्द्रनील–
सिंहासनं श्रितवतो मकरध्वजस्य।
साम्राज्यमङ्गलविधौ मणिकुण्डलश्रीः
नीराजनोत्सवतरङ्गितदीपमाला।।४४।।

காமாக்ஷி தாவக கடாக்ஷ மஹேந்த்ர நீல-
ஸிம்ஹாஸனம் ஶ்ரிதவதோ மகரத்வஜஸ்ய।
ஸாம்ராஜ்ய மங்கல விதௌ மணிகுண்டலஶ்ரீ:
நீராஜனோத்ஸவ தரங்கித தீபமாலா॥44॥

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
தாவக கடாக்ஷ	*உனது கடாக்ஷமாகிற*
மஹேந்த்ர நீல ஸிம்ஹாஸனம்	*இந்த்ர நீலக் கல்லினாலான ஸிம்ஹாஸனத்தை*
ஶ்ரிதவத:	*அடைந்திருக்கும் (அதில் வீற்றிருக்கும்)*
மகர த்வஜஸ்ய	*மண்மதனுக்கு*
மணிகுண்டல ஶ்ரீ:	*உனது ரத்ன குண்டலங்களின் காந்தியானது*
ஸாம்ராஜ்யமங்கல விதௌ	*சக்ரவர்த்தியென்று பட்டாபிஷேகம் செய்யும் சமயத்தில்*
நீராஜனோத்ஸவ	*தீப ஆலத்தி எடுப்பதின்*
தரங்ம்கித தீப மாலா	*அடுக்கு தீபமாக (ஆகிறது).*

(44) ஹே காமாக்ஷி! உன் கடாக்ஷமாகிற இந்த நீலக்கல்மயமான ஸிம்மாஸனத்தில் உட்கார்ந்திருக்கிற மன்மதனுக்கு ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் செய்கையில், உனது ரத்ன குண்டல தேஜஸ்ஸானது ஆலத்தியெடுப்பதற்கான தீப வரிசைபோல் விளங்குகிறது.

मात: क्षणं स्नपय मां तव वीक्षितेन
मन्दाक्षितेन सुजनैरपरोक्षितेन।

कामाक्षि कर्मतिमिरोत्करभास्करेण
श्रेयस्करेण मधुपद्युतितस्करेण।।४५।।

மாத: க்ஷணம் ஸ்னபய மாம் தவ வீக்ஷிதேன
மந்தாக்ஷிதேன ஸுஜனைரபரோக்ஷிதேன।
காமாக்ஷி கர்ம திமிரோத்கர பாஸ்கரேண
ஶ்ரேயஸ்கரேண மதுபத்யுதி தஸ்கரேண।।45।।

மாத: காமாக்ஷி	*தாயே! ஹே காமாக்ஷி!*
மந்தாக்ஷிதேன	*ம்ருதுவானதும் (அல்லது நாணத்தோடு கூடியதும்)*
ஸுஜனை:	*ஸாதுக்களால்*
அபரோக்ஷிதேன	*பார்க்கப்பட்டதும் (அறியப்பட்டதும்)*
கர்மதிமிரோத்கர	*கர்மங்களாகிய இருள் கூட்டத்திற்கு*
பாஸ்கரேண	*ஸூர்யன் போன்றதும்*
ச்ரேயஸ்கரேண	*ச்ரேயஸ்ஸைக் கொடுப்பதும்*
மதுபத்யுதி தஸ்கரேண	*வண்டுகளின் காந்தியை அபஹரித்ததுமான*
தவ வீக்ஷிதேன	*உனது பார்வையால்*
மாம்	*என்னை*
க்ஷணம் ஸ்னபய	*ஒரு க்ஷணநேரமாவது நனையச்செய். (அப்பேர்ப்பட்ட உனது பார்வையை என்மீது ஒரு க்ஷணநேரமாவது படும்படி செய்வாயாகவும்.)*

(45) மாதாவே! ஹே காமாக்ஷி! சிறிது நாணத்தோடு கூடியதும், ஸாதுக்களால் தர்சனம் செய்யப்பட்டதும், கர்மமாகிற இருள் கூட்டத்திற்கு ஸூர்யன் போன்றதும், க்ஷேமத்தைக் கொடுப்பதும், வண்டுகளின் காந்தியை அபஹரிப்பதுமான உனது கடாக்ஷத்தினால் என்னை க்ஷண காலமாவது நனையச் செய்வாயாக.

प्रेमापगापयसि मञ्जनमारचय्य
युक्तः स्मितांशुकृत भस्मविलेपनेन।
कामाक्षि कुण्डलमणिद्युतिभिर्जटालः
श्रीकण्ठमेव भजते तवदृष्टिपातः।।४६।।

ப்ரேமாபகா பயஸி மஞ்ஜனம் ஆரசய்ய
யுக்த: ஸ்மிதாம்ஶு க்ருத பஸ்மவிலேபனேன।
காமாக்ஷி குண்டல மணி த்யுதிபிர் ஜடால:
ஸ்ரீ கண்டமேவ பஜதே தவத்ருஷ்டிபாத:।।46।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
தவ த்ருஷ்டிபாத:	உனது பார்வையானது
ப்ரேமாபகா பயஸி	ப்ரேமையென்ற நதீ ஜலத்தில்
மஞ்ஜனம் ஆரசய்ய	ஸ்நானம் செய்துவிட்டு
ஸ்மிதாம்சுக்ருத	உனது புன்சிரிப்பின் காந்திகளால் செய்யப்பட்ட
பஸ்மவிலேபனேன யுக்த:	விபூதிப் பூச்சோடு கூடியதாய்
குண்டல மணித்யுதிபி:	உனது குண்டலங்களிலுள்ள ரத்னங்களின் காந்திகளால்
ஜடால:	ஜடையோடு கூடியதாய்
ஸ்ரீகண்டமேவ பஜதே	- பரமசிவனையே பஜிக்கிறது (அடைகிறது)

தனது பதியான பரமசிவனிடம் அம்பிகையின் பார்வையானது எப்போதும் இருப்பது இதில் வர்ணிக்கப்பட்டது.

கடாக்ஷமானது பரமசிவனிடமே நினைவுடன் தபஸ் செய்யும் ரிஷியாகச் சொல்லப்பட்டது. ப்ரேமையாகிற நதீ ஜலத்தில் மூழ்கி, புன்சிரிப்பாகிற பஸ்மத்தை அணிந்துகொண்டு மணிகுண்டலங்களின் காந்திகளாகிற ஜடைகளோடு கூடிய அந்த ரிஷியானவர் ஸதாகாலமும் பரமசிவனை பூஜித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது.

3. புன்சிரிப்பை வெளுப்புநிறமாக வர்ணிப்பது கவிகளின் ஸம்ப்ரதாயமாதலால் இங்கு பஸ்மத்திற்கு (விபூதிக்கு) ஸமமாகச் சொல்லப்பட்டது.

(46) ஹே காமாக்ஷி! உனது கடாக்ஷமானது, ப்ரீதியென்கிற நதீ ஜலத்தில் ஸ்நானம் செய்துவிட்டு, வெளுப்பான புன்சிரிப்பாகிற விபூதியை தரித்துக் கொண்டு, உனது காது குண்டலத்தின் ரக்த காந்திகளால் ஜடையை தரித்து இருப்பதுபோல் விளங்கிகொண்டும் பரமசிவனையே ஸேவிக்கிறது.

कैवल्यदाय करुणारसकिङ्कराय
कामाक्षि कन्दलित विभ्रमशङ्कराय।
आलोकनाय तव भक्तशिवङ्कराय
मातर्नमोऽस्तु परतन्त्रितशङ्कराय।।४७।।

கைவல்யதாய கருணாரஸ கிங்கராய
காமாக்ஷி கந்தலித விப்ரம சங்கராய।

ஆலோகனாய தவ பக்த சிவங்கராய
மாதர் நமோऽஸ்து பரதந்த்ரித சங்கராய ।।47।।

காமாக்ஷி மாத:	ஹே காமாக்ஷி! தாயே!
கைவல்யதாய	கைவல்யமென்ற உத்க்ருஷ்டமான மோக்ஷத்தைக் கொடுப்பதும்
கருணாரஸ கிங்கராய	கருணையென்ற கிங்கரனையுடையதும்
கந்தலித விப்ரம சங்கராய	சங்கரருக்கு மோஹலீலையை அபிவிருத்தி செய்வதும்
பக்த சிவங்கராய	பக்தர்களுக்கு மங்களத்தைச் செய்வதும்
பரதந்த்ரித சங்கராய	பரமசிவனை பரவசப்படுத்தியதுமான (தன் வசப்படுத்தியதுமான)
தவ ஆலோசனாய	உனது பார்வைக்கு
நம: அஸ்து	நமஸ்காரம் இருக்கட்டும்

(47) தாயே! காமாக்ஷி! கைவல்யமென்கிற மோக்ஷத்தைக் கொடுப்பதும் கருணாரஸமென்கிற கிங்கரனையுடையதும், சங்கரருக்கு மோஹ லீலையை விருத்திசெய்வதும், பக்தர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பதும், பரமசிவனை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுவதுமான உனது கடாக்ஷத்திற்கு நமஸ்காரம்.

साम्राज्य मङ्गलविधौ मकरध्वजस्य
लोलालकालिकृततोरणमाल्यशोभे।
कामेश्वरी प्रचलदुत्पलवैजयन्ती–
चातुर्यमेति तव चञ्चलदृष्टिपात:।।४८।।

ஸாம்ராஜ்ய மங்கல விதௌ மகரத்வஜஸ்ய
லோலாலகாலிக்ருத தோரண மால்ய சோபே।
காமேஶ்வரி ப்ரசலத் உத்பல வைஜயந்தீ-
சாதுர்யம் ஏதி தவ சஞ்சல த்ருஷ்டிபாத:॥

காமேஶ்வரி	*காமேச்வரருடைய பத்னியே!*
லோலாலகாலிக்ருத	*ஆடுகின்ற அளகங்களின் வரிசைகளாலான,*
தோரணமால்ய சோபே	*தோரணமாலைகளின் காந்தியோடுகூடிய*
மகரத்வஜஸ்ய	*மன்மதனுடைய*
ஸாம்ராஜ்ய மங்கலவிதௌ	*சக்ரவர்த்தியென்ற பட்டாபிஷேகத்தின் போது*
தவசஞ்சல த்ருஷ்டி பாத:	*உனது சஞ்சலமான பார்வையானது*
ப்ரசலத்	*அசைந்தாடும்*
உத்பல வைஜயந்தீ	*நீலோத்பல மாலைகளின்*
சாதுர்யம் ஏதி	*அழகை அடைகிறது*

(48) காமேச்வரனின் பத்நியான காமாக்ஷியே! அசைகிற அளகங்களின் வரிசைகளாகிற தோரண மாலையின் காந்தியுடன் கூடியதும், மன்மதனுடைய ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகத்தின் போது, உனது சஞ்சலமான கண்பார்வையானது. அசைந்தாடும் நீலோத்பல மாலைகளின் அழகை அடைகிறது.

मार्गेण मञ्जुकचकान्तितमोवृतेन
मन्दायमानगमना मदनातुरसौ।

कामाक्षि दृष्टिरयते तव शङ्कराय
सङ्केतभूमिमचिरादभिसारिकेव।।४९।।

மார்கேண மஞ்ஜு கச காந்தி தமோவ்ருதேன
மந்தாயமான கமனா மதனாதுராஸௌ।
காமாக்ஷி த்ருஷ்டிரயதே தவ சங்கராய
ஸங்கேத பூமிம் அசிராத் அபிஸாரிகேவ।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
அஸௌ தவ த்ருஷ்டி:	இந்த உனது பார்வையானது
மதனாதுரா	மன்மதனால் பீடிக்கப்பட்டு
மஞ்ஜு கச காந்தி	அழகிய கூந்தலின் காந்தியாகிற
தமோ வ்ருதேன	இருட்டால் சூழப்பட்ட
மார்கேண	வழியாக
மந்தாயமான கமனா	மெதுவான நடையையுடையதாய்
சங்கராய	பரமசிவனுக்கு பரமசிவனை உத்தேசித்து)
அசிராத்	சீக்கிரத்தில்
ஸங்கேதபூமிம்	ஸங்கேத ஸ்தலத்திற்கு
அபிஸாரிகேவ	அபிஸாரிகைபோல்
அயதே	செல்கிறது

ஒரு ரஹஸ்ய ஸ்தலத்தில் சேருவதாகத் தன் நாயகனுடன் ஏற்பாடு செய்துகொண்டு அந்த இடத்தை நோக்கிச் செல்லும் காமபீடிகையான ஸ்திரீக்கு அபிஸாரிகையென்று பெயர். அவ்விதம் சேர ஏற்பாடுசெய்யப்பட்ட இடத்திற்கு ஸங்கேத பூமி (ஸங்கேத ஸ்தலம்) என்று பெயர். அவ்விதமான இடங்களுக்கு பிறர் அறியாதபடி இருட்டில் போவது

வழக்கமாகையால் இங்கு அம்பாளுடைய த்ருஷ்டியான அபிஸரிகையானவள் போகும் வழியானது அம்பாளுடைய கறுத்த கூந்தலினால் ஏற்பட்ட இருட்டோடு இருப்பதாகச் சொல்லப்பட்டது. அவ்விதமான இருட்டில் போவதினால் மெதுவான நடையோடு போவதாயும் நாயகனைச் சேர வேண்டுமென்று மதனாதுரையாயிருப்பதால் வேகமாகச் செல்ல ஆசையோடிருப்பதை 'அசிராத் அயதே' என்று சொல்லப்பட்டது.

(49) ஹே காமாக்ஷி! இந்த உனது கடாக்ஷமானது, மன்மதனால் பீடிக்கப்பட்டதாகக்கொண்டு, அழகிய கூந்தலின் காந்தியாகிற இருட்டால் சூழப்பட்ட வழியாக, மெதுவான நடையுடன் அபிஸாரிகையைப் போல், பரமசிவனையுத்தேசித்து ஒரு ஸங்கேத ஸ்தலத்திற்குச் செல்லுகிறது போலிருக்கிறது.

व्रीडानुवृत्तिरमणीकृतसाहचर्या
शैवालितां गलरुचा शशिशेखरस्य।
कामाक्षि कान्तिसरसीम् त्वदपाङ्गलक्ष्मी:
मन्दं समाश्रयति मज्जनखेलनाय।।५०।।

வ்ரீடானு வ்ருத்தி ரமணீக்ருத ஸாஹசர்யா
ஶைவாலிதாம் கலருசா ஶஶிஶேகரஸ்ய।
காமாக்ஷி காந்திஸரஸீம் த்வத் அபாங்கலக்ஷ்மீ:
மந்தம் ஸமாச்ரயதி மஜ்ஜன கேலனாய।।50।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
த்வத் அபாங்கலக்ஷ்மீ:	*உனது கடாக்ஷ லக்ஷ்மியானவள்*
வ்ரீடானு வ்ருத்திரமணீ	*வ்ரீடை (லஜ்ஜை) என்ற தோழிப்பெண்ணுடன்*

க்ருத ஸாஹசர்யா	கூடியவளாய் (உடன் வரப்பட்டவளாய்)
மஜ்ஜன கேலனாய	ஜலக்ரீடையை உத்தேசித்து
ஶஶிஶேகரஸ்ய	சந்த்ர சேகரருடைய
கலருசா	கழுத்தின் காந்தியினால்
ஶைவாலிதாம்	பாசிபடர்ந்தது போலிருக்கும்
காந்தி ஸரஸீம்	காந்தியாகிற குளத்தை
மந்தம் ஸமாஶ்ரயதி	மெதுவாக அடைகிறாள்

பரமசிவனுடைய கழுத்தானது அவர் சாப்பிட்ட ஹாலாஹலவிஷம் அங்கு தங்கிவிட்டதால் நீலநிறமாக இருப்பதாகச் சொல்லப்படும். (அதினால் அவருக்கு நீலகண்டனென்றும், காளகண்டனென்றும் பெயர்கள் ஏற்பட்டன). ஆகவே அவருடைய முககாந்தியாகிற ஸரஸுக்கு கழுத்திலிருக்கும் கருப்பானது பாசிபடர்ந்தது போலிருப்பதாகச் சொல்லப்பட்டது. அப்பேர்ப்பட்ட ஸரஸில் ஜலக்ரீடை செய்வதற்காக அம்பாளுடைய கடாக்ஷமாகிற ஸ்திரீயானவள், லஜ்ஜையென்ற ஸகியுடன் மெதுவாகச் செல்லுவதாக இங்கு வர்ணிக்கப்பட்டது.

(50) ஹே காமாக்ஷி! உனது கடாக்ஷ லக்ஷ்மீயானவள் லஜ்ஜையென்கிற தோழியுடன் கூடியவளாய், ஜலக்கிரீடையை உத்தேசித்து, பரமசிவனுடைய கழுத்து சோபையால் பாசி படர்ந்தது போலிருக்கிற காந்தியாகிற குளத்தை மெதுவாக அடைகிறாள்.

काषायमंशुकमिव प्रकटं दधानो
माणिक्यकुण्डलरुचिं ममताविरोधी।
श्रुत्यन्तसीमनि रत: सुतरां चकास्ति
कामाक्षि तावककटाक्षयतीश्वरोऽसौ।।५१।।

காஷாயம் அம்சுகமிவ ப்ரகடம் ததானோ
மாணிக்ய குண்டலருசிம் மமதாவிரோதி।
ச்ருத்யந்தஸீமனி ரத: ஸூதராம் சகாஸ்தி
காமாக்ஷி தாவக கடாக்ஷ யதீச்வரோऽஸௌ।।51।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
அஸௌ	இந்த
தாவக கடாக்ஷயதீச்வர:	உனது கடாக்ஷமாகிற யதிச்ரேஷ்டரானவர்
மாணிக்ய குண்டல ருசிம்	உனது ரத்ன குண்டலங்களின் காந்தியை
காஷாயம் அம்சுகமிவ	காஷாய வஸ்த்ரம் போல்
ப்ரகடம் ததான:	நன்றாய் தெரியும்படி தரித்துக்கொண்டு
மமதா விரோதி	மமதையென்ற பாவத்திற்கு விரோதியாக
ச்ருத்யந்த ஸீமனி ரத:	வேதாந்தங்களில் ஈடுபட்டவராய்
ஸூதராம்- சகாஸ்தி	அதிகமாய் விளங்குகிறார்

இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை ஒரு யதீச்வரருக்கு ஸமானமாக வர்ணிக்கப்படுகிறது. யதிகள் வழக்கமாக தரிக்கும் காஷாய வஸ்த்ரத்திற்கு ஸமானமாய் அம்பிகையின் ரத்ன குண்டலங்களின் காந்தி இருக்கிறதாம். ச்ருத்யந்தம் என்றால் ச்ருதிகளின் அந்தம்-வேதாந்தம், அதாவது, உபநிஷத்துக்கள் என்று ஓர் அர்த்தம். ச்ருத்யந்தம் என்றால் காது வரையில் என்று மற்றொரு அர்த்தம். அம்பிகையின் கண்கள் காதுவரை நீண்டிருப்பதால் 'ச்ருத்யந்த ஸீமனி ரத:' என்று சொல்லப்பட்டது. யதிகள் வேதாந்த விசாரத்தில்

ஈடுபட்டிருப்பார்களாகையால் 'ச்ருத்யந்த ஸீமனி ரத:' என்பது அந்த அர்த்தத்திலும் பொருத்தமாக இருக்கிறது.

(51) ஹே காமாக்ஷி! உன்னுடைய கடாக்ஷமாகிற ஸன்யாஸிச்ரேஷ்டர் உனது ரத்ன குண்டலங்களுடைய சிவந்த காந்தியினால் காஷாயவஸ்திரம் தரித்தவர்போல், மமதை என்ற எண்ணத்திற்கு விரோதியாயிருந்து கொண்டு சுருதியந்தமென்கிற வேதாந்தத்தின் எல்லையில் (காதுகளின் எல்லையில்) ஈடுபட்டவராக மிகவும் விளங்குகிறார்.

पाषाण एव हरिनीलमणिर्दिनेषु
प्रम्लानतां कुवलयं प्रकटीकरोति।
नैमित्तिको जलदमेचकिमा ततस्ते
कामाक्षि शून्यमुपमानमपाङ्गलक्ष्म्या:।।५२।।

பாஷாண ஏவ ஹரி நீலமணிர் தினேஷு
ப்ரம்லான தாம் குவலயம் ப்ரகட கரோதி।
நைமித்திகோ ஜலத மேசகிமா ததஸ்தே
காமாக்ஷி சூன்யமுபமானம் அபாங்கலக்ஷ்ம்யா:।। 52 ।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
ஹரி நீல மணி:	*இந்த்ர நீலரத்னமானது*
பாஷாண ஏவ	*கேவலம் கல்லைத்தவிர வேறல்ல*
குவலயம்	*கருநெய்தல் புஷ்பமோ*
தினேஷு	*பகற்காலங்களில்*
ப்ரம்லானதாம்	*வாட்டத்தை*
ப்ரகட கரோதி	*காட்டுகிறது*

ஜலத மேசகிமா	மேகத்தின் கருமையானது
நைமித்திக	எப்போழுதாவது ஏற்படக்கூடியதாயிருக்கிறது
தத:	ஆகையால்
தே அபாங்க லக்ஷ்ம்யா:	உனது கடாக்ஷத்தின் அழகிற்கு
உபமானம்	ஸமமான வஸ்து
சூன்யம்	யாதொன்றுமில்லை

அம்பிகையின் கடாக்ஷத்திற்கு ஸமமாகச் சொல்லக்கூடிய வஸ்துக்கள் மூன்று - இந்த்ர நீலமணி, குவலயம், மேகம். ஆயினும் இவை மூன்றிலுள்ள குறைகளை எடுத்துக்காட்டி அவை அம்பிகையின் கடாக்ஷத்திற்கு ஸமானமல்லவென்று நிருபித்து அம்பிகையின் கடாக்ஷ லக்ஷ்மியானது உபமானமற்றது நிகரற்றது) என்று வர்ணிக்கப்பட்டது.

(52) ஹே காமாக்ஷி! உன்னுடைய கடாக்ஷ சோபைக்கு உபமானம் இல்லை. இந்திர நீலமணியோ, வெறும் கல்லு. குவலய புஷபமோவெனில் பகலில் வாடிவிடுகிறது. மேகத்தின் கருமையோவென்றால், எப்போதாவது ஒரு மையத்தில் தான் ஏற்படக்கூடியதாயிருக்கிறது.

शृङ्गारविभ्रमवती सुतरां सलज्जा
नासाग्रमौक्तिकरुचा कृतमन्दहासा।
श्यामा कटाक्षसुषमा तव युक्तमेतत्
कामाक्षि चुम्बति दिगम्बरवक्त्रबिम्बम्।।५३।।

ச்ருங்கார விப்ரமவதீ ஸுதராம் ஸலஜ்ஜா
நாஸாக்ர மௌக்திகருசா க்ருத மந்தஹாஸா।
ச்யாமா கடாக்ஷ ஸுஷமா தவ யுக்தம் ஏதத்
காமாக்ஷி சும்பதி திகம்பர வக்த்ர பிம்பம்।।53।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
தவ கடாக்ஷ ஸுஷமா	உனது கடாக்ஷத்தின் ஸௌந்தர்யமாகிற
ஶ்யாமா	கருப்பான நிறத்தையுடைய ஸ்த்ரீயானவள் (ஸரியான யௌவனத்தோடு கூடிய ஸ்திரீயானவள்)
ஸுதராம்	அதிகமாய்
ஶ்ருங்கார விப்ரமவதீ	ச்ருங்கார விலாஸத்தோடு கூடியவளாயும்
ஸலஜ்ஜா	நாணத்தோடு கூடியவளாயும்
நாஸாக்ர மௌக்திக ருசா	மூக்கின் நுனியிலிருக்கும் (மூக்குத்தி) முத்துனுடைய காந்தியால்
க்ருதமந்தஹாஸா	புன்சிரிப்போடு கூடியவளாயும்
திகம்பர வக்த்ர பிம்பம்	திக்குக்க்ளையே வஸ்த்ரமாக உடைய) பரமசிவனுடைய முக பிம்பத்தை
சும்பதி	முத்தமிடுகிறாள்

இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை ஒரு ஸரியான யௌவனத்தையுடைய ச்த்ரீக்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. மூக்குத்தியிலுள்ள முத்தானத் வெளுப்பாயிருக்குமாதலால் அதினுடைய மந்தஹா ஸமாகச் சொல்லப்பட்டது.

பரமசிவன் ச்மசான வாஸியாய் வஸ்த்ரமில்லாமல் திரிந்துகொண்டிருப்பதாகச் சொல்லப்படுவதால் அவரை இங்கு திகம்பரர் (திக்குகளையே வஸ்த்ரமாக உடையவர்

என்று வர்ணிக்கப்பட்டது). அம்பிகையின் பார்வையானது எப்போதும் அவர்மீது இருப்பதால் அவருடைய முகபிம்பத்தை அம்பிகையின் கடாக்ஷமானது முத்தமிட்டிருப்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டது.

(53). ஹே காமாக்ஷி! உனது கடாக்ஷகாந்தியாகிற யௌவன ஸ்திரீயானவள், ச்ருங்கார விலாஸத்தோடும் நாணத்தோடும் கூடியவளாய், மூக்குநுனியிலிருக்கிற மூக்குத்தி முத்துனுடைய காந்தியால் மந்தஹாஸம் செய்கிறவள் போலிருந்து கொண்டு திகம்பரணாக விளங்கும் பரமசிவனுடைய முகபிம்பத்தை முத்தமிடுகிறாள் என்பது பொருத்தமானதே!

नीलोत्पलेन मधुपेन च दृष्टिपात:
कामाक्षि तुल्य इति ते कथमामनन्ति।
शैत्येन निन्दति यदन्वहमिन्दुपादान्-
पाथोरुहेण यदसौ कलहायते च।।५४।।

நீலோத்பலேன மதுபேன ச த்ருஷ்டிபாத:
காமாக்ஷி துல்ய இதி தே கதம் ஆமனந்தி।
ஶைத்யேன நிந்ததி யதன்வஹம் இந்து பாதான்
பாதோருஹேண யதஸௌ கலயாயதே ச।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி
தே த்ருஷ்டி பாத:	உனது பார்வையானது
நீலோத்பலேன	கருநெய்தல் புஷ்பத்திற்கும்
மதுபேன ச	வண்டிற்கும்
துல்ய இதி	ஸமமானதென்று
கதம் ஆமனந்தி	எப்படி (லோகத்தில்) சொல்லுகிறார்கள்?

யத் அஸௌ	எந்த இந்த கடாக்ஷமானது
அன்வஹம்	எப்போதும்
ஶைத்யேன	குளிர்ச்சியினால்
இந்து பாதா:	சந்த்ரனுடைய கிரணங்களை
நிந்ததி	பழிக்கிறதோ
யத்	எந்த கடாக்ஷமானது
பாதோருஹேன ச	தாமரஸ புஷ்பத்தோடும்
கலஹாயதே	சண்டையிடுகிறதோ

(54) ஹே காமாக்ஷி! உனது கடாக்ஷமானது நீலோத்பல புஷ்பத்திற்கும் வண்டுக்கும் ஸமமென்று எப்படிச் சொல்லுகிறார்களோ தெரியவில்லை? ஏனெனில் உனது கடாக்ஷமானது எப்போதும் தனது குளிர்ச்சியால் சந்திரகிரணங்களை திரஸ்கரிக்கிறது. தாமரை புஷ்பத்தினுடன் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டுமிருக்கிறதே.

1. அம்பிகையின் கடாக்ஷத்திற்கு உபமானமாக நீலோத்பலத்தையும் வண்டையும் லோகத்தில் சொல்லுகிறார்களே, அப்படியிருக்கையில் நீலோத்பலத்திற்கு அதை மலரச் செய்வதினால் நன்பனான சந்த்ர கிரணங்களோடும், வண்டுகளுக்கு நண்பனான தாமரஸ புஷ்பத்திற்கும் விரோதியாக அம்பிகையின் கடாக்ஷமானது இருந்து வருவது ஏன் என்று கவி ஆச்சர்யப்படுகிறார்.

2. சந்த்ர கிரணங்கள் மிகவும் குளிர்ச்சியுள்ளவையென்பது லோக ப்ரஸித்தம். ஆயினும் அம்பிகையின் கடாக்ஷமானது பக்தர்களுடைய தாபத்ரயத்தையும் போக்கடிப்பதால் சரீரதாபத்தை மட்டும் போக்கடிக்கும் சந்த்ர கிரணங்களைவிட ச்ரேஷ்டமானவையென்று ஏற்படுகிறது.

திரும்பவும் தாமரை புஷ்பத்தைவிட அம்பிகையின் கடாக்ஷமானது அழகிலும் மார்தவத்திலும் ச்ரேஷ்டமானவை. ஆகையால் அவ்விரண்டுடனும் கடாக்ஷமானது எப்போதும் சண்டைபோட்டு ஜயிப்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டது.

ओष्टप्रभापटलविद्रुममुद्रिते ते
भ्रूवल्लीवीचिसुभगे मुखकान्तिसिन्धौ।
कामाक्षि वारिभरपूरणलम्बमान–
कालाम्बुवाहसरणिं लभते कटाक्षः।।५५।।

ஓஷ்ட ப்ரபா படல வித்ரும முத்ரிதே தே
ப்ரூவல்லிவீசி ஸுபகே முக காந்தி ஸிந்தௌ।
காமாக்ஷி வாரிபரபூரண லம்பமான
காலாம்புவாஹ ஸரணிம் லபதே கடாக்ஷ:।।55।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
தே கடாக்ஷ:	*உனது கடாக்ஷமானது*
ஓஷ்ட ப்ரபா படல	*உதடுகளின் காந்திகளாகிற*
வித்ரும முத்ரிதே	*பவழக்கொடிகளையுடையதும்*
ப்ரூவல்லி	*புருவக்கொடிகளாகிற*
வீசி ஸுபகே	*அலைகளோடு விளங்குவதுமான*
முக காந்தி ஸிந்தௌ	*உனது முக காந்தியாகிற ஸமுத்ரத்தில்*
வாரிபர பூரண லம்பமான	*தண்ணீரை நிரப்பிக் கொள்வதற்காக (குடிப்பதற்காக) தழைந்திருக்கும்*

காலாம்புவாஹ ஸரணிம்	காளமேகங்களின் வரிசையென்ற நிலைமையை
லபதே	அடைகிறது.

(55) ஹே! காமாக்ஷியே! உனது கடாக்ஷமானது, உதடு காந்தி ஸமூஹமாகிற பவழத்தால் சோபிக்கிறதும், புருவக்கொடியாகிற அலைகளுடன் விளங்குவதுமான முகதேஜஸ்ஸாகிற ஸமுத்ரத்தில், ஜலத்தைப் பானம் பண்ணிய கருமேகம் வரிசைபோல் சோபிக்கிறது.

உதடுகள் சிகப்பு நிறமாதலால் அவற்றை பவழக் கொடிக்கு ஸமமாகச் சொல்வது கவிகளின் ஸம்ப்ரதாயம்.

मन्दस्मितैर्धवलिता मणिकुण्डलांशु
संपर्कलोहितरुचिस्त्वदपाङ्गधारा।
कामाक्षि मल्लिकुसुमैर्नवपल्लवैश्च
नीलोत्पलैश्च रचितेव विभाति माला।।५६।।

மந்த ஸ்மிதைர் தவலிதா மணிகுண்டலாம்ஶு-
ஸம்பர்க்க லோஹித ருசிஸ் த்வத் அபாங்க தாரா।
காமாக்ஷி மல்லி குஸுமைர் நவபல்லவைஶ்ச
நீலோத்பலைஶ்ச ரசிதேவ விபாதி மாலா।।56।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
மந்தஸ்மிதை:	உனது புன்சிரிப்புகளால்
தவலிதா	வெண்மையான நிறத்தோடிருக்கச் செய்யப்பட்டதும்
மணிகுண்டலாம்ஶு ஸம்பர்க்க	உனது ரத்ன குண்டலங்களுடைய

	காந்தியின் சேர்க்கையினால்
லோஹிதருசி:	சிவப்பு நிறத்தோடு கூடியதுமான
த்வத் அபாங்க தாரா	உனது கடாக்ஷத்தின் பெருக்கானது
மல்லி குஸுமை:	மல்லிகைப் புஷ்பங்களாலும்
நவ பல்லவைஶ்ச	புதிதான துளிர்களாலும்
நிலோத்பலைச்ச	நீலோத்பலங்களாலும்
ரசிதாமாலா இவ	செய்யப்பட்ட (தொடுக்கப்பட்ட மாலைபோல்)
விபாதி	விளங்குகிறது

(56) ஹே! காமாக்ஷி! உனது கடாக்ஷ வரிசையானது, மந்தஸ்மிதத்தால் வெளுப்பானதாயும், ரத்னகுண்டல தேஜஸ் சேர்க்கையால் சிவப்பாயும் இருப்பதால் மல்லிகைப்பூ மாந்தளிர் நீலோத்பலம் ஆகியவைகளால் தொடுக்கப்பட்ட மாலைபோல் விளங்குகிறது.

கடாக்ஷத்தை கருப்பு நிறமாக வர்ணிப்பது வழக்கமாகையால் அதை நீலோத்பலத்திற்கு ஸமமாகவும், மந்தஸ்மிதத்தை வெளுப்பாக வர்ணிப்பது வழக்கமாகையால் அதை மல்லிகை புஷ்பத்திற்கு ஸமமாகவும், ரத்னங்களைப் பொதுவாக வர்ணிக்கும்போது சிகப்பு நிறமாக வர்ணிப்பது வழக்கமாகையால் அவற்றின் காந்தியை நவ பல்லவங்களுடைய சிகப்பு, நிறத்திற்கு ஸமமாகவும் இங்கு சொல்லப்பட்டது. ஆகவே தனக்கு ஸ்வயமாக உடைய கருப்பு நிறத்தோடு மந்தஸ்மிதத்தின் வெளுப்பு, மணி குண்டலங்களின் ரத்னங்களுடைய சிகப்பு, இவற்றோடு கூடிய அம்பிகையின் கடாக்ஷ பரம்பரையை மல்லிகை நவ

பல்லவ, நீலோத்பலம் இவற்றால் தொடுக்கப்பட்ட மாலைக்கு ஸமமாகச் சொல்லப்பட்டது.

कामाक्षि शीतलकृपारसनिर्झराम्भः
संपर्कपक्ष्मलरुचिस्त्वदपाङ्गमाला।
गोभिः सदा पुररिपोरभिलष्यमाणा
दूर्वाकदम्बकविडम्बनमातनोति।।५७।।

காமாக்ஷி சீதல க்ருபாரஸ நிர்ஜராம்ப:
ஸம்பர்க்க பக்ஷமலருசி: த்வத் அபாங்கமாலா।
கோபி: ஸதா புரரிபோ: அபிலஷ்யமாணா
தூர்வா கதம்பக விடம்பனம் ஆதனோதி।।57।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
த்வத் அபாங்கமாலா	*உனது கடாக்ஷத்தின் வரிசையானது,*
சீதல	*குளிர்ந்ததான*
க்ருபாரஸ	*உனது க்ருபாரஸமென்ற்அ*
நிர்ஜராம்ப:	*நீர்வீழ்ச்சியின் ஜலத்தின்*
ஸம்பர்க்க பக்ஷ்மலருசி:	*ஸம்பந்தத்தால் செழிப்பாயிருப்பதும்*
ஸதா	*எப்பொழுதும்*
புரரிபோ:	*பரமசிவனுடைய*
கோபி: அபிலஷ்யமாணா	*கண்களால் விரும்பப்பட்டதுமான*
தூர்வா கதம்பக	*அருகம்புல்லின் கூட்டத்தினுடைய (வனத்தினுடைய)*
விடம்பனம் ஆதனோதி	*ஸாம்யத்தை அதைப் போலிருக்கும் தன்மையை (அடைகிறது).*

(57) ஹே! காமாக்ஷி! உனது கடைக்கண் வரிசையானது, சீதளமான உனது கிருபையாகிற ஜலத்தால் செழித்த தாயும் திரிபுர ஸம்ஹாரியான சிவனுடைய கண்களால் (பசுக்களால்) எப்போதும் ஆசைப்படக் கூடியதுமான அருகம்புல்லின் ஸமத்வத்தைஅடைகிறது.

இதில் அம்பிகையின் கடாக்ஷ மாலையை ஒரு அருகம்புல் கூட்டத்திற்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. ரஸமென்றால் ஜலமென்றும் அர்த்தம். கோ என்றால் கண்ணைக் குறிப்பதுடன் பசுவையும் குறிக்கும், கடாக்ஷமானது சீதளமான கருணரஸம் பாய்வதினால் செழிப்பாயும் எக்காலமும் பரமசிவனுடைய கோக்களால் (கண்களால்) விரும்பப்பட்டதாயுமிருப்பதால், ஸதா விழுந்து கொண்டிருக்கும் நீர்வீழ்ச்சியின் அருகிலிருப்பதால் செழுமையாயும் கோக்களால், (பசுக்களால்) ஸதாகாலமும் விரும்பப்படுவதுமான அருகம்புல் வனத்திற்கு கடாக்ஷமாலையை ஒப்பிடப்பட்டது.

हृत्पङ्कजं मम विकासयतु प्रमुष्णन्
उल्लासमुत्पलरुचेस्तमसां निरोद्धा।
दोषानुषङ्ग जडतां जगतां धुनानः
कामाक्षि वीक्षणविलासदिनोदयस्ते।।५८।।

ஹ்ருத் பங்கஜம் மம விகாஸயது ப்ரமுஷ்ணன்
உல்லாஸமுத்பலருசேஸ் தமஸாம் நிரோத்தா।
தோஷானுஷங்க ஜடதாம் ஜகதாம் துனான:
காமாக்ஷி வீக்ஷண விலாஸ தினோதயஸ்தே।।

காமாக்ஷி — ஹே காமாக்ஷி!

தே — உன்னுடைய

வீக்ஷண விலாஸ	பார்வையின் அழகாகிற
தினோதய:	பகற்காலத்தின் ஆரம்பமானது (ஸூர்யோதயமானது)
உத்பலருசே: உல்லாசம்	நீலோத்பலங்களின் அழகை (காந்தியை)
ப்ரமுஷ்ணன்	அதிகமாக அடைந்துகொண்டு
தமஸாம் நிரோத்தா	இருட்டைப் போக்கடிப்பதாய்
ஜகதாம்	லோகங்களுடைய
தோஷானுஷங்க ஜடதாம்	தோஷங்களால் ஏற்படும் ஜாட்யத்தை
துனான:	அகற்றுவதாய்
மம ஹ்ருத்பங்கஜம்	எனது ஹ்ருதயமாகிற தாமரையை
விகாஸயது	மலரச்செய்யட்டும்

(58) ஹே! காமாக்ஷி! உனது கடாக்ஷமாகிற ஸூர்யோதயமானது, நீலோத்பல புஷ்பங்களின் காந்தியை தோற்கடித்தும், இருட்டை விலக்கியும் லோகத்தினுடைய ஜடத்தன்மை என்கிற குளிரையும் விலக்கி எனது ஹிருதயமாகிற தாமரைப்பூவைமலரச் செய்யட்டும்.

1. இதில் அம்பாளுடைய பார்வையை ஸூர்யோதயத்திற்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. ஆயினும் பார்வையைக் கருப்பு நிறமுள்ளதாக வர்ணிப்பது வழக்கமாகையால் அதை அனுஸரித்து 'உத்பலருசே: உல்லாஸம் ப்ரமுஷ்ணன்' என்று சொல்லப்பட்டது. தமஸ் என்றால் இருட்டு என்ற அர்த்தமிருப்பதுடன் பாபம் என்ற அர்த்தமுண்டு. பாபத்தைக் கருப்பு நிறமுள்ளதாக வர்ணிப்பது கவிகளின் ஸம்ப்ரதாயம். அம்பிகையின் கடாக்ஷ

மானது பாபத்தைப் போக்குவதால் 'தமசாம் நிரோத்தா' என்று சொல்லப்பட்டது.

2. தினோதய: என்பது (தினத்தை உதயம் செய்வதால்) ஸூர்யனைக் குறிப்பதாகவும் சொல்லலாம்.

चक्षुर्विमोहयति चन्द्रविभूषणस्य
कामाक्षि तावककटाक्षतम: प्ररोह:।
प्रत्यङ्मुखं तु नयनं स्तिमितं मुनीनां
प्राकाश्यमेव नयतीति परं विचित्रम्।।५९।।

சக்ஷுர்விமோஹயதி சந்த்ர விபூஷணஸ்ய
காமாக்ஷி தாவக கடாக்ஷ: தம: ப்ரரோஹ:।
ப்ரத்யங்முகம் து நயனம் ஸ்திமிதம் முனீனாம்
ப்ராகாச்யமேவ நயதீதி பரம்விசித்ரம்।।59।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
தாவக கடாக்ஷ	உனது பார்வையென்கிற
தம: ப்ரரோஹ:	இருட்டின் ஆவிர்பாவமானது
சந்த்ர விபூஷணஸ்ய	(சந்திரனை சிரோபூஷணமாக உடைய,பரமசிவனுடைய
சக்ஷுர் விமோஹயதி	கண்களை மயக்குகிறது
து	ஆயினும்
முனீனாம்	யோகிகளுடைய
ப்ரத்யங் முகம்	உள்நோக்கியதும்
ஸ்திமிதம்	அசைவற்றதுமான
நயனம்	கண்ணை (த்ருஷ்டியை)
ப்ரகாஶ்யமேவ நயதி	வெளிச்சத்தோடிருக்கச் செய்கிறது

இதி	என்பதானது
பரம் விசித்ரம்	மிகுந்த ஆச்சர்யம்।

(59) ஹே! காமாக்ஷி! உனது கடாக்ஷமாகிற தமஸ் இருட்டு விளைவானது சந்திரமௌளியான பரம சிவனின் கண்ணை மோஹிக்கச் செய்கிறது. ஆனால், அது யோகிகளுடைய அசைவற்ற உள் கண்ணை வெளிச்சத்துடன் விளங்கச் செய்கிறதென்பது ஆச்சர்யம்.

கடாக்ஷமானது கருப்புநிறமுடையதால் அதை 'தம: ப்ரரோஹ:' என்று சொல்லப்பட்டது. அந்த இருட்டினால் பரமசிவனுக்கு கண்கள் தெரியாமல் மயங்குகையில் அந்தர் முகமானதும் அசைவற்றதுமான யோகிகளுடைய பார்வையானது ப்ரகாசத்தை யடைகிறது. இந்த ஆச்சர்யத்தை கவியானவர் இதில் வர்ணிக்கிறார். இதனால் பரமசிவன் அம்பிகையின் கடாக்ஷ விசேஷத்தினால் முனீச்வரர்களுடைய ஹ்ருதயமானது ப்ரகாசத்தை (பரிசுத்தத்தை) அடைவதும் சொல்லப்பட்டது.

कामाक्षि वीक्षणरुचा युधिनिर्जितं ते
नीलोत्पलं निरवशेषगताभिमानम्।
आगत्य तत्परिसरं श्रवणावतंस-
व्याजेन नूनमभयार्थनमातनोति।।६०।।

காமாக்ஷி வீக்ஷணருசா யுதி நிர்ஜிதம் தே
நீலோத்பலம் நிரவ ஶேஷ கதாபிமானம்।
ஆகத்ய தத் பரிஸரம் ச்ரவணாவதம்ஸ-
வ்யாஜேன நூனம் அபயார்த்தனம் ஆதனோதி।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
தே விக்ஷணருசா	உனது பார்வையின் காந்தியினால்
யுதி நிர்ஜிதம்	யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டதான
நீலோத்பலம்	நீலோத்பலமானது
நிரவஶேஷ கதாபிமானம்	மானத்தை முற்றிலுமிழந்ததாய்
தத்பரிஸரம்	அந்தப் பார்வையின் ஸமீபத்தை
ஶ்ரவணாவதம்ஸ வ்யாஜேன	காதிற்கு அலங்காரமென்ற வ்யாஜத்தினால்
ஆகத்ய	அடைந்து
அபயார்த்தனம் ஆதனோதி	அபயத்தை வேண்டுகிறது
நூனம்	இதில் ஸந்தேஹமில்லை

(60) ஹே! காமாக்ஷி! உனது கடாக்ஷ சோபையால் ஜயிக்கப்பட்ட நீலோத்பல புஷ்பமானது, கர்வத்தை அடியோடு விட்டுவிட்டு, உனது காதில் இருக்கும் வியாஜத்தினால் கடாக்ஷத்தினிடம் வந்து அபயம் வேண்டுகிறது.

உத்தம ஸ்த்ரீகள் காதுகளில் புஷ்பங்களை அணிவது ஓர் அலங்காரமாகும். அவ்வித புஷ்பத்தை 'ச்ரவணாவதம்ஸம்' 'கர்ணாவதம்ஸம்' என்று சொல்லப்படும். இவ்விதம் அம்பிகை தன் காதில் நீலோத்பலத்தை அணிந்திருப்பதை இங்கு வேறு காரணம் சொல்லி வர்ணிக்கப்பட்டது.

आश्चर्यमम्ब वदनाभ्युदयावलम्बः
कामाक्षि चञ्चलनिरीक्षणविभ्रमस्ते ।

धैर्यम् विधूय तनुते हृदि रागबन्धं
शंभोस्तदेव विपरीततया मुनीनाम्॥६१॥

ஆச்சர்யமம்ப வதனாப்யுதயாவலம்ப:
காமாக்ஷி சஞ்சல நிரீக்ஷண விப்ரமஸ்தே।
தைர்யம் விதூய தனுதே ஹ்ருதி ராகபந்தம்
ஶம்போஸ் ததேவ விபரீததயா முனீனாம்॥

அம்ப காமாக்ஷி	*தாயே! காமாக்ஷி!*
வதனாப்யுதயாவலம்ப:	*உனது முகத்தின் மேன்மைக்கு ஆதாரமாயிருக்கும்*
தே	*உனது*
சஞ்சல நிரீக்ஷண	*சஞ்சலமான பார்வையின்*
விப்ரம:	*அழகானது*
ஶம்போ:	*பரமசிவனுடைய*
தைர்யம் விதூய	*தைர்யத்தைப்போக்கி*
ஹ்ருதி	*அவருடைய மனதில்*
ராகபந்தம் கரோதி	*ஆசையினுடைய கட்டை உண்டுபண்ணுகிறது (அப்படியிருக்க)*
தத் ஏவ	*அதே பார்வையானது*
விபரீததயா	*அதற்கு மாறுபாடாக*
முனீனாம்	*முனிகளுடைய யோகிகளுடைய (பக்தர்களுடைய)*
ஹ்ருதி	*மனதில்*
ராகபந்தம் விதூய	*ஆசையின் கட்டைப்போக்கி*

தைர்யம் தனுதே	தைர்யத்தை உண்டுபண்ணுகிறது
ஆச்சர்யம்	(இது) ஆச்சர்யம்

(61) தாயே! காமாக்ஷி! உனது முகசோபைக்குக் காரணமாயிருக்கும் உன் சஞ்சல கடாக்ஷ பார்வையின் விலாஸமானது பரமசிவனின் மனதில் தைர்யத்தைப் போக்கி ராகத்தை (ஆசையை) உண்டு பண்ணுகிறது. ஆனால் அந்த கடாக்ஷமே யோகிகளுக்கு மனதில் ராகத்தைப்போக்கி தைர்யத்தைக் கொடுக்கிறதென்பது ஆச்சர்யம்.

जन्तोः सकृत्प्रणमतो जगदीड्यतां च
तेजस्वितां च निशितां च मतिं सभायाम्।
कामाक्षि माक्षिकझरीमिव वैखरीम् च
लक्ष्मीं च पक्ष्मलयति क्षणवीक्षणं ते।।६२।।

ஜந்தோ: ஸக்ருத ப்ரணமதோ ஜகதீட்யதாம் ச
தேஜஸ்விதாம் ச நிசிதாம் ச மதிம் ஸபாயாம்।
காமாக்ஷி மாக்ஷிக ஜரீமிவ வைகரீம் ச
லக்ஷ்மீம் ச பக்ஷ்மலயதி க்ஷண வீக்ஷணம் தே।।62।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
தே க்ஷணவீக்ஷணம்	உனது க்ஷணநேரப் பார்வையானது
ஸக்ருத் ப்ரணமத:	ஒருமுறை நமஸ்காரம் செய்த
ஜந்தோ:	மனுஷ்யனுக்கு
ஜகதீட்யதாம் ச	லோகத்தார்களால் புகழப்படுதலையும்
தேஜஸ்விதாம் ச	தேஜஸ்ஸோடிருத்தலையும்
நிஶிதாம் மதிம் ச	கூர்மையான புத்தியையும்

ஸபாயாம்	ஸபையில்
மாக்ஷிக ஜரீமிவ	தேனின் பெருக்குபோன்ற
வைகரீம் ச	வாக்கையும்
லக்ஷ்மீம் ச	செல்வதையும்
பக்ஷ்மலயதி	அதிகரிக்கச்செய்கிறது

(62) காமாக்ஷியே! உனது ஒரு க்ஷணப் பார்வையானது உன்னை நமஸ்கரிக்கும் ஜந்துவுக்கு உலகத்தால் கொண்டாடத்தக்க நிலைமையையும், தேஜஸ்ஸையும் ஸபையில் ஸூக்ஷ்மமான புத்தியையும் தேனுக்பொப்பான வாக்ஜரியையும், ஐச்வர்யத்தையும் அதிகரிக்கச் செய்கிறது.

1. இதில் அம்பிகையை ஒரு தடவை நமஸ்கரித்தாலேயே அவன்மீது அம்பிகையின் பார்வையானது க்ஷணநேரம் பட்டாலும் அவ்வித அனுக்ரஹம் பெற்றவனுக்கு ஏற்படும் விசேஷ நன்மைகளைப் பற்றிச் சொல்லப்பட்டது. இம்மாதிரி ஸகல ஸௌபாக்கியங்களும் அம்பிகையின் பக்தர்களுக்கு ஏற்படுவதைப்பற்றிப் பலவிதமாக கவிகளால் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

2. ஜரீ என்றால் நீர்வீழ்ச்சி, ஊற்று, அருவி என்றர்த்தம்.

3. அம்பிகையை ஒரு முறை நமஸ்காரம் செய்தவனுக்கே இப்படி ச்லாக்யமான கவித்வமானது ஏற்படுவதை ஸ்ரீ மதாசார்யாளும்.

'ஸக்ருன்னத்வா கதமிவ ஸதாம் ஸன்னிதததே
மது க்ஷீர த்ராக்ஷா மதுரிம துரீணா: பணிதய:'

என்பதாக 'ஸௌந்தர்யலஹறி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

कादम्बिनी किमयते न जलानुषङ्गं
भृङ्गावली किमुररीकुरुते न पद्मम्।
किं वा कलिन्दतनया सहते न गङ्गां
कामाक्षि निश्चयपदं न तवाक्षिलक्ष्मीः॥६३॥

காதம்பினீ கிமயதே ந ஜலானுஷங்கம்
ப்ருங்காவலீ கிமுரரீகுருதே ந பத்மம்।
கிம் வா கலிந்ததனயா ஸஹதே ந கங்காம்
காமாக்ஷி நிச்சயபதம் ந தவாக்ஷிலக்ஷ்மீ:॥63॥

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
காதம்பினீ	*மேகங்களின் கூட்டமானது*
ஜலானுஷங்கம்	*ஜலத்தின் ஸம்பந்தத்தை*
அயதே ந கிம்	*அடையவில்லையா?*
ப்ருங்காவலீ	*வண்டுகளின் கூட்டமானது*
பத்மம்	*தாமரஸ புஷ்பத்தை*
உரரீகுருதே ந கிம்	*ஒப்புக்கொள்கிறதில்லையா (சேர்த்துக்கொள்கிறதில்லையா)*
வா	*அல்லது*
கலிந்த தனயா	*யமுனா நதியானது*
கங்காம்	*கங்கையை*
ஸஹதே ந கிம்	*பொறுத்துக்கொள்வதில்லையா (சேருகிறதில்லையா)*
தவ அக்ஷிலக்ஷ்மீ:	*உனது கடாக்ஷ லக்ஷ்மியானது*
நிச்சய பதம் ந	*நிச்சயமாயி (ஸ்திரமாய், சஞ்சலமில்லாமல்) இருக்கும் தன்மை (ஏன் அடைகிறது) இல்லை.*

(63) மேகங்கள் ஜல ஸம்பந்தத்தை அடைகின்றன, வண்டுகள் தாமரைப்பூவின் சேர்க்கையை அடையவில்லையா? யமுனையானது கங்கையின் சேர்க்கையை ஸஹிக்கவில்லையா? உனது கடாக்ஷ சோபை மட்டும் நிச்சயமற்ற நிலைமையிலிருப்பதேன்?

काकोलपावकतृणीकरणेऽपि दक्षं
कामाक्षि बालकसुधाकरशेखरस्य।
अत्यन्तशीतलतमोऽप्यनुपारतं ते
चित्तं विमोहयति चित्रमयं कटाक्षः॥६४॥

காகோல பாவக த்ருணீகரணே஽பி தக்ஷம்
காமாக்ஷி பாலக ஸுதாகர சேகரஸ்ய।
அத்யந்த சீதலதமோ஽ப்யனுபாரதம் தே
சித்தம் விமோஹயதி சித்ரமயம் கடாக்ஷ:॥64॥

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
அயம் தே கடாக்ஷ:	இந்த உனது கடாக்ஷமானது
அத்யந்த ஶீதலம் அபி	தான் மிகுந்த குளிர்ச்சியுடையதாயிருந்த போதிலும்
பாலக ஸுதாகர சேகரஸ்ய	பாலசந்திரனை சிரோபூஷணமாயுடைய பரமசிவனுடைய
சித்தம்	மனதை (அது)
காகோல பாவக	(காலகூட) விஷாக்னியையும்
த்ருணீகரணே தக்ஷம் அபி	த்ருணமாத்ரமாகச் செய்வதில் ஸாமர்த்யமுடையதாயிருப்பிலும்
அனுபாரதம்	இடைவிடாமல் (எப்போதும்)
விமோஹயதி	மோஹமடையச் செய்கிறது
சித்ரம்	(இது) ஆச்சர்யம்!

(64) காமாக்ஷியின் கடாக்ஷமானது மிகவும் குளிர்ச்சியுள்ளதான பாலசந்திரனை சிரஸில் பூஷணமாகக் கொண்ட பரமசிவனுடைய, கால கூட விஷ அக்னியைக்கூட அலக்ஷ்யம் செய்யக்கூடிய மனதைக்கூட மோஹிக்கச் செய்யக்கூடியதாயிருப்பது ஆச்சர்யம்.

1. அத்யுக்ரமான காலகூட விஷத்தின் அக்னி ஜ்வாலைகளுக்கும் அஞ்சாத பரமசிவனுடைய மனதானது, அம்பிகையின் கடாக்ஷம் அத்யந்தம் குளிர்ச்சி பொருந்தியதாயிருந்த போதிலும் அதற்கு வசப்பட்டு மயங்குகிறதே, இந்த ஆச்சர்யத்தை என்னென்று சொல்வது என்று கவியானவர் வர்ணிக்கிறார்.

2. பரமசிவனுடைய சிரோபூஷணமாயிருக்கும் சந்த்ரனானவன் எப்போதும் பாலசந்தர னாயிருப்பதாக வர்ணிப்பது கவிகளின் ஸம்ப்ரதாயம்.

कार्पण्यपूररसवर्धितमम्ब मोह
कन्दोद्गतं भवमयं विषपादपं मे।
तुङ्गं छिनत्तु तुहिनाद्रिसुते भवत्या:
काञ्चीपुरेश्वरि कटाक्षकुठारधारा।।६५।।

கார்பண்யபூர ரஸவர்த்திதமம்பமோஹ
கந்தோத்கதம் பவமயம் விஷபாதபம் மே।
துங்கம் சினத்து துஹினாத்ரிஸுதே பவத்யா:
காஞ்சீபுரேஶ்வரீ கடாக்ஷ குடார தாரா।।65।।

அம்ப	தாயே!
துஹினாத்ரி ஸுதே	ஹிமவானுடைய பெண்ணே!
காஞ்சீபுரேச்வரீ	காஞ்சீ நகரத்திற்கு ஈச்வரியாயிருப்பவளே!

பவத்யா:	உன்னுடைய
கடாக்ஷ குடாரதாரா	கடாக்ஷமாகிற கோடாலியின் கூர்ப்பான முளையானது
மே	என்னுடையதான
கார்பண்யபூர ரஸ வர்த்திதம்	தாரித்ரியமாகிறவெள்ள ஜலத்தினால் வளரச்செய்யப்பட்டதும்
மோஹகந்தோத்கதம்	மோஹமென்கிற வித்திலிருந்து உண்டானதும்
பவமயம்	ஸம்ஸாரமென்பதையே ஸ்வரூபமாயுடையதும்
துங்கம்	மிகுந்த உயரத்தையுடையதுமான
விஷ பாதபம்	விஷவ்ருக்ஷத்தை
சினத்து	வெட்டி எறியட்டும்.

(65) காஞ்சிபுரேச்வரியும் ஹிமயமலையின் புத்ரியுமான காமாக்ஷியே! உனது கடாக்ஷமாகிற கோடரியானது தரித்ததன்மையாகிற ஜலத்தால் வளர்ந்ததாயும், மோஹமாகிற முளையிலிருந்து கிளம்பியதுமான ஸம்ஸாரரூபமான விஷவிருக்ஷத்தைவெட்டட்டும்.

कामाक्षि घोरभवरोगचिकित्सनार्थम्
अभ्यर्थ्य देशिककटाक्षभिषक्प्रसादात्।
तत्रापि देवि लभते सुकृती कदाचित्
अत्यन्तदुर्लभमपाङ्गमहौषधं ते ।।६६।।

காமாக்ஷி கோர பவரோக சிகித்ஸனார்த்தம்
அப்யர்த்ய தேசிக கடாக்ஷ பிஷக் ப்ரஸாதாத்।

தத்ராபி தேவி லபதே ஸுக்ருதீ கதாசித்
அத்யந்த துர்லபம் அபாங்க மஹௌஷதம் தே॥66॥

காமாக்ஷி தேவி	*ஹே காமாக்ஷி! தேவி!*
கோர பவரோக	*கோரமான ஸம்ஸாரமென்ற வியாதியை*
சிகித்ஸனார்த்தம்	*போக்கிக் கொள்வதற்காக*
ஸுக்ருதி	*புண்யசாலியானவள்*
அப்யர்த்ய	*விசேஷமாகப் ப்ரார்த்தனை செய்து*
தேசிக கடாக்ஷ	*குருநாதருடைய கடாக்ஷமாகிற*
பிஷக் ப்ரஸாதாத்	*வைத்யனுடைய அநுக்ரஹத்தால்*
தத்ராபி கதாசித்	*அதிலும் எப்போதாவது ஒரு சமயம்*
அத்யந்த துர்லபம்	*கிடைப்பதற்கு மிகவும் அரிதான*
தே அபாங்க மஹௌஷதம்	*உனது கடாக்ஷமாகிற உயர்ந்த ஔஷதத்தை*
லபதே	*அடைகிறாள்*

(66) தேவி! காமாக்ஷி! புண்யசாளியாயிருப்பவள், ஸம்ஸாரமாகிற ரோகத்தைப் போக்கிக்கொள்ள, ஆசார்ய கடாக்ஷமாகிற வைத்யனின் கிருபையால் உனது கடாக்ஷமாகிற மஹா ஔஷதத்தைப் பெறுகிறாள்.

1. இதில் ஸம்ஸாரத்தை கோரமான ரோகமாகவும், அம்பிகையின் கடாக்ஷத்தை அந்த ரோகத்தைப் போக்கவல்ல மஹௌஷதமாகவும், குரு நாதருடைய அநுக்ரஹத்தை அவ்விதமான ஔஷதத்தைக் கொடுக்கும் வைத்தியனாகவும்

வர்ணிக்கப்பட்டது. ரோகங்களில் ஸம்ஸார (பவ)மென்ற ரோகமே மிகக் கொடியதென்று சொல்வது வழக்கம்.

2. அம்பிகையின் கடாக்ஷமானது ஸுக்ருத்தாயிருந்தும் புண்ய கார்யங்களைச் செய்வதனாயிருந்தும்) குருவின் அனுக்ரஹம் கிடைக்கப்பெற்றும், வெகுகாலம் அப்யர்த்தனம் செய்தும் எப்போதாவது ஒரு ஸமயம் கிடைக்கக் கூடியதாயிருப்பதால், அதை 'அத்யந்த துர்லபம்' என்று இங்கு சொல்லப்பட்டது.

कामाक्षि देशिककृपाङ्कुरमाश्रयन्तो
नानातपोनियम नाशितपाशबन्धाः।
वासालयं तव कटाक्षममुं महान्तो
लब्ध्वा सुखं समधियो विचरन्ति लोके।।६७।।

காமாக்ஷி தேஶிக க்ருபாங்குரம் ஆச்ரயந்தோ
நாநா தபோநியம நாஶித பாசபந்தா:।
வாஸாலயம் தவ கடாக்ஷமமும் மஹாந்தோ
லப்த்வா ஸுகம் ஸமதியோ விசரந்தி லோகே।।67।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
தேசிக க்ருபாங்குரம்	ஆச்சார்யனுடைய க்ருபையை
அச்ரயந்த:	ஆச்ரயித்தவர்களும் (அடைந்தவர்களும்)
நானா தபோநியம	நானாவிதமான தபஸ்ஸுகளாலும் நியமங்களாலும்
நாஶித பாச பந்தா:	பாசங்களின் பந்தங்களைப் போக்கிக்கொண்டவர்களுமான
மஹாந்த:	மஹான்கள்

அமும் தவ கடாக்ஷம்	இந்த உனது கடாக்ஷமாகிற
வாஸாலயம்	வீட்டை
லப்த்வா	அடைந்து
ஸமதிய:	ஸமபுத்தியுள்ளவர்களாய்
லோகே ஸுகம் விசரந்தி	லோகத்தில் ஸுகமாக ஸஞ்சரிக்கிறார்கள்

(67) காமாக்ஷி! மஹான்கள், ஆசார்ய கிருபையைப் பெற்றும், நாநாவித தபஸ்களால் நசித்த ஸம்ஸார பாசத்தை உடையவர்களாக, உனது கடாக்ஷமாகிற கிருஹத்தை அடைந்து ஸமபுத்தியுடன் லோகத்தில் ஸஞ்சரிக்கிறார்கள்.

साकूतसंलपितगर्भितमुग्धहासं
व्रीडानुरागसहचारिविलोकनं ते।
कामाक्षि कामपरिपन्थिनि मारवीर–
साम्राज्यविभ्रमदशां सफलीकरोति।।६८।।

ஸாகூத ஸம்லபித கர்பித முக்த் ஹாஸம்
வ்ரீடானுராக ஸஹசாரி விலோகனம் தே।
காமாக்ஷி காம பரிபந்தினி மாரவீர
ஸாம்ராஜ்ய விப்ரம தஶாம் ஸபலீகரோதி।।68।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
ஸாகூத ஸம்லபித கர்பித	ச்ருங்காரகேளியான பேச்சின் ப்ாவம் நிறைந்ததான
முக்தஹாஸம்	மந்தஹாஸத்தோடு கூடியதும்
வ்ரீடானுராக ஸஹசாரி	நாணம் ப்ரியம் இவையுடையதுமான
தேவிலோகனம்	உனது பார்வையானது
காம பரிபந்தினி	பரமசிவனுடைய விஷயத்தில்

மாரவீர	*மன்மதனாகிற வீரனுடைய*
ஸாம்ராஜ்ய விப்ரமதசாம்	*ஸாம்ராஜ்யத்தின் ஆடம்பரத்தை*
ஸபலீ கரோதி	*ஸபலமாகச்செய்கிறது. (நிறைவேற்றுகிறது)*

(68) காமாக்ஷியே! சிருங்காரப் பேச்சின் போக்கு நிறைந்த மந்தஹாஸத்துடன் கூடியதும், வெட்கம், ஆசை இவைகளுடன் சேர்ந்ததுமான உனது கடாக்ஷமானது காமசத்ருவான பரமசிவனிடமும் மன்மத விலாஸங்களை ஸபலமாகச் செய்கிறது.

அதாவது, அவ்வித குணங்களோடு பொருந்திய கடாக்ஷத்தின் விசேஷத்தினால் மன்மதனானவன் பரமசிவனிடத்தில் கூட தன் ஸாம்ராஜ்யத்தை செலுத்த வல்லவனாக ஆகிறான் என்று சொல்லப்பட்டது.

कामाक्षि विभ्रमबलैकनिधिर्विधाय
भ्रूवल्लिचापकुटिलीकृतिमेव चित्रम्।
स्वाधीनतां तव निनाय शशाङ्कमौले:
अङ्गार्धराज्यसुखलाभमपाङ्गवीर:।।६९।।

காமாக்ஷி விப்ரம பலைக நிதிர்விதாய
ப்ரூவல்லி சாப குடிலீக்ருதிமேவ சித்ரம்।
ஸ்வாதீனதாம் தவ நினாய ஶஶாங்கமௌலே:
அங்கார்த்த ராஜ்யஸுகலாபம் அபாங்கவீர:।।69।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
அபாங்க வீர:	*உனது கடாக்ஷமாகிற வீரனானவன்*

விப்ரம பலைக நிதி:	*உனது விலாஸமாகிற ஒரே ஒத்தாசையை உடையவனாய்*
ப்ரூவல்லி சாபகுடிலீக்ருதிமேவ	*புருவக்கொடியாகிய வில்லை வளைக்கிற கார்யத்தை மட்டுமே*
விதாய	*செய்து*
பஶாங்க மௌலே:	*பரமசிவனுடைய*
அங்கார்த்த ராஜ்ய ஸுக லாபம்	*பாதி சரீரமாகிற ராஜ்ய ஸுகத்தின் ப்ரயோஜனத்தை*
தவ ஸ்வாதீனதாம் நினாய	*உனக்கு ஸ்வாதீனமாகச் செய்து விட்டான்*
சித்ரம்!	*இது ஆச்சர்யம்!*

(69) காமாக்ஷியே! உனது கடாக்ஷமாகிற யுத்தவீரன், உனது விலாஸத்தையே பலமாகக்கொண்டும், புருவக் கொடியாகிற வில்லை வளைக்கும் கார்யமொன்றையே செய்து பரமசிவனுடைய பாதிசரீரமாகிற அர்த்த ராஜ்யஸுக லாபத்தை உனக்கு ஸ்வாதீனமாகச் செய்தான்.

कामाङ्कुरैकनिलयस्तव दृष्टिपात:
कामाक्षि भक्तमनसां प्रददाति कामान्।
रागान्वित: स्वयमपि प्रकटीकरोति
वैराग्यमेव कथमेष महामुनीनाम्।।७०।।

காமாங்குரைக நிலயஸ்தவ த்ருஷ்டிபாத:
காமாக்ஷி பக்தமனஸாம் ப்ரததாதி காமான்।
ராகான்வித: ஸ்வயமபி ப்ரகடீகரோதி
வைராக்யமேவ கதமேஷ மஹாமுனீனாம்।।70।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
காமாங்குரைக நிலய:	காமத்தை முக்யமான இருப்பிடமாக உடைய (காமம் நிறைந்ததான)
தவ த்ருஷ்டிபாத:	உனது பார்வையானது
பக்த மனஸாம்	பக்தர்களுடைய மனங்களுக்கு
காமான் ப்ரததாதி	காமங்களை (அவர்களு டைய விருப்பங்களை) யதேஷ்டமாகக் கொடுக்கிறது (ஆயினும்)
ஏஷ: ஸ்வயம்	இந்த உனது கடாக்ஷமானது தான்
ராகான்வித: அபி	ராகத்தோடு (ஆசையோடு) கூடியிருந்த போதிலும்
மஹாமுனீனாம்	முனீச்வரர்களுக்கு
வைராக்யமேவ	வைராக்யத்தையே (ராகமில்லாதிருத்தலையே)
கதம் ப்ரகடீகரோதி	எப்படி உண்டுபண்ணுகிறது

(70) ஹே! காமாக்ஷி! காமத்திற்கு முக்ய இருப்பிடமான உனது கடாக்ஷமானது, பக்தர்களுக்கு காமங்களைக் கொடுக்கிறது. ஆனால் கடாக்ஷமானது ராகத்துடன் கூடியிருந்தபோதிலும் முனிகளுக்கு ராகமின்மையையே கொடுக்கிறதென்பது எப்படி?

1. பக்தர்களுடைய விருப்பங்களையெல்லம் அபரிமிதமாக கொடுப்பதால் அம்பாளுக்குக் காமாக்ஷியென்ற பெயர் ஏற்பட்டது என்பதைப்பற்றி, ஏற்கனவேயே சொல்லப்பட்டது.

2. ராகமென்றால் ஆசை பற்றுதல் என்று அர்த்தம். வைராக்யமென்றால் பற்றுதல் அற்றதான நிலைமை. அம்பிகையின் கடாக்ஷமானது தான் (பரமசிவனிடத்தில்) ராகத்தோடு (ஆசையோடு) இருந்தபோதிலும், முனீச்வரர்களுடைய மனதில் ராகமில்லாதிருத்தலை விஷயாதிகள் பற்றுதல் இல்லாதிருத்தலை) எப்படி உண்டு பண்ணுகிறது என்பதாக கவியானவர் ஆச்சர்யப்படுகிறார்.

कालाम्बुवाहनिवहै: कलहायते ते
कामाक्षि कालिममदेन सदा कटाक्ष:।
चित्रं तथापि नितराम् अमुमेव दृष्ट्वा
सोत्कण्ठ एव रमते किल नीलकण्ठ:।।७१।।

காலாம்புவாஹ நிவஹை: கலஹாயதே தே
காமாக்ஷி காலிம மதேன ஸதா கடாக்ஷ:।
சித்ரம் ததாபி நிதராம் அமுமேவ த்ருஷ்ட்வா
ஸோத்கண்ட ஏவ ரமதே கில நீலகண்ட:।।71।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
தே கடாக்ஷ:	உனது கடாக்ஷமானது
காலிம மதேன	தான் கருப்பாயிருக்கும் மதத்தினால் (கொழுப்பினால்)
காலாம்புவாஹ நிவஹை:	காளமேகங்களின் கூட்டங்களோடு
ஸதா கலஹாயதே	எப்போதும் கலஹம் செய்கிறது (சண்டை போடுகிறது)
ததாபி	அப்படி இருந்தும்
அமுமேவ	அதையே

நிதராம் த்ருஷ்ட்வா	அதிகமாக (எப்போதும்) பார்த்து
நீலகண்ட	நீலகண்டனான பரமசிவன்
ஸோத்கண்ட ஏவ	ஆசையோடு கூடவே
ரமதே கில	கூத்தாடுகிறார் (ஸந்தோஷப்படுகிறார்) அல்லவா
சித்ரம்	இது விசித்ரமாக இருக்கிறது

(71) ஹே! காமாக்ஷி! உனது கடாக்ஷமானது கருப்பாயிருக்கும் தன்மையால் காளமேகங்களுடன் சண்டையிடுகிறது. ஆயினும் கருப்புநிறமுள்ள கண்டத்துடன் நீலகண்டன் மட்டும் இதைக்கண்டு எப்போதும் ரஸிக்கிறான்.

1. மயிலின் கழுத்து நீலமாயிருப்பதால் அதற்கு நீலகண்டமென்று பெயர். பரமசிவன் ஹாலாஹல விஷத்தைத் தன் கழுத்தில் தரிப்பதால் அது சுத்த ஸ்படிக ஸங்காசமான சரீரத்தையுடைய அவருடைய கழுத்தில் நீல நிறமுள்ளதாகத் தோன்றுகிறது. ஆகவே அவருக்கும் நீலகண்டரென்று பெயர். இவ்விதமான பெயரின் ஒற்றுமையைக்கொண்டு அம்பிகையின் கடாக்ஷமானது இதில் வர்ணிக்கப்பட்டது.

2. காளமேகங்களை (நீருண்ட மேகங்களை) பார்த்து மயில்கள் ஸந்தோஷப்பட்டு நர்த்தனம் செய்வதாக வர்ணிப்பது கவிகளின் ஸம்ப்ரதாயம்.

3. அம்பாளுடைய கடாக்ஷமானது கறுப்பு நிறத்தில் நீருண்ட மேகங்களையும் தோற்கடிப்பதாக இருப்பதை அவைகளோடு கலஹம் செய்வதாக இங்கு சொல்லப்பட்டது. அப்படியிருந்தும் அந்த கடாக்ஷத்தைப்

பார்த்து (காளமேகங்களைக் கண்டு மயில்கள் நர்த்தனம் செய்வது போல்) நீலகண்டனான பரமசிவன் ஸந்தோஷமடைகிறாரே, இது என்ன ஆச்சரியம் என்று கவி வர்ணிக்கிறார்.

कामाक्षि मन्मथरिपुं प्रति मारताप–
मोहान्धकारजलदागमनेन नृत्यन्।
दुष्कर्मकञ्चुकिकुलं कबलीकरोतु
व्यामिश्रमेचकरुचिस्त्वदपाङ्गकेकी।।७२।।

காமாக்ஷி மன்மத ரிபும் ப்ரதிமாரதாப-
மோஹாந்தகார ஜலதாகமனேன ந்ருத்யன்।
துஷ்கர்ம கஞ்சுகிகுலம் கபலீகரோது
வ்யாமிச்ர மேசக ருசிஸ்த்வதபாங்ககேகீ।।72।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
வ்யாமிஸ்ர மேசக ருசி:	கலந்ததான மேகத்தின் காந்தியைப் போன்ற காந்தியுடையதான
த்வத் அபாங்ககேகீ	உனது கடைக்கண்ணாகிய மயிலானது
மாரதாப	மன்மத தாபத்தினால் உண்டான
மோஹாந்தகார	மோஹமென்ற இருட்டோடு கூடிய
ஜலதாகமனேன	வர்ஷா காலத்தின் வருகையினால்
மன்மதரிபும் ப்ரதி	பர்மசிவனுக்கு எதிரில்
ந்ருத்யன்	நர்த்தனம் செய்துகொண்டு
துஷ்கர்மகஞ்சுகி குலம்	(எனது) பாபகர்மாக்களாகிய ஸர்ப்பங்களின் கூட்டத்தை
கபலீகரோது	நாசம் செய்யட்டும்

(72) காமாக்ஷியே! உனது கடாக்ஷமாகிற குயிலானது மேககாந்தியை போன்றது. அது பரமசிவனின் எதிரில் நர்த்தனம் செய்து எனது பாபமாகிற பாம்புக்கூட்டத்தை கபளீகாரம் செய்யட்டும்.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை மயிலுக்கு ஒப்பிடப்பட்டது. வர்ஷாகாலத்தில் நீருண்ட மேகங்களைப் பார்த்து மயில்கள் ஸந்தோஷத்துடன் நர்த்தனம் செய்வது வழக்கம். அது தவிர, மயில்கள் ஸர்ப்பங்களுக்கு வைரிகள். இந்த இரண்டு அம்சங்களும் அம்பிகையின் கடாக்ஷத்திற்கு இருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

2. மேசகமென்றால் கருப்பு நிறத்தைத் தவிர மயில்களின் தோகையிலுள்ள கண்களுக்கும் பெயர்.

कामाक्षि मन्मथरिपोरवलोकनेषु
कान्तं पयोजमिव तावकमक्षिपातम्।
प्रेमागमो दिवसवद्विकचीकरोति
लज्जाभरो रजनिवत्मुकुलीकरोति।।७३।।

காமாக்ஷி மன்மத ரிபோரவலோகனேஷு
காந்தம் பயோஜமிவ தாவகம் அக்ஷிபாதம்।
ப்ரேமாகமோ திவஸவத் விகசீகரோதி
லஜ்ஜாப்பரோ ரஜனிவத் முகுலீகரோதி।।73।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
மன்மதரிபோ:	பரமசிவனுடைய
அவலோகனேஷு	பார்வைகளின் போது (அதாவது - பரமசிவன் பார்க்கும் காலங்களில்) பார்க்கும் போது

காந்தம் பயோஜமிவ	அழகான தாமரஸ புஷ்பம் போன்ற
தாவகம் அக்ஷிபாதம்	உனது பார்வையை
ப்ரேமாகம:	ப்ரியமானது
திவஸவத் விகஸீகரோதி	பகற்காலம்போல் மலரச்செய்கிறது
லஜ்ஜா பர:	அதிகமான லஜ்ஜையானது
ரஜனிவத்	ராத்திரிகாலம் போல்
முகுலீகரோதி	மூடச்செய்கிறது

(73) காமாக்ஷியே! பரமசிவன் உன்னைப் பார்க்கும்போது, உனது ப்ரேமையானது உன் கடாக்ஷத்தை தாமரைப்பூவைப் பகல்போல் மலரச் செய்கிறது. லஜ்ஜையோ வென்றால் இரவைப் போல் கடாக்ஷத்தை மூடச்செய்கிறது.

இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை தாமரஸ புஷ்பத்திற்கு ஸமமாக வர்ணிக்கப்பட்டது. தாமரஸ புஷ்பங்கள் பகற்காலங்களில் மலர்வதும். ராத்திரி காலங்களில் மூடுவதும் வழக்கம். அம்பிகையின் கடாக்ஷமானது பரமசிவனிடத்திலிருக்கும் ப்ரேமையின் காரணமாய் மலர்வதாலும் பதிவ்ரதைகளுக்கு ஸ்வபாவமாயிருக்கும் லஜ்ஜையினால் மூடுவதாகவும் வர்ணிக்கப்பட்டது. ஆகவே ப்ரேமையை பகலுக்கும், லஜ்ஜையை இரவுக்கும் ஒப்பிடப்பட்டது.

मूको विरिञ्चति परं पुरुष: कुरूप:
कंदर्पति त्रिदशराजति किंपचान:।
कामाक्षि केवलमुपक्रमकाल एव
लीलातरङ्गितकटाक्षरुच: क्षणं ते।।७४।।

மூகோ விரிஞ்சதி பரம் புருஷ: குரூப:
கந்தர்பதி த்ரிதஶராஜதி கிம்பசாந:।
காமாக்ஷி கேவலம் உபக்ரம கால ஏவ
லீலா தரங்கித கடாக்ஷருச: க்ஷணம் தே।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
லீலாதரங்கித	காமகேளிகளுடைய பாவம் நிறைந்ததான
தே கடாக்ஷ ருச:	உனது கடாக்ஷத்தின் காந்திகள்
கேவலம் உபக்ரம கால ஏவ	கேவலம் ஆரம்பிக்கும்போதே (பக்தன்மீது படுவதற்கு ஆரம்பிக்கும்போதே
க்ஷணம்	ஒரு க்ஷணகாலத்திற்குள்
மூகோ விரிஞ்சதி	ஊமையாயிருக்கிறவன் ப்ரம்ஹாவைப்போல் ஆகிறான்
பரம் புருஷ: குரூப:	மிகவும் குரூபமாய் இருக்கிற மனிதன் (வெறுக்கப்படும் ரூபத்தையுடையவன்)
கந்தர்பதி	மன்மதன் போலாகிறான்
கிம் பசான:	மிகவும் தரித்திரனாயிருப்பவன்
த்ரிதஶ ராஜதி	தேவந்திரனாக ஆகிவிடுகிறான்

(74) காமாக்ஷி! லீலையுடன் கூடிய உனது கடாக்ஷ காந்தியானது மனிதன் மீது விழுந்த க்ஷணத்திலேயே அவன் ஊமையனாயிருந்தால் பிரம்மாவாகிறான். குரூபியாயிருந்தால் மன்மதனாகிறான். ஏழை யாயிருந்தால் இந்திரனாகிறான்.

नीलालका मधुकरन्ति मनोज्ञनासा–
मुक्तारुचः प्रकटरूढबिसाङ्कुरन्ति।

कारुण्यमम्ब मकरन्दति कामकोटि
मन्ये तत: कमलमेव विलोकनं ते।।७५।।

நீலாலகா மதுகரந்தி மனோக்ஞ நாஸா -
முக்தாருச: ப்ரகடரூட பிஸாங்குரந்தி।
காருண்யமம்ப மகரந்ததி காமகோடி
மன்யே தத: கமலமேவ விலோகனம் தே।।

அம்ப காமகோடி	*தாயே காமகோடி!*
நீலாலகா:	*உனது கருத்த கூந்தல்கள்*
மதுகாந்தி	*வண்டுகளாக இருக்கின்றன*
மனோக்ஞ நாஸா	*அழகான (உனது) மூக்கில் அணியப்பட்டிருக்கும்*
முக்தாருச:	*(மூக்குத்தி) முகத்தின் காந்திகள்*
ப்ரகடரூட பிஸாங்குரந்தி	*வெளிப்படையாக வளர்ந்திருக்கும் தாமரைத் தண்டின் முளைகள் போலிருக்கின்றன.*
காருண்யம்	*உனது கருணையானது*
மகரந்ததி	*பூத்தேன்போல் பெருகுகிறது*
தத:	*அதிலிருந்து*
தே விலோகனம்	*உனது பார்வையானது*
கமல மேவ	*தாமரஸ புஷ்பமென்றே*
மன்யே	*நான் நினைக்கிறேன்*

(75) காமகோடியே! உன்னுடைய கடாக்ஷமானது தாமரைப் பூவாகவே தோன்றுகிறது. அந்தப் பூவுக்கு உனது கரும்

தலைமயிர்கள் வண்டுகள் போலவும், மூக்கிலுள்ள முத்துக்கள் தாமரை மணிபோலவும், உனது காருண்யம் தேன் போலவும் இருக்கிறது.

இதில் அம்பிகையின் பார்வையைத் தாமரஸ புஷ்பமாகவும், கூந்தல்களை அந்த புஷ்பத்தில் மொய்த்துக் கொண்டிருக்கும் வண்டு தானாகவும், மூக்குத்தி முத்தின் காந்திகளை அந்த புஷ்பத்தின் வண்டிலுள்ள முனைகளாகவும், அம்பிகையின் காருண்யத்தை அந்த புஷ்பத்திலிருந்து பெருகும் தேனாகவும் வர்ணிக்கப்பட்டது. அம்பிகையின் அபார கருணையானது அவளுடைய கடாக்ஷத்திலிருந்தே வெளிப்படுவதால் அம்பிகையின் லோசன பத்மத்திலிருந்து பெருகும் தேனாக இங்கு சொல்லப்பட்டது.

आकाङ्क्ष्यमाणफलदान विचक्षणाया:
कामाक्षि तावक कटाक्षक कामधेनो :।
संपर्क एव कथमम्ब विमुक्तपाश–
बन्धा: स्फुटं तनुभृत: पशुतां त्यजन्ति।।७६।।

ஆகாங்க்ஷ்யமாண பலதான விசக்ஷணாயா:
காமாக்ஷி தாவக கடாக்ஷக காமதேனோ:।
ஸம்பர்க்க ஏவ கதமம்ப விமுக்தபாச
பந்தா: ஸ்புடம் தனுப்ருத: பசுதாம் த்யஜந்தி।।76।।

காமாக்ஷி, அம்ப	*ஹே காமாக்ஷி! தாயே!*
ஆகாங்க்ஷ்யமாண	*விரும்பப்பட்ட*
பலதான விசக்ஷணாயா:	*பலன்களைக் கொடுப்பதில் ஸாமர்த்தியமுள்ள*
தாவக	*உனது*

கடாக்ஷக காமதேனோ:	கடாக்ஷமாகிற காமதேனுவினுடைய
ஸம்பர்க்க ஏவ	ஸம்பந்த மேற்பட்டவுடனேயே
தனுப்ருத:	(சரீரிகள்) மனிதர்கள்
விமுக்தபாசபந்தா:	பாசங்களின் கட்டுகளிலிருந்த விசேஷமாக விடுவிக்கப்பட்டவர்களாய்
பசுதாம்	பசு ஸ்வபாவத்தை (பசுவாயிருக்கும் தன்மையை)
ஸ்புடம்	தெளிவாக முழுமையும்
கதம் த்யஜந்தி	எப்படி விட்டுவிடுகிறார்கள்

(76) அம்ப! காமாக்ஷி! இஷ்டமான பலன்களைக் கொடுக்கக் கூடியதான உனது கடாக்ஷமாகிற காமதேனுவின் ஸம்பந்தத்தாலேயே, சரீரிகள் பசுத் தன்மையை விட்டு, பாசத்திலிருந்து விடுபடுகிறார் களென்பது அதிசயம்!

1. பக்தர்கள் வேண்டும் வரன்கள் எல்லாவற்றையும் கொடுப்பதில் அம்பிகையின் கடாக்ஷமானது காமதேனுவுக்கு ஒப்பிடப்பட்டது. அப்படிச் சொன்னால் அதே கடாக்ஷமானது, காமதேனுவானது, அவர்கள் மீது பட்டவுடன் அவர்கள் ஸகல பாசங்களையும் துலைத் தெறிந்து பசுஸ்வ பாவத்தையே நீக்கப்பெறுகிறார்களே, இது எப்படி பசுவானது பாசத்தால் (கயிற்றால்) கட்டப்படும். அதே மாதிரி ஜனன மரணாதி, ராகத்வேஷாதி பாசங்களால் ஜீவன் கட்டுப்பட்டிருப்பதால் அவனையும் பசுவாகச் சொல்வது வழக்கம்.

2. ஆயினும் (அம்பிகையின் கடாக்ஷமாகிற) ஒரு பசுவினால் (ஜீவன்களாகிற) இதர பசுக்கள் தங்கள்

பாசங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு தங்களுடைய பசுபாவத்தையே போக்கடிக்கப்பெறும் ஆச்சர்யத்தை கவியானவர் இங்கு வர்ணிக்கிறார். அதாவது, அம்பிகையின் கடாக்ஷம் கிடைக்கப்பெற்ற மாத்திரத்திலேயே பகதர்கள் தங்களுடைய பாசங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு ஜீவன் முக்தியை அடைந்துவிடுகிறார்கள் என்பது தாத்பர்யம்.

संसारघर्मपरितापजुषां नराणां
कामाक्षि शीतलतराणि तवेक्षितानि।
चन्द्रातपन्ति घनचन्दनकर्दमन्ति
मुक्तागुणन्ति हिमवारिनिषेचनन्ति।।७७।।

ஸம்ஸாரகர்ம பரிதாபஜுஷாம் நராணாம்
காமாக்ஷி ஶீதலதராணி தவேக்ஷிதானி।
சந்த்ராதபந்தி கனசந்தன கர்தமந்தி
முக்தாகுணந்தி ஹிமவாரி நிஷேசனந்தி।।77।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
ஸம்ஸார கர்ம	*ஸம்ஸாரமாகிற கோடை காலத்திய*
பரிதாபஜுஷாம்	*அத்யந்தமான தாபத்தை அனுபவிக்கும்*
நராணாம்	*மனிதர்களுக்கு*
ஶீதலதராணி	*மிகவும் குளிர்ந்த்தான*
தவ ஈக்ஷிதானி	*உனது பார்வைகள்*
சந்த்ராதபந்தி	*நிலவாக விளங்குகின்றன*
கன சந்தன கர்தமந்தி	*கெட்டியான சந்தனக்குழம்பாக இருக்கின்றன*
முக்தா குணந்தி	*முத்துமாலையாக இருக்கின்றன*

ஹிமவாரி நிஷேசனந்தி — பனிஜலத்தைத் தெளித்தது போலுமிருக்கின்றன

(77) காமாக்ஷியே! ஸம்ஸார தாபத்தை அடைந்துள்ள ஜனங்களுக்கு, மிகவும் சீதனமான உனது கடாக்ஷப் பார்வைகள் சந்திரகிரணங்கள் போலவும், சந்தனக்குழம்பு போலவும், முத்துமாலை போலவும், பனிநீர் தாரைபோலவும் குளிர்ச்சிகரமாக இருக்கின்றன.

ஸம்ஸாரத்தை அத்யுஷ்ணமான கோடை காலமாகவும், அதினுடைய தாபத்தால் கஷ்டப்படும் ஸகல ஜனங்களுக்கும் கருணையினால் அத்யந்தம் குளிர்ந்த அம்பிகையின் கடாக்ஷமானது அந்த தாபத்தைப் போக்குவதால், (ஸாதாரணமாய் ஸூர்யனுடைய தாபத்தைப் போக்கும்) நிலவாகவும், சந்தனக் குழம்பாகவும், முத்துமாலையாகவும், பனிக்கட்டியின் ஜலமாகவும், இருப்பதாக இதில் வர்ணிக்கப்பட்டது.

प्रेमाम्बुराशिसततस्नपितानि चित्रं
कामाक्षि तावककटाक्षनिरीक्षितानि।
सन्धुक्षयन्ति मुहुरिन्धनराशिरीत्या–
मारद्रुहो मनसि मन्मथचित्रभानुम्।।७८।।

ப்ரேமாம்புராஶி ஸததஸ்னபிதானி சித்ரம்
காமாக்ஷி தாவக கடாக்ஷ நிரீக்ஷிதானி।
ஸம்துக்ஷயந்தி முஹுரிந்தனராஶி ரீத்யா
மாரத்ருஹோ மனஸி மன்மத சித்ரபானும்।।78।।

காமாக்ஷி — ஹே காமாக்ஷி!

ப்ரேமாம்புராஶி — அன்பாகிற ஜலக்கூட்டத்தால்

	(ப்ரவாஹத்தால்),
ஸததஸ்னபிதானி	எப்போதும் நனைக்கப்பட்டிருக்கும்
தாவக	உனது
கடாக்ஷநிரீக்ஷிதானி	கடைக்கண் பார்வைகள்
மாரத்ருஹ: மனஸி	(மன்மதனுக்கு சத்ருவான) பரமசிவனுடைய மனதில்
மன்மதசித்ரபானு	காமாக்னியை
இந்தன ராசிரீத்யா	விறகின் குவியலைப்போல்
முஹு:	அடிக்கடி
ஸந்துக்ஷயந்தி	உத்தீபனம் செய்கின்றன
சித்ரம்	ஆச்சர்யம்

(78) காமாக்ஷியே! உனது கடாக்ஷப் பார்வையானது அன்பாகிற ஜலத்தால் நனைக்கப்பட்ட வையாயிருந்தும் மன்மதசத்ருவான பரமசிவன் மனதில் காமாக்னியை விருத்தி செய்வதில் விறகுபோல் இருந்து அதை விருத்தி செய்கின்றன.

இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை விறகிற் குனமமாக வர்ணிக்கப்பட்டஹு. இந்த விறகானது பரமசிவனுடைய மனதிலுள்ள காமாக்னியை ஓங்கிவளர்ந்து எரியச்செய்கிறது. ஆனால் விறகோ அன்பாகிற ஜலத்தினால் எக்காலமும் நனையப்பெற்றது. அப்படி நனைந்ததாயிருந்தாலும் அக்னியை அதிகரித்து எரியச்செய்வது ஒரு ஆச்சர்யம். திரும்பவும், பரமசிவனோ மன்மதனை (எரித்து) ஜயித்தவர். அப்படியிருந்தும் அவருடைய மனதில் (மன்மதனால் உண்டாகும்) காமாக்னியை (அடிக்கடி) ஸதாகாலமும் (விறகு

நெருப்பை அதிகமாக எரியச்செய்வதுபோல்) அதிகரிக்கச் செய்வது இன்னமொரு ஆச்சர்யம்.

कालाञ्जनप्रतिभटं कमनीयकान्त्या
कन्दर्पतन्त्रकलया कलितानुभावम्।
काञ्चीविहाररसिके कलुषार्तिचोरं
कल्लोलयस्व मयि ते करुणाकटाक्षम्।।७९।।

காலாஞ்ஜன ப்ரதிபடம் கமனீயகாந்த்யா
கந்தர்ப்ப தந்த்ரகலயா கலிதாநுபாவம்।
காஞ்சீ விஹார ரஸிகே கலுஷார்த்தி சோரம்
கல்லோலயஸ்வ மயி தே கருணாகடாக்ஷம்।।79।।

காஞ்சீ விஹார ரஸிகே	*காஞ்சீபுரியில் விளையாடிக் கொண்டிருப்பதில் ப்ரியமுள்ளவளே!*
கமநீய காந்த்யா	*அழகுள்ள காந்தியால்*
காலாஞ்ஜன ப்ரதிபடம்	*கருத்த மையையொத்ததாயும்*
கந்தர்ப்ப தந்த்ர கலயா	*காமசாஸ்திர ஞானத்தினால்*
கலிதானுபாவம்	*உண்டாகும் பாவங்களோடு கூடியதும்*
கலுஷார்த்தி சோரம்	*பாபத்தினாலுண்டாகும் கஷ்டங்களைப் போக்குவதுமான*
தே கருண கடாக்ஷம்	*உனது கருணை நிறைந்த பார்வையை*
மயி	*என் விஷயத்தில்*
கல்லோலயஸ்வ	*அலை மோதியிருப்பது போல் இருக்கச் செய்வாயாகவும்*

(79) காஞ்சிபுர விஹார ரஸிகையான காமாக்ஷியே! கருப்புமைக்கு ஸமமாயும் அழகிய காமகலையுடன் ஸம்பந்தமுள்ளதும், பாபத்தைப் போக்குவதுமான உனது கருணாகடாக்ஷத்தை என்மீது பாயும்படி செய்வாயாக!

क्रान्तेन मन्मथमदेन विमोह्यमान-
स्वान्तेन चूततरुमूलगतस्यपुंसः।
कान्तेन किञ्चिदवलोकय लोचनस्य
प्रान्तेन मां जननि काञ्चिपुरीविभूषे।।८०।।

க்ராந்தேன மன்மத மதேன விமோஹ்யமான-
ஸ்வாந்தேன சூததருமூலகதஸ்ய பும்ஸ:।
காந்தேன கிஞ்சித் அவலோகய லோசனஸ்ய
ப்ராந்தேன மாம்ஜனனி காஞ்சிபுரீ விபூஷே।।

ஜனனி காஞ்சிபுரீ விபூஷே	*தாயே! காஞ்சீபுரிக்கு அலங்காரமாயிருப்பவளே!*
சூததரு மூலக தஸ்ய பும்ஸ:	*ஆம்ர மரத்தின் அடியிலிருக்கும் புருஷனுடைய (ஏகாம்பரநாதருடைய)*
க்ராந்தேன	*சேர்க்கையினால் ஏற்பட்ட*
மன்மத மதேன	*காமவேகத்தினால்*
விமோஹ்யமான ஸ்வாந்தேன	*மோஹமடைந்த மனதோடு கூடியதும்*
காந்தேன	*அழகுள்ளதுமான*
லோசனஸ்ய ப்ராந்தேன	*(உனது) கடைக்கண்ணால்*
மாம்	*என்னை*
கிஞ்சித் அவலோகய	*கொஞ்சம் பார்ப்பாயாக.*

(80) காஞ்சிபுரத்திற்கு அழகைக்கொடுக்கும் காமாக்ஷியே ஆம்ரவிருக்ஷத்தின் அடியின் வஸிப்பவரான ஏகாம்ர நாதனுடைய சேர்க்கையால் ஏற்பட்ட காமவேகத்தினால் மோஹமடைந்த மனதோடு கூடிய அழகிய உனது கடைக்கண்ணால் என்னை சிறிது கடாக்ஷிப்பாயாக.

कामाक्षि केऽपि सुजनास्त्वदपाङ्गसङ्गे
कण्ठेन कन्दलितकालिमसंप्रदायाः।
उत्तंसकल्पितचकोरकुटुम्बपोषाः
नक्तंदिवप्रसवभूनयना भवन्ति।।८१।।

காமாக்ஷி கேऽபி ஸுஜனாஸ்த்வதபாங்க ஸங்கே
கண்டேன கந்தலித காலிம ஸம்ப்ரதாயா:।
உத்தம்ஸகல்பித சகோர குடும்பபோஷா:
நக்தம்திவ ப்ரஸவபூ நயனா பவந்தி।।81।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
கேऽபி ஸுஜனா:	*சில புண்யவான்கள் (ஸத்துக்கள்)*
த்வத் அபாங்கஸங்கே	*உனது பார்வையின் ஸம்பந்தம் ஏற்படும்போது*
கண்டேன	*கழுத்தினால் (கழுத்தில்)*
கந்தலித காலிம ஸம்ப்ரதாயா:	*(கறுப்பு) நீல நிறமுடையவர்-களாகவும்*
உத்தம்ஸ கல்பித	*சிரோபூஷணமாக*
சகோர குடும்ப போஷா:	*சந்த்ரனை உடையவர்களாகவும்*
நக்தம் திவ	*இரவு பகல்களை*
ப்ரஸவபூ நயனா:	*உண்டுபண்ணும் கண்களையுடையவர்களாகவும்*
பவந்தி	*ஆகிறார்கள்.*

(81) காமாக்ஷியே! சில புண்ய சீலர்கள், உனது கடாக்ஷப்பார்வையின் மஹிமையால், கழுத்தில் கருப்பு நிறத்தை தரிப்பவர்களாயும் (நீலகண்ட) சிரஸில் சகோர ரக்ஷகனான சந்திரனை தரிப்பவர்களாயும் இரவு பகல்களை உண்டு பண்ணக்கூடிய கண்களை உடையவர்களாயுமாகிறார்கள், பரமசிவஸாரூப்யம் பெறுகிறார்கள்.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்தைப்பெற்ற பரமசிவனை வர்ணிக்கப்பட்டது, (அல்லது பக்தர்களுக்கு அம்பிகையின் கடாக்ஷ ஏற்பட்டால் பரமசிவனோடு ஸாரூப்யம் ஏற்படுவதாகச் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.) பரமசிவனுக்குக் கழுத்தானது கருப்பு வர்ணமுடையதாயிருப்பதால் 'கண்டேன கந்தளித காளிம ஸம்ப்ரதாய:' என்று சொல்லப்பட்டது, சந்த்ரனுடைய நிலவைத்தவிர வேறு யாதொன்றையும் சகோரபக்ஷியானது பானம் பண்ணுவதில்லையாதலால் சகோரத்தின் குடும்பத்தை போஷிப்பவனாக சந்த்ரனை சொல்லி, அவனை பரமசிவன் சிரோபூஷணமாக உடையவராதலால் அவரை (உத்தம்ஸ கல்பித சகோர குடும்ப போஷ:) என்று சொல்லப்பட்டது.

2. பரமசிவன் அம்பிகை இவர்களை வர்ணிக்கும் போது அவர்களுடைய கண்கள் திறப்பதினால் பகல் உண்டாவதாகவும் மூடுவதினால் ராத்ரி உண்டாவாதாகவும் சொல்வது வழக்கமாதலால் இங்கு பரமசிவனைப்பற்றி 'நக்தம் திவ ப்ரஸவபூ நயன:' என்று சொல்லப்பட்டது.

नीलोत्पलप्रसवकान्तिनिदर्शनेन
कारुण्यविभ्रमजुषा तव वीक्षणेन।

कामाक्षि कर्मजलधेः कलशीसुतेन
पाशत्रयाद्वयममी परिमोचनीयाः॥८२॥

நீலோத்பலப்ரஸவ காந்தி நிதர்சனேன
காருண்ய விப்ரமஜுஷா தவ வீக்ஷணேன।
காமாக்ஷி கர்மஜலதே: கலஶீஸுதேன
பாஶத்ரயாத் வயமமீ பரிமோசனீயா:॥82॥

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
நீலோத்பல ப்ரஸவ காந்தி	கருநெய்தல் புஷ்பத்தின் காந்திக்கு
நிதர்சனேன	ஸமமான காந்தியோடு கூடியதும்
காருண்ய விப்ரமஜுஷா	காருண்யத்தின் அழகினால் விளங்குவதும்
கர்மஜலதே:	கர்மாக்களாகிற ஸமுத்ரத்திற்கு
கலஶீ ஸுதேன	அகஸ்த்யராயிருப்பதுமான
தவ வீக்ஷணேன	உனது பார்வையினால்
அமீவயம்	இந்த நாங்கள்
பாஶத்ரயாத்	மூன்றுவிதமான பாசங்களிலிருந்தும்
பரிமோசனீயா:	விடுவிக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம்

(82) காமாக்ஷி! நீலோத்பல புஷ்பத்திற்கு ஸமமான காந்தியுடன் கூடியதும், காருண்யம் நிறைந்ததும், கர்மமாகிற ஸமுத்ரத்திற்கு அகஸ்தியர் போன்றதுமான உனது கடாக்ஷத்தினால் நாங்கள் மூன்று பாசங்களிலிருந்து விடுவிக்கப்படவேண்டும்.

1. அகஸ்தியர் ஒரு ஸமயம் ஸமுத்ரத்தின் ஜலத்தைப்பானம் பண்ணியதாக நமது புராணங்களில் ஒரு வ்ருத்தாந்தம் உண்டு. அம்பிகையின் கடாக்ஷம் கிடைக்கப்பெற்றால் கர்மாக்களின் ஸம்பந்தம் ஒழிந்துவிடுவதால் அந்த கடாக்ஷத்தை கர்மாக்களாகிற ஸமுத்ரத்திற்கு அகஸ்த்யராயிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

2. மூன்றுவிதமான பாசங்களென்பவை (ஈஷணாத்ரயம்) புத்ரேஷணை, வித்தேஷணை, லோகேஷணை, இந்த லோகத்தை ஜயிப்பதற்காக புத்ரேஷணை, பித்ருலோகங்களை ஜயிப்பதற்கு ஸாதனமாயிருக்கும் கர்மாக்கள் செய்வதற்காக வித்தேஷணை, உபாஸனாதிகளால் அடையக்கூடியதற்கு ஸாதனமாயிருப்பது தேவலோகம். அதில் ஆசையோடு இருப்பது லோகேஷணை. இந்த மூன்று ஈஷணைகளுக்கு ஈஷணாத்ரய மென்று பெயர். (சிலர் இவற்றை புத்ரேஷணை, வித்தேஷணை, தாரேஷணை என்றும் சொல்வார்கள், மண், பெண், பொன் என்ற மூண்று என்றும் சிலர்கள் சொல்வார்கள். இந்த மூன்றுவிதமான பாசங்களிலிருந்தும் தன்னைப் போன்றவர்களை விடுவிக்கவேண்டுமென்று கவியானவர் வேண்டுகிறார்.

अत्यन्तचञ्चलम् अकृत्रिममञ्जनं किं
झङ्कारभङ्गिरहिता किमु भृङ्गमाला।
धूमाङ्कुर: किमु हुताशनसङ्गहीन:
कामाक्षि नेत्ररुचि नीलिम कन्दली ते।।८३।।

அத்யந்த சஞ்சலமக்ருத்ரிமமஞ்ஜனம் கிம்
ஜங்கார பங்கி ரஹிதா கிமு ப்ருங்கமாலா।
தூமாங்குர: கிமு ஹுதாஶன ஸங்கஹீன:
காமாக்ஷி நேத்ரருசி நீலிம கந்தலீ தே।।83।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
தே	உனது
நேத்ரருசி	நேத்ரங்களின் காந்தியான
நிலிம கந்தலீ	கருமையின் சேர்க்கையானது
அத்யந்த சஞ்சலம்	அதிகமான சஞ்சலத்தையுடையதும்
அக்ருத்ரிம	பிறரால் செய்யப்படாத கூட்டப்படாத)
அஞ்ஜனம் கிம்	மையா என்ன? (அல்லது)
ஜங்கார பங்கிரஹிதா	ஜங்கார சப்தத்தினால் பிரிவுபடாத
ப்ருங்கமாலா கிமு	வண்டுகளின் கூட்டமா என்ன? (அல்லது)
ஹுதாஶன ஸங்கஹீன:	நெருப்பின் ஸம்பந்தமில்லாத
தூமாங்குர: கிமு	புகையா என்ன?

(83) காமாக்ஷி! உனது கடாக்ஷத்தின் கருமைநிறமானது, செயற்கையற்ற மை என்றோ, ஜங்கார சப்தமில்லத வண்டுகளின் வரிசையென்றோ, அக்னி ஸம்பந்தமற்ற கருத்த புகை தாரையோ வென்றோ நினைக்கக் கூடியதாயிருக்கிறது.

இதில் அம்பிகையினுடைய கடாக்ஷத்தின் கருப்பான காந்திக்கு ஸமமான வஸ்துக்களைச் சொல்லுகிறார். அந்த காந்தியானது அஞ்ஜனமோ வென்றால், அஞ்ஜனமானது ஒருவரால் கூட்டப்பட்டது, இருந்தபடியே இருக்கும், கடாக்ஷ காந்தியோ அத்யந்த சஞ்சலமானது, பிறரால் கூட்டப்படாதது, வண்டுகளின் கூட்டமோ என்றால் அக்னியின் ஸம்பந்தத்தைக் காணோமே! ஆகவே, ஸாதாரணமாய் உபமானமாகச் சொல்லக்கூடிய அம் மூன்று

வஸ்துக்களும் அம்பிகையின் கடாக்ஷ காந்திக்கு வாஸ்தவமாக உபமானமில்லையென்று கவியின் அபிப்பிராயம்.

कामाक्षि नित्यमयमञ्जलिरस्तु मुक्ति-
बीजाय विभ्रम मदोदयघूर्णिताय।
कन्दर्पदर्पपुनरुद्भव सिद्धिदाय
कल्याणदाय तव देवि दृगञ्चलाय।।८४।।

காமாக்ஷி நித்யம் அயமஞ்ஜலிரஸ்து முக்தி-
பீஜாய விப்ரம மதோதய கூர்ணிதாய।
கந்தர்ப்ப தர்ப்ப புனருத்பவ ஸித்திதாய
கல்யாணதாய தவ தேவி த்ருகஞ்சலாய।।

காமாக்ஷி தேவி	*ஹே காமாக்ஷி! தேவி!*
முக்திபீஜாய	*மோக்ஷத்திற்கு வித்தாயிருப்பதும்*
விப்ரம மதோதய	*அழகினுடைய மதமேற்படுவதினால்*
கூர்ணிதாய	*சுழன்றுகொண்டிருப்பதும்*
கந்தர்ப்ப	*மன்மதனுடைய*
தர்ப்ப புனருத்பவ ஸித்திதாய	*கர்வமானது திரும்பவும் உண்டாகும்படி செய்ததும்*
கல்யாணதாய	*மங்களத்தைக் கொடுப்பதுமான*
தவ த்ருகஞ்சலாய	*உனது கடைக்கண்ணுக்கு*
அயம் அஞ்ஜலி:	*இந்த (என்னுடைய) நமஸ்காரமானது*
அஸ்து	*இருக்கட்டும்*

(84) தேவி! காமாக்ஷியே! மோக்ஷத்திற்கு விதை போன்றதும், அழகின் பெருக்கால் சுழன்று கொண்டிருப்பதும் மன்மதனின் சக்திக்கு மறுபிழைப்புக் கொடுப்பதாயும் மங்கள பிரதமாயுமுள்ள உனது கடைக்கண்ணுக்கு என்று இந்த அஞ்ஜலி இருக்கட்டும்.

1. மதமேற்பட்டால் கண்கள் சுழலுவதையனுஸரித்து அழகினுடைய மதமேற்பட்டதினால் கண்கள் சுழலுவதாக 'விப்ரம மதோதய கூர்ணிதாய' என்று சொன்னதினால் அம்பிகையின் நிகரில்லாத ஸௌந்தர்யமானது வர்ணிக்கப்பட்டது.

2. மன்மதனுடைய மறுபிறப்பானது அம்பிகையின் கடாக்ஷத்தினுடைய அனுக்ரஹத்தின் பேரில் உண்டானதால் 'கந்தர்ப்ப தர்ப்ப புனருத்பவ ஸித்திதாய' என்று இங்கு சொல்லப்பட்டது.

3. இருகைகளையும் கூப்பி வந்தனம் செய்வதற்கு அஞ்ஜலியென்று பெயர்.

दर्पाङ्कुरो मकरकेतनविभ्रमाणां
निन्दाङ्कुरो विदलितोत्पलचातुरीणाम्।
दीपाङ्कुरो भवतमिश्रकदम्बकानां
कामाक्षि पालयतु मां त्वदपाङ्गपातः।।८५।।

தர்ப்பாங்குரோ மகரகேதன விப்ரமாணாம்
நிந்தாங்குரோ விதலிதோத்பல சாதுரீணாம்।
தீபாங்குரோ பவதமிஸ்ர கதம்பகானாம்
காமாக்ஷி பாலயது மாம் த்வதபாங்கபாத:।।85।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
மகரகேதன	*மன்மதனுடைய*
விப்ரமாணாம்	*லீலைகளின்*

தர்ப்பாங்குர:	கர்வத்திற்குக் காரணமாயிருப்பதும்
விதலிதோத்பல	மலர்ந்த நீலோத்பலங்களின்
சாதுரீணாம்	அழகுகளுடைய
நிந்தாங்குர:	இகழ்ச்சிக்குக்காரணமா யிருப்பதும்
பவதமிஸ்ர கதம்பகானாம்	ஸம்ஸாரமாகிற இருள் கூட்டங்களுக்கு
தீபாங்குரோ	தீபச்சுடராகவுமிருக்கும்
த்வத் அபாங்கபாத:	உனது கடைக்கண் பார்வையானது
மாம் பாலயது	என்னைக் காப்பாற்றட்டும்

(85) காமாக்ஷியே! மன்மத லீலைகளுக்கு கர்வம் கொடுப்பதாயும், மலர்ந்த நீலோத்பல புஷ்பங்கள் சோபைக்கு இகழ்ச்சியை விலைவிப்பதாயும், ஸம்ஸார தாபமாகிற இருளுக்கு தீபம்போலிருப்பதாயுமுள்ள உனது கடைக்கண் பார்வையானது என்னைக் காப்பாற்றட்டும்.

1. மன்மதன் மீனக்கொடியோனாகையால் மகரகேதனன் என்று பெயர் ஏற்பட்டது. அவனுடைய ஆளுகையினால் அவனுக்கு உண்டாயிருக்கும் அம்பிகையின் கடாக்ஷானுக்ரஹம் காரணமானதால் தர்ப்பாங்குரமென்று சொல்லப்பட்டது.

2. மலர்ந்த நீலோத்பலங்களின் காந்தியையும் பழித்ததான காந்தியோடிருப்பதால் அம்பிகையின் கடாக்ஷத்தை நிந்தாங்குரமென்று சொல்லப்பட்டது.

3. இருளடைந்த ப்ரதேசத்தில் ஒரு தீபம் வந்தால் அந்த இருளெல்லாம் அகன்று விடுவதுபோல ஸம்ஸார மாகிற

பெருத்த இருள் கூட்டத்தை அம்பிகையின் கடாக்ஷமானது போக்கிவிடுவதால் தீபாங்குரமாகச் சொல்லப்பட்டது.

कैवल्यदिव्यमणिरोहणपर्वतेभ्य:
कारुण्यनिर्झरपय: कृतमज्जनेभ्य:।
कामाक्षि किङ्करितशङ्करमानसेभ्य:
तेभ्यो नमोऽस्तु तव वीक्षणविभ्रमेभ्य:।।८६।।

கைவல்ய திவ்ய மணிரோஹண பர்வதேப்ய:
காருண்ய நிர்ஜரபய: க்ருத மஜ்ஜனேப்ய:।
காமாக்ஷி கிங்கரித ஶங்கர மானஸேப்ய:
தேப்யோ நமோऽஸ்து தவ வீக்ஷண விப்ர மேப்ய:।।86।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
கைவல்ய	*கைவல்ய மோக்ஷமென்ற*
திவ்யமணி ரோஹண	*உத்க்ருஷ்டமன ரத்னம் விளையும்*
பர்வதேப்ய:	*பர்வதங்களாயிருப்பவைகளும்*
காருண்ய	*கருணையாகிற*
நிர்ஜர பய:	*மலையருவின் (அல்லது நீர்வீழ்ச்சியின்*
பர்வதேப்ய:	*பர்வதங்களாயிருப்பவைகளும்*
காருண்ய	*கருணையாகிற*
நிர்ஜர பய:	*மலையருவின் (அல்லது நீர்வீழ்ச்சியின்) ஜலத்தில்*
க்ருதமஜ்ஜனேப்ய:	*முழுகியிருப்பவைகளும்*
கிங்கரித	*தாஸனாகச் செய்யப்பட்ட*
ஶங்கர மானஸேப்ய:	*பரமசிவனுடைய மனதையுடையவைகளுமான*

தேப்ய:	அந்த
தவ வீக்ஷண விப்ரமேப்ய:	உனது கடாக்ஷத்தில் விலாஸங்களுக்கு
நம: அஸ்து	நமஸ்காரமிருக்கட்டும்

(86) காமாக்ஷி! மோக்ஷமாகிற திவ்யமணிகளுக்கு உத்பத்தி மலைகள் போன்றவைகளுக்கு, தயையாகிற மலையரில் ஜலத்தில் மூழ்கியவைகளும், சங்கரர் மனதை இழுக்கத்தக்கவைகளுமான கடாக்ஷ விலாஸங்களுக்கு நமஸ்காரம்.

अल्पीय एव नवमुत्पलमम्ब हीना
मीनस्य वा सरणिरम्बुरुहां च किं वा।
दूरे मृगी ततसमञ्जसमञ्जनं वा
कामाक्षि वीक्षणरुचौ तव तर्कयाम:।।८७।।

அல்பீய ஏவ நவமுத்பலம் அம்பஹீனா
மீனஸ்ய வா ஸரணிரம்புருஹாம் ச கிம் வா।
தூரே ம்ருகீ ததஸமஞ்ஜஸம் அஞ்ஜனம் வா
காமாக்ஷி வீக்ஷணருசௌ தவ தர்க்கயாம:।।87।।

அம்ப காமாக்ஷி	தாயே! ஹே காமாக்ஷி!
தவ வீக்ஷணருசௌ	உனது கண்ணின் காந்திக்கு
நவம் உத்பலம்	புதிதான (அப்போது மலர்ந்த) நீலோத்பலமும்
அல்பீய ஏவ	மிகவும் அல்பம் தான்
மீனஸ்ய ஸரணி: வா	அல்லது மீன்களின் கோர்வையும் (அதாவது, மீனகளும்)
ஹீனா	குறைவுதான்

அம்புருஹாம் ச (ஸரணி:)	தாமரஸ புஷ்பங்களும்
கிம்வா -	எப்பாத்திரம்
ம்ருகீ	பெண்மானும் (அதாவது, பெண்மானுடைய கண்களும்)
தூரே	வெகு தூரம்
தத் அஞ்ஜனம் வா	அந்த மையும்
அஸமஞ்ஜஸம்	ஸரியானதல்ல (என்று)
தர்க்கயாம:	எண்ணுகிறோம்

(87) தாயே! காமாக்ஷி! உனது கடாக்ஷசோபையின் எதிரில் நீலோத்பல புஷ்பத்தை அல்பமாகவே நினைக்கிறோம். மீன்களின் வரிசையோ, தாமரைப்பூவோ, மான் கூட்டமோ, உயர்ந்தமையோ எல்லாம் தாழ்ந்தவைகளே.

मिश्रीभवद्गरलपङ्किलशङ्करोर:–
सीमाङ्गणे किमपि रिङ्खणमादधान:।
हेलावधूतललित श्रवणोत्पलोऽसौ
कामाक्षि बाल इव राजति ते कटाक्ष:।।८८।।

மிஶ்ரீ பவத் கரல பங்கில சங்கரோர: -
ஸீமாங்கணே கிமபி ரிங்கணமாததான:।
ஹேலாவதூத லலித ஶ்ரவணோத்பலோऽஸௌ
காமாக்ஷி பால இவ ராஜதி தே கடாக்ஷ:।।88।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
மிஶ்ரீ பவத்	கலந்ததாக இருக்கும்
கரல பங்கில	(ஹாலாஹல) விஷத்தின் சேரோடு கூடிய
சங்கரோர: ஸீமாங்கனே	பரமசிவனுடைய மார்பில்

கிமபி	ஏதோ ஒரு வர்ணனையிலடங்காத) விதமாய்
ரிங்கணம் ஆததான:	தவழ்ந்து கொண்டிருப்பதும்
ஹேலாவதூத	விளையாட்டாய் எறியப்பட்ட தோற்கடிக்கப்பட்ட)
லலிதச்ரவணோத்பல:	காதில் அணிந்து இருக்கும் அழகிய நீலோத்பலத்தோடு கூடியதுமான
அஸௌ தே கடாக்ஷ:	இந்த உனது கடாக்ஷமானது
பால இவ ராஜதி	குழந்தைபோல் விளங்குகிறது

(88) ஹே! காமாக்ஷி! உனது கடாக்ஷமென்கிற குழந்தையானது, சங்கரனின் கழுத்து விஷக்கருப்புடன் கலந்து அவர் மார்பில் தவிழ்ந்து விளையாடியும், அவர் காதில் வைத்துக்கொண்டிருக்கிற நீலோத்பல புஷப்த்தைக் கீழே தள்ளியும் லீலை செய்கிறது.

குழந்தையின் அழுக்கான இடங்களென்று பார்க்காமல் எங்கும் தவழ்ந்துபோவதுபோல் அம்பிகையின் கடாக்ஷமாகிற பாலனானவன் ஹாலாஹல விஷத்தின் கலந்ததான காந்தியால் சேரோடு கூடியிருப்பதாகத் தோன்றும் பரமசிவனுடைய மார்பில் தவழ்ந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. திரும்பவும், அந்தக் குழந்தையானது அலங்காரத்திற் காகக் காதிலணியப் பட்டிருக்கும் நீலோத்பலத்தை விளையாட்டாய் எறிந்து கொண்டிருப்பதாகச் சொல் வதினால் அந்த நீலோத்பலத்தின் அழகை விளையாட்டாக (அனாயாஸமாக) ஜயித்துவிட்டதாகச் சொல்லப்பட்டது.

प्रौडीकरोति विदुषां नवसूक्तिधाटी–
चूताटवीषु बुधकोकिललाल्यमानम्।
माध्वीरसं परिमलं च निरर्गलं ते
कामाक्षि वीक्षणविलासवसन्तलक्ष्मी:।।८९।।

ப்ரௌடீ கரோதி விதுஷாம் நவ ஸூக்திதாடீ
சூதாடவீஷு புதகோகில லால்யமானம்।
மாத்வீரஸம் பரிமலம் ச நிரர்கலம் தே
காமாக்ஷி வீக்ஷண விலாஸ வஸந்த லக்ஷ்மீ:।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
தே வீக்ஷண விலாஸ	*உனது பார்வையின் அழகாகிற*
வஸந்த லக்ஷ்மீ:	*வஸந்தகால லக்ஷ்மியானது*
விதுஷாம்	*வித்வான்களுடைய*
நவ ஸூக்திதாடீ	*புதிதான வாக்குக்களின் போக்காகிற*
சூதாடவீஷு	*மாந்தோப்புக்களில்*
புதகோகில	*வித்வான்களாகிற கோகிலங்களால்*
லால்யமானம்	*மெச்சப்படுகிற*
மாத்வீரஸம்	*தேனையும்*
பரிமலம் ச	*வாஸனையையும்*
நிரர்கலம்	*தங்குதடையில்லா*
ப்ரௌடீ கரோதி	*அதிகமாய் வெளிப்படுத்துகிறது*

(89) காமாக்ஷியே! உனது கடாக்ஷவிலாஸமாகிற வஸந்தகால சோபையானது வித்வான்களுடைய புதிய வாக்ஜரீயாகிற மாந்தோப்பில், அறிவாளிகளாகிற குயில்களால்

கொண்டாடப்பட்டதும் மிகுந்த வாஸனையுள்ளதுமான தேன் பெருக்கை தடையின்றி உண்டாக்குகிறது.

1. இதில் அம்பிகையினுடைய பார்வையின் அழகை வஸந்தகாலத்திய லக்ஷ்மிக்கு (அழகுக்கு) ஒப்பிடப்பட்டது. வஸந்தகாலத்தில் மாமரங்கள் ஏராளமாய் புஷ்ப்பிக்கும். கோகிலங்கள் எப்போதும் ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருக்கும். புஷ்பங்கள் தேனைச்சொரியும். எங்கும் பரிமளம் நிறைந்திருக்கும். அந்த அம்சங்களெல்லாம் அம்பிகையின் கடாக்ஷத்திற்கு இருப்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டது.

2. மாத்வீ என்றால் தேனிலிருந்து உண்டாக்கப்படும் ஒரு விதமான சாராயத்திற்குப் பெயர்.

कूलङ्कषं वितनुते करुणाम्बुवर्षी
सारस्वतं सुकृतिनः सुलभं प्रवाहम्।
तुच्छीकरोति यमुनाम्बुतरङ्गभङ्गीं
कामाक्षि किं तव कटाक्षमहाम्बुवाहः॥९०॥

கூலங்கஷம் விதனுதே கருணாம்புவர்ஷீ
ஸாரஸ்வதம் ஸுக்ருதின: ஸுலபம் ப்ரவாஹம்।
துச்சீகரோதி யமுனாம்பு தரங்க பங்கீம்
காமாக்ஷி கிம் தவ கடாக்ஷ மஹாம்புவாஹ:॥90॥

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
கருணாம்புவர்ஷீ	*கருணையாகிற ஜலத்தைப் பொழிகின்ற*
தவ	*உனது*
கடாக்ஷமஹாம்புவாஹ:	*கடாக்ஷமாகிய மஹாமேகமானது*

ஸுக்ருதின:	புண்யவான்களுடைய
ஸாரஸ்வதம் ப்ரவாஹம்	வாக்காகிற ப்ரவாஹத்தை
ஸுலபம்	ஸுலபமாக
கூலங்கஷம் விதனுதே	கரைபுரளச் செய்கிறது.
	(ஆனால்)
யமுனாம்பு தரங்க பங்கீம்	யமுனாநதியின் அலைகளை
கிம் துச்சீ கரோதி	ஏன் கீழ்ப்படுத்துகிறது
	அவமானப்படுத்துகிறது

(90) காமாக்ஷி! உனது கடாக்ஷமாகிற பெரியமேகமானது கருணையாகி ஜலத்தை வர்ஷித்து ஸுக்ருதிகளுடைய வாக்பிரவாஹத்தை கறையேறி வழியும்படி செய்கிறது. யமுனை ஜலத்தின் அலை வரிசைகளை திரஸ்கரிக்கிறது.

மேகமானது எல்லா நதிகளுக்கும் ஸமமாக மழையை வர்ஷிக்குமே, உனது கடாக்ஷமாகிற மேகமானது ஏன் வித்யாஸமாக நடந்துக்கொள்கிறது என்று கவியானவர் கேட்கிறார். கவிகளுடைய வாக்குக்களை அம்பிகையின் கடாக்ஷமானது கரைபுரண்டு ப்ரவஹிக்கும்படி செய்கிறது. ஆனால் யமுனா நதியின் ப்ரவாஹத்தை அது தனது காந்தியால் பழித்து துச்சமாகச் செய்கிறது.

जागर्ति देवि करुणाशुकसुन्दरी ते
ताटङ्करत्नरुचि दाडिमखण्डशोणे।
कामाक्षि निर्भरकटाक्षमरीचि पुञ्ज-
माहेन्द्रनीलमणिपञ्जरमध्यभागे।।९१।।

ஜாகர்த்தி தேவி கருணாஶுக ஸுந்தரீ தே
தாடங்க ரத்னருசி தாடிம கண்டஶோணே।

காமாக்ஷி நிர்பர கடாக்ஷ மரீசி புஞ்ஜ
மாஹேந்த்ர நீல மணி பஞ்ஜர மத்யபாகே।।

தேவி காமாக்ஷி	*தேவி! ஹே காமாக்ஷி!*
தே	*உனது*
கருணா ஶுக ஸுந்தரீ	*கருணையாகிற கிளியானது*
தாடக ரத்னருசி	*தாடங்களிலுள்ள ரத்னங்களின் காந்தியாகிற*
தாடிம கண்ட ஶோணே	*மாதுளங்கனியின் துண்டத்தோடு சிகப்பாயிருக்கும்*
நிர்பர கடாக்ஷ	*உனது பூர்ணமான கடாக்ஷத்தின்*
மரீசி புஞ்ஜ	*காந்திகளுடைய கூட்டமாகிற*
மாஹேந்த்ர நீல மணி	*இந்த்ர நீல ரத்னத்தாலான*
பஞ்ஜர மத்யபாகே	*கூட்டின் மத்தியில்*
ஜாகர்த்தி	*இருந்துகொண்டிருக்கிறது (விளையாடிக்கொண்டிருக்கிறது)*

(91) தேவி! காமாக்ஷி! உனது கடாக்ஷமாகிற இந்திர நீலக்கல் கூண்டில் உனது கருனையாகிற பெண்கிளி ஜாக்கிரத்தையாயிருக்கிறது. அந்தக் கூண்டின் மத்தியில் உனது தாடங்க ரத்நக் காந்திவிழுந்து கிளிக்கு ஆகாரமான மாதுளம்பழ சோபையைக் கொடுக்கிறது.

இதில் அம்பிகையின் கருணையை ஶுகஸுந்தரியாக (பெண் கிளியாக) வர்ணிக்கப்பட்டது. அது அம்பிகையின் கடாக்ஷத்தினுடைய காந்திகளாகிய இந்திர நீலமணிக்கூட்டிலிருக்கிறது. கிளிகளுக்கு மாதுளை முத்துக்களில் ப்ரியமதிகம். அதே மாதிரி இந்தக் கிளிக்கு அம்பிகையின் தாடங்கங்களிலுள்ள ரத்னங்களின் காந்தியானவை மாதுளை முத்துக்கள் போலிருக்கின்றன.

(ரத்னங்களைப் பொதுவாகச் சொல்லும்போது அவை சிகப்பு நிறமுடையவையென்று வர்ணிப்பது கவிகளின் ஸம்ப்ரதாயம்).

कामाक्षि सत्कुवलयस्य सगोत्रभावात्
आक्रामति श्रुतिमसौ तव दृष्टिपात:।
किं च स्फुटं कुटिलतां प्रकटीकरोति
भ्रूवल्लरीपरिचितस्य फलं किमेतत्।।९२।।

காமாக்ஷி ஸத்குவலயஸ்ய ஸகோத்ரபாவாத்
ஆக்ராமதி ஶ்ருதிமஸௌ தவ த்ருஷ்டி பாத:।
கிம் ச ஸ்புடம் குடிலதாம் ப்ரகடீ கரோதி
ப்ரூவல்லரீ பரிசிதஸ்ய பலம் கிமேதத்।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
அஸௌ தவ த்ருஷ்டிபாத:	*இந்த உனது பார்வையானது*
ஸத்குவலயஸ்ய	*நல்லதான (உத்தமமான) நீலோத்பலத்தினுடைய*
ஸகோத்ரபாவாத்	*உறவினால் (நட்பினால்)*
ஶ்ருதிம் ஆக்ராமதி	*ச்ருதியை அடைகிறது*
கிம் ச	*இன்னும் (ஆயினும்)*
குடிலதாம்	*குடிலமாயிருக்கும் (கோணலாயிருக்கும்) தன்மையை*
ஸ்புடம்	*செம்மையாக*
ப்ரகடீகரோதி	*வெளிப்படுத்துகிறது*
ஏதத்	*இதானது*
ப்ரூவல்லரீ பரிசிதஸ்ய	*புருவக்கொடியோடு ஸம்பந்தப்பட்டதின்*
பலம் கிம்	*பலனா என்ன?*

(92) காமாக்ஷி! உனது கடாக்ஷமானது குவலய புஷ்பத்தின் ஸ்னேஹத்தால், காதுப்பக்கம் போகிறது. அது புருவக்கொடி பரிசயத்தால் குடிலமாயுமிருக்கிறது.

1. அம்பிகையின் பார்வையானது ஸத்துக்களான குவலயங்களுடன் பழக்கமிருப்பதினால் ச்ருதியை (வேதமார்க்கத்தை) அடைந்து நல்ல (நேரான) வழியிலிருக்க வேண்டுமே. அப்படியிருக்க கோணலான வழியில் (அதாவது, கோணலாக) இருக்கிறதே, இதற்குக் காரணமென்ன? ஒருவேளை கொடிபோலிருக்கும் புருவங்களின் ஸம்பந்தத்தால் (ஸ்னேஹத்தால்) இதற்கும் கௌடில்யம் கோணலாயிருக்கும் ஸ்வபாவம் ஏற்பட்டிருக்கிறது போலும் என்று கவியானவர் வர்ணிக்கிறார்.

2. அதாவது, அம்பிகையின் கண்கள் ஸத்குவலயங்களுக்கு ஸமானமாயும், கர்ணாந்த விச்ராந்தமாகவும் இருப்பது இதில் வர்ணிக்கப்பட்டது.

3. அம்பிகையின் பார்வையானது ஸத்துக்களான குவலயங்களுக்கு உறவாயிருப்பதினால் ச்ருதி மார்க்கத்தை அனுசரித்திருந்தபோதிலும் குடில ஸ்வபாவமுடைய ப்ரூவல்லரியின் பரிசயத்தினால் தானும் கௌடில்யத்தை வெளிக்காட்டுகிறது. கடாக்ஷமென்றால் கடைக்கண் பார்வையாகையால் கோணலாக ஸ்வபாவத்தோடிருப்பதாகச் சொல்லப்பட்டது.

एषा तवाक्षिसुषमा विषमायुधस्य
नाराचवर्षलहरी नगराजकन्ये।
शङ्के करोति शतधा हृदि धैर्यमुद्रां
श्रीकामकोटि यदसौ शिशिरांशुमौले:।।९३।।

ஏஷா தவாக்ஷிஸுஷமா விஷமாயுதஸ்ய
நாரசவர்ஷ லஹரீ நகராஜகன்யே।
ஶங்கே கரோதி ஶததா ஹ்ருதி தைர்யமுத்ராம்
ஶ்ரீகாமகோடி யதஸௌ ஶிஶிராம்ஶுமௌலே:॥93॥

நகராஜகன்யே	*பர்வத ராஜனான ஹிமவானுடைய பெண்ணே!*
ஶ்ரீ காமகோடி	*ஶ்ரீ காமகோடி!*
ஏஷா	*இந்த*
தவ அக்ஷி ஸுஷமா	*உனது பார்வையின் ஸௌந்தர்யமானது*
விஷமாயுதஸ்ய	*மன்மதனுடைய*
நாராசவர்ஷ லஹரீ	*பாணங்களின் பரம்பரை (என்று)*
ஶங்கே	*ஸந்தேஹப்படுகிறேன்*
யத்	*எந்தக் காரணத்தினாலென்றால்*
அஸௌ	*இந்தப் பார்வையானது*
ஶிஶிராம்ஶுமௌலே:	*பரமசிவனுடைய*
ஹ்ருதி	*ஹ்ருதயத்திலிருக்கும்*
தைர்யமுத்ராம்	*தைர்யத்தை*
ஶததா கரோதி	*நூறாக (சுக்குச்சுக்காக) செய்துவிடுகிறது*

(93) பர்வத ராஜபுத்ரியான ஶ்ரீ காமகோடி! இந்த உனது கடாக்ஷசோபையை மன்மதனுடைய நாராசபாண வரிசையாக நினைக்கிறேன். ஏனெனில் அது சந்திர மௌளியினுடைய தைர்யமுத்ரையை சுக்குநூறாக பிளக்கிறது.

1. நாராசமென்பது இரும்பாலான பாணங்களைக் குறிப்பதுடன் பொதுவாகவே பாணங்களைக் குறிக்கும்.

2. முத்ரையென்றால் சீல போட்டிருப்பதற்குப் பெயர். பரம சிவனுடைய மனதானது தைர்யமாகிற முத்ரையுடனிருக்கிறது. அந்த முத்ரையை அம்பிகையின் கடாக்ஷங்களாகிற நாராசங்கள் உடைத்தெறிந்து அவருடைய மனதை ஜெயித்து விடுகிறதாகச் சொல்லப்பட்டது.

3. சந்திரனுடைய கிரணங்கள் (அம்சுக்கள்) குளிர்ச்சியுள்ளவைகளாக (சிசிரமாக) இருப்பதால் அவனுக்கு சிசிராம்சுவென்று பெயர். இதே காரணத்தால் 'அம்ருதாம்' என்ற பாடாந்தரமும் உண்டு.

बाणेन पुष्पधनुषः परिकल्प्यमान
त्राणेम भक्तमनसां करुणाकरेण।
कोणेन कोमलदृशस्तव कामकोटि
शोणेन शोषय शिवे मम शोकसिन्धुम्।।९४।।

பாணேன புஷ்பதனுஷ: பரிகல்ப்யமான
த்ராணேன பக்தமனஸாம் கருணாகரேண।
கோணேன கோமலத்ருஶஸ்தவ காமகோடி
ஶோணேன ஶோஷய ஶிவே மம ஶோக ஸிந்தும்।।

காமகோடி	ஹே காமகோடி!
ஶிவே	மங்களத்தைச் செய்பவளே!
புஷ்பதனுஷ:	மன்மதனுடைய
பாணேன	பாணமாயிருப்பதும்
பக்தமனஸாம்	பக்தர்களுடைய மனதுக்கு
பரிகல்ப்யமானத்ராணேன	ரக்ஷணத்தைச் செய்வதும்

கருணாகரேண	கருணை நிறைந்ததும்
ஶோணேன	சிவந்ததாயுமிருக்கும்
தவ கோமலத்ருஶ: கோணேன	உனது ம்ருதுவான கடாக்ஷத்தினால்
மம ஶோகஸிந்தும்	என்னுடைய துக்க ஸாகரத்தை
ஶோஷய	வற்றும்படிச் செய்வாயாகவும்

(94) ஏ! சிவே! காமகோடி! மன்மதனுடைய பாணமாயும், பக்தர் மனதில் ரக்ஷண நம்பிக்கை செய்வதும், கருணைக்கு இடமாயுமுள்ள உனது அழகிய கடாக்ஷத்தின் ஓரத்தினால் எனது சோகமாகிற ஸமுத்ரத்தை சோஷிக்கச் செய்வாயாக.

मारद्रुहा मुकुटसीमनि लाल्यमाने
मन्दाकिनीपयसि ते कुटिलं चरिष्णुः।
कामाक्षि कोपरभसाद्वलमानमीन
संदेहमङ्कुरयति क्षणमक्षिपातः।।९५।।

மாரத்ருஹா முகுடஸீமனி லால்யமானே
மந்தாகினீபயஸி தே குடிலம் சரிஷ்ணு:।
காமாக்ஷி கோபரபஸாத்வலமானமீன
ஸந்தேஹமங்குரயதி க்ஷணமக்ஷிபாத:।।95।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
மாரத்ருஹா	பரமசிவனால்
முகுடஸீமனி	சிரஸின்மீது
லால்யமானே	கௌரவிக்கப்படும்
மந்தாகினீ பயஸி	கங்கையின் ஜலத்தில்
கோபரபஸாத்	கோபத்தினுடைய படபடப்போடு

குடிலம் சரிஷ்ணு:	குடிலமாக ஸஞ்சரிக்கும்
தே அக்ஷிபாத:	உனது பார்வையானது
வலமான மீன ஸந்தேஹம்	திரும்பித் திரும்பி ஓடிக் கொண்டிருக்கும் மீனோ என்ற ஸந்தேஹத்தை
க்ஷணம்	ஒரு க்ஷணத்தில் (உடனேயே)
அங்குரயதி	உண்டுபண்ணுகிறது (தோன்றச்செய்கிறது)

(95) ஹே! காமாக்ஷி! உனது கடாக்ஷ பாதமானது, சிவனின் சிரஸில் உள்ள கங்கையின் ஜலத்தின் மீது கோபத்தால் அங்குமிங்குமாக ஸஞ்சரிப்பதைப் பார்த்தால் மீன்களோவென்ற ஸந்தேஹத்தைக் கொடுக்கின்றன.

1. பரமசிவன் கங்கையை சிரஸில் தரித்திருக்கிறார். அவ்விதம் மற்றொரு ஸ்திரியை பரமசிவன் சிரஸால் வஹித்து கௌரவிப்பதை அம்பிகையானவள் பார்த்து கோபம் கொள்வதால் அவளுடைய பார்வையானது கங்கையிடம் குடிலமாகச் சொல்லுகிறது. அப்போது நதீ ஜலத்தில் ஸஞ்சரிக்கும் மீனோ இது என்று ஸந்தேஹ மேற்படுவவதாக கவியானவர் வர்ணிக்கிறார்.

2. அம்பிகையானவள் கங்கையை ஸபத்னியாக பாவிப்பதாயும் அந்தக் காரணத்தால் கங்கையிடம் கோபத்தோடு கூடியபார்வையுடன் அம்பிகை இருப்பதாகவும் கவிகள் வர்ணிப்பது வழக்கம்.

'ஶிவே ஶ்ருங்காரார்த்ரா ததிதரஜனே குத்ஸனபரா
ஸரோஷா கங்காயாம் கிரிஶசரிதே விஸ்மயவதீ।।

(ஸௌந்தர்யலஹரீ)

कामाक्षि संवलितमौक्तिककुण्डलांशु
चञ्चत्सितश्रवण चामरचातुरीकः।
स्तम्भे निरन्तरम् अपाङ्गमये भवत्या
बद्धश्चकास्ति मकरध्वजमत्तहस्ती।।९६।।

காமாக்ஷி ஸம்வலித மௌக்திக குண்டலாம்ஶு-
சஞ்சத் ஸிதஶ்ரவண சாமர சாதுரீக:।
ஸ்தம்பே நிரந்தரம் அபாங்கமயே பவத்யா:
பத்தச்சகாஸ்தி மகரத்வஜ மத்தஹஸ்தீ।।

காமாக்ஷி	*ஹே காமாக்ஷி!*
மகரத்வஜ மத்தஹஸ்தீ	*மன்மதனென்ற மத்தகஜமானது*
ஸம்வலித மௌக்திக	*முத்துக்கள் இழைத்ததான*
குண்டலாம்ஶு	*(உனது) குண்டலங்களின் காந்தியினால் வெளுப்பாகத் தோன்றும்*
சஞ்சத்ஸித ஶ்ரவண சாமர சாதுரீக:	*உனது காதுகளாகிற வெண்சாமரைகளை வீசிக்கொண்டு*
பவத்யா: அபாங்கமயே	*உனது கடாக்ஷமாகிற*
ஸ்தம்பே	*ஸ்தம்பத்தில்*
நிரந்தரம் பத்த:	*எப்போதும் கட்டப்பட்டதாய்*
சகாஸ்தி	*விளங்கிக்கொண்டிருக்கிறது*

(96) காமாக்ஷி! காமனாகிற மதம் பிடித்த யானையானது, உனது காதுக் குண்டல வெளுப்புக் காந்தியால் சாமரம் போடுவது போல் இருந்துக்கொண்டு உனது கடாக்ஷமாகிற கம்பத்தில் உன்னால் நிரந்தரமாகக் கட்டப்பட்டிருக்கிறதுபோல் தோன்றுகிறது.

அம்பிகையின் குண்டலங்களிலிழைக்கப் பட்டிருக்கும் முத்துக்களின் காந்தியானது சுற்றிலும் அடிப்பதால் அம்பிகையின் காதுகள் வெண்சாமரைகள்போல் விளங்குகின்றன. இவற்றை மன்மதனாகிற மத்தகஜமானது வீசிக்கொண்டிருக்கிறது. மேலும் அந்த கஜமானது அம்பிகையின் கடாக்ஷமாகிற ஸ்தம்பத்தில் எப்போதும் கட்டுண்டிருக்கிறது.

यावत्कटाक्षरजनीसमयागमस्ते
कामाक्षि तावदचिरान्नमतां नराणाम्।
आविर्भवति अमृतदीधितिबिम्बमम्ब
संविन्मयं हृदयपूर्वगिरीन्द्रशृङ्गे॥९७॥

யாவத் கடாக்ஷ ரஜனீ ஸமயாகமஸ்தே
காமாக்ஷி தாவத் அசிரான்னமதாம் நராணாம்।
ஆவிர்பவதி அம்ருததீதிதி பிம்பமம்ப
ஸம்வின்மயம் ஹ்ருதய பூர்வகிரீந்த்ர ச்ருங்கே॥97॥

காமாக்ஷி அம்ப	ஹே காமாக்ஷி! தாயே!
நமதாம் நராணாம்	(உன்னை) நமஸ்கரிக்கும் ஜனங்களுக்கு
யாவத்	எப்போது
தே கடாக்ஷ ரஜனீ ஸமயாகம:	உனது கடாக்ஷமாகிற ராத்திரிகாலமானது ஆரம்பமாகிறதோ
தாவத்	அப்போது
அசிராத்	வெகு சீக்கிரத்தில்
ஹ்ருதய பூர்வகிரீந்த்ர ஶ்ருங்கே	(அவர்களுடைய) ஹ்ருதயமாகிற உதய பர்வதத்தின் உச்சியில்

ஸம்விஸ்மயம்	ஞானமயமான (ஞானமாகிற)
அம்ருததீதிதி பிம்பம்	சந்திர பிம்பமானது
ஆவிர்பவதி	தோன்றுகிறது

(97) தாயே! காமாக்ஷி! உனது கருப்பான கடாக்ஷமாகிற இரவு காலமானது ஏற்பட்ட உடனேயே மனிதர்களுக்கு ஞானமயமான சந்திரபிம்பமானது ஹிருதயமாகிற உதயமலையின் சிகரத்தில் தோன்றுகிறது.

1. அம்பிகையின் கடாக்ஷம் கிடைக்கப் பெற்றவுடன் பக்தர்களுக்கு ஞானோதயம் ஏற்படுகிறதென்பதை இதில் சொல்லப்பட்டது. அதற்கு, லோகத்தில் ராத்திரிகாலம் வர ஆரம்பமானவுடன் சந்திரன் உதயமாவது உபமானமாகச் சொல்லப்பட்டது, கடாக்ஷமானது கறுப்பு நிறமுடையதாகச் சொல்வது பொருத்தமாக இருக்கிறது. மனதில் ஞானம் உண்டாவதை சந்திரன் உதயமாவது போலிருப்பதாகச் சொல்லப்படும். ஏனென்றால் சந்திரனைப்போல் அது மனதிலுள்ள அந்தகாரத்தைப் போக்குகிறது. ஆகையால் தான் ஞானமேற்படுவதை ஞானோதயமென்றும், சைதன்யசந்திரோதய மென்றும் சொல்வது வழக்கம்.

2. பூர்வகிரி என்பது கிழக்கிலுள்ள பர்வதம். ஸூர்ய சந்திரர்கள் கிழக்கில் உதயமாவதால் பூர்வகிரி என்ற பதமானது உதயபர்வதத்தைக் குறிக்கும்.

कामाक्षि कल्पविटपीव भवत्कटाक्षो
दित्सुः समस्तविभवं नमतां नराणां।
भृङ्गस्य नीलनलिनस्य च कान्तिसंपत्–
सर्वस्वमेव हरतीति परं विचित्रम्।।९८।।

**காமாக்ஷி கல்பவிடபீவ பவத் கடாக்ஷோ
தித்ஸு: ஸமஸ்த விபவம் நமதாம் நராணாம்।
ப்ருங்கஸ்ய நீல நலினஸ்ய ச காந்தி ஸம்பத்
ஸர்வஸ்வமேவ ஹரதீதி பரம் விசித்ரம்॥98॥**

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
நமதாம் நராணாம்	உன்னை நமஸ்கரிக்கும் ஜனங்களுக்கு
கல்பவிடபீவ	கல்பக வ்ருக்ஷம்போல்
ஸமஸ்த விபவம்	ஸகலமான வைபவங்களையும்
தித்ஸு:	கொடுக்க விருப்பமுள்ள (கொடுக்கும்)
பவத் கடாக்ஷ:	உனது கடாக்ஷமானது
ப்ருங்கஸ்ய	வண்டுவினுடையதும்
நீலநலினஸ்ய ச	கருத்த தாமரஸ புஷ்பத்தினுடையவும்
காந்தி ஸம்பத் ஸர்வஸ்வமேவ	காந்தியென்ற ஸம்பத்து முழுமையுமே
ஹரதி இதி	அபகரித்து விடுகிறது என்பது
பரம் விசித்ரம்	மிகுந்த ஆச்சர்யம்.

(98) காமாக்ஷியே! உனது கடாக்ஷமானது கல்பக விருக்ஷம்போல் பக்தர்களுக்கு எல்லா விபத்தையும் கொடுக்கிறது. ஆனால் அது, வண்டுகளுடையவும், நீலோத்பல புஷ்பங்களுடையவும், எல்லா ஸொத்துக்களையும் அபஹரிக்கிறதென்பது விசித்ரமாகும்.

1. நமஸ்கரிக்கும் பக்தர்களுக்கு ஸகல ஸௌபாக்யங்களையும் கல்பக வ்ருக்ஷம்போல் தாராளமாகக் கொடுக்கும் அம்பிகையின் கடாக்ஷமானது எலியதுகளான

வண்டுவினுடையதும் நீல நளினத்தினுடையவும் காந்தியாகிற ஸம்பத்தை அபஹரிக்கிறதே இது என்ன ஆச்சர்யம், என்று கவியானவர் வர்ணிக்கிறார். அவைகளுக்கிருக்கும் ஒரே சொத்தான காந்தியை அதிலும் அதை ஜாடாவாய், இந்த கடாக்ஷமானது அபஹரிப்பானேன் என்றார்.

2. அம்பிகையின் கடாக்ஷத்தின் அனுக்ரஹமிருந்தால் ஸகல ஸௌபாக்யங்களும் கிடைக்கும் என்றும், அம்பிகையின் கடாக்ஷமானது காந்தியில் வண்டுகளையும் நீல நளினங்களையும் பழித்ததானது என்பதும் இந்த வர்ணனையில் தாத்பர்யம்.

अज्ञातभक्तिरसं अप्रसरद्विवेकम्
अत्यन्तगर्वम् अनधीत समस्तशास्त्रम्।
अप्राप्तसत्यम् असमीपगतं च मुक्ते:
कामाक्षि नैव तव काङ्क्षति दृष्टिपात:।।९९।।

அக்ஞாத பக்திரஸம் அப்ரஸரத் விவேகம்
அத்யந்த கர்வம் அனதீத ஸமஸ்த ஶாஸ்த்ரம்।
அப்ராப்த ஸத்யம் அஸமீப கதம் ச முக்தே:
காமாக்ஷி நைவ தவ காங்க்ஷதி த்ருஷ்டிபாத:।।99।।

காமாக்ஷி	ஹே காமாக்ஷி!
அக்ஞாத பக்திரஸம்	பக்தியின் ரஸத்தை அறியாதவனாயும்
அப்ரஸரத் விவேகம்	அறிவே இல்லாதவனாயும்
அத்யந்த கர்வம்	அதிகமான கர்வத்தோடு கூடினவனாயும்

அனதீத ஸமஸ்த ஶாஸ்த்ரம்	ஸகல சாஸ்த்ரங்களிலும் வாசிப்பில்லாதவனாயும்
அப்ராப்த ஸத்யம்	ஸத்யத்தை அடையாதவனாயும் (ஸத்யமில்லாதவனாயும்)
முக்தே: அஸமீப கதம் ச	மோக்ஷத்திற்கு வெகுதூரத்திலிருப்பவனுமான ஜனத்தை
தவ த்ருஷ்டிபாத:	உனது பார்வையானது
நைவ காங்க்ஷதி	விரும்புவதேயில்லை

(99) காமாக்ஷி! உனது கடாக்ஷமானது பக்தி ரஸமறியாதவனென்றோ, விவேகமற்றவனென்றோ கர்விஷ்டனென்பதையோ சாஸ்திரம் கற்காதவனென்றோ ஸத்யமில்லாதவனென்றோ, உன் ஸமீபம் வராதவனென்றோ ஒன்றையும் எதிர்பாராமலே அநுக்ரஹிக்கிறது.

1. அதாவது, அப்பேர்ப்பட்டவன் பேரில் அம்பிகையின் கடாக்ஷமானது விழுகிறதில்லையென்று சொல்லப் பட்டது. இதினுடைய தாத்பர்யமென்ன வென்றால், அம்பிகையின் கடாக்ஷம் பட்டுவிட்டால் இங்கு எதெது இல்லையென்று சொல்லப்பட்டதோ அதெல்லாம் பக்தனுக்குக் கிடைத்துவிடும் என்பது, அவன் பக்திரஸமறிந்தவனாயும், விவேகியாயும், கர்வமே இல்லாதவானாயும், ஸகல சாஸ்த்ரங்களிலும் பண்டிதனாயும், ஸத்யவானாயும், முக்தியைக் கிட்டியவனாயும் ஆகிவிடுவான் எனபது தாத்பர்யம்.

2. கடைசி அடிக்கு 'காமாக்ஷி மாம் அவது தே கருணா கடாக்ஷ:' என்ற பாடாந்தரம் உண்டு. (ஹே காமாக்ஷி! உனது கருணை நிறைந்த பார்வையானது என்னைக் காப்பாற்றட்டும், என்பது இதின் பொருள்.) அப்போது

முதல் மூன்று அடிகளில் சொல்லப்பட்டவை களெல்லாம் 'மாம்' என்ற பதத்தை சார்ந்து கவியைக் குறிப்பதாக அர்த்தமாகும். திரும்பவும், குக்ஷே: என்ற பதத்திற்கு முந்திவரும், ச என்பதை மாம் என்பதுடன் சேர்ந்தால் 'என்னையும் (என்னைக்கூட) உனது கருணா கடாக்ஷமானது காப்பாற்றட்டும்' என்று அர்த்த மேற்படும். அதாவது, தான் எல்லா வகைகளிலும் கேவலமாயிருந்த போதிலும் அம்பிகையின் கடாக்ஷமானது தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்பது கவியின் பிரார்த்தனை.

अत्यन्तशीतलम् अनर्गलकर्मपाक
काकोलहारि सुलभं सुमनोभिरेतत्।
पीयूषमेव तव वीक्षणमम्ब किं तु
कामाक्षि नीलमिदमित्ययमेव भेदः॥१००॥

அத்யந்த சீதலம் அனர்கல கர்மபாக
காகோலஹாரி ஸுலபம் ஸுமனோபிரேதத்।
பீயூஷமேவ தவ வீக்ஷணமம்ப கிம் து
காமாக்ஷி நீலமித மித்யயமேவ பேத:॥100॥

அம்ப காமாக்ஷி	தாயே! ஹே காமாக்ஷி!
அத்யந்த சீதலம்	மிகவும் குளிர்ந்ததாயும்
அனர்கல கர்ம பாக	தடுக்க முடியாத (பாப) கர்மாக்களின் பலன் என்பதான
காகோலஹாரி	விஷத்தைப் போக்குவதாயும்
ஸுமனோபி:	தேவர்களால் (ஸத்துக்களால்)
ஸுலபம்	எளிதில் அடையக்கூடியதுமான
ஏதத் தவ வீக்ஷணம்	இந்த உனது பார்வையானது
பீயூஷமேவ	அம்ருதம் தான்
கிந்து (கிம் +து)	ஆனால்

இதம்	இது (உனது கடாக்ஷமானது)
நீலம் இதி	கருப்பாயிருக்கிறதென்று
அயமேவ பேத:	இந்த ஒரு வித்யாஸம் தான்

(100) காமாக்ஷியே! மிகவும் குளிர்ச்சியுள்ளதாயும், தடையற்ற, விஷாக்னியை தடுப்பதும், பெரியோர் களுக்கு ஸுலபமாயுமிருக்கிற உனது கடாக்ஷத்தை அமிர்தமாகவே நினைக்கிறேன். ஆனால் அமிர்தம் வெளுப்பு, உன் கடாக்ஷம் கருப்பு இதுதான் பேதம்.

அம்ருதம் வெண்மை நிறம் அம்பிகையின் கடாக்ஷம் கருமை நிறம். இவ்விதமான வர்ணபேதம் ஒன்றைத் தவிர அம்பிகையின் கடாக்ஷத்திற்கும் அம்ருதத்திற்கும் வேறு யாதொரு வித்யாஸமுமில்லையென்பதைக் காரணங்களுடன் இதில் கவியானவர் சொல்லுகிறார். இரண்டும் அத்யந்தம் சீதளமானவை. அம்ருதம் விஷத்தைப் போக்கும். கடாக்ஷமானது பாப கர்மாக்களிலிருந்து ஏற்படும் பலனென்பதான விஷத்தைப் போக்கும். ஸுமனஸென்றால் தேவதைகளென்றும் நல்ல மனதுடையவர்களென்றும் அர்த்தங்களுண்டு. அம்ருதம் தேவர்களுக்கு எளிதில் கிடைக்கக் கூடியது. கடாக்ஷமானது நல்ல மனதுடையவர்களுக்கு ஸுலபமாகக் கிடைக்கக்கூடியது. ஆகையால் கடாக்ஷமானது கருப்பாயிருக்கிறதென்று ஒரு விதயாஸத்தைத் தவிர, அம்ருதம் தான் என்பது கவியின் ஸித்தாந்தம்.

पातेन लोचनरुचेस्तव कामकोटि
पोतेन पातकपयोधि भयातुराणाम्।
पूतेन तेन नवकाञ्चनकुण्डलांशु
वीतेन शीतलय भूधरकन्यके माम्।।१०१।।

பாதேன லோசனருசேஸ்தவ காமகோடி
போதேன பாதக பயோதி பயாதுராணாம்।
பூதேன தேன நவ காஞ்சன குண்டலாம்ரூ
வீதேன சீதலய பூதரகன்யகே மாம்॥101॥

காமகோடி	ஹே காமகோடி!
பூதர கன்யகே	பர்வத புத்ரீ!
பாதக பயோதி	பாபமாகிற ஸமுத்ரத்தினிடம்
பயாதுராணாம்	பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களுடைய
போதேன	கப்பலாயிருப்பதும்
பூதேன	பரிசுத்தமாயிருப்பதும்
நவகாஞ்சன	புதியதான தங்கத்தில் செய்யப்பட்ட
குண்டலாம்ரூ வீதேன	குண்டலங்களின் காந்தியோடிருப்பதுமான
தேன	அந்த
தவ	உனது
லோசனருசே: பாதேன	பார்வையால் (பார்வையை என்மீது படச்செய்வதால்)
மாம் சீதலய	என்னைக் குளிரச்செய்வாயாகவும்

(101) பர்வத புத்ரீ! காமகோடீ! பாபமாகிற ஸமுத்ரத்தைக் கண்டு பயந்தவர்களுக்கு ஓடம் போன்றதும், மிகவும் பரிசுத்தமானதும், புதிய ஸுவர்ண குண்டல காந்தியுடன் விளங்குவதுமான உனது கடாக்ஷ காந்தியின் பரவுதலால் என்னை குளிரும்படி செய்வாயாக.

பாபம் நிறைந்த ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஜனங்களுக்கு அம்பிகையின் கடாக்ஷமானது அவர்களை பத்திரமாய் கரைசேர்க்கும் கப்பலாக 'பாதக பயோதி பயாதுராணாம் போத:' என்று வர்ணிக்கப்பட்டது.

★★★★★★★★★★

கடாக்ஷ சதகம் முற்றிற்று

★★★★★★★★★★

உ

மூகபஞ்சசதீ பாதாரவிந்த சதகம்

......★......

ஜகத்குரு ஸ்ரீ சங்கரபாதாசார்யாள் அவர்களின் அனுக்ரஹ ஸ்ரீமுகம்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய, ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தில் அதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ பாதாளால், நமது அத்யந்த பிரிய சிஷ்யரான கல்யாணஸுந்தரமய்யர் விஷயத்தில் ஸர்வாபீஷ்ட ஸித்தியின் பொருட்டு நாராயண ஸ்மிருதி செய்யப் படுகிறது.

ஸ்ரீ ஜகதம்பிகையின் மஹிமா விசேஷத்தை யுணர்த்தும், ''மூகபஞ்சசதி'' என்னும் உத்தம ஸ்தோத்திரக் கிரந்தத்திற்கு கணேசய்யரால் ஸகல பக்தஜன ஸெளகர்யத்தையுத்தேசித்து தேசபாஷா வ்யாக்யனத்துடன் பிரசுரிக்கப்பட்ட இரண்டு சதகங்களையும் அதே ஶைலியை அனுஸரித்து பாதார விந்தசதகத்தைத் தாங்கள் அச்சிட்டு ஸமர்ப்பித்ததை கடாக்ஷிக்கப்பட்டது.

இந்த நன் முயற்சியில் தாங்கள் ஈடுபட்டு இவ்விதம் பிரசாரத்தால் உலகத்திற்க்கு உபகரிப்பதைப் பற்றி மிகவும் ஸந்தோஷிக்கிறோம்.

பக்த ஜனங்கள் ஸ்ரீ பராசக்தியின் பூர்ணகிருபை யைப்பெற இவ்வுபாயத்தைத்தேடிய தாங்களும் இந்த கைங்கர்யத்திற்கு உதவிபுரிந்தவர்களும் ஸ்ரீ பரமேச்வரியின் கிருபையால் ஐஹிகாமுஷ்மிக சிரேயஸ்களை அடையவேண்டியது.

முகாம்-ஓரவந்தூர்,
சித்ரபானு-ஸ்ரீ
ஐப்பசி-மீ

இப்படிக்கு,
நாராயணஸ்ம்ருதி:

உ

மூகபஞ்சசதீ

பாதாரவிந்த சதகம்

★★★★★

பதிப்பாசிரியர் முகவுரை

★★★★★

(முதல் பதிப்பு)

ஸ்ரீ அம்பிகையை ஸ்துதி செய்ய அமைந்துள்ள ஸ்தோத்திரக்கிரந்தங்கள் பலவற்றுள் 'மூகபஞ்சசதீ' யானது மிக உத்தமமானதென்பது ரஸிகர்களும், பக்தர்களும் ஒப்பமுடிந்த விஷயமாகும். இந்த ஸ்தோத்திரமானது, மிக்க லலிதமாயும் காதுக்கு இனிமையாகவும் அமைந்திருப்பதுடன், இந்த ஸ்துதியின் பத, பதார்த்தங்களும், தாத்பர்யங்களும், அபரிமிதமாக பக்தியைப் பெருகச்செய்து, அம்பிகையின் கருணையை பக்தர் மீது பொழியச்செய்வதாயுமிருக்கிறது. ஸாம்ஸாரிக தாபத்ரயத்தினால் ஆக்ரமிக்கப்பட்டு சிரமப்படுகிற பலர் இந்த 'மூகபஞ்சசதீயை' முழுவதுமோ அல்லது ஏகதேசமோ தினமும் விடாமல் பாராயணம் செய்து வந்தால் ஸகல சிரமங்களும் நீங்கி மிகுந்த ஸௌக்யத்தையடையலாம் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய உயர்ந்த ஸ்தோத்திரத்தைச் செய்து உலகத்தினரை உஜ்ஜீவிக்கச் செய்த மஹாபுருஷனான ஸ்ரீ மூககவி என்ற மூகாசார்யாளுடைய மஹிமையும், சரித்திர

விவரங்களும் அங்காங்கு விவரிக்கப்பட்டிருக் கிறதைக் காணலாம்.

இந்த உத்தம ஸ்துதியை பண்டிதர், பாமரர் ஸ்த்ரீகள் உள்பட எல்லா மனிதர்களும் படித்து, அதனுடைய ரஸங்களை அனுபவிப்பதுடன், அம்பிகையின் அளவற்ற குணகணங்களையும் யதாவத்தாக நேரில் காணும்போல் அனுபவித்து அவளுடைய கிருபைக்குப் பாத்திரமாகும் படி செய்யவேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்துடன்; காலஞ்சென்ற ஸ்ரீமான் ஜி.வி.கணேசய்யர் பி.ஏ., பி.எல்., அவர்கள் இந்த ஸ்தோத்திரத்திற்குச் சிறந்தமுறையில் ஓர் தமிழ் மொழிபெயர்ப்புச்செய்து ஆர்யதர்மம் பத்திரிக்கை மூலம் சிறிது சிறிதாக வெளியிட்டு வந்தது யாவரும் அறிந்ததே. ஸ்ரீ அம்பாளிடம் அந்தரங்க பக்தியுள்ளவரும் சிறந்த படிப்பாளியும், ரஸிகரும், மேதாவியுமான ஸ்ரீமான் கணசய்யரவர்கள் லலிதாஸஹஸ்ரநாமம், ஸௌந்தர்யலஹரீ போன்ற உயர்ந்தக் கிரந்தங்களுக்கு யாவரும் மெச்சக்கூடிய வகையில் தமிழ் மொழிபெயர்ப்புக் கைங்கர்யம் செய்தது போல் இந்த ஸ்துதிக்கும் பண்டிதர்கள் அதிசயப்படும் வழியில் ஸகல விமர்சகர்களும் பொருந்திய மொழி பெயர்ப்பு வியாக்யானம் செய்ய முற்பட்டாராயினும், நமது தௌர்பாக்யவசத்தால் அக்கைங்கர்யம் பூர்த்தி யடையாமல் ஆர்யாசதகம், கடாக்ஷசதகம் ஆகிய இரண்டுடன் நின்று அவர் ஈசனடி நேரிட்டுவிட்டது

ஆயினும் அவர் எழுத விட்டுப்போன பாக்கி சதகங்களுக்கும் அவருடைய போக்கை அனுசரித்தே மொழிபெயர்ப்புச்செய்து பாக்கி சதகங்களையும் வெளி யிடும்படி, நம்மைப் பல பக்தர்கள் உத்ஸாகப் படுத்திய தற்கிணங்கி, புதுக்கோட்டை, மஹாராஜா கல்லூரி

ஸம்ஸ்க்ருத பண்டிதர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ராகவன் எம்.ஏ., அவர்களுடையவும், திருப்பனந்தாள் ஸ்ரீமான் ரெத்தினம் பிள்ளை, ரிட்டயர்டு சப்ரிஜிஸ்ட்ரார் அவர்களுடையவும் உதவியைக் கொண்டு இந்த பாதாரவிந்தசதகம் என்ற பாகமானது நம்மால் அச்சிட்டு வெளியிடப் பட்டிருக்கிறது. மந்தஸ்மிதசதகமும் சீக்கிரம் வெளிவரும். ஆர்யதர்மம் பத்திரிகையில் வெளியிட்டு புஸ்தகரூபமாக ஆக்குவதில் கால தாமதம் ஏற்படுவதாலும், அப்பத்திரிக்கையில் இப்போது அதற்கு அவகாசமளிக்கப்படாததாலும் தனியாகவே அச்சிட்டு வெளியிட முடிவு செய்யப் பட்டிருக்கிறது. ஆர்யா சதகத்தில் அனுசரிக்கப்பட்டுள்ள வழியிலேயே இதிலும் பதவுரை, பொழிப்புரை, விசேஷக் குறிப்புகள் போன்ற அம்சங்கள் யாவும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. பதவுரையானது யாவரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு இதில் அச்சிடப்பட்டிருப்பது புதிய விசேஷமாகும். மூலம் நாகரி லிபியிலும், தமிழிலும் முன்போலவே அச்சிடப்பட்டிருக்கிறது.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அவர்கள் இக்கிரந்தம் முழுவதையும் கிருபையுடன் கடாக்ஷித்து, சில பரிஷ்காரங்களை நியமித்த துடன் ஒரு ஸ்ரீமுகமும் அனுக்ரஹித்திருக்கிறார்கள். இதற்காக அடியேனுடைய அனந்த பிரணாமங்களை ஸ்ரீஸ்வாமிகளின் பாதாரவிந்தங்களில் ஸமர்ப்பித்துக் கொள்கிறேன்.

பேப்பர், மசி முதலியவைகளின் அபாரமான விலை யேற்றம் காரணமாக தற்போது இத்தகைய அச்சு வேலை களை நினைக்கவே அவகாசமில்லாத ஸந்தர்ப்பமாயிருந்த போதிலும் உத்தம கிரந்தமானது பூர்த்தியடையாமல் அரை குறையாக நின்றுவிடுவதில் ஆஸ்திகர்களுக்கு இருந்த

மனக்குறையை நீக்க வேணுமென்ற ஒரே ஒரு உத்ஸாஹத்தினால் மட்டுமே நாம் இக்கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்ய முன் வரவேண்டியதாயிற்று. எல்லா ஆஸ்திகர்களும் இந்த ஸ்தோத்திரத்தை வாங்கிப் படித்து அம்பாளின் கிருபைக்கு பாத்திரமாவதுடன் எமது சிறிய முயற்சியையும் ஆதரிப்பார்களென்றும் எதிர்பார்க்கிறேன். இப்புத்தகத்தில் அச்சுப் பிழையின்றி பரிசோதித்துக்கொடுத்தும், வேறுவழியிலும் நமக்கு உதவி புரிந்த நண்பர்கள் எல்லாருக்கும் நமது மனப்பூர்வமான நன்றியைச் செலுத்துகிறோம்.

கும்பகோணம்,
22-2-1943

S.கல்யாணசுந்தரம், *(பிரசுரகர்த்தா)*
மானேஜர்,
ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ்,
லிமிடெட்

पादारविन्दशतकम्
பாதாரவிந்த ஶதகம்

महिम्न: पन्थानं मदनपरिपन्थिप्रणयिनि
प्रभुर्निर्णेतुं ते भवति यतमानोऽपि कतम:।
तथापि श्रीकाञ्चीविहृतिरसिके कोऽपि मनसो
विपाकस्त्वत्पादस्तुतिविधिषु जल्पाकयति माम्॥१॥

மஹிம்ந: பந்தாநம் மதன பரிபந்தி ப்ரணயிநி
ப்ரபு: நிர்ணேதும் தே பவதி யதமாநோऽபி கதம:।
ததாऽபி ஶ்ரீ காஞ்சீ-விஹ்ருதி-ரஸிகே கோऽபி மநஸோ
விபாக: த்வத் பாதஸ்துதி விதிஷு ஜல்பாகயதிமாம்॥1॥

மதந பரிபந்தி ப்ரணயினி	*மன்மதனுடைய சத்ருவான பரமசிவனுடைய பத்னியானவளே*
ஶ்ரீ காஞ்சீ விஹ்ருதி ரஸிகே	*ஶ்ரீ காஞ்சியில் விளையாடுவதில் ஆசையுள்ளவளே*
தே	*உன்னுடைய*
மஹிம்ந:	*பெருமையின்*
பந்தாநம்	*வழியை*
நிர்ணேதும்	*நிச்சயிப்பதற்கு*
யதமாந: அபி	*முயலுபவன் ஆனாலும்*
கதம:	*எவன் தான்*
ப்ரபு:	*ஸாமர்த்யமுள்ளவனாக*
பவதி	*ஆகிறான்*

ததாபே	அப்படி இருந்தபோதிலும்
மநஸ:	(என்) மனதினுடைய
கோபே	(குறிப்பிடமுடியாத) ஒரு
விபாக:	பரிபாகமானது
த்வத்பாத-ஸ்துதி-விதிஷு	உன் பாதங்களை துதிக்கும் முறைகளில்
மாம்	என்னை
ஜல்பாகயதி	பேசும்படி செய்கிறது.

மன்மதனின் சத்ருவான பரமசிவன்மீது காதல் கொண்டு ஸ்ரீ காஞ்சீ நகரில் விளையாடுவதில் ஆசை கொண்ட ஜகந்மாதாவே உனது பெருமையின் வழியை நிச்சயிப்பதற்கு முயலுபவனானாலும் அதில் எவன்தான் ஸாமர்த்தியமுள்ளவனாக ஆகிறான்? அப்படியாயினும் எனது மனதில் குறிப்பிடமுடியாத ஒரு பரிபாகமானது உனது பாதங்களை துதிக்கும் முறையில் என்னை பேசும்படி செய்கிறது.

இதில் விசேஷித்து அம்பிகையினுடைய பாத கமலங்களைப் பற்றிப்பேசுகிறார். முதல் ச்லோகத்தில் அம்பிகையின் பெருமை அளவற்றதாகையால் அதை மனதால் நினைப்பதும், வாக்கினால் துதிப்பதும், செய்யமுடியாதது என்று கூறி, அப்படியிருந்த போதிலும் தானறியாத ஒரு ஸுக்ருதத்தினால் மனது சொல்ல முடியாத ஒரு பக்குவத்தையடைந்து இப்போது அம்பிகையின் பாதகமலங்களைப் போற்றத்தன்னைத் தூண்டுகிறது என்கிறார்.

गलग्राही पौरन्दरपुरवनीपल्लवरुचां
धृतप्राथम्यानामरुणमहसामादिगुरुः।
समिन्धे बन्धूकस्तबकसहयुध्वा दिशि दिशि
प्रसर्पन्कामाक्ष्याश्चरणकिरणानामरुणिमा।।२।।

கலக்ராஹீ பௌரந்தர-புர-வநீ-பல்லவ-ருசாம்
த்ருத-ப்ராதம்யாநாம்-அருண-மஹஸாம்-ஆதிம-குரு:।
ஸமிந்தே பந்தூக-ஸ்தபக-ஸஹயுத்வா திஶி திஶி
ப்ரஸர்ப்பந்-காமாக்ஷ்யா: சரணகிரணாநாம் அருணிமா 2।।

பௌரந்தர	*இந்திரனுடைய*
புர	*நகரத்திலுள்ள*
வநீ	*தோட்டங்களின்*
பல்லவ	*துளிர்களினுடைய*
ருசாம்	*காந்திகளின்*
கல-க்ராஹீ	*மென்னியைப்பிடிப்பதும் (மேற்கொள்ளுவதும்)*
த்ருத ப்ராதம்யாநாம்	*முதன்மையை வஹிக்கும்*
அருண மஹஸாம்	*ஸௌர்ய கிரணங்களுக்கு*
ஆதிம குரு:	*முதல் குருவாயும்*
பந்தூக ஸ்தபக	*செம்பரத்தம் பூங்கொத்தோடு*
ஸஹ யுத்வா	*ஸமானமாய் சண்டை செய்வதுமான*
காமாக்ஷ்யா:	*காமாக்ஷியினுடைய*
சரண கிரணாநாம்	*பாதங்களின் கிரணங்களுடைய*
அருணிமா	*சிவந்த வர்ணமானது*
திஶி திஶி	*திக்குகள் தோறும்*

ப்ரஸர்பந்	பரவுகிறதாய்க்கொண்டு
ஸமிந்தே	ஜ்வலிக்கிறது.

தேவேந்திரனின் நகரிலுள்ள புஷ்பத்தோட்டங் களின் துளிர்களின் காந்திகளுக்கு மென்னியைப் பிடிப்பாயும், முதன்மை வஹித்த (காலை வேளையில் புதிதாய் உண்டாகிய) ஸௌர்ய கிரணங்களுக்கு முதல் குருவாயும், செம்பரத்தை பூங்கொத்துடன் சண்டை செய்வதுமான ஸ்ரீ காமாக்ஷிதேவியின் பாத கிரணங்களின் சிவந்த நிறமானது திக்குகள்தோறும் பரவிக்கொண்டு ஜ்வலிக்கிறது.

இதில் தேவலோக விருக்ஷங்களின் துளிர்களின் காந்தியும் அம்பிகையின் பாதகாந்திக்கு ஒப்பல்ல என்றும், அருணோதயகாலத்து சிவப்புக்கும் இதுவே காரண மென்றும், செம்பரத்தப் பூங்கொத்துக்களின் சோபையெல்லாம் இதன் முன் நிற்கமுடியாதென்றும் பாதங்களின் செவ்வியை வர்ணிக்கிறார்.

मरालीनां यानाभ्यसनकलनामूलगुरवे
दरिद्राणां त्राणव्यतिकरसुरोद्यानतरवे।
तमस्काण्डप्रौढिप्रकटनतिरस्कारपटवे
जनोऽयं कामाक्ष्याश्चरणनलिनाय स्पृहयते।।३।।

மராலீநாம் யாநாப்யஸன-கலநா-மூல-குரவே
தரித்ராணாம் த்ராண-வ்யதிகரஸுரோத்யான-தரவே।
தமஸ்-காண்ட-ப்ரௌடி-ப்ரகடந-திரஸ்கார-படவே
ஜநோऽயம் காமாக்ஷ்யா: சரண நலிநாய ஸ்ப்ருஹயதே 3 ॥

மராலீநாம்-யாநாப்யஸந-கலநா-மூலகுரவே	ஹம்ஸங்களுக்கு நடையை-ப்பழக்குவதைச் செய்வதில் முதல்

	குருவாயும்
தரித்ராணாம்	தரித்திரர்களை
த்ராண-வ்யதிகர	காப்பாற்றவல்ல
ஸுரோத்யாந தரவே	கல்பக விருக்ஷமாயும்
தமஸ்-காண்ட	இருட்டின் கூட்டங்களுடைய
ப்ரௌடி-ப்ரகடந	கம்பீரமான பரவுதலை
திரஸ்காரபடவே	போக்கடிக்க வல்லதாயுமிருக்கிற
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
சரண-நலிநாய	தாமரை போன்ற பாதங்களை
அயம் ஜன:	இந்த மனிதன்
ஸ்ப்ருஹயதே	விரும்புகிறான்

ஹம்ஸங்களுக்கு நடையை பழக்குவதற்கு முதல் குருவாயும், தரித்திரர்களை காத்தருள்வதில் கல்பகவிருக்ஷமாயும் அக்ஞானமென்ற இருட்டின் கூட்டங்களுடைய பரவுதலை போக்கடிக்க வல்லமையுடைய ஸ்ரீ காமாக்ஷி தேவியின் தாமரை போன்ற பாதங்களை தரிசிக்க இவன் விரும்புகிறான்.

1. அம்பிகையின் நடை அழகைக்கண்டுதான் ஹம்ஸங்களும் நடக்கக் கற்றுக்கொள்கின்றன.

2. தன்னை அடையும் எளியவர்களுக்கு அவர்கள் இஷ்டத்தை நிறைவேற்றுவதில் கல்பக விருக்ஷம் போன்றது அம்பிகையின் பாதங்கள்.

3. பாதகாந்தி உலகிலுள்ள ஸகல இருட்டையும் (அக்ஞானத்தையும்) போக்கவல்லது.

4. இப்படி அழகு, ஔதார்யம், காந்தி மூன்றையும் கொண்ட அம்பிகையின் பாதங்களை எளியேனும்

விரும்புகிறேன் என்று சொல்ல வந்து தன் நிலைமையை படர்க்கையில் கூறுகிறார்.

वहन्ती सैन्दूरीं सरणिम् अवनम्रामरपुरी–
पुरन्ध्रीसीमन्ते कविकमलबालार्कसुषमा।
त्रयीसीमन्तिन्या: स्तनतटनिचोलारुणपटी
विभान्ती कामाक्ष्या: पदनलिनकान्तिर्विजयते।।४।।

வஹந்தீ ஸைந்தூரீம் ஸரணிம் அவநம்ராமரபுரீ-
புரந்த்ரீ ஸீமந்தே கவிகமல பாலார்க்க ஸுஷமா।
த்ரயீ ஸீமந்திந்யா: ஸ்தந தட நிசோலாருண படீ
விபாந்தீ காமாக்ஷ்யா: பதநலின காந்தி: விஜயதே।।4।।

அவநம்ர-அமரபுரீ-புரந்தரீ-ஸீமந்தே	*வணங்குகின்ற தெய்வ-லோகத்து ஸ்திரீகளினுடைய வகுட்டில்*
ஸைந்தூரீம்	*ஸிந்தூரத்தினுடையதான*
ஸரணிம்	*போக்கை*
வஹந்தீ	*வஹிப்பதாயும்*
கவி-கமல	*கவிகளாகிற தாமரைப் புஷ்பங்களுக்கு*
பால-அர்க	*இளம் ஸூர்யனுடைய*
ஸுஷமா	*பிரகாசம் போன்றதும்*
த்ரயீ ஸீமந்திந்யா	*வேதங்களாகிற ஸ்திரீகளினுடைய*
ஸ்தநதட-நிசோல	*குசபாரத்தை மறைக்கிற*
அருணபடீ	*சிவப்பு வஸ்திரம் போன்றதும்(ஆய்)*
விபாந்தீ	*ப்ரகாசிக்கிற*

காமாக்ஷ்யா:	காமாஷியினுடைய
நலிந-காந்தி:	தாமரை போன்ற பாதங்களின் காந்தியானது
விஜயதே	ஜயத்துடன் விளங்குகிறது.

ஸிந்தூரத்தின் போக்கை வஹிப்பதும், கவிகளென்ற கமலங்களின் மலரச்செய்கிற சூர்யனின் ஒளியாயும், வேதங்களாகிற ஸ்திரீகளின் குசபாரத்தை மறைக்கிற சிவப்பு வஸ்திரம் போன்றதும் பிரகாசிக்கின்ற ஸ்ரீ காமாக்ஷி தேவியின் தாமரை போன்ற பாதங்களின் காந்தியானது ஜயத்துடன் விளங்குகிறது.

எல்லா தேவஸ்த்ரீகளும் தங்கள் மனோரதம் நிறைவேறும் பொருட்டு தங்கள் தலைகள் அம்பாள் பாதங்களில் படும்படி வந்து வணங்கும்போது பாதங்களின் சிவந்த காந்தியானது அவர்களுடைய வகுடுகளில் எப்போதும் மங்களார்த்தமாகத் தடவப்படும் ஸிந்தூரம்போல் இருக்கிறது.

பாலசூரியனைக்கண்டு தாமரைகள் மலர்வது போல் அம்பாளின் பாதங்களை நினைத்ததும் கவிகளின் உள்ளமும் ஞானமும் மலர்கின்றன.

த்ரயீ-ரிக் என்று பத்ய ரூபமாயும், யஜுஸ் என்று கத்யரூமாயும், ஸாம என்று கீதரூபமாயுள்ள மூன்று வேதங்களுமே இங்கு த்ரயீ எனப்படுகின்றன. அம்பாளின் பாதங்களை அண்டினால் வேதங்களுடைய பரம போக்யமான அர்த்தங்களும் தெள்ளெனப் புலப்படும் என்றதாயிற்று.

प्रणम्रीभूतस्य प्रणयकलहत्रस्तमनसः
स्मरारातेश्चूडावियति गृहमेधी हिमकरः।

ययो: सांध्यां कान्तिं वहति सुषमाभिश्चरणयो :
तयोर्मे कामाक्ष्या हृदयमपतन्द्रं विहरताम्।। ५।।

ப்ரணம்ரீபூதஸ்ய ப்ரணயகலஹ-த்ரஸ்த-மனஸ:
ஸ்மராராதே: சூடாவியதி க்ருஹமேதீ ஹிமகர:।
யயோ: ஸாந்த்யாம் காந்திம் வஹதி
ஸுஷமாபிச்சரணயோ:
தயோர் மே காமாக்ஷ்யா:ஹ்ருதயமபதந்த்ரம்
விஹரதாம்।।5।

ப்ரணயகலஹ	*ப்ரணய கலஹத்தால்*
த்ரஸ்த மநஸ:	*பயந்த மனதையுடையவராய்*
ப்ரணம்ரீபூதஸ்ய	*வணங்கினவரான*
ஸ்மராராதே:	*பரமசிவனுடைய*
சூடாவியதி	*சிரஸ் என்னும் ஆகாயத்தில்*
க்ருஹமேதீ	*வஸித்துவரும்*
ஹிமகர:	*சந்திரன்*
யயோ:	*எவைகளினுடைய*
ஸுஷமாபி:	*காந்திகளால்*
ஸாந்த்யாம்	*ஸந்த்யா காலத்தினுடைய*
காந்திம்	*காந்தியை*
வஹதி	*அடைகிறதோ*
தயோ:	*அப்பேர்பட்ட*
காமாக்ஷ்யா:	*காமாக்ஷியினுடைய*
சரணயோ:	*பாதங்களில்*
மே ஹ்ருதயம்	*என் மனது*
அபதந்த்ரம்	*சோம்பலைவிட்டு*
விஹரதாம்	*ரமிக்கட்டும்*

ப்ரணய கலஹத்தால் பயந்த மனதுடன் நமஸ்காரம் செய்து நின்ற பரமசிவனுடைய சிரஸ் என்னும் ஆகாசத்தில் வஸிக்கிற சந்திரன், எவைகளின் காந்தியால் (எந்த பாதங்களின் காந்திகளாலே) ஸந்தியாகாலத்தின் காந்தியை அடைகிறன்றானோ அப்படிப்பட்ட ஸ்ரீ காமாக்ஷியின் பாதங்களில் என் மனது சோம்பலை விட்டு விளையாடிக்கொண்டிருக்கட்டும். (ரமிக்கட்டும்)

இந்த ச்லோகத்தில் அம்பிகை, பரமசிவன் இவர்களுடைய ப்ரணயகலஹத்தை ஊடலை வர்ணிக்கிறார். ப்ரணயரோஷம் தலையெடுத்து அம்பிகை தன் நாதனை கண்ணெடுத்தும் பாராதிருக்க பரமசிவன் அம்பிகையின் பாதங்களில் தன் சிரஸ் படும்படியாக விழுந்து அவளை சமாதானம் செய்ய முற்படுகிறார். அப்போது பாதங்களின் சிவந்த ஒளி பரமசிவனுடைய சிரோபூஷணமான சந்திரகலையில் விழுவதைப் பார்த்தால் செவ்வானத்தினிடையே திகழும் பிறைபோல் இருக்கின்றது என்கிறார்.

ययोः पीठायन्ते विबुधमुकुटीनां पटलिकाः
ययोः सौधायन्ते स्वयमुदयभाजो भणितयः।
ययोर्दासायन्ते सरसिजभवाद्याश्चरणयोः
तयोर्मे कामाक्ष्या दिनमनु वरीवर्तु हृदयम्।। ६।।

யயோ: பீடாயந்தே விபுதமுகுடீனாம் படலிகா
யயோ: ஸௌதாயந்தே ஸ்வயமுதயபாஜோ பணிதய:।
யயோ: தாஸாயந்தே ஸரஸிஜபவத்யாச்சரணயோ:
தயோர்மே காமாக்ஷ்யா: தினமனு வரீவர்து
ஹ்ருதயம்।।6।।

விபுதமுகுடநாம்	தேவதைகளின் கிரீடங்களுடைய
படலிகா:	வரிசையானது
யயோ:	எவைகளுக்கு (எந்த பாதங்களுக்கு)
பீடாயந்தே	பீடமாக ஆகின்றதோ
ஸ்வயம்	தானாகவே
உதயபாஜ:	உண்டானவைகளான
பணிதய:	வாக்குக்கள் (வேதங்கள்)
யயோ:	எவைகளுக்கு
ஸௌதாயந்தே	மாளிகைகளாக ஆகின்றனவோ
ஸரஸிஜபவாத்யா:	ப்ரஹ்மா முதலானவர்கள்
யயோ:	எவைகளுக்கு
தாஸாயந்தே	தாஸர்களாக ஆகிறார்களோ
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
தயோ: சரணயோ:	அந்த பாதங்களில்
மே	என்னுடைய
ஹ்ருதயம்	மனதானது
அநுதினம்	எப்பொழுதும்
வரீவர்து	இருக்கட்டும்.

தேவதைகளின் கிரீடங்களின் வரிசையானது எந்த பாதங்களுக்கு பீடமாக ஆகின்றதோ, தானாகவே உண்டான வாக்குகள் (வேதங்கள்) எவைகளுக்கு மாளிகையாக ஆகின்றனவோ, பிரும்மா முதலியவர்கள் எவைகளுக்கு தாஸர்களாக ஆகிறார்களோ, அந்த காமாக்ஷியின் பாதகமலங்களில் எனது மனமானது எப்பொழுதும் இருக்கட்டும்.

1. ஒருவரால் எழுதப்படாமல் தானாகவே உண்டான அபௌருஷேயங்களான வேதங்கள் அம்பிகையின் மஹிமையைக் கூறுவதால், அவைகளை அவள் வஸிக்கும் மாளிகைகளாகக் கூறுகிறார்.

2. ப்ரஹ்மா முதலான ஸகல தேவர்களும் வந்து அம்பிகையை தலைவணங்கி நமஸ்கரிப்பதால், அவர்களுடைய கிரீடங்களை பாதபீடமாகக் கூறுகிறார்.

नयन्ती सङ्कोचं सरसिजरुचं दिक्परिसरे
सृजन्ती लौहित्यं नखकिरणचन्द्रार्धखचिता।
कवीन्द्राणां हृत्कैरव विकसनोद्योगजननी
स्फुरन्ती कामाक्ष्याः चरणरुचिसन्ध्या विजयते।।७।।

நயந்தீ ஸங்கோசம் ஸரஸிஜருசம் திக்பரிஸரே
ஸ்ருஜந்தீ லௌஹித்யம் நககிரணசந்த்ரார்த்தகசிதா।
கவீந்த்ராணாம் ஹ்ருத்கைரவவிகஸனோத்யோகஜனனீ
ஸ்புரந்தீ காமாக்ஷ்யா: சரணருசிஸந்த்யா விஜயதே।।7।।

ஸரஸிஜருசம்	*தாமரைப் புஷ்பங்களின் காந்தியை*
ஸங்கோசம்	*மங்கும்படி*
நயந்தீ	*செய்கிறதும்*
திக் பரிஸரே	*எல்லா திசைகளிலும்*
லௌஹித்யம்	*சிவப்பை*
ஸ்ருஜந்தீ	*உண்டுபண்ணுகிறதும்*
நககிரண	*நகங்களின் கிரணங்களாகிற*
சந்த்ரார்த்த கசிதா	*அர்த்த சந்திரனோடு கூடினதும்*
கவீந்த்ராணாம்	*கவிச்ரேஷ்டர்களுடைய*

ஹ்ருத்கைரவ	மனதாகிற ஆம்பல் புஷ்பங்களுக்கு
விகஸனோத்யோக ஜநநீ	மலரும் முயற்சியை உண்டுபண்ணுகிறதும்
ஸ்புரந்தீ காமாக்ஷ்யா	காமாக்ஷியினுடைய ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறதான
சரணருசி ஸந்த்யா	சரண காந்தி என்னும் ஸந்தியாகாலமானது
விஜயதே	விளங்குகிறது.

தாமரைப் புஷ்பங்களின் ஒளியை மங்கும்படி செய்கிறதும், எல்லா திசைகளிலும் சிவப்பை உண்டு பண்ணுகிறதும், நகங்களின் கிரணமென்கிற பிறையோடு கூடினதும், கவிச் சிரேஷ்டர்களின் மனதாகிற ஆம்பல் புஷ்பங்களுக்கு மலர்ச்சியை உண்டுபண்ணுகிறதாய் பிரகாசித்துக் கொண்டிருக்கிற காமாக்ஷியின் பாதங்களின் காந்தி என்னும் ஸந்தியா கால(மாலைப்பொழுது)மானது விளங்குகிறது.

அம்பிகையின் பாதங்களின் காந்தியை ஒரு ஸந்தியா காலத்திற்கு ஒப்பிடுகிறார். தாமரைகளும் பாதங்களுக்கு நேரொவ்வாது தலைகவிழ்கின்றன; பாதகாந்தி எங்கும் பரந்து சிவப்பாகச் செய்கின்றன. நகங்களாகிற அர்த்தசந்திரர்கள் இருக்கிறார்கள். மாலையில் மலரும் ஆம்பல் போல, கவிகளின் மனம் இவற்றைக் கண்டு மலர்கின்றன.

विरावैर्माञ्जीरैः किमपि कथयन्तीव मधुरं
पुरस्तादानम्रे पुरविजयिनि स्मेरवदने।

वयस्येव प्रौढा शिथिलयति या प्रेमकलह-
प्ररोहं कामाक्ष्याश्चरणयुगली सा विजयते।।८।।

விராவை: மாஞ்ஜீரை: கிமபி கதயந்தீவ மதுரம்
புரஸ்தாதாநம்ரே புரவிஜயிநி ஸ்மேர-வதநே
வயஸ்யேவ ப்ரௌடா ஶிதிலயதி யா ப்ரேம-கலஹ-
ப்ரரோஹம் காமாக்ஷ்யா: சரணயுகலீ ஸா விஜயதே।।8।।

யா	*எந்த இணையடிகள்*
மாஞ்ஜீரை:	*பீலிகளுடையதான*
விராவை:	*சப்தங்களால்*
கிமபி	*ஏதோ ஒரு விஷயத்தை*
மதுரம்	*இனிமையாக*
கதயந்தீவ	*சொல்லுகிறவை போன்றதாய்*
ஸ்மேர வதநே	*(புன்சிரிப்புள்ள முகத்தை யுடையவராய்)*
புரஸ்தாத்	*எதிரில்*
ஆநம்ரே	*வணங்கிக்கொண்டிருக்கும்*
புரவிஜயிநி	*சிவனிடத்தில்*
ப்ரௌடா	*ஸமர்த்தையான*
வயஸ்யா இவ	*தோழிபோல*
ப்ரேம-கலஹ	*ப்ரணய கலஹத்தின்*
ப்ரரோஹம்	*முளையை (மூலத்தை)*
ஶிதிலயதி	*போக்கி விடுகிறதோ*
காமாக்ஷ்யா:	*காமாக்ஷியினுடைய*
ஸா	*அப்பேர்பட்ட*

சரணயுகளீ பாதங்களின் இரண்டு

விஜயதே விளங்குகிறது

எந்த இணையடிகள் பீலிகளின் சப்தங்களால் ஏதோ ஒரு விஷயத்தை இனிமையாக சொல்வது போலிருந்து கொண்டு புன்சிரிப்புள்ள முகத்துடன் எதிரில் வணங்கிக் கொண்டிருக்கும் புரங்களை ஜெயித்த சிவனிடத்தில் ஸாமர்த்தியசாலியான தோழிபோல, ப்ரணய கலஹத்தின் அங்குரத்தை (முளையை) தளர்த்தி விடுகின்றதோ அந்த ஸ்ரீ காமாக்ஷிதேவியின் பாதங்களின் இரட்டையானது பிரகாசிக்கின்றது.

ப்ரணய கலஹத்தால் கோபங்கொண்ட தேவியை ஸமாதானப்படுத்தும்பொருட்டு வசீகரமான புன்னகை யோடு ஈச்வரன் திருவடிகளில் விழுகிறார். அப்போது அசையும் பாதங்களிலுள்ள தண்டை முதலிய ஆபரணங்கள் இனிமையாக ஒலிப்பதைப் பார்த்தால், கோபத்தைத் தணிப்பதற்காக ஸமர்த்தையான தோழி சிவனுக்காகப் பரிந்துபேசுவதுபோல் இருக்கிறது என்கிறார்.

सुपर्वस्त्रीलोलालकपरिचितं षट्पदकुलैः
स्फुरल्लाक्षारागं तरुणतरणिज्योतिररुणैः।
भृतं कान्त्यम्भोभिर्विसृमरमरन्दैः सरसिजैः
विधत्ते कामाक्ष्याश्चरणयुगलं बन्दुपदवीम्।। ९।।

ஸுபர்வ-ஸ்த்ரீ-லோலாலக-பரிசிதம் ஷட்பத-குலை:
ஸ்புரல்லாக்ஷாராகம் தருண-தரணி-ஜ்யோதிரருணை:।
ப்ருதம் காந்த்யம்போபி: விஸ்ருமரமரந்தை: ஸரஸிஜை:
விதத்தே காமாக்ஷ்யா: சரண யுகலம் பந்து பதவீம்।। 9।।

ஸுபர்வ ஸ்த்ரீ	தேவ ஸ்த்ரீகளுடைய
லோல	அசைகிற
அலக	கூந்தல்களோடு
பரிசிதம்	சேர்ந்ததும்
ஸ்புரத்	பிரகாசிக்கிற
லாக்ஷாராகம்	செம்பஞ்சுக்குழம்பினால் பூசினதாய் இருப்பதும்
தருணதரணி –	பால சூரியனுடைய
ஜ்யோதிரருணை:	கிரணம் போன்ற சிவந்த
காந்தி-அம்போபி:	காந்தி என்னும் ஜலத்தினால்
ப்ருதம்	நிறைந்ததாய் இருப்பதும் (ஆன)
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
சரணயுகலம்	இரண்டு பாதங்களும்
ஷட்பத குலை:	வண்டுகளோடும்
தருணதரணி ஜ்யோதிரருணை:	பால சூரிய கிரணம் போல சிவந்ததும்
விஸ்ருமர	பெருகும்
மரந்தை:	தேனையுடையதும் ஆன
ஸரஸிஜை:	தாமரைப் பூக்களோடு
பந்துபதவீம்	பந்துவாயிருக்கும் நிலைமையை
விதத்தே	தரிக்கின்றன

வணங்குகிற தேவ ஸ்திரீகளின் அசைகிற கூந்தல் களோடு சேர்ந்து பிரகாசிக்கிறதும், பளபளப்பான செம் பஞ்சுக் குழம்பால் சிவந்தும் பால சூரியனின் கிரணம் போன்று சிவந்த காந்தியாகிற ஜலத்தினால் நிறைந்த தாயுமிருக்கிற காமாக்ஷியின் இரண்டு பாதங்கள் வண்டுகளோடும் இளம்

சூரியனின் ஒளிகளால் சிவந்த னவும், மகரந்தத்தை பெருகவிடுகின்றதுமான தாமரைப் புஷ்பங்களோடு பந்துவாக இருக்கும் நிலைமையை தரிக்கின்றன.

தேவியின் திருவடிகளுக்கும், தாமரைப் புஷ்பங் களுக்கும் உள்ள ஒற்றுமையை இந்த ஸ்லோகத்தில் காட்டுகிறார். திருவடிகள், நமஸ்காரம் செய்யும் தேவ ஸ்த்ரீகளுடைய கூந்தல்களோடு சம்பந்தப்பட்டும் செம் பஞ்சுக்குழம்பினால் பூசப்பட்டும் உதயமாகின்ற சூரியனு டைய கிரணம் போன்ற காந்தியையுடையன. தாமரைப் புஷ்பங்கள் வண்டுகளோடு சம்பந்தப்பட்டு உதிக்கின்ற சூரியனுடைய செங்கதிர்போன்றனவாய்ப் பெருகும் தேனை உடையன.

रज:संसर्गेऽपि स्थितमरजसामेवहृदये
परं रक्तत्वेन स्थितमपि विरक्तैकसुलभम्।
अलभ्यं मन्दानां दधदपि सदा मन्दगतितां
विधत्ते कामाक्ष्याश्चरणयुगमाश्चर्यलहरीम्।।१०।।

ரஜஸ்-ஸம்ஸர்கேऽபி ஸ்திதம் அரஜஸாம் ஏவ ஹ்ருதயே
பரம் ரக்தத்வேன ஸ்திதமபி விரக்தைகஸுலபம்।
அலப்யம் மந்தாநாம் ததபி ஸதா மந்தகதிதாம்
விதத்தே காமாக்ஷ்யா: சரணயுகம் ஆஶ்சர்யலஹரீம்।।10।।

ரஜஸ்-ஸம்ஸர்கே-அபி	*ரஜஸ்ஸின் ஸம்பந்தம் இருந்த போதிலும்*
அரஜஸாம்	*ரஜஸ் இல்லாதவர்களுடைய*
ஹ்ருதயே ஏவ	*ஹ்ருதயத்தில் மட்டுமே*
ஸ்திதம்	*இருப்பவைகளும்*

பரம்	முழுவதும்
ரக்தத்வேந	ரக்தம் என்னும் சிவந்த வர்ணத்தோடு
ஸ்திதம் அபி	இருந்தபோதிலும்
விரக்தைக ஸுலபம்	விரக்தியுடையவர்களுக்கு மட்டுமே சுலபமாயிருப் பவைகளும்
ஸதா	எப்போதும்
மந்த-கதிதாம்	மந்தமான நடையை
ததத் அபி	அடைந்திருந்தபோதிலும்
மந்தாநாம்	மந்தமதிகளுக்கு
அலப்யம்	பெறமுடியாதவைகளாயு-மிருக்கிற
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
சரணயுகளம்	இரண்டு பாதங்கள்
ஆஶ்சர்ய-லஹரீம்	ஆஸ்ச்சர்யங்களென்னும் அலைகளை
விதத்தே	உண்டுபண்ணுகின்றன.

காமாக்ஷியின் இரண்டு பாதங்கள் தனக்கு ரஜஸ் ஸம்பந்தமிருந்த போதிலும் ரஜஸ் இல்லாதவர்களின் மனதில் மட்டுமேயிருந்து, மிகுந்த ராகத்தோடிருப்பினும், ராகமற்றவர்களுக்கு சுலபமாயிருப்பவைகளும், எப்பொழுதும் மந்தமான நடையை அடைந்திருந்த போதிலும் மந்தமதி உடையவர்களுக்கு கிடைக்கபெறுததா யிருந்துகொண்டு ஆச்சர்யமென்னும் அலைகளை உண்டு பண்ணுகின்றன.

கவி தன் சப்த சாதுர்யத்தால் பரஸ்பர விருத்தங்களான தர்மங்கள் அம்பாளின் திருவடிகளில் இருப்பதுபோல் தோற்றுவிப்பதால், அம்பாளின் பாதங்கள் மேன் மேலும் ஆச்சர்யத்தை விளைவிக்கின்றன என்கிறுர். அதாவது பாதங்களில் ரஜஸ் இருந்தபோதிலும் ரஜஸ் இல்லாதவர்களுடைய மனதிலேயே அவை இருக்கும். முதல் ரஜஸ் சப்தத்திற்கு மகரந்தப்பொடி என்று பொருள்; இரண்டாவதுக்கு ரஜோகுணம் என்று பொருள்; ரஜோகுணத்தை விலக்கி ஸத்வகுணத்தை பெற்றவர்களே அம்பாளை த்யானம் செய்யமுடியும்.

தாமரை போல் திருவடிகள் (ரக்தமாய்) சிவந்து இருப்பினும் விரக்தர்களுக்கே (சிவப்பு = ஆசையற்றவர் களுக்கே) ஸுலபமானவை. (ரக்தம்=சிவப்பு, ஆசை.)

ஹம்ஸம்போல் மந்தமான அழகிய நடையை யுடையதாயினும் மந்தர்களுக்கு அதாவது ஞானமில்லாத வர்களுக்குக் கிட்டமுடியாதவை, தான் மந்தமாயிருக்கும் போதும் மந்தர்களால் கிட்டமுடியாதவையாய் இருக்கின் றன. மந்தம்=மெதுவான; மந்தபுத்தியுள்ளவர்.

இப்படி பரஸ்பர விருத்த தர்மங்கள் ஓரிடத்திலேயே இருப்பதால் பாதங்கள் ஆச்சர்யத்தைத் தருகின்றன என்கிறுர்.

जटाला मञ्जीरस्फुरत् अरुणरत्नांशुनिकरैः
निषीदन्ती मध्ये नखरुचिझरीगाङ्गपयसाम्।
जगत्त्राणं कर्तुम् जननि मम कामाक्षि नियतं
तपश्चर्याम् धत्ते तव चरणपाथोजयुगली।।११।।

ஜடாலா மஞ்ஜீர-ஸ்புரத்-அருண-ரத்நாம்சு-நிகரை:
நிஷீதந்தீ மத்யே நகருசிஜரீகாங்கபயஸாம்।

ஜகத்ராணம் கர்தும் ஜநநி மம காமாக்ஷி நியதம்
தபஸ்சர்யாம் தத்தே தவ சரண-பாதோஜ-யுகலீ॥11॥

மம ஜநநி	என் தாயே
காமாக்ஷி	காமாக்ஷி
மஞ்ஜீர	தண்டைகளில்
ஸ்புரத்	பிரகாசிக்கின்ற
அருணரத்ன	சிவந்த ரத்னங்களின்
அம்சுநிகரை:	காந்திகளின் கூட்டங்களால்
ஜடாலா	ஜடையை தரித்தவைகளாயும்
நகருசி ஜரீ	நகங்களின் காந்திவெள்ளமாகிற
காங்க-பயஸாம்	கங்காப்பிரவாஹத்தின்
மத்யே	நடுவில்
நிஷீதந்தீ	வீற்றிருப்பவைகளாயும் இருக்கிற
தவ	உன்னுடைய
சரண-பாதோஜ-யுகளீ	தாமரைபோன்ற இரு பாதங்களும்
ஜகத்-த்ராணம்	உலகத்தின் காப்பாற்றுதலே
கர்த்தும்	செய்யும்பொருட்டு
நியதம்	எப்போதும்
தபஸ்-சர்யாம்	தபஸ் என்னும் கார்யத்தை
தத்தே	செய்கின்றன.

என் தாயான காமாக்ஷியே தண்டைகளில் விளங்குகின்ற சிவந்த ரத்னங்களின் காந்தி ஸமூஹங்களென்ற ஜடைகளை முடித்துக்கொண்டு நககாந்திகளின் பிரவாஹமென்ற கங்கா பிரவாஹத்தின் நடுவில் நின்ற உன்னுடைய தாமரைபோன்ற இரு பாதங்களும், உலக நிலையின் பொருட்டு தபஸ் என்ற காரியத்தை செய்கின்றன.

தன் கருணையால் அம்பாள் எப்போதும் ஜகத்தை ரக்ஷித்துக்கொண்டிருக்கிறாள் என்பதை அவள் பாதங்கள் தவக்கோலம் பூண்டு ஜகத் ரக்ஷணமென்னும் தபஸ்ஸை எப்போதும் அனுஷ்டிக்கின்றன என்று கூறுகிறார்.

தண்டைகளில் இழைக்கப்பட்டு வில் வீசும் ரத்னங்களின் காந்தியே சிவந்த ஜடைகள்; நகங்களின் ஜோதி வெள்ளத்தின் நடுவே பாதங்கள் இருப்பதே ஜலத்தின்மேல் நின்று தவம் செய்வது என்று வர்ணிக்கிறார்.

तुलाकोटिद्वन्द्वक्वणितभणिताभीतिवचसो:
विनम्रं कामाक्षी विसृमरमह: पाटलितयो:।
क्षणं विन्यासेन क्षपिततमसोर्मे ललितयो:
पुनीयान्मूर्धानं पुरहरपुरन्ध्रीचरणयो:॥१२॥

துலாகோடி த்வந்த்வ-க்வணித-பணிதா-பீதி-வசஸோ:
விநம்ரம் காமாக்ஷீ விஸ்ருமரமஹ:-பாடலிதயோ:।
க்ஷணம் விந்யாஸேந க்ஷபிததமஸோர்மே லலிதயோ:
புனீயாந்-மூர்த்தாநம் புரஹர-புரந்த்ரீ சரணயோ:॥12॥

புரஹர	சிவனுடைய
புரந்த்ரீ	தேவியான
காமாக்ஷீ	காமாக்ஷியினுடய
துலாகோடி-த்வந்த்வ	இரண்டு பீலிகளுடைய
க்வணித	சப்தத்தினால்
பணித	சொல்லப்பட்ட
அபீதிவசஸோ:	அபய வார்த்தைகளையுடைவைகளும்
க்ஷபித	போக்கடிக்கப்பட்ட

தமஸோ:	(அஞ்ஞானமென்னும்) இருளையுடையவைகளும்
லலிதயோ:	அழகானவைகளுமான
சரணயோ:	பாதங்களினுடைய
க்ஷணம்	கொஞ்ச நேரம்
விந்யாஸேந	வைப்பதால்
விநம்ரம்	வணங்கின
மே	என்னுடைய
மூர்த்தாநம்	தலையை
புநீயாத்	பரிசுத்தம் செய்யட்டும்

புரங்களை எரித்த பரமசிவனின் மனைவியான காமாக்ஷி இரண்டு பீலிகளுடைய (சிலம்பு) சப்தத்தால் அபய வார்த்தைகளையுரைத்துக்கொண்டு பரவுகிற ஒளிகளால் சிவந்தவைகளாய் தமோகுணத்தை யழிக்கின்ற அழகான பாதங்களின் கொஞ்ச நேரம் வைப்பதால், வணங்கின எனது தலையை பரிசுத்தம் செய்யட்டும்.

பாதங்களில் பக்தர்கள் வணங்குங் காலத்தில் அம்பாளின் அடிகளிலுள்ள சிலம்புகள் ஒலிப்பதைப் பார்த்தால், அவர்களுக்கு 'அஞ்சேல்' என்று அபயமளிப்பதுபோல் இருக்கிறது.

भवानि द्रुह्येतां भवनिबिडितेभ्यो मम मुहु:
तमोव्यामोहेभ्यस्तव जननि कामाक्षि चरणौ।
ययोर्लाक्षाबिन्दुस्फुरणधरणाद्धूर्जटिजटा:
कुटीरा शोणाङ्कंवहति वपुरेणाङ्ककलिका।।१३।।

பவாநி த்ருஹ்யேதாம் பவநிபிடிதேப்யோ மம முஹு:
தமோ-வ்யோமோஹேப்ய: தவஜநநி காமாக்ஷீ சரணௌ।

**யயோர்-லாக்ஷாபிந்து-ஸ்புரண-தரணாத் தூர்ஜடி-ஜடா:
குடீரா சோணாங்கம் வஹதி வபு: ஏணாங்க கலிகா॥13॥**

பவாநி	*சிவனுடைய தேவியே*
ஜநநி	*தாயே*
காமாக்ஷீ	*காமாக்ஷீ*
யயோ:	*எந்த பாதங்களுடைய*
லாக்ஷா பிந்து	*செம்பஞ்சுக்குழம்பின்*
ஸ்புரண	*ஒளியை (பிரதிபிம்பத்தை)*
தரணாத்	*தரிப்பதனால்*
தூர்ஜடி	*சிவனுடைய*
ஜடாகுடீரா	*ஜடை என்னும் குடிசையில் வஸிக்கிற*
ஏணாங்க	*சந்திரனுடைய*
கலிகா	*பிறையானது*
சோணாங்கம்	*சிவப்பு மச்சமுள்ள*
வபு:	*சரீரத்தை*
வஹதி	*தரிக்கிறதோ (அப்பேர்ப்பட்ட)*
தவ	*உன்னுடைய*
சரணௌ	*அந்தப்பாதங்கள்*
முஹு:	*அடிக்கடி*
மம	*என்னுடைய*
பவநிபீடிதேப்ய:	*பிறவிக்குக்காரணமான*
தமோ-வ்யாமோஹேப்ய:	*இருட்டுக்கூட்டங்களை*
த்ருஹ்யேதாம்	*நாசம் செய்யட்டும்*

சிவனுடைய தேவியே, தாயே, காமாக்ஷீ எந்த பாதங்களின் செம்பஞ்சுக்குழம்பின் துளியின் ஒளியை

(பிரதிபிம்பம்) தரிப்பதால் பரமசிவனின் ஜடாமுடி என்னும் குடிசையில் வஸிக்கின்ற சந்திரனின் பிறையா னது சிவப்பு மருவுள்ள சரீரத்தையடைகிறதோ அந்த உனது பாதங்கள் அடிக்கடி எனது பிறவிக்குக் காரணமான இருள் கூட்டங்களை (தமோகுணத்தின் செயல்களை) நாசம் செய்யட்டும்.

பிரணய கலஹ ஸமயத்தில சிவன் அம்பாளை வணங்குகிறபடியால் அவள் பாதங்களில் இடப்பட்ட செம்பஞ்சுக் குழம்பின் திவிலைகள் பிறைச்சந்திரனில் படுகின்றன. அப்போது வெளுப்பான சந்திரனுடைய சரீரத்தில் சிவப்பான மச்சங்கள் இருப்பதுபோல தோன்றுகிறது என்கிறார். அப்பாதங்கள் இருளை நீக்கி என்பிறவியையறுக்கட்டும்.

पवित्रीकुर्युर्नः पदतलभुवः पाटलरुचः
परागास्ते पापप्रशमनधुरीणास्तव शिवे।
कणं लब्धुं येषां निजशिरसि कामाक्षि नियतं
वलन्तो व्यातन्वन्त्यहमहमिकां वासवमुखाः।।१४।।

பவித்ரீ குர்யு: ந: பத-தல-புவ: பாடல-ருச:
பராகாஸ்தே பாப-ப்ரசமந-துரீணாஸ்-தவ ஶிவே।
கணம் லப்தும் யேஷாம் நிஜசிரஸி காமாக்ஷி நியதம்
வலந்தோ வ்யாதந்வந்தி அஹமஹமிகாம் வாஸவமுகா:।।

ஶிவே	மங்களாம்பிகையே
காமாக்ஷி	காமாக்ஷியே
யேஷாம்	எந்த துளிகளினுடைய
கணம்	கொஞ்சத்தையும்
நிஜஶிரஸி	தங்கள் தலையில்

லப்தும்	பெறுவதற்கு
நியதம்	எப்போதும்
வாஸவ-முகா	இந்திரன் முதலான தேவர்கள்
வலந்த:	(ஒருவரையொருவர்) தள்ளிக்கொண்டு
அஹமஹமிகாம்	'நான் முந்தி' 'நான் முந்தி' என்று போட்டியை
வ்யாதந்வந்தி	செய்கிறார்களோ
தவ	உன்னுடைய
பத-தல-புவ:	பாததலங்களில் – இருப்பவைகளும்
பாடல-ருச:	சிவந்த ஒளியை – யுடையவைகளும்
பாப-ப்ரசமந	பாபத்தை போக்குவதில்
துரீணா:	ஸாமர்த்திய முள்ளவைகளுமான
தேபராகா:	அப்பேர்பட்ட தூளிகள்
ந:	எங்களை
பவித்ரீ-குர்யு:	பரிசுத்தமாகச் செய்யட்டும்.

மங்கள மூர்த்தியான ஸ்ரீ காமாக்ஷியே எந்த தூளிகளின் அணுக்களையும் தங்களது சிரஸ்களில் பெறுவதற்கு எப்பொழுதும் இந்திரன் முதலான தேவர்கள் ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு நான் முந்தி, நான் முந்தி என போட்டியைச் செய்கிறார்களோ அந்த உனது பாதப் பிரதேசங்களிலிருந்து உண்டாகி பாபத்தைப் போக்குவதில் ஸாமர்த்தியமுள்ளவைகளான தூளிகள் எங்களை பரிசுத்த மாகச் செய்யட்டும்.

தங்கள் பாபங்களைப் போக்கிக்கொள்வதற்காக தேவி யின் பாததூளிகளைத் தங்கள் சிரஸுகளில் பெறுவதற்கு இந்திரன் முதலான ஸகல தேவர்களும் 'நான் முன்னே' 'நான் முன்னே' என்று ஒருவர்மேல் ஒருவர் விழுந்து தள்ளிக்கொண்டு வருகிறார்கள். அப்பேர்ப்பட்ட பாததூளிகள் எங்களையும் பரிசுத்தமாக்கட்டும் என்று பிரார்த்திக்கிறார்.

बलाकामालाभिर्नखरुचिमयीभिः परिवृते
विनम्रस्वर्नारीविकचकचकालाम्बुदकुले।
स्फुरन्तः कामाक्षि स्फुटदलितबन्धूकसुहृदः
तडिल्लेखायन्ते तव चरणपाथोजकिरणाः॥१५॥

பலாகா-மாலாபி: நக-ருசி-மயீபி: பரிவ்ருதே
விநம்ர-ஸ்வர்-நாரீ-விகச-கச-காலாம்புத-குலே।
ஸ்புரந்த: காமாக்ஷி ஸ்புட-தலித-பந்தூக-ஸுஹ்ருத:
தடில்லேகாயந்தே தவ சரண-பாதோஜ-கிரணா:॥15॥

காமாக்ஷி	காமாக்ஷி
நக-ருசி-மயீபி:	நகங்களின் காந்திகளாகிற
பலாகா-மாலாபி:	கொக்குக் கூட்டங்களால்
பரிவ்ருதே	சூழப்பட்ட
விநம்ர	நமஸ்கரிக்கின்ற
ஸ்வர்-நாரீ	தேவஸ்திரீகளுடைய
விகச-கச	அவிழ்ந்த கூந்தல்களாகிற
கால-அம்புத-குலே	கருத்த மேகங்களுடைய கூட்டத்தில்
ஸ்புடதலித	நன்றாக மலர்ந்த
பந்தூக-ஸுஹ்ருத:	செம்பரத்தம் பூவுக்குச்

	சிநேகங்களாய் (ஸமானங்களாய்)
ஸ்புரந்த:	விளங்கிக்கொண்டிருக்கிற
தவ	உன்னுடைய
சரண பாதோஜ	தாமரை போன்ற
	பாதங்களுடைய
கிரணை:	கிரணங்கள்
தடில்லேகாயந்தே	மின்னல் கொடிகளாகின்றன.

காமாக்ஷியே நன்ருக மலர்ந்த செம்பரத்தம் பூவுக்கு சிநேகங்களாய், விளங்கிக்கொண்டிருக்கிற உமது தாமரை போன்ற பாதகிரணங்கள், நகங்களில் காந்திகளாகிற, கொக்குகளின் வரிசைகளால் சூழப்பட்ட தேவஸ்திரீகளின் அவிழ்ந்த கூந்தல்களென்றும் கருத்த மேகங்களின் கூட்டத்தில் மின்னல்கொடிகளாகின்றன.

தேவஸ்திரீகள் மிகுந்த உத்ஸாகத்துடன் ஓடிவந்து அம்பாளை நமஸ்கரிக்கும்போது அவிழ்ந்து அசையும் அவர்களுடைய இருண்ட கூந்தல்களே கார்மேகங்கள்; அம்பாளின் வெளுத்த கிரணங்களே மேகத்தையொட்டிப் பறக்கும் கொக்குக் கூட்டங்கள்; அடித்தாமரையிலிருந்து எழும் கதிர்களே மேகத்தினிடையே மிளிரும் மின்னல்கள் என்று இவற்றை கார்காலத்து வானத்துக்கு ஒப்பிடுகிருர்.

सराग: सद्वेष: प्रसृमरसरोजे प्रतिदिनं
निसर्गाद् आक्रामन् विबुधजनमूर्धानमधिकम्।
कथङ्कारं मात: कथय पदपद्मस्तव सतां
नतानां कामाक्षि प्रकटयति कैवल्यसरणिम्।।१६।।

ஸராக: ஸத்வேஷ: ப்ரஸ்ருமர-ஸரோஜே ப்ரதி திநம்
நிஸர்காத் ஆக்ராமந் விபுத-ஜந-மூர்த்தாநம் அதிகம்।
கதம்காரம் மாத: கதய பத-பத்மஸ்-தவ ஸதாம்
நதாநாம் காமாக்ஷி ப்ரகடயதி கைவல்ய-ஸரணிம்॥16॥

மாத: காமாக்ஷி	*தாயே காமாக்ஷி*
ஸராக:	*ராக(ஆசை)யுள்ளதும்*
ஸத்வேஷ:	*துவேஷமுள்ளதும்*
ப்ரஸ்ருமர	*மலர்ந்த*
ஸரோஜே	*தாமரைப்பூ விஷயத்தில்*
ப்ரதி தினம்	*ஒவ்வொரு நாளும்*
விபுத ஜந	*தேவர்களுடைய*
மூர்த்தாநம்	*தலையை*
நிஸர்காத்	*ஸ்வபாவத்திலேயே*
அதிகம்	*நன்றாக*
ஆக்ராமந்	*ஆக்கிரமிப்பதாதாயுமுள்ள*
தவ	*உன்னுடைய*
பத பத்ம:	*தாமரைபோன்ற பாதமானது*
நதாநாம்	*வணங்குகிற*
ஸதாம்	*ஸாதுக்களுக்கு*
கைவல்ய ஸரணிம்	*மோக்ஷ மார்க்கத்தை*
கதம்காரம்	*எப்படித்தான்*
ப்ரகடயதி	*காட்டித்தருகிறதோ*
கதய	*சொல்லு*

அன்னே காமாக்ஷியே, ராகத்துடன் கூடி மலர்கின்ற தாமரைப்பூ விஷயத்தில் துவேஷம் கொண்டு ஒவ்வொரு நாளும் ஸ்வபாவத்திலேயே ஞானிகளுடையவும்

தேவர்களினுடையவும் சிரஸ்களை ஆக்ரமிப்பதாயுமுள்ள உனது தாமரை போன்ற பாதமானது வணங்குகிற ஸாதுக்களுக்கு எங்ஙனம் மோக்ஷ மார்க்கத்தை விளக்குகின்றது சொல்லு.

மோக்ஷத்தில் ஆசையுடையவர்களுக்கு ராகம், துவேஷம், பிறரை ஆக்ரமித்தல் முதலான குணங்கள் இருக்கலாகாது. முமுக்ஷுகளுக்கு வழியைக்காட்டுமவர் களுக்கோ அவை ஒருநாளும் ஏற்கா. ஆனால் அம்பாளின் பாதங்களோ ராகம் துவேஷம் ஆக்ரமணம் முதலியவற் றோடு கூடியிருப்பினும் தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு மோக்ஷத்தைத் தருகின்றன. இது விசித்திரம் என்கிறார். இங்கு 'ராகம்' என்பதற்கு சிவப்பு வர்ணம். தாமரையிடத்தில் துவேஷமாவது அழகில் அதை விஞ்சியிருப்பது; தேவஸ்திரீகளை ஆக்ரமித்தலாவது அவர்கள் கர்வத்தை விட்டு தங்கள் மனோரதம் நிறைவேறும் பொருட்டு அம்பாளின் பாதங்களில் சிரஸ்ஸுப்படும்படி வணங்கி இருக்கும்படி செய்தலே யாகும்.

जपालक्ष्मीशोणो जननि परमज्ञाननलिनी–
विकासव्यासङ्गो विफलितजगज्जाड्यगरिमा।
मनः पूर्वाद्रिम् मे तिलकयतु कामाक्षि तरसा
तमस्काण्डद्रोही तव चरणपाथोजरमणः॥१७॥

ஜபாலக்ஷ்மீஶோணோ ஜநநி பரம-ஜ்ஞாந-நலிநீ
விகாஸ-வ்யாஸங்கோ விபலித-ஜகஜ்-ஜாட்ய-கரிமா
மந:-பூர்வாத்ரிம் மே திலகயது காமாக்ஷி தரஸா
தமஸ்-காண்ட-த்ரோஹீ தவசரண-பாதோஜ-ரமண:॥17॥

ஜநநி காமாக்ஷி	*தாயே காமாக்ஷி*
ஜபா லக்ஷ்மீ	*ஜபாகுஸுமத்தின் காந்திபோல்*

ஶோணோ	சிவந்ததாயும்
பரம-ஜ்ஞான	உத்தம ஞானமாகிற
நலிநீ விகாஸ	தாமரையின் மலர்ச்சியோடு
வ்யாஸங்க:	சம்பந்தமுள்ளதாயும்
விபலித	நாசம் செய்யப்பட்ட
ஜகத்	உலகத்தினுடைய
ஜாட்ய-கரிமா	அஜ்ஞானத்தின் சுமையையுடைதாயும்
தமஸ்-காண்ட	(அஜ்ஞானமென்னும்) இருள் கூட்டத்தை
த்ரோஹீ	போக்குவதாயுமிருக்கிற
தவ	உன்னுடைய
சரண-பாதோஜ-ரமண:	பாதமாகிற ஸூர்யன்
தரஸா	சீக்கிரத்தில்
மே	என்னுடைய
மந: பூர்வாத்ரிம்	மனஸ் என்னும் உதய பர்வதத்தை
திலகயது	அலங்கரிக்கட்டும்

தாயே காமாக்ஷி, செம்பரத்தம் பூவின் காந்திபோல சிவந்து உத்தம ஞானமென்கிற தாமரையின் மலர்ச்சி களோடு சம்மந்தம் உள்ளதாய், உலகத்தின் அக்ஞான மென்னும் இருள் கூட்டத்தை போக்குகின்ற உனது பாதமென்னும் சூர்யன் சீக்கிரத்தில் என்னுடைய மனஸ் என்னும் உதயபர்வதத்தை அலங்கரிக்கட்டும்.

ஸூர்யன் காலையில் சிவப்பாக இருக்கிறுன்; ஜபாகுஸுமம் தாமரை புஷ்பம் இவைகளை போல் சிவந்த

நிறமுடையன அம்பாளின் பாதங்கள். ஸூரியன் தாமரைகளை மலரச்செய்கிறுன், பாதங்கள் ஞானத்தை விகஸிக்கச்செய்கின்றன. ஸூர்யோதயமானுல் இருள் நீங்கி மக்களிடமுள்ள சோம்பேறித்தனம் நசித்துபோகிறது; பாதங்களை தியானித்தால், அஜ்ஞானம் நீங்கி ஜடத்தன்மை நசித்துவிடுகிறது. இவ்விதம் பாதங்களை ஸூர்யனுக்கு ஒப்பிடுகிறுர்.

नमस्कुर्मः प्रेङ्खन्मणिकटकनीलोत्पलमहः
पयोधौ रिङ्खद्भिर्नखकिरणफेनैर्धवलिते।
स्फुटं कुर्वाणाय प्रबलचलदौर्वानलशिखा-
वितर्कम् कामाक्ष्याः सततमरुणिम्ने चरणयोः॥१८॥

நமஸ்-குர்மः ப்ரேங்கந்-மணி-கடக-நீலோத்பல-மஹः
பயோதௌ ரிங்கத்பிர்-நக-கிரணபேநை:தவலிதே।
ஸ்புடம் குர்வாணய ப்ரபல-சல-தௌர்வா நல-ஶிகா-
விதர்க்கம் காமாக்ஷ்யா: ஸததம் அருணிம்நே சரணயோ:॥18॥

ரிங்கத்பி:	*வெளிக்கிளம்புகிற*
நக-கிரண	*நகங்களின் காந்தி என்னும்*
பேநை:	*நுரைகளால்*
தவலிதே	*வெளுத்த*
ப்ரேங்கந்	*ஜ்வலிக்கின்ற*
மணி-கடக	*ரத்னசிலம்புகளின்*
நீலோத்பல	*இந்திரநீலகற்களின்*
மஹ:பயோதௌ	*ஒளியாகிற ஸமுத்திரத்தில்*
ப்ரபல-சலத்	*பிரபலமாய் ஜ்வலிக்கிற*

ஔர்வாநல	படபாக்னியின்
சிகா விதர்க்கம்	ஜ்வாலேயோ என்கிற ஸந்தேகத்தை
குர்வாணுய	உண்டாக்குகிற
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
சரணயோ:	பாதங்களினுடைய
அருணிம்நே	சிவப்பு வர்ணத்திற்கு
ஸததம்	எப்போதும்
நமஸ்குர்ம:	நமஸ்காரம் செய்கிறோம்.

மிதந்து கொண்டிருக்கின்ற நக கிரணங்களாகிற நுரைகளால் வெளுத்து, ஜ்வலிக்கின்ற தண்டைகளிலுள்ள இந்திரநீலகற்களின் காந்தியென்னும் ஸமுத்திரத்தில் பிரபலமாய் ஜவலிக்கிற படபாக்னியின் ஜ்வாலேயோ என்ற ஸ்ந்தேகத்தை உண்டாக்குகின்ற காமாக்ஷியின் பாதங்களினுடைய சிவப்பு வர்ணத்திற்கு எப்பொழுதும் நமஸ்காரம் செய்கிறோம்.

அம்பாளின் பாதங்களில் இலங்கும் தண்டை சிலம்புகளில் இழைக்கப்பட்ட நீலகற்களின் காந்தி வெள்ளமே ஸமுத்திரம், வெளுப்பான நகங்களின் வெள்ளேச் சோதியே நுரைகள்; பாதங்களிலிருந்து பெருகும் சிவந்த சுடர், கடலின் நடுவிலுள்ள படபாக்னியோ இது என்று ஸந்தேகத்தை உண்டு பண்ணுகிறது என்கிறுர்.

शिवे पाशायेतां अलघुनि तम: कूपकुहरे
दिनाधीशायेतां मम हृदयपाथोजविपिने।

नभोमासायेतां सरसकवितारीतिसरिति
त्वदीयौ कामाक्षि प्रसृतकिरणौ देवि चरणौ ।।१९।।

சிவே பாசாயேதாம் அலகுநி தம:-கூப-குஹரே
திநாதீயாயேதாம் மம ஹ்ருதய-பாதோஜ-விபிநே
நபோ-மாஸாயேதாம் ஸரஸ-கவிதா-ரீதி-ஸரிதி
த்வதீயெள காமாக்ஷி ப்ரஸ்ருதகிரணெள தேவி
சரணெள।।19।।

சிவே	மங்கள ரூபையான
தேவி	தேவியே
காமாக்ஷி	காமாக்ஷி
ப்ரஸ்ருத	பரவுகின்ற
கிரணெள	கிரணங்களையுடைய
த்வதீயெள சரணெள	உன் பாதங்கள்
மம	என்னுடைய
அலகுநி	பெரியதான
தம:-கூப-குஹரே	அஜ்ஞானம் என்னும் பாழும் கிணற்றில்
பாசாயேதாம்	கயிறுகளாக ஆகட்டும்
ஹ்ருதய	மனதென்கிற
பாதோஜ-விபிநே	தாமரைக்காட்டில்
திநாதீயாயேதாம்	ஸூர்யனாக ஆகட்டும்
ஸரஸ	இனிமையான
கவிதா ரீதி	கவிதையின் முறை என்னும்
ஸரிதி	நதியில்
நபோ மாஸாயேதாம்	சிராவணமாஸமாக ஆகட்டும்

மங்கள ரூபியான தேவியே காமாக்ஷி பரவுகின்ற கிரணங்களையுடைய, உனது பாதங்கள் பெரிய அக்ஞான மென்னும் இருள் நிறைந்த பாழுங்கிணற்றில் தாம்புக் கயிறுகளாக ஆகட்டும். எனது மனமென்ற தாமரைக் காட்டில் ஸுர்யனாக ஜ்வலிக்கட்டும். இனிமையான கவிதையின் முறை என்னும் நதியில் சிராவண மாஸமாக ஆகட்டும்.

அஜ்ஞானமென்னும் பாழுங்கிணற்றில் விழுந்து கரையேராமல் தத்தளிப்பவர்களுக்கு தேவியின் சரணங்கள் அவர்களை வெளியேயெடுக்கும் விஷயத்தில் கயிறு போலவும், மனதுக்கு இன்பத்தையளிப்பதால் மனமாகிய தாமரைகளை மலர்த்தும் ஸுர்யன் போலவும், ஸகல ரஸங்களும் ததும்பும்படியான காவ்யத்தை பெருகச் செய்வதால் கவித்வமாகிய நதிகளுக்கு ஆவணி மாதம் போலவும் ஆகட்டும் என்கிறார்.

निषक्तं श्रुत्यन्ते नयनमिव सद्वृत्तरुचिरैः
समैर्जुष्टं शुद्धैरधरमिव रम्यैर्द्विजगणैः।
शिवे वक्षोजनमद्वितयमिव मुक्ताश्रितमुमे
त्वदीयं कामाक्षि प्रणतशरणं नौमि चरणम्।।२०।।

நிஷக்தம் ஸ்ருத்யந்தே நயநமிவ ஸத்வ்ருத்தருசிரை:
ஸமைர் ஜுஷ்டம் சுத்தைரதரமிவ ரம்யைர்-த்விஜகணை:।
சிவே வக்ஷோஜந்ம-த்விதயமிவ முக்தாச்ரிதமுமே
த்வதீயம் காமாக்ஷி ப்ரணத-சரணம் நௌமி சரணம்।।20।।

சிவே	மங்களாம்பிகையே
உமே காமாக்ஷி	உமையே காமாக்ஷி
நயநம் இவ	கண்ணைபோல

ச்ருத்யந்தே	(காதின் ஸமீபத்தில்) வேதாந்தத்தில்
நிஷக்தம்	ஸம்பந்தப்பட்டதாயும்
அதரம் இவ	உதடுபோல
ஸத்-வ்ருத்த-ருசிரை:	நல்லவையாயும் வ்ருத்தமானவைகளாயும் காந்தியையுடையவைகளாயும்)
ஸமை:	ஒழுங்கானவைகளும்
சுத்தை:	வெளுப்பானவைகளாயும்
ரம்யை:	அழகானவைகளாயும் உள்ள
த்விஜகணை:	(பல் ஸமூஹங்களால்) பிராமண சமூகங்களால்
ஜுஷ்டம்	நிறைந்ததாயும்
வக்ஷோஜன்ம த்விதயம்	இரண்டு ஸ்தனங்கள்
இவ	போல
முக்தாச்ரிதம்	(முத்துமாலைகளையுடையதாயும்) ஜீவன்முக்தர்களால் ஆச்ரயிக் கப்பட்டதாயும்
ப்ரணதசரணம்	வணங்குபவர்களை ரக்ஷிப்பதாயுமிருக்கிற
த்வதீயம்	உன்னுடையதான
சரணம்	பாதத்தை
நௌமி	நமஸ்கரிக்கிறேன்.

மங்களகரமானவளே; உமயே காமாக்ஷி கண்போல சுருதியின் ஸமீபத்திலிருப்பவளும், உதடு போல நல்ல விருத்தியால் காந்தியுடையவளாயும் ஸமங்களாயும் வெளுப்பானவைகளாயும், அழகானவை களாயும் உள்ள பிராமண சமூகங்களால் நிறைந்ததும் ஸ்தனங்கள் போல

முக்தாவளிக்கு உறைவிடமாக அமைந்ததும், நமஸ் கரிப்பவர்களுக்கு அடைக்கலமா யிருக்கிற உனது பாதத்தை நமஸ்கரிக்கிறேன்.

ச்ருத்யந்தே-வேதங்களின் முடிவில் அதாவது உபநிஷத்தில்; காதின் சமீபத்தில்.

த்விஜ-கணை:-பற்களாலும், பிராமணர்களாலும்; பற்கள் சிறந்ததாகவும் வ்ருத்தமாகவும் காந்தியாகவும் ஒழுங்காகவும் ஸமமாகவும் அழகாகவும் வெளுப் பாகவும் இருக்கின்றன. அப்படியே பிராமணர்கள் சிறப்பு, வ்ருத்தம், தேஜஸ், மைதிருஷ்டிசுத்தம், சீலம் முதலியவை உடையவர்களாயிருக்கிறார்கள்.

பிராமணர்களுக்கு தாய் வயிற்றிலிருந்து பிறப்பது முதல் பிறவி, காயத்ரீ தேவிக்கும் ஆசார்யனுக்குமாகப் பிறப்பது இரண்டாவது ஜன்மம்; பற்கள் ஒரு தடவை விழுந்து மறுபடியும் முளைப்பதால் அவைகளுக்கும் 'த்விஜன்ம' என்று பெயர்.

முக்தாச்ரிதம்-முத்துமாலைகளால் ஆச்ரயிக்கப்பட் டது. நயனம் காதளவில் நீண்டிருப்பது சிறந்த லட்சணம். நயனம் போல் பாதமும் (ச்ருத்யந்த) வேதாந்தத்தில் பிரதிபாதிக்கப்பட்டது.

नमस्यासंसजन्नमुचिपरिपन्थिप्रणयिनी
निसर्गप्रेङ्खोलत्कुरलकुलकालाहिशबले।
नखच्छायादुग्धोदधिपयसि ते वैद्रुमरुचां
प्रचारं कामाक्षि प्रचुरयति पादाब्जसुषमा।।२१।।

**நமஸ்யா-ஸம்ஸஜ்ஜந்-நமுசி-பரிபந்தி-ப்ரணயிநீ-
நிஸர்கப்ரேங்கோலத்-குரலகுல-காலாஹி ஶபலே
நகச்சாயா துக்தோ ததி பயஸி தே வைத்ருமருசாம்
ப்ரசாரம் காமாக்ஷி ப்ரசுரயதி பாதாப்ஜ ஸுஷமா||21||**

காமாக்ஷி	*காமாக்ஷி*
நமஸ்யா ஸம்ஸஜ்ஜந்	*நமஸ்கரிப்பதில் ஈடுபட்டிருக்கிறவளான*
நமுசி பரிபந்தி ப்ரணயிநீ	*நமுசியின் சத்ருவான இந்திரன் மனைவியான இந்திராணியின்*
நிஸர்க	*இயற்கையிலேயே*
ப்ரேங்கோலத்	*அசைகிற*
குரலகுல	*சுருட்டை மயிர் கூந்தலாகிற*
காலாஹி	*கருநாகத்தினுல்*
ஶபலே	*விசித்திரமாயிருக்கிற*
நகச்சாயா	*நகங்களின், காந்தியாகிற*
துக்தோததி	*க்ஷீரஸமுத்திரத்தின்*
பயஸி	*வெள்ளத்தில்*
தே	*உன்னுடைய*
பாதாப்ஜஸுஷமா	*சரண கமலங்களின் சோபை*
வைத்ருமருசாம்	*பவழங்களின் காந்தியினுடைய*
ப்ரசாரம்	*பிரசாரத்தை*
ப்ரசுரயதி	*அதிகமாக்குகிறது*

காமாக்ஷியே! நமஸ்கரிப்பதில் ஈடுபட்டிருக்கிற நமுசியின் விரோதியான இந்திரனின் மனைவியான இந்திராணியின் இயற்கையிலேயே அசைகிற சுருட்டை மயிர் கூந்தலாகிற கருநாகத்தால் விசித்ரமான நகங்களில் காந்தியாகிற க்ஷீர

ஸமுத்ரத்தின் வெள்ளத்தில் உனது பாத பத்மங்களின் காந்தியானது பவழக்கொடியின் ஒளிகளைப் பெரிதும் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறது.

அம்பாளின் பாதங்களில் இந்திராணி வந்து வணங்கும்போது கறுத்து நீண்ட அவளுடைய சுருட்டைமயிர் கிருஷ்ண சர்ப்பம் போன்றும் திருவடிகளின் நகர்ந்த பாற்கடல் போன்றும் நகச்சோதிகளுக்கிடையே திகழும் சிவந்த பாதங்கள் பவழம் போன்றும் இருக்கின்றன என்கிறார்.

कदा दूरीकर्तुम् कटुदुरितकाकोलजनितं
महान्तं संतापं मदनपरिपन्थिप्रियतमे।
क्षणात्ते कामाक्षि त्रिभुवनपरीतापहरणे
पटीयांसं लप्स्ये पदकमलसेवामृतरसम्।।२२।।

கதா தூரீகர்த்தும் கடு-துரித-காகோல-ஜநிதம்
மஹாந்தம் ஸந்தாபம் மதந-பரிபந்தி-ப்ரியதமே
க்ஷணத் தே காமாக்ஷி த்ரிபுவந-பரீதாப-ஹரணே
படீயாம்ஸம் லப்ஸ்யே பதகமல-ஸேவாம்ருதரஸம்।।22।।

மதந பரிபந்தி ப்ரியதமே	மன்மதனை எரித்த சிவனுடைய பத்னியே
காமாக்ஷி	காமாக்ஷி
கடு-துரித	கொடுமையான பாபம் என்னும்
காகோல	விஷத்தினால்
ஜநிதம்	உண்டான
மஹாந்தம்	பெரிய
ஸந்தாபம்	ஸந்தாபத்தை

தூரீகர்த்தும்	அகற்றுவதற்கு
க்ஷணாத்	க்ஷண நேரத்திற்குள்ளாகவே
த்ரிபுவந	மூன்று உலகங்களுடைய
பரீதாபஹரணே	கஷ்டத்தைப் போக்குவதில்
படீயாம்ஸம்	மிகவும் ஸாமர்த்தியமுள்ள
தே	உன்னுடைய
பதகமல	தாமரை போன்ற பாதங்களில்
ஸேவா	சுச்ரூஷை என்னும்
அம்ருதரஸம்	அம்ருதரஸத்தை
கதா	எப்போது
லப்ஸ்யே	பெறப்போகிறேன்.

மன்மதனை எரித்த சிவனின் காதலியே கொடுமையான பாபமென்னும் காலகூட விஷத்தால் உண்டான பெரிய ஸந்தாபத்தை அகற்றுவதற்காக க்ஷண நேரத்தில் மூன்று உலகங்களின் கஷ்டத்தை போக்கடிப் பதில் ஸாமர்த்யமுள்ள உனது தாமரை போன்ற பாதங்களின் ஸேவை என்னும் அமிருத ரஸத்தை எப்பொழுது அடைவேன்?

தேவியின் பாதங்களில் சுச்ரூஷை செய்ய முற்பட்டால், கொடியபாபங்களும் தன்னடைவே விலகிப்போகின்றன என்கிருர்.

ययो: सान्ध्यं रोचि: सततमरुणिम्नेस्पृहयते
ययोश्चान्द्री कान्ति: परितपति दृष्ट्वा नखरुचिम्।
ययो: पाकोद्रेकं पिपठिषति भक्त्या किसलयं
म्रदिम्न: कामाक्ष्या मनसि चरणौ तौ तनुमहे।।२३।।

யயோ: ஸாந்த்யம் ரோசி: ஸததம் அருணிம்நே
ஸ்ப்ரு-ஹயதே
யயோ: சாந்த்ரீ காந்தி: பரிதபதி த்ருஷ்ட்வா நகருசிம்।
யயோ: பாகோத்ரேகம் பிபடிஷதி பக்த்யா கிஸலயம்
ம்ரதிம்ந: காமாக்ஷ்யா மனஸி சரணௌ தௌ தநுமஹே
॥23॥

யயோ:	*எந்த பாதங்களுடைய*
அருணிம்நே	*சிவப்பு நிறத்தை*
ஸாந்த்யம்	*ஸந்தியா காலத்தின்*
ரோசி:	*காந்தியானது*
ஸததம் ஸ்ப்ருஹயதே	*எப்போதும் விரும்புகிறதோ*
யயோ: நகருசிம்	*எவைகளின் நககாந்தியை*
த்ருஷ்ட்வா	*பார்த்து*
சாந்த்ரீகாந்தி	*சந்திரனின் ஒளி*
பரிதபதி	*அந்த காந்தி தனக்கு இல்லையே என்று கஷ்டப்படுகிறதோ*
யயோ:	*எவைகளுடைய*
ம்ரதிம்ந:	*மிருதுவான தன்மையின்*
பாகோத்ரேகம்	*நல்ல நிலைமையை*
கிஸலயம்	*துளிரானது*
பக்த்யா	*பக்தியோடு*
பிபடிஷதி	*படிக்க விரும்புகிறதோ*
காமாக்ஷ்யா:	*காமாக்ஷியினுடைய*
தௌ சரணௌ	*அந்த பாதங்களை*
மனஸி	*மனதில்*
தநுமஹே	*அமைத்து தியானம் செய்கிறோம்.*

எதின் சிவப்பு நிறத்தை அடைய மாலேயொளி எப்பொழுதும் ஆசைப்படுகின்றதோ, எவற்றின் நக காந்தியைக்கண்டு சந்திரனின் ஒளி மறைகின்றதோ, எவைகளுடைய மிருதுவான தன்மையை துளிரானது பக்தியோடு படிக்க விரும்புகிறதோ காமாக்ஷியின் அந்தப் பாதங்களே மனதில் அமைத்து தியானம் செய்கிறோம்.

தேவியின் பாதங்கள் சிவப்பினுல் ஸந்தியா காலத்து செவ்வானத்தையும், நகச்சோதியால் நிலவையும், மிருது வான தன்மையில் துளிரையும் விஞ்சியிருக்கின்றன.

जगन्नेदं नेदं परमिति परित्यज्य यतिभि:
कुशाग्रीयस्वान्तै: कुशलधिषणै: शास्त्रसरणौ।
गवेष्यं कामाक्षि ध्रुवमकृतकानां गिरिसुते
गिरामैदंपर्यम् तव चरणमाहात्म्यगरिमा।।२४।।

ஜகந்நேதம் நேதம் பரமிதி பரித்யஜ்ய யதிபி:
குஶாக்ரீயஸ்வாந்தை: குஶலதிஷணை: சாஸ்த்ரஸரணௌ।
கவேஷ்யம் காமாக்ஷி த்ருவமக்ருதகாநாம் கிரிஸுதே
கிராம் ஐதம்பர்யம் தவ சரண-மாஹாத்ம்யகரிமா।।24।।

காமாக்ஷி	*காமாக்ஷியே*
கிரிஸுதே	*பர்வதராஜகுமாரியே*
தவசரண	*உன்னுடைய பாதங்களின்*
மாஹாத்ம்ய	*மேன்மையின்*
கரிமா	*பெருமையானது*
குஶாக்ரீய	*தர்ப்பநுனிபோல் கூர்மையான*
ஸ்வாந்தை:	*புத்தியுள்ளவர்களும்*

குஸலதிஷணை:	ஸாமர்த்தியமுள்ள,– ஞானமுள்ளவர்களுமான
சாஸ்த்ரஸரெணள	சாஸ்திரங்களின் உட்பொருள்
யதிபி:	ஸந்நியாஸிகளால்
இதம் பரம் ந	இது மேலானதல்ல
இதி	என்று
ஜகத்	உலகத்தை
பரித்யஜ்ய	விட்டு விட்டு
கவேஷ்யம்	தேடத்தக்கதாயும்
அக்ருதகாநாம்	ஒருவரால் செய்யப்படாத
கிராம்	சொற்கள் என்னும் வேதங்களின்
ஐதம்ப்ர்யம்	முக்கியமான கருத்தாகவும் இருக்கிறது
த்ருவம்	நிச்சயம்.

காமாக்ஷி மிகவும் கூரிய புத்தியுள்ள யதிகள் இவ்வுலகம் சிறந்ததல்ல என்று அதை விலக்கி, வேதாந்தங்களால் கூறப்படும் சீரிய பொருள் உன் பாத கமலங்களே என்று அவற்றையே தேடுகிருர்கள்.

வேதங்கள் தேவியின் பாதங்களின் பெருமையையே கூறுகின்றன; ஆதலால், யோகாதிகளால் பரிசுத்தமான மனதையுடைய ஸந்நியாஸிகளும் அஸாரம் என்று உலகத்தை விலக்கி தங்கள் தியானத்திஞல் தேட வேண்டியது தேவீயின் சரணங்களே.

कृतस्नानं शास्त्रामृतसरति कामाक्षि नितरां
दधानं वैशद्यं कलितरसमानन्दसुधया।

अलंकारं भूमेर्मुनिजनमनश्चिन्मयमहा-
पयोधेरन्तःस्थं तव चरणरत्नं मृगयते।।२५।।

க்ருத-ஸ்நாநம் ஶாஸ்த்ராம்ருத-ஸரசி காமாக்ஷி நிதராம்
ததா நம் வைஶத்யம் கலித-ரஸம் ஆநந்த்-ஸுதயா।
அலங்காரம் பூமே: முநி-ஜந-மனஶ்-சிந்மய-மஹா
பயோதே-ரந்த-ஸ்தம் தவ சரண-ரத்னம் ம்ருகயதே।।25।।

காமாக்ஷி	காமாக்ஷியே
முநி-ஜந-மந:	முனிவர்களுடைய மனஸ்ஸானது
ஶாஸ்த்ர	சாஸ்திரங்களென்னும்
அம்ருத-ஸரஸி	அம்ருதம் நிறைந்த தடாகத்தில்
க்ருத-ஸ்நாநம்	ஸ்நாநம் செய்ததாயும்
நிதராம்	அதிகமான
வைஶத்யம்	சுத்தியை
ததாநம்	அடைந்ததாயும்
ஆனந்த ஸுதயா	ஆநந்தமென்னும் அம்ருதத்தினுல்
கலிதரஸம்	உண்டான இனிமையை (அல்லது தெம்பை)யுடையதாயுமிருந்து கொண்டு
பூமே:	பூமிக்கு
அலங்காரம்	அலங்காரமாய்
சிந்மய மஹா-பயோதே:	சித்ரூபமான பெரிய சமுத்ரத்தின்
அந்த:-ஸ்தம்	உள்ளே திகழ்கிற
தவ	உன்னுடைய
சரண ரத்நம்	பாதங்களாகிற ரத்னத்தை
ம்ருகயதே	தேடுகிறது.

ஹே காமாக்ஷி தேவியே உனது திருவடியாகிற இரத்தினத்தை முனிவர்களின் மனதானது தேடிக் கொண்டிருக்கிறது. அந்த திருவடி எத்தகையது? சாஸ்திரமாகிற அமுதம் நிறைந்த குளத்தில் நீர்க்குளித்து மிகவும் சுத்தியை அடைந்து பிரகாசிக்கிறது: ஆனந்தமென்னும் அமிர்தத்தால் மிகுந்த இனிமையை அடைந்துள்ளது. பூமிக்கு அலங்காரமாயிருக்கிறது. சிந்மயமான மஹா சமுத்திரத்தினுள் திகழ்ந்து கொண்டிருக்கிறது. (அத்தகைய திருவடி ரத்நத்தை முனிகளின் மனஸ் தேடிக்கொண்டிருக்கிறது)

मनोगेहे मोहोद्भव तिमिरपूर्णे मम मुहु:
दरिद्राणीकुर्वन्दिनकरसहस्राणि किरणै:।
विधत्तां कामाक्षि प्रसृमरतमोवञ्चनचण:
क्षणार्धम् सान्निध्यं चरणमणिदीपो जननि ते।।२६।।

மநோ-கேஹே மோஹோத்பவ-திமிர-பூர்ணே மம முஹு:
தரித்ராணீ-குர்வந் திநகர ஸஹஸ்ராணி கிரணை:।
விதத்தாம் காமாக்ஷி ப்ரஸ்ருமர-தமோ-வஞ்சநசண:
க்ஷணார்த்தம் ஸாந்நித்யம் சரணமணி-தீபோ ஜநநி தே।।

ஜநநி	தாயே
காமாக்ஷி	காமாக்ஷி
கிரணை:	(தன்) கிரணங்களால்
திநகர ஸஹஸ்ராணி	பல்லாயிரம் ஸூர்யர்களை
தரித்ராணீ குர்வந்	அல்பமாகச்செய்வதும்
ப்ரஸ்ருமர	பெருகுகிற
தமோ	அக்ஞானம் என்னும் இருளை
வஞ்சந	நீக்குவதில்

சண:	ஸாமர்த்தியமுள்ளதுமான
தே	உன்னுடைய
சரணமணிதீப:	பாதங்களாகிற ரத்னதீபமானது
மோஹோத்பவ	மோஹத்திலிருந்து உண்டான
திமிரபூர்ணே	இருள் நிறைந்த
மம	என்னுடைய
மநோ கேஹே	மனமென்னும் வீட்டில்
க்ஷணார்த்தம்	அரைக்ஷணகாலமாவது
முஹு:	அடிக்கடி
ஸாந்நியம்	ஸாந்நித்யத்தை
விதத்தாம்	செய்யட்டும்.

ஸூர்யனாலும் நீக்கமுடியாத வீட்டுக்குள்ளிருக்கும் இருளை ஒரு விளக்கே போக்குகிறது. அதுபோல மனதென்னும் வீட்டுக்குள்ளிருக்கும் அக்ஞானத்தைப் போக்கும்பொருட்டு ஒரு பொழுதும் சுடர் குன்றாது ஆயிரம் ஸூர்யனுக்கு ஸமமாக ஜ்வலிக்கும் ரத்னதீபம் போன்ற அம்பாளின் பாதங்கள் என் மனதில் என் வினையினால் இடைவிடாது ஸந்நிதி செய்யாமற் போனாலும் அரை க்ஷணமாகவாவது அடிக்கடி தோன்றட்டும் .

कवीनां चेतोवन्नखरुचिसंपर्कि विबुध–
स्रवन्तीस्रोतोवत्पटुमुखरितं हंसकरवैः।
दिनारम्भश्रीवन्नियतं अरुणच्छायसुभगं
मदन्तः कामाक्ष्याः स्फुरतु पदपङ्केरुहयुगम्।।२७।।

கவீநாம் சேதோவந் நகரருசி-ஸம்பர்க்கி விபுத-
ஸ்ரவந்தீ-ஸ்ரோதோவத்-படுமுகரிதம் ஹம்ஸகரவை:
திநாரம்ப-ஸ்ரீவத் நியதம் அருணச்சாயஸுபகம்
மதந்த: காமாக்ஷ்யா: ஸ்புரது பதபங்கேருஹயுகம்॥27॥

கவீநாம்	கவிகளுடைய
சேதோவத்	மனம்போல்
நகர ருசி	நகங்களின் காந்தியோடு
ஸம்பர்க்கி	சேர்க்கையை உடையதும்
விபுதஸரவந்தீ	கங்கையினுடைய
ஸ்ரோதோவந்	ஜலம்போல
ஹம்ஸகரவை:	பீலிகளின் சப்தங்களால்
படுமுகரிதம்	இனிமையான சப்தமுள்ளதும்
திநாரம்ப ஸ்ரீவத்	உதயகாலத்தின் சோபைபோல
அருணச்சாயஸுபகம்	சிவந்தகாந்தியால் அழகுள்ளதுமான
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
பதபங்கேருஹயுகம்	தாமரைபோன்ற இரண்டு பாதங்களும்
நியதம்	எப்போதும் (மாறுபாடின்றி)
மத் அந்த:	என் ஹிருதயத்தில்
ஸ்புரது	பிரகாசிக்கட்டும்

கவிகளுடைய சித்தம்போல் மிருதுவான வார்த்தைகளின் அழகோடு (நகங்களின் காந்தியோடு) கூடியதும், கங்கை ஜலம் போல் ஹம்ஸங்களோடு (பாதரஸங்களின் சப்தத்தோடு) கூடியதும், உதயகால சோபைபோல் அருணனுடைய சாயையால் (சிவந்த நிறத்தால்;

மநோஹரமாயிருப்பதுமான ஸ்ரீ காமாக்ஷி தேவியின் திருவடித்தாமரை இரண்டும் என் ஹ்ருதயத்தில் ப்ரகாசிக்கட்டும்.

இந்த சுலோகத்தில் சிலேஷையினால் அம்பாளு டைய பாதத்திற்கு திருஷ்டாந்தமாக மூன்று வஸ்துக்களை கூறுகிறார்.

கவீநாம் சேதோவந் நகரருசிஸம்பர்க்கி-கவிகளின் மனது மிருதுவான வார்த்தைகளின் அழகுடன் கூடியது.

விபுத.....ஹம்ஸக-ரவை:-கங்காஜலம் விளையாடும் ஹம்ஸங்களின் சப்தங்களோடு கூடியிருக்கும்; பாதங்கள் 'ஹம்ஸம்' என்னும் (பீலி ஆபரண விசேஷத்தின் ஒலியோடு கூடியவை.)

திநாரம்ப ஸ்ரீவத் நியதம் அருணச்சாயஸுபகம்-பகலின் ஆரம்பமான அருணோதய காலம் சிவந்து அழகாயிருப்பதுபோல தேவியின் பாதங்களும் சிவந்துமனோரகமாயிருக்கின்றன.

सदा किं संपर्कात्प्रकृतिकठिनैर्नाकिमकुटैः
तटैर्नीहाराद्रेरधिकमणुना योगिमनसा।
विभिन्ते संमोहं शिशिरयति भक्तानपि दृशाम्
अदृश्यं कामाक्षि प्रकटयति ते पादयुगलम्॥२८॥

ஸதா கிம் ஸம்பர்க்காத் ப்ரக்ருதி கடினை: நாகி மகுடை:
தடை: நீஹாராத்ரே: அதிகம் அணுநா யோகி-மநஸா।
விபிந்தே ஸம்மோஹம் ஶிஶிரயதி பக்தான் அபி த்ருஶாம்
அத்ருஶ்யம் காமாக்ஷி ப்ரகடயதி தே பாதயுகளம்॥28॥

காமாக்ஷி	காமாக்ஷியே
தே	உன்னுடைய

பாதயுகளம்	இரண்டு பாதங்களும்
ப்ரக்ருதிகடினை:	இயற்கையிலேயே கடினமான
நாகி மகுடை:	தேவர்களின் கிரீடங்களோடு
ஸதா	எப்போதும்
ஸம்பர்க்காத் கிம்?	சேர்ந்திருப்பதினுலேயா?
ஸம்மோஹம்	மோஹத்தை
விபிந்தே	போக்கடிக்கிறது
நீஹாராத்ரே:	பனிமலையான ஹிமவானின்
தடை:	பிரதேசங்களோடு (எப்போதும் சேர்ந்திருப் பதினுலேயா)
பக்தான்	பக்தர்களையும்
ஶிஶிரயதி	குளிரச்செய்கிறது அதிகம் மிகவும் அணுகா அணு (பரமாணு) ஸ்வரூபமா யிருக்கிற
யோகிமநஸா	யோகிகளின் மனதோடு எப்போதும் சேர்ந்திருப்பதினாலா
த்ருஶாம்	கண்களுக்கு
அத்ருஶ்யம் அபி	புலப்படாதவற்றையும்
ப்ரகடயதி	நன்ருகக் காண்பிக்கிறது

தன்னை தியானிப்பவர்களுக்கு அருள்புரியும் அம் பாளின் பாதங்களின் குணங்களில் மூன்றைக்கூறி, அந்தக் குணங்கள் பாதங்களில் இருப்பதற்கு காரணத்தை ஊஹிக்கிருர்.

'ஸம்பர்க்காத் ப்ரக்ருதிகடினை: நாகி மகுடை: விபிந்தே ஸம்மோஹம்' - மலைபோன்ற அக்ஞான மென்னும் இருளை அம்பாளின் பாதங்கள் போக்குகின்றன. இதைச் செய்வதற்கு அவை உறுதியுள்ளவையாயிருக்க வேண்டுமன்றோ?

அவ்வுறுதி எங்கே கிடைத்திருக்கலாம் என்று ஆராயுங்கால் பாதங்களில் வணங்கும் தேவர்களுடைய ஸ்வர்ணமயமான கிரீடங்களோடு எப்போதும் பழகுவதால், அவற்றிலிருந்து பெற்றிருக்கலாம் என்கிறார்.

தடை: நீஹாராத்ரே: சிசிரயதிபக்தான்-தன்னை த்யானிக்கும் அடியார்கள் உள்ளங்களை ஆநந்தத்தால் குளிரச்செய்கிற திருவடிகள் அதற்கு வேண்டிய குளிர்ச்சியை தேவியின் பிதாவாய் பனிக்கு இருப்பிடமான ஹிமவானிடமிருந்து பெற்றிருக்கலாமா?

அதிகம் அணுநா யோஹிமநஸா அதிருச்யம் ப்ரகடயதி:-யோகிகள் பரமாணு பரிமாணமுள்ள தங்கள் மனத்தால் அம்பாளின் பாதங்களை தியானிப்பதால் அவற்றுக்கு ஸூக்ஷ்மமான வஸ்துக்களோடும் பரிசயம் ஏற்பட்டு, ஊனக்கண்ணுக்குப் புலப்படாத பொருள்களையும் பாதங்கள் காட்டவல்லவைகளாக இருக்கின்றன என்கிறார்.

पवित्राभ्यामम्ब प्रकृतिमृदुलाभ्यां तव शिवे
पदाभ्यां कामाक्षि प्रसभमभिभूतैः सचकितैः।
प्रवालैरम्भोजैरपि च वनवासव्रतदशाः
सदैवारभ्यन्ते परिचरितनानाद्विजगणैः॥२९॥

பவித்ராப்யாம் அம்ப ப்ரக்ருதி ம்ருதுலாப்யாம் தவ ஶிவே
பதாப்யாம் காமாக்ஷி ப்ரஸபம் அபி பூதை: ஸசகிதை:
ப்ரவாலை: அம்போஜை: அபி ச வநவாஸ-வ்ரத-தஶா:
ஸதைவா-ரப்யந்தே பரிசரித-நாநா-த்விஜ-கணை:॥29॥

அம்ப	தாயே
ஶிவே	மங்களஸ்வரூபியே காமாக்ஷி

பவித்ராப்யாம்	பரிசுத்தமாயும்
ப்ரக்ருதி	ஸ்வபாவத்தினால்
ம்ருதுலாப்யாம்	மிருதுவாயும் இருக்கிற
தவ பதாப்யாம்	உன் பாதங்களால்
ப்ரஸபம்	பலாத்காரமாக
அபிபூதை:	மேற்கொள்ளப்பட்டவைகளும்
ஸசகிதை:	பயந்தவைகளான
ப்ரவாலை:	துளிர்களாலும்
ஸதைவ	எப்போதும்
பரிசரித	சுச்ருஷை செய்யப்பட்ட
நாநாத்விஜகணை:	நாநாவித பக்ஷிகளின் கூட்டங்களையுடையவைகளுமான
அம்போஜை: அபி ச	தாமரைப் புஷ்பங்களாலும்
வநவாஸ வ்ரத-தஶா:	ஜலத்தில் வஸிப்பது என்னும் வ்ரதங்கள்
ஆரப்யந்தே	ஆரம்பிக்கப்படுகின்றன

மங்கள ஸ்வரூபிணியான தாயே காமாக்ஷி ஜலத்தின் மத்தியில் தாமரைகள் அழகாக மலர்ந்து, அவற்றின் மேல் ஹம்ஸங்கள் வீற்றிருக்கின்றன. இதைப்பார்த்து தேவியின் பாதங்களின் மென்மை அழகு முதலிய குணங்களுக்குத் தோற்று தாமரைகள் வந (ஜல) வாஸ விரதம் பூண்டு தவம் செய்கின்றன போல் தோன்றுகிறது. அப்படியே துளிர்களும் அவற்றுக்குத்தோற்று காட்டில் சென்று வனவாஸ வ்ரதத்தை ஆரம்பிக்கின்றன.

துளிர்களும் தாமரைகளும் தேவியின் பாதங்களுக்கு அழகிலும் காந்தியிலும் ஒப்பாகாதிருப் பதையும், அவைகள்

ஜலத்திலேயே இருப்பதையும் பார்த்தால், பாதங்களின் காந்தியைப் பெறும்பொருட்டு அவைகள் வனவாஸவ்ரதத்தை, அனுஷ்டிப்பவை போன்றிருக்கின்றன என்கிருர். 'வந' என்பதற்கு 'ஜலம்' என்றும் 'வனம்' காடு என்றும் பொருள் உண்டு.

चिरादृश्या हंसैः कथमपि सदा हंससुलभं
निरस्यन्ती जाड्यं नियतजडमध्यैकशरणम्।
अदोषव्यासङ्गा सततमपि दोषाप्तिमलिनं
पयोजं कामाक्ष्याः परिहसति पादाब्जयुगली।।३०।।

சிராத்த்ருஶ்யா ஹம்ஸை: கதமபி ஸதா ஹம்ஸ ஸுலபம்
நிரஸ்யந்தீ ஜாட்யம் நியத-ஜட-மத்யைக-ஶரணம்
அதோஷ-வ்யாஸங்கா ஸததம் அபி தோஷாப்தி-மலிநம்
பயோஜம் காமாக்ஷ்யா: பரிஹஸதி பாதாப்ஜ-யுகலீ।।30।।

ஹம்ஸை	ஹம்ஸங்களால் (பரமஹம்ஸர்களால்)
கதம் அபி	மிகவும் சிரமப்பட்டு
சிராத்	வெகு காலத்திற்கு பிறகு
த்ருஶ்யா	காணக்கூடியவையாயும்
ஜாட்யம்	அஜ்ஞானத்தை
நிரஸ்யந்தீ	போக்குவனவாயும்
அதோஷ வ்யாஸங்கா	தோஷமில்லாதவைகளுமான
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
பாதாப்ஜயுகலீ	பாதங்களாகிற இரண்டு தாமரைப் பூக்கள்
ஸதா	எப்போதும்

ஹம்ஸ	ஹம்ஸங்களுக்கு
ஸுலபம்	எளிதில் கிடைக்கக்கூடியதும்
நியத	எப்போதும்
ஜடமத்ய	குளிர்ந்த ஜலத்தின் மத்தியிலேயே
ஏகசரணம்	இருப்பதும்
ஸததம் அபி	எப்போதுமே
தோஷ ஆப்தி	தோஷத்தை (ஸாயங்கால த்தை) அடைவதால்
மலிநம்	வாடிப்போவதுமான
பயோஜம்	தாமரையை
பரிஹஸதி	பரிகாஸம் செய்கின்றன.

(பரம) ஹம்ஸர்களால் சிரமப்பட்டு வெகு காலத்திற்குப்பின் காணத்தக்கவையும், பிறரின் ஜாட்ய (அஜ்ஞான)த்தைப் போக்கும் இயல்புள்ளவையும், தோஷ ஸம்பந்தமற்றவையுமான அம்பாளின் சரண கமலங்கள் ஹம்ஸங்களுக்கு எளியதும் எப்போதும் ஜல(ஜட)த்தோடு கூடியதும் ஸாயங்(தோஷ)காலத்தில் வாடிப்போவதுமான தாமரையை பரிஹஸிக்கிறது.

தேவியின் பாதங்களை தாமரைகளாக வர்ணித்து சாதாரணத் தாமரையைக் காட்டிலும் இப்பாதகமலங்கள் எப்படி சிறந்தன என்பதை சப்த வைசித்ரியங்களால் காட்டுகிறார்.

தாமரை ஹம்ஸங்களுக்கு எப்போதும் சுலபமாயிருக்கிறது; பதகமலங்களோ யோகிச்ரேஷ்டர்களான பரமஹம்ஸர்களாலும் யோகாதிகள் செய்தும் பெற அரியவையாயிருக்கிறன.

'ஜடம்' என்றால் குளிர்ச்சியான ஜலம்; தாமரை எப்போதும் ஜடம் என்னும் ஜலத்தில் நடுவிலேயே இருக்கிறது; பதகமலங்களோவெனில் அண்டினோரின் ஜாட்யத்தை (அஜ்ஞானத்தை)ப்போக்குகின்றன.

'தோஷம்' என்ற மாலை நேரத்தோடு கூடி தாமரை மூடி வாடிப்போகிறது; பதகமலங்களுக்கு தோஷத்தின் (குற்றங்களின்) ஸம்பந்தமே கிடையாது.

ஆக இக்குண விசேஷங்களால் சரணகமலங்கள் தாமரைகளை விஞ்சி அவற்றைப் பரிஹஸிப்பன போன்று உள என்கிறார்.

सुराणामानन्दप्रबलनतया मण्डनतया
नखेन्दुज्योत्स्नाभिर्विसृमरतमःखण्डनतया।
पयोजश्रीद्वेषव्रतरततया त्वच्चरणयो :
विलासः कामाक्षि प्रकटयति नैशाकरदशाम्॥३१॥

ஸுராணாம் ஆநந்த-ப்ரபல நதயா மண்டநதயா
நகேந்து-ஜ்யோத்ஸ்நாபி: விஸ்ருமர-தம:-கண்டநதயா
பயோஜச்ரீ-த்வேஷவ்ரதரததயா த்வச்சரணயோ:
விலாஸ: காமாக்ஷி ப்ரகடயதி நைஶாகர-தஶாம்॥31॥

காமாக்ஷி	*காமாக்ஷியே*
த்வத் சரணயோ:	*உன் பாதங்களின்*
விலாஸ:	*எழிலானது*
ஸுராணும்	*தேவர்களுக்கு*
'ஆநந்த'	*ஆனந்தத்தை*
ப்ரபலநதயா	*அளிப்பதினாலும்*
மண்டநதயா	*அலங்காரமாக இருப்பதினாலும்*
நக இந்து	*நகங்களாகிற சந்திரனுடைய*

ஜ்யோத்ஸ்நாபி:	நிலவினுல்;
விஸ்ருமர	படர்கிற
தம: கண்டநதயா	(அக்ஞானமென்னும்) இருளைப்போக்குவதினுலும்
பயோஜ-ஶ்ரீ	தாமரையின் அழகை
த்வேஷ-வ்ரத-ரததயா	த்வேஷிப்பது என்னும் விரதத்தைக் கொண்டிருப்பதனுலும்
நைஶாகரதசாம்	சந்திரனுடையதான நிலைமையை
ப்ரகடயதி	வெளிப்படுத்துகிறது

காமாக்ஷி உன் பாதங்களின் ஸௌந்தர்யம் தேவதைகளுக்கு ஆனந்தத்தை அளிப்பதாலும், அவர்களுக்கு சிரோபூஷணமாக இருப்பதாலும், நககாந்திகளால் இருளை நீக்குவதாலும், தாமரையின் அழகை மேற்கொண்டு விளங்குவதாலும் (இக்குணங்களுள்ள) சந்திரனுடைய தன்மையையுடையதாயிருக்கிறது.

சந்திரனிடமுள்ள குணங்களெல்லாம் தேவியின் பாதங்களிலும் உள்ளன என்று வர்ணிக்கிருர்.

சந்திரன் தேவலோகத்திற்கு ஆபரணம் போலவும், அமிருதநிதியாகையால் தேவர்களுக்கு ஆனந்தத்தை மிகுதியாக அளிப்பவனுகவும் இருக்கிருன். அம்பாளின் பாதங்கள் அவற்றை வணங்க வரும் தேவர்களுக்கு ஆபரணமாகவும், அவர்களின் மனோரதத்தை நிறைவேற்றி ஆனந்தமளிப்பவையாகவும் இருக்கின்றன.

சந்திரன் புறவிருளைப் போக்குவதுபோல, நகங்களிலிருந்து வெளிவரும் நிலவு போன்ற ஒளி

அகவிருளைப் போக்குகிறது.

சந்திரனைக்கண்ட தாமரை வாடும்; உன் பாதங்களைப்பார்த்து அவற்றின் அழகு தங்களிடம் இல்லை என்று வருந்தி வாடாநிற்கும்.

ஆக இப்பிரகாரங்களால் தேவியின் பாதங்கள் ஒரு சந்திரனுடைய தசையைத் தங்களிடம் காட்டுபவனவாக இருக்கின்றன.

सितिम्ना कान्तीनां नखरजनुषां पादनलिन
च्छवीनां शोणिम्ना तव जननि कामाक्षि नमने।
लभन्ते मन्दारग्रथित नवबन्धूककुसुम
स्रजां सामीचीन्यं सुरपुरपुरन्ध्रीकचभराः।।३२।।

ஸிதிம்நா காந்தீநாம் நகர ஜநுஷாம் பாத-நலிநச்
சவீநாம் சோணிம்நா தவ ஜநநி காமாக்ஷி நமநே
லபந்தே மந்தார-க்ரதித-நவ-பந்தூக-குஸும-
ஸ்ரஜாம் ஸாமீசீன்யம்-ஸுரபுர-புரந்த்ரீ-கசபரா:।।32।।

ஜநநி	*தாயே*
காமாக்ஷி	*காமாக்ஷி*
நமநே	*நமஸ்கரிக்கும் போது*
ஸுரபுர புரந்த்ரீ	*தேவலோகத்து ஸ்திரீகளுடைய திரண்ட*
கசபரா:	*கூந்தல்கள்*
தவ	*உன்னுடைய*
நகர ஜநுஷாம்	*நகங்களிலிருந்து உண்டான*
காந்தீநாம்	*காந்திகளினுடைய*
ஸிதிம்நா	*வெளுப்பினாலும்*

பாத நலிந	தாமரைபோன்றபாதங்களுடைய
சவீநாம்	காந்திகளுடைய
ஶோணிம்நா	சிவப்பினாலும்
மந்தார	மந்தாரபுஷ்பங்களோடு
க்ரதித	தொடுக்கப்பட்ட
நவபந்தூககுஸும	புதியசெம்பரத்தம் புஷ்பங்களாலான
ஸ்ரஜாம்	மாலைகளின்
ஸாமீசீந்யம்	ஒற்றுமையை
லபந்தே	அடைகின்றன.

தாயே காமாக்ஷி தேவஸ்திரீகள் உன்னை வந்து வணங்கும் போது அவர்களுடைய கறுத்துத் திரண்ட கூந்தல்களில் உன் பாதகமலங்களின் சிவப்பும், நகங்களின் வெளுப்பும் விழுவதைப் பார்த்தால், மந்தாரப்பூ செம்பரத்தம்பூ இவைகளால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்திருக்கிறதுபோல் இருக்கிறது.

தேவ ஸ்திரீகள் அம்பாளை வந்து வணங்கும்போது, பாதங்களுடைய சிவந்த காந்தியும், நகங்களுடைய வெளுப்பும் அவர்களுடய கூந்தல்களில் கலந்து விழுகின்றன. அதைப் பார்த்தால் வெளுப்பான மந்தாரப் பூக்களையும் சிவந்த செவ்வரத்தம் பூக்களையும் மாறி மாறித் தொடுத்து தலைக்கு அலங்காரமாக வைத்திருப்பதுபோல இருக்கிறது.

नखश्रीसन्नद्धस्तबकनिचित: स्वैश्च किरणै:
पिशङ्गै: कामाक्षि प्रकटितलसत्पल्लवरुचि:।
सतां गम्य: शङ्के सकलफलदाता सुरतरु:
त्वदीय: पादोऽयं तुहिनगिरिराजन्यतनये।।३३।।

நக-ஸ்ரீ-ஸந்நத்த-ஸ்தபக-நிசித: ஸ்வைச்ச கிரணை:
பிசங்கை: காமாக்ஷி ப்ரகடித-லஸத்-பல்லவ-ருசி:
ஸதாம் கம்ய: ஶங்கே ஸகல-பல-தாதா ஸுரதரு:
த்வதீய: பாதோऽயம் துஹிந-கிரி-ராஜந்ய-தநயே ॥33॥

துஹிந கிரிராஜந்யதநயே	*பனிமயமான பர்வதராஜனின் குமாரியே*
காமாக்ஷி	*காமாக்ஷி*
அயம்	*இந்த*
த்வதீய:	*உன்னுடையதான*
பாத:	*பாதமானது*
நக-ஸ்ரீ	*நககாந்திகளால்*
ஸந்நத்த	*ஏற்பட்ட*
ஸ்தபகநிசித:	*பூங்கொத்துக்கள் நிரம்பியதும்*
பிஶங்கை:	*ஸ்வர்ணவர்ணமான*
ஸ்வை:	*தன்*
கிரணை:	*கிரணங்களால்*
ப்ரகடித	*வெளிப்படுத்தப்பட்ட*
லஸத்	*பிரகாசிக்கும் அழகிய*
பல்லவ	*துளிர்களின்*
ருசி:	*காந்தியையுடையதும்*
ஸதாம்	*ஸாதுக்களால்*
கம்ய:	*அடையத்தக்கதும்*
ஸகல பல	*எல்லா பலன்களையும்*
தாதா	*கொடுப்பதுமான*
ஸுரதரு:	*கல்பக விருக்ஷம் தானோ (என்று)*
ஶங்கே	*ஸந்தேஹிக்கிறேன்*

பர்வதகுமாரியே காமாக்ஷி உன் சரண கமலங்களை கல்பக விருக்ஷம் என்று ஸந்தேகிக்கலாம். எங்ஙனமெனில், நக காந்தியாகிற பூங்கொத்துக்கள் நிரம்பியும், ஸ்வர்ண வர்ணமான பாதங்களின் கிரணங்களால் காட்டப்பட்ட துளிர்களின் சோலையையடைந்தும், ஸாதுக்கள் ஆச்ரயிக்கத்தக்கதும், ஸகல பலன்களையும் கொடுப்பதாகவும் இருக்கிறது.

கல்பக வ்ருக்ஷத்தின் புஷ்பங்கள் போல் நகங்களுடைய வெண்மையும், துளிர்போல் சிவப்பும், மற்றும் ஸாதுக்களால் ஆச்ரயிக்கப்படுவது, ஸகல பலங்களையும் கொடுப்பது, என்ற குணங்கள் தேவியின் பாதங்களில் இருப்பதால், இவையும் ஒரு கல்பகவிருக்ஷமோ என்று ஸந்தேஹிக்கும் படியாயிருக்கிறது என்கிறார்.

स्फुरन्मध्ये शुद्धे नखकिरणदुग्धाब्धिपयसां
वहन्नब्जं चक्रं दरमपि च लेखात्मकतया।
श्रितो मात्स्यं रूपं श्रियमपि दधानो निरुपमां
त्रिधामा कामाक्ष्या: पदनलिननामा विजयते।।३४।।

ஸ்புரந் மத்யே மூத்தே நக-கிரண- துக்தாப்தி-பயஸாம்
வஹந் அப்ஜம் சக்ரம் தரம் அபி ச லேகாத்மகதயா
ச்ரிதோ மாத்ஸ்யம் ரூபம் ச்ரியமபி ததானோ நிருபமாம்
த்ரிதாமா காமாக்ஷ்யா: பத-நலிந நாமா விஜயதே।।34।।

நக-கிரண	நகங்களின் கிரணங்களாகிற
துக்த-அப்தி	க்ஷீரஸமுத்ரத்தின்
பயஸாம்	ஜலங்களின்
மூத்தே மத்யே	சுத்தமான நடுவில்
ஸ்புரந்	விளங்குகிறதாயும்

லோகாத்மகதயா	ரேகைரூபமாக
அப்ஜம்	தாமரையையும்
சக்ரம்	சக்ரத்தையும்
தரம் அபி ச	சங்கத்தையும்
வஹந்	வஹிக்கிறதாயும்
மாத்ஸ்யம் ரூபம்	மத்ஸ்யரூபத்தை
ச்ரித:	அடைந்ததாயும்
நிருபமாம்	ஒப்பற்ற
ச்ரியம் அபி	காந்தியையும்
ததாந:	அடைந்ததாயுமிருக்கிற
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
பதநலிந-நாமா	பதகமலங்கள் என்று பெயர்கொண்ட
த்ரிதாமா	மஹாவிஷ்ணு
விஜயதே	விளங்குகிறார்

நகச்சோதி என்னும் பாற்கடலின் மத்தியில் இலங்குவதும் ரேகாரூபமான சங்கம் சக்ரம் தாமரை இவற்றைத் தரிப்பதும், மத்ஸ்யரூபத்தை அடைந்ததும், ஒப்பற்ற காந்தியையுடைந்திருப்பதுமான காமாக்ஷியின் பாதகமலங்கள் என்று பெயர்கொண்ட மஹாவிஷ்ணு விளங்குகிறார்.

மஹாவிஷ்ணுவிடமுள்ள விசேஷங்கள் தேவியின் பாதங்களில் இருக்கிறபடியால், அவற்றை மஹாவிஷ்ணு என்று சொல்லலாம் என்று உத்ப்ரேக்ஷிக்கிறார்.

க்ஷீரஸமுத்திரத்தின் நடுவில் விளங்கும் விஷ்ணுபோல், பாதங்கள் நகங்களிலிருந்து கிளம்பும்

வெண்மையான கிரணஸமூஹத்தின் நடுவில் இருக்கின்றன. அவர் சங்கம் சக்ரம் பத்மம் முதலியவற்றை பூஷணமாகவும், ஆயுதமாகவும், தரிப்பதுபோல, இவை அவற்றை சங்க ரேகை, சக்ர ரேகை, பத்ம ரேகை என்று லோகேச்வரர்களுக்குச் சொல்லப்பட்ட ரேகாரூபத்தினுல் அலங்காரமாகத் தரிக்கின்றன. அவர் லக்ஷ்மியை அடைந்திருப்பதுபோல, பாதங்கள் காந்தி என்னும் லக்ஷ்மியைப் பெற்றிருக்கின்றன.

वषट्कुर्वन् माञ्जीरजकलकलैः कर्मलहरी–
हवींषि प्रोद्दण्डं ज्वलति परमज्ञानदहने।
महीयान् कामाक्षि स्फुटमहसि जोहोति सुधियां
मनोवेद्यां मातस्तव चरणयज्वा गिरिसुते।।३५।।

வஷட்-குர்வந் மாஞ்ஜீரஜ-கலகலை: கர்ம-லஹரீ-
ஹவீம்ஷி ப்ரோத்தண்டம் ஜ்வலதி பரம-ஞான-தஹநே
மஹீயாந் காமாக்ஷி ஸ்புட-மஹஸி ஜோஹோதி ஸுதியாம்
மநோ-வேத்யாம் மாதஸ்-தவ சரண-யஜ்வா
கிரிஸுதே।।35।।

மாத:	*தாயே*
கிரிஸுதே	*பார்வதி*
காமாக்ஷி	*காமாக்ஷி*
மஹீயாந்	*சிரேஷ்டனை*
தவ	*உன்னுடைய*
சரணயஜ்வா	*பாதமென்கிற யாகம் செய்பவன்*
மாஞ்ஜீரஜ	*பீலிகைகளிருந்து உண்டாகும்*
கலகலை:	*சப்தங்களால்*
வஷட்-குர்வந்	*வஷட்காரத்தைச்*

	செய்துகொண்டும்
ஸுதியாம்	புத்திமான்களுடைய
மநோவேத்யாம்	மனம் என்னும் மேடையில்
ஸ்புட-மஹஸி	அதிகக்காந்தியுள்ளதும்
ப்ரோத்தண்டம்	கொழுந்துவிட்டு
ஜ்வலதி	எரிந்துகொண்டிருக்கிறதுமான
பரமஞானதஹநே	உத்தம ஞானம் என்னும்
	அக்னியில்
கர்ம-லஹரீ	கர்மங்களின் வரிசை என்னும்
ஹவீம்ஷி	ஹவிஸ்ஸுகளை
ஜோஹோதி	ஹோமம் செய்கிருன்.

தாயே காமாக்ஷி உன்னுடைய பாதங்களென்னும் சிறந்த யஜமானன் கால் ஆபரணங்களின் ஒலியாகிற மந்த்ரோச்சாரணத்தைச் செய்துகொண்டு, ஞானவான்களுடைய மனமென்னும் வேதியில் அதிக ஒளியுடன் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கும் உத்தம ஞானம் என்னும் அக்கினியில் தன் கர்மங்களாகிற ஹவிஸ்ஸை ஹோமம் செய்கிருன்.

தேவியை உபாஸிப்பவர்களுடைய மனதே வேதி அல்லது அக்னிகுண்டம்: ஞானமே அக்னி; கர்மங்களே ஹோமம் செய்யப்படும் த்ரவ்யம்; தேவியின் பாதங்களே யஜ்ஞம் செய்யும் யஜமானன்; பாதங்களிலுள்ள ஆபரணங்களின் ஒலிகளே வஷட்காரம் முதலிய மந்த்ரோச்சாரணம், அதாவது தேவியின் பாதங்கள் ஆச்ரயித்தவர்களுடைய கர்மங்களை யெல்லாம் போக்கி ஞானமென்னும் அக்னியை ஜ்வலிக்கும்படி செய்கின்றன.

(ஜ்ஞாநாக்நி: ஸர்வ கர்மாணி பஸ்மஸாத் குருதே அர்ஜுன) என்று கீதையில் கூறப்படுவதே இதற்கு மூலம்.

महामन्त्रं किञ्चिन्मणिकटकनादैरिव जपन्–
क्षिपन्दिक्षु स्वच्छं नखरुचिमयं भास्मनरज:।
नतानां कामाक्षि प्रकृतिपटुरुच्चाट्य ममता
पिशाचीं पादोऽयं प्रकटयति ते मान्त्रिकदशाम्।।३६।।

மஹா-மந்த்ரம் கிஞ்சித் மணி-கடக நாதை: இவ ஜபந்-
க்ஷிபந் திக்ஷு ஸ்வச்சம் நக-ருசி-மயம் பாஸ்மந்-ரஜ:।
நதாநாம் காமாக்ஷி ப்ரக்ருதி-படு: உச்சாட்ய மமதா-
பிஶாசீம் பாதோ஽யம் ப்ரகடயதி தே மாந்த்ரிக-தஶாம்।।36।।

காமாக்ஷி	*காமாக்ஷியே*
மணிகடக	*ரத்னச்சிலம்புகளின்*
நாதை:	*சப்தங்களால்*
கிஞ்சித் மஹாமந்த்ரம்	*ஏதோ ஒருமஹா மந்த்ரத்தை*
ஜபந் இவ	*ஜபிப்பது போலவும்*
திக்ஷு	*திக்குகளில்*
நகருசிமயம்	*நககாந்திரூபமான*
ஸ்வச்சம்	*சுத்தமான*
பாஸ்மநரஜ:	*விபூதியை*
க்ஷிபந் இவ	*எறிவதுபோலவும் இருப்பதும்*
ப்ரக்ருதி	*இயற்கையிலேயே*
படு:	*ஸாமர்த்யமுள்ளதுமான*
தே	*உன்னுடைய*
அயம்பாத:	*இந்தப் பாதம்*

நாதாநாம்	வணங்குகிறவர்களுடைய
மமதா பிமாசீம்	மமதை என்னும் பிசாசை
உச்சாட்ய	விரட்டி (அதனுல்)
மாந்த்ரிகதசாம்	மந்திரவாதியின் நிலைமையை
ப்ரகடயதி	வெளிப்படுத்துகிறது

காமாக்ஷி இயற்கையிலேயே ஸாமர்த்தியமுள்ள உன் பாதங்கள் உன்னை வணங்குவோர்களின் மமதை என்னும் பிசாசை ஓட்டும் விஷயத்தில் ஒரு மந்திரவாதிபோல் இருக்கின்றன. ரத்னச்சிலம்புகள் ஒலிப்பது அவன் மந்திரத்தை ஜபிப்பதுபோல் இருக்கிறது; எல்லா திக்குகளிலும் வெளுத்த நககாந்திகள் பரவும்போது அவன் விபூதியை எறிவதுபோல இருக்கிறது.

தேவியின் பாதங்களில் வணங்குவோர் களிடமிருந்து பிசாசு போன்று விடாமல் பிடித்துக்கொண்டிருக்கும் அஹங்கார மமகாரங்கள் விலகிப்போகின்றன. அந்தப் பிசாசை விரட்டும் விஷயத்தில் பாதங்கள் மந்திரவாதி போன்றுள்ள, கல்லிழைத்த நூபுரங்கள் சப்திப்பது மந்திரவாதியின் மஹாமந்திர ஜபம் போலவும் நகங்களின் காந்தி அபிமந்திரித்து அவன் போடும் விபூதி போலவும் உள்ளது என்கிறுர்.

उदिते बोधेन्दौ तमसि नितरां जग्मुषि दशां
दरिद्रां कामाक्षि प्रकटमनुरागं विदधती।
सितेनाच्छाद्याङ्गं नखरुचिपटेनांघ्रियुगली–
पुरन्ध्री ते मातः स्वयमभिसरत्येव हृदयम्।।३७।।

**உதிதே போதேந்தௌ தமஸி நிதராம் ஜக்முஷி தஶாம்
தரித்ராம் காமாக்ஷி ப்ரகடமநுராகம் விதததீ।
ஸிதேநாச்சாத்யாங்கம் நக-ருசி-படேநாங்க்ரியுகலீ
புரந்த்ரீ தே மாத: ஸ்வயம் அபிஸரத்யேவ ஹ்ருதயம்॥37॥**

மாத:	தாயே
காமாக்ஷி	காமாக்ஷி
போதேந்தௌ	ஞானமென்னும் சந்திரன்
உதிதே	உதயமாகி
தமஸி	அஞ்ஞான இருள்
நிதராம்	மிகவும்
தரித்ராம் தஶாம்	தரித்ர நிலையை
ஜக்முஷி	அடைந்தபொழுது
அநுராகம்	காதலை
ப்ரகடம் விதததீ	வெளிப்படையாகக் காட்டுகிறவளாய்
ஸிதேந	வெளுப்பான
நகருசிபடேந	நகங்களின் காந்தி என்னும் வஸ்திரத்தால்
அங்கம்	சரீரத்தை
ஆச்சாத்ய	மூடிக்கொண்டு
தே	உன்னுடைய
அங்க்ரி-யுகளீ	இரண்டு பாதங்கள் என்னும்
புரந்த்ரீ	ஸ்திரீயானவள்
ஹ்ருதயம்	ஹ்ருதயத்தை
ஸ்வயம் ஏவ	தானாகவே
அபிஸரது	தேடிச்செல்லட்டும்

தாயே காமாக்ஷி ஞானமென்னும் சந்திரன் உதித்து அஜ்ஞானமென்னும் இருள் மிகவும் ஹீநதசையை அடைந்திருக்கும்போது உன்னுடைய பாதங்களாகிற காமினீ பாதங்களின் சிவப்பு காந்திரூபமான தன் ஆசையை வெளியிட்டுக்கொண்டு, நககாந்தியாகிற வெளுப்பு வஸ்திரத்தால் தன் சரீரத்தை மூடிக்கொண்டு என் ஹிருதயத்தை நோக்கி ஒரு 'அபிஸாரிகா' ஸ்திரீபோல் தானாகவே செல்லட்டும்.

தேவியின் பாதங்களை கல்பக விருக்ஷமாகவும், மஹாவிஷ்ணுவாகவும், யஜ்ஞம் செய்யும் யஜமானனாகவும், மந்திரவாதியாகவும் வர்ணித்துவிட்டு இதில் தன் காதலனைத் தேடிச்செல்லும் 'அபிஸாரிகா' ஸ்திரீயாக வர்ணிக்கிறார்.

சந்திரன் உதித்து இருள் நீங்கியதும் காதலால் தூண்டப்பட்டவளாய் தன்னை பிறர் பார்த்து அறிந்துக் கொள்ளா வண்ணம் ஒரு வஸ்திரத்தால் தன்னை மறைத்துக்கொண்டு தன் பிராண நாயகனைத்தேடிச் செல்லும் ஒரு ஸ்திரீக்கு 'அபிஸாரிகை' என்று பெயர். அவ்விதமே இங்கு என் ஹ்ருதயமென்னும் காதலன் தானாகவே உன்னை அடையமாட்டானாகையால், நீ தேடப்புறப்படவேண்டும். இங்கு ஞானோதயமே சந்திரோதயம்; அஜ்ஞான நாசமே இருள் நீங்குவது; கால்களின் சிவந்த காந்தியே காதல்; நகங்களிலிருந்து வெளிவரும் வெண்மையான காந்திபடலமே வஸ்திரம் என்று வர்ணிக்கிறார்.

दिनारम्भ: संपन्नलिनविपिनानामभिनवो
विकासो वासन्त: सुकवि पिकलोकस्य नियत:।
प्रदोष: कामाक्षि प्रकटपरमज्ञानशशिन:
चकास्ति त्वत्पादस्मरणमहिमा शैलतनये।।३८।।

திநாரம்ப: ஸம்பந்-நலிந விபிநாநாம் அபிநவோ
விகாஸோ வாஸந்த: ஸுகவி பிகலோகஸ்ய நியத:।
ப்ரதோஷ: காமாக்ஷி ப்ரகடபரமஞான-ஶஶிந:
சகாஸ்தி த்வத்பாதஸ்மரண- மஹிமா ஶைலதநயே।।38।।

ஶைலதநயே	*பர்வதகுமாரியே*
காமாக்ஷி	*காமாக்ஷி*
த்வத்பாத	*உன் பாதங்களை*
ஸ்மரண	*த்யானம் செய்வதின்*
மஹிமா	*மஹிமையானது*
ஸம்பத்	*ஐஸ்வர்யமாகிற*
நலிநவிபிநாநாம்	*தாமரைக்காடுகளுக்கு*
அபிநவ:	*புதுவிதமான*
திநாரம்ப:	*காலைநேரமாகவும்*
ஸுகவி	*நல்லகவிகளாகிற*
பிகலோகஸ்ய	*குயில்கூட்டங்களுக்கு*
நியத:	*எப்போதும் இருக்கும்*
வாஸந்த:	*வஸந்தருதுவின்*
விகாஸ:	*தோற்றமாகவும்*
ப்ரகட	*தெளிவாய் (பூர்ணமாய்)*
பரமஞான	*உத்தமமான ஞானம் என்னும்*
ஶஶிந:	*சந்திரனுக்கு*
ப்ரதோஷ:	*ஸாயங்காலமாயும்*
சகாஸ்தி	*விளங்குகிறது*

பர்வதகுமாரியே காமாக்ஷி உன் பாதங்களை தியானிப்பதின் மஹிமை ஐச்வர்யமாகிற தாமரைக் காட்டுக்குப் புதுவகையான ஒரு பகலின் ஆரம்பமாகவும்,

இன்சொல் கவிகளென்கிற குயில் கூட்டங்களுக்கு எப்போதும் இருக்கக்கூடிய ஒரு வஸந்தருதுவின் விகாஸமாகவும், உத்தமமான ஞானமென்கிற பூர்ணசந்திரனுக்கு மாலைப் பொழுதாகவும் விளங்குகிறது.

சூரியனைக்கண்ட தாமரைகள் மலர்வதுபோல் தேவியின் பாதங்களை நினைத்ததுமே ஸகல ஐச்வர்யங்களும் மகிழ்ச்சியுடன் வந்து அடைகின்றன; வஸந்தகாலத்தைக்கண்டு மகிழ்வுற்று குயில்கள் இனிமையாகக் கூவுவதுபோல, பாதங்களை தியானித்து சிறந்த கவிகள் உத்தமமான காவியங்களால் தேவியைத் துதிக்கிறார்கள்; ஸாயங்காலம் வந்ததும் பூர்ணசந்திரன் தோன்றுவதுபோல, தேவியின் பாதங்களை நினைத்ததுமே களங்கமற்ற தெளிவான ஞானம் உதிக்கிறது.

धृतच्छायं नित्यं सरसिरुहमैत्रीपरिचितं
निधानं दीप्तीनां निखिलजगतां बोधजनकम्।
मुमुक्षूणां मार्गप्रथनपटु कामाक्षि पदवीं
पदं ते पादङ्गीं परिकलयते पर्वतसुते।।३९।।

த்ருதச்சாயம் நித்யம் ஸரஸிருஹமைத்ரீபரசிதம்
நிதாநம் தீப்தீநாம் நிகிலஜகதாம் போதஜநகம்।
முமுக்ஷூணாம் மார்க்கப்ரதநபடு காமாக்ஷி பதவீம்
பதம் தே பாதங்கீம் பரிகலயதே பர்வதஸுதே।।39।।

பர்வதஸுதே	பர்வதகுமாரியே
காமாக்ஷி	காமாக்ஷீ
தே பதம்	உன் பாதம்
நித்யம்	எப்போதும்
த்ருதச்சாயம்	சோபையையுடையதாயும்

ஸரஸிருஹ	தாமரைகளின்
மைத்ரீ	ஒற்றுமையோடு
ப்ரிசிதம்	கூடியதும்
தீப்தீநாம்	கீர்த்திகளுக்கு (ஒளிக்கு)
நிதாநம்	காரணமாயும்
நிகிலஜகதாம்	எல்லா உலகுக்கும்
போதஜநகம்	ஞானத்தை (விழிப்பை) உண்டுபண்ணுவதாயும்
முமுக்ஷுணும்	மோக்ஷத்தையடைய விரும்புகிறவர்களுக்கு
மார்க்கப்ரதந	வழிகாட்டுவதில்
படு	ஸாமர்த்யமுள்ளதாயுமிருந்துகொண்டு
பாதங்கீம்	ஸூர்யனுடையதான
பதவீம்	நிலைமையை
பரிகலயதே	அடைகிறது

பர்வதராஜகுமாரியே காமாக்ஷி எப்போதும் சாயையோடு கூடியதாயும், தாமரைகளின் ஸ்நேஹத்தைப் பெற்றதாயும், ஒளிக்குக் காரணமாயும், ஸகல லோகங்களுக்கும் ஞானத்தை உண்டு பண்ணுவதாயும், மோக்ஷத்தை விரும்புகிறவர்களுக்கு சரியான மார்க்கத்தைக் காட்டவல்லதாயுமிருக்கிற உன் பாதங்கள் ஸுர்யனுடைய தன்மை அடைந்ததாக இருக்கிறது.

இதில் ஸுர்யனுடைய நிலைமை தேவியின் பாதங்களில் காட்டப்படுகிறது. ஸுரியன் 'சாயா' என்ற தன் மனைவியுடன் கூடியிருக்கிறுன்; பாதங்கள் எப்போதும் ('சாயை') காந்திபெற்றவைகளாய் விளங்குகின்றன. ஸுர்யனுக்குத் தாமரைகளின் மைத்ரீ (ஸ்நேஹம்)

இருக்கிறது; பாதங்கள் தாமரை போலிருப்பதால் பாதங்களுக்கு அவற்றின் மைத்ரீ (ஒற்றுமை) இருக்கிறது. ஸூர்யன் தீப்தியை (கீர்த்தியை) அளிக்கின்ருன். ஸூர்யன் உதித்ததும் உலகம் விழித்துக்கொள்ளுகிறது; பாதங்கள் மனதில் தோன்றியதும் (போதம்) ஞானம் உண்டாகிறது, மோக்ஷத்தைப் பெறுபவர்கள் ஸூர்ய மண்டலத்தைத் தாண்டிச் செல்லுகிருர்கள் என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன; தேவியின் பாதங்கள் தன்னை உபாஸிப்பவர்களுக்கு மோக்ஷமார்க்கத்தைக் காட்டுகின்றன.

शनैस्तीर्त्वा मोहाम्बुधिमथ समारोढुमनसः
क्रमात्कैवल्याख्यां सुकृतिसुलभां सौधवलभीम्।
लभन्ते निश्रेणीमिव झटिति कामाक्षि चरणम्
पुरश्चर्याभिः ते पुरमथनसीमन्तिनि जनाः॥४०॥

ஶநைஸ்தீர்த்வாமோஹாம்புதிம் அத ஸமாரோடு-மநஸ:
க்ரமாத் கைவல்யாக்யாம் ஸுக்ருதி-ஸுலபாம் ஸௌத வலபீம்।
லபந்தே நிஶ்ரேணீம் இவ ஜடிதி காமாக்ஷி சரணம்
புரஶ்சர்யாபி: தே புரமதந - ஸீமந்திநி ஜநா:॥40॥

புரமதநஸீமந்தினி	*திரிபுரமெரித்தோன் தேவியே*
காமாக்ஷி	*காமாக்ஷி*
ஶநை:	*மெள்ள மெள்ள*
மோஹாம்புதிம்	*அஜ்ஞானமென்னும் கடலை*
தீர்த்வா	*கடந்து*
அத	*அதன் பின்*
ஸுக்ருதிஸுலபம்	*புண்ணியவான்களுக்கு அடைய எளிதான*

கைவல்யாக்யாம்	கைவல்யம் என்ற பெயருள்ள
ஸௌதவலபீம்	மேல்மாடியை
க்ரமாத்:	கிரமமாக
ஸமாரோடுமநஸ:	ஏறவிரும்பும் மனமுள்ள
ஜநா:	ஜநங்கள்
நிஃரேணீம் இவ	ஏணிபோன்றிருக்கிற
தே சரணம	உன்பாதத்தை
புரச்சர்யாபி:	ஜபம் பூஜை முதலியவைகளால்
ஜடிதி	சீக்கிரமாக
லபந்தே	அடைகிறார்கள்.

முப்புரமெரித்தோன் தேவியே காமாக்ஷி மெள்ளமெள்ள அஜ்ஞானமென்னும் கடலைத்தாண்டி அதன்பின் புண்யவான்களுக்கு அடைய எளிதான கைவல்யமென்கிற சிறந்த உப்பரிகையில் கிரமமாக ஏற விரும்பும் மனமுள்ள ஜனங்கள் ஏணிபோன்ற நின் பாதத்தை ஜபம் பூஜை முதலியவற்றால் சீக்கிரத்தில் அடைகிறார்கள்.

அஜ்ஞானமென்னும் ஸமுத்திரத்தைத் தாண்டி மோக்ஷமென்னும் மாளிகையின் மேல்மெத்தையில் ஏற விரும்பும் மானிடர்களுக்கு பரதேவதையின் பாதங்கள் ஒரு ஏணிபோல இருப்பதால், எல்லோரும் புரச்சர்யைகளால் ஜபம் பூஜை முதலியவற்றால் அவற்றை அடைகிறார்கள்.

प्रचण्डार्तिक्षोभप्रमथनकृते प्रातिभ सरित्
प्रवाहप्रोद्दण्डीकरणजलदाय प्रणमताम्।
प्रदीपाय प्रौढे भवतमसि कामाक्षि चरण–
प्रसादौन्मुख्याय स्पृहयति जनोऽयं जननि ते।।४१।।

ப்ரசண்டார்த்தி-க்ஷேபா ப்ரமதந-க்ருதே ப்ராதிப-ஸரித்-
ப்ரவாஹப்ரோத்தண்டீ-கரண-ஜலதாய ப்ரணமதாம்
ப்ரதீபாய ப்ரௌடே பவ - தமஸி காமாக்ஷி சரண-
ப்ரஸாதௌ ந்முக்யாய ஸ்ப்ருஹயதி ஜநோ-யம்
ஜநநிதே॥41॥

ஜநநி	*தாயே*
காமாக்ஷி	*காமாக்ஷி*
ப்ரணமதாம்	*நமஸ்கரிப்பவர்களுடைய*
ப்ரசண்ட	*கடுமையான*
ஆர்த்தி	*கஷ்டத்தின்*
க்ஷேபா	*கலக்கத்தை*
ப்ரமதந க்ருதே	*நாசம் செய்வதாயும்*
பிராதிப	*ப்ரதிபை (புத்தி) என்னும்*
ஸரித் ப்ரவாஹ	*நதியின் பிரவாஹத்தை*
ப்ரோத்தண்டீகரண	*அதிகப்படுத்தும்*
ஜலதாய	*மேகமாயும்*
ப்ரௌடே	*பலமான*
பவ	*ஸம்ஸாரமென்னும்*
தமஸி	*இருட்டில்*
ப்ரதீபாய	*பெரிய விளக்காயுமிருக்கிற*
தே	*உன்னுடைய*
சரண	*பாதங்களின்*
ப்ரஸாத	*அனுக்ரஹத்தை*
ஔந்முக்யாய	*அடைவதற்கு*
அயம் ஜந:	*இந்த மனிதன் (நான்)*
ஸ்ப்ருஹயதி	*ஆசைப்படுகிறுன்*

தாயே காமாக்ஷி வணங்குவோர்களின் கொடிய கஷ்டத்தின் கலக்கத்தை அழிக்கவல்லவையும், 'ப்ரதிபை'(புத்தி) என்னும் ஆற்றின் ப்ரவாஹத்தை கரைபுரண்டு செல்லும்படி பெருக்குவதில் மேகம்போன்றவையும், ஸம்ஸாரமென்னும் பேரிருளை நீக்கவல்ல தீபம் போன்றவையுமான உன் பாதங்களின் அருளை அடைவதற்கு நான் விரும்புகிறேன்.

அம்பிகையின் பாதங்களை வணங்குவோர்களுக்கு ஸகல துக்கங்களும் விலகிப்போவதுடன் அஜ்ஞானம் நீங்கி ஞானமும் உண்டாகிறது என்கிறார்.

मरुद्भिः संसेव्या सततमपि छाञ्चल्यरहिता
सदाऽऽरुण्यं यान्ती परिणतिदरिद्राणसुषमा।
गुणोत्कर्षान्मञ्जीरजकलकलैस्तर्जनपटुः
प्रवालं कामाक्ष्याः परिहसति पादाब्जयुगली॥४२॥

மருத்பி: ஸம்ஸேவ்யா ஸததம் அபி சாஞ்சல்ய- ரஹிதா
ஸதாருண்யம் யாந்தீ பரிணதி- தரித்ராண - ஸுஷமா।
குணோத்கர்ஷாந் மஞ்ஜீரஜ-கலகலை: தர்ஜந -படு:
ப்ரவாலம் காமாக்ஷ்யா: பரிஹஸதி பாதாப்ஜ-யுகலீ॥42॥

ஸததம்	எப்பொழுதும்
மருத்பி:	மருத்துக்களால்
ஸம்ஸேவ்யா	ஸேவிக்கப்பட்டவைகளாயிருந்த போதிலும்
சாஞ்சல்யரஹிதா	அசைவில்லாததாயும்
ஸதா	எப்போதும்
ஆருண்யம்	சிவப்பு வர்ணத்தை

யாந்தீ	அடைவதாயும் (அப்படி இருந்தபோதிலும்)
பரிணதி	மாறுகிற விஷயத்தில்
தரித்ராண	தரித்ரத்தையடைந்த
ஸுஷமா	காந்தியையுடையதாயும் அதாவது மாறுதல் இல்லாத சோபையையுடையதாயும் இருக்கிற
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
பாதயுகலீ	இரண்டு பாதங்களும்
மஞ்ஜீரஜ	பீலிகளிலிருந்து உண்டான
கலகலை:	சப்தங்களால்
தர்ஜந-படு:	அதட்ட ஸாமர்த்தியமுள்ளதாயிருந்து கொண்டு
ப்ரவாளம்	தளிர்களை
குணோத்-கர்ஷாந்	(தங்கள்) குணங்களின் மேன்மையால்
பரிஹஸதி	பரிஹஸிக்கின்றன.

காமாக்ஷியின் சரணகமலங்கள் மருத்துக்களால் எப்போதும் ஸேவிக்கப்படுக்கிறவைகளாயிருந்தும் சஞ்சலமற்றவைகளாயும்; எப்போதும் சிவந்த நிறமுள்ளவையாயும், மாறுதலையடையாத சோபையையுடையவைகளாயுமிருக்கின்றன. அவை தங்களிடமுள்ள "கலீர் கலீர்" என்கின்ற சப்தங்களால் விரட்ட ஸாமர்த்தியமுள்ளவைகளாய், தளிரைப் பரிஹாஸம் செய்கிறது. (தளிர் சில சமயங்களிலே மருத்துக்களால் காற்றினுல்) ஸேவிக்கப்படுகிறதாயும், அப்பொழுது அசையும் தன்மையுள்ளதாயும், முதலில் மட்டும் சிவப்பு

வர்ணத்தையுடையதாயும் பின்பு மாறுதலேயடையும் காந்தியையுடையதாயுமிருக்கிறது என்பது உணரத்தக்கது.

அம்பிகையின் பாதங்களில் அழகிய தளிர்களின் குணங்களும் அவற்றில் இல்லாத அதிக குணங்களும் இருக்கிறபடியால், அந்த குணங்களேயும் விஞ்சி பரிஹஸிப்பனபோன்று உள என்கிருர். காற்றடித்தால் தளிர் அசையும்; தேவியின் பாதங்களோ வாயுபகவாளுல் ஸேவிக்கப்படுவதோடு கூட ஸ்திரமாய் சஞ்சலமற்று உள்ளன. தளிருக்குக் காந்திகொஞ்ச நாட்களே; இவற்றுக்கோ மஞேஹரமான சிவப்பு வர்ணம் எப்போதும் இருப்பது, மாறுதல் இல்லாத காந்தியோடு கூடியவை.

जगद्रक्षादक्षा नलिनरुचिशिक्षापटुतरा
सुरैर्नम्या रम्या सततमपिगम्या बुधजनैः।
द्वयी लीलालोला श्रुतिषु सुरपालादिमुकुटी–
तटीसीमाधामा तव जयति कामाक्षि पदयोः ।।४३।।
तव जननि कामाक्षि पदयोः (पाठं)

ஜகத்–ரக்ஷா–தக்ஷா நலிந–ருசி–சிக்ஷா–படு–தரா
ஸுரை: நம்யா ரம்யா ஸததம் அபிகம்யா புத ஜநை:।
த்வயீ லீலா லோலா ச்ருதிஷு ஸுர–பாலாதி–முகுடீ–
தடீ–ஸீமா தாமா தவ ஜயதி காமாக்ஷி பதயோ:।।43।।

ஜநநி	தாயே
காமாக்ஷி	காமாக்ஷி
தவ பாதயோ;	உன் பாதங்களுடைய
த்வயீ	இரண்டானது
ஜகத்- ரஷா	உலகங்களை ரக்ஷிப்பதில்

தக்ஷா	ஸாமர்த்தியமுள்ளதாயும்
நலிந-ருசி	தாமரையின் காந்திக்கும்
சிக்ஷா- படுதரா	கற்பிக்கும் ஸாமர்த்தியமுள்ளதாயும்
ஸுரை:	தேவதைகளால்
நம்யா	வணங்கப்படுகிறதாயும்
ரம்யா	அழகுள்ளதாயும்
புதஜநை:	புத்திமான்களால்
ஸததம்	எப்போதும்
அபிகம்யா	அடையத்தகுந்ததாயும்
ஶ்ருதிஷு	வேதங்களில்
லீலாலோலா	விளையாட்டாக ஸஞ்சரிப்பதாயும்
ஸுரபாலாதி	இந்திரன் முதலானவர்களுடைய
முகுட தட	கிரீடங்களுக்கு
ஸீமாதாமா	எல்லை ஸ்தானமாயிருப்பதாயும்
விஜயதி	விளங்குகிறது.

காமாக்ஷி உன் இரண்டு பாதங்களும் அழகுள்ளவைகளும், உலகங்களை ரக்ஷிக்கும் வல்லமையுள்ளவையும், தாமரைகளின் சோபையையும் மீறுவதும், தேவதைகளால் வணங்கப்படுகிறதும், அழகுள்ளதும், புத்திமான்களால் எப்போதும் அடையத்தகுந்ததும், வேதங்களில் விளையாட்டாக ஸஞ்சரிப்பதும் இந்திரன் முதலானோர்களின் கிரீடங்களில் நிலவுவனவாயும் இருக்கின்றன.

गिरां दूरौ चोरौ जडिमतिमिराणां कृतजग-
त्परित्राणौ शोणौ मुनिहृदयलीलैकनिपुणौ।
नखै: स्मेरौ सारौ निगमवचसां खण्डितभव-
ग्रहोन्मादौ पादौ मम मनसि कामाक्षि कलये।।४४।।

கிராம் தூரௌ சோரௌ ஜடிம - திமிராணாம் க்ருத-ஜகத்-
பரித்ராணௌ ஶோணௌ
முனிஹ்ருதயலீலைகநிபுணௌ।
நகை: ஸ்மேரௌ ஸாரௌ நிகம வசஸாம் கண்டித-
பவக்ரஹோந்மாதௌ பாதௌ மம மனஸி காமாக்ஷி
கலயே।।44।।

காமாக்ஷி	காமாக்ஷியே
கிராம்	சொற்களுக்கு
தூரௌ	எட்டாதவைகளாயும்
ஜடிம திமிராணாம்	புத்தியில்லாமை என்னும் இருட்டை
சோரௌ	அபஹரிப்பவைகளாயும்
க்ருத ஜகத் பரித்ராணௌ	உலகங்களை ரக்ஷிப்பவைகளாயும்
ஶோணௌ	சிவந்தவைகளாயும்
முநிஹ்ருதய	முனிவர்களின் மனதில்
லீலைக-நிபுணௌ	விளையாடுவதில் ஸாமர்த்தியமுள்ளவைகளாயும்
நகை:	நகங்களால்
ஸ்மேரௌ	சிரிப்பவைகளாயும்
நிகம-வசஸாம்	வேதவாக்குகளுடைய
ஸாரௌ	ஸாரமானவைகளாயும்
கண்டித	போக்கடிக்கப்பட்ட

பவ	ஸம்ஸாரமாகிற
க்ரஹோரந்மாதௌ	பிசாசின் சேஷ்டையை உடையவைகளுமான
பாதௌ	பாதங்களை
மம மனஸி	என் மனதில்
கலயே	நிறுத்திக்கொள்ளுகிறேன், (தியானிக்கிறேன்).

காமாக்ஷியே வாக்குக்களுக்கு எட்டாததும், அஜ்ஞானம் என்னும் இருளைப் போக்குவதும், உலகங்களை ரக்ஷிப்பதும், சிவந்ததும்;- முனிவர்களின் மனதில் ஸஞ்சரிப்பதில் ஸாமர்த்தியமுள்ளதும், நககாந்திகளால் புன்சிரிப்புள்ளவைகளும், வேத வசனங்களின் ஸாரமாயிருப்பதும், பிறவியென்னும் துஷ்ட க்ரஹத்தின் சேஷ்டையை அடக்குகிறவை களுமான உன் பாதங்களை மனதில் தியானம் செய்கிறேன்.

ஜடிமதிமிராணும் சோரௌ-அஜ்ஞானமென்னும் இருளை இருந்த இடம் தெரியாமல் அகற்றிவிடுகின்றன தேவியின் பாதங்கள். முனிஹ்ருதய லீலைக நிபுணௌ-முனிவர்களின் மனதில் மட்டும் அப்பாதங்கள் தியானத்திற்கு விஷயமாகக் காணப்படுமேயல்லது, மற்றவர்கள் அவைகளைக் காணமுடியாது.

अविश्रान्तं पङ्कं यदपि कलयन्यावकमयं
निरस्यन्कामाक्षि प्रणमनजुषां पङ्कमखिलम्।
तुलाकोटिद्वन्द्वं दधदपि च गच्छन्नतुलतां
गिरां मार्गम् पादो गिरिवरसुते लङ्घयति ते।।४५।।

அவிஶ்ராந்தம் பங்கம் யதபி கலயந் யாவக-மயம்
நிரஸ்யந் காமாக்ஷி ப்ரணமனஜுஷாம் பங்கமகிலம்।
துலாகோடி த்வந்த்வம் தததபி ச கச்சந்நதுலதாம்
கிராம் மார்கம் பாதோ கிரிவரஸுதே லங்கயதி தே ॥45॥

கிரிவரஸுதே	பர்வதராஜபுத்ரியே
காமாக்ஷி	காமாக்ஷி
தே பாத:	உன் பாதம்
அவிஶ்ராந்தம்	இடைவிடாமல்
யாவக-மயம்	செம்பஞ்சுக்குழம்புமான
பங்கம்	சேற்றை
யதபி கலயந்	அடைந்திருந்தபோதிலும்
ப்ரணமனஜுஷாம்	வணங்குபவர்களுடைய
அகிலம் பங்கம்	எல்லாச்சேற்றையும் (பாபத்தையும்,)
நிரஸ்யந்	போக்கடிப்பதாயும்
துலாகோடித்வந்த்வம்	பீலிகள் என்னும் இரண்டு அணிகளை
தகத் அபி	தரித்திருந்தபோதிலும்
அதுலதாம்	ஒப்பற்ற நிலைமையை
கச்சந்	அடைவதாயுமிருந்துகொண்டு
கிராம்	சொற்களுடைய
மார்க்கம்	வழியை
லங்கயதி	கடந்து செல்லுகிறது.

பர்வதராஜகுமாரியே காமாக்ஷி உன் பாதங்கள் எப்போதும்(மருதாணி) செம்பஞ்சுக்குழம்பு என்னும் பங்கத்தை அடைந்திருந்தும், வணங்குவோர்களின் பங்கம்

(பாபம்) முழுவதையும் போக்கடிகின்றன; இரண்டு துலாகோடிகளை (சிலம்புகளைத்) தரித்திருந்தும் துலையற்றவைகளாய் (ஒப்பற்றவைகளாய்) இருக்கின்றன. இவ்விதமான உன் பாதங்கள் சொற்களின் எல்லையை மீறி நிற்கின்றன.

பங்கம்:-சேறும் பாபமும்; துலாகோடி-பீலிகளின் நுனிகளும், தராசின் தட்டுகளும். இப்ப விரோதம்போல் தோற்றும் பொருள் பெற்ற சொற்களைக்கொண்டு தேவியின் பாதங்கள் வர்ணித்து முடிவைக் காணமுடியாத தன்மையுள்ளன என்கிறார்.

प्रवालं सव्रीडं विपिनविवरे वेपयति या
स्फुरल्लीलं बालातपं अधिकबालं दधति या।
रुचिं सान्ध्यां वन्ध्यां विरचयति या वर्धयतु सा
शिवं मे कामाक्ष्या: पदनलिनपाटल्यलहरी।।४६।।

ப்ரவாலம் ஸவ்ரீடம் விபிநவிவரே வேபயதி யா
ஸ்புரல்லீலம் பாலாதபமதிகபாலம் தததி யா।
ருசிம் ஸாந்த்யாம் வந்த்யாம் விரசயதியாவர்த்தயதுஸா
ஶிவம் மே காமாக்ஷ்யா: பதநலிந-பாடல்ய-லஹரீ ।।46।।

யா	எந்த சிவப்பானது
ப்ரவாலம்	துளிரை
ஸ்வ்ரீடம்	வெட்கப்படும்படியாக
விபிந விவரே	காட்டுப்பிரதேசத்தில்
வேபயதி	நடுங்கும்படி செய்கிறதோ
ஸ்புரல்லீலம்	அதிகமாய் பிரகாசிக்கிற
பாலாதபம்	இளம் சூரியனை

அதிக பாலம்	பச்சைக்குழந்தையாக (சக்தியற்றதாக)
தததி	செய்துவிடுகிறதோ
யா	எந்த சிவப்பு
ஸாந்த்யாம்	ஸந்தியாகாலத்தினுடைய
ருசிம்	காந்தியை
வந்த்யாம்	உபயோகமில்லாததாக
விரசயதி	செய்கிறதோ
ஸா	அப்பேர்பட்ட
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
பத-நலிந	தாமரை போன்ற பாதங்களுடைய
பாடல்ய லஹரீ	சிவப்பு வர்ணத்தின் அலைபோன்ற ஒளியானது
மே	என்னுடைய
சிவம்	மங்களத்தை
வர்த்தயது	விருத்தி செய்யட்டும்.

காமாக்ஷி தேவியின் தாமரை போன்ற பாதங்களிலிருந்து அலையெறியும் சிவப்பு வர்ணம் தன் அழகினுல் தளிர்களை வெட்கமடைந்து காடுகளில் சென்று நடுங்கிக்கொண்டிருங்கும்படி செய்கிறது; ஒளியுடன் உதிக்கும் இளம் சூரியனை சிறுகுழந்தை போல சக்தியற்றதாக்குகிறது; ஸந்தியா காலத்தின் காந்தியை உபயோகமற்றதாகச்செய்துவிடுகிறது. அவ்விதமான காந்தியைக் கொண்டதேவியின் பாதங்கள் எனக்கு மங்களங்களை விருத்தி செய்யட்டும்.

இளந்தளிர்கள், இளஞ்சூரியன், ஸந்த்யாகாலம் இவற்றின் சிவப்புவர்ணமானது அம்பிகையின் பாதங்களுடைய சிவப்புவர்ணத்தின் அழகுக்கு முன்னால் நிற்கமாட்டா என்கிறார்.

किरञ्ज्योत्स्नारीतिं नखमणिरुचा हंसमनसां
वितन्वानः प्रीतिं विकचतरुणाम्भोरुहरुचिः।
प्रकाशः श्रीपादस्तव जननि कामाक्षि तनुते
शरत्कालप्रौढिं शशिशकलचूडप्रियतमे।।४७।।

கிரஞ்ஜ்யோத்ஸ்நாரீதிம் நகமணிருசா ஹம்ஸமநஸாம்
விதந்வாந: ப்ரீதிம் விகசதருணாம்போருஹருசி:।
ப்ரகாஶ: ஸ்ரீபாதஸ்-தவ ஜநநி காமாக்ஷி தநுதே
ஶரத்காலப்ரௌடிம் ஶஶி-ஶகல-சூட-ப்ரியதமே ।।47।।

ஜநநி	*தாயே*
ஶஶிஶகலசூட	*சந்திரசேகரருடைய*
ப்ரியதமே	*பத்னியே*
காமாக்ஷி	*காமாக்ஷி*
நகமணிருசா	*நகங்களாகிற மணிகளின் காந்திகளால்*
ஜ்யோத்ஸ்நா-ரீதிம்	*நிலாவின் நிலைமையை*
கிரந்	*பரவச்செய்கிறதாயும்*
ஹம்ஸமநஸாம்	*ஹம்ஸங்களின் மனதிற்கு*
ப்ரீதிம்	*ஸந்தோஷத்தை*
விதந்வாந:	*உண்டுபண்ணுகிறதாயும்*
விகச-தருண	*மலர்ந்து செவ்வியதான*
அம்போருஹ	*தாமரைப்பூவின்*

ருசி:	காந்தியையுடையதாயும்
ப்ரகாஶ:	பிரகாசமாயுமிருந்துகொண்டு
தவ	உன்னுடைய
ஶ்ரீபாத:	அழகிய பாதமானது
ஶரத்கால	சரதகாலத்தினுடைய
ப்ரௌடிம	பெருமையை (அழகை)
தநுதே	வெளிப்படுத்துகிறது

தாயே காமாக்ஷி சந்திரசேகரின் பத்னியே ரத்னம்போன்ற நகங்களின் காந்திகளால் நிலாவின் நிலைமையை பரவச் செய்கிறதாயும், (பரம) ஹம்ஸங்களின் மனங்களுக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணுவதாகவும், மலர்ந்து செவ்வியதான தாமரைப் பூவின் சோபையையுடையதாகவும் உன்னுடைய அழகிய பாதம் இருக்கிறது. இதனால் அது சரத்காலத்தின் பெருமை தன்னிடம் இருப்பதை வெளியிடுகிறது.

சரத்காலமானது நிலா, மலர்ந்த செவ்விய தாமரை தெளிவான நீரில் விளையாடும் ஹம்ஸங்கள் இவற்றால் மனோஹரமாயிருப்பது போல, தேவியின் பாதங்களும் நிலாப்போல் வெளுத்த நக காந்திகளைக் கொண்டதாயும், (பரம) ஹம்ஸர்களுக்கு ஆனந்தத்தை அளிப்பதாயும், செந்தாமரையினும் அழகுமிக்க விளங்குவதாயும் இருக்கிறன. அதனால் திருவடிகளில் சரத்காலத்து சோபை இருக்கிறது என்கிறார். (ஐப்பசியும் கார்த்திகையும் சரத்காலத்திய மாதங்கள்).

नखाङ्कूरस्मेरद्युतिविमलगङ्गाम्भसि सुखं
कृतस्नानं ज्ञानामृतम् अमलम् आस्वाद्य नियतम्।

उदञ्चन्माञ्जीरस्फुरणमणिदीपे मम मनो
मनोज्ञे कामाक्ष्याश्चरणमणिहर्म्ये विहरताम्।।४८।।

நகாங்கூர-ஸ்மேர-த்யுதி-விமல-கங்காம்பஸி ஸுகம்
க்ருத-ஸ்நா நம் ஜ்ஞாநாம்ருதம் அமலம் ஆஸ்வாத்ய
நியதம்
உதஞ்சந்-மாஞ்ஜீர- ஸ்புரண-மணி-தீபே மம மநோ
மநோஜ்ஞே காமாக்ஷ்யா: சரண-மணி-ஹர்ம்யே
விஹரதாம்।।48।।

நகாங்கூர	*நகங்களுடைய*
ஸ்மேர த்யுதி	*வெளுப்பான காந்திகளாகிற*
விமல	*பரிசுத்தமான*
கங்காம்பஸி	*கங்கா ஜலத்தில்*
ஸுகம்	*ஸுகமாக*
க்ருத ஸ்நாநம்	*ஸ்நாநம் செய்ததாய்*
அமலம்	*சுத்தமான*
ஜ்ஞாநும்ருதம்	*ஞானமென்னும் அம்ருதத்தை*
ஆஸ்வாத்ய	*சாப்பிட்டுவிட்டு*
உதஞ்சந்	*ஜ்வலிக்கிற*
மாஞ்ஜீர	*பீலிகளுடைய*
ஸ்புரண	*பிரகாசமாகிற*
மணி-தீபே	*ரத்தின விளக்கையுடையதும்*
மநோஜ்ஞே	*அழகுள்ளதுமான*
காமாக்ஷ்யா:	*காமாக்ஷியினுடைய*
சரண	*பாதங்களாகிற*
மணி-ஹர்ம்யே	*ரத்னமயமான அழகிய கிருஹத்தில்*

மம மந:	என் மனது
நியதம்	எப்போதும்
விஹரதாம்	விளையாடட்டும். (இருக்கட்டும்)

என் மனது தேவியின் பாதங்களின் நகங்களுடைய வெளுப்பான காந்திவெள்ளமென்னும் பரிசுத்தமான ஜலத்தில் ஸ்நானம்செய்துவிட்டு, தோஷமற்ற ஞானமென்னும் அமுதையுட்கொண்டு ஜ்வலிக்கும் பீலிகளின் பிரகாசமாகிற ரத்னமாளிகையில் எப்போதும் ஸஞ்சரித்து விளையாடிக்கொண்டு இருக்கட்டும்.

தேவியின் பாதங்களே ஒரு அழகிய மாளிகை; ஆபரணங்களில் இழைக்கப்பட்ட ரத்னங்களே தூண்டாமணி விளக்குகள். நகங்களிலிருந்து கிளம்பும் கிரணங்களே கங்கா ப்ரவாஹம். அதை உபாஸிப்பதனுல் ஏற்படும் ஞானமே அமுதம். என் மனம் நகங்களின் சோதிவெள்ளத்தில் மூழ்கி, ஞானமென்னும் அமுதத்தை உண்டு, தூமணிவிளக்குகள் சுடர்விட்டு ஜ்வலிக்கத் திகழும் தேவியின் பாதமென்னும் மாளிகையில் எப்போதும் ஸஞ்சரிக்கட்டும்; எப்போதும் என் மனம் தேவியின் பாதங்களையே தியானம் செய்வதாக இருக்கட்டும் என்கிறுர்.

भवाम्भोधौ नौकां जडिमविपिने पावकशिखां
प्रणम्रेन्द्रादीनाम् अधिमुकुटम् उत्तंस कलिकाम्।
जगत्तापेज्योत्स्नाम् अकृतकवच: पञ्जरपुटे
शुकस्त्रींकामाक्ष्या: मनसि कलये पादयुगलीम्।।४९।।

பவாம்போதௌ நௌகாம் ஜடிம-விபிநே பாவகஶிகாம்
ப்ரணம்ரேந்த்ராதீநாம் அதிமுகுடம் உத்தம்ஸ-கலிகாம்।

ஜகத்-தாபே-ஜ்யோத்ஸ்நாம் அக்ருதக-வச: பஞ்ஜர -புடே
ஶுக-ஸ்த்ரீம் காமாக்ஷ்யா: மநஸி கலயே பாதகலீம் ||49||

பவாம்போதௌ	ஸம்ஸாரமென்னும் ஸமுத்திரத்தில்
நௌகாம்	கப்பலாகவும்
ஜடிம	முட்டாள்தனமென்கிற
விபிநே	காட்டில்
பாவகஶிகாம்	அக்னி ஜ்வாலையாகவும்
ப்ரணம்ர	நமஸ்கரிக்கிற
இந்த்ராதீநாம்	இந்திரன் முதலான தேவதைகளுடைய
அதிமுகுடம்	கிரீடங்களில்
உத்தம்ஸ	அலங்காரமான
கலிகாம்	புஷ்பமாகவும்
ஜகத்-தாபே	உலகங்களின் தாபத்திற்கு
ஜ்யோத்ஸ்நாம்	நிலாவாகவும்
அக்ருதக-வச:	நித்யமான வேதமென்னும்
பஞ்ஜர-புடே	கூட்டில்
சுக-ஸ்த்ரீம்	பெண்கிளியாகவுமிருக்கிற
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
பாத- யுகலீம்	இரண்டு பாதங்களையும்
மநஸி	மனதில்
கலயே	தியானம் செய்கிறேன்.

ஸம்ஸாரமென்னும் கடலில் ஒரு தோணியாகவும், அஜ்ஞானமென்னும் காட்டில் அக்னி ஜ்வாலையாகவும் வணங்குகிற இந்திரன் முதலான தேவர்களுடைய தலையில்

ஆபரணமான புஷ்பமாகவும், உலகத்தின் தாபத்தைப் போக்குவதில் நிலாவாகவும், அபௌருஷேயமான வேதமென்னும் கூண்டில் பெண்கிளியாகவும் இருக்கும் காமாக்ஷியின் இரண்டு பாதங்களேயும் என் மனதில் தியானம் செய்கிறேன்.

தேவியின் பாதங்களுக்கு ஸமானமாக உலகில் ஒரு பொருளும் இல்லே. ஒவ்வொன்றை ஒரொரு விஷயத்தில்தான் ஒப்பிடலாம்; தேவியின் பாதங்களே பல பொருள்களுக்கு ஒப்பிடவேண்டும். ஆகையால், பாதங்களுக்கு உபமானமாக பல பொருள்களேக் காட்டுகிருர்.

பாதங்கள் ஸம்ஸாரமென்னும் கடலேத் தாண்டுவிப்பதில் ஒரு கப்பலாகவும், அஜ்ஞானமென்னும் காட்டையழிப்பதில் அக்னி ஜ்வாலேயாகவும், வணங்கும் இந்திராதி தேவர்களின் கிரீடங்களுக்கு அலங்காரமான புஷ்பமாலேயாகவும், உலகத்தின் தாபத்தை நீக்குவதில் நிலாவாகவும், வேதமென்னும் கூண்டுக்கு அழகிய கிளியாகவும் உள்ளன.

परात्मप्राकाश्यप्रतिफलनचञ्चु: प्रणमतां
मनोज्ञम्त्वत्पादो मणिमुकुरमुद्रां कलयते।
यदीयां कामाक्षि प्रकृतिमसृणा: शोधकदशां
विधातुं चेष्टन्ते वलरिपुवधूटीकचभरा:।।५०।।

பராத்ம-ப்ராகாச்ய-ப்ரதிபலந- சஞ்சு: ப்ரணமதாம்
மநோஜ்ஞ: த்வத்-பாத: மணி-முகுர முத்ராம் கலயதே।
யதீயாம் காமாக்ஷி ப்ரகுருதி- மஸ்ருண: சோதக-தசாம்
விதாதும் சேஷ்டந்தே வல-ரிபு-வதூடி-கச-பரா: ।।50।।

காமாக்ஷி	காமாக்ஷியே
யதீயாம்	எந்த பாதங்களுடையதான
ேஶாதகதஶாம்	சுத்தம் செய்வது என்கிற நிலைமையை
விதாதும்	செய்வதற்காக
ப்ரக்ருதி	ஸ்வபாவத்திலேயே
மஸ்ருணு	மிருதுவாய் உள்ள
வல-ரிபு	இந்திரனுடைய
வதூட	பத்நியான இந்திராணியினுடைய
கச-பரா:	அழகிய கூந்தல்கள்
சேஷ்டந்தே	ஆசைப்படுகின்றனவோ
மநோஜ்ஞ:	அழகாயும்
ப்ரணமதாம்	நமஸ்கரிப்பவர்களுக்கு
பராத்ம	பரமாத்ம ஸ்வரூபத்தை
ப்ராகாஶ்ய	வெளிப்படுத்தி
ப்ரதிபலந	ப்ரதிபலிக்கும்படி செய்ய
சஞ்சு:	ஸாமர்த்திய முள்ளதாயும் இருக்கிற
த்வத் பாத:	உன் பாதமானது
மணி-முகுர முத்ராம்	ரத்னக் கண்ணாடியின் நிலைமையை
கலயதே	அடைகிறது.

காமாக்ஷியே இந்திரன் மனைவியான இந்திராணியின் இயல்பாகவே மிருதுவாயும் ஒளியுள்ளதுமான கேசங்கள் அந்தக் கண்ணாடியின் அழுக்கைப் போக்குவது என்னும்

கார்யத்தைச் செய்ய ஆசைப்பட்டுப் பிரவிருத்திக்கின்றனவோ என்று சொல்லும்படி பாதங்களில் விழுந்து புரளுகின்றன.

நமஸ்கரிப்பவர்களுக்கு பரமாத்மஸ்ரூபத்தின் ப்ரகாசத்தை பிரதிபலித்துக் காட்டுவதில் ஸாமர்த்தியமுள்ளதும் அழகுள்ளதுமான உன்னுடைய பாதம் ரத்னக்கண்ணுடியின் தன்மையை அடைகிறது.

இந்திராணியும் வந்து கூந்தல்கள் படும்படி வணங்கத்தக்க பெருமையையுடை தேவியின் பாதங்களை உபாஸிப்பவர்களுக்கு பரமஜ்ஞானம் தானுகவே ஏற்படுகிறது என்கிறுர்.

अविश्रान्तं तिष्ठन्नकृतकवच: कंदरपुटी
कुटीरान्त: प्रौढां नखरुचिसटालीं प्रकटयन्।
प्रचण्डं खण्डत्वं नयतु मम कामाक्षि तरसा
तमोवेतण्डेन्द्रं तव चरणकण्ठीरवपति:।।५१।।

அவிஶ்ராந்தம் திஷ்டந் அக்ருதக-வச:-கந்தர-புட
குடீராந்த: ப்ரௌடாம் நக-ருசி-ஸடாலீம் ப்ரகடயந்
ப்ரசண்டம் கண்டத்வம் நயது மம காமாக்ஷி தரஸா
தமோ-வேதண்டேந்த்ரம் தவ சரண கண்டீரவ-பதி:(51)

காமாக்ஷி	காமாக்ஷியே
அக்ருதக- வச:	நித்யமான வேகமென்னும்
கந்தர- புட	குஹையென்னும்
குடீராந்த:	கிருஹத்திற்குள்
அவிஶ்ராந்தம்	எப்பொழுதும்
திஷ்டந்	இருக்கிறதும்

நக	ருசி
நககாந்தி	என்கிற
ஸடாலீம்	பிடரி மயிர்களை
ப்ரௌடம்	கம்பீரமாக
ப்ரகடயந்	சிலிர்ந்துக்கொண்டும் இருக்கிறதுமான்
தவ	உன்னுடைய
சரணகண்டீரவ	பாதமென்னும் சிங்கமானது
ப்ரசண்டம்	பயங்கரமான
மம	என்னுடைய
தமா;	அஜ்ஞானமென்னும்
வேதண்டேந்த்ரம்	பெரிய யானையை
தரஸா	சீக்கிரத்தில்
கண்டத்வம் நயது	பிளந்து எறியட்டும்.

காமாக்ஷியே அபௌருஷேயமான வேத வாக்குக்களென்னும் இருண்ட குஹா கிரகத்தில் எப்போதும் நிற்கும் உன்னுடைய பாதமென்னும் சிங்கமானது நககாந்தி என்னும் பிடரிமயிர்களை கம்பீரமாக சிலிர்த்து, மிகவும் துஷ்ட ஸ்வபாவமுள்ள என் அஜ்ஞானமென்னும் பெரிய யானையை சீக்கிரத்திலேயே பிளந்து எறியட்டும்.

இதில் தன் அஜ்ஞானத்தை கறுத்து மலைபோல் பெருத்த ஒரு மதயானைக்கு ஒப்பிட்டு, அதைக் கொல்லும் விஷயத்தில் தேவியின் பாதங்கள் ஒரு சிங்கம் போலிருக்கட்டும் என்று பிரார்த்திக்கிறார். பரவும் நக காந்தியே சிங்கத்தின் பிடரி மயிர்கள்; காட்டில் குகையில் சிங்கம் வஸிப்பதுபோல, வேதங்களுக்குள் தேவியின்

பாதங்கள் இருக்கின்றன. அதாவது வேதங்கள் தேவியின் மஹிமையையே கூறவந்தன. அக்னி, இந்திரன் முதலான தேவர்களைக் கூறுவதாயிருந்தாலும், அவர்களும் தேவியின் அருளாலேயே அப்பெருமையை யடைந்திருப்பதால் அவர்களைப் புகழ்ந்தால் தேவியையே போற்றியதாகும். ஒரு அரசனின் நாட்டையும், பொக்கிஷத்தையும் புகழ்ந்தால் அரசனையே புகழ்ந்ததுபோல் ஆகிறதல்லவா?

வேதங்கள் ஒரு மானிடனால் செய்யப்படாது அப்பௌருஷேயங்களாகையால், அவற்றை அக்ருதக-வச; என்றது.

पुरस्तात्कामाक्षि प्रचुररसमाखण्डलपुरी
पुरन्ध्रीणां लास्यं तव ललितमालोक्य शनकैः।
नखश्रीभिः स्मेरा बहुवितनुते नूपुररवैः
चमत्कृत्या शङ्के चरणयुगली चाटुरचनाः।।५२।।

புரஸ்தாத் காமாக்ஷி ப்ரசுர-ரஸம் ஆகண்டல-புரீ-
புரந்த்ரீணும் லாஸ்யம் தவ லலிதம் ஆலோக்ய ஶநகை:।
நக- ஶ்ரீபி: ஸ்மேரா பஹுவிதநுதே நூபுர-ரவை:
சமத்-க்ருத்யா ஶங்கே சரண:யுகலீ சாடு ரசநா: ।।52।।

காமாக்ஷி	காமாக்ஷியே
ஆகண்டல புரீ	இந்திரனுடைய பட்டணத்து
புரந்த்ரீணும்	(தேவ) ஸ்திரீகளுடைய
ப்ரசுர ரஸம்	மிகவும் ரஸமாயும்
லலிதம்	அழகாயுமிருக்கிற
லாஸ்யம்	நாட்டியத்தை
புரஸ்தாத்	எதிரில்

ஆலோக்ய	பார்த்துவிட்டு
சநகை:	மெள்ள மெள்ள
தவ	உன்னுடைய
சரண- யுகலீ	இரண்டு பாதங்களும்
நகஸ்ரீபி:	நக காந்திகளால்
ஸ்மேரா	சிரிப்பவைகளாயிருந்து கொண்டு
நூபுர- ரவை:	கால் சிலம்புகளின் சப்தங்களால்
சமத்க்ருத்யா	ஸாமார்த்தியத்தோடு
சாடுரசநா	அழகிய சப்தங்களை(சொற்களை)
பஹூ	அதிகமாக
விதநுதே	செய்கின்றன, சொல்கின்றன என்று)
ஶங்கே	நினைக்கிறேன்.

காமாக்ஷி உன் இரண்டு பாதங்களும் உன் எதிரில் மிகுந்த ரஸத்தோடு அழகாக தேவஸ்திரீகள் செய்யும் நாட்டியத்தைப்பார்த்து திருப்தியடைந்து மெள்ள மெள்ள நக காந்திகளால் புன்சிரிப்புக்கொண்டதாய், காலணிகளின் சப்தங்களால் மிக நாகரீகமாக அழகிய வார்த்தைகளை அதிகமாகச் சொல்லி நாட்டியத்தைக் கொண்டாடுவதுபோலிருக்கிறது என்று நினைக்கிறேன்.

அம்பிகையை ஸந்தோஷிப்பித்து அவள் பிரஸாதத்தைப் பெறும் பொருட்டு தேவஸ்திரீகள் அவள் எதிரில் லாஸ்யம் என்னும் நாட்டியத்தை ஆடுகிறார்கள். நாட்டியம் ஆடுவது நன்றாயிருந்தால் ஸந்தோஷத்தால் சிரித்து அதை சிலாகித்து வார்த்தைகள் சொல்வது என்ற காரியத்தை தேவியின் பாதங்களே செய்கின்றன என்கிறார். கவிகள்

சிரிப்பை வெளுப்பாகவர்ணிப்பது வழக்கம்; இங்கு நகங்களின் காந்தி வெளுப்பாயிருப்பதால், அதையே சிரிப்பாக சொல்லுகிறார். பாதங்கள் அசையும்போது கலீர் என்று ஒலிக்கும் தண்டைசலங்கை முதலிய ஆபரணங்களின்

யேதஸைத்ஷ்ப்பசதா, நன்றாகிருக்கிறது" என்று சபையோர் கொண்டாடும் சப்தமாக கூறுகிறார்.

லாஸ்யம்-நாட்டியத்தில் தாண்டவம் லாஸ்யம் என்று இருவகையுண்டு. அவற்றுள் தாண்டவம் என்பது ஆண்கள் ஆடுவது; லாஸ்யம் பெண்கள் செய்வது. ஈச்வரன் தாண்டவத்தையும், ஈச்வரி லாஸ்யத்தையும் செய்து காட்டினார்கள்.

सरोजं निन्दन्ती नखकिरणकर्पूरशिशिरा
निषिक्ता मारारेर्मुकुटशशिरेखाहिमजलैः।
स्फुरन्ती कामाक्षि स्फुटरुचिमये पल्लवचये
तवाधत्ते मैत्रीं पथिकसुदृशा पादयुगली।।५३।।

ஸரோஜம் நிந்தந்தீ நக-கிரண-கர்பூர-ஶிஶிரா
நிஷிக்தா மாராரே; முகுட-ஶஶி-ரேகா-ஹிம-ஜலை:।
ஸ்புரந்தீ காமாக்ஷி ஸ்புட-ருசி-மயே பல்லவ-சயே
க்ஜ ஆதத்தே மைத்ரீம் பதிக-ஸுத்ருஶா பாத-யுகலீ।।53।।

காமாக்ஷி	காமாக்ஷியே
ஸரோஜம்	தாமரையை
நிந்தந்தீ	நிந்திக்கிறதாயும்
நக- கிரண	நக காந்தி என்னும்
கர்பூர	பச்சைக்கற்பூரத்தால்
ஶிஶிரா	குளிர்ந்ததாயும்

மாராரே:	சிவனுடைய
முகுட	மகுடத்திலுள்ள
சசிரேகா	சந்திரகலையினுடய
ஹிம- ஜலே:	குளிர்ந்த ஜலத்தால்
நிஷிக்தா	தெளிக்கப்பட்டதாயும்
ஸ்புடருசி- மயே	சுத்தமான காந்திகள் என்னும்
பல்லவ - சயே	தளிர்களின் கூட்டத்தில்
ஸ்புரந்தீ	பிரகாசிக்கிறதாயிமிருக்கிற
தவ	உன்னுடைய
பாத- யுகலீ	இரண்டு பாதங்களும்
பதிக	பிரயாணத்திலிருப்பவனுடைய
ஸுத்ருஶா	ஸ்திரீயோடு
மைத்ரீம்	ஒற்றுமையை
ஆதத்தே	அடைகிறது.

காமாக்ஷி தாமரையைப்பழிப்பதும், நக காந்தி என்னும் பச்சைக்கற்பூரத்தால் குளிர்ந்ததாயும், சிவனின் மகுடத்திலுள்ள சந்திர கலையிலிருந்து பெருகும் பனி ஜலத்தால் நனைக்கப்பட்டதாயும் நிர்மலமான காந்தியென்னும் தளிர்களின் மத்தியில் விளங்குவதுமான உன் பாதங்கள் தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலைமையை வஹிக்கின்றன.

தலைவனை விட்டு பிரிந்த ஒரு ஸ்திரீ பிரிவாற்ருமல் வருந்தும் போது தாமரை அவளுக்கு வெறுப்பாயிருக்கும்; சரீரத்தில் உண்டான தாபத்தையாற்ற கர்ப்பூரக்குழம்பை பூசிக்கொள்வாள் ; சந்திர காந்தக்கல்லிலிருந்து பெருகும் குளிர்ந்த ஜலத்தால் சரீரத்தை நனைத்துக்கொள்வாள்;

அதினாலும் தாபம் தீராமல் இளந்தளிர்களைப் பரப்பி அதன் மேல் படுத்துக்கொள்வாள். இவையெல்லாம் ஒரு விதத்தில் தேவியின் பாதங்களில் காணப்படுகின்றன என்கிறார்.

பொருள் சாம்பாதிக்கும் பொருட்டு தன்னை விட்டுப்பிரிந்து வெளியில் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் தன் நாயகனுடைய பிரிவு ஆற்றாது வருந்தும் ஒரு ஸ்திரீ போன்றிருக்கின்றன தேவியின் திருவடிகள் என்று வர்ணிக்கிறார்.

नतानां संपत्तेः अनवरतमाकर्षणजपः
प्ररोहत्संसारप्रसरगरिमस्तम्भनजपः।
त्वदीयः कामाक्षि स्मरहरमनोमोहनजपः
पटीयान्नः पायात् पदनलिन मञ्जीरनिनदः॥५४॥

நதாநாம் ஸ்ம்பத்தே: அநவ்ரதம் ஆகர்ஷண-ஜப:
ப்ரரோஹத்-ஸம்ஸார-ப்ரஸர-கரிம-ஸ்தம்பந-ஜப:।
த்வதீய: காமாக்ஷி ஸ்மர-ஹர-மநோ-மோஹந-ஜப:
படீயாந்-ந: பாயாத் பத-நலிந-மஞ்ஜீர-நிநத:॥54॥

காமாக்ஷி	காமாக்ஷியே
நதாநாம்	நமஸ்கரிப்பவர்களுக்கு
அநவரதம்	எப்போதும்
ஸம்பத்தே:	ஸம்பத்தை
ஆகர்ஷண	இழுத்துக்கொடுக்கும்
ஜப:	மந்திரமாயும்
ப்ரோஹத்	விருத்தியடைகிற
ஸம்ஸார	ஸம்ஸாரத்தின்
ப்ரஸர	பரவுதலின்

கரிம	மிருதியை
ஸ்தம்பந	அடக்கும்
ஜப:	மந்திரமாயும்
ஸ்மரஹர	மன்மதனை எரித்த சிவனுடைய
மந:	மனதை
மோஹந	மோஹிக்கும்படி செய்யும்
ஜப:	மந்திரமாயும்
படீயாந்	தெளிவாய் அழகாயுமிருக்கிற
த்வதீய:	உன்னுடையதான
பதநலிந	தாமரைபோன்ற பாதங்களுடைய
மஞ்ஜீர	சிலம்புகளின்
நிநத:	சப்தங்கள்
ந:	எங்களை
பாயாத்	ரக்ஷிக்கட்டும்.

காமாக்ஷியே வணங்குவோர்களுக்கு ஸம்பத்தை எப்போதும் அளிப்பதில் ஆகர்ஷணஜபமாயும், மேன்மேலும் பொங்கி எழும் ஸம்ஸாரம் பரவி வளர்வதைத் தடுப்பதில் ஸ்தம்பநஜபமாயும், சிவனின் மனதுக்கு மோஹனஜபமாயும் விளங்குகிற வல்லமை உள்ள உன் சரணகமலங்களிலுள்ள சிலம்புகளின் சப்தம் எங்களை ரக்ஷிக்கட்டும்.

தேவியின் பாதங்கள் நம்மை ரக்ஷிப்பது ஒரு விசேஷமல்ல, அந்த பாதங்களை அலங்கரிக்கும் சிலம்புகளின் சப்தமே நம்மை ரக்ஷிக்கப்போதுமானது; ஸகல மந்திரங்களும் கொடுக்கக்கூடிய எல்லா நன்மையையும் அதுவே கொடுக்கும் என்கிறார். சில மந்திரங்கள்

ஐஸ்வர்யத்தை அளிக்கக்கூடியனவாயும், சில நம் துன்பங்களை நீக்கவல்லனவாயும்,சில பிறரை மோஹிக்கும்படி செய்வனவாயுமிருக்கும் அச்சக்திகள் எல்லாவற்றையும் திருவடிகளின் சிலம்பு பெற்றிருக்கிறது என்கிறார். ஐச்வர்யத்தையும் கொடுக்கும்; ஸம்ஸார துக்கத்தை வளரவிடாமல் அழித்துவிடும்; காமத்தை அடக்கி மன்மதனை எரித்து ஸ்மரஹரன் என்று பிரஸித்திபெற்ற சிவனையும் மோஹிக்கும்படி செய்யும். ஆகையால் இது ஸகலவல்லமையுள்ளது.

वितन्वीथा नाथे मम शिरसि कामाक्षि कृपया
पदाम्भोजन्यासं पशुपरिबृढप्राणदयिते।
पिबन्तो यन्मुद्रां प्रकटमुपकम्पापरिसरं
दृशा नानद्यन्ते नलिनभवनारायणमुखा:।।५५।।

விதந்வீதா நாதே மம ஶிரஸி காமாக்ஷி க்ருபயா
பதாம்போஜ- ந்யாஸம் பஶு-பரி-ப்ருட-ப்ராணதயிதே।
பிபந்தோ யந்-முத்ராம் ப்ரகடம் உப-கம்பா-பரிஸரம்
த்ருஶா நாநத்யந்தே நலிந-பவ-நாராயண-முகா: ।।55।।

காமாக்ஷி	காமாக்ஷி
பஶுபரிப்ருட	பசுபதியினுடைய
ப்ராணதயிதே	இன்னுயிர்க்காதலியே
நாதே	ஜகதீச்வரியே
காமாக்ஷி	காமாக்ஷி
யந்முத்ராம்	எதனுடைய முத்திரைகளை
ப்ரகடம்	ஸ்பஷ்டமாக
உபகம்பா	கம்பாநதியின் கரையில்
பரிஸரம்	இருந்துகொண்டு

த்ருமா	தங்கள் கண்களால்
பிபந்த:	குடிக்கிறவர்களாய்க்கொண்டு
நலிநபவ	தாமரையிலிருந்துண்டான பிரம்மா
நாராயண	மஹாவிஷ்ணு
முகா:	முதலான தேவர்கள்
நாநந்த்யந்தே	எப்போதும் அதிக ஸந்தோஷமடைகிறார்களோ
பதாம்போஜ	(அப்பேர்பட்ட) சரண கமலங்களினுடைய
மம சிரஸி	என் தலையில்
ந்யாஸம்	வைப்பதை
க்ருபயா	கருணை செய்து
விதந்வீதா:	செய்வாயாக.

பசுபதியின் இன்னுயிர்காதலியே ஜகதீச்வரி காமாக்ஷி கம்பாநதியின் கரையில் எந்த பாதங்களின் நன்கு பதிந்த சின்னங்களை தங்கள் கண்களால் பருகி அம்புஜத்தோனும் நாராயணனும் மற்றுமுள்ளோர்களும் எப்போதும் அழிவிலா ஆனந்தத்தை அடைகிறார்களோ, அப்பேர்ப்பட்ட பாதபத்மங்களை கருணையோடு எனது சிரஸ்ஸில் வைப்பாயாக.

பிரம்மாதி தேவர்களும் காமாக்ஷிதேவியின் ஆலயத்திற்கு ஸமீபத்தில் ஓடும் கம்பாநதியின் கரையில் வந்து தேவியின் பாதங்களைக்கண்டு மகிழ்கிறார்கள்; அப்பேர்ப்பட்ட பாதங்களை என் தலை மீது வைப்பாயாக என்று பிரார்த்திக்கிறார்.

प्रणामोद्यत्बृन्दारकमुकुटमन्दारकलिका
विलोलल्लोलम्बप्रकरमयधूमप्रचुरिमा।
प्रदीप्तः पादाब्जद्युतिविततति पाटल्यलहरी
कृशानुः कामाक्ष्या मम दहतु संसारविपिनम्।।५६।।

ப்ரணமோத்யத் ப்ருந்தாரக-முகுட- மந்தார-கலிகா-
விலோலல்-லோலம்ப-ப்ரகர-மய-தூம ப்ரசுரிமா।
ப்ரிதீப்த: பாதாப்ஜ-த்யுதி-விததி-பாடல்ய-லஹரீ-
க்ருஶாநு: காமாக்ஷ்யா மம தஹது ஸம்ஸார-விபிநம்।।56।।

ப்ரணம	*நமஸ்கரித்து*
உத்யத்	*எழுந்திருக்கும்*
ப்ருந்தாரக	*தேவக்கூட்டங்களுடைய*
முகுட	*க்ரீடங்களில் உள்ள*
மந்தாரகலிகா	*மந்தார புஷ்பங்களில்*
விலோலத்	*ஸஞ்சரிக்கிற*
லோலம்ப	*வண்டுகளுடைய*
ப்ரகரமய	*கூட்டமென்னும்*
தூம	*புகையினுல்*
ப்ரசுரிமா	*நிரம்பினதாயும்*
ப்ரதீப்த:	*ஜ்வலிக்கிறதாயும்*
காமாக்ஷ்யா:	*காமாக்ஷியினுடைய*
பாதாப்ஜ	*சரண கமலங்களுடைய*
த்யுதிவிததி	*காந்தியின் கூட்டம் என்னும்*
பாடல்யலஹரீ	*சிவப்பு வர்ணத்தின் பரம்பரைகளையுடையதுமான*
க்ருசாநு:	*அக்னியானது*

ம௦ — என்னுடைய
ஸம்ஸாரவிபிநம் — பிறவியென்னும் காட்டை
தஹது — எரித்துவிடட்டும்.

வணங்கி எழுகின்ற தேவர்களின் கிரீடங்களிலுள்ள மந்தாரை மொட்டுக்களில் மொய்த்துக் கொண்டிருக்கும் வண்டுகளின் கூட்டமென்னும் புகையோடு கூடியதும், காமாக்ஷியின் சரணகமலங்களின் சோதி வெள்ளத்தின் சிவப்பு அலைகளுடன் ஜ்வலிக்கும் அக்னியானது என்னுடைய பிறவியென்னும் காட்டை அழிக்கட்டும்.

(அஜ்ஞானமென்னும் இருள் சூழ்ந்து காமம் குரோதம் முதலியன துஷ்டமிருகங்களோடு கூடிய) என்னுடைய ஸம்ஸாரமென்னும் பெரிய காட்டை தேவியின் பாதமென்னும் அக்னியானது எரித்து அழித்து விடட்டும் என்கிறார். காட்டுத்தீயின் சிவப்பு ஜ்வாலைகள் பால அம்பிகையின் தாமரை போன்ற பாதங்களின் காந்திகள் இருக்கின்றன. வந்து வணங்கும் தேவர்களின் கிரீடங்களிலுள்ள புஷ்பங்களின் தேனுக்காகஅங்கே ஸஞ்சரிக்கும் வண்டுகள் பறந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் காட்டுத்தீயில் புகை சூழ்ந்து இருப்பது போல் உள்ளது.

वलक्षश्रीः ऋक्षाधिपशिशुसदृक्षैः[1] तव नखै–
र्जिघृक्षुर्दक्षत्वं सरसिरुहभिक्षुत्वकरणे।
क्षणान्मे कामाक्षि क्षपितभवसंक्षोभगरिमा
वचोवैचक्षण्यं चरणयुगली पक्ष्मलयताम्।।५७।।

---

[1] ऋक्षाधिपशिशुदृसक्षा என்றும் பாடம்

வலக்ஷஸ்ரீர்-ருக்ஷாதிப ஸுஸு-ஸத்ருக்ஷை:- தவ நகை:
ஜிக்ருக்ஷுர் தக்ஷத்வம் ஸரஸிருஹ-பிக்ஷுத்வ-கரணே।
க்ஷணாந்-மே காமாக்ஷி க்ஷபித-பவ-ஸங்க்லேஷாப-கரிமா
வசோ-வைசக்ஷண்யம் சரண-யுகலீ பக்ஷ்மலயதாம்।।57।।

காமாக்ஷி	*காமாக்ஷியே*
ருக்ஷாதிப	*நக்ஷத்திரங்களுக்கு அதிபதியான*
சிசுஸத்ருக்ஷை	*பிறைச்சந்திரனுக்கு சமானமான*
நகை:	*நகங்களால்*
வலக்ஷ	*வெளுப்பான*
ஸ்ரீ:	*காந்தியையுடையதும்*
ஸரஸிருஹ	*தாமரைப்பூவை*
பிக்ஷுத்வகரணே	*பிச்சையெடுக்கும்படி செய்யும் (தோற்கடிக்கும்) விஷயத்தில்*
தக்ஷத்வம்	*ஸாமர்த்தியத்தை*
ஜிக்ருக்ஷு:	*அடைவதில் நோக்கமுடையதும்*
க்ஷணாத்	*க்ஷணகாலத்திலேயே*
க்ஷபித	*போக்கடிக்கப்பட்ட*
பவ	*ஸம்க்லேஷாப*
ஸம்ஸாரதுக்கத்தின் கரிமா	*பாரத்தையுடையதுமான*
தவசரணயுகலீ	*உன் இருபாதங்களும்*
மே	*என்னுடைய*
வசோ வைசக்ஷண்யம்	*வாக்ஸாமர்த்தியத்தை*
ப்க்ஷ்மலயதாம்	*விருத்தியடைவதாகச் செய்யட்டும்.*

காமாக்ஷி நக்ஷத்திரங்களுக்கு அதிபதியான சந்திரனின் பிறைபோன்ற நகங்களாலே வெண்மையான காந்தியையுடையவைகளும், தாமரைகளுக்கு ஏழ்மையையுண்டுபண்ணும் விஷயத்தில்

ஸாமர்த்யத்தை அடைய விரும்புகின்றவைகளும், ஒரு க்ஷணத்திலேயே ஸம்ஸாரத்தினுல் உண்டாகும் பெரிய துக்கங்களையேல்லாம் போக்குகின்றவைகளுமான உன் பாதங்கள் என் வாக் ஸாமர்த்தியத்தை (வெகு சீக்கிரத்தில்) விருத்தி செய்யட்டும்.

समन्तात्कामाक्षि क्षततिमिरसन्तानसुभगान्
अनन्ताभिर्भाभिर्दिनमनु दिगन्तान्विरचयन्।
अहंताया हन्ता मम जडिमदन्तावलरिपु:
बिभिन्तां संतापं तव चरणचिन्तामणिरसौ।।५८।।

ஸமந்தாத் காமாக்ஷி க்ஷத-திமிர-ஸந்தாந-ஸுபகாந்
அநந்தாபி: பாபி: தினமநு திகந்தாந் விரசயந்।
அஹந்தாயா ஹந்தா மம ஜடிம - தந்தாவல-ரிபு:
விபிந்தாம் ஸந்தாபம் தவ சரண-சிந்தாமணி:
அஸௌ।।58।।

காமாக்ஷி	காமாக்ஷியே
அநந்தாபி:	அனந்தங்களான
பாபி:	காந்திகளால்
அநுதினம்	ஒவ்வொரு தினமும் (எப்போதும்)
திகந்தாந்	திக்குகளையெல்லாம்
ஸமந்தாத்	நாலு பக்கங்களிலும்

க்ஷத	நீக்கப்பட்ட
திமிர- ஸந்தாந -	இருட்டு கூட்டங்களால்
ஸுபகாந்	அழகுள்ளவைகளாக
விரசயந்	செய்வதும்
அஹந்தாயா:	அஹங்காரத்தை
ஹந்தா	அழிக்கிறதும்
ஜடிம	அஜ்ஞானமென்னும்
தந்தாவல	யானைக்கு
ரிபு: (ஹரி)	சத்ருவான சிங்கமாயிருப்பதுமான
தவ	உன்னுடைய
அஸௌ	இந்த
சரண சிந்தாமணி:	பாதமென்னும் சிந்தாமணியானது
மம	என்னுடைய
ஸந்தாபம்	தாபத்தை
விபிந்தாம்	போக்கடிக்கட்டும்.

காமாக்ஷியே தன் அனந்தங்களான காந்திகளால் ஒவ்வொரு தினமும் எல்லாத்திசைகளிலும் நாலாபக்கங்களிலும் இருக்கும் இருளை நீக்கி அவற்றை அழகாகச் செய்வதும், அஹங்காரத்தைப் போக்குவதும், அஜ்ஞானமென்னும் யானையையழிக்கும் சிங்கமுமான உன் இந்தப் பாதமென்னும் சிந்தாமணியானது என் தாபத்தை நீக்கட்டும்.

சிந்தாமணி என்னும் ரத்தனம்போல் இருக்கும் அம்பிகையின் பாதங்கள் வெளியிலுள்ள இருட்டைப்

போக்கி அழகுபடுத்துவது மட்டுமல்லாமல், உள்ளிருக்கும் அஜ்ஞானமென்னும் இருட்டையும் போக்கி அஹங்காரத்தையும் விலக்குகின்றன. அதனுல் என் ஸம்ஸாரதாபங்களும் ஒழியட்டும் என்று பிரார்த்திக்கிருர்.

दधानो भास्वतां अमृतनिलयोलोहितवपु :
विनम्राणां सौम्यो गुरुरपि कवित्वं च कलयन्।
गतौ मन्दो गङ्गाधरमहिषि कामाक्षि भजतां
तमःकेतुर्मातस्तव चरणपद्मो विजयते।।५९।।

ததாநோ பாஸ்வத்தாம் அம்ருத-நிலயோ லோஹித வபு:
விநம்ராணும் ஸௌம்யோ குரு: அபி கவித்வம் ச கலயந்।
கதௌ மந்தோ கங்காதர-மஹிஷி காமாக்ஷி பஜதாம்
தம: கேது: மாத: தவ சரண-பத்மோ விஜயதே ।।59।।

மாத:	தாயே
கங்காதர	கங்காதரனுக்கு
மஹிஷீ	பட்ட மஹிஷியே
காமாக்ஷி	காமாக்ஷீ
தவ	உன்னுடைய
சரணபத்ம:	தாமரைபோன்ற பாதமானது
பாஸ்வத்தாம்	ஒளியோடு கூடிய தன்மையை (ஸுர்யன் தன்மையை)
ததாந:	அடைந்ததாயும்
அம்ருதநிலய;	மோக்ஷத்திற்குக் காரணமாயும் அமிருதத்திற்கு இருப்பிடமான சந்திரனுகவும்
லோஹிதவபு:	சிவந்த உருவமுள்ளதாயும் (செவ்வாயாகவும்)

விநம்ராணும்	நமஸ்கரிப்பவர்களுக்கு
ஸௌம்ய:	சுபகரமாயும் (ஸோமனின் புதல்வனுன புதனுகவும்)
குரு: அபி- ஸந்	மார்க்கத்தை உபதேசிக்கும் குருவாகவும் (பிரஹஸ்பதியாகவும்)
கவித்வம் ச	கவந சக்தியை
கலயந்	உண்டுபண்ணுகிறதாயும் (கவி என்ற சுக்கிரன் தன்மையை உடையதாயும்)
கதௌ	நடப்பதில்
மந்த:	மெதுவாயும் (சனீச்வரனுகவும்)
பஜதாம்	தியானம் செய்பவர்களுக்கு
தம:கேது	அஜ்ஞானமென்னும் இருளைப் போக்கும் சத்துருவாகவும் (ராகு கேதுக்களாகவும்)
விஜயதே	விளங்குகிறது.

கங்காதரனின் மஹிஷியே தாயே காமாக்ஷி உன்னுடைய பாதபத்மம் ஒளி நிறைந்து ஸூர்யனுயிருக்கும் தன்மையையடைந்ததாயும், மோக்ஷமென்னும் அமுதுக்கு இருப்பிடமாதலால் சந்திரனுகவும், சிவந்தரூபமுள்ளதால் செவ்வாயாகவும், வணங்குகிறவர்களுக்கு ஸௌம்யமாயிருப்பதால் புதனுகவும், ஸந்மார்க்கத்தை உபதேசிப்பதால் குருவாகவும், கவிதையைக் கொடுப்பதால் சுக்கிரனுகவும், நடப்பதில் மெதுவாயிருப்பதால் சனியாகவும், ஆச்ரயிப்பவர்களின் தமஸ்ஸைப் போக்குவதால் (தமஸ்) ராகு கேதுவாகவும் விளங்குகிறது.

சிலேஷையான சப்தப்பிரயோகத்தினல் நவக்கிரஹங்களையும் தேவியின் பாதத்தில் காணலாம் என்று கூறுகிறார்.

பாஸ்வத்தாம் - ஒளியுள்ளமை, ஸூர்யனுடைய தன்மை என இருபொருள்; பாதங்கள் ஒளியுள்ளவையா யிருக்கின்றன. என்னும் போது சப்தசக்தியால் ஸூர்யனு டைய தன்மையைப்பெற்றிருக்கின்றன என்று கிடைப் பதால் பாதங்களே ஸூர்யன் என்று த்வனிக்கிறது. இப்படியே ஒவ்வொரு கிரஹத்திற்கும் பாதத்திற்கும் பொருந்தும்படியான சொற்களை பிரயோகித்திருக்கிறார்.

அம்ருத - நிலய:- அம்ருதத்திற்கு இருப்பிடம் சந்திரன்; அம்ருதம் என்னும் மோக்ஷத்திற்குக் காரணம் பாதங்கள்.

லோஹிதவபு:- சிவந்தவர்ணமுள்ளவை பாதங்கள்; சிவந்த சரீரத்தையுடையவன் செவ்வாய்.

ஸௌம்ய:- பாதங்கள் மனதுக்கு இனியவை, ஸோமனின் (சந்திரனின்) புதல்வன் புதன்.

குரு:- 'கு' என்றால் இருள் என்றும் , 'ரு' என்றால் போக்குவது என்றும் பொருள். பாதங்கள் வணங்குவோரின் இருள் என்னும் அஜ்ஞானத்தைப் போக்குகின்றன. 'குரு' என்று பிரஹஸ்பதியையும் சொல்லுகிறது.

கவித்வம் கலயந் - பாதங்கள் தங்களைத் துதிக்க விரும்புவோருக்குக் கவியின் தன்மை (கவன சக்தி) யை அளிக்கும். 'கவி' என்று சுக்கிரனுக்குப் பெயர்.

கதௌ மந்த:- பாதங்கள் நடையில் மந்தம் மெதுவானவை, மந்தன் என்று சனிக்குப் பெயர்.

தம: கேது:- பாதங்கள் தமஸ் அஜ்ஞானத்தை , கேது போக்குபவை, தமஸ் என்று ராகுவுக்குப் பெயர். இங்கு கேதுவும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆக நவக்கிரஹங்களையும் தேவியின் பாதங்களில் காணலாம் என்பதால், இவற்றை ஆச்ரயிப்பதில் அவற்றால் வரும் துன்பத்தை விலக்கிக்கொள்ளலாம் என்பது தவிர அவையெல்லாம் சேர்ந்து கொடுக்கக்கூடிய எல்லா பலங்களையும் இந்தத்திருவடிகள் மட்டுமே கொடுக்கவல்லன என்பதும் குறிப்பிடப்பட்டதாகிறது.

नयन्तीं दासत्वं नलिनभवमुख्यानसुलभ–
प्रदानाद् दीनानाम् अमरतरु दौर्भाग्यजननीम्।
जगज्जन्मक्षेमक्षयविधिषु कामाक्षि पदयो:
र्धुरीणामीष्टे क: तव भणितुम् आहोपुरुषिकाम् ।।६०।।

நயந்தீம் தாஸத்வம் நலிநபவ-முக்யாந அஸுலப
ப்ரதாநாத் தீநாநாம் அமர-தரு-தௌர்பாக்ய ஜநநீம்।
ஜகஜ்-ஜன்ம-க்ஷேம-க்ஷய-விதிஷு காமாக்ஷி பதயோ:
துரீணாம் ஈஷ்டே க: தவ பணிதும் ஆஹோபுருஷிகாம்॥60॥

காமாக்ஷி	காமாக்ஷியே
நளிநபவ முக்யாந்	பிரும்மா முதலிய தேவர்களை
தாஸத்வம்	தாஸ்ர்களாயிருக்கும் தன்மையை
நயந்தீம்	அடையும்படி செய்கிறதும்
தீநாநாம்	எளியவர்களுக்கு
அஸுலப	கிடைக்க அரிதானவற்றையும்
ப்ரதாணத்	கொடுப்பதால்
அமர தரு	கல்பக விருக்ஷத்திற்கு

தௌர்பாக்ய	குறைவை
ஜநநீம்	உண்டு பண்ணுகிறதாயும்
ஜகத்	உலகத்தை
ஜந்ம	ஸ்ருஷ்டிப்பது
க்ஷேம	காப்பது
க்ஷய	ஸம்ஹரிப்பது என்கிற
விதிஷு	காரியங்களில்
துரீணும்	முதன்மையாயுமிருக்கிற
தவ	உன்னுடைய
பதயோ:	பாதங்களுடைய
ஆஹோபுருஷிகாம்	பெருமையை
பணிதும்	துதிப்பதற்கு
க:	எவன் தான்
ஈஷ்டே	சக்தியுள்ளவன் (ஒருவருமில்லை)

காமாக்ஷியே பிரம்மா முதலானவர்களை அடக்கி ஆட்கொள்ளுவதும், எளியவர்களுக்குக் கிடைக்கவரிய பொருள்களைக் கொடுப்பதால் தேவதருவாகிய கல்பக விருக்ஷத்திற்கு தாழ்வை உண்டுபண்ணுவதும், உலகங்களின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்னும் கார்யங்களில் ஸாமர்த்யம் வாய்ந்ததுமான உன் பாதங்களின் பெருமையை யார் தான் எடுத்து உரைக்கவல்லவர் ?

தேவியின் பாதங்கள் ப்ரும்மாதி ஸர்வ தேவர்களையும் அடக்கி ஆட்கொண்டவையாயும் விரும்புவோர்க்கு வேண்டியதைக் கொடுப்பதில் கல்பக விருக்ஷத்தை விஞ்சினவையாயும், ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச்

செய்வதற்குவேண்டிய ஸர்வ சக்தியையும் பெற்றவைகளாயும் இருக்கின்றன.

जनोऽयं संतप्तो जननि भवचण्डांशुकिरणै:
अलब्ध्वैकं शीतं कणमपि परज्ञानपयस:।
तमोमार्गे पान्थस्तव झटिति कामाक्षि शिशिरां
पदाम्भोजच्छायां परमशिवजाये मृगयते।।६१।।

ஜநோயம் ஸந்தப்தோ ஜநநி பவ-சண்டாம் ஸுகரணை:
அலப்த்வா ஏகம் ஸீதம் கணம் அபி பரஞான-பயஸ:।
தமோ-மார்க்கே பாந்தஸ்-தவ ஜடிதி காமாக்ஷி ஶிஶிராம்
பதாம்போஜச்சாயம் பரமஶிவ ஜாயே ம்ருகயதே ।।61।।

ஜநநி	*தாயாயும்*
பரமசிவ ஜாயே	*பரமசிவனுக்குப் ப்த்னியுமான*
காமாக்ஷி	*காமாக்ஷியே*
பவ	*ஸம்ஸாரமென்னும்*
சண்டாம்சு	*ஸுர்யனுடைய*
கிரணை:	*கிரணங்களால்*
ஸந்தப்த:	*எரிக்கப்பட்டவனும்*
பரஞான	*உத்தம ஞானமென்னும்*
பயஸ:	*தீர்த்தத்தினுடைய*
ஶீதம்	*குளிர்ந்த*
ஏகம் கணம் அபி	*ஒரு துளியைக்கூட (கால் வைக்க முடியாமல்)*
அலப்த்வா	*அடையாமல்*
தமோ மார்கே	*அஜ்ஞான மார்கத்தில்*
பாந்த:	*ஸஞ்சரிக்கிறவனுமான*

அயம் ஜந:	இந்த மனிதன் (நான்)
ஶிஶிராம்	குளிர்ந்த
தவ	உன்னுடைய
பதாம்போஜச் சாயாம்	தாமரைபோன்ற பாதங்களின் நிழலை
ஜடிதி	வெகு வேகமாக
ம்ருகயதே	தேடுகிறுன்.

தாயே பரமசிவன் பத்னியான காமாக்ஷி ஸம்ஸாரமென்னும் ஸூர்யனின் உஷ்ணமான கிரணங்களால் மிகுந்த தாபத்தையடைந்து, உத்தம ஞானமென்னும் தீர்த்தத்தின் குளிர்ந்த ஒரு திவலையையேனும் அடையாமல் அஞ்ஞானமென்னும் மார்க்கத்தில் திரிகிறவனுன நான் குளிர்ச்சியுள்ள உன் சரண கமலங்களின் நிழலை சீக்கிரத்தில் அடையவேண்டுமென்று தேடுகிறேன்.

உலகமோ கால் வைக்கமுடியாமல் ஸம்ஸாராக்னியால் பழுக்கக் காய்ச்சின இரும்புபோல் எரித்துக்கொண்டு இருக்கிறது; இதன் உஷ்ணத்தையும் அதனுல் ஏற்படும் தாஹத்தையும் தணிப்பதற்கு ஒரு சொட்டு ஜலம் கூட கிடையாது. அவ்வித உலகத்தில் தபிக்கும் ஜீவர்களுள் ஒருவனுன நானும் குளிர்ந்த நிழலைத் தரும் உன் பாத கமலங்களை வெகு தீவிரமாகத் தேடுகிறேன் என்கிறுர்.

பதாம்போஜச்சாயம் - 'அம்போஜம்" என்றுல் (நீரில் தோன்றும்; தாமரை: இங்கு இந்தப் பதத்தை உபயோகித்தால் தாஹத்தைத் தணிக்க தண்ணீரும் உண்டு என்பதை ஸூசிப்பிக்கிறுர். உத்தமஜ்ஞானமே அவ்விதமான ஜலம்.

சண்டாம்ஸுகிரணே : .... தமோ - மார்க்கே - ஸூர்ய கிரணங்கள் தஹித்துக்கொண்டிருக்கும்போதே வழி மாத்திரம் இருள் சூழ்ந்திருக்கிறது.

जयत्यम्ब श्रीमन्नखकिरणचीनांशुकमयं
वितानं बिभ्राणे सुरमुकुटसंघट्टमसृणे।
निजारुण्यक्षौमास्तरणवति कामाक्षि सुलभा
बुधैः संविन्नारी तव चरण माणिक्य भवने।।६२।।

ஜயதி அம்ப ஸ்ரீமந்-நக-கிரண-சீநாம்ஸுக-மயம்
விதாநம் பிப்ராணே ஸுர-முகுட-ஸங்கட்ட-மஸ்ருணே।
நிஜாருண்ய-க்ஷௌமாஸ்தரண-வதி காமாக்ஷி ஸுலபா
புதை: ஸம்விந்-நாரீ தவ சரண-மாணிக்ய - பவநே ।।62।।

அம்ப	*தாயே*
காமாக்ஷி	*காமாக்ஷி*
ஸ்ரீமத்	*அழகான*
நக கிரண	*நக கிரணங்களாகிற*
சீநாம்ஸுகமயம்	*பட்டினலான*
விதாநம்	*மேல் கட்டியை (ஆஸ்மான கிரியை)*
பிப்ராணே	*அடைந்ததாயும்*
ஸுர	*தேவதைகளுடைய*
முகுட	*கிரீடங்கள்*
ஸங்கட்ட	*உரசுவதினல்*
மஸ்ருணே	*வழவழப்பானதும்*
நிஜ	*தன்னுடனுடைய*
ஆருண்ய	*சிவப்பு வர்ணமென்னும்*

க்ஷௌம ஆஸ்தரண வதி	பட்டு விரிப்புயுடையதுமான
தவ சரண	உன்னுடைய பாதங்களாகிற
மாணிக்ய பவநே	ரத்ந கிருஹத்தில்
ஸம்வித்- நாரீ	ஞானமென்னும் ஸ்திரீ
புதை:	ஞானவான்களால்
ஸுலபா	எளிதில் அடையத்தக்கவளாக
ஜயதி	பிரகாசிக்கிருள்

தாயே காமாக்ஷி அழகிய நக கிரணங்களென்னும் மெல்லிய பட்டு விதானத்தையுடையதும், தேவதைகளின் கிரீடங்கள் (அடிக்கடி) படுவதால் வழவழப்புள்ளதும், தன் சிவந்த காந்தியென்னும் பட்டு விரிப்பையுள்ளதும், உன் பாதங்களாகிற ரத்ன பவனத்தில் ஞானமென்னும் ஸ்திரீ, ஞானவான்களால் எளிதில் அடையத்தக்கவளாக விளங்குகிருள்.

ஞானத்தை ஸ்திரீயாகவும், அம்பிகையின் பாதங்களை ஒரு ரத்னபவமாகவும், பாதங்களின் சிவப்பு காந்தியையும் நகங்களின் வெண்மையான கிரணங்களையும் அவ்வீட்டிற்கு விதாநம் பட்டு விரிப்பு முதலிய அலங்காரங்களாகவும் உத்பரேக்ஷிக்கிருர்.

प्रतीमः कामाक्षि स्फुरिततरुणादित्यकिरण–
श्रियो मूलद्रव्यं तव चरणमद्रीन्द्रतनये।
सुरेन्द्राशामापूरयति यदसौ ध्वान्तमखिलं
धुनीते दिग्भागानपि च महसा पाटलयते।।६३।।

ப்ரதீம: காமாக்ஷி ஸ்புரித-தருணாதித்ய -கிரண-
ச்ரியோ மூல-த்ரவ்யம் தவ சரணம் அத்ரீந்த்ர-தநயே।
ஸுரேந்த்ராஸாம் ஆபூரயதி யத் அஸௌ த்வாந்தமகிலம்
துநீதே திக்-பாகாந் அபி ச மஹஸா பாடலயதே ॥63॥

காமாக்ஷி	காமாக்ஷியே
தவ சரணம்	உன் பாதத்தை
ஸ்புரித தருண ஆதித்ய	ஜ்வலிக்கின்ற உதயகாலஸூர்யனுடைய
கிரணஶ்ரிய:	கிரணங்களின் சோபைக்கு
மூலத்ரவ்யம்	மூல காரணமாக
ப்ரதீம:	கருதுகிறோம்
யத்	ஏனென்றால்
அஸௌ	அந்தபாதமானது
ஸுரேந்த்ர	தேவேந்திரனுடைய
ஆஶாம்	மனோரதத்தை
ஆபூரயதி	நிறைவேற்றுகிறது
அகிலம் த்வாந்தம்	எல்லா இருளையும்
துநீதே	போக்குகிறது
அபி ச	மேலும்
மஹஸா	காந்தியினால்
திக்பாகந்	எல்லா திக்குகளையும்
பாடலயதே	சிவப்பாகச் செய்கிறது

பர்வதராஜகுமாரியே காமாக்ஷி உன் பாதத்தை, ஜ்வலித்துக்கொண்டு உதயமாகும் சூர்யனுடைய கிரணங்களின் சோபைக்கு மூலகாரணம் என்று நினைக்கிறேன், ஏனெனில் இது தேவேந்திரனுடைய

ஆசையை (திசையை, அதாவது கிழக்குதிக்கை) பூர்த்தி செய்கிறது; எல்லா இருளேயும் போக்குகிறது; தன் ஒளியிஞல் எல்லா திக்குகளேயும் சிவப்பாகச்செய்கிறது.

ஆசை - திக்கு; மநோரதம். த்வாந்தம் - அஜ்ஞானம் இருட்டு.

ஸூர்யன் விடியற்காலேயில் இந்திரனுடைய (ஆசையான) திக்கான கிழக்கு திக்கில் தோன்றி இருளேயெல்லாம் நீக்கி தன் ஒளியால் எல்லா உலகத்தையும் சிவப்பாகச் செய்கிருன். அம்பிகையின் பாதங்களும் இந்திரனுடைய (ஆசையை) மநோரதத்தையெல்லாம் நிறைவேற்றிவைக்கின்றன. உலகத்தின் அஜ்ஞான இருளை நீக்கி தன் சிவந்த சோபையை உலகில் பரப்புகின்றன. ஆகையால் ஸூர்யனுடைய பெருமைக்கும் காரணம் இந்தப் பாதங்களே.

महाभाष्यव्याख्यापटुशयनमारोपयति वा
स्मरव्यापारेर्ष्यापिशुननिटिलं कारयति वा।
द्विरेफाणामध्यासयति सततं वाऽधिवसतिं
प्रणम्रान्कामाक्ष्याः पदनलिनमाहात्म्यगरिमा।।६४।।

மஹாபாஷ்ய-வ்யாக்யா-படுஶயநம் ஆரோபயதி வா
ஸ்மர-வ்யாபாரேர்ஷ்யா-பிஶுந-நிடிலம் காரயதி வா।
த்விரேபாணாம் அத்யாஸயதி ஸ்ததம் வா அதிவஸதிம்
ப்ரணம்ராந் காமாக்ஷ்யா: பதநலிநமாஹாத்ம்யகரிமா।।64।।

காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
பதநலிந	தாமரை போன்ற பாதங்களின்
மாஹாத்ம்ய	மாஹாத்ம்யத்தின்
கரிமா	பெருமையானது

ப்ரணம்ராந்	நமஸ்கரிப்பவர்களை
மஹாபாஷ்ய	மாஹாபாஷ்யமென்னும்
வ்யாக்யா	வியாக்யானத்தை இயற்றுவதிலே
படு	ஸாமர்த்தியமுள்ள
ஶயநம்	ஆதிசேஷனுகிற படுக்கையில்
ஆரோபயதி	ஏற்றுவிக்கும்
ஸ்மர	மன்மதனுடைய
ஈர்ஷ்யா	வெறுப்பை
பிஶுந	காட்டுகின்ற
நிடிலம்	நெற்றியையுடையவனுக (சிவனுக)
காரயதி வா	செய்விக்கும்
வா	அல்லது
த்விரேபாணும்	வண்டுகளுக்கு
அதிவஸதிம்	வாஸஸ்தானமான தாமரைப்பூவில்
ஸததம்	எப்போதும்
அத்யாஸயதி வா	இருக்கும்படியாகவாவது செய்யும்

காமாக்ஷியின் பாதபத்மங்களுக்குள்ள மாஹாத்மியத்தின் பெருமையானது தன்னை நமஸ்கரிப்பவர்களை 'மஹாபாஷ்யம்' என்கிற வ்யாக்யானத்தை இயற்றவல்ல ஆதிசேஷனென்னும் சயனத்தில் ஏற்றுவிக்கும், அல்லது மன்மதனுடைய செய்கையில் பொறுமையை வெளியிட்ட நெற்றிக்கண்ணை யுடையவனுகச் செய்யும்; அல்லது வண்டுகள் வஸிக்கும் தாமரைப்பூவிலாவது

எப்போதும் இருக்கும்படியாகச் செய்யும்.

தேவியின் பாதங்களை வணங்குகிறவர்களுக்கு ப்ரஹ்மா விஷ்ணு, சிவன் இவர்களுடைய பதவிகளெல்லாம் ஸுலபத்தில் கிடைக்கும் என்கிறார்.

மாஹாத்ம்ய - கரிம - மஹிமையின் பெருமை; அல்லது குருவாயிருக்கும் தன்மை.

மஹாபாஷ்ய - வ்யாக்யா - படு- சயநம்- மஹாபாஷ்யம் போன்ற வ்யாக்யானம் செய்யும் ஸாமர்த்யத்தை அளிக்கும்; விஷ்ணு பதத்தையும் தரும். மஹாபாஷ்யம் என்ற வியாகரண கிரந்தம் பதஞ்ஜலி முனிவரால் செய்யப்பட்டது. அவர் ஆதிசேஷனின் அவதாரம். ம்ஹாபாஷ்யம் செய்த ஆதிசேஷன்மேல் படுக்கும் சக்தியை அதாவது விஷ்ணுத்வத்தை பாதங்கள் அளிக்கக் கூடியவை.

ஸ்மர-வ்யாபார-ஈர்ஷ்யா-பிசுன-நிடிலம்- குரு செய்வது போல இந்திரியங்களை அடக்கி காமத்தை வெறுக்கும்படி செய்யும்; சிவனாகவும் செய்யும், தவத்தைக் கெடுக்கவந்த மன்மதனை கோபத்தால் நெற்றிக்கண்ணால் எரித்த சிவனாகவும் செய்யும்.

தவிரேபாணாம் அதிவஸதிம்- பிரஹ்மாவாகவும் செய்யும், 'ப்ரமர' என்ற பதம் வண்டைச் சொல்லும்; அதில் 'ர' (ரேப) என்ற இரண்டு எழுத்துக்கள் இருப்பதால் 'த்விரேப' என்பதும் வண்டையே சொல்லுகிறது. வண்டுகள் எப்போதும் தாமரையில் வசிப்பதால், அவைகளுக்கு வாஸஸ்தானம் தாமரை; அதில் பக்தர்களை உட்காரவைப்பதாவது ப்ரஹ்மாவாகச் செய்து; நான்முகனுக்கு, கமலம் ஆஸனமானதால் அதைச்

சொல்லிற்று, ஆக மும்மூர்த்திகளின் பதத்தையும் பாதத்தை ஆச்ரயித்தவர்கள் பெறலாம் என்றபடி.

विवेकाम्भ:स्रोत: स्नपनपरिपाटी शिशिरिते
समीभूते शास्त्रस्मरणहलसंकर्षणवशात्।
सतां चेत:क्षेत्रे वपति तव कामाक्षि चरणो
महासंवित्सस्यप्रकरवरबीजानि कृषिक:।।६५।।

விவேகாऽம்பஸ்ரோத: ஸ்நபந-பரிபாட-சிசிரிதே
ஸமீபூதேசாஸ்த்ர-ஸ்மரண-ஹல-ஸங்கர்ஷண-வசாத்।
ஸதாம்சேத:-க்ஷேத்ரே வபதி தவ காமாக்ஷி சரணோ
மஹ-ஸம்வித்-ஸஸ்ய-ப்ரகர-வர-பீஜாநி க்ருஷிக: ।।65।।

காமாக்ஷி	*காமாக்ஷியே*
விவேக	*விவேகமென்னும்*
அம்ப: ஸ்ரோத:	*ஜலப்பிரவாஹத்தை*
ஸ்நபந-பரிபாட	*பாய்ச்சுதல் என்னும் செய்கையினுல்*
சிசிரிதே	*குளிர்ந்ததாயும்*
சாஸ்த்ர- ஸ்மரண	*சாஸ்த்ரத்தை ஸ்மரிப்பது என்னும்*
ஹல	*கலப்பையினுல்*
ஸங்கர்ஷண வசாத்	*உழுவதனுல்*
ஸமீபூதே	*ஒழுங்காகச் செய்யப்பட்டிருக்கிற*
ஸதாம்	*ஸாதுக்களுடைய*
சேத: க்ஷேத்ரே	*மனதென்னும் வயலில்*
தவ சரண:	*உன் பாதமென்னும்*

க்ருஷிக:	குடியானவன்
மஹா- ஸம்வித்	சிறந்த ஞானமென்னும்
ஸஸ்ய-ப்ரகர	பயிர்களுக்குக் காரணமான
வர-பீஜானி	உயர்ந்த விதைகளை
வபதி	விதைக்கிறான்

காமாக்ஷி உன்னுடைய பாதம் என்னும் க்ருஷிகன் விவேகமென்னும் நீரைப்பாய்ச்சி அதனால் குளிர்ந்திருப்பதும், சாஸ்திரங்களை ஸ்மரித்துக் கொண்டிருத்தல் என்னும் கலப்பைகொண்டு உழுது அதனால் ஸமமாகச் செய்யப்பட்டதுமான ஸாதுக்களின் ஹ்ருதயம் என்னும் வயலில் சிறந்த ஞானமென்னும் பயிரை உண்டாக்குகிற (பக்தியென்னும்) உயர்ந்த விதைகளை விதைக்கிறான்.

ஸாதுக்களுடைய மனதே வயல்; அதில் விவேகமென்னும் நீரைப்பாய்ச்சி, ஸாஸ்த்ரஜ்ஞானம் என்னும் கலப்பையைக்கொண்டு உழுது பண்படுத்தினால், அம்பிகையின் சரணாரவிந்தத்தில் பக்தி என்னும் விதை பெற்றதும் உயர்ந்த ஞானமென்னும் பயிர்கள் செழிப்பாக வளரும் என்கிறார்.

दधानो मन्दारस्तबकपरिपाटीं नखरुचा
वहन्दीप्ता [२]शोणाङ्गुलिभिरपि चाम्पेयकलिकाः।
अशोकोल्लासं नः प्रचुरयतु कामाक्षि चरणो
विकासी वासन्तः समय इव ते शर्वदयिते।।६६।।

---

[२] शोणाङ्गुलिपटलचम्पेयकलिकाम् – पा

ததாநோ மந்தார-ஸ்தபத-ப்ரிபாடீம் நக-ருசா
வஹத் தீப்தா:சோணா஽ங்குளிபிரபி-சாம்பேய-கலிகா: ।
அசோகோல்லாஸம் ந: ப்ரசுரயது காமாக்ஷி சரணோ
விகாஸீ வாஸந்த: ஸமய இவ தே சர்வ-தயிதே ।।66।।

ஸர்வ-தயிதே	*பரமசிவன் பத்னியே*
காமாக்ஷி	*காமாக்ஷி*
நக-ருசா	*நககாந்தியால்*
மந்தார-ஸ்தபக	*மந்தாரப் பூங்கொத்துக்களின்*
பரிபாடீம்	*நேர்மையை*
ததாந:	*பெற்றிருப்பதும்*
சோணா	*சிவந்த*
அங்குலிபி: அபி	*விரல்களால்*
தீப்தா	*பிரகாசிக்கிற*
சாம்பேய-கலிகா:	*செண்பகப்பூ மொட்டுகளை*
வஹத்	*வஹிப்பதாயிருக்கிறதும்*
விகாஸி	*மலர்ந்ததாயுமிருக்கிற*
தே சரண:	*உன் பாதம்*
ந:	*எங்களுக்கு*
வாஸந்தீஸமய: இவ	*வஸந்தருதுபோல்*
அஸோக உல்லாஸம்	*அசோகப் புஷ்பத்தை (துக்கமில்லாமையை)*
ப்ரசுரயது	*செய்யட்டும் (விருத்தி செய்யட்டும்)*

பரமசிவன் பத்னியே காமாக்ஷி நக காந்தியால் மந்தாரப் புஷ்பங்களின் அழகை அடைந்ததாயும், சிவந்த விரல்களால்

பிரகாசிக்கின்ற சம்பக மொட்டுக்களை அடைந்ததாயும் இருப்பதனுல், வஸந்தருதுபோல் மலர்ந்துள்ள உன் பாதமானது அசோகத்தின் உல்லாஸத்தையும் எங்களுக்குக் கொடுத்தருளட்டும். (அசோக- அசோக புஷ்பங்கள்; சோகமில்லாமை, உல்லாஸம்-மலர்ச்சி வாழ்வு.

தேவியின் பாதங்களில் வஸந்தருதுவில் இருக்கும் ப்ஷ்பங்களின் தன்மையை யெல்லாம் காணலாம் என்கிறுர். வஸந்த காலத்தில் மந்தாரை, செண்பகம், அசோகம் முதலான புஷ்பங்களெல்லாம் மலர்ந்து அழகாயிருக்கும். பாதங்களிலோ நககாந்தி மந்தாரையின் சோபையைப் பெற்றது; சிவந்த விரல்கள் செண்பகத்தின் அழகைக் காட்டுகின்றன. வஸந்ததருது அசோகத்தை மலரச் செய்வது போல பாதங்கள் அசோகத்தை (துக்கமின்மையை) விருத்தி செய்யட்டும் என்று பிரார்த்திக்கிறுர்.

नखांशुप्राचुर्य प्रसृमर मराळालिमहित:[3]
स्फुरन्मञ्जीरोद्यन्मरकतमह:शैवलयुत:।
भवत्या: कामाक्षि स्फुटचरणपाटल्यकपटो
नद: शोणाभिख्यो नगपतितनूजे विजयते।।६७।।

நகாம்சு-ப்ராசுர்ய- ப்ரஸ்ருமர-மராளாலி- மஹித:
ஸ்புரந்-மஞ்ஜீரோத்யந்-மரகத-மஹ: சைவல-யுத: ।
பவத்யா: காமாக்ஷி ஸ்புட-சரண-பாடல்யக-படோ
நாத: சோணு-பிக்யோ நக-பதி த நூஜே விஜயதே ।।67।।

---

[3] मरालीधवलित: என்றும் பாடம்.

நக-பதி- தநூஜே	பர்வத ராஜகுமாரியே
காமாக்ஷி	காமாக்ஷியே
நக-அம்ஸு	நககாந்திகளின்
ப்ராசுர்ய	மிகுதியென்னும்
ப்ரஸ்ருமர	பறக்கின்ற
மராளாலி	ஹம்ஸகணங்கள்
மஹித:	நிரம்பியதும்
ஸ்புரத்	பிரகாசிக்கிற
மஞ்ஜீர	பீலிகளிலிருந்து
உத்யத்	கிளம்புகிற
மரகத	பச்சைக் கற்களின்
மஹ:	காந்திகளென்கிற
ஸைவல- யுத:	பாசி படர்ந்ததாயும் இருக்கிற
பவத்யா;	உன்னுடைய
ஸ்புட	நிர்மலமான
சரண	பாதங்களின்
பாடல்யகபட:	சிவப்பு வர்ணத்தோடு இருப்பதும்
ஸோண.அபிக்ய:	சோண என்று பெயருள்ளதுமான
நத:	நதியானது
விஜயதே	விளங்குகிறது

பர்வத ராஜகுமாரியே காமாக்ஷியே உன்னுடைய இலங்குகின்ற பாதங்களின் செவ்வொளி என்னும் சோண என்ற பெயர்கொண்ட நதி நககாந்திகளின் வெள்ளமென்னும் பறந்துவரும் ஹம்ஸங்கள் நிரம்பியதும், ஒளி வீசும்

சிலம்புகளிலிருந்து கிளம்புகிற மரகதக் கற்களின் காந்தியென்னும் பாசியோடு கூடியதுமாக விளங்குகிறது.

தேவியின் பாதங்களுக்கும் சோணு என்னும் நதிக்கும் உள்ள ஸாம்யத்தைக் காட்டுகிருர். பாதங்கள் 'சோண' சிவந்தவைகளாயிருக்கின்றன. நதியில் ஹம்ஸங்களும் பாசிகளும் உண்டு; இங்கு நககாந்தியே ஹம்ஸம்; காலணிகளில் இழைக்கப்பெற்ற மரகதக்கற்களே பாசி.

धुनानं पङ्कौघं परमसुलभं कण्टककुलैः
विकासव्यासङ्गं विदधदपराधीनमनिशम्।
नखेन्दुज्योत्स्नाभिर्विशदरुचि कामाक्षि नितराम्
असामान्यं मन्ये सरसिजमिदं ते पदयुगम्।।६८।।

துநாநம் பங்கௌகம் பரம-ஸுலபம் கண்டக-குலை:
விகாஸ-வ்யாஸங்கம் விதத்த்-அபராதீநம் அநிஶம்।
நகேந்து-ஜ்யோத்ஸ்நாபி: விசத - ருசி காமாக்ஷி நிதராம்
அஸாமாந்யம் மந்யே ஸரஸிஜம் இதம் தே பதயுகம் ।।68।।

காமாக்ஷி	*காமாக்ஷியே*
பங்கௌகம்	*பாபசமூகத்தை(சேற்றை)*
துநாநம்	*போக்கடிப்பதும்*
கண்டக-குலை:	*(முட்களால்) துஷ்டர்களின் கூட்டங்களால்*
பரம் அஸுலபம்	*அடையவே முடியாததாயும்*
அநிஶம்	*எப்போதும்*
அபராதீநம்	*வேருென்றுக்கும் பராதீனமல்லாத*
விகாஸ-வ்யாஸங்கம்	*மலர்ச்சியின் ஸம்பந்தத்தை*

விததத்	அடைவதும்
நக இந்து	நகங்களென்னும் சந்திரனுடைய
ஜ்யோத்ஸ்நாபி:	நிலாவினுல்
விஸத-ருசி	தெளிவான காந்தியையுடையதுமான
தே	உன்னுடைய
இதம் பத-யுகம்	இந்த இரண்டு பாதங்களும்
நிதராம்	முற்றிலும்
அஸாமாந்யம்	அபூர்வமான (வேறுபட்டதான)
ஸரஸிஜம்	தாமரை என்று
மந்யே	நினைக்கிறேன்

காமாக்ஷியே பங்கத்தைப் போக்குவதும், முட்களுக்கு முற்றிலும் ஸுலபமில்லாததும், வேறொன்றுக்குப் பராதீனமில்லததும், இரவு பகலென்னும் பேதமின்றி எப்போதும் மலர்ச்சியின் ஸம்பந்தத்தை அடைவதும், நகங்களென்னும் சந்திரனுடைய நிலாவினுல் காந்தியைப் பெறுவதுமான உன்னுடைய இரண்டு பாதங்களும் ஒரு விலக்ஷணமான தாமரையென்றே கருதுகிறேன்.

பாதங்களை தாமரைக்கு சமானமாகச் சொல்லுவது வழக்கம். ஆனுல் தேவியின் பதங்களில் தமரை புஷ்பங்களுக்கு இராத தனமைகளே இருக்கிறபடியால் அவற்றை ஒரு தனியான(முற்றிலும் புதிய விலக்ஷணமாய் மாறுபட்ட) தமரையாகச் சொல்லவேண்டும். தாமரை சேற்றில் முளைக்கும்; பாதங்கள் சேற்றை (பாபத்தை)ப் போக்குகின்றன. தாமரை முட்களோடு இருக்கும்; திருவடிகள் முட்கள் போன்ற துஷ்டர்களால் சமீபிக்கவும் முடியாதவை. தமரை புஷ்பம் சந்திரஞெளியைக் கண்டு

வாடும்; இவையோ நகமென்னும் சந்திரனொளியில் ஒளிபெற்றுத் திகழ்கின்றன. கமலம் ஜலத்தை அடுத்தே மலரும்; தேவியின் பதங்களோ ஒன்றையும் அடுக்காது. ஸ்பாவமாய் உள்ள மலர்ச்சியையுடையது. இக்குணங்களால் பாதங்கள் உலகிலிருக்கும் தாமரையைக் காட்டிலும் வேறுபட்ட ஒரு விலக்ஷணமான தாமரை என்று நினைக்கிறேன் என்கிறார்.

करीन्द्राय द्रुह्यत्यलसगतिलीलासु विमलै:
पयोजैर्मात्सर्यम् प्रकटयति कामं कलयते।
पदाम्भोजद्वन्द्वं तव तदपि कामाक्षि हृदयं
मुनीनां शान्तानां कथमनिशमस्मै स्पृहयते।।६९।।

கரீந்த்ராய த்ருஹ்யதி அலஸ-கதி-லீலாஸு விமலை:
பயோஜை: மாத்ஸர்யம் ப்ரகடயதி காமம் கலயதே ।
ப்தாம்போஜ-த்வந்த்வம் தவ ததபி காமாக்ஷி ஹ்ருதயம்
முநீநாம் ஶாந்தாநாம் கதம் அநிசம் அஸ்மை
ஸ்ப்ருஹயதே।।69।।

காமாக்ஷி	காமாக்ஷியே
தவ	உன்னுடைய
பதாம்போஜ த்வந்தம்	தாமரைப்போன்ற இரண்டு பாதங்களும்
அலஸ கதி-லீலாஸு	மெள்ள நடப்பது என்கிற லீலைகளில்
கரீந்த்ராய	சிறந்த யானையையும்
த்ருஹ்யதி	வெல்லுகிறது (துரோஹம் செய்கிறது)
விமலை;	மாசற்ற

பயோஜை:	தாமரைகளோடு
மாத்ஸர்யம்	அஸூயையை
ப்ரகடயதி	வெளியிடுகிறது
காமம்	ஆசையை
கலயதே	உண்டுபண்ணுகிறது ;
ததபி	அப்படியிருந்தபோதிலும்
சாந்தாநாம்	சாந்தியைப்பெற்ற
முநீநாம்	ரிஷிகளுடைய
ஹ்ருதயம்	மனது
கதம்	எப்படி
அநிசம்	எப்போதும்
அஸ்மை	இதை
ஸப்ருஹயதே	விரும்புகிறது

காமாக்ஷி உன்னுடைய சரணங்கள் இரண்டும் மெதுவாக நடப்பது என்கிற லீலையில் சிறந்த யானையையும் பகைக்கின்றன (வெல்லுகின்றன). மாசற்ற தாமரைகளோடு மாத்ஸர்யத்தை அடைகின்றன. ஆசையை உண்டுபண்ணுகின்றன. அப்படியிருந்த போதும் சாந்தரான ரிஷிகளின் ஹ்ருதயம் எப்போதும் ஏன் இவற்றை விரும்புகிறது ?

துரோகம், அஸூயை, காமம் முதலான துர்குணங்களையுடைய பாதங்களை சாந்தி குடிகொண்ட மனத்திரான் ரிஷிகள் விரும்புகிருர்கள். அதெப்படிக்கூடும் ? என்று கேட்கிருர்.

निरस्ता शोणिम्ना चरणकिरणानां तव शिवे
समिन्धाना संध्यारुचिरचलराजन्यतनये।

असामर्थ्यादेनं परिभवितुमेतत्समरुचां
[4]सरोजानां जाने मुकुलयति शोभां प्रतिदिनम्।।७०।।

நிரஸ்தா சோணிம்நா சரண-கிரணாநாம் தவ சிவே
ஸமிந்தா நா ஸந்த்யா-ருசி: அசல-ராஜந்ய -தநயே।
அஸாமர்த்யாத் ஏநம் பரிபவிதும் ஏதத்- ஸம-ருசாம்
ஸரோஜாநாம் ஜாநே முகுலயதி சோபாம் ப்ரதிதிநம்।।70।।

அசல- ராஜந்ய- தநயே	பர்வதராஜகுமரியே
சிவே	மங்களஸ்வரூபிணி
தவ	உன்னுடைய
சரண.கிரணாநாம்	பாத காந்திகளுடைய
சோணிம்நா	சிவப்பு வர்ணத்தால்
நீர ஸதா	அவமானம் செய்யப்பட்டதும்
ஸமிந்தநா	அதனல் உண்டான கோபத்தினல் விருத்தியடைந்ததுமான
ஸந்த்யா ருசி:	ஸந்தியாகாலத்தின் சோபை
ஏநம்	இதை
பரிபவிதும்	அவமானப்படுத்துவதற்க்கு
அஸாமர்த்யாத்	ஸாமர்த்தியமில்லாமையால்
ஏதத்- ஸம	இதற்கு ஸமானமான
ருசாம்	காந்தியையுடைய

---

[4] सरोजानां जाने मुकुलयति शोभां प्रतिदिनम्।- என்றும்,

मुहु:सायं सायं मुकुलयति कामाक्षि कमलम् என்றும் பாடம்.

ஸரோஜாநாம்	தாமரைப் புஷ்பங்களின்
ஶோபாம்	சோபையை
ப்ரதிதிநம்	ஒவ்வொருநாளும்
முகுலயதி	மூடிக்கொள்ளும்படி செய்கிறது
ஜாநே	(என்று) நான் அறிகிறேன்

மங்களஸ்வரூபிணியான பர்வதராஜ தனயே உன் பாதங்களின் சிவந்த காந்தியால் அவமானப் படுத்தப்பட்டு கோபத்துடன் விருத்தியடைகிற ஸந்தியா காலத்தின் சோபை இதை அவ்மானப்படுத்த ஸாமர்த்தியமில்லாமல், இதற்கு ஸமமான காந்தியுள்ள தாமரைப் புஷ்பங்களின் சோபையை ஒவ்வொரு நாளும் மூடிக்கொள்ளும்படி செய்கிறது.

ஸந்தியாகாலம் வந்ததும் தாமரைகள் மூடிக்கொள்ளுவது ஏன்? என்பதற்கு ஒரு ஹேதுவைக் காட்டுகிறார். அம்பிகையின் சிவந்த பாதங்கள் சிவப்பு வர்ணத்தையுடைய ஸந்தியா காலத்தைக்காட்டிலும் அழகாயிருக்கின்றன. ஆதலால் அழகில் தோற்ற ஸந்தியா சோபைகள் பாதங்களுக்கு ஒரு கெடுதியையும் விளைவிக்க சக்தியற்றவைகளாய் இருக்கின்றன. ஆயினும் தன் கோபத்தைத் தீர்த்துக்கொள்ளுவதற்காக பாதங்களைப் போன்ற பொருள்களையாவது ஜயிப்போம் என்று பாதங்கள்போல் சிவந்து அழகாயிருக்கும் தாமரைப் புஷ்பங்களை மூடிக்கொள்ளும்படி செய்கிறது என்கிறார்.

उपादिक्षद्दाक्ष्यं तव चरणनामा गुरुरसौ
मरलानां शङ्के मसृणगतिलालित्यसरणौ।
अतस्ते निस्तन्द्रं नियतममुना सख्यपदवीं
प्रपन्नं पाथोजं प्रति दधति कामाक्षि कुतुकम्।।७१।।

உபாதிக்ஷத் தாக்ஷ்யம் தவ சரண-நாமா குரு: அஸௌ
மராலாநாம் சங்கே மஸ்ருண-கதி-லாலித்ய-ஸரணௌ।
அதஸ்தே நிஸ்தந்த்ரம் நியதம் அமுநா ஸக்ய-பதவீம்
ப்ரபந்தம் பாதோஜம் ப்ரதி தததி காமாக்ஷி குதுகம்॥71॥

காமாக்ஷி	*காமாக்ஷியே*
தவ	*உன்னுடைய*
சரண- நாமா	*பாதமென்று பெயருள்ள*
அஸௌ குரு:	*இந்த குரு*
மராளா நாம்	*ஹம்ஸங்களுக்கு*
மஸ்ருண-கதி	*அழகிய நடையின்*
லாலித்ய ஸரணௌ	*மனோஹரமான வழியில்*
தாக்ஷ்யம்	*ஸாமர்த்தியத்தை*
உபாதிக்ஷத்	*உபதேசித்திருக்கிறார் என்று*
சங்கே	*(நான்) நினைக்கிறேன்*
அத:	*ஆகையினாலேதான்*
தே	*அந்த ஹம்ஸங்கள்*
அமுநா	*இந்த பாதத்தோடு*
ஸக்ய-பதவீம்	*ஸ்நேகத்தன்மையை (ஒற்றுமையை)*
ப்ரபந்நம்	*அடைந்திருக்கும்*
பாதோஜம் ப்ரிதி	*தாமரை பூவிடம்*
நிஸ்தந்த்ரம்	*சோம்பலின்றி*
நியதம்	*எப்போதும்*
குதுகம்	*ஆவலை*
தததி	*காட்டுகின்றன*

காமாக்ஷியே உன்னுடைய பாதமென்று பெயருள்ள இந்த குரு ஹம்ஸங்களுக்கு அழகிய நடையின் மனோஹரமான வழியில் ஸாமர்த்தியத்தை உபதேசிக்கிறார் என்று எண்ணுகிறேன். ஆகையால்தான் அந்த ஹம்ஸங்கள் இந்தப்பாசத்தோடு ஒற்றுமை அடைந்திருக்கும் தாமரைப் பூவிடம் சோம்பலின்றி எப்போதும் ஆவலுடன் இருக்கின்றன.

அம்பிகையின் நடையழகைப் பார்த்தால் அழகிய நடை உள்ளவைகளாகச் சொல்லப்படும் ஹம்ஸங்களும் அவளிடமிருந்துதான் கற்றுக்கொண்டிருக்கவெண்டும் என்று தோன்றுகிறது. தங்களுக்குக் குருவான பாதத்தோடு ஸமமாயிருக்கும் தாமரைப் புஷ்பத்தைக் கண்டதும் அந்த குருபக்தியாலேயே ஹம்ஸம் அதனிடம் ஸந்தோஷத்தைக் காட்டுகிறது.

दधानैः संसर्गम् प्रकृतिमलिनैः षट्पदकुलैः
द्विजाधीशश्लाघाविधिषु विदधद्भिर्मुकुलताम्।
रजोमिश्रैः पद्मैर्नियतमपि कामाक्षि पदयोः
विरोधस्ते युक्तो विषमशरवैरिप्रियतमे।।७२।।

ததானை: ஸம்ஸர்க்கம் ப்ரக்ருதி-மலினை: ஷட்- பத-குலை:
த்விஜா-தீசச்லாகா-விதிஷு விதத்பி: முகுலதாம்।
ரஜோ-மிச்ரை: பத்மை: நியதம் அபி காமாக்ஷி பதயோ:
விரோத: தே யுக்தோ விஷம-சர-வைரி-ப்ரிய-தமே।।72।।

விஷம-சர	மன்மதனுக்கு
வைரி	விரோதியான சிவனுடைய
ப்ரியதமே	பத்னியே

காமாக்ஷி	காமாக்ஷியே
ப்ரக்ருதி	ஸ்வபாவத்திலேயே
மலிநை	அழுக்குள்ளவைகளான
ஷட் பதகுலை:	வண்டுக்கூட்டங்களோடு
ஸம்ஸர்க்கம்	சேர்க்கையை
ததநை:	பெற்றிருப்பவைகளும்
த்விஜாதீச	சந்திரனை
ச்லாகா- விதிபூ	சிலாகிக்கும் விஷயத்தில்
முகுலதாம்	ஸந்தோஷமின்மையை
விததத்பி:	காட்டுகிறவைகளும்
ரஜோ-மிச்ரை:	ரஜஸ்ஸோடுகூடியவைகளுமான
பத்மை	தாமரைப்புஷ்பங்களோடு
நியதம்	எப்போதும்
தே பதயோ:	உன் பாதங்களுக்கு
விரோத:அபி	விரோதம் இருப்பதும்
யுக்தம்	நியாயம்தான்

விஷமமான பாணங்களையுடைய மன்மதனுக்கு விரோதியான பரமசிவனின் பத்னியே காமாக்ஷி ஸவபாவத்திலேயே அழுக்குள்ளவைகளான வண்டு களோடு சேர்க்கையைப் பெற்றிருப்பவைகளும், த்விஜாதீசர்களுடைய போற்றத்தகுந்த கார்யங்களில் அத்ருப்தியைக் காட்டுகிறவைகளும், ரஜஸ்ஸோடு கூடியவையுமான தாமரைப் புஷ்பங்களோடு எப்போதும் உன் பாதங்களுக்கு விரோதம் இருப்பது நியாயமே.

விஷம- சர- வைரி- ப்ரியதமே - விஷமமாய் அதாவது ஐந்து பாணங்களையுடையவன் பஞ்சபாணன்

மன்மதன். அவனை எரித்த சிவபெருமானின் பிரிய தமையான காமாக்ஷியே

ப்ரக்ருதி-மலிநை:- ஸ்வபாவத்தாலே வண்டுகள் (மலின-) கறுப்பயிருக்கின்றன. மலின என்றால் அழுக்குள்ள , தோஷமுள்ள என்னும் பொருள்.

த்விஜாதீச -ச்லாகா- விதிஷு முகுலதாம் விதத்தப்பி:- ச்ந்திரன் உதித்ததும் தாமரைகள் மகிழ்ந்து மலர்வதை நிறுத்தி வெறுப்புள்ளவை போல மூடிக்கொள்ளுகின்றன. த்விஜாதீச-ச்லாகா விதிஷு- பிராமணர்களுடை நல்ல கார்யங்களைக்கண்டு உகக்க வேண்டியதற்கு மாறாக தாமரை வெறுப்படைகிறது என்றும் ஒரு பொருள். பாதமோ, நககாந்தியாகிற சந்திரிகையில் நல்ல மலர்ச்சியைப் பெற்றிருக்கிறது.

ரஜோமிச்ரை:- ரஜோகுணத்தோடு கூடியவை, மகரந்தப் பொடியோடு கூடியவை என்றும் பொருள்.

தாமரைப் புஷ்பம் கறுத்த வண்டுகளால் சூழப்பட்டும், சந்திரனைக்கண்டு மூடிக்கொண்டும் , மகரந்தப்பொடி நிறைந்ததுமாயிருக்கும், சப்தசித்ரத் தினால் இங்கு தாமரைப் புஷ்பம் தோஷமுள்ளவர் களோடு கூடியும் சந்திரனைக் கண்டதும் வாடியும் (ரஜஸ்) மகரந்தப் பொடியால் (ரஜோகுணத்தினால்) நிரம்பியதுமாயிருக்கிறது என்று சொல்லி, எப்போதும் சுத்தமாயும் நககாந்தியாகிற சந்திரிகையிருக்கும்போது நன்கு மலர்ந்தும் ஸத்வகுணமே நிரம்பியதுமான தேவியின் பாதங்கள் அதைத் துவேஷிப்பது யுகதமே என்கிறார்.

कवित्वश्रीमिश्रीकरणनिपुणौ रक्षणचणौ
विपन्नानां श्रीमन्नलिनमसृणौ शोणकिरणौ।
मुनीन्द्राणामन्तःकरणशरणौ मन्दसरणौ
मनोज्ञौ कामाक्ष्या दुरितहरणौ नौमि चरणौ।।७३।।

கவித்வ-ஸ்ரீ-மிச்ரீ-கரண-நிபுணௌ ரக்ஷண-சணௌ
விபந்நாநாம்ஸ்ரீமந்-நலிந-மஸ்ருணௌசோண கிரணௌ।
முநீந்த்ராணாம் அந்த: கரண-சரணௌ மந்த-ஸரணௌ
மநோஜ்ஞௌ காமாக்ஷ்யா: துரித-ஹரணௌ நௌமி
சரணௌ ।।73।।

கவித்வ- ஸ்ரீ	*கவிதையென்னும் லக்ஷ்மியை*
மிச்ரீ - கரண	*அதிகப்படுத்துவதில்*
நிபுணௌ	*ஸாமர்த்தியமுள்ளவைகளும்*
விபந்நாநாம்	*கஷ்டப்படுபவர்களை*
ரக்ஷண சணௌ	*ரக்ஷிக்கும் ஸாமர்த்தியமுள்ளவைகளும்*
ஸ்ரீமந்-நளிந	*(மலர்ந்து) அழகிய தாமரைபோன்ற*
மஸ்ருணௌ	*சோபையையுடையவைகளும்*
சோண கிரணௌ	*சிவந்தகிரணங்களையுடையவைகளும்*
முநீநாம்	*முனிவர்களுடைய*
அந்தக்கரண	*மனத்தை*
சரணௌ	*இருப்பிடமாகயுடையவைகளும்*
மந்த	*மெதுவான*
ஸரணௌ	*நடையுடையவைகளும்*
மநோஜ்ஞௌ	*அழகுள்ளவைகளும்*
துரித	*பாபங்களை*
ஹரணௌ	*போக்கடிப்பவைகளுமான*
காமாக்ஷ்யா:	*காமாக்ஷியினுடைய*

சரணௌ	பாதங்களை
நௌமி	நமஸ்கரிக்கிறேன்

கவிதையென்னும் லக்ஷ்மியை விருத்தி செய்வதில் ஸாமர்த்தியமுள்ளவைகளும், கஷ்டப்படுகிறவர்களை ரக்ஷிக்கும் வல்லமையுள்ளவைகளும், அழகிய தாமரைபோன்ற சோபையையுடையவைகளும், சிவந்த கிரணங்களையுடையவைகளும், முனிவர்களுடைய மனதை வாஸஸ்தானமக உடையவைகளும், மெதுவான நடையுள்ளவைகளும், மனோஹரமானவைகளும், பாபங்களைப் போக்கடிப்பவைகளுமான காமாக்ஷியினுடைய பாதங்களைப் போக்கடிப்பவைகளுமான காமாக்ஷியினுடைய பாதங்களை வணங்குகிறேன்.

प्ररस्मात्सर्वस्मादपि च परयोर्मुक्तिकरयो:
नखश्रीभि: ज्योत्स्नाकलिततुलयो: ताम्रतलयो:।
निलीये कामाक्ष्या निगमनुतयोर्नाकिनतयो:
निरस्तप्रोन्मीलन्नलिनमदयोरेव पदयो:।।७४।।

பரஸ்மாத் ஸர்வஸ்மாத் அபிச பரயோ: முக்தி-கரயோ:
நக-ஸ்ரீபி: ஜ்யோத்ஸநா-கலித-துலயோ: தாம்ர தலயோ: ।
நிலீயே காமாக்ஷ்யா நிகம-நுதயோ: நாகி-நதயோ:
நிரஸ்த - ப்ரோந்-மீலந்-நலிந-மதயோ: ஏவ பதயோ:।।74।।

பரஸ்மாத்	சிறந்தவைகளான
ஸர்வஸ்மாத் அபி	எல்லாவற்றைக்காட்டிலும்
பரயோ:	உயர்ந்தவைகளாயும்
முக்தி- கரயோ:	மோக்ஷத்தைக்கொடுக்கிறவைகளாயும்
நக-ஸ்ரீபி:	நககாந்திகளால்

ஜ்யோத்ஸ்நா-குலத	நிலாவுக்கு
துலயோ:	ஒத்தவைகளாயும்
தாம்ர-தலயோ:	சிவந்த பாகங்களையுடையதாயும்
நிகம	வேதங்களாலே
நுதயோ:	துதிக்கப்பட்டவைகளாயும்
நிரஸ்த	அவமதிக்கப்பட்ட
ப்ரோந்மீலத்	மலருகிற
நலிந	தாமரைப் புஷ்பங்களின்
மதயோ:	கர்வத்தையுடையவைகளுமான
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
பதயோ: ஏவ	பதங்களிலேயே
நிலீயே	மறைகிறேன்.

சிறந்த எல்லாப் பொருள்களைக்காட்டிலும் உயர்ந்தவைகளும், முக்தியைக் கொடுக்கின்றவைகளும், நககாந்திகளால் நிலாவுக்கு ஒப்பானவைகளும், சிவந்த அடிப்புறத்தையுடையவைகளும், வேதங்களால் துதிக்கப்படுகின்றவைகளும், தேவதைகளால் வணங்கப் படுகின்றவைகளும், மலர்ந்த தாமரைகளின் கர்வத்தையும் அடக்கவல்லவைகளுமான காமாக்ஷியின் பாதங்களிலேயே லயித்துப்போகிறேன்.

स्वभावदन्योन्यं किसलयमपीदं तव पदं
म्रदिम्ना शोणिना भगवति दधाते सदृशताम्।
वने पूर्वस्येच्छा सततम् अवने किं तु जगतां
परस्येत्थं भेदः स्फुरति हृदि कामाक्षि सुधियाम्।।७५।।

ஸ்வபாவாத் அந்யோந்யம் கிஸலயம் அபி இதம் தவ பதம்
ம்ரதிம்நா சோணிம்நா பகவதி ததாதே ஸத்ருசதாம்।
வநே பூர்வஸ்யேச்சா ஸததம் அவநே கிந்து ஜகதாம்
பரஸ்யேத்தம் பேத: ஸ்புரதி ஹ்ருதி காமாக்ஷி
ஸுதியாம்॥75॥

பகவதி	ஸகல குணங்களும் பொருந்திய
காமாக்ஷி	காமாக்ஷியே
ஸ்வபாவாத்	இயற்கையிலேயே
ம்ரதிம்நா	மிருதுவாயிருப்பதாலும்
சோணிம்நா	சிவப்பினாலும்
கிஸலயம்	தளிரும்
இதம் தவ பதம் அபி	இந்த உன் பாதமும்
அந்யோன்யம்	ஒன்றுக்கொன்று
ஸத்ருசதாம்	ஸமானமான தன்மையை
ததாநே	அடைந்திருக்கின்றன
கிந்து	ஆனால்
பூர்வஸ்ய	முன்சொன்ன தளிருக்கு
வநேஇச்சா	காட்டில் ஆசை
பரஸ்ய	பின் சொன்ன உன் பாதத்திற்கு
ஸததம்	எப்போதும்
ஜகதாம்	உலகங்களுடைய
அவநே	ரக்ஷிப்பதிலேயே (ஆசை)
இத்தம் பேத:	இம்மாதிரியாக இருக்கும் வித்தியாஸம்
ஸுதியாம்	புத்திமான்களுடைய

ஹ்ருதி	ஹ்ருதயத்தில்
ஸ்புரதி	தோன்றுகிறது

ஸகல குணங்களும் பொருந்திய காமாக்ஷியே ஸ்வபாவத்திலேயே ஏற்பட்டிருக்கும் மென்மை சிவப்பு இவற்றால் தளிரும் உன் பாதமும் பரஸ்பரம் ஒற்றுமையுள்ளவைகளாயிருக்கின்றன. ஆனால் முந்தியதற்கு (தளிருக்கு) வனத்தில் (காட்டில்) ஆசை: பிந்தியதுக்கு (பாதத்திற்கு) அவனத்தில் (ரக்ஷணத்தில்) இந்த பேதம் ஞானிகளுடைய மனதில் ஸ்புரிக்கின்றது.

தேவியின் பாதங்களுக்கும் துளிர்களுக்கும் மிருதுவாயிருப்பது, சிவப்பு முதலான சில விஷயங்களில் ஒற்றுமையிருந்தாலும் ஒரு விதத்தில் பேதம் இருக்கிறது; அதை புத்திமான்கள் அறிவார்கள். அப்பேதமாவது- துளிருக்குவனத்தில் (காட்டில்) ஆசை; அதாவது காடு முதலான மரங்களுள்ள இடங்களிலேயே இருக்கும். உன் பாதங்களுக்கோ வெனில் உலகத்தில் அவனத்தில் (ரக்ஷையில்) ஆசை 'அவனம்' என்பதற்கு 'வனமில்லாதது' என்றும் 'ரக்ஷணம்' என்றும் பொருள்.

कथं वाचालोऽपि प्रकटमणिमञ्जीरनिनदैः
सदैवानन्दार्द्रान्विरचयति वाचंयमजनान्।
प्रकृत्या ते शोणच्छविरपि च कामाक्षि चरणौ
मनीषानैर्मल्यं कथमिव नृणां मांसलयते ।।७६।।

கதம் வாசாலோऽபி ப்ரகட-மணி-மஞ்ஜீர - நிநதை :
ஸ்ஸதைவாऽநந்தார்த்ராந் விரசயதி வாசம்யம-ஜ்நாந்।
ப்ரக்ருதயா தே சோணச்-சவி: அபி ச காமாக்ஷி சரணோ
மநீஷா - நைர்மல்யம் கதம் இவ ந்ருணாம்
மாம்ஸலயதே॥76॥

காமாக்ஷி	காமாக்ஷியே
தே சரண:	உன்பாதம்
ப்ரகட மணி	அழகியரத்தினங்களிழைத்த
மஞ்ஜீர	காலணிகளுடைய
நிநதை:	சப்தங்களால்
வாசால: அபி	அதிகப்பேச்சுள்ளதாயிருந்தபோதிலும்
வாசம்யம	வாக்கை அடக்குகிற
ஜநாந்	மனிதர்களான ரிஷிகளை
ஸதைவ	எப்போதும்
ஆநந்த	ஆநந்தத்திஞல்
ஆர்த்ராந்	நனைந்தவர்களாக
கதம்	எப்படி
விரசயதி	செய்கிறது?
அபி ச	மேலும்
ப்ரக்ருத்யா	ஸ்பாவத்தாலேயே
சோணச்சவி: அபி	சிவப்பான காந்தியையுடையதாயிருந்தபோதிலும்
ந்ருணாம்	மனிதர்களுடைய
மநீஷா- நைர்மல்யம	புத்தியின் தெளிவை (வெண்மையாயிருத்தலை)
கதம் இவ	எப்படித்தான்
மாம்ஸலயதே	விருத்திபண்ணுகிறது?

காமாக்ஷியே உன் பாதம் அழகிய ரத்னங்களிழைத்தகால் சிலம்புகளின் ஒலியினுல் அதிகப் பேச்சுள்ளதாயிருக்கிறது; அவ்விதமிருந்தும் மௌனத்தையே விரும்பும் பெரியோர்களை எப்படி ஆநந்தத்தில் மூழ்கினவர்களாகச் செய்கிறது மேலும் ஸ்வபாவத்திலேயே சிவந்த காந்தியுள்ளதாயிருந்தும் மனிதர்களின் புத்திக்கு வெண்மையை எப்படித்தான் விருத்தி செய்கிறது?

மௌனமாய் தியானத்தில் இருக்கும் முனிவர்கள் நிச்சப்தமான ஏகாந்தத்தை விரும்புவார்களேயொழிய சப்தத்தை விரும்பமாட்டார்கள்; அப்படியிருந்தும் ரத்தனங்களிழைத்த தேவியின் காலணிகளின் சப்தம் அவர்களுக்கு மகிழ்ச்சியையே அளிக்கிறது. சிவப்புவர்ணம் வஸ்துக்களை சிவப்பாக்குமேயொழிய வெளுப்பாக்காது; பாதத்தின் சிவப்பு வர்ணமோ புத்திக்கு வெண்மையை (சுத்தியை அதாவது தெளிவை) அளிக்கிறது. இது இரண்டும் எப்படி நடக்கக்கூடும் என்கிறுர்.

चलत्तृष्णावीचीपरिचलनपर्याकुलतया
मुहुर्भ्रान्त्वा तान्तः परमशिववामाक्षि परवान्।
तितीर्षुः कामाक्षि प्रचुरतरकर्माम्बुधिममुं
कदाहं लप्स्ये ते चरणमणिसेतुं गिरिसुते।।७७।।

சலத்-த்ருஷ்ணு - வீசீ-பரிசலந -பர்யாகுல - தயா
முஹு: பிராந்த்வா தாந்த: பரமசிவ-வாமாக்ஷி பரவாந்।
திதீர்ஷு: காமாக்ஷி ப்ரசுர-தர-கர்மா-ம்புதிம் அமும்
கதா அஹம் லப்ஸ்யே தே ச்ரண-மணி-ஸேதும்
கிரி-ஸுதே।।77।।

கிரிஸுதே	பர்வதகுமாரியே
பரமசிவ	பரமசிவனுடைய
வாமாக்ஷி	பத்தினியே
காமாக்ஷி	காமாக்ஷியே
சலத்	வீசுகின்ற
த்ருஷ்ணா	ஆசை என்கிற
வீசீ	அலைகளினுடைய
பரிசலன	மோதுவதால் (உண்டான)
பர்யாகுலதயா	கலக்கத்தால்
முஹு:	அடிக்கடி
ப்ராந்த்வா	அலைந்து
தாந்த:	களைப்படைந்தவனும்
பரவாந்	பராதீன்மாயிருப்பவனும்
அமும்	இந்த
ப்ரசுர-தர	மிகவும் விசாலமானது
கர்மாம்புதிம்	கர்மமென்னும் ஸமுத்திரத்தை
திதீர்ஷு:	கடக்க ஆசையுள்ளவனுமான
அஹம்	நான்
சரண	(உன்) பாதமாகிற
மணி	கல்லிழைத்து அழகான
ஸேதும்	அணையை
கதா	எப்போது
லப்ஸ்யே	அடையப்போகிறேனோ?

பார்வதீயே பரமசிவன் பத்னியே காமாக்ஷி மேன் மேல் எழுகின்ற ஆசை என்னும் அலைகள்; மோதுவதால் எப்போதும் அலைந்து களைப்படைந்தவனும், ஸ்வாதீனமில்லாதவனும் மிகப்பெரியதான இந்த கர்மம் என்னும் கடலைக் கடக்க ஆசையுள்ளவனுமான நான் உன்

பாதமாகிற ரத்னஸேதுவை எப்போது அடைவேனே ?

கர்மம் என்பது பெரிய ஸமுத்ரம்; மேல் மேல் எழும்புகிற ஆசைகளே அதிலுள்ள அலைகள்; இவ்வலைகளால் மோதுண்டு அலைந்து சக்தியற்றுக் களைப்படையும் எனக்கு உன் பாதங்கள் இச்சமுத்திரத்தைத் தாண்ட ஒரு கல்லிழைத்த ஸேதுபோல் இருக்கின்றன.

विशुष्यन्त्यां प्रज्ञासरिति दुरितग्रीष्मसमय
प्रभावेण क्षीणे सति मम मन: केकिनि शुचा।
त्वदीय: कामाक्षि स्फुरितचरणाम्भोदमहिमा
नभोमासाटोपं नगपतिसुते किं न कुरुते।।७८।।

விசுஷ்யந்த்யாம் ப்ரஜ்ஞா - ஸரிதி துரித-க்ரீஷ்ம - ஸமய-
ப்ரபாவேண க்ஷீணே ஸதி மம மந:- கேகி நி சுசா।
த்வதீய: காமாக்ஷி ஸ்புரித-சரணும்போத-மஹிமா
நபோ-மாஸாடோபம் நக-பதி-ஸுதே கிம் ந
குருதே।।78।।

நகபதிஸுதே	*பர்வதராஜகுமாரியே*
காமாக்ஷி	*காமாக்ஷி*
துரித	*பாபமாகிற*
க்ரீஷ்ம-ஸமய	*கோடைகாலத்தின்*
ப்ரபாவேண	*ப்ரபாவத்தினுல்*
ப்ரஜ்ஞா- ஸரிதி	*ஞானம் என்னும் ஆறு*
விசுஷ்யந்த்யாம்	*காய்ந்துபோனபோதும்*
மம	*என்னுடைய*
மன:-கேகிரி	*மனது என்னும் மயில்*
சுசா	*துக்கத்தினுல் (உஷ்ணத்தினுல்)*

க்ஷீணே ஸதி	வாடியிருக்கும் போதும்
த்வதீய	உன்னுடைய
ஸ்புரித	ஒளிவீசுகின்ற
சரண	பாதமென்கிற
அம்போத	மேகத்தின்
மஹிமா	மஹிமையானது
நபோ- மாஸ	ஆவாணிமாதத்தின்
ஆடோபம்	ஆடம்பரத்தை
கிம்ந குருதே	ஏன் செய்யவில்லை

பர்வதராஜகுமாரியே காமாக்ஷி பாபமாகிற கோடைகாலத்தின் பிரபாவத்திஞல் ஞானம் என்னும் ஆறு வறண்டு என் மனமென்னும் மயிலும் துயரத்தால் வாட்டமுற்றிருக்கும் போது, உன் அழகிய பாதமென்கிற மேகத்தின் மஹிமை ஆவணி மாதத்தில் ஆடம்பரத்தை ஏன் செய்கிறதில்லை ?

கோடைகாலத்தில் ஆறுகளும் வறண்டு, மயில்களும் ஸந்தோஷமற்றிருக்கும்; மழைகாலம் வந்தவாறே ஆறுகள் நிறம்பிப் பெருக்கெடுத்தும் மேகங்களைக்கண்டு மயில்கள் தோகையை விரித்தாடிக்கொண்டிருக்கும். என் மனது உன் பாதங்களென்னும் கார்கால மேகத்தைக்காணுமல் துக்கங்கொண்ட மயில்போலிருக்கிறது; ஞானமென்னும் பெருக்கும் நின்றிருக்கிறது; அதைப்போக்கி அருளுவாய்.

विनम्राणां चेतोभवनवलभीसीम्नि चरण–
प्रदीपे प्राकाश्यं दधति तव निर्धूततमसि।
असीमा कामाक्षि स्वयमलघुदुष्कर्मलहरी
विघूर्णन्ती शान्तिं शलभपरिपाटीव भजते।।७९।।

விநம்ராணும் சேதோ - பவந்-வலபீ - ஸீம் நி சரண-
ப்ரதீபே ப்ராகாச்யம் தததி தவ நிர்தூத-தமஸி
அஸீமா காமாக்ஷி ஸ்வயம் அலகு-துஷ்கர்ம-லஹரீ
விகூர்ணந்தீ சாந்திம் சலப-பரிபாடீ இவ பஜதே (79)

காமாக்ஷி	காமாக்ஷியே
விநம்ராணும்	நமஸ்கரிப்பவர்களுடைய
சேதோ-பவந	மனதென்னும் வீட்டின்
வலபீ- ஸீம்நி	உப்பரிகையில்
நிர்தூத - தமஸி	தமஸ்ஸை நீக்குவதாயும்
ப்ராகாச்யம்	வெளிச்சத்தை
தததி	கொடுப்பதாயும் இருக்கிற
தவ	உன்னுடைய
சரண-ப்ரதீபே	பாதமாகிற தீபத்தில்
அஸீமா	எல்லையற்ற
அலகு-துஷ்கர்ம	பெரிய பாபங்களின்
லஹரீ	கூட்டமானது (அலை)
சலப-பரிபாடீ இவ	விளக்கு விட்டில் பூச்சிகள்போல
ஸ்வயம்	தானாகவே
விகூர்ணந்தீ	சுழன்று கொண்டுவந்து விழுகிறது
சாந்திம்	நாசத்தை
பஜதே	அடைகிறது

காமாக்ஷியே உன் பாதமென்னும் விளக்கு வணங்குவோர்களுடைய மனமென்னும் வீட்டின் உப்பரிகையில் இருட்டைப் போக்கி வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதில் அலைகள் போல்

முடிவில்லாது வரும் பெரிய பாபங்கள் விளக்கு விட்டில் பூச்சிகள்போல தாமாகவே சுழன்று (விழுந்து) நாசத்தை அடைகின்றன.

வீட்டில் இருளை நீக்குவதற்கும் அலங்காரத்திற்காகவும் ஏற்பட்ட விளக்கில் விட்டில் பூச்சிகள் தானுகவே மேல்விழுந்து அழிவதுபோல பக்தர்களின் மனதில் ஜ்வலிக்கும் ஞானக்கினியில் துஷ்கர்மங்கள் தாமாகவே விழுந்து நாசமடைகின்றன என்கிறுர்.

विराजन्ती शुक्तिर्नखकिरणमुक्तामणितते:
विपत्पाथोराशौ तरिरपि नराणां प्रणमताम्।
त्वदीय: कामाक्षि ध्रुवमलघुवह्निर्भववने
मुनीनां ज्ञानाग्ने: अरणि: अयमंघ्रिर्विजयते ।।८०।।

விராஜந்தீ சுக்தி: நக-கிரண - முக்தா-மணி-ததே:
விபத்-பாதோ-ராசௌ தரிரபி நராணம் ப்ரணமதாம்।
த்வதீய: காமாக்ஷி த்ருவம் அலகு - வஹ்நி: பவ-வநே
முநீநாம் ஜ்ஞாநாக்நே: அரணி-ரயம்-அங்க்ரி:
விஜயதே।।80।।

காமாக்ஷி	*காமாக்ஷியே*
த்வதீய:	*உன்னுடையதான*
அயம் அங்க்ரி:	*இந்தப் பாதமானது*
நக-கிரண	*நககாந்தியாகிற*
முக்தாமணி- ததே:	*முத்துஸரங்களுக்கு*
விராஜந்தீ	*விளங்கும் ஓர்*
சுக்தி:	*சிப்பியாயும்*

ப்ரணமதாம்	நமஸ்கரிக்கிற
நராணும்	மனிதர்களுக்கு
விபத்- பாதோ- ராசௌ	ஆபத்தாகிற கடலில்
தரி; அபி-	தெப்பமாயும்
பவ-வநே	ஸம்ஸாரமென்னும் காட்டில்
அலகு -வஹ்நி:	பெரிய நெருப்பாகவும்
முநீநாம்	முனிகளுடைய
ஜ்ஞாநாக்நே:	ஞானமென்னும் அக்னிக்கு
அரணி:	அரணிக்கட்டையாகவும்
விஜயதே	விளங்குகிறது
த்ருவம்	நிச்சயம்

காமாக்ஷியே உன்னுடையதான இந்தப் பாதம் நகத்தின் காந்தி யென்னும் முத்துக்களுக்கு ஜ்வலிக்கின்ற ஒரு முத்துச்சிப்பியாகவும், நமஸ்கரிக்கும் மனிதர்களுக்கு ஆபத்து என்னும் கடலில் ஒரு தெப்பமாயும், ஸம்ஸாரமென்னும் வனத்திற்கு காட்டுத்தீயாகவும், முனிகளுடைய ஞானமென்னும் அக்னிக்கு அரணிக்கட்டையகவும் விளங்குகிறது நிச்சயம்.

சிப்பிப் பூச்சியிலிருந்து ஒளிபொருந்திய நல்முத்துக்கள் உண்டாவதுபோல் உன் பாதங்களில் நிர்மலமான நகங்கள் ஒளி வீசுகின்றன; அண்டினவர்களை ஆபத்தென்னும் கடலினின்றும் கரையேற்றும் விஷயத்தில் தேவியின் பாதம் ஒரு ஓடம்போல் இருக்கிறது; அரணிக்கட்டையிலிருந்து பரிசுத்தமான அக்னி உண்டாவதுபோல, பாதத்தை தியானம் செய்யும் முனிவர்களுக்கு அதனுலேயே தத்வஜ்ஞானம் உதிக்கிறது; ஸம்ஸாரமென்னும் காட்டுக்கு அதை

முழுவதும் அழிக்கவல்ல ஒரு காட்டுத்தீ போன்றும் உளது என்கிறார்.

समस्तै: संसेव्य: सततमपि कामाक्षि विबुधै:
स्तुतो गन्धर्वस्त्रीसुललितविपञ्चीकलरवै:।
भवत्या भिन्दानो भवगिरिकुलं जृम्भिततमो–
वलद्रोही मातश्चरणपुरुहूतो विजयते।।८१।।

ஸமஸ்தை : ஸம்ஸேவ்ய: ஸததம் அபி காமாக்ஷி விபுதை:
ஸ்துதோ கந்தர்வ-ஸ்த்ரீ ஸுலலித-விபஞ்சீ-கல-ரவை: ।
பவத்யா பிந்தாநோ பவ-கிரி-குலம் ஜ்ரும்பித-தமோ-
வல-த்ரோஹீ மாத: சரண-புருஹூதோ விஜயதே ।।81।।

மாத;	*தாயே*
காமாக்ஷி	*காமாக்ஷி*
பவத்யா;	*உன்னுடைய*
சரண	*பாதங்களென்னும்*
புருஹூத:	*தேவேந்திரன்*
ஸமஸ்தை:	*எல்லா*
விபுதை:	*(தேவதை) ஞானிகளாலும்*
ஸததம் அபி	*எப்போதும்*
ஸம்ஸேவ்ய:	*ஸேவிக்கப்படுபவனும்*
கந்தர்வ-ஸ்திரீ	*கந்தர்வ ஸ்திரீகளின்*
ஸுலலித -விபஞ்சீ	*உத்தம வீணைகளின்*
கல-ரவை:	*இனிய சப்தத்தால்*
ஸ்துத:	*துதிக்கப்பட்டவனும்*
பவ-கிரி-குலம்	*ஸம்ஸாரமாகிற மலைகளை*

பிந்தாந:	பிளப்பவனும்
ஜ்ரும்பித	விருத்தியடைகிற
தம:	அஜ்ஞான மென்னும்
வல-வல	என்னும் அஸுரனை
த்ரோஹீ	கொல்லுபவனுகவும்
விஜயதே	விளங்குகிருன்

தாயே காமாக்ஷி உன்னுடைய பாதமாகிற தேவேந்திரன் எல்லா ஞானிகளாலும் (தேவர்களாலும்) ஸேவிக்கப்படுகிறவனுகவும், கந்தர்வ ஸ்திரீகளின் உத்தம வீணைகளின் மதுரமான ஒலியினுல் துதிக்கப் படுகிறவனுகவும், ஸம்ஸாரமென்னும் பர்வதங்களின் கூட்டங்களைப் பிளப்பவனுகவும் விருத்தியடைகின்ற அஜ்ஞான்மாகிற வலன் என்னும் அஸுரனைக் கொல்லுகிறவனுகவும் விளங்குகிருன்.

இதில் அம்பிகையின் பாதங்களை தேவேந்திரனுக்கு ஒப்பிடுகிருர். தேவேந்திரன் (விபுதர்களால்) தேவர்களால் சூழப்பட்டும் , கந்தர்வ ஸ்திரீகளுடைய அழகிய வீணைகளின் இனிய ஒலியால் துதிக்கப்பட்டும்; பர்வதங்களைப் பிளந்தெரிகிறவனுயும், வலன் என்னும் அஸுரனைக் கொல்பவனுயும் இருக்கிருன். பாதங்கள் (விபுதர்கள்) ஞானிகளால் சூழப்பட்டும், கந்தர்வ ஸ்திரீகள் போல அழகிய மாதர்களின் வீணு கானத்தால் துதிக்கப்பட்டும், மலை போன்ற நம் பாவங்களை அழிப்பதாயும் இருக்கின்றன.

பவ-கிரி-குலம் பிந்தாந:- முன் காலத்தில் பர்வதங்களுக்கு சிறகுகள் இருந்ததால், அவை பறந்துசென்று நகரங்கள் மீதும், கிராமங்கள் மீதும் உட்கார்ந்து ஊர் ஊராக

நாசம் செய்தன. அதனால் துன்புற்ற ஜனங்கள் இந்திரனைப் பிரார்த்திக்க இந்திரன் தன் கூரிய வஜ்ராயுதத்தால் பர்வதங்களின் சிறகுகளை அறுத்து அவற்றைப் பறக்கமுடியாமல் செய்து உலகத்தைக் காப்பாற்றினான் என்ற கதை ஈண்டு கொள்ளப்பட்டது.

वसन्तं भक्तानामपि मनसि नित्यं परिलसत्–
घनच्छायापूर्णम् शुचिमपि नृणां तापशमनम्।
नखेन्दुज्योत्स्नाभि: शिशिरमपि पद्मोदयकरं
नमाम: कामाक्ष्याश्चरणमधिकश्चर्यकरणम्।।८२।।

வஸந்தம் பக்தாநாம் அபி மநஸி நித்யம் பரிலஸத்-
கநச்சாயா-பூர்ணம சுசிம் அபி ந்ருணாம் தாப-சமநம்।
நகேந்து-ஜ்யோத்ஸ்நாபி: சிசிரம் அபிபத் மோதய-கரம்
நமாம: காமாக்ஷ்யா: சரணம் அதிகாச்ர்ய-கரணம் ।।82।।

பக்தாநாம்	பக்தர்களுடைய
மநஸி	மனதில்
வஸந் அபி	வஸித்திருந்தாலும்
நித்யம்	எப்போதும்
பரிலஸத்	விளங்குகிற
கநச்	கனங்களின் (மேகங்களின்)
சாயா பூர்ணம்	சாயை நிரம்பியதும்
சுசிம் அபி	சுசியாயினும்
ந்ருணாம்	மனிதர்களுடைய
தாப-சமநம்	தாபத்தைப் போக்குவதும்
நகேந்து	நகமென்னும் சந்திரனின்
ஜ்யோத்ஸ்நாபி:	நிலவுகளால்

சிசிரம அபி	சிசிரமாயினும்
பத்மோதய-கரம்	தாமரைகளின் அபிவிருத்தியைச் செய்வதும்
அதிகாச்சர்ய கரணம்	அதிக ஆச்சர்யத்தைச் செய்வதுமான்
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
சரணம்	பாதங்களை
நமாம:	வணங்குகிறோம்

பக்தர்களுடைய மனதில் எப்போதும் வஸிப்பதும், அதிக காந்தி நிரம்பியதும், நிர்மலமாயும் மனிதர்களின் தாபத்தைப் போக்குவதாயும், நகங்களாகிற சந்திரனின் நிலாவினுல் குளிர்ந்ததாயும், தாமரைகளை மலரச் செய்வதாயும் மிகவும் ஆச்சர்யமான பெருமையுடையதுமான காமாக்ஷியின் பாதத்தை நமஸ்கரிக்கிறோம்.

வஸந்தமாயினும் அப்போது காணப்படாத மேகக் கூட்டங்களால் நிரம்பியதாயும், கோடைகாலமாயிருந்தாலும் மனிதர்களின் தாபத்தைப் போக்குவதாயும், நிலவோடு கூடிய (தாமரைகளுக்கு விரோதியான) பின்பனிக்காலமாயினும் தாமரைகளை வளரும்படி செய்வதும் இவ்விதம் அநந்தாச்சர்யங்களையுடைய காமாக்ஷிதேவியின் பாதத்தை வணங்குகிறோம்?

சப்தசக்தியால் ருதுக்களின் பரஸ்பர விரோதமான தர்மங்கள் அம்பிகையின் பாதங்களில் காணப்படுகின்றன என்று வர்ணிக்கிருர்.

மநஸி வஸந்தம் :- பக்தர்களின் மனதில் வஸிப்ப்து; வஸந்தருது. பரிலஸத்கநச்சாயாபூர்ணம்- --அதிகமான காந்தி பொருந்தியது; வஸந்தருதுவில் மேகங்கள் காணப்படா; இதி

(கந) மேகங்களின் சாயை நிரம்பியிருக்கிறது;

சுசிம் அபி-பாதங்கள் சுத்தமாயிக்கின்றன; , சுசி, என்றால் கோடைகாலம்; அப்போது தாபம் அதிகமாயிருக்கும் ஆனால் இவை தாபத்தைப் போக்குகின்றன.

நகேந்து ஜ்யோத்ஸ்னாபி: சிசிரம்-குளிர்ந்த நககாந்திகளோடு கூடியவை பாதங்கள்; சிசிரருது சந்திரனின் நிலாவைப் பெற்று குளிர்ந்திருக்கிறது.

பத்மோதய-கரம் - குளிர் காலத்தில் தாமரை விருத்தியாகாது; ஆனால் பாதங்கள் தாமரையின் காந்தியைப் பெருக்குகின்றன்.

இம்மாதிரியாக ஒரே காலத்தில் இருக்கமுடியாத ருதுக்களின் தர்மங்களையும் ஒருங்கே தேவியின் பாதங்களில் காணலாம் என்கிறார்.

कवीन्द्राणां नानाभणितिगुणचित्रीकृतवच:
प्रपञ्चव्यापारप्रकटनकलाकौशलविधि:[5]**।**
अध: कुर्वन्नब्जं सनकभृगुमुख्यैर्मुनिजनै:
नमस्य: कामाक्ष्याश्चरणपरमेष्ठी विजयते।।८३।।

கவீந்த்ராணாம் நாநா-பணிதி-குணசித்ரீ-க்ருதவச;
ப்ரபஞ்ச-வ்யாபார-ப்ரகடந-கலா கௌசலவிதி: ।

---

[5] **कौशलनिधि:** என்றும் பாடம்

அத: குர்வந் அப்ஜம் ஸநக-ப்ருகு-முக்யை:முநி-ஜநை:
நமஸ்ய: காமாக்ஷ்யா: சரண-பரமேஷ்டீ விஜயதே ||83||

கவீந்த்ராணும்	கவிசிரேஷ்டர்களுடைய
நாநா பணிதி	பலவிதமான சொற்களின்
குணசித்ரீக்ருத	குணங்களால் சித்தரிக்கப்பட்ட
வச: ப்ரபஞ்ச	வாக்கென்னும் உலக விஷயமான
வ்யாபார	தொழிலில்
ப்ரகடந	வெளிப்படுத்தப்பட்ட
கலாகௌசலவிதி:	ஸாமர்த்தியத்தின் முறைகளையுடையதாயும்
அப்ஜம்	தாமரையை
அத:	தனக்குக் கீழ்ப்பட்டதாக
குர்வந்	செய்துகொண்டிருப்பதும்
ஸநகப்ருகு முக்யை	ஸநகர் பிருகு முதலான
முனிஜநை:	முனிவர்களால்
நமஸ்ய:	வணங்கத்தக்கதுமான
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
சரண	பாதமாகிற
பரமேஷ்டீ	பிரம்மதேவன்
விஜயதே	விளங்குகிறுர்

காமாக்ஷியின் பாதமென்கிற பிரம்மதேவன் சிறந்த கவிகளின் நாநாவிதமான சொற்களின் குணங்களால் சித்தரிக்கப்பட்ட வாக்ரூப ப்ரபஞ்ச விஷயமான தொழிலில் வெளிப்படுத்தப்பட்ட சிற்ப ஸாமர்த்தியத்தின் முறைகளையுடையவனுயும், தாமரையைக் கீழே

வைத்துக்கொண்டிருக்கிறவனும் ஸநகர் பிருகு முதலான முனி ஜனங்களால் வணங்கப்படுகிறவனாகவும் விளங்குகிறான்.

முன் சுலோகத்தில் அம்பிகையின் பாதங்களுக்கு தேவேந்திரனை ஒப்பிடலாம் என்று காட்டி, இதில் அவனுக்கும் பெரியோனான பிரமதேவன் என்றே கூறலாம் என்கிறார்.

பிரமன் கவிகளுடைய வாக்குக்கு இலக்கான இவ்வுலகை ஸ்ருஷ்டிக்கும் வல்லமை பெற்றவன்; பாதங்கள் தங்கள் பெருமையைத் துதிக்கும் கவிகளின் வாக்கென்னும் பிரபஞ்சத்தை ஸ்ருஷ்டிக்கும் வல்லமையுள்ளன. தாமரை பிரமனுக்கு ஆஸனமாதலால் அவன் அதைக் கீழே வைத்திருக்கிறான்; பாதங்கள் செவ்வியிலும் அழகிலும் தாமரையை விஞ்சி அதைக் கீழே இருக்கும்படி செய்கின்றன. பிரமன் ஸநகர் பிருகு முதலான முனிச் சிரேஷ்டர்களால் வணங்கப்படுவது போலவே, பாதங்களும் அவர்களால் வணங்கப்படுகின்றன.

भवत्याः कामाक्षि स्फुरितपदपङ्केरुहभुवां
परागाणां पूरैः परिहृतकलङ्कव्यतिकरैः।
नतानामामृष्टे हृदयमुकुरे निर्मलरुचि
प्रसन्ने निःशेषं प्रतिफलति विश्वं गिरिसुते॥८४॥

பவத்யா: காமாக்ஷி ஸ்புரித-பத-பங்கேருஹ-புவாம்
பராகாணும் பூரை: பரிஹ்ருத-கலங்க-வ்யதிகரை: ।
நதாநாம் ஆம்ருஷ்டே ஹ்ருதய முகுரே நிர்மல-ருசி
ப்ரஸந்தே நிச்சேஷம் ப்ரிதி-பலதி விச்வம்
கிரி-ஸுதே॥84॥

கிரிஸுதே	பர்வத குமாரியே
காமாக்ஷி	காமாக்ஷி
பரிஹ்ருத	போக்கடிக்கப்பட்ட
கலங்க	களங்கத்தின்
வ்யதிகரை:	ஸம்பந்தத்தையுடைய
பவத்யா:	உன்னுடைய
ஸ்புரித	திகழ்கின்ற (அலர்ந்த)
பதங்கேருஹ-புவாம்	சரணகமலங்களிலிருந்துண்டான
பராகாணும் பூரை:	மகரந்தப்பொடிகளால்
ஆம்ருஷ்டே	துடைக்கப்பட்டதாயும்
ப்ரஸந்நே	தெளிவானதாயும்
நிர்மலருசி	ஒளியுள்ளதுமான
நதாநாம	நமஸ்கரிப்பவர்களுடைய
ஹ்ருதய	ஹ்ருதயமென்னும்
முகுரே	கண்ணாடியில்
நிச்சேஷம் விச்வம்	எல்லா உலகமும்
ப்ரதிபலதி	பிரதிபலிக்கிறது

பர்வதகுமாரியே காமாக்ஷி விளங்குகின்ற உன் சரணகமலங்களிலிருந்து உண்டானவையும் எவ்வித களங்கத்தையும் போக்குகின்றவையுமான மகரந்தப் பொடிகளால் துடைக்கப்பட்டதாயும், அதனுல் தெளிவுற்ற நிர்மலமான (அறிவென்னும்) ஒளியோடு கூடியதுமான நமஸ்கரிப்பவர்களுடைய மனமென்னும் கண்ணாடியில் ஸகல லோகங்களும் பிரதிபலிக்கின்றன.

தாமரை போன்ற பாதங்களை தியானிக்கும் முனிவர்களுடைய ஹ்ருதயம் ஸகலவிதமான தோஷங்கள்

நீங்கப்பெற்று தெளிவான அறிவொளியுடையதாக ஆவதால் அவர்களும் ஸர்வஜ்ஞர்கள் ஆகிறார்கள்.

तव त्रस्तं पादात्किसलयमरण्यान्तरमगात्
परं रेखारूपं कमलममुमेवाश्रितमभूत्।
जितानां कामाक्षि द्वितयमपि युक्तं परिभवे
विदेशे वासो वा शरणगमनं वा निजरिपोः॥८५॥

தவ த்ரஸ்தம் பாதாத் கிஸலயம் அரண்யாந்தரம் அகாத்
பரம் ரேகா-ரூபம் கமலம் அமுமேவ ஆச்ரிதம் அபூத்।
ஜிதாநாம் காமாக்ஷி த்விதயம் அபி யுக்தம் பரிபவே
விதேஶேவாஸோ வா சரண-கமநம் வா நிஜ-ரிபோ:
॥85॥

காமாக்ஷி	காமாக்ஷியே
தவ	உன்னுடைய
பாதாத்	பாதத்தைக்கண்டு
த்ரஸ்தம்	பயந்த
கிஸலயம்	துளிரானது
அரண்யாந்தரம்	காட்டிற்குள்
அகாத்	சென்று விட்டது
கமலம் பரம்	தாமரையோவென்றால்
ரேகாரூபம்	ரேகாவடிவமாக
அமும் ஏவ	இந்தப் பாதத்தையே
ஆச்ரிதம்	ஆச்ரயித்ததாக
அபூத்	ஆயிற்று (ஏனென்றால்)
ஜிதாநாம்	தோற்றவர்களுக்கு
பரிபவே	அவமானம் ஏற்பட்டபோது

விதேஶே	தேசாந்திரத்தில்
வாஸ:	வாஸம் செய்வதோ
வா	அல்லது
நிஜரிபோ:	தன் சத்துருவையே
சரண கமநம் வா	சரணம் புகுவதோ
த்விதயம் அபி	இரண்டுதான்
யுக்தம்	செய்யத்தக்கது

காமாக்ஷியே உன் பாதத்தைக்கண்டு பயந்து துளிர் காட்டிற்குள் சென்று ஒளிந்துகொண்டது; தாமரையோவெனில், (பத்ம) ரேகையென்ற உருவத்தோடு அப்பாதத்தையே ஆச்ரயித்ததாக ஆயிற்று. (ஏனென்ருல்) அவமானம் ஏற்பட்டபோது வேறிடம் சென்று வஸிப்பதோ அல்லது சத்துருவையே சரணம் புகுவதோ இவ்விரண்டில் ஒன்றுதான் தோற்று வர்களுக்குச் செய்யத்தக்கவை.

அம்பிகையின் பாதங்கள் மேன்மை, செவ்வி, நாற்றம் முதலிய குணங்களில் துளிர், கமலம் இவற்றை வெல்லுகின்றன என்பதைக்காட்டுகிருர். ஒருவன் மற்ருெருவனிடம் தோற்ருல் தன் நாட்டைவிட்டு ஓடி எங்காவது காட்டிலோ வேறு தேசத்திலோ வஸிப்பான்; அல்லது வென்றவனைச் சரணம் புகுந்து அண்டி வாழ்வான். இங்கு துளிர் காட்டில் மரங்களில் இருப்பதால் பாதத்தைக் கண்டு பயந்து ஓடிவிட்டது. தாமரையோ பாதத்தையே பத்மரேகை வடிவமாக ஆச்ரயித்திருக்கிறது என்று வர்ணிக்கிருர்.

गृहीत्वा याथार्थ्यम् निगमवचसां देशिककृपा–
कटाक्षार्कज्योति: शमितममताबन्धतमस:।

यतन्ते कामाक्षि प्रतिदिवसमन्तर्द्रढयितुम्
त्वदीयं पादाब्जं सुकृतपरिपाकेन सुजनाः॥८६॥

க்ருஹீத்வா யாதார்த்யம் நிகம-வசஸாம் தேசிக-க்ருபா-
கடாக்ஷார்க்க-ஜ்யோதி:- ஶமித-மமதா-பந்த-தமஸ: ।
யதந்தே காமாக்ஷி ப்ரதி-திவஸம் அந்த: த்ரடயிதும்
த்வதீயம் பாதாப்ஜம் ஸுக்ருத-பரிபாகேந ஸுஜநா: ॥86॥

காமாக்ஷி	*காமாக்ஷியே*
ஸுஜநா:	*ஸாதுக்கள்*
தேசிக	*ஆசார்யனுடைய*
க்ருபா-கடாக்ஷ	*க்ருபாகடாக்ஷமாகிற*
அர்க- ஜ்யோதி:	*ஸூர்யதேஜஸ்ஸால்*
ஶமித	*போக்கடிக்கப்பட்ட*
மமதா- பந்த- தமஸ:	*மமதை என்னும் இருளையுடையவர்களாய்*
நிகம- வசஸாம்	*வேதவாக்யங்களுடைய*
யாதார்த்யம்	*உண்மையை*
க்ருஹீத்வா	*அறிந்துகொண்டு*
ஸுக்ருத	*(முன் ஜன்மத்தில் செய்த) புண்ணியத்தின்*
பரிபாகேந	*பயனுக*
த்வதீயம்	*உன்னுடையதான*
பாதாப்ஜம்	*தாமரைபோன்ற பாதத்தை*
அந்த:	*உள்ளே*
த்ரட்யிதும்	*உறுதியாக வைத்துக்கொள்வதற்கு*

ப்ரதி திவஸம்	ஒவ்வொரு நாளும்
யதந்தே	முயல்கிருர்கள்

காமாக்ஷியே ஆசார்யர்களுடைய கிருபாகடாக்ஷ மென்கிற ஸூர்யனின் தேஜஸ்ஸால் மமகாரம் என்னும் இருள் நீங்கியவர்களான ஸாது ஜனங்கள் வேத வாக்கியங்களின் உண்மையான அர்த்தத்தை உணர்ந்தவர்களாய், தங்கள் புண்யத்தின் பயனுக உனது சரண கமலத்தை தங்கள் ஹிருதயத்திற்குள்ளே உறுதியாக நிறுத்திக்கொள்ளுவதற்கு ஒவ்வொரு நாளும் முயல்கின்றனர்.

பூர்வ ஜன்மத்தில் நல்ல புண்ணியத்தைச் செய்திருந்தால்தான் இந்த ஜன்மத்தில் ஸதாசார்யனுடைய கடாக்ஷத்தைப் பெற்று அதனுல் அஜ்ஞானவிருள் நீங்கி வேதவாக்கியங்களின் உட்பொருளை உணர்ந்து தேவியின் பாதங்களை சஞ்சலமில்லாமல் தியானம் செய்யமுடியும். ஸாதுக்களான மஹான்கள் அவ்விதம் செய்கின்றனர்.

जडानामप्यम्ब स्मरणसमये त्वच्चरणयो:
र्भ्रमन्मन्थक्ष्माभृद् घुमुघुमित सिन्धुप्रतिभटा:।
प्रसन्ना: कामाक्षि प्रसभमघरस्पन्दनकला[६] :
भवन्ति स्वच्छन्दं प्रकृतिपरिपक्वा: भणितय:॥८७॥

---

[6] **अधरस्पन्दनकरा: विमान्ति** என்றும் பாடம்.

ஜடாநாம் அப்-யம்பஸ்மரண-ஸமேயே த்வச்-சரணயோ:
ப்ரமந் ம்ந்தக்ஷ்மாப்ருத் குமுகுமித ஸிந்து ப்ரதிபடா: ।
ப்ரஸந்நா: காமாக்ஷி ப்ரஸபம் அதர: ஸ்பந்தந கலா:
பவந்தி ஸ்வச்சந்தம் ப்ரக்ருதி பரிபக்வா: பணிதய: ।।87।।

அம்ப	*தாயே*
காமாக்ஷி	*காமாக்ஷி*
த்வச் சரணயோ:	*உனது பாதங்களை*
ஸ்மரண-ஸமயே	*நினைக்கும் ஸமயத்திலேயே*
ஜடாநாம் அபி	*புத்தியற்றவர்களுக்குக் கூட*
ப்ரமந்	*சுழலுகிற*
மந்தக்ஷ்மாப்ருத்	*மந்தர பர்வதத்தால்*
குமுகுமித	*குமுகுமுவென்று சப்திக்கிற*
ஸிந்து	*ஸமுத்திரத்திற்கு*
ப்ரதிபடா:	*எதிரானவைகளும்*
ப்ரஸந்நா:	*அழகானவைகளும்*
ப்ரக்ருதி	*ஸ்வபாவத்திலேயே*
பரிபக்வா:	*சிறந்தவைகளும்*
அதர-ஸ்பந்தந:	*உதடு அசையும்போதே*
கலா:	*அழகானவைகளுமான*
பணிதய:	*சப்தங்கள்*
ஸ்வச்சந்தம்	*தங்களிஷ்டப்பஐ (தாமாகவே)*
ப்ரஸபம்	*பலாத்காரமாக (தடுக்க முடியாதபடி)*
பவந்தி	*உண்டாகின்றன*

தாயே காமாக்ஷி உன் பாதங்களை ஸ்மரிக்கும் ஸமயத்திலேயே ஞானமற்றவர்களுக்குக்கூட சுழலுகின்ற

மந்தர பர்வதத்தால் குமுகுமுவென்று சப்திக்கிற ஸமுத்திரத்திற்கு ஸமமானவைகளும் அழகானவைகளும் ஸ்வபாவமாகவே சிறந்தவைகளும் உதடு அசையும்போதே அழகானவைகளுமான சப்தங்கள் தடையின்றித் தாமாகவே உண்டாகின்றன.

தேவியின் பாதஸ்மரணமானது மூடர்களையும் அழகான சிறந்த காவ்யங்களை அநாயாஸமாக இயற்றவல்ல கவிகளாக்குகிறது.

वहन्नप्यश्रान्तं मधुरनिनदं हंसकमसौ
तमेवाध:कर्तुम् किमिव यतते केलिगमने।
भवस्यैवानन्दं विदधदपि कामाक्षि चरणो
भवत्यास्तद्रोहं भगवति किमेवं वितनुते।।८८।।

வஹந்நப்-யச்ராந்தம் மதுர-நிநதம் ஹம்ஸகம் அஸௌ
தமேவ அத: கர்த்தும் கிமிவ யததே கேலி-கமநே।
பவஸ்யைவ ஆநந்தம் விததத் அபி காமாக்ஷி சரணோ
பவத்யா: தத்-த்ரோஹம் பகவதி கிம் ஏவம் விதநுதே।।88।।

பகவதி	*தேவி*
காமாக்ஷி	*காமாக்ஷி*
அச்ராந்தம்	*எப்போதும்*
மதுர	*இனிமையான*
நிநதம்	*ஒலியைப்பெற்றதான*
ஹம்ஸகம்	*பீலியை*
வஹந் அபி	*பூண்டு இருந்தாலும்*
அஸௌ	*இந்த*
பவத்யா: சரண:	*உன் பாதம்*

கேலி- கமநே	உல்லாஸமான நடையில்
தம் ஏவ	அந்த ஹம்ஸத்தையே
அத-கர்த்தும்	தாழ்த்துவதற்கு
கிம் இவ	ஏன் தான்
யததே	முயலுகிறது
பவஸ்ய ஏவ	பவ(சிவ)னுக்கே
ஆநந்தம்	ஸந்தோஷத்தை
விததத் அபி	செய்கிறதாயிருந்தபோதிலும்
தத் த்ரோஹம்	அந்த(பவனுக்கே) ஸம்ஸாரத்திற்கே துரோஹத்தை
ஏவம்	இம்மாதிரி
கிம்	ஏன்
விதநுதே	செய்கிறது ?

காமாக்ஷி தேவியே இந்த உன் பாதம் ஹம்ஸகத்தை (பீலியை) எப்போதும் பூண்டிருந்தாலும் அழகிய நடையில் அந்த (ஹம்ஸத்தை) தாழ்த்துவதற்கு ஏன் முயலுகிறது? இவ்விதமே பவனுக்கு(சிவனுக்கு ஆநந்தத்தை அளிப்பதாயிருந்தும் இது ஏன்தான் பவ- த்ரோஹத்தை (ஸம்ஸாரநாசத்தைச்) செய்கிறது ?

ஹம்ஸகம் என்ற பெயர்கொண்ட பீலியென்னும் ஆபரணங்களை எப்போதும் அணிந்திருக்கும் பாதங்கள் நடையழகில் ஹம்ஸங்களை வெல்லுகின்றன. பவன் என்னும் சிவனுக்கு பத்னியாக இருந்தும் பவமென்னும் ஸம்ஸாரத்தைப் போக்குகிருள் என்பது விசித்திரமாயிருக்கிறது. அதாவது பவனுக்கு ஆநந்தத்தைக் கொடுப்பதாக இருந்தும் பவத்ரோஹத்தைச் செய்கிறது.

यदत्यन्तं ताम्यत्यलसगतिवार्तास्वपि शिवे
तदेतत्कामाक्षि प्रकृतिमृदुलं ते पदयुगम्।
किरीटैः संघट्टं कथमिव सुरौघस्य सहते
मुनीन्द्राणामास्ते मनसि च कथं सूचिनिशिते।।८९।।

யத் அத்யந்தம் தாம்யதி அலஸ-கதி-வார்த்தாஸ்வபி சிவே
ததேதத் காமாக்ஷி ப்ரக்ருதி-ம்ருதுலம் தே பதயுகம்।
கிரீடை: ஸங்கட்டம் கதம் இவ ஸுரௌகஸ்ய ஸஹதே
முநீந்த்ராணும் ஆஸ்தே மநஸி ச கதம் ஸூசி-நிசிதே।।89।

சிவே	மங்களாம்பிகையே
காமாக்ஷி	காமாக்ஷி
அலஸ கதி	மந்தகதி என்கிற
வார்த்தாஸு அபி	பேச்சில் கூட
யத்	எந்த பாதமானது
அத்யந்தம்	மிகவும் அதிகமாக
தாம்யதி	வருந்துகிறதோ
ப்ரக்ருதி	ஸ்வபாவத்திலேயே
ம்ருதுலம்	மிருதுவான
ஏதத்	இந்த
தே	உன்னுடைய
பதயுகம்	இரண்டு பாதங்களும்
கதம் இவ	எப்படித்தான்
ஸுரௌகஸ்ய	தேவகணங்களுடைய
கிரீடை:	கிரீடங்களோடு
ஸங்கட்டம்	உறைதலை
ஸஹதே	பொறுத்திருக்கின்றனவோ?

ஸூசி	ஊசிபோல்
நிசிதே	கூர்மையான
முநீந்த்ராணும்	முனிசிரேஷ்டர்களுடைய
மநஸி	மனதிலும்
கதம்	எப்படித்தான்
ஆஸ்தே	இருக்கின்றனவோ?

மங்களஸ்வரூபிணியான காமாக்ஷியே மெதுவான நடை என்கிற வ்வார்த்தையிலும் கூட அதிகமாக வருந்தும்படியான ஸ்வ பாவத்திலேயே அவ்வளவு மிருதுவான இந்த உன்னுடைய இரண்டு பாதங்களும் தேவகணங்களின் கிரீடங்களோடு உறைதலை எவ்விதம் பொறுத்திருக்கின்றனவோ ? முனிச்ரேஷ்டர்களுடைய ஊசிபோல் கூர்மையான மனதிலும் எப்படித்தான் நிற்கின்றனவோ ?

தேவியின் பாதங்கள் மிகவும் மிருதுவானவை; இந்தத் திருவடிகளை இந்திராதிதேவர்கள் தலைவணங்குகிறுர்கள்; ரிஷிகள் தியானம் செய்யும் பொருளும் அவையே.

मनोरङ्गे मत्के विबुधजनसंमोदजननी
सरागव्यासङ्गा[7]* सरसमृदुसंचारसुभगा।
मनोज्ञा कामाक्षि प्रकटयतु लास्यप्रकरणम्
रणन्मजीरा ते चरणयुगलीनर्तकवधूः॥९०॥

---

[7] **सरागव्यासङ्गं** என்றும் பாடம்.

மநோ-ரங்கே மத்கே விபுத-ஜந-ஸம்மோத-ஜநநீ
ஸராக- வ்யாஸங்கா ஸரஸ-ம்ருது-ஸஞ்சார-ஸுபகா।
மநோஜ்ஞா காமாக்ஷி ப்ரகட யது லாஸ்ய ப்ரகரணம்
ரணந் மஞ்ஜீரா தே சரண யுகலீ நர்த்தக வதூ: ।।90।।

காமாக்ஷி	காமாக்ஷியே
விபுத- ஜந	(தேவர்களுக்கு) ஞானிகளுக்கு
ஸம்மோத	ஆநந்தத்தை
ஜநநீ	உண்டுபண்ணுகிறவளும்
ஸரஸ	வசீகரமாய்
ம்ருது	ம்ருதுவான
ஸஞ்சார	நடையினுல்
ஸுபகா	அழகாயிருப்பவளும்
மநோஜ்ஞா	மனோரம்யமானவளும்
ரணந்	ஒலிக்கும்
மஞ்ஜீரா	பீலியையணிந்தவளுமாயிருக்கிற
தே	உன்னுடைய
சரண- யுகளீ	இரு பாதங்களாகிற
நர்த்தக-வதூ:	நாட்டியப்பெண்
மத்தே	என்னுடையதான
மநோ- ரங்கே	மனதாகிற நாடகமேடையில்
ஸராக வ்யாஸங்கம்	ராகத்தோடு கூடின
லாஸ்ய-ப்ரகரணம்	நாட்டியத்தை
ப்ரகடயது	செய்யட்டும்

காமாக்ஷியே ஞானிகளுக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணுகிறவளும், வசீகரிக்கக்கூடிய மிருதுவான

நடையால் அழகாயிருக்கிறவளும், மனோரம்யமானவளும் ஒலிக்கும் பீலியை யணிந்தவளுமாயிருக்கிற உன்னுடைய இரண்டு பாதங்களாகிற நடனமாது என்னுடையதான மனமென்னும் அரங்கத்தில் ராகத்தோடுகூட நாட்டியத்தை செய்யட்டும்.

இந்த சுலோகத்தில் தேவியின் பாதங்களை ஒரு நாட்டியமாடும் பெண்ணாக வர்ணிக்கிறார். என் மனதே அரங்கமேடை; மந்தகதியே லாஸ்யம் என்ற நாட்டியத்தின் விசேஷம்; ஞானவான்களே ஸபையிலுள்ள தேவதைகள். பாதத்தில் உள்ள ராகமே (வர்ணமே) நாட்டியத்தில் சேர்ந்த ஸங்கீதம் (ராகம்). லாஸ்யம் என்பது ஸ்திரீகள் ஆடும் நாட்டியத்திற்குப் பெயர்

परिष्कुर्वन्मातः पशुपतिकपर्दम् चरणराट्
पराचां हृत्पद्मं परमभणितीनां च मुकुटम्।
भवाख्ये पाथेधौ परिहरतु कामाक्षि ममता
पराधीनत्वं मे परिमुषितपाथोजमहिमा।।९१।।

பரிஷ்குர்வந் மாத: பசுபதி-கபர்தம் சரண-ராட்
பராசாம் �்ஹ்ருத்-பத்மம் பரமபணிதீநாம் ச முகுடம்।
பவாக்யே பாதோதௌ பரிஹரது காமாக்ஷி மமதா-
பராதீநத்வம் மே பரிமுஷித - பாதோஜ-மஹிமா।।91।।

மாத:	தாயே
காமாக்ஷி	காமாக்ஷி
பசுபதி	சிவனுடைய
கபர்தம்	ஜடைகளையும்
பராசாம்	பெரியோர்களுடைய
ஹ்ருத் பத்மம்	ஹ்ருதயமென்னும்

	தாமரைப்பூவையும்
பரமபணிதீநாம்	வேதங்களுடைய
முகுடம்	சிகரத்தையும் உபநிஷத்துக்களையும்
பரிஷ்குர்வந்	அலங்கரிக்கிறதும்
பரிமுஷித	அபஹரிக்கப்பட்ட
பாதோஜ	தாமரைப்பூவின்
மஹிமா	பெருமையுடையதுமான
சரணராட்	சிறந்த திருவடியானது
பவாக்யே	ஸம்ஸாரமாகிற
பாதோதௌ	ஸமுத்திரத்தில் (அகப்பட்டிருக்கும்)
மே	என்னுடைய
மமதா-பராதீநத்வம்	மமதைக்கு வசப்பட்டிருக்கும் நிலைமையை
பரிஹரது	போக்கட்டும்

தாயே காமாக்ஷி சிவனுடைய ஜடைகளையும், பெரியோர்களுடைய ஹிருதயகமலத்தையும் வேதங்களின் மகுடத்தையும் (உபநிஷத்தையும்) அலங்கரிக்கிறதும், தாமரையின் அழகையும் கவர்கின்றதான உன்னுடைய சிறந்த பாதம் பிறவிக்கடலில் விழுந்து மமதைக்கு வசப்பட்டிருக்கும் என் நிலைமயைப் போக்கியருளட்டும்

பிரணயகலஹ ஸமயங்களில் சிவன் ஸுவர்ணம் போன்ற காந்தியையுடைய தன்ஜடைகள் தேவியின் பாதங்களில் புரளும் படி பணிந்து யாசிக்கும்போது, அந்த பாதங்கள் ஜடைகளின் சோபையை அதிகமாக்குகின்றன. பெரியோர்களுடைய மனதுக்கு மகிழ்ச்சியை அளிப்பதும்,

உபநிஷத்துக்களால் கூறப்படும் பரம்பொருளும், தாமரையையும் வென்றகாந்தியையுடையதும் இப் பாதங்களே அவை அஹங்கார மமகாரங்களுக்கு வசப்பட்டு இவ்வுலகில் இந்திரிய கிங்கரனாய் இருக்கும் என் நிலைமையைத் தவிர்த்து என்னைக் கிருதார்த்தனாக்கட்டும்.

प्रसूनैः संपर्कात् अमरतरुणीकुन्तलभवैः
अभीष्टानां दानादनिशमपि कामाक्षि नमताम्।
स्वसङ्गात्कङ्केलिप्रसवजनकत्वेन *च शिवे
त्रिधा धत्ते वार्ताम् सुरभिरिति पादो गिरिसुते।।९२।।

ப்ரஸூநை: ஸம்ப்ர்க்காத் அமர-தருணீ குந்தல-பவை:
அபீஷ்டாநாம் தாநாத் அநிசம் அபி காமாக்ஷிநமதாம்।
ஸ்வ-ஸங்காத் கங்கேலி-ப்ரஸவ-ஜநகத்வேநச சிவே
த்ரிதா தத்தே வார்த்தாம் ஸுரபி-ரிதி பாதோ
கிரி-ஸுதே।।92।।

சிவே	*மங்களஸ்வரூபிணியான*
காமாக்ஷி	*காமாக்ஷி*
கிரிஸுதே	*பர்வதகுமாரியே*
அமரதருணீ	*தேவமாதர்களுடைய*
குந்தல- பவை:	*கூந்தல்களிலுள்ள*
ப்ரஸூநை:	*புஷ்பங்களோடு*
ஸம்பர்க்காத்	*சேர்க்கையினாலும்*
நமதாம்	*வணங்குகிறவர்களுக்கு*

---

[8] **च तव** *என்றும் பாடம்.*

அபீஷ்டாநாம்	அபீஷ்டங்களை
அநிசம்	எப்போதும்
தாநாத் அபி	கொடுப்பதினுலும்
ஸ்வ- ஸங்காத்	தன் சேர்க்கையினுல்
கங்கேளி	அசோக மரத்தில்
ப்ரஸவ	புஷ்பத்தை
ஜநகத்வேந ச	உண்டுபண்ணுவதாலும்
பாத:	உன் பாதமானது
ஸுரபி	ஸுரபி
இதிவார்த்தாம்	என்கிற சப்தத்தை
த்ரிதா	மூன்றுவிதத்தால்
தத்தே	அடைகிறது

பர்வதகுமாரியும் மங்களஸ்வரூபிணியுமான காமாக்ஷியே உன் பாதம் தேவ ஸ்திரீகளின் கூந்தல்களிலிருக்கும் புஷ்பங்களோடு சேர்ந்திருப்பதினுலும், வணங்குகிறவர்களின் மநோ ரதத்தைக் கொடுப்பதாலும், தன் சேர்க்கையால் அசோக மரங்களில் புஷ்பத்தை உண்டுபண்ணுவதாலும் 'ஸுரபி' என்கிற பெயரை மூன்று விதத்தாலும் அடைகிறது.

(ஸுரபி= 1 வாஸனையுள்ள பொருள்; 2 காமதேனு; 3 வஸந்தருது.)

இந்த சுலோகத்தில் அம்பிகையின் பாதங்களை மூன்று பிரகாரமாய் 'ஸுரபி' என்னலாம் என்கிருர்; ஸுரபி என்ற பதம் மூன்று பொருள்களையுடையது. அதாவது; வாஸனே, காமதேனு, வஸந்த ருது, பாதங்கள், தேவஸ்த்ரீகளின் கூந்தல்களில் உள்ள புஷ்பங்களின் ஸம்பந்தத்தினுல்

வாஸனையை யுடையவையாகின்றன. வணங்குகிறவர்களுடைய அபீஷ்டங்களைக் கொடுப்பதால், காமதேனு போன்று உள்ளன. அசோக மரம் உத்தம ஸ்திரீகளின் பாதம்பட்டால் புஷ்பிக்கும் என்பர். ஸர்வோத்தம ஸ்திரீயாகிய தேவியின் பாதங்கள் அந்த மரத்தின்மீது பட்டால் அசோக புஷ்பம் புஷ்பிக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ? பாதங்கள் இப்படி புஷ்பிக்கச் செய்வதினால் வஸந்தருது என்ற பெயரை வஹிக்கின்றன். இந்த சுலோகத்தில் மேலேகண்ட மூன்று பொருள்களையுடைய 'ஸுரபி' என்ற பெயரை பாதங்கள் அடைகின்றன என்கிறார்.

அண்டினவர்களுக்கு அசோகத்தை (சோகமின்மையை)க் கொடுக்கின்றன என்பதும் த்வனிக்கிறது.

महामोहस्तेनव्यतिकरभयात्पालयति यो
विनिक्षिप्तं स्वस्मिन्निजजनमनोरत्नमनिशम्।
सरागस्योद्रेकात्सततमपि कामाक्षि रुचिरां
किमेवं पादोऽसौ किसलयरुचिं चोरयति ते॥९३॥

மஹா- மோஹ-ஸ்தேந-வ்யதிகர-பயாத் பாலயதி யோ
விநிக்ஷிப்தம் ஸ்வஸ்மிந்-நிஜஜந மநோ-ரத்நம் அநிசம்।
ஸராகஸ்ய உத்ரேகாத் ஸததம் அபி காமாக்ஷி ருசிராம்
கிம் ஏவம் பாதோऽஸௌ கிஸலய-ருசிம் சோரயதி தே॥93॥

காமாக்ஷி	காமாக்ஷியே
ய:	எந்த (உன் பாதம்)

ஸ்வஸ்மிந்	தன்னிடத்தில்
விநிக்ஷிப்தம்	வைக்கப்பட்ட
நிஜஜந	தன்னை ஆச்ரயித்தவர்களுடைய
மந:	மனதாகிற
ரத்நம்	ரத்னத்தை
மஹா மோஹ	மிகுந்த அஜ்ஞானம் என்னும்
ஸ்தேந-வ்யதிகர	திருடனுடைய ஸம்பந்த த்தினுடைய
பயாத்	பயத்திலிருந்து
பாலயதி	காப்பாற்றுகிறதோ
ஸ: அஸௌ	அப்பேர்ப்பட்ட இந்த
தே பாத:	உன் பாதமானது
ஸராகஸ்ய	ஆசையின் (சிவந்த காந்தியினுடைய)
உத்ரே காத்	மிகுதியினால்
ருசிராம்	அழகான
கிஸலய-ருசிம்	துளிரின் காந்தியை
ஸததம் அபி	எப்போதும்
கிம்	ஏன்
ஏவம்	இந்த மாதிரி
சோரயதி	திருடுகிறது?

காமாக்ஷியே எந்த உன் பாதம் தன்னிடம் வைக்கப்பட்ட ஆச்ரிதர்களின் மனதென்னும் ரத்னத்தை மஹாமோஹன் என்னும் திருடன் கொண்டுபோய்விடுவானே என்கிற பயத்திலிருந்து காப்பாற்றுகிறதோ, அதே உன் பாதம் ★ ஆசையின்

(சிவந்தகாந்தியின்) மிகுதியால் அழகான தளிரின் காந்தியை மட்டும் ஏன் எப்போதும் இம்மாதிரி திருடுகிறது?

★ ராகம் சிவப்பு வர்ணமும் ஆசையும்.

தேவியை வணங்கும் ஒருவன் தன் மனதை தேவியின் பாதமென்னும் காப்பாளரிடம் ஒப்புவித்தால் அது லோபம் மோஹம் முதலான திருடர்கள் கொண்டுபோகாதபடி ரக்ஷிக்கிறது: ரத்னம் போன்ற மனதைக் காக்கும் பாதம் துளிரின் சிவந்த காந்தியை மட்டும் ஏன் திருடுகிறது என்று கேட்கிருர். அதாவது துளிரின் காந்தியை பாதத்தில் காணலாம்.

सदा स्वादुङ्कारं विषयलहरीशालिकणिकां
समास्वाद्य श्रान्तं हृदयशुकपोतं जननि मे।
कृपाजाले फालेक्षणमहिषि कामाक्षि रभसात्
गृहीत्वा रुन्धीधाश्चरणयुगली पञ्जरपुटे।।९४।।

ஸதா ஸ்வாதுங்காரம் விஷய-லஹரீ-சாலி-கணிகாம்
ஸமாஸ்வாத்ய ச்ராந்தம் ஹ்ருதய-சுக-போதம் ஜநநி மே।
க்ருபா-ஜாலே பாலேக்ஷண-மஹிஷி காமாக்ஷி ரபஸாத்
க்ருஹீத்வா ருந்தீதா: சரண-யுகலீ-பஞ்ஜர-புடே ।।94।।

ஜநநி	தாயே
பாலேக்ஷண	நெற்றிக்கண்ணனை சிவனுடைய
மஹிஷி	மஹிஷியே
ஜநநி	தாயே
காமாக்ஷி	காமாக்ஷி
ஸதா	எப்போதும்

விஷய-லஹரீ	விஷயங்களின் அலேகளாகிற
சாலி கணிகாம்	செம்பா அரிசி நொய்யை
ஸ்வாதுங்காரம்	இனிப்பாயிருக்கிறதென்று
ஸமாஸ்வாத்ய	தின்று
ச்ராந்தம்	களேத்துப்போயிருக்கிற
மே	என்னுடைய
ஹ்ருதய	மனதாகிற
சுக போதம்	இளங்கிளியை
க்ருபா- ஜாலே	கருணையென்னும் வலேயில்
ரபஸாத்	சீக்கிரமாக
க்ருஹீத்வா	பிடித்து
சரண - யுகலீ	இரண்டு பாதங்களாகிற
பஞ்ஜர-புடே	கூட்டிற்குள்
ருந்தீதா:	அடைத்துவைப்பாயாக

நெற்றிக்கண்ணனை சிவனுடைய மஹிஷியே (ஜகந்) மாதாவான காமாக்ஷியே எப்போதும் அலேபோல் வருகிற சப்தஸ்பர்சாதி விஷயங்களாகிற அரிசி நொய்யை ‘இனிமையாயிருக்கிறது’ என்று சொல்லிக் கொண்டு தின்றுவிட்டு களேத்துக் கிடக்கும் என் மனமென்னும் இளங்கிளியை உன் கருணையென்னும் வலேயை வீசி சீக்கிரமாகப் பிடித்து உன் இரண்டு பாதங்களாகிற கூட்டிற்குள் அடைத்துவைப்பாயாக.

முன் சுலோகத்தில் மனதை ஒரு ரத்னமாகச் சொன்னுர்; இதில் ஒரு இளங்கிளியாக வர்ணிக்கிருர். அது சிற்றின்பங்களேயே சுவைத்து அவற்றில் ஆசை கொண்டிருக்கிறது. கருணை யென்னும் வலேயை வீசி

அதைப்பிடித்து உன் பாதமென்னும் கூட்டில் அடைத்துவைப்பாயாக என்கிறார். அதாவது உன் கருணையினால் மனதை விஷயாந்தரங்களில் போகாதபடி செய்து பலாத்காரமாகவாவது உன் பாதத்தை நினைக்கும்படி செய்.

धुनानं कामाक्षि स्मरणलवमात्रेण जडिम–
ज्वरप्रौढिं गूढस्थिति निगमनैकुञ्जकुहरे।
अलभ्यं सर्वेषां कतिचन लभन्ते सुकृतिन:
चिरादन्विष्यन्तस्तव चरणसिद्धौषधमिदम्।।९५।।

துநாநம் காமாக்ஷி ஸ்மரண-லவ-மாத்ரேண ஜடிம-
ஜ்வர-ப்ரௌடிம் கூட-ஸ்திதி-நிகம-நைகுஞ்ஜ-குஹரே।
அலப்யம் ஸர்வேஷாம் கதிசந லபந்தே ஸுக்ருதிந:
சிராத் அந்விஷ்யந்த: தவ சரண ஸித்தௌஷதம்
இதம்।।95।।

காமாக்ஷி	காமாக்ஷியே
ஸ்மரண- லவ	அல்பம் நினைப்பது
மாத்ரேண	மாத்திரத்தினாலேயே
ஜடிம	அஜ்ஞான மென்னும்
ஜ்வர-ப்ரௌடிம்	கொடிய ஜ்வரத்தை
துநாநம்	போக்குவதும்
நிகம	வேதங்கள் என்னும்
நைகுஞ்ஜ	புதர்களுடைய
குஹரே	உட்புறத்தில்
கூட	ரஹஸ்யமான
ஸ்திதி	இருப்பையுடையதும்

ஸர்வேஷாம்	எல்லோருக்கும்
அலப்யம்	கிடைக்கவரியதுமான
தவ	உன்னுடைய
இதம்	இந்த
சரண	பாதங்களாகிற
ஸித்தௌஷதம்	சிறந்த மருந்தை
சிராத்	வெகு காலமாக
அந்விஷ்யந்த:	தேடிக்கொண்டிருக்கிற
கதிசந	யாரோ சில
ஸுக்ருதிந:	புண்யம் செய்தவர்கள்
லபந்தே	அடைகிறார்கள்

காமாக்ஷியே கொஞ்சம் ஸ்மரிப்பதினாலேயே அஜ்ஞான மென்னும் கொடிய ஜ்வரத்தைப் போக்குவதும், வேதங்களென்னும் புதர்களின் உட்புறத்தில் (பிறரறியாதபடி) ரஹஸ்யமாக வைக்கப்பட்டிருக்கிறதும், எல்லோருக்கும் கிட்டவரியதுமான உன்னுடைய பாதங்களென்கிற இந்த ஸித்தௌஷதத்தை (சிறந்த மருந்தை) புண்ணியவான்களான சிலரே வெகுகாலமாகத் தேடி அடைகின்றனர்.

கொடிய நோய்களைப் போக்கவல்ல ஸித்த மூலிகைகள் காடு மலைகளிலெல்லாம் பலர் தேடித் திரிந்தாலும் எப்படி சில புண்ணியவான்களுக்கே கிட்டுகின்றனவோ அப்படியே வேதமாகிற வனத்தில் உள்ளுக்குள்ளே வைக்கப்பட்டதும், மற்ற மருந்துகளைப் போலில்லாமல் கொஞ்சம் நினைத்த மாத்திரத்திலேயே அஜ்ஞானமென்னும் நோயைப் போக்கவல்லதுமான உன் பாதமென்னும் மருந்தை பலர் வெகு காலமாக தேடினாலும் சில பாக்யவான்களே அடைகிறார்கள்.

रणन्मञ्जीराभ्यां ललितगमनाभ्यां सुकृतिनां
मनोवास्तव्याभ्यां मथिततिमिराभ्यां नखरुचा।
निधेयाभ्यां पत्या निजशिरसि कामाक्षि सततं
नमस्ते पादाभ्यां नलिनमृदुलाभ्यां गिरिसुते।।९६।।

ரணந்-மஞ்ஜீராப்யாம் லலித-கமநாப்யாம் ஸுக்ருதி நாம்
மநோ-வாஸ்தவ்யாப்யாம் மதித- திமிராப்யாம் நக-ருசா।
நிதேயாப்யாம் பத்யா நிஜ-சிரஸி காமாக்ஷி ஸததம்
நமஸ்தே பாதாப்யாம் நலிந-ம்ருதுலாப்யாம் கிரி
ஸுதே।।96।।

கிரி- ஸுதே	பர்வத குமாரியே
காமாக்ஷி	காமாக்ஷி
ரணந்	ஒலிக்கின்ற
மஞ்ஜீராப்யாம்	பீலிகளையுடையவைகளும்
லலித	அழகான
கமநாப்யாம்	நடையையுடையவைகளும்
ஸுக்ருதிநாம்	புண்ணியம் செய்தவர்களுடைய
மநோ	மனஸ்ஸை
வாஸ்தவ்யாப்யாம்	வாஸஸ்தானமாக உடையவைகளும்
நக- ருசா	நக காந்திகளால்
மதித	போக்கப்பட்ட
திமிராப்யாம்	இருளையுடையவைகளும்
பத்யா	பதியான சிவனால்
நிஜ- சிரஸி	தன் தலையில்
நிதேயாப்யாம்	வைக்கத்தக்கவைகளும்

நளிந	தாமரை போல்
ம்ருதுலாப்யாம்	மிருதுவானவைகளுமான
தே	உன்னுடைய
பாதாப்யாம்	பாதங்களுக்கு
ஸததம்	எப்போதும்
நம:	நமஸ்காரம்

பர்வதகுமாரியே காமாக்ஷி சப்திக்கின்ற பீலிகளேயுடையவைகளும், அழகிய நடையைப் பெற்றவைகளும், புண்ணியவான்களின் மனஸ்ஸில் வஸிப்பவைகளும், நககாந்தியால் இருளைப் போக்குகிறவைகளும், பதியான சிவனுலும் தன் தலையில் வைக்கத்தக்கவைகளும் தாமரைப்போல் மிருதுவானவைகளுமான உன்னுடைய பாதங்களுக்கு எப்போதும் நமஸ்காரம்.

அம்பிகையின் பாதங்களின் பெருமையைக் கூறி, மஹிமை பொருந்திய உன் பாதங்களுக்கு நமஸ்காரம் என்கிருர்.

* [९]सुरागे राकेन्दुप्रतिनिधिमुखे पर्वतसुते
चिराल्लभ्ये भक्त्या शमधनजनानां परिषदा।
मनोभृङ्गो मत्क: पदकमलयुग्मे जननि ते
प्रकामं कामाक्षि त्रिपुरहरवामाक्षि रमताम्।।९७।।

---

[9] सरागे என்றும் பாடம்.

ஸுராகே ராகேந்து-ப்ரதிநிதி- முகே பர்வத-ஸுதே
சிராத் லப்யே பக்த்யா ஸம-தந-ஜநாநாம் பரிஷதா।
மநோ ப்ருங்கோ மத்க: பத-கமல யுக்மே ஜநநி தே
ப்ரகாமம் காமாக்ஷி த்ரிபுர-ஹர-வாமாக்ஷி ரமதாம்॥97॥

ராகேந்து	பௌர்ணமி சந்திரனுக்கு
ப்ரதிநிதி	பிரதிநிதிபோன்ற
முகே	முகத்தையுடையவளே
பர்வதஸுதே	பர்வத குமாரியே
ஜநநி காமாக்ஷி	தாயே காமாக்ஷி
த்ரிபுரஹர	முப்புரமெரித்தோன்
வாமாக்ஷி	ப்ரணயினியே
ஸுராகே	அழகிய சோலையுள்ளதும்
சமதந	சாந்தியை தனமாகக்கொண்ட முனிவர்களின்
பரிஷதா	கூட்டத்தாலும்
சிராத்	வெகு காலத்திற்குப் பிறகு
பக்த்யா	பக்தியினுல்
லப்யே	அடையத்தக்கதுமான
தே	உன்னுடைய
பத	கமல
யுக்மே	இரண்டு பாதங்களாகிற தாமரைகளில்
மத்க:	என்னுடையதான
மநோ- ப்ருங்க:	மனமென்னும் வண்டு
ப்ரகாமம்	தன் இஷ்டம்போல்
ரமதாம்	இருந்துவிளையாடட்டும்

பூர்ணசந்திரனுக்குப் பிரதிநிதி என்று சொல்லத்தக்க முகத்தையுடைய பர்வதகுமாரியே முப்புரமெரித்தோன் பத்னியே தாயே காமாக்ஷி அழகிய சோபையுள்ளதும், சாந்தியையே தனமாகக்கொண்ட முனிவர்களின் கூட்டத்தாலும் வெகுகாலம் பக்தி செய்து அடையத்தக்கவையான உன் பாதங்களென்கிற தாமரைகளில் என்னுடைய மனமென்னும் வண்டு இஷ்டம்போல் இருந்து களிக்கட்டும்.

மனதை வண்டாகவும், பாதங்களைத் தாமரைகளாகவும் சொல்லி மனமென்னும் வண்டு அத்தாமரையில் எப்போதும் இருந்து விளையாடட்டும் அதாவது பாதங்களையே போக்யமாகப்பற்றி இருந்து அனுபவிக்கட்டும் என்று பிரார்த்திக்கிறார்.

*[१०]शिवे संवित्पाशैः शशिशकलचूडप्रियतमे
शनैर्गत्यागत्या जितसुरवरेभे गिरिसुते।
यतन्ते सन्तस्ते चरणनलिनालानयुगले
सदा बद्धुं चित्तप्रमदकरियूथं दृढतरम्।।९८।।

---

[१०] महासंवित्पाशैर्विषमशरवैरिप्रियतमे
शनैर्गत्यागत्या जितमदगजेन्द्र गिरिसुते।
यतन्ते सन्तस्ते जननि चरणालानयुगले
मनोव्यालं बद्धुं सततमपि कामाक्षि सुदृढम्।। என்றும் பாடம்.
शिवेसंविद्रूपे शशिशकलचूडप्रियतमे என்றும் பாடம்.

**சிவே ஸம்வித்-பாசை: சசி-சகல சூட-ப்ரிய-தமே
சனை: கத்யா-கத்யா ஜித- ஸுர-வரேபே கிரி - ஸுதே
யதந்தே ஸந்த: தே சரண நலிநா லாந-யுகலே
ஸதா பத்தும் சித்த-ப்ரமத-கரி-யூதம் த்ருடதரம் (98)**

சிவே	மங்கள ஸ்வரூபையே
சசி சகல சூட	சந்திரசேகரனுடைய
ப்ரிய தமே	பத்நியே
கிரிஸுதே	பர்வத குமாரியே
சனை:	மெதுவாக
கத்யா (ஆ) கத்யா	போய்வருவதில் (நடையால்)
ஜித	ஜயிக்கப்பட்ட
ஸுரவரேபே	ஐராவதத்தையுடையவளே
தே	உன்னுடைய
சரண நளிந	பாத கமலங்களாகிற
ஆலாந - யுகலே	இரண்டு கட்டுமுளைகளில்
சித்த	மனதென்னும்
பரமத	மதங்கொண்ட
கரியூதம்	யானை கூட்டங்களை
த்ருடதரம்	உறுதியாக்
ஸம்வித் - பாசை:	ஞானமென்னும் கயிறுகளால்
பத்தும்	கட்டுவதற்க்கு
ஸந்த:	ஸாதுக்கள்
ஸதா	எப்போதும்
யதந்தே	முயலுகிறார்கள்

அழகிய மங்கள ஸ்வரூபிணியும் சந்த்ரசேகரின் பத்னியும் மந்தகதியில் ஐராவதத்தையும் ஜயிக்கின்றவளுமான பர்வத குமாரியே உன் பாத பத்மங்களாகிற இரண்டு கட்டு மூளைகளில் மனதென்னும் மதயானையை ஸம்வித் என்னும் பாசங்களால் கட்டுவதற்கு ஸாதுக்கள் எப்போதும் முயலுகிறார்கள்.

மதங்கொண்ட பெண் யானையின் நடையை வெல்லும் தேவியின் பாதங்களை இரண்டு கட்டு மூளைகளாக வைத்து மனதென்னும் மதங்கொண்ட யானையை ஞானமென்னும் கயிற்றால் கட்டி அசையாமல் செய்ய பெரியோர்களும் முயலுகிறார்கள். இந்த யானைக்கு அஹங்கார மமகாரங்களே மதம்.

यश: सूते मातर्मधुरकवितां पक्ष्मलयते
श्रियं दत्ते चित्ते कमपि परिपाकं प्रथयते।
सतां पाशग्रन्थिम् *[११]शिथिलयति ते किं न कुरुते
प्रपन्ने कामाक्ष्या: प्रणतिपरिपाटी चरणयो:।।९९।।

யச: ஸூதே மாத: மதுர-கவிதாம் பக்ஷ்மலயதே
ச்ரியம் தத்தே சித்தே கம் அபி பரிபாகம் ப்ரதயதே
ஸ்தாம் பாச-க்ரந்திம் சிதிலயதி தே கிம் ந குருதே
ப்ரபந்நே காமாக்ஷி ப்ரணதி-பரிபாடீ சரணயோ: (99)

மாத:	தாயே
காமாக்ஷி	காமாக்ஷி

---

[11] ***शिथिलयति किं किं** என்றும் பாடம்.

தே சரணயோ:	உன் இரு பாதங்களில்
ப்ரணதி பரிபாடி	செவ்வனே செய்யும் நமஸ்காரமானது
ஸதாம்	ஸாதுக்களுக்கு
யச:	கீர்த்தியை
ஸுதே	உண்டுபண்ணுகிறது
மதுரகவிதாம்	இனிமையான கவன சக்தியை
பக்ஷ்மலயதே	விருத்திசெய்கிறது
ச்ரியம்	ஐச்வர்யத்தை
தத்தே	அளிக்கிறது
சித்தே	மனதில்
கமபி	சொல்லமுடியாத ஒரு விசேஷமான
பரிபாகம்	பக்குவத்தை
ப்ரதயதே	உண்டுபண்ணுகிறது
பாச	(ஆசைகளென்னும்) பாசங்களுடைய
க்ரந்திம்	முடிச்சை
சிதிலயதி	அவிழ்த்துவிடுகிறது
ப்ரபந்நே	பிரபத்தி செய்தவன் விஷயத்தில்
கிம்	எதைத்தான்
ந குருதே	செய்யாது?

ஜகஜ்ஜநநி காமாக்ஷி உன் இரு பாதங்களிலும் செவ்வனே செய்யும் நமஸ்காரம் ஸாதுக்களுக்குக் கீர்த்தியை அளிக்கிறது; இனிய கவன சக்தியை விருத்தி செய்கிறது;

ஐச்வர்யத்தை கொடுக்கிறது; மனதில் வர்ணிக்கவியலாத ஒரு விஷேமான பக்குவத்தை உண்டுபண்ணுகிறது; ஆசைகளென்னும் பாசத்தை அவிழ்த்துவிடுகிறது. உன்னை சரணமடைந்தவன் விஷயத்தில் அவை எதைத்தான் செய்கிறதில்லை.

இவ்வாருக தேவியின் பாதங்களைப் பலவாருகத் துதித்து கடைசியில் அவை கீர்த்தி ஐச்வர்யம் சித்த உல்லாசம், ஸம்ஸாரபந்த நிவ்ருத்தி முதலான அநிஷ்ட நிவ்ருத்தி இஷ்ட ப்ராப்தி என்னும் ஸகல பலங்களையும் தன்னை வணங்குபவர்களுக்கு அளிக்கின்றன என்கிருர்.

मनीषां माहेन्द्रीं ककुभमिव ते कामपि दशां
प्रधत्ते कामाक्ष्याश्चरणतरुणादित्यकिरण:।
यदीये संपर्के घृतरसमरन्दा कवयतां
परीपाकं धत्ते परिमलवती सूक्तिनलिनी।।१००।।

★ [12]மநீஷாம் மாஹேந்த்ரீம் ககுபம் இவ தே காமபி தசாம்
ப்ரதத்தே காமாக்ஷ்யா: [13]சரண-தருணு தித்ய-கிரண:
யதீயே ஸம்பர்க்கே த்ருத-ரஸமரந்தா கவயதாம்
பரீபாகம் தத்தே பரிமலவதீ-ஸூக்தி-நலிநீ (100)

யதீயே	எந்த கிரணத்தின்
ஸம்பர்க்கே	சேர்க்கை உண்டானபோது

---

[12] **सुजनचरणा दित्यकिरण:** என்றும் பாடம்.

[13] **मनीषां माहेन्द्रीं ककुबिव सतां कामपि दशां**
प्रधत्ते कामाक्ष्या: चरणतरुनादित्यकिरणै: என்றும் பாடம்.

கவயதாம்	கவனம் செய்கிறவர்களுடைய
ஸூக்தி - நளிநீ	வாக்காகிற தாமரையானது
த்ருத	அடையப்பட்ட
ரஸ-மரந்தா	ரஸமென்னும் மகரந்தத்தையுடையதாய்
பரிமலவதீ	மிகுந்த வாஸனையோடு
பரீபாகம்	மலர்ச்சியை
தத்தே	அடைகிறது
தே	அப்பேர்ப்பட்ட
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
சரண	பாதமாகிற
தருண ஆதித்யகிரணா:	பாலஸூர்யனுடைய கிரணமானது
மாஹேந்த்ரீம்	இந்திர னுடையதான கிழக்கு
ககுபம் இவ	திக்கைப்போல
மநீஷாம்	புத்தியில்
காமபி தசாம்	மிகவும் சிறந்ததான ஒரு தசையை
ப்ரதத்தே	அடையும்படி செய்கிறது

கவிகளின் வாக்கு என்னும் தாமரை எந்த கிரணங்களின் ஸம்பந்தத்தால் மகரந்த ரஸம் நிரம்பினதாகவும், நல்ல வாஸனையுள்ளதாகவும் மலர்ச்சி பெற்றதாகவும் ஆகிறதோ, அப்பேர்ப்பட்ட காமாக்ஷியின் பாதமாகிற பாலஸூர்யனுடைய கிரணம் இந்திரனுடையதான கிழக்கு திக்கைப்போல புத்தியில் மிகவும் சிறந்ததான ஒரு நிலைமையை அடையும்படிச் செய்கிறது.

ஸூர்யோதய காலத்தில் கிழக்கு திக்குக்கு இருள் நீங்கி ஒரு பிரகாசமும் தாமரைகளுக்கு ஒரு மலர்ச்சியும் உண்டாவதுபோல தேவியின் பாதங்களை வணங்குபவர்களுக்கு சிறந்த ஞானமும் பரிமளமான வாக்கோடு கூடின கவன சக்தியும் தானுகவே உண்டாகின்றன.

पुरा मारारातिः पुरमजयदम्ब स्तवशतैः
*[१४]प्रसन्नायां यस्य त्वयि तुहिनशैलेन्द्रतनये।
परं तत् कामाक्षि स्फुरतु तरसा कालसमये
[१५]समायाते मातर्मम मनसि पादाब्जयुगली।।१०१।।

புராமாராராதி: புரம் அஜயத் அம்ப ஸ்தவ-சதை:
ப்ரஸந்நாயாம் யஸ்ய த்வயி துஹிந - சைலேந்த்ரதநயே
பரம் தத் காமாக்ஷி ஸ்புரது தரஸா கால-ஸமயே
ஸமாயாதே மாத: மம மநஸி பாதாப்ஜயுகலீ (101)

துஹிநசைலேந்த்ர	பர்வதராஜனின்
தநயே	குமாரியே
மாத:	தாயே
காமாக்ஷி	காமாக்ஷி
புரா	முன்னொரு காலத்தில்

[14] प्रसन्नायां सत्यां अतस्तेकामाक्षि என்றும் பாடம்.

[15] समायाते स्वान्ते मम तव पादाम्भूजयुगलम् என்றும் பாடம்.

யஸ்ய	எந்த பாதங்களுடைய
ஸ்தவசதை:	நூற்றுக்கணக்கான ஸ்தோத்ரங்களால்
மாராராதி:	பரமசிவன்
புரம்	த்ரிபுராஸுரனை
அஜயத்	ஜயித்தாரோ
தத்	சிறந்த அந்த
பாதாப்ஜயுகலீ	தமரைபோன்ற இரு பாதங்களும்
காலஸமயே	எமன் வரும் காலம்
ஸமாயாதே	வந்தபொழுது
மம மநஸி	என் மனதில்
தரஸா	நன்ருக
ஸ்புரது	பிரகாசிக்கட்டும்

பர்வதராஜகுமாரியான காமாக்ஷிதேவியே தாயே முன்னொரு காலத்தில் எந்தப் பாதங்களின் நூற்றுக்கணக்கான ஸ்தோத்திரங்களால் நீ ஸந்தோஷமடைந்த பிறகு மன்மதனை எரித்த பரமசிவனும் த்ரிபுராஸுரனை ஜயித்தாரோ அந்த உன்னுடைய சிறந்த சரண கமலங்களிரண்டும் அந்த்ய காலத்திலும் என் மனதில் நன்ருகப் பிரகாசிக்கட்டும்.

முன்னொரு காலத்தில் த்ரிபுராஸுரனோடு யுத்தம் நேரிட்டபோது சிவன் தேவியை ஸ்தோத்திரம் செய்து அதனுல் சக்தியைப் பெற்று அவனை ஸம்ஹரித்தார். ஆகையால் நானும் உன்னையே துதிக்கிறேன். அந்திம காலத்தில் உன்னை ஸ்மரிக்கும் சக்தியே எனக்கு இருக்காது. ஆகையால் உன் பாதங்கள் இப்போதும் அப்போதும்

தானுகவே என் மனதில் தெளிவாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கவேண்டும்.

पदद्वन्द्वं मन्दं गतिषु निवसन्तं हृदि सतां
गिरामन्ते भ्रान्तं कृतकरहितानां परिबृढे।
जनानामानन्दं *[१६]जननि जनयन्तं प्रणमतां
त्वदीयं कामाक्षि प्रतिदिनमहं नौमि विमलम्॥१०२॥

பத-த்வந்த்வம் மந்தம் கதிஷு நிவஸந்தம் ஹ்ருதி ஸாதம்
கிராம் அந்தே ப்ராந்தம் க்ருதக- ரஹிதா நாம் பரிப்ருடே।
ஜநாநாம் ஆநந்தம் ஜநநி ஜநயந்தம் ப்ரணமதாம்
த்வதீயம் காமாக்ஷி ப்ரிதி-திநம் அஹம் நௌமி
விமலம்॥102॥

பரிப்ருடே	*ஸர்வேச்வரியே*
ஜநநி	*தாயே*
காமாக்ஷி	*காமாக்ஷி*
கதிஷு	*நடைகளில்*
மந்தம்	*மெதுவானவைகளும்*
ஸதாம்	*ஸாதுக்களுடைய*
ஹ்ருதி	*மனதில்*
நிவஸந்தம்	*வஸிப்பவைகளும்*
க்ருதக ரஹிதாநாம்	*ஒருவரால் செய்யப்படாத*
கிராம்	*சப்தங்களான வேதங்களுடைய*
அந்தே	*முடிவில் (வேதாந்தத்தில்)*

---

[16] **जगति** *என்றும் பாடம்.*

ப்ராந்தம்	ஸஞ்சரிப்பவைகளும்
ப்ரணமதாம்	வணங்குகிற
ஜநாநாம்	ஜனங்களுக்கு
ஆநந்தம்	ஆநந்தத்தை
ஜநயந்தம்	உண்டுபண்ணுகிறவைகளும்
விமலம்	பரிசுத்தமானவைகளுமான
த்வதீயம்	உன்னுடைய
பத- த்வந்த்வம்	இரு பாதங்களையும்
அஹம்	நான்
ப்ரதிதினம்	ஒவ்வொரு நாளும்
நௌமி	துதிக்கிறேன்

ஸர்வேச்வரியே தாயே காமாக்ஷி நடையில் மெதுவானவைகளும், ஸாதுக்களுடைய ஹிருதயத்தில் வஸிப்பவைகளும், ஒருவரால் செய்யப்படாத வாக்குக்களான வேதங்களின் முடிவில் (அதாவது உபநிஷத்தில்) ஸஞ்சரிப்பவைகளும், வணங்குகிற ஜனங்களுக்கு ஆநந்தத்தை உண்டுபண்ணுகிறவைகளும் பரிசுத்தமானவைகளுமான உன் இரு பாதங்களையும் ஒவ்வொரு நாளும் நான் துதிக்கிறேன்.

इदं यः कामाक्ष्याश्चरणनलिनस्तोत्रशतकं
जपेन्नित्यं भक्त्या निखिलजगदाह्लादजनकम्।
स विश्वेषां वन्द्यः सकलकविलोकैकतिलक :
चिरं भुक्त्वा भोगान्परिणमति चिद्रूपकलया।।१०३।।

இதம் ய: காமாக்ஷ்யா: சரண-நலிந ஸ்தோத்ர-சதகம்
ஜபேந் நித்யம் பக்த்யா நிகில- ஜகத்-ஆஹ்லாத-ஜ நகம்
ஸ விச்வேஷாம் வந்த்ய: ஸகல-கவி-லோகைக- திலக:
சிரம் புக்த்வா போகாந் பரிணமதி-சித்-ரூப-கலயா (103)

நிகில	*எல்லா*
ஜகத்	*உலகத்திற்கும்*
ஆஹ்லாத	*ஸந்தோஷத்தை*
ஜநகம்	*உண்டுபண்ணுகிற*
இதம்	*இந்த*
காமாக்ஷ்யா:	*காமாக்ஷியினுடைய*
சரண - நளிந	*பாதகமலங்களைப்பற்றிய*
ஸ்தோத்ர	*ஸ்தோத்ரமான*
சதகம்	*சதகத்தை (நூறு சுலோகங்களை)*
ய:	*எவனொருவன்*
பக்த்யா	*பக்தியோடு*
நித்யம்	*எப்போதும்*
ஜபேத்	*படிக்கிறானோ*
ஸ:	*அவன்*

விஷ்வேஷாம் - எல்லோராலும், வந்தய:- நமஸ்கரிக்கப்படுகிறவனும், ஸகல - எல்லா, கவிலோக- கவிகளுக்குள்ளும், ஏக திலக:- சிறந்த திலகமாகவும் ஆகி, போகாந் - போகங்களை, சிரம் - வெகுகாலம், புக்த்வா - அனுபவித்து (கடைசியில்), சித் ரூபகலயா - சித்ஸ்வரூபியாகவே, பரிணமதி - ஆகிறான்

ஸமஸ்த லோகங்களுக்கும் ஆநந்தத்தை உண்டு பண்ணுகிற காமாக்ஷியின் சரணகமலங்களினுடைய ஸ்தோத்ரரூபமான இந்த சதகத்தை எவனவன் பக்தியோடு

எப்போதும் படிக்கிருனே அவன் எல்லோராலும் வணங்கப்படுகிறவனுயும், ஸகல கவிகளுக்கும் முக்கியமான திலகமாகவும் ஆகி, ஸர்வபோகங்களேயும் வெகுகாலம் அனுபவித்து (முடிவில்) சித்ஸ்வரூபியாகவே ஆகிருன். முடிவில் பலசுருதி கூறுகிருர். நூறு சுலோகங்கங்கள் கொண்ட இந்த சதகத்தை பக்தியோடு படிப்பவன் எல்லோராலும் கொண்டாடப்படுகிறவனுகவும், கவிசிரேஷ்டனுகவும் ஆகி ஸகலவித போகங்களேயும் அனுபவித்து முடிவில் ஸச்சிதநந்த ஸ்வரூபியாக ஆகிவிடுகிருன்.

★★★★★★★★★★★★★★★

।। इति पादारविन्दशतकं संपूर्णम्।।

★★★★★★★★★★★★★★★

मन्दस्मितशतकम्

மந்தஸ்மித ஶதகம்[1]

बध्नीमो वयमञ्जलिं प्रतिदिनं बन्धच्छिदे देहिनां
कन्दर्पागमतन्त्रमूलगुरवे कल्याणकेलीभुवे।
कामाक्ष्या घनसारपुञ्जरजसे कामद्रुहश्चक्षुषां
मन्दारस्तबकप्रभामदमुषे मन्दस्मितज्योतिषे।।१।।

பத்நீமோ வயமஞ்ஜலிம் ப்ரதிதிநம் பந்தச்சிதே தேஹிநாம்
கந்தர்ப்பாகம-தந்த்ரமூல-குரவே கல்யாணகேலீபுவே।
காமாக்ஷ்யா கநஸாரபுஞ்ஜரஜஸே
காமத்ருஹஶ்சக்ஷுஷாம்
மந்தார ஸ்தபக ப்ரபா மதமுஷே மந்தஸ்மித
ஜ்யோதிஷே।।1।।

தேஹிநாம்	*பிராணிகளுடைய*
பந்தச்சிதே	*பாபஸம்பந்தத்தை ஒழிக்கிறதாயும்,*

---

[1] *மூககவி எழுதிய பஞ்சஶதியில் இது ஐந்தாவது சதகம். முதலாவதான 'ஆர்யாசதக'த்தால் அம்பிகையைத் தியானித்தார். அவள் பெருமைக்குத் தோற்று 'பாதாரவிந்தசதக'த்தால் அவள் பாதாரவிந்தமே கதியென்று நிர்ணயித்தார். மூன்றாவதான 'ஸ்துதி சதக'த்தால் சரண்யையான தேவியைத் துதித்தார். துதியால் மகிழ்ந்த தேவியின் கருணாகடாக்ஷத்தை நான்காவதான 'கடாக்ஷ சதக'த்தால் வர்ணித்தார். கடாக்ஷத்தால் உஜ்ஜீவிக்கும் சேதனர்களைக் கண்டு ஏற்படுவதும் மோக்ஷமீறான ஸகல புருஷார்த்தங்களுக்கும் காரண மானதுமான தேவியின் புன்னகையை இந்த 'மந்தஸ்மித சதக'த்தில் வர்ணிக்கிறார்.*

கந்தர்ப்பாகம தந்த்ர மூல குரவே	கோகோஹ சாஸ்திரத்தின் அநுஷ்டாநத்தைக் கண்டு பிடித்த ஆதி குருவாயும்
கல்யாண கேலீபுவே	மங்களங்களின் விளையாட்டிடமாயும்
காமத்ருஹ:	காமாரியான பரமசிவனுடைய
சக்ஷுஷாம்	கண்களுக்கு
கநஸார புஞ்ஜ ரஜஸே	(மலர்ச்சியை உண்டு பண்ணுகிற) பச்சைக்-கற்பூரப்பொடியாயும்
மந்தார ஸ்தபக ப்ரபா-மதமுஷே	மந்தாரப் பூங்கொத்தின் காந்திக்குள்ள கர்வத்தை அடக்குகிறதாயுமுள்ள
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
மந்தஸ்மித ஜ்யோதிஷே	புனிசிரிப்பின் ஒளிக்கு
வயம்	நாம்
ப்ரதிதினம்	ஒவ்வொருநாளும்
அஞ்ஜலிம்	கை கூப்புதலை
பத்நீம:	செய்கிறோம்.

பிராணிகளின் ஸம்ஸார பந்தத்தைப் போக்குவதும், மன்மதனுடைய ஆகம தந்த்ரத்திற்கு ஆதிகுருவும், மங்களங்களுக்கு விளையாடுமிடமும், ரமசிவனின் கண்களுக்குப் பச்சைக்கற்பூரத்தின் சூர்ணமாயும், மந்தாரப் புஷ்பக்கொத்தின் காந்தியின் கர்வத்தை அபஹரிப்பதுமான காமாக்ஷி தேவியின் புன்னகையின் ஜோதியை தினமும் நாம் அஞ்ஜலி செய்து வணங்குகிறோம்.

குறிப்பு:- 'காமத்ருஹ:' என்பதை 'கந்தர்ப்பாகம' என்ற விடத்திலும் சேர்த்துக்கொள்ளலாம்.

सध्रीचे नवमल्लिकासुमनसां नासाग्रमुक्तामणे:
आचार्याय मृणालकाण्डमहसां नैसर्गिकाय द्विषे।
स्वर्धुन्या सह युध्वने हिमरुचेरर्धासनाध्यासिने
कामाक्ष्या: स्मितमञ्जरीधवलिमाद्वैताय तस्मै नम:।।२।।

ஸத்ரீசே நவமல்லிகா-ஸுமநஸாம் நாஸாக்ர முக்தாமணே:
ஆசார்யாய ம்ருணால-காண்ட-மஹஸாம் நைஸர்க்கிகாய த்விஷே।
ஸ்வர்துந்யா ஸஹ யுத்வநே ஹிமருசேரர்த்தா ஸநாத்யாஸிநே
காமாக்ஷ்யா: ஸ்மிதமஞ்ஜரீ-தவலிமாத்வைதாய தஸ்மை நம:।।2।।

நவமல்லிகா ஸுமநஸாம்	கொடை மல்லிகைப்
ஸத்ரீசே	பூக்களுக்கு ஸமானமாயும்
நாஸாக்ரமுக்தாமணே:	மூக்கு நுனியில் இருக்கிற புல்லாக்கு முத்துக்கு
ஆசார்யாய	ஆசாரியனாயும்
ம்ருணால-காண்ட- மஹஸாம்	தாமரைத் தண்டின் காந்தி-களுக்கு
நைஸர்க்கிகாய	ஸ்வபாவமான
த்விஷே	சத்துருவாயும்
ஸ்வர்துந்யா	கங்கையோடு
ஸஹயுத்வநே	கூடிச்சண்டையிடுகிறதாயும்
ஹிமருசே:	சந்திரனுடைய,

அர்த்தாஸந அத்யாஸினே	ஆஸனத்தின் பாதியில் அமருகிறதாயுமிருக்கிற
தஸ்மை	அப்படிப்பட்ட
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
ஸ்மித-மஞ்ஜரீ-தவலிமா	புன்சிரிப்பின் இணையற்ற
அத்வைதாய	வெளுப்பிற்கு
நம:	நமஸ்காரம்.

கொடைமல்லிகைப் புஷ்பங்களுக்கு ஸமானமாயும், மூக்கின் நுனியிலிருக்கிற சிறந்த புல்லாக்கு முத்துக்கு ஆசார்யனாயும், தாமரைத்தண்டின் காந்திகளுக்கு இயற்கையான சத்ருவாயும், ஆகாச கங்கையோடு எதிர்த்து யுத்தம் செய்வதும், சந்திரனோடு அர்த்தாஸனத்தில் அமர்வதுமான காமாக்ஷி தேவியின் இணை யற்ற அந்தப் புன்னகையின் வெண்மைக்கு நமஸ்காரம்.

குறிப்பு: புன்சிரிப்பின் காந்தியை வெளுப்பாகக் கவிகள் வர்ணிக்கிற வழக்கமாகையால் இங்கே வெளுப்பான வஸ்துக்கள் உபமானங்களாகக் கூறப்படுகின்றன.

कर्पूरद्युतिचातुरीम् अतितराम् अल्पीयसीं कुर्वती–
दौर्भाग्योदयमेव संविदधती दौषाकरीणां त्विषाम्।
क्षुल्लानेव मनोज्ञमल्लिनिकरान्फुल्लानपि व्यञ्जती
कामाक्ष्या: मृदुलस्मितांशुलहरी कामप्रसूरस्तु मे।।३।।

கர்ப்பூர-த்யுதி-சாதுரீமதிதராம் அல்பீயஸீம் குர்வதீ
தௌர்பாக்யோதயமேவ ஸம்விதததீ தௌஷாகரீணாம்
த்விஷாம்।

க்ஷுல்லாநேவ மனோக்ஞ-மல்லி-நிகராந் புல்லாநபி
வ்யஞ்ஜதீ
காமாக்ஷ்யா ம்ருதுல-ஸ்மிதாம்ஶு-லஹரீ
காம-ப்ரஸூரஸ்து மே॥3॥

கர்ப்பூர-த்யுதி-சாதுரீம்	கற்பூரக்கட்டியின் காந்தியின்அழகை
அதிதாரம்	மிகவும்
அல்பீயஸீம்	சிறியதாக
குர்வதீ	செய்கிறதாயும்
தௌஷாகரீணாம்	சந்திரனுடையவைகளான
த்விஷாம்	காந்திகளுக்கு
தௌர்பாக்ய-உதயம் ஏவ	துரதிருஷ்டத்தின் உற்பத்தியையே
ஸம்விததீ	நன்கு செய்கிறதாயும்
புல்லாந்	மலர்ந்த
மநோஜ்ஞ-மல்லி-நிகராந் அபி	நல்ல மல்லிகைப்பூக்களின் கூட்டங்களையும்
க்ஷுல்லாந் ஏவ வ்யஞ்ஜதீ	அல்பமாகவே தோன்றும்- படி செய்கிறதாயுமிருக்கிற
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
ம்ருதுல-ஸ்மிதாம்ஶு- லஹரீ	மனோஜ்ஞமாய் மென்மேலும் வளரும் மந்தஹாஸத்தின் காந்தியின் பிரவாஹமானது
மே	எனக்கு
காமப்ரஸூ:	இஷ்டத்தைக் கொடுப்பதாக
அஸ்து	ஆகட்டும்.

கற்பூரக்கட்டியின் அழகியகாந்தியை மிகவும் அல்பமாகச் செய்கிறதாயும், சந்திரனின் காந்திகளுக்கு அழகில்லாமையையே செய்கிறதாயும், மலர்ந்த நல்ல மல்லிகைப்பூக்களையும் அல்பமாகத் தோன்றும்படி செய்கிறதாயுமிருக்கிற காமாக்ஷி தேவியின் மனோக் ஞமாய் மேன்மேலும் வளரும் புன்னகையின் காந்தி எனக்கு இஷ்டத்தைக் கொடுப்பதாக ஆகட்டும்.

या पीनस्तनमण्डलोपरि लसत्कर्पूरलेपायते
या नीलेक्षणरात्रिकान्तिततिषु ज्योत्स्ना प्ररोहायते।
या सौन्दर्यधुनीतरङ्गततिषु व्यालोलहंसायते
कामाक्ष्याः शिशिरीकरोतु हृदयं सा मे स्मितप्राचुरी।।४।।

யா பீந-ஸ்தந-மண்டலோபரி லஸத்-கர்ப்பூர-லேபாயதே
யா நீலேக்ஷண-ராத்ரி-காந்தி-ததிஷு ஜ்யோத்ஸ்நா
ப்ரரோஹாயதே।
யா ஸௌந்தர்ய-துநீ-தரங்க-ததிஷு வ்யாலோல
ஹம்ஸாயதே
காமாக்ஷ்யா: ஶிஶிரீ கரோது ஹ்ருதயம் ஸா மே
ஸ்மித-ப்ராசுரீ।।4।।

யா	எந்த
ஸ்மித ப்ராசுரீ	நிறைந்த புன்சிரிப்பானது
பீந-ஸ்தந-மண்டலோபரி	பருத்த ஸ்தந மண்டலத்தின் மேல்
லஸத்-கர்ப்பூர-லேபாயதே	பிரகாசிக்கிற பச்சைக் கர்ப்பூரப்பூச்சாக ஆகின்றதோ
யா	எந்தப் புன்சிரிப்பானது
நீல-ஈக்ஷண-காந்தி-ராத்ரி-	கருத்த கடாக்ஷங்களாகிற

ததிஷு	இராக்காலக் கூட்டங்களில்
ஜ்யோத்ஸ்நா- ப்ரரோஹாயதே	நிலாவின் முளையாகத் தோன்றுகிறதோ
யா	எந்தப் புன்சிரிப்பானது
ஸௌந்தர்ய-துநீ-தரங்க- ததிஷு	அழகு என்கிற நதியின் அலைகளின் வரிசைகளில்
வ்யாலோல-ஹம்ஸாயதே	ஸஞ்சரிக்கிற ஹம்ஸமாகத் தோன்றுகிறதோ
ஸா	அத்தகைய
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
மே	என்னுடைய
ஹ்ருதயம்	மனதை
ஶிஶிரீ கரோது	குளிரச்செய்யட்டும்.

எந்த நிறைந்த புன்சிரிப்பானது பருத்த ஸ்தந மண்டலத்தின் மேல் ப்ரகாசிக்கிற பச்சைக் கர்ப்பூரப் பூச்சாகத் தோன்றுகிறதோ, எந்த புன்சிரிப்பானது கருத்த கடாக்ஷங்களின் காந்தியாகிற இராக்காலக்கூட்டத்தில் புதிய நிலாவாகத் தோன்றுகிறதோ, எந்த புன்சிரிப்பானது அழகு என்ற நதியின் அலைகளில் ஸஞ்சரிக்கின்ற ஹம்ஸமாகத் தோன்றுகிறதோ, அத்தகைய காமாக்ஷியினு டைய நிறைந்த புன்சிரிப்பானது எனது மனதைக் குளிரச் செய்யட்டும்.

येषां गच्छति पूर्वपक्षसरणिं कौमुद्वत: श्वेतिमा
येषां सन्ततं आरुरुक्षति तुलाकक्ष्यां शरच्चन्द्रमा:।
येषां इच्छति कम्बुरप्यसुलभां अन्तेवसत्प्रक्रियां
कामाक्ष्या: ममतां हरन्तु मम ते हासत्विषामङ्कुरा:।।५।।

யேஷாம் கச்சதி பூர்வபக்ஷ-ஸரணிம் கௌமுத்வத:
ஶ்வேதிமா
யேஷாம் ஸந்ததம் ஆருருக்ஷதி துலா-கக்ஷ்யாம்
ஶரத்-சந்த்ரமா:।
யேஷாமிச்சதி கம்புரப்யஸுலபாம் அந்தே-வஸத்-
ப்ரக்ரியாம்
காமாக்ஷ்யா மமதாம் ஹரந்து மம தே ஹாஸ த்விஷா-
மங்குரா:॥5॥

கௌமுத்வத:	*ஆம்பலுடையதான*
ஶ்வேதிமா	*வெண்மையானது*
யேஷாம்	*எவைகளுக்கு*
பூர்வபக்ஷஸரணிம்	*பூர்வபக்ஷமென்கிற நிலைமையை*
கச்சதி	*அடைகிறதோ*
ஶரத் சந்த்ரமா:	*சரத்காலத்திய சந்திரன்*
யேஷாம்	*எவைகளின்*
துலா-கக்ஷ்யாம்	*ஸமமாயிருக்கும் நிலைமையை*
ஸந்ததம்	*எப்போதும்*
ஆருருக்ஷதி	*அடைய விரும்புகிறதோ*
கம்பு: அபி	*சங்குகூட*
அஸுலபாம்	*கிடைக்க அரிதான*
யேஷாம்	*எவைகளுக்கு*
அந்தேவஸத் ப்ரக்ரியாம்	*சிஷ்யனாயிருக்கும் நிலைமையை*
இச்சதி	*ஆசைப்படுகிறதோ*

காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
தே ஹாஸ த்விஷாம் அங்குரா:	அந்த புன்சிரிப்புக் காந்திகளின் முளைகள்
மம	என்னுடைய
மமதாம்	அஹங்காரத்தை
ஹரந்து	போக்கடிக்கட்டும்.

ஆம்பல் மலர்களுடைய வெண்மையானது எவைகளுக்குப் பூர்வபக்ஷமென்கிற நிலைமையை அடைகிறதோ, சரத்கால சந்திரன் எவைகளுடன் சமமா யிருக்கும் நிலைமையை அடைய விரும்புகிறானோ, (வெள்ளொளி வீசும்) சங்குகூட எவைகளுக்கு தனக்கு எளிதில் கிடைத்தற்கு அரிதான சீடனாயிருக்க அவாவு கின்றதோ, அப்படிப்பட்ட காமாக்ஷீ தேவியின் புன்முறுவலிலுள்ள ஒளிப்பிழம்புகள் என்னுடைய அஹங்காரத்தைப் போக்கடிக்கட்டும்.

आशासीमसु संततं विदधती नैशाकरीं व्याक्रियां
काशानाम् अभिमानभङ्गकलना कौशल्यमाबिभ्रती।
ईशानेन विलोकिता सकुतुकं कामाक्षि ते कल्मष
क्लेशापायकरी चकास्ति लहरी मन्दस्मितज्योतिषाम्॥६॥

ஆஶா-ஸீமஸு ஸந்ததம் விதததீ நைஶாகரீம் வ்யாக்ரியாம்
காஶாநாம் அபிமான-பங்க-கலனா-கௌஶல்யம்
ஆபிப்ரதீ।
ஈஶாநேந விலோகிதா ஸகுதுகம் காமாக்ஷி தே கல்மஷ-
க்லேஶாபாயகரீ சகாஸ்தி லஹரீ மந்தஸ்மித
ஜ்யோதிஷாம்॥6॥

காமாக்ஷி	ஏ காமாக்ஷி!
ஸந்ததம்	எப்போதும்
ஆஶா-ஸீமஸு	தகந்தங்களில்
நைஶாகரீம் வ்யாக்ரியாம்	சந்திரனுடையதான ரீதியை
விதததீ	செய்கிறதாயும்
காஶாநாம்	நாணல் பூக்களுடைய
அபிமாந-பங்க-கலநா கௌஶல்யம்	கொழுப்பை அடக்கும் காரியத்தில் ஸாமர்த்தியத்தை
ஆபிப்ரதீ	அடைந்திருப்பதாயும்
ஈஶாநேந	பரமசிவனால்
ஸ குதுகம்	ஆவலோடு கூட
விலோகிதா	பார்க்கப்பட்டதாயும்
கல்மஷ-க்லேசாபாய- கரி	பாபங்களால் ஏற்படும் கஷ்டங்களைப் போக்கு கிறதாயுமுள்ள
தே	உன்னுடைய
மந்தஸ்மித- ஜ்யோதிஷாம் லஹரீ	புன்சிரிப்பின் காந்திப் பெருக்கானது
சகாஸ்தி	விளங்குகிறது.

ஏ காமாக்ஷி! எப்பொழுதும் திக்கோடிகளில் சந்திரனின் ரீதியைச் செய்கிறதாயும், ''தாம்தான் வெண்மையில் சிறந்தவை'' என்ற நாணல் பூக்களுடைய

கொழுப்பை அடக்கும் கார்யத்தில் ஸாமார்த்தியத்தை அடைந்திருப்பதாயும், பரமசிவனால் ஆவலோடுகூடப் பார்க்கப்பட்டதாயும், பாபங்களாலேற்படும் கஷ்டங்களைப் போக்கடிக்கிறதாயுமுள்ள உன்னுடைய புன்சிரிப்பின் பெருக்கானது விளங்குகிறது.

ஸ்ரீ அம்பாளின் புன்சிரிப்பின் ஒளியானது திக்குகளில் பரவும்போது, அங்கு சந்திரன் விளங்குகின்றானோ வென்று எண்ணும்படி யாயிருக்கிறது.

''கல்மஷக்லேசாபாயகரீ'' என்பதற்கு கல்மஷத்திற்கு கிலேசத்தையும் அபாயத்தையும் தருவதான - என்றும் அர்த்தம் சொல்லலாம். (கல்மஷம் - கருமை, பாபம்)

आरूढस्य समुन्नतस्तनतटीसाम्राज्य सिंहासनं
कन्दर्पस्य विभोर्जगत्त्रयजयप्राकट्यमुद्रानिधेः।
यस्याश्चामरचातुरीं कलयते रश्मिच्छटा चञ्चला
सा मन्दस्मितमञ्जरी भवतु नः कामाय कामाक्षि ते।।७।।

ஆரூடஸ்ய ஸமுந்நத ஸ்தநதடீ ஸாம்ராஜ்ய ஸிம்ஹாஸநம்
கந்தர்ப்பஸ்ய விபோ: ஜகத்த்ரய ஜய ப்ராகட்யமுத்ராநிதே:।
யஸ்யா: சாமர சாதுரீம் கலயதே ரஶ்மிச்சடா சஞ்சலா
ஸா மந்தஸ்மித-மஞ்ஜரீ பவது ந: காமாய காமாக்ஷி தே।।7।

ஸமுந்நத ஸ்தந தடீ-ஸாம்ராஜ்ய-ஸிம்ஹாஸநம்	உயர்ந்த ஸ்தந தடமென்கிற ஸாம்ராஜ்ய ஸிம்ஹாஸனத்தில்
ஆரூடஸ்ய	ஏறியிருப்பவனும்

ஜகத் த்ரய-ஜய-ப்ராகட்ய-முத்ராநிதே:	மூன்று உலகங்களிலும் அடைந்த வெளிப்படையான வெற்றிக்கு அறிகுறியாகவுள்ள விருதுகளுக்கும் பொக்கிஷம் போன்றவனும்
விபோ:	ஸாமர்த்தியமுள்ள வனாயுமிருக்கிற
கந்தர்ப்பஸ்ய	மன்மதனுக்கு
சாமர -சாதுரீம்	சாமரத்தின் நிலைமையை
யஸ்யா:	எந்த புன்சிரிப்பினுடைய
சஞ்சலா ரஶ்மிச்-சடா	அசைகிற காந்தி ஸமூகமானது
கலயதே	செய்கிறதோ
காமாக்ஷி	ஏ! காமாக்ஷி!
ஸா	(அப்படிப்பட்ட) அவள்
தே	உனது
மந்தஸ்மித -மஞ்ஜரீ	பூங்கொத்துப்போன்ற புன்சிரிப்பனது
ந:	நம்முடைய
காமாய	இஷ்டத்தை நிறைவேற்றுவதாக
பவது	ஆகட்டும்.

ஏ தேவி காமாக்ஷி! எந்த புன்முறுவலின் சலிக்கின்ற ஒளியானது, உயர்ந்த ஸ்தன பாரமாகிய அரியேற்றில் வீற்றிருப்பவனும், மூவுலகத்தையும் வென்று நிகரற்றவனுமான மதன வேளுக்கு சாமரம் வீசுவது போலிருக்கிறதோ; அப்படிப்பட்ட நினது புன்முறுவலானது எமது மனோரதத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதாம்.

குறிப்பு: - புன்சிரிப்பின் காந்தியானது அம்பாளின் ஸ்தனதடத்தில் பரவி அசையும்போது அவ்விடத்தில் வீற்றிருக்கும் மன்மதராஜனுக்குச் சாமரம் வீசுவது போலிருக்கிறது.

शंभोर्या परिरम्भसंभ्रमविधौ नैर्मल्यसीमानिधिः
गैर्वाणीव तरङ्गिणी कृतमृदुस्यन्दां कलिन्दात्मजाम्।
कल्माषीकुरुते कलङ्कसुषमां कण्ठस्थलीचुम्बिनीं
कामाक्ष्याः स्मितकन्दली भवतु सा कल्याणसन्दोहिनी॥८॥

சம்போர் யா பரிரம்ப-ஸம்ப்ரம விதௌ நைர்மல்ய ஸீமாநிதி:
கைர்வாணீவ தரங்கிணீ க்ருத-ம்ருது-ஸ்யந்தாம் கலிந்தாத்மஜாம்।
கல்மாஷீ-குருதே கலங்க-ஸுஷமாம் கண்ட ஸ்தலீ-சும்பிநீம்
காமாக்ஷ்யா: ஸ்மித கந்தலீ பவது ஸா கல்யாண ஸந்தோஹிநீ॥8॥

நைர்மல்ய ஸீமாநிதி:	வெண்மையின் ராசிக்கிருப்பிடமான
யா	எந்தப் புன்சிரிப்பானது
க்ருத-ம்ருது-ஸ்யந்தாம்	மெதுவாகப் பெருகிவருகிற
கலிந்தாத்மஜாம்	யமுனையை
கைர்வாணீ தரங்கிணீ இவ	தேவ நதியான கங்கை போல
பரிரம்ப ஸம்ப்ரமவிதௌ	பரபரப்புடன் ஆலிங்கனம் செய்து கொண்ட ஸமயத்தில்
ஶம்போ:	சிவனுடைய
கண்ட-ஸ்தலீ-சும்பிநீம்	கழுத்திலிருக்கிற
கலங்க-ஸுஷமாம்	சித்திரவர்ண முடையதாகச்

கல்மாஷீகுர்தே	(வெண்மையும் கருமையும் கலந்த நிறமுள்ளதாகச்) செய்கிறதோ
ஸா	அப்படிப்பட்ட
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
ஸ்மித கந்தலீ	உயர்ந்த புன்சிரிப்பின் முளையானது
ந:	எங்களுக்கு
கல்யாண ஸந்தோஹிநீ	கல்யாணங்களைக் கொடுப்பதாக
பவது	ஆகட்டும்.

மெதுவாய் ஓடும் கருத்த யமுனா நதியை வெளுப்பான தேவநதியான கங்கை கலந்து விசித்திர வர்ணமுள்ளதாகச் செய்வதுபோல, பரபரப்புடன் ஆலிங்கனம் செய்து கொள்ளும் ஸமயத்தில் சிவனுடைய கழுத்திலிருக்கிற கருப்பு நிறத்தை மிகவும் வெளுத்த எந்த புன் சிரிப்பானது வெண்மையும் கருமையும் கலந்த ஒரு விசித்திர நிறமுள்ளதாகச் செய்கிறதோ; அவ்விதமான ஸ்ரீ காமாக்ஷியின் உயர்ந்த புன் சிரிப்பானது எங்களுக்கு மேன்மையை உண்டுபண்ணுவதாக ஆகட்டும்.

கல்யாணம் என்ற பதத்திற்கு சுபம், சுவர்ணம் என்று பொருள். எனவே மனதிற்கும் தேகத்திற்கும் வேண்டிய மங்களங்களை உண்டாக்கட்டும் என்பதாம். ''நைர்மல்யஸீமாநிதி'' என்பது ''கைர்வாணீ தரங்கிணீ'' என்பதற்கும் விசேஷணம் (அடைமொழி).

குறிப்பு:- பரமசிவனுடைய கழுத்தின் கறுப்புக்காந்தியும்,

அம்பாளுடைய, சிரிப்பின் வெளுப்புக் காந்தியும் சேர்ந்திருப்பது கங்கையும், யமுனையும் சேர்ந்தாற் போலிருக்கிறது.

जेतुं हारलतामिव स्तनतटीं संजग्मुषी सन्ततं
गन्तुं निर्मलतामिव द्विगुणितां मग्ना कृपास्रोतसि।
लब्धुं विस्मयनीयतामिव हरं रागाकुलं कुर्वती
मञ्जुस्ते स्मितमञ्जरी भवभयं मथ्नातु कामाक्षि मे।।९।।

ஜேதும் ஹாரலதாமிவ ஸ்தந தடீம் ஸஞ்ஜக்முஷீ ஸந்ததம்
கந்தும் நிர்மலதாமிவ த்விகுணிதாம் மக்நா க்ருபா ஸ்ரோதஸி।
லப்தும் விஸ்மயநீயதாமிவ ஹரம் ராகாகுலம் குர்வதீ
மஞ்ஜுஸ்தே ஸ்மித மஞ்ஜரீ பவ-பயம் மத்நாது காமாக்ஷி! மே।।9।।

காமாக்ஷி	ஏ காமாக்ஷி!
ஹாரலதாம்	முத்துமாலையை
ஜேதுமிவ	ஜயிப்பதற்குப் போல்
ஸந்ததம்	எப்போதும்
ஸ்தந - தடீம்	ஸ்தன ப்ரதேசத்தை
ஸஞ்ஜக்முஷீ	நன்கு அடைவதாயும்
த்விகுணிதாம்	இரண்டு மடங்கான
நிர்மலதாம்	வெண்மையை
கந்தும் இவ	அடைவதற்குப்போல்
க்ருபா ஸ்ரோதஸி	கருணை ப்ரவாஹத்தில்
மக்நா	முழுகியதாயும்

வின்மயநீயதாம்	ஆச்சர்யகரமான தன்மையை
லப்தும் இவ	அடைவதற்குப்போல்
ஹரம்	பரமசிவனை
ராகாகுலம்	மோஹித்தவனாக
குர்வதீ	செய்கிறதாயும்
மஞ்ஜு:	அழகாயுமிருக்கிற
தே	உனது
ஸ்மித-மஞ்ஜரீ	புன்சிரிப்பாகிய பூங்கொத்தானது
மே	எனது
பவ பயம்	ஸம்ஸார பீதியை
மத்நாது	போக்கடிக்கட்டும்.

ஏ காமாக்ஷியே! வெளுப்பான முத்துமாலையை ஜயிப்பதற்குப்போல எப்பொழுதும் ஸ்தனப்ரதேசத்தை யடைவதாயும், இரண்டு மடங்கான வெண்மையை அடைவதற்குப்போல கருணைப்ரவாகத்தில் முழுகிய தாயும், ஆச்சர்ய கரமான தன்மையை அடைவதற்குப் போல பரமசிவனை உவகை நிறந்தவனாக செய்கிறதாயும், அழகாயுமிருக்கிற்அ உனது புன்சிரிப்பு எனது ஸம்ஸார பீதியைப் (ஜனன மரண பயத்தைப்) போக்கடிக்கட்டும்.

குறிப்பு: - ராகம் என்பதற்கு ஆசை, சிவப்பு என்று பொருள். இந்த ச்லோகத்தில் மந்தஸ்மிதத்தின் வெண்மையானது பரமேச்வரனைச் சிவப்பாகச் செய்கிறது என்பது ஒரு நயம் ''வக்தும் விஸ்மயநீயதாமிவ'' என்று பாடாந்தரம். ஆச்சர்யகரமான தன்மையைத் தெரிவிப்பதற்காக என்பது பொருள்.

श्वेतापि प्रकटं निशाकररुचां मालिन्यमातन्वती
शीतापि स्मरपावकं पशुपते: सन्धुक्षयन्ती सदा।
स्वाभाव्यात् अधराश्रितापि नमतामुच्चैर्दिशन्ती गतिं
कामाक्षि स्फुटमन्तरा स्फुरतु नस्त्वन्मन्दहासप्रभा।।१०।।

ஶ்வேதாபி ப்ரகடம் நிஶாகர-ருசாம் மாலிந்யம் ஆதந்வதீ
ஶீதாபி ஸ்மர-பாவகம் பஶுபதே: ஸந்துக்ஷயந்தீ ஸதா।
ஸ்வாபாவ்யாத் அதராஶ்ரிதாபி நமதாம் உச்சைர் திசந்தீ கதிம்
காமாக்ஷி! ஸ்புடம் அந்தரா ஸ்புரது ந: த்வந் மந்தஹாஸ ப்ரபா।।10।।

காமாக்ஷி	*ஏ! காமாக்ஷி!*
ஶ்வேதா அபி	*வெளுப்பாயிருந்தபோதிலும்*
நிஶாகர ருசாம்	*சந்திரனுடைய காந்திகளுக்கு*
பிரகடம்	*அதிகமாக (வெளிப்படையாக)*
மாலின்யம்	*கரு நிறத்தை*
ஆதந்வதீ	*உண்டாக்குகிறதாயும்*
ஶீதா அபி	*குளிர்ந்ததாயிருந்தபோதிலும்*
ஸதா	*எப்போதும்*
பஶுபதே:	*பரமசிவனுக்கு*
ஸ்மர பாவகம்	*பாவகம் மன்மதாக்னியை*
ஸந்துக்ஷயந்தீ	*வளரச்செய்வதாயும்*
ஸ்வாபாவ்யாத்	*ஸ்வபாவமாக*
அதராஶ்ரிதாபி	*கீழ் உதட்டை (கீழ்பட்ட மனிதனை) ஆச்ரயித்திருந்த போதிலும்*

நமதாம்	ஸேவிப்பவர்களுக்கு
உச்சை: கதிம்	உயர்ந்த நிலைமையை
திஶந்தீ	கொடுக்கிறதாயுமிருக்கிற
த்வந்-மந்தஹாஸ-ப்ரபா	உன்னுடைய புன்சிரிப்பின் காந்தியானது
ந:	நம்முடைய
அந்தரா	மனதில்
ஸ்புடம்	நன்றாக
ஸ்புரது	விளங்கட்டும்.

ஏ காமாக்ஷியே! வெளுப்பாயிருந்த போதிலும் சந்திரனுடைய காந்திகளுக்குக் கருப்பான நிறத்தை உண்டாக்குகிறதாயும், குளிர்ச்சியுள்ளதாயினும் எப்போதும் பரமசிவனுக்கு மன்மதாக்னியை வளர்ப்பதாயும், இயற்கையாய் கீழ் உதட்டை (தாழ்ந்த மனிதனை) அச்ரயித்திருந்தபோதிலும், ஸேவிப் பவர்களுக்கு உயர்ந்தநிலையை கொடுக்கிறதாயுமிருக்கிற உனது புன்சிரிப்பின் காந்தியானது எங்களுடைய அகத்தில் நன்றாக விளங்கட்டும்.

குறிப்பு:- அதரம் என்பதற்க்கு கீழ் உதடு என்றும், கீழான மனிதன் என்றும் பொருள். தாழ்ந்த மனிதனை அடுத்திருக்கும் மந்தஹாஸம், தன்னை ஸேவிப்பவர்க ளுக்கு உயர்வான கதியைக் கொடுக்கிறது என்பது இதில் ஒரு நயம். புன்முறுவல் ஸ்வயம் வெளுப்பாயிருந்தும் சந்திரனுக்கு களங்கத்தைத் தருவதும், ஸ்வயம் குளிர்ச்சியுள்ளதாயிருந்தும் பரமசிவனுக்கு (மன்மத) அக்னியைத்தருவதும், தான் கீழ்பட்டவனை ஆச்ரயித்திருந்தாலும் பிறருக்கு

மேன்மையை அளிப்பதும் விசித்திரமானது என்கிறார்.

वक्त्रश्रीसरसीजले तरलितभ्रूवल्लिकल्लोलिते
कालिम्ना दधती कटाक्षजनुषा माधुव्रतीं व्यापृतिम्।
निर्निद्रामलपुण्डरीककुहनापाण्डित्यमाबिभ्रती
कामाक्ष्याः स्मितचातुरी मम मनः कातर्यमुन्मूलयेत्।।११।।

வக்த்ர-ஸ்ரீஸரஸீ ஜலே தரலித-ப்ரூவல்லி கல்லோலிதே
காலிம்நா தததீ கடாக்ஷ ஜநுஷா மாதுவ்ரதீம் வ்யாப்ருதீம்।
நிர்நித்ராமல-புண்டரீக குஹநா பாண்டித்யம் ஆபிப்ரதீ
காமாக்ஷ்யா: ஸ்மித-சாதுரீ மம மந: காதர்யம்
உந்மூலயேத்।।11।।

தரளித-ப்ரூவல்லி-கல்லோலிதே	*அசைகிற புருவங்களென்கிற அலைகளுள்ள*
வக்த்ர ஸ்ரீ ஸரஸீ ஜலே	*முகக்காந்தியாகிற தாமரைக் குளத்தின் நீரில்*
கடாக்ஷ-ஜநுஷா	*கடைக்கண் பார்வையி லிருந்து உண்டான*
காளிம்நா	*கருப்பினால்*
மாதுவ்ரதீம்	*வண்டுகளுடையதான*
வ்யாப்ருதிம்	*பரவுதலை*
தததீ	*வஹிப்பதாயும்*
நிர்நித்ர அமல-புண்டரீக - குஹநா பாண்டித்யம்	*மலர்ந்த வெண்தாமரையை வஞ்சிப்பதிலுள்ள ஸாமர்த்தியத்தை (வெண்தாமரையின் காந்தியை)*

ஆபிப்ரதீ	அடைகிறதாயுமிருக்கிற
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
ஸ்மித சாதுரீ	புன்சிரிப்பின் அழகானது
மம	என்னுடைய
மன: காதர்யம்	மனதிலிருக்கும் கவலையை
உந்மூலயேத்	அடியோடு ஒழிக்கட்டும்.

புருவங்களாகிய அலைகள் அமைந்த காமாக்ஷி தேவியினுடைய ஒளிதளும்பிவழியும் முக காந்தியாகிய தாமரைத் தடாகத்தில் கண்களின் கரியகாந்தியாகிய வண்டுகள் மொய்க்கும்படி செய்வதும் மலர்ந்த வெண்தாமரையின் அழகைக் கவர்ந்ததென்று எண்ணத்தக்கதுமான புன்முறுவலின் அழகானது என் மனதிலுள்ள கவலையை அடியோடு ஒழிக்கட்டும். அம்பாளுடைய முககாந்தி ப்ரவாஹம் ஒரு தடாகம் போலிருக்கிறது. தடாகத்தில் வெண்தாமரையும், அலைகளும், வண்டுகளும் இருப்பதுபோல், அம்பாளுடைய புன்சிரிப்பு வெண்தாமரை போலவும், கடைக்கண் காந்தி வண்டுபோலவும், புருவம் அலைபோலவும் இருகின்றன.

नित्यं बाधितबन्धुजीवमधरं मैत्रीजुषं पल्लवैः
शुद्धस्य द्विजमण्डलस्य च तिरस्कर्तारमप्याश्रिता।
या वैमल्यवती सदैव नमतां चेतः पुनीतेतरां
कामाक्ष्या हृदयं प्रसादयतु मे सा मन्दहासप्रभा।।१२।।

நித்யம் பாதித பந்துஜீவமதரம் மைத்ரீ ஜுஷம் பல்லவை:
ஶுத்தஸ்ய த்விஜ மண்டலஸ்ய ச திரஸ்கர்த்தாரம்
அப்யாஶ்ரிதா।

யா வைமல்யவதீ ஸதைவ நமதாம் சேத: புநீதே தராம்
காமாக்ஷ்யா: ஹ்ருதயம் ப்ரஸாதயது மே ஸா
மந்தஹாஸ-ப்ரபா||12||

நித்யம்	எப்போதும்
பாதித - பந்துஜீவம்	பந்துக்களுடைய ஜீவனைப்பாதிப்பதும் (பாதிக்கப்பட்ட சம்பரத்தம் பூவையுடைவதும் அதாவது அதற்குணமாமாயும்)
பல்லவை:	துஷ்டர்களோடு (தளிர்களோடு)
மைத்ரீஜுஷம்	ஸ்நேஹமுள்ளதும்
சுத்தஸ்ய	சுத்தமான (வெளுப்பான)
த்விஜ மண்டலஸ்ய	ப்ராம்மண ஸமூஹத்தை (பற்களின் கூட்டத்தை)
திரஸ்கர்த்தாரம்	அவமானம் செய்வதாயும் (மறைப்பதாயும்) உள்ள
அதரம்	உதட்டை (கீழான மனிதனை)
ஆஶ்ரிதா அபி	அடைந்திருந்தாலும்
யா	எந்த புன்சிரிப்பானது
வைமல்யவதீ	பாபமற்றதாயிருந்துகொண்டு (வெளுப்பாயிருந்துகொண்டு)
ஸதைவ	எப்போதும்
நமதாம்	நமஸ்கரிக்கிறவர்களுடைய
சேத:	மனதை
புநீதேதராம்	மிகவும் பரிசுத்தமாக்குகிறதோ

காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
ஸா	அந்த
மந்தஹாஸ ப்ரபா	புன்சிரிப்பின் காந்தியானது
மே	என்னுடைய
ஹ்ருதயம்	மனதை
ப்ரஸாதயது	தெளிவு செய்யவேண்டும்.

எப்போதும் பந்துக்களைப்பாதிப்பதும் துஷ்டர்களோடு சேர்ந்தும், சுத்தமான பிராம்மண ஸமூஹத்தை அவமதிக்கும் கீழானமனிதனை ஆச்ரயித்துமிருந்தாலும்கூட, அதாவது செம்பரத்துப் பூக்களுக்கொப்பான தளிர்களோடு ஸ்நேஹமுள்ள (அதாவது - அதுபோல் மிருதுவான) வெளுப்பான பற்களை மறைக்கும் உதட்டை அடைந்தாலும் எந்தப்புன்சிரிப்பானது தான் எப்போதும் வெளுப்பாய் (பாபமற்றதாய்) நமஸ்கரிக்குமவர்களின் மனதைப் பரிசுத்தம் பண்ணுகிறதோ, அப்படிப்பட்ட காமாக்ஷியினுடைய புன்சிரிப்பானது என் மனதை ஸந்நமாக (அதாவது அழுக்கற்றதாக, ஸந்தோஷமுள்ளதாக) செய்தருளவேண்டும்.

பந்துக்களை ஹிம்ஸித்து துஷ்ட ஸஹவாஸம் செய்து பிராம்மணர்களை அவமதித்துக் கீழாரோடு சேர்ந்திருக்கும் வஸ்துவானது, தான் சுத்தமாய் தன்னை வணங்கும் பிறரைப் பரிசுத்தம் பண்ணுவது என்பது ஆச்சர்யம் என்பது குறிப்பு. செம்பரத்தம் பூவுக்கு ஸமமும், தளிர்போல் மிருதுவும், பற்களை மறைப்பதுமான உதட்டை அடைந்துள்ள புன்சிரிப்பு, தான் வெளுப்பாய் வணங்கினவர்களுக்குப் பரிசுத்தியைத் தருகிறது என்பது வாஸ்தவார்த்தம்.

द्रुह्यन्ती तमसे मुहु: कुमुदिनीसाहाय्यमाबिभ्रती
यान्ती चन्द्रकिशोरशेखरवपु:सौधाङ्गणे प्रेङ्खणम्।
ज्ञानाम्भोनिधिवीचिकां सुमनसां कूलङ्कषां कुर्वती
कामाक्ष्या: स्मितकौमुदी हरतु मे संसारतापोदयम्।।१३।।

த்ருஹ்யந்தீ தமஸே முஹு: குமுதிநீ - ஸாஹாய்யம் ஆபிப்ரதீ
யாந்தீ சந்த்ர கிஶோர ஶேகர வபுஸ் ஸௌதாங்கணே ப்ரேங்கணம்।
ஞானம்போ நிதி வீசிகாம் ஸுமநஸாம் கூலங்கஷாம் குர்வதீ
காமாக்ஷ்யா: ஸ்மித கௌமுதீ ஹரது மே ஸம்ஸார தாபோதயம்।।13।।

முஹு:	அடிக்கடி
தமஸே	இருளுக்கு *(அஞ்ஞானத்துக்கு)*
த்ருஹ்யந்தீ	பகைகொள்வதாயும்
குமுதிநீ ஸாஹாய்ய:	ஆம்பலுக்கு உதவியை
ஆபிப்ரதீ	அடைகிறதாயும்
சந்த்ர-கிசோர-சேகர-வபுஸ்-ஸௌத-அங்கணே	இளஞ்சந்திரனைத் தலையில் சூடிய பரமசிவனுடைய சரீரமாகிற உப்பரிகையில்
ப்ரேங்கணம் யாந்தீ	உலாவுதலை அடைவதாயும்
ஸுமநஸாம்	வித்வான்களுடைய (நல்ல மனதுடையவர்களுடைய)
ஞான அம்போ நிதி வீசிகாம்	ஞானமென்கிற ஸமுத்ரத்தின் அலையை
கூலங்கஷாம் குர்வதீ	கரைபுரண்டு செல்லும்படி

	செய்கிறதுமான
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
ஸ்மித கௌமுதீ	புன்சிரிப்பாகிற நிலாவானது
மே	எனது
ஸம்ஸார தாப உதயம்	ஸம்ஸார தாபத்தின் உத்பத்தியை
ஹரது	போக்கடிக்கட்டும்

அக்ஞானமென்னும் இருளை நீக்குவதும், ஆம்பல் புஷ்பங்களுக்கு அநுகூலத்தைச் செய்வதும், இளம் பிறையை தலையில் சூடிய சிவபெருமானுடைய திருமேனியாகிற உப்பரிகையில் உலாவுகிறதும், வித்வான்களுடைய (நல்ல மன முள்ளவர்களின்) ஞானமென்னும் கடலின் அலைகளைக் கரை புரண்டோடும்படி செய்வதுமான காமாக்ஷியின் புன்முறுவலாகிய நிலாவானது என் ஸம்ஸாரதாபத்தின் எழுச்சியை அழித்தருளட்டும்.

குறிப்பு:- நிலா இருளை நீக்கும். ஆம்பலுக்குத் துணையாயிருக்கும், மாளிகைத்தளத்தில் தவழும். ஸமுத்திரத்தை அலைபுரள வளர்க்கும். இந்தக்காரியங் களை அம்பாளுடைய புன்சிரிப்பு என்கிற நிலாவும் செய்கிறது.

काश्मीरद्रवधातुकर्दमरुचा कल्माषतां बिभ्रती
हंसौघैरिव कुर्वती परिचितं हारीकृतैर्मौक्तिकैः।
वक्षोजन्मतुषारशैलकटके सञ्चारमातन्वती
कामाक्ष्या मृदुलस्मितद्युतिमयी भागीरथी भासते।।१४।।

காஶ்மீர த்ரவ தாது கர்தம ருசா கல்மாஷதாம் பிப்ரதீ
ஹம்ஸௌகைரிவ குர்வதீ பரிசிதம் ஹாரீ க்ருதைர்
மௌக்திகை:।
வக்ஷோஜ ஜந்ம துஷார சைல கடகே ஸஞ்சாரமாதந்வதீ
காமாக்ஷ்யா ம்ருதுல ஸ்மித த்யுதிமயீ பாகீரதீ
பாஸதே॥14॥

காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
ம்ருதுல ஸ்மித த்யுதீ மயீ	அழகான மந்தஹாஸ காந்தியாகிற
பாகீரதீ	கங்கையானது
காச்மீர த்ரவ தாது கர்தம ருசா	குங்குமக் குழம்பின் காந்தியால்
கல்மாஷதாம் பிப்ரதீ	விசித்திர வர்ணத்தை அடைந்ததாயும்
ஹாரீக்ருதை: மௌக்திகை:	ஹாரமாகச்செய்யப்பட்ட முத்துக்களோடு
ஹம்ஸ ஓகை: இவ	ஹம்ஸக்கூட்டங்களோடு போல
பரிசிதம்	ஸஹவாஸத்தை
குர்வதீ	செய்கிறதாயும்
வக்ஷோஜ ஜக்ம துஷார சைல கடகே	ஸ்தனமண்டலமென்கிற ஹிமயமலையின் தாழ்வரையில்
ஸஞ்சாரம் ஆதந்வதீ	ஸஞ்சாரத்தைச் செய்கிறதாயும்
பாஸதே	விளங்குகிறது.

காமாக்ஷியின் அழகிய மந்தஹாஸத்தின் காந்தி என்னும் கங்கையானது, குங்குமப்பூச் சேர்ந்த சந்தனக்குழம்பில் கலக்கப்பட்ட (கஸ்தூரியின்) கறுத்த காந்தியால் விசித்திர வர்ணத்தையடைந்ததாயும், ஹார மாகப்

போடப்பட்ட (வெண்மையான) முத்துக்க ளென்னும் ஹம்ஸங்களோடு பரிசயத்தைச் செய்து கொண்டிருப்பதாயும், ஸ்தநபாரமாகிற ஹிமய மலையின் தாழ்வரையில் ஸஞ்சாரத்தைச் செய்து கொண்டி ருப்பதாயும் திகழுகிறது.

கங்கை ஹிமயமலையிலிருந்து கிளம்பி, யமுனா நதியோடு கலக்கும்போது வேறொரு நிறம் பெற்று, ஆங்காங்கு அன்னபக்ஷிகளோடு கூடியதாயிருக்கும். அம்பாளுடைய புன்சிரிப்பு என்னும் கங்கைக்கும் இவைகள் பொருந்தியிருக்கின்றன.

வெண்மையான புன்னகையின் சோதிவெள்ளமே கங்கை; பூசப்பட்ட குங்குமம் கஸ்தூரி முதலியன சேர்ந்த கலவைச் சாந்தின் மேல் பரவி அக்காந்தி ஒரு விசித்திர வர்ணத்தை அடைகிறது. ஹாரத்திலுள்ள நல்ல முத்துக்களோடு சேரும்போது, கங்கை ஹம்ஸங்களோடு கூடியதுபோல இருக்கிறது. அழகிய பருத்த ஸ்தனங் களின் மேல் காந்தி பரவுவது ஹிமயமலைச் சிகரத்தில் ஸஞ்சரிப்பது போன்றுள்ளது.

कम्बोर्वम्शपरम्परा इव कृपासन्तानवल्लीभुव:
सम्फुल्लस्तबका इव प्रसृमरामूर्त्ता: प्रसादा इव।
वाक्पीयूषकणा इव त्रिपथगापर्यायभेदा इव
भ्राजन्ते तव मन्दहासकिरणा: कामाक्षि! काञ्चीप्रिये।।१५।।

கம்போ: வம்ச பரம்பரா இவ க்ருபா ஸந்தாநவல்லீ புவ:
ஸம்புல்ல-ஸ்தபகா இவ ப்ரஸ்ருமரா மூர்த்தா: ப்ரஸாதா இவ।
வாக் பீயூஷ கணா இவ த்ரிபதகா பர்யாய பேதா இவ
ப்ராஜந்தே தவ மந்தஹாஸ கிரணா: காமாக்ஷி! காஞ்சீ ப்ரியே।।15।।

காஞ்சி ப்ரியே	காஞ்சி பட்டணத்தில் ஆசையுள்ளவளான
காமாக்ஷி!	ஏ காமாக்ஷியே!
தவ	உனது
க்ருபா ஸந்தாந வல்லீபுவ:	கருணையாகிற ஸந்தானக்கொடியிலிருந்து உண்டான
மந்தஹாஸ கிரணா:	புன்சிரிப்பின் காந்திகள்
கம்போ: வம்சபரம்பரா இவ	சங்கின் வம்சத்தின் வரிசை போலும்
ப்ரஸ்ருமரா:	பரவுகின்ற
ஸம்புல்ல ஸ்தபகா: இவ	மலர்ந்த பூங்கொத்துக்கள் போன்றும்
மூர்த்தா:	உருவெடுத்து வந்த
ப்ரஸாதா: இவ	அநுக்ரஹங்கள் போலவும்
வாக் பீயூஷ கணா: இவ	வாக்குகளென்ற அம்ருதத்தின் திவலைகள் போன்றும்
த்ரிபதகா பர்யாய பேதா: இவ	கங்கையின் வேறு ஒரு உருவம் போன்றும்
ப்ராஜந்தே	விளங்குகின்றன

காஞ்சி நகரில் ஆசையுள்ள காமாக்ஷியே! உன் கருணையென்னும் ஸந்தானக் கொடியிலிருந்துண்டான புன்சிரிப்பின் கிரணங்கள், சங்கின் வம்சத்தின்

வரிசைகள்போலும், மலர்ந்த பூங்கொத்துக்கள்போலும், உருவெடுத்துவந்த அருள்போலும், வாக்கென்னும் அம்ருதத்தின் திவலைகள்போலும், கங்கையின் வேறொரு உருவம்போலும் விளங்குகின்றன.

ஒன்பதாவது ச்லோகத்தில் கருணைப் பிரவாஹத்தில் மந்தஸ்மிதமானது முழுகியதாய் வர்ணித் திருக்கிறதையும், இதில் கிருபையாகிய கற்பகக் கொடியில் உண்டான பூங்கொத்துப் போன்று சொல்லப் பட்டிருக்கிறதையும் கவனிக்கவும்.

புன்முறுவல் வெளுப்பான பல வஸ்துக்களுக்கு ஸமானமாக இருக்கிறது என்கிறார். அவையாவன: சங்குக்கூட்டங்களின் வரிசை, மலர்ந்த பூங்கொத்துக்கள், உருக்கொண்ட அருள்கள், அம்ருதத்தின் திவிலைகள், கங்கையின் ரூபாந்தரம்.

த்ரிபதகா - (ஆகாசம், பூமி, பாதாளம் என்ற) மூன்று மார்க்கங்களில் ஓடுவதால் கங்கைக்குத் 'த்ரிபதகா' என்று பெயர். அந்த கங்கா ஜலம் வெளுப் பாயிருப்பதால் புன்னகைக்கு ஒப்பிடப்பட்டது.

''காஞ்சீபுரீ நாயிகே'' என்றும் பாடம். ''க்ருபாஸந்தாந வல்லீ புவ:'' என்பதை நாலாம் அடியிலுள்ள ''மந்தஹாஸகிரணா:'' என்பதற்கு விசேஷணமாகச் (அடைமொழியாக)செய்யாமல் கிட்ட இருக்கும் ''ஸம்ப்புல்லஸ்தபகா:'' என்பதற்கே விசேஷணமாக்குவது ஸ்வரஸம். அப்போது, காஞ்சீ புரியின் நாயகியாகிய காமாக்ஷி! உனது மந்தஹாஸ கிரணங்கள், சங்கின் வம்சாவளி போலவும், கருணையென்னும் கற்பகக்கொடியினின்று

உண்டான மலர்ந்த பூங்கொத்துக்கள் போலவும்............. விளங்குகின்றன - என்பது பொருள்.

वक्षोजे घनसारपत्ररचनाभङ्गीसपत्नायिता
कण्ठे बन्धुरदन्तपत्रकुहनाव्यापारमुद्रायिता।
ओष्ठश्रीनिकुरुम्बपल्लवपुटे प्रेङ्खत्प्रसूनायिता
कामाक्षि स्फुरतां (तात्) मदीयहृदये त्वन्मन्दहासप्रभा।१६।।

வக்ஷோஜே கநஸார பத்ர ரசநா பங்கீ ஸபத்நாயிதா
கண்டே பந்துர தந்த பத்ர குஹநா வ்யாபார முத்ராயிதா।
ஓஷ்ட ஸ்ரீ நிகுரும்ப பல்லவ புடே ப்ரேங்கத் ப்ரஸூ
நாயிதா
காமாக்ஷி! ஸ்புரதாம் (தாத்) மதெய - ஹ்ருதயே த்வத்
மந்தஹாஸ ப்ரபா।।16।।

காமாக்ஷி!	*ஏ காமாக்ஷியே!*
வக்ஷோஜே	*ஸ்தனங்களில்*
கநஸார பத்ர ரசநா பங்கி ஸபத்நாயிதா	*பச்சைக்கர்ப்பூரப் பூச்சுக்கு எதிரி போலிருப்பதும்*
கண்டே	*கழுத்தில்*
பந்துர தந்த பத்ர குஹநா வ்யாபார முத்ராயிதா	*அழகிய காண்டாபரணத்தின் வஞ்சநாகார்யத்தின் முத்ரைபோலும்*
ஓஷ்ட ஸ்ரீ நிகுரும்ப பல்லவ புடே	*உதடுகளின் காந்தி ஸமூஹமாகிற தளிர்களில்*
ப்ரேங்கத் ப்ரஸூநாயிதா	*விளங்குகிற புஷபம் போலவும் இருக்கிற*
த்வந் மந்த ஹாஸ ப்ரபா	*உனது புன்சிரிப்பின் காந்தியானது*

மதீய ஹ்ருதயே	எனது மனதில்
ஸ்புரதாம் (தாத்)	ப்ரகாசிக்கட்டும்.

காமாக்ஷியே! ஸ்தனத்தில் பச்சைக்கற்பூரத்தில் எழுதப்பட்ட மகரிகாபத்ரங்களின் சோபைக்கு எதிரி போன்றதும், கழுத்தில் அணியப்பட்ட அழகிய மாலைஅயின் கார்யத்திற்கு ஒரு முத்ரைபோன்றதும், உதடுகளின் காந்தியென்னும் தளிர்களில் பூத்த ஒரு புஷ்பம்போன்றதுமான உன் புன்னகையின் சோபை என் மனதில் பிரகாசிக்கட்டும்.

வக்ஷோஜே கநஸார பத்ர ரசநா - ஸ்திரீகள் கன்னங்கள் மார்பு முதலான இடங்களில் அழகுக்காகவும், வாஸனைக்காகவும் பச்சைக்கற்பூரம் முதலிய ஸுகந்தத்திரவ்யங்களால் மீன்போல் எழுதிக் கொள்வது வழக்கம். புன்னகையின் வெண்மையான காந்தி ஸ்தனங்கள்மேல் விழுந்திருப்பதைப் பார்த்தால் கற்பூரத்தால் எழுதப்பட்ட மகரிகாபத்ரங்கள்தானோ இவை என்று தோன்றுகிறது.

கண்டே........முத்ராயிதா - மந்தஸ்மிதத்தின் காந்தியானது கழுத்துப்பக்கம் பரவும்போது, அழகிய காதணியினாலுண்டாகும் சோபை போலிருக்கிறது என்பது பொருள். தந்த பத்ரம் - குண்டலம் என்று சப்தகல்பத்ருமத்தில் சொல்லியிருக்கிறது.

''கண்டே மௌக்திகஹாரயஷ்டி கிரண வ்யாபார....,, என்னும் பாடத்தில், கழுத்தில் அணிந்திருக்கும் முத்து மாலையின் கார்யத்திற்கு முத்ரை போன்றது - என்பது பொருள்.

''கர்ணே பந்துரதந்தபத்ர குஹநா வ்யாபார முத்ராயிதா,, என்று நிர்ணயஸாகர பிரஸில் அச்சிட்டபுஸ்தகத்தில் பாடம் காண்கிறது. அந்தப் பாடத்தில் - காது வரையில் பரவும் மந்தஹாஸத்தின் காந்தி, காதில் அணியும் ஆபரணத்தின் வியாபாரம் போலிருக்கிறது - என்பது பொருள். தந்தபத்ர்யம் - யானைத்தந்தத்தால் செய்யப்படும் காதில் அணியக்கூடிய ஓர் ஆபரணம். ''கர்ணாவஸக்தாமலதந்தபத்ரம் மாதாததீயம் முகமுந்நமய்ய'' என்று குமார ஸம்பவத்தில் (ஸ.7. சு.23) சொல்லியபடி காதிலிடும் ஆபரணமே தந்தபத்ரம் என்பது அறியத்தக்கது.

येषां बिन्दुरिवोपरि प्रचलितो नासाग्रमुक्तामणि:
येषां दीन इवाधिकण्ठमयते हार: करालम्बनम्।
येषां बन्धुरिवोष्ठयोररुणिमा धत्ते स्वयं रञ्जनं
कामाक्ष्या: प्रभवन्तु ते मम शिवोल्लासाय हासाङ्कुरा:।।१७।।

யேஷாம் பிந்தூரிவோபரி ப்ரசலிதோ நாஸக்ரமுக்தாமணி:
யேஷாம் தீந இவாதி கண்டமயதே ஹார: கராலம்பநம்।
யேஷாம் பந்துரிவோஷ்டயோரருணிமா தத்தே ஸ்வயம் ரஞ்ஜநம்
காமாக்ஷ்யா: ப்ரபவந்து தே மம சிவோல்லாஸாய ஹாஸாங்குரா:।।17।।

நாஸா அக்ர முக்தாமணி:	மூக்கின் நுனியிலிருக்கும் புல்லாக்கின் முத்தானது
யேஷாம்	எந்தப் புன்சிரிப்புக்களுடைய
உபரி ப்ரசலித:	மேலே செல்லுகிற
பிந்து: இவ	திவ்லைபோல் தோன்றுகின்றனவோ
அதிகண்டாம்	கழுத்திலிருக்கிற

ஹார:	ஹாரமானது
தீந: - இவ	களைத்தவன் போல்
யேஷாம்	எந்த புன்சிரிப்புக்களுடைய
கர அவலம்பநம்	கைலாக்கை
அயதே	அடைகிறதோ
ஓஷ்டயோ:	உதடுகளினுடைய
அருணிமா	சிவப்பானது
யேஷாம்	எந்தப் புன்சிரிப்புகளுடைய
பந்து: இவ	பந்துபோல்
ஸ்வயம்	தானாகவே
ரஞ்சநம்	ஆதரவை (சிவப்பை)
தத்தே	அடைகிறதோ
தே	அப்படிப்பட்ட
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
ஹாஸ-அங்குரா:	புதிய புன்சிரிப்பின் கொழுந்துகள்
மம	எனக்கு
சிவ உல்லாஸாய	க்ஷேமத்தின் அபிவிருத்தியின் பொருட்டு
ப்ரபவந்து	ஆகட்டும்.

புல்லாக்கின் முத்தானது காமாக்ஷிதேவியின் எந்த புன்சிரிப்புக்களுடைய மேல்நோக்கிச்செல்லும் ஒரு திவிலைபோன்றுளதோ, கழுத்திலணிந்த ஹாரம் களைத் தவன்போல எவைகளின் கைலாக்கையடை கின்றதோ, உதடுகளின் செவ்வொளி பந்துபோல எவற்றின் ஆதரவைத்

தானாகவே அடைகிறதோ, அப்பேற்பட்ட புன்முறுவல்கள் எனக்கு மங்களங்களின் அபிவிருத்தியின் பொருட்டு ஆகட்டும்.

யேஷாம் பிந்து: இவ....நாஸாக்ர-முக்தாமணி: - மூக்கில் விளங்கும் புல்லாக்கின் முத்து அதரங்களில் திகழும் புன்முறுவலின் மேல்நோக்கிச்செல்லும் ஒரு திவிலையோ என்று சொல்லும்படியிருக்கிறது.

தீந இவ..... கராலம்பகம் - புல்லாக்கின் முத்தினுடைய கீழ்ச்செல்லும் கிரணங்களைப்பார்த்தால் தளர்ந்து கீழே விழுவதுபோல் தோன்றுகிற கழுத்தில் பிரகாசிக்கும் ஹாரத்தைத் தூக்குவதற்குக் கை கொடுப்பதுபோல் தோற்றுகிறது.

या जाड्याम्बुनिधिं क्षिणोति भजतां वैरायते कैरवे:
नित्यं या नियमेन या च यतते कर्तुम् त्रिनेत्रोत्सवम्।
बिम्बं चान्द्रमसं च वञ्चयति या गर्वेण सा तादृशी
कामाक्षि स्मितमञ्जरी तव कथं ज्योत्स्नेत्यसौ कीर्त्यते।।१८।।

யா ஜாட்யாம்பு நிதிம் க்ஷிணோதி பஜதாம் வைராயதே கைரவை:
நித்யம் யா நியமேந யா ச யததே கர்த்தும் த்ரிநேத்ரோத்ஸவம்।
பிம்பம் சாந்த்ரமஸம் ச வஞ்சயதி யா கர்வேண ஸா தாத்ருசீ
காமாக்ஷி ஸ்மித மஞ்ஜரீ தவ கதம் ஜ்யோத்ஸ்நேத்யஸௌ கீர்த்யதே।।18।।

காமாக்ஷி!	காமாக்ஷியே!
யா	எந்தப் புன்சிரிப்பானது

பஜதாம்	அண்டினவர்களுடைய
ஜாட்ய அம்புநிதிம்	முட்டாள் தனமாகிய ஸமுத்ரத்தை
க்ஷிணோதி	வற்றும்படி செய்கிறதோ
யா	எந்தப் புன்சிரிப்பானது
நித்யம்	எப்போதும்
கைரவை:	ஆம்பல்களோடு
வைராயதே	வைரம் பாராட்டுகிறதோ எந்தப் புன்சிரிப்பானது
நியமேந	கட்டாயமாக
த்ரிநேத்ர உத்ஸவம்	முக்கண்ணனுக்கு ஆனந்தத்தை
கர்த்தும்	செய்வதற்கு
யததே ச	யத்னமும் செய்கிறதோ
யா	எந்தப் புன்சிரிப்பானது
கர்வேன	கர்வத்தினால்
சாந்த்ரமஸ: பிம்பம் ச	சந்த்ர பிம்பத்தையும்
வஞ்சயதி	ஏமாற்றுகிறதோ
ஸா	அந்த
தாத்ருஷீ	ஆப்பேர்ப்பட்ட
தவ	உனது
அஸௌ ஸ்மிதமஞ்ஜரீ	இந்த மந்தஹாஸமலர்கொத்தானது
ஜ்யோத்ஸ்நா இதி	எப்படி
கீர்த்யதே	சொல்லப்படுகிறது ?

காமாக்ஷியே! எந்தப் புன்சிரிப்பானது ஆச்ரயித்தவர்களுடைய அஜ்ஞானமென்னும் கடலை வற்றச் செய்கிறதோ, எது எப்போதும் ஆம்பல் புஷ்பங்களோடு பகையைப்பாராட்டுகிறதோ, எது முக்கண்ணனான பரமசிவனுக்கு ஆநந்தத்தை அளிக்க முயலுகிறதோ, எது கர்வத்தால் சந்திரபிம்பத்தையும் ஏமாற்றுகிறதோ, அப்பேர்ப்பட்ட பிரஸித்தமான உன் (என் கண்முன் திகழும்) பூத்த புன்முறுவலை நிலா என்று கவிகள் கூறுவது எப்படி?

நிலாவுடன் மந்தஸ்மிதத்தை வித்வான்கள் ஒப்பிடுகிறார்கள். ஆனால் இவ்விரண்டுக்கும் பல வேற்றுமைகள் இருக்கின்றனவே என்று கவி குறிப்பிடுகிறார்.

நிலா கடலைப் பொங்கச் செய்யும்; ஆம்பல்களை மலரச்செய்யும்; சந்திரனுக்கும் சோபையைக் கொடுக்கும்; புன்முறுவலோ (அஜ்ஞானக்) கடலை வற்றச்செய்கிறது; (தன் வெண்மையின் காந்தியால் ஆம்பல்களயும் (மீறி நிற்பதால் பகைக்கிறது; (சோபையின்) கர்வத்தால் சந்திரமண்டலத்தையும் (விஞ்சி) வஞ்சிக்கிறது. இப்படி நிலாவைக்காட்டிலும் விபரீதமான குணங்களையுடைய உன் புன்முறுவலைக் கவிகள் எங்ஙனம் நிலாவோடு ஒப்பிடுகிறார்கள்.

आरूढा रभसात्पु(दु)र: पुररिपोराश्लेषणोपक्रमे
या ते मातरुपैत(ति) दिव्यतटिनीशङ्काकरी तत्क्षणम्।
ओष्ठं (ओष्ठौ) वेपयति भ्रुवौ कुटिलयत्यानम्रयत्याननं
तां वन्दे मृदुहासपूरसुषमां[2] कामाक्षि कामप्रदे।।१९।।

---

[2] **एकाम्रनाथप्रिये** ஏகாம்ரநாதப்ரியே என்றும் பாடம்.

ஆரூடா ரபஸாத் (உர:) புர: புர-ரிபோ: ஆச்லேஷ்ணோ
பக்ரமே
யா தே மாதருனபதி திவ்ய தடிநீ சங்கா சங்கா கரீ
தத்க்ஷணம்।
ஒஷ்டம் (டௌ) வேபயதி ப்ருவௌ குடிலயத்யாநம்ர-
யத்யாநநம்
தாம் வந்தே ம்ருத்-ஹாஸபூர ஸுஷமாம் காமாக்ஷி!
காமப்ரதே॥19॥

மாத:	தாயாராயும்
காமப்ரதே	இஷ்டங்களைக் கொடுப்பவளாயுமிருக்கிற
காமாக்ஷி! புரரிபோ:	ஏ காமாக்ஷியே த்ரிபுரங்களுக்குச் சத்ருவான பரமசிவனுடைய
ஆச்லேஷண உபக்ரமே	ஆலிங்கனத்தின் ஆரம்பத்தில்
ரபஸாத்	வேகமாக
புர:	முன்பாக
ஆரூடா	ஏறியிருக்கிற
தே	உனது
யா	எந்த புன்சிரிப்பானது
உபேத திவ்ய தடிநீ சங்காகரீ	அங்கே வந்துள்ள தேவ கங்கை என்னும் ஸந்தேகத்தை உண்டு பண்ணுகிறதாக ஆகி
தத்க்ஷணம்	உடனே
ஒஷ்டம் வேபயதி	உதட்டைத் துடிக்கும்படி செய்கிறதோ
ப்ருவௌ	புருவங்களை

குடிலயதி	தெரியச்செய்கிறதோ
ஆநநம் ஆநம்ரயதி	முகத்தை குனியச் செய்கிறதோ
தாம்	அப்படிப்பட்ட
ம்ருது ஹாஸ பூர ஸுஷமாம்	மந்தஹாஸப் பிரவாஹத்தின் காந்தியை
வந்தே	நமஸ்கரிக்கிறேன்.

'ஓஷ்டௌ' என்ற பாடத்தில் உதடுகளை என்று அர்த்தம் ''மாதருபைதி திவ்ய.......'' என்ற பாடத்தில், கங்கையென்னும் ஸந்தேஹத்தை உண்டுபண்ணிக் கொண்டு அருகில் வருகிறதோ, என்று அர்த்தம்.

''ஆரூடா ரபஸாதுர: புரரிபோ:'' என்னும் பாடத்தில் பரமசிவனின் மார்பை அடைந்திருக்கிற எந்த மந்தஹாஸமானது என்று அர்த்தம். பரமசிவன் பார்வதி மந்தஹாஸம் செய்தாள். வெளுப்பான மந்தஹாஸம் பரமசிவனின் மார்பில் வெள்ளமிட்டது. அதைக்கண்டு பார்வதி கங்கை தான் வந்துவிட்டாளோ என்று ஸந்தேஹங்கொண்டாள் என்பது பொருள்.

எல்லா மனோரதங்களையும் நிறைவேற்று பவளான தாயே காமாக்ஷி! முப்புரமெரித்த பரமசிவன் உன்னை ஆலிங்கனம் செய்ய ஆரம்பிக்கும்போதே (ஸந்தோஷத்துடன்) அவனை நோக்கிச்சென்ற எந்த உன் புன்சிரிப்பானது உடனேயே அவன் தலையில் இருக்கும் கங்கைதானோ என்ற ஸந்தேஹத்தை (உனக்கு) உண்டுபண்ணுவதாக ஆகி, (ப்ரணயகலஹத்தால் ஏற்பட்ட கோபத்தினால்) உன் உதடுகளைத் துடிக்கச் செய்கிறதோ, புருவங்களை நெரியச்செய்கிறதோ, முகத்தைக் குனியும்படி

செய்கிறதோ, அப்படிப்பட்ட மந்தஹாஸப் பிரவாஹத்தின் காந்தியை நமஸ்கரிக்கிறேன்.

பரமேச்வரன் இறுகத் தழுவும் தருணத்தில் புன்னகையின் வெண்மையான காந்தி வெள்ளமிடுகிறது. அது அவர்தலையில் விழுவதைப் பார்த்தால் அவர் தலையால் தாங்கும் கங்காதேவிதானோ என்ற ஸந்தேஹம் ஏற்படுகிறது. அதனால் கோபத்திற்கு அடையாளமான உதடு துடித்தல் புருவம் நெறித்தல் முதலியவைகளைச் செய்விக்கின்றது புன்சிரிப்பு என்கிறார். "ஆரூடா ரபஸாத்பஶிர:" என்ற பாடம் கொண்டால் இவ்விதம் அர்த்தமாகும்.

वक्त्रेन्दोस्तव चन्द्रिका स्मितरुचिर्वल्गु स्फुरन्ती सतां
स्याच्चेद्युक्तमिदं चकोरमनसां कामाक्षि कौतूहलम्।
एतच्चित्रमहर्निशं यदधिकामेषा[3] रुचिं गाहते
बिम्बोष्ठद्युमणिप्रभास्वपि च यत्बिब्बोकम् आलम्बते।।२०।।

வக்த்ரேந்தோ: தவ சந்த்ரிகா ஸ்மிதருசி: வல்கு ஸ்புரந்தீ ஸதாம்
ஸ்யாத் சேத் யுக்தமிதம் சகோர மநஸாம் காமாக்ஷி கௌதூஹலம்।
ஏதத் சித்ரமஹர்நிசம் யததிகா மேஷா ருசிம் காஹதே
பிம்போஷ்ட த்யு மணி- ப்ரபாஸ்வபி ச யத் பிப்வோகம் ஆலம்பதே।।20।।

---

[3] **यदधिकामाभां सदा गाहते** – யத் அதிகாம் ஆபாம் ஸதரகாஹதே என்று பாடாந்தரம்

காமாக்ஷி!	காமாக்ஷியே
தவ	உனது
ஸ்மித ருசி:	புன்சிரிப்பின் காந்தியானது
வக்த்ர இந்தோ:	முகமாகிற சந்திரனுடைய
சந்த்ரிகா	நிலாவாக ஆகி
வல்கு	அழகாக
ஸ்புரந்தீ	பிரகாசிக்கிறதாய்
சகோர மநஸாம்	சகோர பக்ஷி போன்ற மனதுள்ள
ஸதாம்	ஸாதுக்களுக்கு
கௌதூஹலம்	ஆனந்தகரமாக
ஸ்யாத் சேத்	இருக்குமானால்
இதம் யுக்தம்	இது நியாயம்
அஹர் நிசம்	பகலும் இரவும்
ஏஷா	இது
அதிகாம்	அதிகமான
ருசிம்	காந்தியை
காஹதே	அடைகிறது என்பதும்
பிம்போஷ்ட	கோவைக்கனிபோன்ற உதடுகளாகிற
த்யுமணி	ஸூர்யனுடைய
ப்ரபாஸு அபி	பிரபை இருக்கும்போது கூட
பிப்வோகம்	விலாஸத்தை
ஆலம்பதே	அடைகிறது
யத்	என்பது யாதொன்றுண்டோ
ஏதத்	இது
சித்ரம்	ஆச்சர்யம்.

காமாக்ஷியே! உன் புன்னகையின் காந்தி முகமென்னும் சந்திரனின் நிலவு போன்று, சகோர பக்ஷி போன்ற மனதுள்ள ஸாதுக்களுக்கு ஆநந்தத்தை அளித்துக் கொண்டு அழகாகப் பிரகாசிக்கிறது என்று கூறினால் இது தகுதியானதே. ஆனால் இது இரவும் பகலும் அதிகமான ஒளியைப்பெற்று விளங்குகிறது என்பதும், கோவைப்பழம் போன்ற உதடுகளென்னும் ஸூரியனுடைய வெளிச்சமிருக்கும்போது விலாசத்தைப் பெற்றுத் திகழ்கிறது என்பதும் ஆச்சரியமாயிருக்கிறது.

முகம் என்கிற சந்திரனின் நிலவான புன்சிரிப்பு, இரவும் பகலும் அதிகமான காந்தியை அடைந்திருக் கிறது என்பதும் கோவைப்பழம் போன்ற உதடுகள் என்னும் சூரியன் ஒளி வீசிக்கொண்டிருக்கிறபோதும், அது விலாஸத்தை அடைந்திருக்கிறதென்பதும் ஆச்சரியம். சந்திரிகை இரவில் மட்டும் பிரகாசிக்குமேயொழிய இரவும் பகலும் பிரகாசியாது. ஸூர்யன் ஒளி வீசும்போது சந்திரிகை சோபையின்றியிருக்குமேயன்றி விலாஸத்தையடைய மாட்டாது, ஆனால் முகமாகிய சந்திரனின் நிலவு போன்ற உனது புன்சிரிப்பு இதற்கு மாறாக இருக்கிறது என்கிறார்.

'यदधिकामाभां सदा गाहते - 'யத் அதிகாம் ஆபாம் ஸதா காஹதே' என்ற பாடத்தில் அதிகாம் ஆபாம் - அதிகமான காந்தியை, ஸதா காஹதே இதி யத் - எப்போதும் அடைகிறது என்பதும், என்று பொருள்.

सादृश्यं कलशाम्बुधेर्वहति ते कामाक्षि मन्दस्मितं
शोभामोष्ठरुचाम्ब विद्रुमभवामेतद्विदां ब्रूमहे।

एकस्मादुदितं पुरा किल पपौ सद्यः पुराणः पुमान्
अद्याप्यन्यसमुद्भवं रसयते माधुर्यरूपं रसम्॥२१॥

ஸாத்ருச்யம் கலசாம்புதே: வஹதி தே காமாக்ஷி
மந்தஸ்மிதம்
சோபாமோஷ்டருசாம்ப வித்ரும பவாம் ஏதத் பிதாம்
ப்ரூமஹே।
ஏகஸ்மாத் உதிதம் புரா கில பபௌ ஸத்ய: புராண:
புமான்
அத்யாப்யந்ய ஸமுத்பவம் ரஸயதே மாதுர்ய ரூபம்
ரஸம்॥21॥

பாடாந்தரம் -

साहाय्यं कलशाम्बुधेर्वहति ते कामाक्षि मन्दस्मितं
शोभाभोष्ठरुचा च विद्रुमभवामेतद्भिदां ब्रूमहे।
एतस्मादुदितां पुरा किल पपौ शर्वः पुराणः पुमान्-
एतन्मध्यसमुद्भवं रसयते माधुर्यरूपं सुधाम्॥२१॥

ஸாஹாய்யம் கலசாம்புதே: வஹதி தே காமாக்ஷி!
மந்தஸ்மிதம்
சோபாமோஷ்ட-ருசா ச வித்ரும-பவா மேதத் பிதாம்
ப்ரூமஹே।
ஏகஸ்மாத் உதிதம் புரா கில பபௌ சர்வ: புராண: புமாந்
ஏதந்மத்யஸமுத்பவம் ரஸயதே மாதுர்ய ரூபம்
ஸுதாம்॥21॥

அம்ப	*தாயே*
காமாக்ஷி!	*காமாக்ஷியே*
தே	*உன்னுடைய*
மந்தஸ்மிதம்	*புன்சிரிப்பானது*

கலசாம்புதே:	பாற்கடலுக்கு
ஸாத்ருச்யம்	ஒற்றுமையை
வஹதி	அடைந்திருக்கிறது
ஓஷ்ட ருசா	உதடுகளின் காந்தியால் (பாற்கடலிருக்கும்)
வித்ரும பவாம்	பவழத்தினின்று உண்டாகும்
சோபாம்	அழகை
வஹதி	பெற்றுள்ளது. (ஆனால்)
ஏதத் பிதாம்	(இதில்) இந்தவித்தியாஸத்தை
ப்ரூமஹே	சொல்லுகிறோம்
புராண: புமான்	புராண புருஷனான சிவன்
புரா கில	முன்பு ஒரு காலத்தில்
ஏகஸ்மாத்	ஒன்றிலிருந்து
உதிதம்	உண்டான
ரஸம்	ரஸத்தை (விஷத்தை)
ஸத்ய:	உடனே
பபௌ	பருகிவிட்டான்
அந்ய ஸமுத்பவம்	மற்றையதிலிருந்து உண்டாகிற
மாதுர்யரூபம்	மதுரமயமான
ரஸம்	ரஸத்தை (அமிருதத்தை)
அத்ய அபி	இப்பொழுதும் கூட
ரஸயதே	பருகி அனுபவித்துக் கொண்டேயிருக்கிறான்

தாயே காமாக்ஷி! உன் புன்சிரிப்பு பாற்கடலோடு ஒற்றுமையை அடைந்திருக்கிறது; உதடுகளின் காந்தியால் அதிலுள்ள பவழத்தின் சோபையையும் பெற்றிருக்கிறது.

ஆனால் (இரண்டுக்கும்) இந்த ஒரு வித்தியாஸம் உள்ளது என்று கூறுகிறோம். புராண புருஷனான பரமசிவன் ஒன்றிலிருந்து (பாற்கடலிலிருந்து) உண்டான ரஸத்தை (விஷத்தை) உடனே பருகிவிட்டான்; மற்றையதிலிருந்து உண்டாகும் மதுரமயமான ரஸத்தை இன்னமும் ரஸித்துக்கொண்டேயிருக்கிறான்.

தேவியின் ஸ்மிதத்திற்கும், பாற்கடலுக்கும் ஒற்றுமையிருந்த போதிலும் வேற்றுமையும் காணப் படுகிறது. பாற்கடல் வெளுப்பாயும் பவழத்தின் காந்தியோடு கூடியும் இருக்கிறது. தேவியின் ஸ்மிதமும் வெளுப்பாகவும் பவழம் போன்ற அதரங்களின் சோபையோடும் அழகாக இருக்கிறது. ஆனால் அவற்றுள் வேற்றுமையானது; பாற்கடலில் உண்டான விஷத்தை உடனே பரமேச்வரன் பானம் பண்ணி விட்டார். மந்தஸ்மிதத்தில் இருந்து உண்டாகும் அம்ருதத்தையோ இன்னும் பருகிக்கொண்டே யிருக்கிறார் என்பதாம்.

பாடாந்தரத்தில் -

''ஸாஹாய்யம்'' என்பதற்கு ஸஹாயத்தன்மையை என்று அர்த்தம். அதாவது ஒப்புமையை என்பதாம். ''ஏதஸ்மாத் ..ஸுதாம்'' எனபதில், ஏதஸ்மாத் - இந்தத் திருப்பாற்கடலிலிருந்து, உதிதாம் - உண்டானதை (விஷத்தை) புராகில - முன்பு, புராண: புமாந் சர்வ: - புராண புருஷனான பரமசிவன், பபௌ - பாநம் செய்தார். ஏதந்மத்ய ஸமுத்பவாம் -வேறான மந்தஸ்மிதத்தின் மத்தியிலிருந்து உன்டான, மாதுர்யரூபாம் ஸுதாம் - இனிமையான அமுதத்தை, அத்ய அபி ரஸயதே - இப்பவும் பருகிக்கொண்டே இருக்கிறார். 'ஏகஸ்மாத் உதிதம் விஷம் கிலபபௌ சர்வ:' என்றும் பாடம்.

उत्तुङ्गस्तनकुम्भशैलकटके विस्तारिकस्तूरिका–
पत्रश्रीजुषि चञ्चलाः स्मितरुचः कामाक्षि ते कोमलाः।
सन्ध्यादीधितिरञ्जिता इव मुहुः सान्द्राधरज्योतिषा
व्यालोलामलशारदाभ्रशकलव्यापारमातन्वते।।२२।।

உத்துங்க-ஸ்தந-கும்ப-சைல-கடகே விஸ்தாரி கஸ்தூரிகா
பத்ர ஸ்ரீஜுஷி சஞ்சலா: ஸ்மித-ருச: காமாக்ஷி! தே
கோமலா:।
ஸந்த்யா-தீதிதி-ரஞ்ஜிதா இவ முஹு: ஸாந்த்ரா
தரஜ்யோதிஷா
வ்யாலோலா-மல-சாரதாப்ர-சகல-வ்யாபாரம்
ஆதந்வதே।।22।।

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
விஸ்தாரி கஸ்தூரிகா பத்ர ஸ்ரீஜுஷி	*விஸ்தாரமாகக் கஸ்தூரியால் எழுதப்பட்டுள்ள பத்திரங்களின் அழகோடு கூடிய*
உத்துங்க ஸ்தந கும்ப சைல கடகே	*உயர்ந்த கும்பம்போன்ற ஸ்தனங்களாகிற பர்வதங்களின் தாழ்வரையில்*
சஞ்சலா:	*சலிக்கின்றவைகளாயும்*
கோமலா:	*மனோக்ஞங்களாயுமுள்ள*
தே	*உன்னுடைய*
ஸ்மிதருச:	*சிரிப்பின் காந்திகள்*
ஸாந்த்ர- அதர ஜ்யோதிஷா	*அழகிய உதட்டின் காந்தியால்*
முஹு:	*அடிக்கடி*
ஸந்த்யா - தீதிதி ரஞ்ஜிதா:	*ஸந்தியாகால காந்தியால்*
இவ	*சிவப்பு நிறமாகச் செய்யப்பட்டவைபோல்*

	இருக்கின்றவைகளாய்
வ்யாலோல அமல சாரத அப்ர சகல வ்யாபாரம்	அசைகிறதும் வெண்மையுமான சரத்காலமேகங்களின் சிதறிய துண்டங்களின் செயலை
ஆதந்வதே	செய்கின்றன.

காமாக்ஷியே! விஸ்தாரமாகக் கஸ்தூரியால் எழுதப்பட்டுள்ள மகரிகாபத்ரங்களின் அழகோடு கூடிய உயர்ந்த ஸ்தனபாரங்களாகிய பர்வதங்களின் தாழ்வரையில் ஸஞ்சரித்துக் கொண்டிருப்பவைகளும், மனோஹரமானவைகளும், அடிக்கடி அழகிய உதடுகளின் காந்தியால் ஸந்தியாகாலத்தின் செவ்வொளியால் சிவப்பாகச் செய்யப்பட்டவைபோல் இருப்பவைகளுமான உன்னுடைய புன்முறுவலின் காந்திகள், மெள்ள அசைந்துகொண்டிருக்கும் சரத்காலத்து வெண்மையான மேகங்களின் சிதறிய துண்டங்களின் சோபையை அடைகின்றன.

சரத்காலத்தில் நிர்மலமான ஆகாயத்தில் காணப்படும் வெண்மையான மேகங்கள் உயர்ந்த பர்வதங்களின் தாழ்வரையில் ஸஞ்சரிக்கும்போது, ஸந்தியாகாலம் வந்தால் மேற்திசையின் செவ்வொளி அம்மேகங்களில் விழுந்து அவைகளுக்கு ஒரு புதிய சோபையைக் கொடுத்து மனதைக் கவருகின்றவைகளாகச் செய்யும்.

தேவியின் வெண்ணிறமான புன்சிரிப்பின் வெள்ளமிடும் காந்தியே மெள்ள மெள்ள உலவும் சரத்கால மேகங்கள்; உன்னதமான ஸ்தனங்களே பர்வதத்தின் தாழ்வரைகள்; அழகிய அதரங்களின் சிவந்த காந்தியே ஸந்தியாகாலத்தின் செவ்வொளி. இதனால் புன்சிரிப்பின் காந்தி அதரங்களின் சோபையோடு கலந்து மார்பில்

விழுவதைப் பார்த்தால் பர்வதங்களில் மாலை வேளையில் ஸஞ்சரிக்கும் செவ்வொளி பூசிய சரத்கால மேகத்துண்டங்கள்போல் மனோஹரமாக இருக்கின்றது என்கிறார்.

ஶாரத - அப்ர - மழை காலத்திற்கும் பிறகு வருவது சரத்ருது; நீருண்டு கறுத்திருந்த மேகங்கள் மழையைப் பொழிந்துவிட்ட பிறகு வெளுப்பாயிருப்பதாலும் அக்காலத்தில் ஆகாயம் நிர்மலமாயிருப்பதாலும் இதைத் தேவியின் புன்னகைக்கு ஒப்பிடுகிறார்.

क्षीरं दूरत एव तिष्ठतु कथं वैमल्यमात्रादिदं
मातस्ते सहपाठवीथिमयतां मन्दस्मितैर्मञ्जुलैः।
किञ्चेयं तु भिदास्ति दोहनवशादेकं तु (तत्तु) सञ्जायते
कामाक्षि स्वयमर्थितं प्रणमतामन्यत्तु(मेतत्तु)दोदुह्यते।।२३।।

க்ஷீரம் தூரத ஏவ திஷ்டது கதம் வைமல்ய மாத்ராதிதம்
மாதஸ்தே ஸஹபாட வீதிமயதாம் மந்தஸ்மிதைர் மஞ்ஜுலை:।
கிஞ்சேயம் து பிதாऽஸ்தி தோஹநவசாத் ஏகம் (ஏதத்) து ஸஞ்ஜாயதே
காமாக்ஷி! ஸ்வயமர்த்திதம் ப்ரணமதாம் அந்யத் (ஏதத்) து தோதுஹ்யதே।।23।।

மாத:	*தாயான*
காமாக்ஷி!	*ஏ காமாக்ஷியே!*
க்ஷீரம்	*பாலானது*
தூரத ஏவ	*தூரத்திலேயே*
திஷ்டது	*இருக்கட்டும்*

இதம்	இந்த பாலானது
வைமல்ய மாத்ராத்	வெண்மையினால் மாத்திரம்
தே	உனது
மஞ்ஜுலை:	அழகு - பொருந்திய
மந்தஸ்மிதை:	புன்சிரிப்புக்களோடு
ஸஹபாடவீதிம்	ஒத்திருக்கும் நிலைமையை
கதம் அயதாம்	எப்படி அடையமுடியும்?
கிஞ்ச	மேலும்
இயம் து பிதா	இந்த வேற்றுமையானது
அஸ்தி	இருக்கிறது
ஏகம் து	ஒன்று (பாலோவென்றால்)
தோஹநவசாத்	கறப்பதாலேயே
ஸஞ்ஜாயதே	உண்டாகிறது
அந்யத் து	மற்றொன்றான புன்சிரிப்போவென்றால்
ப்ரணமதாம்	நமஸ்கரிப்பவர்களுடைய
அர்த்திதம்	வேண்டியதை
ஸ்வயம்	தானாகவே
தோதுஹ்யதே	விசேஷமாய்ச் சுரந்து கொடுக்கிறது.

தாயே காமாக்ஷி! (உன் புன்சிரிப்பின் பெருமையோடு ஒப்பிட்டால்) பால் தூரத்திலேயே நிற்கவேண்டும். அது வெண்மையாயிருப்பதினால் மாத்திரம் உன் அழகிய புன்னகைகளோடு ஒற்றுமையை எப்படி அடைய முடியும்? மேலும் அவைகளுக்குள் இந்த வேற்றுமையும் இருக்கிறது;

ஒன்று (அதாவது பால்) பிறர் கறப்பதனால் உண்டாகிறது; மற்றது (அதாவது உன் புன்னகை) வணங்குவோர்களுடைய வேண்டியவற்றைத் தானாகவே அதிகமாய்ச் சுரந்து கொடுக்கிறது.

மந்தஸ்மிதம் பால்போல் வெண்மையாய் இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் பால் வேறொருவர் கறப்பதால் உண்டாகிறது. புன்சிரிப்போ அன்போடு நமஸ்கரிப்பவர்களுக்கு வேண்டியதைத் தானாகவே சுரந்து கொடுக்கிறது. ஆகையால் தேவியின் புன்சிரிப்போ அன்போடு நமஸ்கரிப்பவர்களுக்கு வேண்டியதைச் தானாகவே சுரந்து கொடுக்கிறது. ஆகையால் தேவியின் புன்சிரிப்போடு பாலை ஒப்பிட்டுப் பார்க்கில், பால் லஜ்ஜையால் ஒதுங்கி நிற்க வேண்டியது என்பது கருத்து.

ஸஹ-பாட-வீதிம் - சேர்ந்து படிப்பவர்களின் வழி, அதாவத் ஸாத்ருச்யம்.

कर्पूरैरमृतांशु(बु)र्भिजननि ते कान्तैश्च चन्द्रातपैः
मुक्ताहारगुणैर्मृणालवलयैर्मन्दस्मितश्रीरियम्।
श्रीकाञ्चीश्वरि सज्जनैः समतया कामाक्षि संस्तूयते
तत्तादृङ्मम तापशान्तिविधये किं देवि मन्दायते॥२४॥

கர்ப்பூரை: அம்ருதாம்சு(பு)பி: ஜநநி! தே காந்தை: ச சந்த்ராதபை:
முக்தா ஹார குணை: ம்ருணால வலயை: மந்தஸ்மித ஶ்ரீரியம்।
ஶ்ரீ காஞ்சீச்வரி! ஸஜ்ஜநை: ஸமதயா காமாக்ஷி! ஸம்ஸ்தூயதே
தத் தாத்ருக் மம தாப சாந்தி விதயே கிம் தேவி மந்தாயதே॥24॥

कर्पूरैरमृतैर्जगज्जननि ते *கர்ப்பூர்ரை ரம்ருதை: ஜகஜ்ஜநநி தே* - என்றும்,

श्रीकाञ्चीपुरनायिके संतूयते सज्जनैः *ஸ்ரீ காஞ்சீபுரிநாயிகே ஸமதயா ஸம்ஸ்தூயதே ஸஜ்ஜநை:* - என்றும் பாடாந்தரம்.

ஜநநி!	தாயே
தேவி	தேவியே
ஸ்ரீ காஞ்சீச்வரி!	காஞ்சி நகர ஈச்வரியே
காமாக்ஷி!	ஏ காமாக்ஷி!
தே	உனது
இயம்	இந்த
மந்த ஸ்மித ஸ்ரீ:	மந்தஹாஸ காந்தியானது
அம்ருதாம்ஶுபி:	அம்ருத கிரணங்களோடும்
கர்ப்பூரை:	பச்சைக் கற்பூரத்தோடும்
காந்தை:	அழகு பொருந்திய
சந்த்ராதபை:	நிலாவோடும்
முக்தா-ஹார-குணை:	முத்து ஹாரஸரங்களோடும்
ம்ருணாலவலயை:	தாமரைத் தண்டுகளோடும்
ஸமதயா	ஒத்திருப்பதாக
ஸஜ்ஜநை:	பெரியோர்களால்
ஸம்ஸ்தூயதே	புகழப்படுகிறது
தத் தாத்ருக்	அப்படிப்பட்ட புன்சிரிப்பானது
மம	எனது
தாப-ஶாந்தி-விதயே	தாபத்தைக் குறைக்கும் விஷயத்தில்
கிம் மந்தாயதே	ஏன் தாமஸிக்கிறது?

காஞ்சீச்வரியே! தாயே! காமாக்ஷி தேவியே! உனது இந்த மந்தஹாஸகாந்தி அம்ருத கிரணங்களோடும், பச்சைக்கற்பூரத்தோடும், அழகு பொருந்திய நிலாவோடும், முத்து ஹாரஸரங்களோடும், தாமரைத்தண்டுகளோடும் ஸமானமாயிருப்பதாக ஸாதுக் களால் மிகவும் புகழப்படுகிறது. அப்படி குளிர்ச்சியான தன்மையுள்ள உன் புன்சிரிப்பு என் தாபத்தைப் போக்கும் விஷயத்தில் மட்டும் ஏன் தாமதிக்கிறது?

தேவியே! என்னுடைய கஷ்டம் நான் செய்த வினைக்கு ஏற்குமாயினும் உம்முடைய புன்சிரிப்பாகிய திருவருட் பெருக்கத்துக்கு ஏற்காதென்பதாம். அதாவது: உன் புன்சிரிப்போ உலகத்தில் உஷ்ணத்தைப் போக்கவல்லவையும், குளிர்ச்சியுள்ளவைகளுமான கற்பூரம், அமுதம், நிலா, முத்து, தாமரைத்தண்டு என்பவைகளுக்கு ஸமானமாய் இருப்பதாகப் பெரியோர்களால் துதிக்கப்படுகிறது. ஆனால் என் ஸம்ஸாரதாபத்தைப் போக்கும் விஷயத்தில் மட்டும் ஏன் தாமதிக்கிறது.

பாடாந்தரத்தில் - ஜகத் ஜநநி - உலகத்துக்கு எல்லாம் தாயே! காமாக்ஷி, முக்தஸ்மித ஸ்ரீ: - அழகிய புன்சிரிப்பின் வனப்பு - என்பது பொருள். ''அம்ருதாம்புபி:'' என்றும் பாடாந்தரத்தில் அமுத ஜலங்களோடும் என்று பொருள். ''காஞ்சீபுரநாயிகே'' என்ற பாடத்தில் பொருளில் மாறுதலில்லை.

मध्ये गर्भितमञ्जुवाक्यलहरीमाध्वीझरीशीतला
मन्दारस्तबकायते जननि ते मन्दस्मितांशुच्छटा।

यस्या वर्धयितुं मुहुर्विकसनं कामाक्षि कामद्रुहो
वल्गुर्वीक्षणविभ्रमव्यतिकरो वासन्तमासायते।।२५।।

மத்யே கர்பித-மஞ்ஜு-வாக்ய-லஹரீமாத்வீஜ்ஜரீ-ஶீதலா
மந்தாரஸ்தபகாயதே ஜனனி தே மந்தஸ்மிதாம்ஶுச்சடா।
யஸ்யா வர்த்தயிதும் முஹுர் விகஸநம் காமாக்ஷி
காமத்ருஹோ।
வல்குர்-வீக்ஷண-விப்ரமவ்யதிகரோவாஸந்த மாஸாயதே।।
।।25।।

ஜநநி	*தாயாரான*
காமாக்ஷி!	*ஏ காமாக்ஷியே!*
யஸ்யா:	*எதனுடைய (எந்த புன்சிரிப்பினுடைய)*
விகஸநம்	*விகாஸத்தை*
முஹு:	*அடிக்கடி*
வர்த்தயிதும்	*விருத்தி செய்வதற்கு*
காமத்ருஹ:	*காமனைக்கொன்ற பரமசிவனுடைய*
வல்கு:	*அழகு பொருந்திய*
வீக்ஷண- விப்ரம வ்யதிகர:	*கண் பார்வையின் சுழற்சிகளின் போக்கானது (சேர்க்கையானது)*
வாஸந்த மாஸாயதே	*வஸந்தமாஸ காலமாக விளங்குகிறதோ*
மத்யே கர்பித மஞ்ஜு வாக்ய லஹரீ மாத்வீஜ்ஜரீ ஶீதலா	*நடுவில் நிறைந்த அழகியசொற்பெருக்கென்றும் தேன் அருவியினால்*

	குளிர்ந்ததாயுள்ள
தே	உன்னுடைய
மந்தஸ்மித அம்ஶுச்சடா	மந்தஹாஸத்தின் காந்தியின் ஸமூஹமானது
மந்தார ஸ்தபகாயதே	மந்தாரப் பூங்கொத்தாக விளங்குகிறது

எந்த புன்சிரிப்பினுடைய மலர்ச்சியை அடிக்கடி அதிகப்படுத்துவதற்காக பரமசிவனுடைய அழகு பொருந்திய பார்வைகளின் ஸம்பந்தம் வஸந்தருதுவின் மாதங்களாக இருக்கின்றதோ, நடுவில் நிறைந்திருக்கும் அழகிய சொற்பெருக்கு என்ற தேன் அருவியினால் குளிர்ந்துள்ள உன்னுடைய அந்தப் புன்சிரிப்பின் காந்தியானது மந்தாரப்பூங்கொத்தாக விளங்குகிறது.

தேவியின் புன்சிரிப்பை மந்தாரப் புஷ்பத்திற்கும், வாக் விசேஷத்தைப் புஷ்பத்தில் உள்ள தேனுக்கும், பரமேச்வரனுடைய பார்வையை வஸந்தருதுவுக்கும் ஒப்பிடுகிறார்.

बिम्बोष्ठद्युतिपुञ्जरञ्जितरुचिस्त्वन्मन्दहासच्छटा
कल्याणं गिरिसार्वभौमतनये कल्लोलयत्वाशु मे।
फुल्लन्मल्लिपिनद्धहल्लकमयी कामाक्षि मालेव या
श्री काञ्चीश्वरि मारमर्दितुरुरोमध्ये मुहुर्लम्बते।।२६।।

பிம்போஷ்ட த்யுதி புஞ்ஜ-ரஞ்ஜித-ருசிஸ் த்வன்
மந்தஹாஸச் சடா
கல்யாணம் கிரிஸார்வபௌமதநயே
கல்லோலயத்வாசு மே।

புல்லன் மல்லி பிநத்த ஹல்லக மயீ காமாக்ஷி!
மாலேவ யா
ஸ்ரீகாஞ்சீச்வரி! மார-மர்த்திது: உரோ மத்யே
முஹுர்லம்பதே॥26॥

हल्लकमयी मालेव या पेशला - ஹல்லகமயீ மாலேவ யா பேசலா - என்றும் பாடம்.

ஸ்ரீ காஞ்சீச்வரி!	*ஸ்ரீகாஞ்சீபட்டணத்தின் யஜமானியான*
கிரி ஸார்வபௌம தநயே	*பர்வத ராஜனான ஹிமவானின் குமாரியான*
காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
யா	*எந்தப் புன்சிரிப்பானது*
புல்லந்-மல்லி-பிந்த்த ஹல்லகமயீ	*மலர்ந்த மல்லிகைப் பூவோடுதொடுத்த செங்கழுநீர் புஷ்பங்களாலான*
மாலா இவ	*மாலைபோல்*
மாரமர்த்திது:	*மன்மதனை ஸம்ஹாரம் செய்த பரமசிவனுடைய*
உரோ மத்யே	*மார்பு நடுவில்*
முஹு:	*அடிக்கடி*
லம்பதே	*தொங்குகிறதோ*
ஸா	*அப்படிப்பட்ட*
பிம்போஷ்ட த்யுதி புஞ்ஜரஞ்ஜித ருசி:	*கோவைப்பழம் போன்ற உதடுகளின் கிரணங்களின் ஸமூகங்களால் சிவப்பாகச் செய்யப்பட்ட காந்தியை உடைய*

த்வன் மந்தஹாஸச் சடா	உனது மந்தஹாஸ ராசியானது
மே	எனக்கு
கல்யாணம்	க்ஷேமத்தை
ஆசு	சீக்கிரத்தில்
கல்லோலயது	விருத்தி செய்யட்டும்.

காஞ்சிக்கு ஆதீச்வரியும் பர்வத ராஜகுமாரியுமான காமாக்ஷியே! எந்தப் புன்சிரிப்பானது மலர்ந்த மல்லிகைப் புஷபங்களோடு சேரத்தொடுக்கப்பட்ட செங்கழுநீர்ப் புஷ்பமாலை போல பரமசிவனுடைய மார்பில் அடிக்கடி தொங்கிக்கொண்டிருக்கிறதோ, கோவைப் பழம்போன்ற உதடுகளின் கிரணங்களின் ஸமூஹங்களால் சிவப்பாகச் செய்யப்பட்ட சோபையையுடைய உனது மந்தஹாஸத்தின் ராசியானது எனது க்ஷேமத்தை மேன்மேலும் சீக்கிரத்தில் விருத்தி செய்யட்டும்.

இங்கே திரிசதியில் ''கல்யாணீ'' என்ற நாமத்தின் பொருளும், ''பவது ஸா கல்யாண ஸந்தோஹிநீ'' என்ற முடிவுடைய 8வது ச்லோகத்தின் கருத்தும் கவனிக்கத்தக்கது.

தேவி, தன் நாயகனான பரமசிவனை புன்முறுவலுடன் நோக்கும்போது அதரங்களின் சிவப்பும், புன்முறுவலின்வெளுப்பும் கலந்து அவர் மார்பின்மேல் வீசுவதைப் பார்த்தால், மல்லிகைப் புஷ்பங்களையும் செங்கழுநீர்ப்பூக்களையும் வைத்துச் சேரத்தொடுக்கப்பட்ட ஒரு மாலை அவருடைய மார்பில் விளங்குவது போன்றுள்ளது என்கிறார்.

बिभ्राणा शरदभ्रविभ्रमदशां विद्योतमानाप्यसौ
कामाक्षि स्मितमञ्जरी किरति ते कारुण्यधारारसम्।
आश्चर्यम् शिशिरीकरोति जगतीमालोक्य चैनामहो
कामं खेलति नीलकण्ठहृदयं कौतूहलान्दोलितम्।।२७।।

பிப்ராணா சரதப்ர விப்ரம தசாம் வித்யோதமா
நாப்யஸௌ
காமாக்ஷி! ஸ்மித மஞ்ஜரீ கிரிதி தே காருண்ய தாரா ரஸம்
ஆச்சர்யம் சிசிரீ கரோதி ஜகதீமாலோக்ய சைநாமஹோ
காமம் கேலதி நீலகண்ட ஹ்ருதயம் கௌதூஹ
லாந்தோலிதம்।।27।।

காமாக்ஷி	*காமாக்ஷியே!*
தே	*உனது*
அஸௌ ஸ்மித மஞ்ஜரீ	*இந்தப் புன்னகை பூங்கொத்தானது*
சரத் அப்ர விப்ரம தசாம்	*சரத்கால மேகத்தின் அழகு நிறைந்த நிலைமையை*
பிப்ராணா	*வகிக்கிறதாக*
வித்யோதமானா அபி	*விளங்கிக்கொண்டிருந்தபோதிலும்*
காருண்ய தாரா ரஸம்	*கருணை ரஸத்தின் தாரையை*
ஆச்சர்யம்	*ஆச்சர்யம்*
ஜகதீம்	*உலகை*
சிசிரீ கரோதி	*குளிரச்செய்கிறது*
ச	*இன்னும்*
ஏதாம் ஆலோக்ய	*இதைப் பார்த்து*
நீலகண்ட ஹ்ருதயம்	*பரமசிவனாகிற மயிலின் மனதானது*

கௌதூஹல ஆந்தோளிதம்	உத்ஸாஹம் நிறைந்ததாய்
காமம் கேலதி	நன்றாக விளையாடுகிறது
அஹோ!	ஆச்சர்யம்.

காமாக்ஷியே! உன்னுடைய இந்தப் புன்சிரிப்பானது சரத்காலமேகத்தின் அழகிய நிலைமையை அடைந்து விளங்கிக்கொண்டிருந்த போதிலும், கருணாரஸம் என்னும் மழையின் தாரையைப் பொழிந்துக் கொண்டிருக்கிறது. உலகத்தைக் குளிர்ச்சியாகவும் செய்கிறது. இது ஆச்சர்யம். இன்னும், இம்மேகத்தைக்கண்டு நீலகண்டனின் மனதும் உத்ஸாஹம் நிறைந்ததாய் நன்றாக ஆடிக் கொண்டிருக்கிறது. இதுவும் ஆச்சர்யம்.

நீலகண்டன் - மயில், பரமேச்வரன். கடாக்ஷ சதகம் 71வது ச்லோகத்தில், நீலகண்டன் என்கிற மயில் கடாக்ஷமாகிய காரமுகிலைக்கண்டு ஆனந்தமடைகிறது என்று கூறியிருத்தலை, காண்க.

ஶரத்-அப்ர-விப்ரம-தஶாம் - ஶரத்காலம் என்பது மழை காலத்திற்குப் பின்வருவது. அப்போது மழைபெய்து தீர்ந்த ஸமயமாதலால், மேகங்கள் வெளுத்துத் தோன்றும். கறுத்து மேகங்கள் மழையைப் பொழியுமே தவிர, வெளுத்தவை மழையை வர்ஷிக்கா. தேவியின் புன்சிரிப்பு வெண்மையின் ஶரத்காலத்து மேகத்தை ஒத்து இருப்பினும், கருணை என்னும் ரஸத்தைப் பொழிவதால மாறுபட்டும் இருக்கிறது.

ஶிஶிரீகரோதி - நீருண்ட மேகத்தைக்கண்டால் தான் குளிர்ச்சியாயிருக்கும்; வெளுத்த மேகம் போன்றிருந்தும் இது தாபத்தைப் போக்குகிறது.

நீலகண்ட-ஹ்ருதயம் கௌதூஹல ஆந்தோளிதம் - கார்முகிலைக்கண்டு தான் மயில் ஆநந்தத்தோடு ஆடும்; இங்கேயோ நீலகண்டனான பரமசிவன் தேவியின் புன்முறுவலான வெளுத்த மேகத்தைக்கண்டும் ஆனந்தமடைகிறார்.

प्रेङ्खत्प्रौढकटाक्षकुञ्जकुहरेष्वत्यच्छगुच्छायितं
वक्त्रेन्दुच्छविसिन्धुवीचिनिचये फेनप्रतानायितम्।
नैरन्तर्यविजृम्भितस्तनतटे नैचोलपट्टायितं
कल्माषं कबलीकरोतु मम ते कामाक्षि मन्दस्मितम्।।२८।।

ப்ரேங்கத் ப்ரௌட கடாக்ஷ குஞ்ஜ குஹரேஷ்வ த்யச்ச குச்சாயிதம்
வக்த்ரேந்துச் சவி ஸிந்து வீசி நிசயே பேந ப்ராதாநாயிதம்
நைரந்தர்ய விஜ்ரும்பித ஸ்தநதடே நைசோலபட்டாயிதம்
கல்மாஷம்கபலீ கரோது மம தே காமாக்ஷி! மந்தஸ்மிதம்।।

காமாக்ஷி!	காமாக்ஷியே!
ப்ரேங்கத் ப்ரௌட	ஒளி வீசுகிறதும் கம்பீரமுமான
கடாக்ஷ குஞ்ஜ குஹரேஷு	கடாக்ஷமென்கிற புதர்களின் மத்தியில்
அதி அச்ச குச்சாயிதம்	மிகவும் வெளுப்பான பூங்கொத்துப் போன்றதும்
வக்த்ர இந்துச் சவி ஸிந்து வீசி நிசயே	சந்திரன் போன்ற முகத்தின் காந்தியாகிறஸமுத்ரத்தின் அலைகளின் குவியலில்
பேநப்ரதாநாயிதம்	நுரையின் கூட்டம் போலிருப்பதும்
நைரந்தர்ய	இடையின்றி

விஜ்ரும்பிதஸ்தநதடே	பெருத்தெழுந்துள்ள ஸ்தனப்பிரதேசத்தில்
நைசோல பட்டாயிதம்	வெண்பட்டு ரவிக்கை போலிருப்பதுமான
தே	உனது
சந்தஸ்மிதம்	புன் சிரிப்பானது
மம	என்னுடைய
கல்மாஷம்	பாபத்தை
கபலீகரோது	விழுங்கட்டும்.

காமாக்ஷி! ஒளி வீசுகிற கம்பீரமான கடாக்ஷமென்கிற புதர்களின் மத்தியில் மிகவும் வெளுப்பான பூங்கொத்துப் போன்றதும், சந்திரன் போன்றுள்ள முகத்தின் காந்தியாகிற ஸமுத்திரத்தின் அலைகளின் கூட்டத்தில் நுரையின் கூட்டம் போன்றதும், நடுவில் இடையின்றி பெருத்தெழுந்துள்ள ஸ்தநப் பிரதேசத்தில் வெண்பட்டு ரவிக்கையாகக் காணப்படுவதுமான உன் புன்சிரிப்பு என் தோஷத்தைப் போக்கடிக்கட்டும்.

ப்ரேங்கத் - ப்ரௌட ....குச்சாயிதம் - தேவியின் கறுத்த நேத்ரங்களிலிருந்து கம்பீரமாய் ஒளி பொருந்திய கடாக்ஷ கள் பரவுவதைப் பார்த்தால் அடர்ந்து பசுமையுடன் கூடிய ஒரு லதா - க்ருஹம்போல் இருக்கிறது; புன்முறுவல் அதில் புஷ்பித்த மிகவும் வெளுப்பான ஒரு பூங்கொத்து.

வக்த்ரேந்து.....ப்ரதாநாயிதம் - சந்திரன்போன்ற தேவியின் முககாந்தியின் வெள்ளமே ஸமுத்ரத்தின்

அலைகள்; பன்முறுவலோ அவ்வலைகளின் நடுவே விளங்கும் நுரை.

पीयूषं तव मन्थरस्मितमिति व्यर्थैव साऽप(पि)प्रथा
कामाक्षि ध्रुवमीदृशं यदि भवेदेतत्कथं वा शिवे।
मन्दारस्य कथालवं न सहते मथ्नाति मन्दाकिनीं
इन्दुं निन्दति कीर्तिते च कलशीपाथोधिमीर्ष्यायते।।२९।।

பீயூஷம் தவ மந்த்ர ஸ்மிதமிதி வ்யர்த்தைவஸாऽப
(பி)ப்ரதா
காமாக்ஷி! த்ருவமீத்ருசம் யதி பவேதேதத் கதம் வா சிவே।
மந்தாரஸ்ய கதாலவம் ந ஸஹதே மத்நாதி மந்தாகிநீம்
இந்தும் நிந்ததி கீர்த்திதே ச கலசீ பாதோதிம்
ஈர்ஷ்யாயதே।।

சிவே	மங்களமூர்த்தியான
காமாக்ஷி!	காமாக்ஷியே!
தவ	உன்னுடைய
மந்த ஸ்மிதம்	மனோஹரமான புன்சிரிப்பானது
பீயூஷம் இதி	அமிருதமென்ற
ஸா ப்ரதா அபி	அந்தப் புகழ்ச்சியும்
வ்யர்த்தா ஏவ	வ்யர்த்தம் தான்
த்ருவம்	நிச்சயம்
ஈத்ருசம் பவேத் யதி	இப்படியிருக்குமானால்
ஏதத்	இது
கதம் வா	ஏன்?

மந்தாரஸ்ய	மந்தார புஷ்பத்தினுடைய
கதாலவம்	வார்த்தையைக் கூட
ந ஸஹதே	ஸஹிக்கிறதில்லை
மந்தாகிநீம்	கங்கையை
மத்நாதி	கலக்குகிறது
இந்தும்	சந்திரனை
நிந்ததி	நிந்திக்கிறது
கீர்த்திதே ச	சொல்லும்போதே
கலசீ-பாதோதிம்	பால் ஸமுத்ர விஷயத்தில்
ஈர்ஷ்யாயதே	பொறாமைப்படுகிறது

மங்கள மூர்த்தியான காமாக்ஷியே! உன் மந்த ஹாஸம் அம்ருதம் (போன்றுள்ளது) என்று சொல்லும் அந்தப் புகழ்ச்சியும் வீணே. (அர்த்தமில்லாதது). உண்மையில் இது என் இவ்விதம் (அம்ருதமாக) இருக்குமாகில், மந்தாரபுஷ்பத்தின் பேச்சையே பொறுக்கமாட்டுகிறதில்லை: கங்கையைய் கலக்குகிறது; சந்திரனை நிந்திக்கிறது; பாற்கடலிடத்தில் அஸூயையயடைகிறது?

திருப்பாற்கடலைக் கடைந்தபோது அதில் நின்றும் அமிருதம், மந்தாரப்புஷ்பம், கங்கை, சந்திரன் முதலாயின உண்டாயின என்பது புராணம். புன்சிரிப்பை அம்ருதத்துக்கு ஒப்பு என்றால், இச்சரிதத்தை ஒட்டி அம்ருதத்துடன் பிறந்த மற்றைய வஸ்துக்களை என் இந்தப் புன்சிரிப்பு வருத்துகிறது - என்று கவி அதிசயிக்கிறார். அம்ருதம் முதலான வஸ்துக்கள் அதிக வெண்மையான நிறமுள்ளவை. தன் சோபையாலும், வெண்மையாலும் புன்சிரிப்பு அவற்றையும்

விஞ்சிநிற்பதால் அவற்றைப் பொறுப்பதில்லை என்றும், கலக்குகிறது என்றும் கவி வர்ணிக்கிறார்.

''வ்யர்த்தைவ ஸா அபப்ரதா'' என்ற பாடத்தில், அந்த அபவாதமும் வீண் என்பது பொருள்.

विश्वेषां नयनोत्सवं वितनुतां विद्योततां चन्द्रमा:
विख्यातो मदनान्तकेन मुकुटीमध्येच(न) संमान्यताम्।
आ: किं जातमनेन हाससुषमां आलोक्य कामाक्षि ते
कालङ्कीमवलम्बते खलु दशां कल्माषहीनोऽप्यसौ।।३०।।

விச்வேஷாம் நயநோத்ஸவம் விதநுதாம் வித்யோததாம்
சந்த்ரமா:
விக்யாதோ மதநாந்தகேந முகுட மத்யே(ந)ச
ஸம்மாந்யதாம்।
ஆ:! கிம் ஜாதமனேன ஹாஸஸுஷமாம் ஆலோக்ய
காமாக்ஷி! தே
காலங்கீம் அவலம்பதே கலு தசாம் கல்மாஷஹீநோ(அ)
ப்யஸெள।।30।।

காமாக்ஷி	*காமாக்ஷியே!*
சந்த்ரமா:	*சந்திரன்*
விச்வேஷாம்	*எல்லாருக்கும்*
நயந உத்ஸவம்	*நேத்ராநந்தத்தை*
விதநுதாம்	*செய்யட்டும்*
விக்யாத:	*பிரஸித்தியுள்ளவனாக*
வித்யோததாம்	*விளங்கட்டும்*

மதந அந்தகேந	மன்மதனுக்குச் சத்ருவான பரமசிவனால்
முகுட மத்யே	மகுட மத்தியில் வைத்து
ஸம்மாந்யதாம் ச	கௌரவிக்கவும் படட்டும்
அதோ	இதனால்
ஆ: கிம்। ஜாதம்।	ஆச்சரியம் என்ன வந்து விட்டது
அஸௌ	இந்த சந்திரன்
கல்மாஷ ஹீந: அபி	களங்க (பாப) மற்றவனாயி- ருந்த போதிலும்
தே	உனது
ஹாஸ ஸுஷமாம்	புன்சிரிப்பின் காந்தியை
ஆலோக்ய	பார்த்து
காலங்கீம் தசாம்	களங்கமுள்ள நிலைமையை
அவலம்பதே கலு	அடைகிறானல்லவா?

காமாக்ஷியே! சந்திரன் உலகிலுள்ள எல்லோருடைய கண்களுக்கும் ஆநந்தத்தை அளிக்கட்டும், மிகவும் பிரஸித்தி பெற்றவனாகப் பிரகாசிக்கட்டும்; பரமசிவனால் தலையால் தாங்கிக் கௌரவிக்கப்படட்டும். ஆம், இதனால் அவனுக்கு என்ன பெருமை வந்துவிட்டது? இந்த சந்திரன் களங்க (பாப) மற்றவனாயிருந்த போதிலும் உனது புன்முறுவலின் காந்தியைப்பார்த்து களங்கமுள்ள (கலக்கமைடைந்த) நிலையை அடைகிறானல்லவா?

உலகத்தில் நாம் சந்திரனை அதிக வெண்மைநிறம் உடையவனாயும் பிரகாசப்பிரஸித்தியுடையளனாயும் சிவனால் தலையால் தாங்கப்படுகிரவனாயும் காண்கி றோம். இந்தச் சந்திரனே அம்பாள் மந்தஸ்மிதத்தின் வெண்மையான

காந்திக்கு முன்தான் நிற்பதற்கும் இல்லாமல் மங்குகிறான் என்றால், மந்தஸ்மிதத்தின் காந்தியின் மிகுதியை இவ்விதம் இருக்கும் என்று நாம் நினைக்கலாமோ; எவ்வாற்றானும் நினைத்ததற்கு ஸாத்தியமில்லை என்பதாம்.

चेत: शीतलयन्तु न: पशुपतेरानन्दजीवातवो
नम्राणां नयनाध्वसीमसु शरच्चन्द्रातपोपक्रमा:।
संसाराख्यसरोरुहाकरखलीकारे तुषारोत्करा:
कामाक्षि स्मरकीर्त्तिबीजनिकरास्त्वन्मन्दहासाङ्कुरा:।।३१।।

சேத: சீதலயத்து ந: பசுபதேராநந்தஜீவாதவ:
நம்ராணாம் நயநாத்வஸீமஸு சரத் சந்த்ராதபோபக்ரமா:।
ஸம்ஸாராக்ய ஸரோருஹாகர கலீகாரே துஷாரோத்கரா:
காமாக்ஷிஸ்மரகீர்த்திபீஜநிகரா:
த்வந்மந்தஹாஸாங்குரா:।।31

காமாக்ஷி!	*காமாக்ஷியே*
பசுபதே:	*பரமசிவனுடைய*
ஆநந்த ஜீவாதவ:	*ஆனந்தத்துக்கு உயிர் நிலையாய் உள்ளவைகளும்*
நம்ராணாம்	*நமஸ்கரிப்பவர்களுடைய*
நயந அத்வ ஸீமஸு	*கண்கள் செல்லும் பிரதேசங்களில்*
சரத் சந்த்ர ஆதப உபக்ரமா:	*சரத்காலத்திய நிலாவின் ஆரம்பம் போன்றவைகளும்*
ஸம்ஸார ஆக்ய ஸரோருஹ ஆகர கலீகாரே	*ஸம்ஸாரமென்கிற தாமரைக் குளத்தை நாசம் செய்யும் விஷயத்தில்*
துஷார உத்கரா:	*கடும்பனி போன்றவைகளும்*

ஸ்மர கீர்த்தி பீஜ நிகரா:	மன்மதனுக்குக் கீர்த்தியை உண்டாக்கும் விரைக் கோட்டைகளாயுமிருக்கிற
த்வன் மந்தஹாஸ அங்குரா:	உனது இளம் புன்னைகைகள்
ந:	எங்களுடைய
சேத:	மனதை
சீதலயந்து	குளிரச் செய்யட்டும்.

காமாக்ஷியே! பசுபதியென்னும் பரமசிவனுடைய ஆநந்தத்திற்கு உயிர் நிலைபோன்றவைகளும், வணங்குவோரின் கண்கள் செல்லும் பிரதேசங்களில் சரத்காலத்து நிலாவின் ஆரம்பம் போன்றவைகளும், ஸம்ஸாரமென்ற பெயர் பெற்ற தாமரைத் தடாகத்தை அழிக்கும் விஷயத்தில் கடும்பனி போன்றவைகளும், மன்மதனுடைய கீர்த்தியை விளைப்பிக்கும் வித்துக்கள் போன்றவைகளுமான உன் இளம் புன்னகைகள் எங்களுடைய மனதைக் குளிரச் செய்யட்டும்.

கவி கீழ் 4 வது சுலோகத்தில் காமாக்ஷியின் புன்னகையானது தன்னுடைய உள்ளத்தைக் குளிர செய்யட்டும் என்று பிரார்த்தித்திருத்தல் காண்க.

ஆனந்த - ஜீவாதவ: - தேவியின் இளம் புன்னகை பரமசிவனுக்கு ஆநந்தத்தைக் கொடுப்பதால், அதற்கு இவை உயிர் நிலை என்கிறார்.

சரத்-சந்த்ர-ஆதப-உபக்ரமா:-ஆச்ரிதர்களுடைய கண்ணுக்குக் குளிர்ந்த க்...ர்வனவாக இருத்தலால், சரத்காலத்து நிர்மலமான ஆகாயத்தில் தன் பூர்ண ஒளியோடு திகழும் பூர்ண சந்திரனின் நிலவு என்னலாம்.

ஸம்ஸார.........துஷாரோத்கரா: - பனி எப்படி மிருதுவாயிருந்தாலும் தாமரைகளைச் கருகச் செய்கிறதோ, அவ்விதம் மந்தஹாஸங்கள் மிருதுவாயின் ஸம்ஸாரமென்னும் தாமரை ஓடையை அழித்துவிடுகிறது.

ஸ்மர கீர்த்தி பீஜ நிகரா: - மன்மதன் பின்னால் தன் கீர்த்தியென்னும் பயிர்களை வளர்த்துப் பயனடைவதர்கு காரணமான விதைகளைச் சேமித்து வைத்திருப்பதுபோல புன் முறுவல் இருக்கிறது.

कर्मौघाख्यतम:कचाकचिकरान्कामाक्षि सञ्चिन्तये
त्वन्मन्दस्मितरोचिषां त्रिभुवनक्षेमङ्करानङ्कुरान्।
ये वक्त्रं शिशिरश्रियो विकसितं चन्द्रातपाम्भोरुह-
द्वेषोद्घोषणचातुरीमिव तिरस्कर्तुम् परिष्कुर्वते।।३२।।

கர்மௌகாக்ய தம: கசா கசிகராந் காமாக்ஷி ஸஞ்சிந்தயே
த்வந்-மந்தஸ்மித-ரோசிஷாம் த்ரிபுவந க்ஷேமம்
கராநங்குராந்।
யே வக்த்ரம் ஶிஶிர-ஶ்ரியோ விகஸிதம் சந்த்ராத
பாம்போருஹ
த்வேஷோத்கோஷண-சாதுரீமிவ திரஸ்கர்த்தும்
பரிஷ்குர்வதே।।32।।

காமாக்ஷி!	காமாக்ஷியே!
யே	எந்த புன்சிரிப்புக்கள்
சிசிர-ச்ரிய:	குளிர்ந்த காந்தியை அடைந்தவைகளாய்
சந்த்ர ஆதப அம்போருஹ	நிலாவுக்கும்
த்வேஷ உத்கோஷண	தாமரைப்பூவுக்குமுள்ள
சாதுரீம்	விரோதத்தைப் பறைசாற்றும் முறையை

திரஸ்கர்த்துமிவ	மறைப்பதற்குப்போல்
விகஸிதம் வக்த்ரம்	மலர்ந்துள்ள முகத்தை
பரிஷ்குர்வதே	அழகுபடுத்துகின்றனவோ
(தாந்	அப்படிப்பட்ட)
கர்ம ஓக் ஆக்யதம: கசாகசி கராந்	கர்மக்கூட்டமென்கிற இருளை நாசம் செய்கிறவைகளும்
த்ரி-புவந-க்ஷேமங்கராந்	மூன்று உலகங்களுக்கும் க்ஷேமத்தைக்கொடுக்கிறவை களாயுமிருக்கிற
த்வந் மந்தஸ்மித ரோசிஷாம்	உனது மந்தஹாஸ காந்தியின்
அங்குராந்	முளைகளை
ஸஞ்சிந்தயே	தியானம் செய்கிறேன்.

காமாக்ஷி! குளிர்ச்சியுள்ள எந்தப் புன்சிரிப்பின் அங்குரங்கள், நிலவு தாமரைகள் மீது த்வேஷத்தைப் பறைசாற்றும் திறத்தை மறைப்பவைகள் போல் மலர்ந்த உனது முகத்தைச் சிரப்பிக்கின்றனவோ; கர்மக்கூட்டமெனும் இருளோடு போர்புரிகின்றதும், முவ்வுலகிற்கும், நன்மை விளைவிப்பதுமான அந்த உனது மந்தஸ்மித காந்திகளின் முளைகளை நான் தியானிக்கின்றேன்.

கசாகசி-தலைமயிரை இழுத்துச் சண்டை போடுதல், சந்திரிகை வெளிப்பட்டால் தாமரை மூடிவிடுகிறது. அதனால் அவ்விரண்டுக்கும் துவேஷமுண்டென்று உலகில் பறைசாற்றுகிறார்கள். அதை மறைப்பதற்காகப் போலவே, காமாக்ஷியின் சந்திரிகை போன்ற மந்தஹாஸங்கள், அவளது

முகமாகிற சந்திரனை விகஸிக்கும்படி பரிஷ்காரம் செய்கின்றனவோ - என்று கவி உத்ப்ரேக்ஷிக்கிறார்.

कुर्युर्नः कुलशैलराजतनये कूलङ्कषं मङ्गलं
कुन्दस्पर्धनचुञ्चवस्तव शिवे मन्दस्मितप्रक्रमाः।
ये कामाक्षि समस्तसाक्षिनयनं *सन्तोषयन्तीश्वरं
कर्पूरप्रकरा इव प्रसृमराः पुंसां असाधारणाः।।३३।।

குருயுர் ந: குலசைல ராஜதநயே! கூலங்கஷம் மங்களம்
குந்த ஸ்பர்த்தந சுஞ்சுவ: தவ சிவே மந்தஸ்மித ப்ரக்ரமா:
யே காமாக்ஷி! ஸ்மஸ்த ஸாக்ஷி நயநம்
ஸந்தோஷயந்தீஶ்வரம்
கர்ப்பூர ப்ரகரா இவ ப்ரஸ்ருமரா: பும்ஸாமஸாதாரணா:।।33

* **सन्तोषयन्त्यान्तरम्** ஸந்தோஷயந்தி ஆந்தரம் - என்றும் பாடம்.

குலசைலராஜ தநயே!	பர்வத அரசனாகிய ஹிமவானின் புத்திரியும்
சிவே!	சிவனது பத்நியுமான
காமாக்ஷி!	ஏ காமாக்ஷியே!
பும்ஸாம்	புருஷர்களுக்கு
அஸாதாரணா:	கிடைக்கக்கூடாதவைகளான
யே	எந்த புன்சிரிப்புக்கள்
ப்ரஸ்ருமரா:	பரவுகின்றஅ
கர்ப்பூர ப்ரகரா: இவ	கர்ப்பூரப்பொடி போல்

ஸமஸ்த ஸாக்ஷி நயநம்	ஸமஸ்தங்ககளுக்கும் ஸாக்ஷியாயிருக்கிற ஸூர்யனைக் கண்ணாகவுடைய
ஈசுவரம்	பரமசிவனை
ஸந்தோஷயந்தி	ஸந்தோஷப்படுத்துகின்றனவே
தே	அந்த
தவ	உன்னுடைய
குந்த ஸ்பர்த்தந சுஞ்சவ:	ஆம்பல் புஷ்பத்தைப் பகைக்கும் ஸாமர்த்தியமுள்ள
மந்தஸ்மித ப்ரக்ரமா:	புன்சிரிப்புக்களின் ரீதிகள்
ந:	நமக்கு
கூலங்கஷம்	கரைபுரண்டு போகும்படியான அதாவது அளவு கடந்த
மங்களம்	க்ஷேமத்தை
குர்யு:	செய்யட்டும்.

குலபர்வத ராஜனான இமையவன் மகளே! பரமசிவன் காதலியாகிய காமாக்ஷி! புருஷர்களுக்கு இயலாததும் பரவுகின்றதும் குந்தமலரை எதிரிப்பதில் திறமையுள்ளவைகளுமான எவை, எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியான சூரியனைக் கண்ணாகக்கொண்ட பரம சிவனைப் பச்சைக்கர்ப்பூரப் பொடிபோல் களிப்புறச் செய்கின்றனவோ! அந்த உனது மந்தஸ்மித வரிசைகள் நமக்கு நிறைந்த மங்களத்தை விளைவிக்கவேண்டும்.

ஸந்தோஷயந்தி ஆந்தரம் - என்ற பாடத்தில் ஸமஸ்தத்தையும் ஸாக்ஷாத்கரிக்கிற பரமசிவனுடைய ஆந்தரமான கண்ணை (உட்கண்ணை) என்பது பொருள்.

'ஸமஸ்தஸாக்ஷி நயநம் ஈஶ்வரம்' என்பதற்கு எல்லாவற்றையும் ஸாக்ஷியாகப் பார்க்கும் சந்திரன், ஸூரியன், அக்னி இவைகளைக் கண்ணாகவுடைய பரமசிவனை என்றும் பொருள் சொல்லலாம்.

''பும்ஸாம் அஸாதாரணா:'' - என்பதற்கு விசேஷணமாக்கி ஸாதாரணமாய் எல்லாப் புருஷர்களுக்கும் கிடைக்க அருமையான கர்ப்பூரப் பொடிகள் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

''தனந்தரும், கல்விதரும், ஒருநாளும் தளர்வரியா
மனந்தரும், தெய்வவடிவும் தரும், நெஞ்சில் வஞ்சம்
இல்லா
இனந்தரும் நல்லனவெல்லாம் தரும் அன்பர்
என்பவர்க்கே கனந்தரும் பூங்குழலாள் அபிராமி
கடைக்கண்களே''

என்று தேவி திருவருள் பெற்ற அபிராமிபட்டர், அம்பாள் திருவருளினால் கிடைக்கும் அளவுகடந்த மங்களங்களைப் பற்றிக் கூறியிருத்தலும் காண்க.

कम्रेण स्नपयस्व कर्मकुहनाचोरेण मारागम–
व्याख्याशिक्षणदीक्षितेन विदुषां अक्षीणलक्ष्मीपुषा।
कामाक्षि स्मितकन्दलेन कलुषस्फोटक्रियाचुञ्चुना
कारुण्यामृतवीचिकाविहरणप्राछुर्यधुर्येण माम्।।३४।।

கம்ரேண ஸ்நபயஸ்வ கர்ம-குஹநா-சோரேண மாராகம-
வ்யாக்யா-சிக்ஷண-திக்ஷிதேந
விதுஷாமக்ஷீணலக்ஷ்மீபுஷா।

காமாக்ஷி! ஸ்மித-கந்தலேந கலுஷ- ஸ்போடக்ரியா-சுஞ்சுநா
காருண்யாம்ருத-வீசிகா-விஹரண-ப்ராசுர்ய-துர்யேண மாம் ||34||

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
கம்ரேண	*அழகுபொருந்தியதாயும்*
கர்ம-குஹநா-சோரேண	*கர்மத்தின் மாயையைத் திருடுவதாயும்*
மார-ஆகம-வ்யாக்யா-சிக்ஷண-தீக்ஷிதேந	*மன்மத சாஸ்திரத்தை விஸ்தரித்துக் கூறுவதில் தீக்ஷைபெற்றதாயும்*
விதுஷாம்	*வித்வான்களுக்கு*
அக்ஷீண-லக்ஷ்மீ-புஷா	*குறைவற்ற ஸம்பத்தை விருத்தி செய்வதாயும்*
கலுஷ-ஸ்போடக்ரியா- சுஞ்சுநா	*பாபத்தை நாசமாக்கும் கார்யத்தில் ஸாமர்த்திய முள்ளதாயும்*
காருண்ய-அம்ருத-வீசிகா-விஹரண-ப்ராசுர்ய- துர்யேண	*காருண்யம் என்கிற அமிருதத்தின் அலைகளில் அதிகமாய் விளையாடு கிறதையே முக்கியகாரிய மாய் உடையதாயுமிருக்கிற*
தவ	*உன்னுடைய*
ஸ்மிதகந்தலேந	*புன்சிரிப்புக் கூட்டத்தால்*
மாம்	*என்னை*
ஸ்நபயஸ்வ	*முழுக்காட்டுவாயாக (பரிசுத்தமாக்கு).*

காமாக்ஷி! வளப்புள்ளதும் கர்மங்களின் சூதைப் போக்குவதும், மதன நூலை விரித்துப் போதிப்பதில் தீக்ஷைபூண்டதும், அறிஞர்களுக்குக் குறைவற்ற செல்வத்தை வளர்ப்பதும், பாபங்களைப் பேதிப்பதில் திறமையுள்ளதும், கருணையெனும் அமிருத ப்ரவாஹத்தில் அதிகமாக விளையாடும் பொறுப்புள்ளது மான உனது புன்சிரிப்பால் என்னை நினைப்பாயாக.

"கலுஷ ஸ்போடக்ரியா சுஞ்சுநா" என்பதற்கு பாபங் களைக் கை தட்டி விரட்டும் செய்கையில் திறமை வாய்ந்த - என்பது பொருள்.

கடாக்ஷசதகம் 4-வது ச்லோகத்தில் "காமாக்ஷியின் கருணாமிருதம் ததும்புவதால் மிகவும் பொங்கி மேன்மேல் எழுவதும் மனோகரமான புன்சிரிப்பால் கருமையும் வெண்மையும் கலந்து விசித்திர வர்ணமுள்ளதாகக் காணப்பெறுவதும், கீர்த்திய டைந்ததும், சற்று வளைந்ததும் ஆன உன் பார்வையால் என்னைக் குளிரச்செய்யவேண்டும்" என்ற கருத்தில் பிரார்த்தனை செய்திருத்தல் காண்க.

त्वन्मन्दस्मितकन्दलस्य नियतं कामाक्षि शङ्कामहे
बिम्ब: कश्चन नूतन: प्रचलितो नैशाकर: शी(श्री)कर:।
किं च क्षीरपयोनिधि: प्रतिनिधि: स्वर्वाहिनीवीचिका–
बिब्वोकोऽपि विडम्ब एव कुहना मल्लीमतल्लीरुच:।।३५।।

த்வந்மந்த ஸ்மித-கந்தலஸ்ய நியதம் காமாக்ஷி!
சங்காமஹே
பிம்ப: கச்சந நூதந: ப்ரசலிதோ நைசாகர: சீ(ஸ்ரீ)கர:।

கிஞ்ச க்ஷீரபயோ நிதி: ப்ரதிநிதி: ஸ்வர்வாஹிநீ-வீசிகா-பிப்வோகோ(அ)பி விடம்ப ஏவ குஹநா
மல்லீ-மதல்லீ-ருச:॥35॥

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
நைசாகர:	*சந்திரனுடைய*
பிம்ப:	*உருவமானது*
த்வத்மந்தஸ்மித-கந்தலஸ்ய	*உனது புன்சிரிப்பின் ஸமூஹத்தினுடைய*
க: சந	*ஒரு*
நூதந:	*புதிய*
சீகர:	*திவிலையாக*
ப்ரசலித:	*வெளிவந்திருக்கிறது என்று*
நியதம் சங்காமஹே	*நிச்சயமாக நினைக்கிறோம்.*
கிஞ்ச	*மேலும்*
க்ஷீர பயோநிதி:	*பால் ஸமுத்ரம்*
பிரதிநிதி:	*உனது (புன்சிரிப்புக்கு) பதில் உருவம்*
ஸ்வர்வாஹிநீ-வீசிகா பிப்வோக: அபி	*ஸ்வர்க்கத்திலுள்ள நதியான கங்கையின் அலையின் அழகும் பரிஹாஸ்யமானதே*
மல்லீ-மதல்லீ-ருச:	*உயர்ந்த மல்லிகைப்பூவின் காந்திகளும்*
குஹநா:	*கபடம் (ஏமாற்றமே)*

காமாக்ஷி! உனது மந்தஹாஸ காந்தியின் வெளிப்பட்ட திவலையே புதிய சந்திரபிம்பமென்றும், பாற்கடல்

அதற்குப்பதிலியென்றும், கங்கையின் அலைகளின் அழகு பரிஹஸிக்கத்தகுந்ததென்றும், சிறந்த மல்லிகை மலர்களின் ஒளிகளும் ஏமாற்றம் தரக்கூடியவையென்றும் நாம் நிச்சயமாக எண்ணுகிறோம்.

உலகத்தில் வெண்மையாகச் சொல்லப்படும் பாற்கடல் கங்கையின் அலை, மல்லிகைமலர், இவை யெல்லாம் அம்பாளின் மந்தஸ்மிதத்தின் வெண்மைக்கு ஒப்பிடுவதற்கில்லை என்பது தாத்பர்யம். ஸ்ரீகர: என்ற பாடத்தில், அழகை அல்லது லக்ஷ்மியைக் கொடுக்கின்ற சந்திரனாக என்பது பொருள்.

दुष्कर्मार्कनिसर्गकर्कशमहःसंपर्कतप्तं मिल–
त्पङ्कं शंकरवल्लभे मम मनः *कामाक्षि काञ्चीश्वरि
अम्ब त्वन्मृदुलस्मितामृतरसे मङ्क्त्वा विधूय व्यथां
आनन्दोदयसौधशृङ्गपदवीं आरोढुमा काङ्क्षति।।३६।।

துஷ்கர்மார்க்க-நிஸர்க்க-கர்க்கஶ-மஹ:-ஸம்பர்க்க-தப்தம் மிலத்-
பங்கம் சங்கர-வல்லபே மம மந: ★காமாக்ஷி காஞ்சீஶ்வரி।
அம்ப! த்வந் ம்ருதுல-ஸ்மிதாம்ருத-ரஸே மங்க்த்வா விதூய வ்யதாம்
ஆநந்தோதய-ஸௌத-ஶ்ருங்க-பதவீமாரோடுமா காங்க்ஷதி।।36।।

★ **काञ्चीपुरालङ्क्रिये** காஞ்சீபுராலங்க்ரியே என்றும் பாடம்.

சங்கர வல்லபே!	*சங்கர பத்நியும்*
காஞ்சீஶ்வரி	*காஞ்சீ நகர யஜமானியும்*

அம்ப!	தாயுமான
காமாக்ஷி!	காமாக்ஷியே!
துஷ்கர்ம-அர்க்க-நிஸர்க்க -கர்க்கஶ-மஹ:- ஸம்பர்க்கதப்தம்	தீவினையென்னும் ஸூர்யனின் ஸ்வபாவத்திலேயே குரூரமுள்ளகிரணங்களின் ஸம்பந்தத்தால் தாபத்தை அடைந்ததாயும்
மிலத்-பங்கம்	பாபம் என்கிற சேறுபடிந்ததாயுமிருக்கிற
மம மந:	என்னுடைய மனதானது
த்வந்-ம்ருதுல-ஸ்மித- அம்ருத-ரஸே	உனது புன்சிரிப்பென்ற அம்ருத ரஸத்தில்
மங்க்த்வா	முழுகி
வ்யதாம்	சிரமத்தை
விதூய	உதறியெறிந்து
ஆநந்த-உதய-ஸௌத- ஶ்ருங்க-பதவீம்	பிரம்மானந்தமாகிற மாடியில் உயர்ந்த ஸ்தானத்தை
ஆரோடும்	ஏறுவதற்கு
ஆகாங்க்ஷதி	ஆசைப்படுகிறது.

காஞ்சீபுரத்திற்கு ஈசுவரியாக விளங்கும் சங்கரன் காதலியாகிய தாயே! தகாத கர்மங்களெனும் கதிரவனின் இயற்கையிலேயே கொடுமை வாய்ந்த கிரணங்களின் சேர்க்கையால் தாபமுற்றதும், சேறு பூசியதும் (பாபமுள்ளதும்) ஆன எனது மனது, உனது இளம் நகையாகிய அமுத ரஸத்தில் மூழ்கி, களைப்பைப்

போக்கிக்கொண்டு ஆனந்தத் தோற்றமெனும் மாளிகையின் உச்சியில் ஏறி உலாவ விரும்புகிறது.

வெயிலினால் தபிக்கப்பெற்று சேறு பூசிய ஒருவன் குளிர்ந்த ஜலத்தில் மூழ்கிச் சேற்றை அலம்பி, தாபத்தைப் போக்கி, தாபமும் சேறும் ஸம்பந்திக்க முடியாத மாளிகையின் மேல்மாடிக்குச் செல்ல எப்படி விரும்புவானோ; அதுபோல துஷ்கர்மங்களால் தபிக்கப் பெற்றுப் பாபமாகிய சேறு பூசிய என் மனது உன் புன்னகையாகிய அமுத ரஸத்தில் மூழ்கி தாபங்களும், பாபங்களுமற்று, பேரானந்தமாகிய மாளிகையின் மேல்மாடியை ஏற விரும்புகிறது.

பாதாரவிந்தசதகம் 48-வது ச்லோகத்தில் ''என்னுடைய மனதானது, தேவியின் நகங்களின் புன்சிரிப்புக் காந்தி என்கிற கங்கையின் ஜலத்தில் ஸுகமாக ஸ்நானம் செய்து, ஞானம் என்னும் அமிருதத்தையுண்டு, சிலம்புகளின் ஒளிகளான இரத்தின விளக்குள்ள தேவியின் திருவடிகள் என்கிற உயர்ந்த உப்பரிகையின் மேல் விளையாடவேண்டும்'' என்ற கருத்தில் வருதல் காண்க.

नम्राणां नगराजशेखरसुते नाकालयानां पुरः
कामाक्षि त्वरया विपत्प्रशमने कारुण्यधाराः किरन्।
आगच्छन्तमनुग्रहं प्रकटयन्नानन्दबीजानि ते
नासीरे मृदुहास एव तनुते नाथे सुधाशीतलः॥३७॥

நம்ராணம் நகராஜ-சேகர-ஸுதே நாகாலயாநாம் புர:
காமாக்ஷி த்வரயா விபத்-ப்ரசமநே காருண்யதாரா: கிரந்।
ஆகச்சந்த மநுக்ரஹம் ப்ரகடயந் ஆனந்த பீஜாநிதே
நாஸீரே ம்ருதுஹாஸ ஏவ தநுதே நாதே! ஸுதா சீதல:॥37

நகராஜ-சேகர-ஸுதே	பர்வத சிரேஷ்டனான ஹிமவானின் குமாரியும்
நாதே	உலகத்திற்கு யஜமானியுமான
காமாக்ஷி!	காமாக்ஷியே!
புர:	உன் முன்னால்
நம்ராணாம்	நமஸ்கரித்து நிற்கிற
நாகாலயாநாம்	தேவர்களுடைய
விபத்-ப்ரசமநே	ஆபத்தை நீக்குவதில்
த்வரயா	வேகமாக
காருண்ய-தாரா:	கருணாரஸப்பெருக்கை
கிரந்	வர்ஷித்துக்கொண்டு
ஆகச்சந்தம்	ஏற்படப்போகிற (வரப்போகும்)
அநுக்ரஹம்	அநுக்ரஹத்தை
ப்ரகடயந்	வெளிப்படுத்துகிற
தே	உனது
ஸுதா ஶீதல:	அம்ருதம் போல் குளிர்ந்த
ம்ருதுஹாஸ: ஏவ	அழகிய புன் சிரிப்பே
நாஸீரே	முன்னணியில்
ஆனந்த பீஜாநி	பிரமானந்தத்தின் வித்துக்களை
தநுதே	விதைக்கின்றது.

மலைச் சக்ரவர்த்தியின் மகளும் உலகைக் காப்பவளுமான காமாக்ஷி! உனது ஸேநாக்ரத்தின் முன் வணங்கிநிற்கும் தேவர்களின் துன்பங்களை அகற்று வதில் கருணைமாரியை வேகமாகச் சொரிகின்றதும், வரப்போகும் அருளை வெளிப்படுத்துகின்றதும், அமுதுபோல்

குளிர்ந்ததுமான உனது இளநகையே ஆனந்த விதைகளை விதைக்கின்றது.

காமாக்ஷி கருணையே உருவமாக உடையவள். தன்னை அடைந்த பக்தர்களின் பிறவித் துக்கத்தை உடனே நாசம் செய்து மோக்ஷ ஸுகத்தைத் தருவாள் என்பதாம்.

कामाक्षि प्रथमानविभ्रमनिधिः कन्दर्पदर्पप्रसूः–
मुग्धस्ते मृदुहास एव गिरिजे मुष्णातु मे किल्बिषम्।
यं द्रष्टुं विहिते करग्रह उमे शंभुस्त्रपामीलितं
स्मेरं कारयति स्म ताण्डवविनोदानन्दिना तण्डुना।।३८।।

காமாக்ஷி! ப்ரதமாந-விப்ரம-நிதி: கந்தர்ப்ப-தர்ப்ப-ப்ரஸூ:
முக்தஸ்தே ம்ருதஹாஸ ஏவ கிரிஜே முஷ்ணாது மே கில்பிஷம்।
யம் த்ரஷ்டும் விஹிதே கரக்ரஹ உமே! சம்புஸ்த்ரபா-மீலிதம்
ஸ்மேரம் காரயதி ஸ்ம தாண்டவ விநோதாநந்திநா தண்டுநா।।38।।

கிரிஜே!	பர்வதராஜகுமாரியான
உமே	உமாதேவியென்ற பெயருள்ள
காமாக்ஷி	காமாக்ஷியே!
கர-க்ரஹே விஹிதே	கல்யாணம் நிச்சயிக்கப்பட்டபோது
த்ரபா-மீலிதம்	வெட்கத்தால் மூடியிருந்த
யம்	எந்த
ஸ்மேரம்	மனோஞ்ஞமான புன்சிரிப்பை

த்ரஷ்டும்	பார்ப்பதற்கு (பார்க்க எண்ணத்துடன்)
சம்பு:	ஈச்வரன்
தாண்டவ-விநோத- ஆநந்திநா	நடனமாடுவதில் மிகவும் பிரியமுள்ளவனான
தண்டுநா	நந்திகேஶ்வரனைக்- கொண்டு
காரயதி ஸ்ம	உண்டாக்கினாரோ
தே	உனது
ப்ரதமாந-விப்ரம-நிதி:	புகழ்பெற்ற விலாஸங்களுக்கு நிதியும்
கந்தர்ப்ப-தர்ப்ப-ப்ரஸூ:	மன்மதனுக்குக் கொழுப்பையுண்டு-பண்ணுவதும்
முக்த:	அழகியதுமான
ம்ருதுஹாஸ:	(அந்த) புன்சிரிப்பானது
மே	என்னுடைய
கில்பிஷம்	பாபத்தை
முஷ்ணாது	போக்கடிக்கட்டும்.

மலைமகளும் உமையுமாகிய காமாக்ஷி! பாணிக்ரஹண காலத்தில் வெட்கத்தால் வெளிவராத எதைக்காணச் சிவன், கூத்தாடுவதால் சந்தோஷமடையும் நந்தியைக் கொண்டு, தானே வெளிவரச் செய்தாரோ, மன்மதனுக்குத் திமிரையுண்டாக்குவதும் சிறந்த விலாஸங்களுக்கிருப்பிடமுமாகிய அழகிய உனது அந்தப் புன்னைகை எனது பாபத்தையகற்றட்டும்.

ताण्डवविनोदं दण्डिना दण्डुना *தாண்டவவிநோதம் தண்டிநாதண்டுநா- என்று ஒரு பாடம். அப்பாடத்திற்கு, கையில் தண்டம்பிடித்திருந்த நந்தியைக்கொண்டு தாண்டவம் என்னும் வேடிக்கையை யதேச்சமாகச் செய்வித்தாரோ - என்பது பொருள். தேவியின் கருணை கிடைத்தால் வினை கெடும் என்பதாம்.*

क्षुण्णं केनचिदेव धीरमनसा कुत्रापि नानाजनैः
कर्मग्रन्थिनियन्त्रितैरसुगमं कामाक्षि सामान्यतः।
मुग्धैर्द्रष्टुमशक्यमेव मनसा मूढस्य मे चक्षुषो
मार्गम् दर्शयतु प्रदीप इव ते मन्दस्मितश्रीरियम्।।३९।।

க்ஷுண்ணம் கேந சிதேவ தீர மநஸா குத்ராபி நாதா ஜநை:
கர்ம-க்ராந்தி-நியந்த்ரிதைர ஸுகமம் காமாக்ஷி!
ஸாமாந்யத:।
முக்தைர் த்ரஷ்டுமஶக்யமேவ மநஸா மூடஸ்ய மே
சக்ஷுஷோ
மார்க்கம் தர்ஶயது ப்ரதீப இவ தே மந்தஸ்மித
ஶ்ரீரியம்।।39।।

मूडस्य मे मौक्तिकम् *மூடஸ்யமே மௌக்திகம் என்று பாடாந்தரம்.*

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
குத்ர அபி	*ஏதோ ஒரு இடத்தில்*
கேந சித்	*யாரோ ஒரு*
தீர மநஸா	*தைர்யசாலியான புருஷனால்*
க்ஷுண்ணம்	*பரிசயம் செய்யப்பட்ட தாயும்*

கர்ம-க்ரந்தி-நியந்த்ரிதை:	கர்மமென்ற பாசத்தினால் கட்டப்பட்ட
நாநாஜனை:	பல ஜனங்களால்
ஸாமாந்யத:	சுலபமாக
அஸுகமம்	போகமுடியாததும்
முக்தை:	மூடர்களால்
மநஸா	மனதினாலும்
த்ரஷ்டும்	அறிவதற்கு முடியாததாயுமிருக்கிற
மார்க்கம்	மார்க்கத்தை
தே	உனது
இயம்	இந்த
மந்தஸ்மித ஸ்ரீ:	புன்சிரிப்பின் காந்தியானது
ப்ரதீப: இவ	பெரிய தீபம்போல்
மூடஸ்ய	மூடனான
மே	எனது
சக்ஷுஷ:	கண்களுக்கு
தர்ஸயது	காண்பிக்கட்டும்.

ஏ காமாக்ஷி! எந்த முக்தி மார்க்கம், எங்கோ ஓரிடத்தில் மனதைக் கட்டி அடக்கின யாரோ ஒருவனால் மட்டும் போய் பழகியதோ; பொதுவாகக் கர்ம பந்தத்தால் கட்டுண்ட பல ஜனங்களால் எளிதில் செல்ல இயலாததோ; அறிவற்ற மனிதர்களால் மனதால் நினைக்கவும் முடியாததோ; அம்முக்திமார்க்கத்தை உன் புன்சிரிப்பின் ஒளியானது பெரிய தீபம் போல் என் கண்ணுக்குக் காட்டியருள வேண்டும்.

அறிவிலிகளால் அறியப்படாததும், கட்டுண்ட பலரால் செல்ல முடியாததும், யாரோ ஒரு தைர்யசாலியால் செல்லப்பட்டதுமான மார்க்கத்தில் செல்ல பெரிய விளக்கு உதவும். அதுபோல், விளக்கு போன்ற உன் புன்சிரிப்பின் ஒளியானது எனது கண்ணுக்கு முக்தி மார்க்கத்தைக் காண்பிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறார் கவி.

புருஷோத்தமனான பரமேசுவரன் ஒருவனால் மாத்திரம் ஞான மார்க்கம் பரிசய்ம் செய்யப்பட்டிருக்கிறதென்பதும், அம்மார்க்கம், ஈசுவரன் ஈசுவரி இவர்கள் அருள் ஏற்பட்டால் தான் கிட்டும் என்பதும் இந்த சுலோகத்தின் கருத்து.

''சிவஜ்ஞானப்ரதாயிநீ'' என்று ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில், சிவ விஷயமான ஞானத்தை அம்பாள் தன் பக்தர்களுக்குக் கொடுக்கிறாள் என்று சொல்லியிருப்பதையும், ஆர்யா சதகத்தின் 77-வது ''ப்ரத்யங்முக்யா த்ருஷ்ட்யா. பரசிவோல்லாஸம்'' என்ற ச்லோகத்தின் கருத்தையும் இந்த சுலோகத்தின் தாத்பர்யத்தோடு உற்று நோக்குக.

''மௌக்திகம்--'' என்ற பாடத்தில், மௌக்திகம் மார்க்கம்-முக்தி மார்க்கத்தை என்பது பொருள். தீரமநஸா மனதைக் கட்டி அடக்கிய ஒருவனால் என்பது பொருள்.

ज्योत्स्नाकान्तिभिरेव निर्मलतरं नैशाकरं मण्डलं
हंसैरेव शरद्विका(ला)ससमये (य) व्याकोचमम्भोरुहम्।
स्वच्छैरेव विकस्वरैः उडुगणैः कामाक्षि बिम्बं दिवः
पुण्यैरेव मृदुस्मितैस्तव मुखं पुष्णाति शोभाभरम्।।४०।।

ஜ்யோத்ஸ்நா-காந்திபிரேவ நிர்மலதரம் நைசாகரம்
மண்டலம்
ஹம்ஸைரேவ சரத்விகா(லா)ஸ ஸமயே(ய) வ்யாகோசம்
அம்போருஹம்।
ஸ்வச்சைரேவ விகஸ்வரை: உடுகணை: காமாக்ஷி!
பிம்பம் திவ:
புண்யைரேவ ம்ருதுஸ்மிதை ஸ்தவ முகம் புஷ்ணாதி
சோபாபரம்॥40 ॥

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
நிர்மலதரம்	*மிகவும் பரிசுத்தமான*
நைசாகரம் மண்டலம்	*சந்த்திர மண்டலமானது*
ஜ்யோத்ஸ்நா-காந்திபி: ஏவ	*நிலா வெளிச்சத்தால் மாத்திரம் (சோபிக்கும்)*
சரத்-விலாஸ-ஸமயே	*சரத்ருதுவின் விலாஸமுள்ள காலத்தில்*
வ்யாகோசம்	*மலர்ந்த*
அம்போருஹம்	*தாமரைப்பூவானது*
ஹம்ஸை: ஏவ	*ஹம்ஸங்களாலேயே (அழகுடையதாக ஆகிறது)*
திவ:	*ஆகாசத்தின்*
பிம்பம்	*மண்டலமானது*
ஸ்வச்சை:	*நிர்மலமான*
விகஸ்வரை:	*பிரகாசிக்கிற*
உடுகணை: ஏவ	*நக்ஷத்திரக் கூட்டங்களாலேயே (சோபிக்கும்)*
தவ	*உன்னுடைய*

முகம்	முகமானது
புண்யை:	பரிசுத்தமான
ம்ருது ஸ்மிதை: ஏவ	மந்தஹாஸத்தினால் மாத்திரமே
சோபாபரம்	அதிக காந்தியை
புஷ்ணாதி	விருத்தி செய்கிறது.(அடைகிறது).

காமாக்ஷி! மாசற்ற மதியின் மண்டலம் நிலவின் ஒளிகளாலேயே அழகு பெறுகிறது. மலர்ந்த தாமரை மலரும் ஸரத் ருது விளங்குங்கால் அன்னங்களாலேயே வனப்பை அடைகிறது. மாசற்று விளங்கும் வான்மீன் களாலேயே ஆகாயமும் ஒளி பெறுகிறது. அவ்விதமே தூய்மைப்படுத்தும் உனது மந்தஹாஸங்களாலேயே உனது முகமும் மிகுந்த சோபையை அடைகின்றது.

தாமரையின் அழகே அழகு. சரத்காலத்தில் உண்டாகும் தாமரையின் அழகோ பன்மடங்கு. அந்தத் தாமரையில் அன்னபட்சியும் தங்கி விளையாடு கிறதானால் அப்போது உள்ள அழகை என்னென்று சொல்வது? இவ்விதமே சந்திரமண்டலம், ஆகாசத்தின் உருவம் முறையே சந்திரிகை, நட்சத்திரக் கூட்டங்கள் இவைகளால் விலாஸம் அடைகிறதைக்கூறி, அவைபோல் தேவியின் முகமும், புன்சிரிப்பினால் சோபையைப் பெறுகிறதெனக் கவி குறிப்பிடுகிறார்.

मानग्रन्थिविधुंतुदेन रभसादास्वाद्यमाने नव–
प्रेमाडम्बरपूर्णिमाहिमकरे कामाक्षि ते तत्क्षणम्।
आलोक्य स्मितचन्द्रिकां मुहुरिमामुन्मीलनं जग्मुषीम्
चेत: शीलयते चकोरचरितं चन्द्रार्धचूडामणे:।।४१।।

மாந-க்ரந்தி-விதுந்துதேந ரபஸாதாஸ்வாத்யமாநே நவ
ப்ரேமாடம்பர-பூர்ணிமா-ஹிமகரே காமாக்ஷி! தே
தத்க்ஷணம்।
ஆலோக்ய ஸ்மித சந்த்ரிகாம் முஹுரிமாமுந்மீலநம்
ஜக்முஷீம்
சேத: சீலயதே சகோர-சரிதம் சந்த்ரார்த்த-
சூடாமணே:॥41॥

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
நவ-ப்ரேம-ஆடம்பர-பூர்ணிமா-ஹிமகரே	*புதிய அன்பின் ஆடம்பரம் என்கிற பூர்ணமான சந்திரனானவன்*
மாந-க்ரந்தி-விதுந்துதேந	*அபிமான முடிச்சு என்கிற ராகுவால்*
ரபஸாத்	*வேகமாக*
ஆஸ்வாத்யமாநே	*விழுங்கப்படும் போது*
தத்க்ஷணம்	*உடனே*
முஹு:	*அடிக்கடி*
உந்மீலநம்	*வெளிக்கிளம்புதலை*
ஜக்முஷீம்	*அடைகிற*
தே	*உனது*
இமாம்	*இந்த*
ஸ்மித சந்த்ரிகாம்	*புன்சிரிப்பு என்ற நிலாவை*
ஆலோக்ய	*பார்த்து*
சந்த்ரார்த்த-சூடாமணே:	*அர்த்த சந்திரனைச் சூடாமணியாகக்கொண்ட பரமசிவனுடைய*
சேத:	*மனமானது*

சகோர-சரிதம் சீலயதே

சகோர பக்ஷியின் காரியத்தை பரிசயம் செய்துகொள்கிறது.

ஏ காமாக்ஷி! புதிய காதலின் பூரிப்பென்னும் பூர்ணிமைச் சந்திரன் மாநமென்னும் ராகுவினால் விழுங்கப்படும் பொழுது, சந்திரகலையைச் சூடாமணியாகச் சூடிக்கொண்டிருக்கிற பரம சிவனுடைய மனது, மறுபடியும் மலர்ச்சியடைந்து கொண்டிருக்கிற உனது இந்தப் புன்முறுவலாகிய வெண்ணிலாவைக் கண்டு சகோரப் பறவையின் செய்கையைச் செய்து களிக்கின்றது.

சகோரப் பறவைக்கு நிலவு ஆஹாரம் என்று கவிகள் கூறுவது வழக்கம். சந்திரனைக் கண்டதும் சகோரப்பறவை இன்புறுவது ஸஹஜம். அதுபோல், தேவியின் புன்சிரிப்பென்னும் சந்திரிகையைக் கண்டு பரமசிவன் ஆனந்திப்பதால் பரமசிவனது மனது சகோரத்தின் செய்கையைத் தழுவுகிறது என்று கவி கூறுகிறார்.

விதுந்துதன் : - சந்திரனை மறைக்கும் கிரஹம்; ராகு, பூர்ணிமைச் சந்திரன் ராகுவால் விழுங்கப்படுவான். அதைத்தான் சந்திரக்கிரஹணம் என்பார்கள். அது கொஞ்சகாலமிருந்து விட்டு விடும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாகச் சந்திரிகை வெளிப்படும். அது போல, தேவிக்குப் பரமசிவன் மீது காதல் பூர்ணமாயிருந்தும், மாநமானது அதைத் தடுத்துவிட்டது. கொஞ்ச காலம் கழுத்து தேவிக்குக் கோபம் தணிந்தவுடன் புன்முறுவலுண்டாயிற்று. அதைக் கண்டு பரமசிவனுடைய மனது ஸந்தோஷமடைந்து என்பது கருத்து.

मानश्चित्त समुन्नतिः *என்பது அமரம். நான் உயர்ந்தவன் என்கிற மனதின் எண்ணம் மாநம்.*

कामाक्षि स्मितमञ्जरीं तव भजे यस्यास्त्विषामङ्कुरान्
आपीनस्तनपानलालसतया निश्शङ्कमङ्केशयः।
ऊर्ध्वम् वीक्ष्य विकर्षति प्रसृमरानुद्दामया शुण्डया
सूनुस्ते बिसशङ्कयाशु कुहनादन्तावलग्रामणीः॥४२॥

காமாக்ஷி ஸ்மித மஞ்ஜரீம் தவ பஜே யஸ்யாஸ் த்விஷாமாங்குராந்
ஆபீந-ஸ்தந-பாந-லாலஸதயா நி:சங்கமங்கேசய:।
ஊர்த்வம் வீக்ஷ்ய விகர்ஷதி ப்ரஸ்ருமராநுத்தாமயா சுண்டயா
ஸூநுஸ்தே பிஸ-சங்கயாசு குஹநா-தந்தாவல-க்ராமணீ:॥ ॥42॥

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
ஆபீந-ஸ்தந-பாந-லாலஸ தயா	*பெருத்த ஸ்தனங்களைப் பானம் செய்ய வேணுமென்கிற ஆசையால்*
நி:ஶங்கம்	*சங்கோசமில்லாமல்*
அங்கேஶய:	*மடியில் படுத்துகொண்டிருக்கிற*
தே	*உனது*
ஸூநு:	*குழந்தையான*
குஹநா-தந்தாவல-க்ராமணீ:	*மாயா கஜமுகனான விக்னேச்வரன்*
ஊர்த்வம் வீக்ஷ்ய	*மேலே அண்ணாந்து பார்த்து*

ப்ரஸ்ருமராந்	பரவிநிற்கிர
யஸ்யா:	எந்தப் புன்சிரிப்பின்
த்விஷாம் அங்குராந்	காந்தி கிரணங்களை
பிஸசங்கயா	தாமரைத்தண்டு என்கிற சந்தேஹத்தினால்
உத்தண்டயா சுண்டயா	நீண்ட தும்பிக்கையினால்
ஆசு	வேகமாக
விகர்ஷதி	இழுக்க விரும்புகிறானோ
தாம்	அத்தகைய
தவ	உன்னுடைய
ஸ்மிதமஞ்ஜரீம்	புன்சிரிப்பு எனும் பூங்கொத்தை ஸேவிக்கிறேன்.

காமாக்ஷி! பருத்த ஸ்தனங்களைப் பருக ஆசை கொண்டு அச்சமின்றி மடியில் படுத்திருக்கும் மாயா கஜேந்திரனாகிய உனது புதல்வன், பரவுகின்ற எந்தப் புன்சிரிப்பின் ஒளிக்கதிர்களைத் தாமரைத் தண்டென்றெண்ணி அண்ணாந்து நோக்கித்தனது நீண்ட துதிக்கையால் சீக்கிரமிழுக்கின்றானோ, அந்த உனது புன்னைகைப் பூங்கொத்தை நான் வழிபடுகிறேன்.

யானைக்குத் தாமரைத் தண்டில் அதிக விருப்பம் உண்டு. யானைமுகனான தேவியின் புத்திரன், தான் அம்பாளிடம் ஸ்தன்யபானம் பண்ணுகிறபோது, அம்பாளின் வெளுப்பான புன்சிரிப்பின் காந்தி மேலெழுந்து விளங்குவதை, தாமரைத் தண்டென்று ஸந்தேஹித்துத் தன் துதிக்கையால் அதை இழுப்பதாய் வர்ணித்திருக்கிறார்.

गाढाश्लेषविमर्दसंभ्रमवशाद् उद्दाममुक्तागुण-
प्रालम्बे कुचकुम्भयोर्विगलिते दक्षद्विषो वक्षसि।
या सख्येन पिनह्यति प्रचुरया भासा तदीयां दशां
सा कामाक्षि तवास्य चेतसि कनत्वच्छा स्मितांशुच्छटा।।४३।।

காடாச்லேஷ-விமர்த்த ஸம்ப்ரம வசாத் உத்தாம முக்தா குண
ப்ராலம்பே குச கும்பயோர் விகலிதே தக்ஷத்விஷோ வக்ஷஸி।
யா ஸக்யேந பிநஹ்யதி ப்ரசுரயா பாஸா ததீயாம் தசாம்
ஸா காமாக்ஷி! தவாஸ்ய சேதஸி கநத்வச்சா ஸ்மிதாம்ஶுச்சடா।।43।।

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
தக்ஷ-த்விஷ:	*தக்ஷ சத்ருவான பரமசிவனுடைய*
வக்ஷஸி	*மார்பில்*
குசகும்பயோ:	*கும்பங்கள் போன்ற ஸ்தனங்களில்*
காட-ஆச்லேஷ-விமர்த்த-ஸம்ப்ரமவஶாத்	*இறுக ஆலிங்கனம் செய்யும்போது ஏற்பட்ட பரபரப்பினால்*
உத்தாம-முக்தாகுண-ப்ராலம்பே	*கம்பீரமான முத்துமாலையானது*
விகலிதே	*அறுந்து பெருகும்போது*
யா	*எந்தப் புன்சிரிப்பானது*
ஸக்யேந	*ஸ்நேஹக்கட்டுப்பாட்டைக் கொண்டு*

ப்ரசுரயா-பாஸா	தனது உயர்ந்த காந்தியினால்
ததீயாம் தசாம்	அந்த முத்து மாலையினுடைய நிலைமையை
பிநஹ்யதி	மீண்டும் உண்டாக்குகிறதோ
ஸா	அப்படிப்பட்ட
அச்சா	பரிசுத்தமான
தவ	உனது
ஸ்மித-அம்சுச்-சடா	வெண்மையான புன்சிரிப்புக் காந்தி ஸமூஹமானது
அஸ்ய	இந்த என்னுடைய
சேதஸி	மனதில்
கநது	விளங்கட்டும்.

ஏ காமாக்ஷி! தக்ஷனது எதிரியாகிய பரமசிவனது மார்பில் இருகத் தழுவும் ஸமயத்தில் நெருக்கத்தினால் கொங்கைகளில் நீண்டு தொங்கும் முத்துமாலை அறுந்து பெருகும் பொழுது, எந்தப் புன்னைகை அதிக ஒளியைக்கொண்டு நட்பினால் அந்த முத்துமாலையின் நிலையைச் சேர்த்து வைக்கின்றதோ, அந்தப் பரிசுத்தம் வாய்ந்த புன்னகையின் கிரணக்கூட்டம் இந்த எனது உள்ளத்தில் விளங்க வேண்டும்.

सा मे खेलतु कामकोटि हृदये स्वच्छा – ஸா மே கேலது காமகோடி ஹ்ருதயே ஸ்வச்சா - என்று பாடாந்தரம். காமகோடி-காமகோடியே! சக்கிர ரூபிணியாகிய காமாக்ஷியே! ஸா-அந்த, ஸ்வச்சா-வெளுப்பான, ஸ்மிதாம்ஶுச்சடா-புன்சிரிப்பின் ஸமூஹமானது, மே ஹ்ருதயே-எனது மனதில், கேலது-நெருங்கிய நகையின் கூட்டம் என்பது பொருள்.

मन्दारे तव मन्थरस्मितरुचो (चां) मात्सर्यमालोक्यते
कामाक्षि स्मरशासने च नियतं रागोदयो लक्ष्यते।
चान्द्रीषु द्युतिमञ्जरीषु च महान्द्वेषाङ्कुरो दृश्यते
शुद्धानां कथमीदृशी गिरिसुतेऽशुद्धा दशा कथ्यताम्।।४४।।

மந்தாரே தவ மந்தர-ஸ்மித ருசோ(சாம்) மாத்ஸர்ய
மாலோக்யதே।
காமாக்ஷி! ஸ்மர-சாஸநே ச நியதம் ராகோதயோ
லக்ஷ்யதே।
சாந்த்ரீஷ த்யுதி-மஞ்ஜரீஷு ச மஹான் த்வேஷாங்குரோ
த்ருஶ்யதே
ஶுத்தாநாம் கதமீத்ருஶீ கிரிஸுதே(அ)சுத்தா தச
கத்யதாம்।।44।।

கிரிஸுதே	*பர்வத ராஜபுத்திரியான*
காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
தவ	*உனது*
மந்தஸ்மிதருச:	*அழகிய புன்சிரிப்பின் காந்திக்கு*
மந்தாரே	*மந்தார புஷ்பத்தினிடம்*
மாத்ஸர்யம்	*பொறாமையானது*
ஆலோக்யதே	*இருக்கிறதாகக் காணப்படுகிறது*
ஸ்மர ஶாஸநே ச	*மன்மதனை எரித்த பரமசிவனிடத்தில்*
நியதம்	*எப்போதும்*
ராகோதய:	*பிரீதியின் தோற்றமானது*
லக்ஷ்யதே	*காணப்படுகிறது*
சாந்த்ரீஷு	*சந்திரனுடையதான*

த்யுதி-மஞ்ஜரீஷு-ச	காந்தி ஸமூஹங்களிலோ-வென்றால்
மஹான்	பெருத்த
த்வேஷாங்குர:	பகையின் முளையும்
த்ருஶ்யதே	காணப்படுகிறது
ஶுத்தாநாம்	பரிசுத்தியுள்ளவர்களுக்கு
ஈத்ருஶீ	இப்பேர்பட்ட
அஶுத்தா தஶா	சுத்தமில்லாத நிலைமையானது
கதம்	எப்படி (யுண்டாயிற்றோ)
கத்யதாம்	சொல்லப்படட்டும்.

ஶுத்தாநாம் - வெண்மையாய் இருப்பவர்களுக்கு, களங்க மற்றவர்களுக்கு.

அஶுத்தா தஶா - மாத்ஸர்யம், ராகம், த்வேஷம் என்கிற நிலைகள் அஶுத்தமானவை.

காமாக்ஷி, உனது புன்சிரிப்பின் ஒளிகளுக்கு மந்தார மலர்களில் பொறாமை காணப்படுகிறது. மதனனை அடக்கிய பரமசிவனிடம் மாறாத ஆசையின் தோற்றமும் புலப்படுகிறது, பூங்கொத்துக்கு ஒப்பான சந்திரகிரணங் களில் பெரும் பகையின் முளையும் தோற்றுகிறது. மலைமகளே! மாசற்ற உனது புன்முறுவலின் ஒளிகளுக்கு இம்மாதிரியான மாசுள்ள நிலை எப்படி வந்த தென்பதைக் கூற வேண்டும். ராகத்வேஷமாத்ஸர்யங்கள் தீயோரின் குணங்கள், அவை சுத்தமானவருக்கு வரக்காரணம் என்ன? என்று கேட்கிறார் கவி. மந்தாரம், நிலா இவைகளைக் காட்டிலும் மேலான வெளுப்பாயிருக்கிறது புன்னகையென்பது கருத்து.

पीयूषं खलु पीयते सुरजनैर्दुग्धाम्बुधिर्मथ्यते
माहेशैश्च जटाकलापनिगडैर्मन्दाकिनी नह्यते।
शीतांशुः परिभूयते च तमसा तस्मादनेतादृशी
कामाक्षि स्मितमञ्जरी तव वचोवैदग्ध्यमुल्लङ्घते॥४५॥

பீயூஷம் கலு பீயதே ஸுரஜநை: துக்தாம்புதிர் மத்யதே
மாஹேசைச்ச ஜடா-கலாப-நிகடை: மந்தாகிநீ நஹ்யதே।
சீதாம்சு: பரிபூயதே ச தமஸா தஸ்மாதநேதாத்ருசீ
காமாக்ஷி ஸ்மிதமஞ்ஜரீ தவ வசோ வைதக்த்ய
முல்லங்கதே॥45॥

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
ஸுரஜனை:	*தேவர்களால்*
பீயூஷம் கலு	*அமிர்தமானது*
பீயதே	*பானம் செய்யப்படுகிறது*
துக்தாம்புதி:	*பால் ஸமுத்ரமானது*
மத்யதே	*கடையப்படுகிறது.*
மந்தாகிநீ	*கங்கையானது*
மாஹேசை:	*பரமசிவனுடையதான*
ஜடா-கலாப-நிகடை:	*சடைகளென்ற விலங்குகளால்*
நஹ்யதே	*கட்டப்படுகிறது.*
சீதாம்சு:	*சந்திரனும்*
தமஸா	*இருட்டினால்*
பரிபூயதே	*அவமதிக்கப்படுகிறான்.*
தஸ்மாத்	*ஆதலால்*
அநேதாத்ருசீ	*அப்படியில்லாததான*

இயம்	இந்த
தவ	உனது
ஸ்மிதமஞ்ஜரீ	புன்சிரிப்போவென்றால்
வசோ வைதக்த்யம்	வாக்கின் ஸாமர்த்தியத்தை
உல்லங்கதே	தாண்டி நிற்கிறது.

தமஸ் என்பதற்கு இருள், ராகு என்று பொருள். காமாக்ஷி, தேவர்களால் அமுதம் பருகப்படுகின்றது. பாற்கடல் கடையப்படுகின்றது. மஹேஶ்வரனுடைய சடைக் கூட்டமாகிற விலங்குகளால் கங்கையும் கட்டப்படுகின்றது. ராகுவால் சந்திரனும் அவமதிக்கப்படுகிறான். ஆகவே இவ்வித மித்துன்பங்கள் இல்லாத உனது புன்சிரிப்புக்கொத்து வார்த்தையின் சிறப்பையும் கடந்திருக்கிறது.

தேவி, உனது புன்சிரிப்புக்கு ஸமமாகச் சொல்லப்படும் அமுதம் முதலியவைகளுக்கு ஏதாவது துன்பமிருந்து கொண்டேயிருக்கிறது; உன் முறுவலோ யாதொரு துன்பமுமின்றி விளங்குகிறது. ஆதலால் அதன் மஹிமை வாக்கினால் சொல்ல முடியாமலிருக்கிறது.

आशङ्के तव मन्दहासलहरीं अन्यादृशीं चन्द्रिकां
एकाम्रेशकुटुम्बिनि प्रतिपदं यस्याः प्रभासङ्गमे।
वक्षोजाम्बुरुहे न ते रह(च)यतः काञ्चिद्दशां कौड्मलीम्
आस्याम्भोरुहमम्ब किं च शनकैरालम्बते फुल्लताम्।।४६।।

ஆஶங்கே தவ மந்தஹாஸ-லஹரீம் அந்யாத்ருஶீம் சந்த்ரிகாம்
ஏகாம்ரேச-குடும்பினி! ப்ரதிபதம் யஸ்யா:
ப்ரபா-ஸங்கமே।

வக்ஷோஜாம்புருஹே ந தே ரஹ(ச)யத: காஞ்சித் தசாம் கௌட்மலீம்

ஆஸ்யாம்போருஹமம்ப! கிஞ்ச சநகைராலம்பதே புல்லதாம்।।46।।

ஏகாம்ரேச குடும்பிநி!	*ஏகாம்பரநாதனுக்குப் பத்னியான*
அம்ப!	*தாயான காமாக்ஷியே*
தவ	*உன்னுடைய*
மந்தஹாஸ-லஹரீம்	*புன்சிரிப்பின் பெருக்கை*
ப்ரதிபதம்	*அடிக்கடி*
அந்யாத்ருசீம்	*தனிப்பட்ட*
சந்த்ரிகாம்	*நிலாவாக*
ஆசங்கே	*நினைக்கிறேன்.*
யஸ்யா:	*எந்த மந்தஹாஸத்தினுடைய*
ப்ரபா-ஸங்கமே	*காந்தியின் சேர்க்கையில்*
தே	*உனது*
வக்ஷோஜ-அம்புருஹே	*ஸ்தனங்களாகிற இரு தாமரைப்பூக்கள்*
கௌட்மலீம் காஞ்சித் தசாம்	*மொட்டாக இருக்கும் ஒரு அநிர்வசநீயமான நிலைமையை*
ந - ரஹயத:	*விடுகிறதில்லை.*
கிஞ்ச	*மேலும்*
தே	*உனது*
ஆஸ்ய-அம்போருஹம்	*முகமெனும் தாமரையும்*
சநகை:	*மெள்ள மெள்ள*

புல்லதாம் மலருவதை
ஆலம்பதே அடைகின்றதோ.

20வது ச்லோகத்தில், இந்தப் புன்சிரிப்பான சந்திரிகை அல்லும் பகலும் அதிகமான காந்தியை அடைந்திருக்கிறது என்றும், கோவைக் கனி போன்ற உதடுகள் என்கிற சூரிய ஒளி பிரகாசித்துக்கொண்டிருக்கையிலும் விலாஸத்தைப் பெற்றிருக்கிறது என்றும் வர்ணித்திருப்பது இங்கே கவனிக்கத்தக்கது.

ஏகாம்பர நாதரின் மனைவியே! உனது புன்னகைப் பெருக்கைத் தனிமை வாய்ந்த (ஒப்பற்ற) வெண்ணிலவு என்று அடிக்கடி நான் நினைக்கிறேன். ஏனெனில், இதன் ஒளி அடிக்கடி கலந்தவுடன் கொங்கைகளாகிற தாமரைகள் மொட்டாக இருக்கும் நிலையை விடாதிருக்கின்றன. தாயே, முகமெனும் தாமரையும் மெதுவாக மலர்ச்சியை அடைகிறது.

'ஸ்தநகுட்மளம்' - என்று ஸ்தநங்களை மொட்டாக வர்ணிப்பது கவிகளின் வழக்கம். தேவியின் சிரிப்பாகிய அதிசயமான சந்திரிகையானது ஸ்தனங்களாகிற தாமரை களை மொட்டாயிருப்பதை விடச் செய்வ தில்லை; ஆனால் திருமுகமண்டலமாகிற தாமரையையோ மலரச் செய்கிறது. இது என்ன ஆச்சரியம் என்று கவி கூறுகிறார்.

''ந தே ரசயத:'' என்று ஒரு பாடம். அப்போது, இப்புன்சிரிப்பாகிய சந்திரிகை ஸ்தனங்களாகிய தாமரைகளை மொட்டாகும்படி செய்வதில்லை. அதாவது, சந்திரிகை உண்டானவுடன் மலர்ந்த தாமரை மூடி சோபையையிழந்துவிடும். இப்புன்முறுவலானது

ஸ்தனங்களுக்குப் புதிய சோபையை உண்டுபண்ணுகிறதே யொழிய, சோபையை பங்கம் செய்வதில்லை என்பது பொருள்.

आस्तीर्णाधरकान्तिपल्लवचये पातं मुहुर्जग्मुषी
कामद्रोहिणि मांसलस्मरशरज्वालावलिं व्यञ्जती।
निन्दन्ती घनसारहारवलयज्योत्स्नामृणालानि ते
कामाक्षि स्मितचातुरी विरहिणीरीतिं जगाहेतराम्॥४७॥

ஆஸ்தீர்ணாதர-காந்தி-பல்லவ-சயே பாதம் முஹுர் ஜக்முஷீ
காமத்ரோஹிணி மாம்ஸல-ஸ்மர-சர-ஜ்வாலாவலிம் வ்யஞ்ஜதீ।
நிந்தந்தீ கநஸார-ஹார வலய-ஜ்யோத்ஸ்நா-ம்ருணாலாநிதே
காமாக்ஷி ஸ்மித-சாதுரீ விரஹிணீ-ரீதிம் ஜகாஹேதராம்॥47॥

காமாக்ஷி!	காமாக்ஷியே!
ஆஸ்தீர்ண-அதர-காந்தி-பல்லவ-சயே	பரவிநிற்கிற கீழ் உதட்டின் காந்தியாகிய தளிர்க் கூட்டத்தில்
முஹு:	அடிக்கடி
பாதம் ஜக்முஷீ	விழுந்து எழுந்திருப்பதாயும்
காம-த்ரோஹிணி	பரமசிவன் விஷயத்தில்
மாம்ஸல-ஸ்மர	அதிகமான மன்மத பாணத்தின்
சர-ஜ்வாலா-ஆவலிம்	ஜ்வாலைகளின் வரிசையை
வ்யஞ்ஜதீ	வெளிப்படுத்துகிறதாயும்
கநஸார-ஹார-வலய	கற்பூரத்தையும் முத்துமாலையையும்,

ஜ்யோத்ஸ்நா-ம்ருணாலாநி	நிலாவையும் தாமரைத் தண்டையும்
நிந்தந்தீ	இகழ்கிறதாயுமிருக்கிற
தே	உனது
ஸ்மித-சாதுரீ	புன்சிரிப்பின் சாதுர்யமானது
விரஹிணீ-ரீதிம்	விரஹமடைந்த ஸ்திரியின் நிலைமையை
ஜகாஹேதாரம்	அதிகமாய் அடைந்திருக்கிறது.

परां गाहते பராம்காஹதே - என்றும் பாடம். பொருளில் மாறுதலில்லை.

कन्दलत् स्मरशर - கந்தளத் ஸ்மரசர - என்றும் பாடம். கந்தளத்-கொழுந்துவிடும் மன்மதபாணத்தின் என்பது பொருள்.

காமாக்ஷி, கீழ் உதட்டின் ஒளியெனும் விரித்த தளிர் படுக்கையில் அடிக்கடி விழுகின்றதும், மன்மதத் துரோகியாகிய பரமசிவனிடம் கொழுந்துவிடும் மதன பாணங்களின் சுடர்த்தொகுதிகளை வெளிக்காட்டு கின்றதும், பச்சைக்கர்ப்பூரம், முத்துமாலை, நிலவு, தாமரைக்கிழங்கு இவைகளை இகழ்கின்றதுமான உனது புன்சிரிப்பின் திறமையானது கணவனைப் பிரிந்து தவிக்கும் தலைவியின் நிலையை நன்றாய் அடைந்துவிட்டது.

பாதாரவிந்த சதகம் 53-வது ச்லோகத்தில் தேவியினுடைய திருவடிகள் விரஹிணியான பாட்டைசாரியின் பத்தினியோடு ஒற்றுமையை அடைந்ததாய் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. அது இவ்விடத்தில் கருதத்தக்கது.

கணவனைவிட்டுப் பரிதவிக்கும் தலைவி தளிர்மயமான படுக்கையில் விழுந்து புரளுவாள்; கணவன் விஷயமான மன்மததாபத்தின் ஜ்வாலைகளை வெளியிடுவாள். குளிர்ச்சியுள்ள பச்சைக்கர்ப்பூரம், முத்துமாலை, முதலியவைகளால் தனது மன்மத தாபம் ஆறாததால் அதை வெருப்பாள். அதுபோல் உனது மந்தஸ்மிதமானது விரஹிணியின் தசையை அடைந்திருக்கிறது என்கிறார் கவி. தளிர்போன்ற கீழ் உதட்டில் மந்தஸ்மிதம் தவிழ்கிறதை, தளிர்மயமான படுக்கையில் புரளுவதாகச் சொல்லுகிறார் கவி. மந்தஸ்மிதம் கதிர்விட்டு வெளி வருவதை பரமசிவனிடம் கொழுந்துவிடும் மன்மத பாணங்களின் ஜ்வாலைகள் என்கிறார். பச்சைக்கர்ப்பூரம், முத்துமாலை முதலியவைகளை மந்தஸ்மிதம் தனது காந்தியால் நிந்திக்கிறது. அதாவது அவைகளைக்காட்டிலும் மேலான வெண்மை நிறம் பெற்றிருக்கிறது. இதைப்பற்றி மந்தஸ்மிதம் தாமரைத்தண்டு முதலியவைகளை இகழ்கின்றது என்றார்.

सूर्यालोकविधौ विकासमधिकं यान्ती हरन्ती तम–
स्सन्दोहं नमतां निजस्मरणतो दोषाकरद्वेषिणी।
निर्यान्ती वदनारविन्दकुहरान्निर्धूतजाड्या नृणां
श्रीकामाक्षि तव स्मितद्युतिमयी चित्रीयते चन्द्रिका।।४८।।

ஸூர்யாலோகவிதௌ விகாஸமதிகம் யாந்தீ ஹரந்தீ தம:-
ஸந்தோஹம் நமதாம் நிஜஸ்மரணத:
தோஷாகர-த்வேஷிணீ।
நிர்யாந்தீ வதநாரவிந்த-குஹரான் நிர்த்தூத-ஜாட்யா
ந்ருணாம்
ஸ்ரீ காமாக்ஷி! தவ ஸ்மித-த்யுதிமயீ சித்ரீயதே
சந்த்ரிகா।।48।।

ஸ்ரீ காமாக்ஷி!	காமாக்ஷியே
தவ	உனது
ஸ்மித-த்யுதிமயீ	புன்சிரிப்பு காந்தியாகிற
சந்த்ரிகா	நிலாவானது
ஸூர்ய-ஆலோக-விதௌ	ஸூர்யனைக் காணும்பொழுது
(ஸூரி-ஆலோகவிதௌ)	(வித்வான்களைக் காணும்போது)
அதிகம் விகாஸம் யாந்தீ	அதிகமான காந்தியை அடைகிறதாயும்
நிஜ-ஸ்மரணத:	தன்னை நினைத்தமாத்திரத்திலேயே
நமதாம்	நமஸ்கரிப்பவர்களுக்கு
தமஸ் ஸந்தோஹம்	அஞ்ஞானக் கூட்டத்தை
ஹரந்தீ	போக்கடிக்கிறதாயும்
தோஷாகர-த்வேஷிணீ	சந்திரனை இகழ்கிறதாயும்
வதந-அரவிந்த-குஹராத்	முகமென்கிற தாமரைப்பூவின் மத்தியிலிருந்து
நிர்யாந்தீ	வெளியாகிறதாயும்
ந்ருணாம்	ஜனங்களுடைய

நிர்த்தூத-ஜாட்யா	ஜடத்தன்மையைப் போக்குகிறதாயுமிருந்து
சித்ரீயதே	விசித்திரமாயிருக்கிறது

ஸூர்யாலோக என்பதை ஸூரி+ஆலோக என்றும், ஸூர்ய+ஆலோக என்றும் பிரித்து, முன்னதற்கு வித்வான்களின் காட்சி என்றும், பின்னதற்கு சூரியனுடைய வெளிச்சமென்றும் பொருள் கொள்ள வேண்டும். சூரியனுக்கு வெளிச்சம் கொடுப்பதும், வித்வான்களுக்கு விளக்கம் தருவதும் அம்பாளுடைய திருவருளே. தமஸ் என்பதற்கு அஞ்ஞானம் என்றும், இருள் என்றும் பொருள். தோஷாகரன் என்பதற்கு இரவை உண்டுபண்ணுகிறவனான சந்திரன் என்றும், தோஷத்துக்கு இருப்பிடமான துஷ்டன் என்றும் பொருள்.

காமாக்ஷி, சூரியனைக் காணுகையில் (அறிஞரிகளைக் காணும் போது) அதிக மலர்ச்சியை யடைகின்றதும், வணங்குவோரின் இருள் கூட்டத்தைத் (அஞ்ஞானத்திரளை) தன்னை நினைப்பதால் அகற்றுகின்றதும், சந்திரனைப் பகைக்கின்றதும் (குற்றமுள்ளோரைப் பகைக்கின்றதும்) முகத் தாமரையிலிருந்து வெளிவருகின்றதும், மனிதர்களின் குளிர்ச்சியை (அறிவீனத்தை)ப் போக்குகின்றதுமான உனது சிரிப்பின் ஒளியாகிய நிலவு வியப்பை யளிக்கின்றது.

சந்திரிகை, ஸூரியனைக்கண்டால் மங்கிவிடும். சந்திரனைப் பகைக்காது; நினைத்த மாத்ரத்தில் இருளைப்போக்காது; தாமரையின் நடுவிலிருந்து வெளிவராது; குளிர்ச்சியையுண்டு பண்ணும். காமாக்ஷியே! உனது புன்சிரிப்பின் ஒளியாகிய நிலவு இவற்றுக்கு

மாறுதலாக இருக்கிறது என்று சப்த ச்லேஷத்தைக்கொண்டு கூறுகிறார் கவி.

कुण्डीकुर्युरमी कुबोधघटनामस्मन्मनोमाथिनीं
श्रीकामाक्षि शिवंकरास्तव शिवे श्रीमन्दहासाङ्कुराः।
ये तन्वन्ती निरन्तरं तरुणिमस्तम्बेरमग्रामणी–
कुम्भद्वन्द्वविडम्बिनि स्तनतटे मुक्ताकुथाडम्बरम्।।४९।।

குண்டீகுர்யுரமீ குபோத-கடநாம் அஸ்மந்மநோ-மாதிநீம்
ஸ்ரீ காமாக்ஷி! சிவம் கரா: தவ சிவே!
ஸ்ரீமந்தஹாஸாங்குரா:।
யே தந்வந்தி நிரந்தரம் தருணிம-ஸ்தம்பேரம-க்ராமணீ-
கும்ப-த்வந்த-விடம்பிநி ஸ்தநதடே
முக்தா-குதாடம்பரம்।।49।।

சிவே!	*மங்களமூர்த்தியாகிய*
ஸ்ரீ காமாக்ஷி!	*காமாக்ஷியே*
யே	*எந்தப் புன்சிரிப்புகளானவை*
நிரந்தரம்	*எப்போதும்*
தருணிம-ஸ்தம்பேரம-க்ராமணீ-கும்ப-த்வந்த-விடம்பிநி	*யௌவனமாகிற யானை ச்ரேஷ்டத்தின் இரண்டு கும்பங்களைப்போன்ற*
ஸ்தநதடே	*ஸ்தன பிரதேசத்க்தில்*
முக்தா-குதா-ஆடம்பரம்	*முத்துக்களால் செய்யப்பட்ட அம்பாரி விரிப்பின் நிலைமையை*
தந்வந்தி	*செய்கின்றனவோ,*

தே	அப்படிப்பட்ட
அமீ	இந்த
சிவங்கரா:	மங்களகரங்களான
தவ	உன்னுடைய
ஸ்ரீமந்தஹாஸ-அங்குரா:	புன்சிரிப்புக்கொழுந்துகள்
அஸ்மந்-மநோ-மாதிநீம்	எமது மனதைக் கெடுக்கிற
குபோத கடநாம்	அக்ஞானத்தின் ஸம்பந்தத்தை
குண்டீகுர்யு:	நாசம் செய்யட்டும்.

சிவனது நாயகியாகிய காமாக்ஷி! எவை யௌவன மெனும் சிறந்த கஜராஜனது மத்தகமிரண்டையுமொத்த ஸ்தனங்களில் முத்துக் கோர்த்த விரிப்பின் அழகை எப்பொழுதும் உண்டு பண்ணுகின்றனவோ; அந்த மங்களங்களைவிளைக்கும் உனது இந்தச் சிறந்த புன்னகையின் அங்குரங்கள் நமது மனதை வாட்டும் கெட்ட அறிவின் தொடர்பைக் குலைக்கவேண்டும்.

தேவியை வழிபடுபவர்க்கு அஞ்ஞானம் முதலிய விக்னங்கள் ஊழ்வகையால் உளவாயினும், அவை திருவருளால் நாசமுற்று அவர்களைத் தடை செயற்பாலனவாகா என்பதாம்.

प्रेङ्खन्तः शरदम्बुदा इव शनैः प्रेमानिलैः प्रेरिता
मज्जन्तो मदनारिकण्ठसुषमासिन्धौ मुहुर्मन्थरम्(राः)।
श्रीकामाक्षि तव स्मितांशुनिकराः श्यामायमानश्रियो
नीलाम्बोधरनैपुणीं तत इतो निर्निद्रयन्त्यञ्जसा॥५०॥

ப்ரேங்கந்த: சரதம்புதா இவ சநை: ப்ரேமா நிலை:
ப்ரேரிதா:
மஜ்ஜந்தோ மதநாரி-கண்ட-ஸுஷமா-ஸிந்தௌ முஹு:
மந்த்ரம்(ரா:)।
ஸ்ரீ காமாக்ஷி! தவ ஸ்மிதாம்சு-நிகரா: ச்யாமாயமாநச்ரிய:
நீலாம்போதர-நைபுணீம் தத இதோ நிர்நித்ரய்ந்
த்யஞ்ஜஸா॥50॥

ஸ்ரீ காமாக்ஷி!	*ஸ்ரீ காமாக்ஷியே!*
சரத் அம்புதா: இவ	*சரத்காலத்திய மேகம் போல்*
ப்ரேங்கந்த:	*விளங்குகிற*
தவ	*உனது*
ஸ்மித-அம்சு-நிகரா:	*புன்சிரிப்புக்காந்தியின் படலங்கள்*
சநை:	*மெள்ள*
ப்ரேம-அநிலை:	*அன்பெனும் காற்றினால்*
ப்ரேரிதா:	*தள்ளப்பட்டவைகளாய்*
முஹு:	*அடிக்கடி*
மதந-அரி-கண்ட-ஸுஷமா: ஸிந்தௌ	*மன்மத சத்துருவான சிவனுடைய கழுத்தின் காந்தியாகிற ஸமுத்திரத்தில்*
மந்தரம்	*மெதுவாக*
மஜ்ஜந்த:	*முழுகினவைகளாய்க் கொண்டு*
ச்யாமாயமாந-ச்ரிய:	*கருத்த நிறமுள்ளவைகளாகி*
அஞ்ஜஸா	*உடனே*
தத: இத:	*அங்குமிங்கும்*

நீல-அம்போதர-நைபுணீம் — நீருண்ட கருத்த மேகத்தின் கௌரவத்தை

நிர்நித்ரயந்தி — விளங்கச்செய்கின்றன.

ஸ்ரீ காமாக்ஷி! உனது புன்சிரிப்பின் கிரணக் கூட்டங்கள், சரத்காலத்திய மேகங்களைப்போல் அன்பெனும் காற்றுக்களால் தள்ளப்பட்டு மெதுவாக நகர்ந்து சென்று, மன்மதன் பகைவரான பரமசிவனின் கழுத்தழகு என்னும் கடலில் அடிக்கடி மெதுவாக மூழ்கிக் கருத்தநிறத்தையடைந்து கார்மேகங்களின் திறனைத் தாமதமின்றி இங்குமங்கும் வெளிப்படுத்துகின்றன.

கீழே 22-வது ச்லோகத்தில் மந்தஸ்மிதத்தை ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிற சரத்கால மேகத்தினுடைய துணைக்கு களின் சோபையுடையதாய் வர்ணித்திருப்பது இங்கே சிந்திக்கத்தகுந்தது.

व्यापारं चतुराननैकविहृतौ व्याकुर्वती कुर्वती
रुद्राक्षग्रहणं करेण सततं वागूर्मिकल्लोलिता।
उत्फुल्लं धवलारविन्दमधरीकृत्य स्फुरन्ती सदा
श्रीकामाक्षि सरस्वती विजयते त्वन्मन्दहासप्रभा।।५१।।

வ்யாபாரம் சதுராநநைக விஹ்ருதௌ வ்யாகுர்வதீ குர்வதீ
ருத்ராக்ஷ க்ரஹணம் கரேண ஸததம் வாகூர்மி கல்லோலிதா।
உத்புல்லம் தவலாரவிந்த மதரீக்ருத்ய ஸ்புரந்தீ ஸதா
ஸ்ரீ காமாக்ஷி! ஸரஸ்வதீ விஜயதே த்வந்மந்தஹாஸ ப்ரபா।।51।।

ஸ்ரீ காமாக்ஷீ!	ஸ்ரீ காமாக்ஷியே!
சதுர ஆநந ஏக விஹ்ருதெள	பிரம்மதேவனொருவனிடத்திலேயே (அழகிய முகமொன்றில் விளையாடுவதில்)
வ்யாபாரம்	தனது கார்யத்தை
வ்யாகுர்வதீ	காட்டுகிறதாயும்
கரேண	கையினால்
ருத்ராக்ஷ க்ரஹணம்குர்வதீ	ருத்ராக்ஷத்தை வைத்துக் கொண்டிருப்பதாயும் (சிவனுடைய இந்திரியங்களை வசப்படுத்துகிறதாயும்)
ஸததம்	எப்போதும்
வாக் - ஊர்மி- கல்லோலிதா	வாக் என்னும் அலையால் அலைக்கப்பட்டதாயும்
ஸதா	எப்போதும்
உத்புல்லம்	நன்கு மலர்ந்ததான
தவள அரவிந்தம்	வெண்தாமரைப் பூவை
அதரீக்ருத்ய	தாழ்த்தியாகச் செய்துகொண்டு (ஆஸனமாக்கிக்கொண்டு)
ஸ்புரந்தீ	விளங்குகிற
த்வந்-மந்தஹாஸ-ப்ரபா	உன் புன்சிரிப்புக் காந்தியானது
ஸரஸ்வதீ	ஸரஸ்வதியாக
விஜயதே	விளங்குகிறது.

रुद्राक्षग्रहणं महेशि – ருத்ராக்ஷக்ரஹணம் மஹேசி; என்றும் - **सरस्वतीव जयति** – ஸரஸ்வதீவ ஜயதி என்றும் பாடம்.

ஸ்ரீ காமாக்ஷி! பிரமன் ஒருவனிடமே களியாடு கின்றதும் (அழகிய முகத்திலேயே உலாவுகின்றதும்) ருத்ராக்ஷத்தைக் கையில்கொண்டும் (சிவனது கண்களைக் கவருகின்றதும்) எப்பொழுதும் சொற்களின் அலை களோடு கூடியதும், மலர்ந்த வெண்தாமரையை ஆஸன மாகக்கொண்டும் (வென்தாமரையைப் புறக்கணித்துக் கொண்டும்) எப்பொழுதும் விளங்கும் உனது புன்சிரிப் பொளி கலைமகளாக விளங்குகின்றது.

சதுர ஆநந - அழகிய முகம் என்றும், சதுர் ஆநந - நான்கு முகத்தையுடைய என்றும், ருத்ராக்ஷ - ருத்ராக்ஷமாலை, ருத்ர - அக்ஷ - ருத்திரனுடைய புலன் என்றும் பொருள் கொள்ளல் வேண்டும். இவ்வாறு பொருள்கொண்டு இந்த ச்லோகத்தில் அமைந்திருக்கும் சிலேடை அலங்காரத்தை உணர்க.

மஹேமுசி - என்ற பாடத்தில் மஹேசனின் மனைவி யாகிய காமாக்ஷியே என்பது பொருள். ஸரஸ்வதீவ ஜயதி - என்ற பாடத்தில் ஸரஸ்வதிபோல் விளங்குகிறது என்பது பொருள்.

कर्पूरद्युतितस्करेण महसा कल्माषयत्याननं
श्रीकामाक्षि शिवप्रिये पतिरिव श्रीमन्दहासोऽपि ते।
आलिङ्गत्यतिपीवरां स्तनतटीं बिम्बाधरं चुम्बति
प्रौढं रागभरं व्यनक्ति मनसो धैर्यम् धुनीतेतराम्।।५२।।

கர்ப்பூர த்யுதி தஸ்கரேண மஹஸா கல்மாஷயந்த்யாநநம்
ஸ்ரீ காமாக்ஷி!சிவப்ரியே! பதிரிவ ஸ்ரீமந்தஹாஸொऽபி தே।
ஆலிங்கத்யதிபீவராம் ஸ்தந தடீம் பிம்பாதரம் சும்பதி
ப்ரௌடம் ராகபரம் வ்யநக்தி மநஸோ தைர்யம் துநீதே
தராம்।।52।।

சிவப்ரியே	சிவபத்நியான
ஸ்ரீ காமாக்ஷி!	காமாக்ஷியே!
தே	உனது
ஸ்ரீ மந்தஹாஸ: அபி	புன்சிரிப்பும்
பதி: இவ	உன் பர்த்தாவைப் போலவே
கர்ப்பூர த்யுதி தஸ்கரேண	கர்ப்பூரக்காந்தியைக் கவர்கிற
மஹஸா	ஒளியினால்
ஆநநம்	முகத்தை
கல்மாஷயதி	விசித்ர நிறமுள்ளதாகச் செய்கிறது
அதிபீவராம்	மிகவும் பெருத்த
ஸ்தநதடீம்	ஸ்தனப்பிரதேசத்தை
ஆலிங்கதி	ஆலிங்கனம் பண்ணிக்கொள்ளுகிறது
பிம்பாதரம்	கோவைப்பழம் போன்ற உதட்டை
சும்பதி	முத்தமிடுகிறது
ப்ரௌடம்	முதிர்ந்த
ராகபரம்	அதிக ஆசையை
வ்யநக்தி	வெளியிடுகிறது
மனஸ:	மனதினுடைய
தைர்யம்	தைர்யத்தை
துநீதேதராம்	மிகவும் உலுக்கிக்குலைக்கிறது

श्री काञ्चीपुरनायिके पतिः – ஸ்ரீ காஞ்சீபுரநாயிகே பதி: - என்றும் பாடம்.

சிவனது காதலியாகிய ஸ்ரீ காமாக்ஷி! உனது நாயகனைப்போல் உனது அழகிய புன்சிரிப்பும் கற்பூரத்தின் ஒளியைக்கவரும் தனது ஒளியால் முகத்தைக் கொஞ்சம் வெளிர்நிறமுள்ளதாக்குகிறது. மிகப் பருத்த கொங்கைகளையணைத்துக்கொள்கிறது. கோவைக்கனி போன்ற இதழை முத்தமிடுகிறது. ஆழ்ந்த உவகைப் பெருக்கை வெறுயிடுகிறது. மனதின் திடத்தையும் உலுக்கிக்கொலைக்கின்றது.

புன்சிரிப்பை காமாக்ஷியின் பதிக்கு ஒப்பிட்டு இரண்டின் செயல்களையும் ஒத்துக் காண்பித்திருப்பது அதிசயிக்கத்தகுந்தது, நாயகன் எத்திறம் நாயகி அத்திறம் என்னும் உலகமொழியின் உண்மையையும் இதில் கான்க.

वैशद्येन च विश्वतापहरणक्रीडापटीयस्तया
पाण्डित्येन पचेलिमेन जगतां नेत्रोत्सवोत्पादने।
कामाक्षि स्मितकन्दलैस्तव तुलामारोढुमुद्योगिनी
ज्योत्स्नासौ जलराशिपोषणतया दूष्यां प्रपन्ना दशाम्।।५३।।

வைசத்யேந ச விச்வதாபஹரணக்ரீடாபடீயஸ்தயா
பாண்டித்யேந பசேலிமேந ஜகதாம்
நேத்ரோத்ஸவோத்பாதநே।
காமாக்ஷி! ஸ்மித கந்தலைஸ்தவ
துலாமாரோடுமுத்யோகிநீ
ஜ்யோத்ஸ்நாऽஸௌ ஜலராசி போஷணதயா தூஷ்யாம்
ப்ரபந்நா தசாம்।।53।।

காமாக்ஷி!	காமாக்ஷியே!
வைசத்யேந ச	வெளுமையினாலும்

விச்வதாபஹரண	உலகத்தின் தாபத்தை நீக்கும்
க்ரீடாபடீயஸ்தயா	கேளியில் ஸாமார்த்தியத்தினாலும்
ஜகதாம்	ஜகத்திற்கும்
நேத்ர உத்ஸவ உத்பாதநே	நேத்திரானந்தத்தை உண்டுபண்ணும் விஷயத்தில்
படேளிமேரு பாண்டித்யேந	பழுத்ததான ஸாமர்த்தியத்தினாலும்
தவ	உனது
ஸ்மித கந்தலை:	புன்சிரிப்புக்களோடு
துலாம்	ஸமதையை
ஆரோடும் உத்யோகிநீ	அடைவதற்கு முயற்சி செய்கிற
அஸௌ ஜ்யோத்ஸ்நா	அந்த நிலாவானது
ஜலராசி போஷணதயா	ஜலராசியென்கிற ஜடராசியைப் பொங்கும்படி செய்வதாலே
தூஷ்யாம்	இழிவான
தசாம்	நிலைமையை
ப்ரபந்நா	அடைந்து விட்டது.

காமாக்ஷி! வெண்மையாலும் உலகின் தாபத்தையகற்றும் விளையாட்டில் கைதேர்ந்திருப் பதாலும், உலகத்தார் கண்களுக்கு இன்பந்தருவதில் பக்குவமான திறமையாலும், உனது புன்னகையின் ஒற்றுமையைப் பெற முயலும் இந்த வெண்ணிலவு அறிவிலிகளின் கூட்டத்தை

வளர்ப்பதால் (ஸமுத்திரத்தைப் பொங்கி எழச் செய்வதால்) இகழத்தக்க நிலையை அடைந்துவிட்டது.

வைஶத்யம் - வெண்மை, சுத்தம்; விஶ்வதாபஹரணம் - உலகங்களினுடைய உஷ்ணத்தை நீக்குதல்; ஜலராசிபோஷணம் - ஸமுத்திரம் பொங்கும்படி செய்தல்; ஜடராசிபோஷணம் - ஜடர்களின் ராசியைப்போஷிக்கும்படி செய்தல், அல்லது ஜலராசியான ஸமுத்திரத்திலிருந்து விருத்தியடைதல். ஒன்றிடையிட்ட மேல் சுலோகத்தில் உள்ளதுபோல் இதிலும் அமைந்துள்ள சிலேடையைக் காண்க.

लावण्याम्बुजिनीमृणालवलयैः शृङ्गार(गन्ध)गर्जद्द्विप-
ग्रामण्यः श्रुतिचामरैस्तरुणिमस्वाराज्यबीजाङ्कुरैः।
आनन्दामृतसिन्धुवीचिपृष्तैरास्याब्जहंसैस्तव
श्रीकामाक्षि मथान मन्दहसितैर्मत्कं मनःकल्मषम्।।५४।।

லாவண்யாம்புஜிநீம்ருணாலவலயை:
ச்ருங்காரகர்ஜத்(கந்த) த்விப
க்ராமண்ய: ச்ருதிசாமரைஸ் தருணிம ஸ்வாராஜ்ய
பீஜாங்குரை:।
ஆனந்தாம்ருத-ஸிந்து-வீசி-ப்ருஷ்தை: ஆஸ்யாப்ஜ-
ஹம்ஸை ஸ்தவ
ஸ்ரீ காமாக்ஷி! மதாந மந்தஹஸிதை: மத்கம்
மந:கல்மஷம்।।54।।

ஸ்ரீ காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
லாவண்ய அம்புஜிநீ ம்ருணாள வலயை:	*அழகென்னும் தாமரைப்பூவின் தண்டுகளாயும்*
ச்ருங்கார கர்ஜத் த்விப க்ராமண்ய:	*சிருங்காரமென்னும் கர்ஜிக்கிறசிறந்த யானையின்*

ச்ருதி சாமரை:	காதில் கட்டிய வெண்சாமரங்களாயும்
தருணிம - ஸ்வாராஜ்ய பீஜ அங்குரை:	யௌவனமென்னும் ஸ்வராஜ்யத்தின் வித்துக்களின் முளையாகவும்
ஆனந்த அம்ருத ஸிந்து வீசி ப்ருஷதை:	ஆனந்தமென்னும் அம்ருத ஸாகரத்தின் சிறிய அலைகளாயும்
ஆஸ்ய அப்ஜ ஹம்ஸை:	முகமென்னும் தாமரைப் பூவிலிருக்கும் ஹம்ஸங்களாயுமிருக்கிற
தவ	உனது
மந்தஹஸிதை:	புன்சிரிப்புகளால்
மத்கம்	எனது
மன: கல்மஷம்	மனதிலிருக்கும் அழுக்கை
மதாந	போக்கடிப்பாயாக.

கந்த த்விப - என்ற பாடத்திற்கு மதம் பிடித்த யானை என்பது பொருள்.

ஸ்ரீ காமாக்ஷி! அழகெனும் தாமரைத் தடாகத்திலுள்ள தாமரைத் தண்டுகளும், சிங்காரமென்னும் மதித்த கஜேந்திரனின் காதில் கட்டிய வெண்சாமரங்களும், யௌவனத்தின், ஏகாதிபத்ய ஒளிக்கதிர்களும், ஆனந்தமாகிற பாற்கடலின் அலைகளின் திவலைகளும், முகத்தாமரையில் உலாவும் அன்னங்களுமாகிய உனது மந்தஹாஸங்களால் எனது மனதின் அழுக்கை அகற்றுவாயாக.

புன்சிரிப்பை இங்கே ஆனந்தாம்ருத ஸாகரத்தின் சிறிய அலைகள் என்று சொல்லியிருக்கிறதை நினைத்தால், அவர் அன்பு மிகுதியோடு உறைப்பத் தியானிக்குந் தியானப்பயிற்சி வயத்தால் உளதாகிய அம்மையின் அநுக்ரஹபூர்வமான புன்முறுவலைத்தாம் கண்டு தம்மனுபவம் கூறியவாறு தெற்றென விளங்குகிறது. ஏனையோரையும் அவ்வாறு செய்து மோக்ஷானந்தமடையக்கடவீர் என்று தந்துணிபுரைத்து வற்புறுத்தியவாறும் உணர்க.

उत्तुङ्गस्तनमण्डलीपरिचलन्माणिक्यहारच्छटा–
चञ्चच्छोणिमपुञ्जमध्यसरणिं मातः परिष्कुर्वती।
या वैदग्ध्यमुपैति शङ्करजटाकान्तारवाटीपतत्
स्वर्वापीपयसः स्मितद्युतिरसौ कामाक्षि ते मञ्जुला।।५५।।

உத்துங்க ஸ்தந மண்டலீ பரிசலந் மாணிக்ய ஹார ச்சடா-
சஞ்சத் சோணிம புஞ்ஜ மத்ய ஸரணிம் மாத:
பரிஷ்குர்வதீ।
யா வைதக்த்ய முபைதி சங்கர ஜடா காந்தார வாடீ பதத்
ஸ்வர்வாபீ பயஸ: ஸ்மித த்யுதிரஸௌ காமாக்ஷி! தே
மஞ்ஜுலா।।55।।

மாத:	தாயாரான
காமாக்ஷி!	காமாக்ஷியே!
உத்துங்க ஸ்தந மண்டலீ பரிசலந் மாணிக்ய ஹாரச்சடா சஞ்சத் சோணிம புஞ்ஜ மத்ய ஸரணிம்	பெருத்த ஸ்தன பாரங்களில் அசைந்திடா நிற்கும் மாணிக்ய ஹாரத்திலிருந்து வெளிவரும் சிவந்த காந்திக்கொடியினுடைய புதரின் மத்தியில் தோன்றும்

	இடங்களை
பரிஷ்குர்வதீ	நிரப்புகின்ற
யா	எந்தபுன்சிரிப்பின் காந்தியானது
சங்கர ஜடா காந்தார வாமு பதத் ஸ்வர்வாபீ பயஸ:	சங்கரனுடைய ஜடை யென்னும் காடுகளில் பாய்கிற கங்கையின் ஜலத்தின்
வைத்க்த்யம்	நிலைமையை
உபைதி	அடைகிறதோ
அஸெள	இந்த
தே	உனது
ஸ்மித த்யுதி:	புன்சிரிப்பின் ஒளியானது
மஞ்ஜுலா	அழகுவாய்ந்ததாகும்.

தாயே காமாக்ஷி! எது உயர்ந்த ஸ்தனமண்டலத்தில் அசைந்தாடும் மாணிக்க மாலையின் கொத்துபோல் திகழும் சிவப்பு நிறக்குவியலின் நடுவை அழகுபடுத்துகின்ற உனது மந்தஹாஸம், சிவனது சடைவரிசையாகிற காட்டின் நடுவே விழும் தேவ கங்கையின் ஸாம்யத்தையடைகின்றதோ, அந்த உனது சிரிப்பின் ஒளி ஒன்றே வனப்பு வாய்ந்தது.

தேவியின் திருமேனித் தோற்றத்தினை கவி தன் மனத்தில் பதித்துவைத்துத் தியானித்து வழிபட்டுத் தோத்திரம் செய்யும் அழகு இதில் ஆழ்ந்து உணரத்தக்கது.

सन्नामैकजुषा जनेन सुलभं संसूचयन्ती शनैः
उत्तुङ्गस्य चिरादनुग्रहतरोरुत्पत्स्यमानं फलम्।
प्राथम्येन विकस्वरा कुसुमवत्प्रागल्भ्यमभ्येयुषी
कामाक्षि स्मितचातुरी तव मम क्षेमङ्करी कल्पताम्।।५६।।

ஸந்நாமைகஜுஷா ஜநேந ஸுலபம் ஸம்ஸூசயந்தீசநை:
உத்துங்கஸ்ய சிராதநுக்ரஹதரோருத்பத்ஸ்யமாநம் பலம்।
ப்ராதம்யேந விகஸ்வரா குஸுமவத் ப்ராகல்ப்யமப்யேயுஷீ
காமாக்ஷி! ஸ்மித சாதுரீ தவ மம க்ஷேமங்கரீ
கல்பதாம்॥56॥

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
ஸந்நாம ஏக ஜுஷா	*ஸாது என்ற ஒரே பெயரையடைந்த*
ஜநேந	*மனிதனால்*
ஸுலபம்	*அடையக்கூடிய*
உத்துங்கஸ்ய	*உயர்ந்த*
அநுக்ரஹதரோ:	*அநுக்ரஹமாகிற விருக்ஷத்திலிருந்து*
சிராத்	*வெகுநாள் கழித்து*
உத்பத்ஸ்யமாநம்	*உண்டாகப்போகிற*
பலம்	*பலத்தை*
சநை:	*மெதுவாக*
ஸம்ஸூசயந்தீ	*ஸூசனை செய்கிறதாயும்*
ப்ராதம்யேந	*முதல் முதலாக*
விகஸ்வரா	*மலர்ந்தும்*
குஸுமவத்	*புஷ்பம் போல்*
ப்ராகல்ப்யம்	*பெருமிதத்தை*
அப்யேயுஷீ	*அடைந்துள்ள*
தவ	*உன்னுடைய*
ஸ்மிதசாதுரீ	*புன் சிரிப்பின் திறம்*

மம	எனக்கு
க்ஷேமங்கரீ	க்ஷேமத்தைச் செய்கிறதாக
கல்பதாம்	ஆகட்டும்.

காமாக்ஷியே! நல்ல பெயரையடைந்த ஜனங்களாலேயே, எளிதில் அடையக்கூடியதும், மிகவு முயர்ந்த அருளென்றும் மரத்தின் வெகுநாட்களுக்குப் பிறகு உண்டாகப்போகும், பழத்தை மெதுவாக முன்பே ஸூசனம் செய்கின்றதும், மலரைப்போல்முதலில் மலர்ந்து, பெருமிதத்தையடைகின்றதுமான உனது புன்னகையின் திறம் எனக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும்.

தேவி தாமே வலியவந்து தம் அடியார்களைப் பலதிறத்தாளும் ஆட்கொண்டருளும் முறை இங்கே ஆசிரியர் குறிப்பித்த விதம் காண்க.

धानुष्काग्रसरस्य लोलकुटिलभ्रूलेखया बिभ्रतो
लीलालोकशिलीमुखं नववयःसाम्राज्यलक्ष्मीपुषः।
जेतुं मन्मथमर्दिनं जननि ते कामाक्षि हासाङ्कुरो
वल्गुर्विभ्रमभूभृतो वितनुते सेनापतिप्रक्रियाम्।।५७।।

தானுஷ்காக்ர-ஸரஸ்ய-லோல-குடில-ப்ரூ-லேகயா
பிப்ரதோ
லீலாலோக-சிலீமுகம் நவ
வ்யஸ்ஸாம்ராஜ்ய-லக்ஷ்மீபுஷ:।
ஜேதும் மன்மத-மர்த்திநம் ஜநநி தே காமாக்ஷி!
ஹாஸாங்குர:
வல்குர் விப்ரம பூப்ருதோ விதநுதே ஸேநாபதி
ப்ரக்ரியாம்।।57।।

ஜநநி!	தாயாரான
காமாக்ஷி!	காமாக்ஷியே
தானுஷ்க அக்ர ஸரஸ்ய	பெரிய வில்லாளியாயும்
லோல-குடில-ப்ரூ- லேகயா	அசைந்து வளைந்து கொண்டிருக்கிற புர்வக்கொடியால்
லீலா ஆலோக சிலீமுகம்	விளையாட்டுப் பார்வையென்கிறபாணத்தை
பிப்ரத:	வைத்துக்கொண்டிருப்- பவனாயும்
நவ வயஸ் ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ புஷ:	புதிய யௌவனமென்னும் ராஜ்யலக்ஷ்மியை அடைந்தவனாயுமிருக்கிற
விப்ரம பூப்ருத:	விலாஸமென்கிற அரசனுக்கு
மன்மத மர்த்திநம்	மன்மதனைவென்ற சிவனை
ஜேதும்	ஜெயிக்கவேண்டிய விஷயத்தில்
தே	உனது
வல்கு:	அழகிய
ஹாஸ அங்குர:	புன்சிரிப்புக்கள்
ஸேநாபதி ப்ரக்ரியாம்	ஸேனாதிபதியின் தொழிலை
விதனுதே	செய்கிறது

★ **जननि ते मन्दस्मितप्रक्रमः** ஜநநி தே மந்தஸ்மித ப்ரக்ரம: - என்றும், **जननि ते कामाक्षि हासः स्वयम्** ஜநநி தே காமாக்ஷி ஹாஸ: ஸ்வயம் - என்றும் பாடாந்தரங்கள். தே வல்கு: மந்தஸ்மித ப்ரக்ரம: - உனது அழகிய புன்சிரிப்பின் ரீதி என்பது பொருள். ஜநநி காமாக்ஷி தே வல்கு: ஹாஸ: - தாயாகிய காமாக்ஷியே! உனது அழகிய புன்சிரிப்பானது, ஸ்வயம் - தானாகவே என்பது பொருள்.

அன்னையே! காமாக்ஷி! வில்லாளிகளில் முதல்வனும், அசைகின்ற வளைந்த புருவக்கொடியால் அழகிய விளையாட்டுப் பார்வையென்றும் அம்பைத் தொடுப்பவனும், யௌவநத்தின் அரசாக்ஷியை யடைந்தவனுமான அழகிய விப்ரமம் (சேஷ்டை) என்னும் அரசனுக்கு உனது அழகிய புன்முறுவல் மன்மதனை வென்ற பரமசிவனை வெல்வதற்காக ஸேனாதிபதியின் செயலைத்தானே செய்கின்றது.

'**स्त्रीणां विलासबिब्बोकविभ्रमा ललितं तथा। हेलालीलेत्यमीभावा: क्रिया: शृङ्गारभावजा:**'' என்று அமரம். ஸ்திரீகளுடைய ச்ருங்காரபாவமாகிற ரதியிலிருந்து பிறந்த கிரியைகள் விலாஸம், விப்ரமம் முதலியன. காமாக்ஷியின் இந்த விப்ரமத்தை ஒரு அரசனாக உருவகப்படுத்தினார் கவி. அவ்வரசனுக்கு வளைந்த புருவக்கொடியே வில்லு. அழகிய பார்வையே அம்பு. இவ்வரசன் புதிய யௌவனமென்னும் ஸம்ராஜ்ய லக்ஷ்மியை அடைந்து பிரகாசிக்கிறான். இந்த விப்ரமமென்னும் அரசன் மன்மதனைஜயித்த பரமசிவனை ஜயிக்க எண்ணும் கால், ஏ காமாக்ஷி! உன் புன்சிரிப்பானது ஸேநாபதியாக விருக்கும் தன்மையைத் தானாகவே அடைகிறது.

இந்த ச்லோகத்தில் கவீசுவரரின் கற்பனைசாலவும் வியக்கற்பாற்று. மேலும் ''மன்மதனை ஜெயித்த பரமேசுவரனை ஜெயிப்பதற்கு'' என்பதில் பார்வதி பரமேசுவரரி இருவரும் காமத்தை வென்றவர்கள் என்றும், அவர்கள் ஒருவருக்கொருவர் காமுறுவது என்பது திருவிளையாட்டே என்றும் குறித்த நயம் காண்க.

காமாக்ஷி! ஸ்புரிதா தவ ஸ்மிதருசி: காலாஞ்ஜந ஸ்பர்த்திநா
காலிம்நா கசரோசிஷாம் வ்யதிகரே காஞ்சித் தசாமச்நுதே॥

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
தவ	*உனது*
ஸ்புரிதா	*விளங்கிக்கொண்டிருக்கிற*
ஸ்மிதருசி:	*புன்சிரிப்பின் ஒளியானது*
கால அஞ்ஜந ஸ்பர்த்திநா	*கருத்தமையோடு பகைக்கும்*
கச ரோசிஷாம்	*கூந்தல் காந்திகளின்*
காலிம்நா	*கருநிறத்துடன்*
வ்யதிகரே	*ஸம்பந்திக்கும்போது*
யாமுநை:	*யமுனாநதியினுடையவையான*
வீசீசயை:	*அலைகளோடு*
ஸம்பிந்நா	*சேர்ந்த*
ஸுபர்வ லோக தடிநீ இவ	*தேவலோக நதியான கங்காநதி போலவும்*
நீலை:	*கருத்த*
மஹாநீரதை:	*பெரிய மேகங்களோடு*
ஸம்மிச்ரா	*சேர்ந்த*
சசாங்க தீப்தி லஹரீ இவ	*சந்த்ரகாந்தியின் பெருக்கு போலவும்*
காஞ்சித்	*ஒரு மாதிரியான*
தசாம்	*நிலைமையை*
அச்நுதே	*அடைகிறது.*

காமாக்ஷி! கறுத்த யமுனையின் அலைக் கூட்டங்களுடன் கலந்த தேவலோக நதியாகிய கங்கை போலும், கரும் பெரும் முகில்களுடன் சேர்ந்த சந்திரனது ஒளிப்பெருக்குப்போலும், வெளிப்படும் உனது இளம் நகையின் ஒளி, காலாஞ்ஜனத்துடன் போட்டியிடும் உனது குழல்களின் கிரணங்களின் கருமையுடன் சேருகையில் இன்னதென்று சொல்லவொண்ணாத நிலையையடைகிறது.

जानीमो जगदीश्वरप्रणयिनि त्वन्मन्दहासप्रभां
श्रीकामाक्षि सरोजिनीमभिनवामेषा यत: सर्वदा।
आस्येन्दोरवलोकने पशुपतेरभ्येति संफुल्लतां
तन्द्रालुस्तदभाव एव तनुते तद्वैपरीत्यक्रमम्।।६०।।

ஜாநீமோ ஜகதீச்வர ப்ரணயிநி! த்வந் மந்தஹாஸ ப்ரபாம்
ஸ்ரீ காமாக்ஷி! ஸரோஜிநீமபிநவாமேஷாயதஸ் ஸர்வதா।
ஆஸ்யேந்தோரவலோகநே பசுபதேரப்யேதி
ஸம்புல்லதாம்
தந்த்ராலு: ததபாவஏவ தநுதே தத்வைபரீத்யக்ரமம்।।60।।

ஜகத் ஈச்வர ப்ரணியிநி!	*ஜகத்துக்கு ஈச்வரனான பரமசிவனது பத்நியான*
ஸ்ரீ காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
த்வத் மந்தஹாஸ ப்ரபாம்	*உனது புன்சிரிப்பின் காந்தியை*
அபிநவாம்	*புதிதான*
ஸரோஜிநீம்	*தாமரையோடையாக*
ஜாநீம:	*நினைக்கிறோம்*
யத:	*ஏனென்றால்*

ஏஷா	இந்த புன்சிரிப்பானது
ஸர்வதா	எப்போதும்
பசுபதே:	பரமசிவனுடைய
ஆஸ்ய இந்தோ:	முகமான சந்திரனுடைய
அவலோகநே	பார்வையில்
ஸம்புல்லதாம்	மலர்ச்சியை
அப்யேதி	அடைகிறது
ததபாவே ஏவ	அதில்லா ஸமயத்தில்
தந்த்ராளு:	சோம்பலுள்ளதாயிருந்து கொண்டு
தத் வைபரீத்ய க்ரமம்	அதற்கு எதிராக இருக்கும் தன்மையை (மலர்ச்சியில்லாததை)
தநுதே	அடைகிறது

ஜகதீசனாகிய பரமசிவனின் துணைவியான காமாக்ஷி! உனது புன்சிரிப்பெனும் தாமரையோடை பசுபதியின் முகமென்னும் சந்திரனைக் காண்பதாலேயே எப்பொழுதும் மலர்வதாலும் அதில்லாதபொழுது சோம்பலுற்ற மலராதநிலையையடைவதாலும் உனது மந்தஹாஸத்தின் ஒளியை புதியதோர் தாமரையோடை யென நினைக்கிறோம்.

श्रीकामाक्षि कुमुद्वतीं ஸ்ரீ காமாக்ஷி முமுத்வதீம் - என்று ஓர் பாடம் காண்கிறது. அப்போது, அபிநவாம் - அழகிய, குமுத்வதீம் -ஆம்பலோடையாக - என்பது பொருள். ''ஸரோஜிநீம்'' என்ற பாடமே சிறந்தது எனப் பெரியோர் கொள்கை.

यान्ती लोहितिमानमभ्रतटिनी धातुच्छटाकर्दमैः
भान्ती बालगभस्तिमालिकिरणैर्मेघावली शारदी।

बिम्बोष्ठद्युतिपुञ्जचुम्बनकलाशोणायमानेन ते
कामाक्षि स्मितरोचिषा समदशामारोढुमाकाङ्क्षते(ति)।।६१।।

யாந்தீ லோஹிதிமாந மப்ரதடிநீ தாதுச்சடா கர்த்தமை:
பாந்தீ பால கபஸ்தி மாலி கிரணை: மேகாவலீ சாரதீ।
பிம்போஷ்ட த்யுதி புஞ்ஜ சும்பநகலா சோணாயமாநேந தே
காமாக்ஷி! ஸ்மிதரோசிஷா ஸமதசாமாரோடுமா காங்க்ஷதே(தி)।।61।।

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
அப்ர தடிநீ	*ஆகாச கங்கையானது*
தாதுச்சடா கர்த்தமை:	*நற்செங்கற் பொடியின் சேற்றால்*
லோஹிதிமாநம்	*சிவப்பு நிறத்தை*
யாந்தீ	*அடைகிறதாயும்*
சாரதீ	*சரத்காலத்தினுடைய*
மேகாவலீ	*மேகக்கூட்டமானது*
பாலகபஸ்திமாலிகிரணை:	*இளங்கதிரவனின் கிரணங்களோடு சேர்ந்து*
பாந்தீ	*விளங்குகிறதாயும்*
பிம்போஷ்ட த்யுதி புஞ்ஜசும்பநகலா சோனாயமாநேந	*கோவைப்பழம் போன்ற உதட்டின் காந்தி ஸமூஹங் களோடு சேர்ந்ததால் சிவப்பாகத் தோன்றுகிற*
தே ஸ்மித ரோசிஷா	*உன்து புன்சிரிப்புக் காந்தியோடு இருக்கிறது*

ஸமதசாம்	ஸமமான நிலைமையை
ஆரோடும்	அடைவதற்கு
ஆகாங்க்ஷதே	ஆசைப்படுகிறது.

காமாக்ஷி! காவிக்குவியல்களின் சேறுகளால் செந்நிறம்பெற்ற ஆகாச கங்கையும், இளஞ்சூரியனின் ஒளிகளால் சிவந்து விளங்கும் சரத்காலத்திய மேகக்கூட்டமும், கோவைக்களிபோன்ற இதழின் ஒளிக்கூட்டத்தோடு சேர்வதால் சிவந்த உனது இளநகையின் ஒளியுடன் ஸம நிலையையடைய விரும்புகின்றன.

श्रीकामाक्षी मुखेन्दुभूषणमिदं मन्दस्मितं तावकं
नेत्रानन्दकरं तथा हिमकरो गच्छेद्यथा तिग्मताम्।
शीतं देवि तथा यथा हिमजलं सन्तापमुद्रास्पदं
श्वेतं किं च तथा यथा मलिनतां धत्ते च मुक्तामणिः॥६२॥

ஸ்ரீ காமாக்ஷி முகேந்து பூஷணமிதம் மந்தஸ்மிதம் தாவகம்
நேத்ராநந்தகரம் ததா ஹிமகரோ கச்சேத் யதா திக்மதாம்।
சீதம் தேவி! ததா யதா ஹிமஜலம் ஸந்தாப முத்ராஸ்பதம்
ச்வேதம் கிஞ்ச ததா யதா மலிநதாம் தத்தே ச
முக்தாமணி:॥62॥

தேவி!	ஜகன்மாதாவான
ஸ்ரீ காமாக்ஷி!	காமாக்ஷியே!
தாவகம்	உனது
முகேந்து பூஷணம்	சந்திரன்போன்ற முகத்திற்கு அலங்காரமான
இதம் மந்தஸ்மிதம்	இந்தப் புன்சிரிப்பானது
ஹிமகர:	சந்திரன்

யதா	எப்படி
திக்மதாம்	சூடாயிருக்கும் தன்மையை
கச்சேத்	அடைவானோ
ததா	அப்படி
நேத்ர ஆனந்த கரம்	கண்ணுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதாக
(அஸ்தி)	(இருக்கிறது)
ஹிமஜலம்	பனிஜலமும்
யதா	எப்படி
ஸந்தாப முத்ரா அஸ்பதம்	சுடுமைக்கு இடமாயிருக்குமோ
ததா சீதம்	அவ்வளவு குளிர்ந்ததாக இருக்கிறது
கிஞ்ச	மேலும்
முக்தாமணி:	நல்லமுத்தானது
யதா	எப்படி
மலிநதாம்	அழுக்காயிருக்கும் தன்மையை
தத்தே	அடையுமோ
ததா	அப்படி
ச்வேதம் ச	வெளுப்பாகவும் இருக்கிறது.

காமாக்ஷி தேவியே! சந்திரன் போன்ற உன் முகத்திற்கு அணியாகவிருக்கும் இந்தப் புன்சிரிப்பு, சந்திரனையும் சூடாகக் கருதுமாறு கண்களுக்கு அவ்வளவு இன்பமளிப்பதாகவும், பனிஜலமும் தாபத்தின் முத்திரைக்குறியதாகும்படி குளிர்ச்சியாயும், அப்படியே உயர்ந்த நல்முத்தும் அழுக்குள்ளது என்று கருதும்படி வெளுப்பாகவுமிருக்கின்றது.

त्वन्मन्दस्मितमञ्जरीं प्रसृमरां कामाक्षि चन्द्रातपं
सन्तः सन्ततमामनन्त्यमलता तल्लक्षणं लक्ष्यते।
यन्नासौ विधुनोति तापमधिकं नाभ्यन्तरं मानस–
ध्वान्तं तत्खलु दुःखिनो वयममी केनेति जानीमहे॥६३॥

த்வந்மந்தஸ்மிதமஞ்ஜரீம் ப்ரஸ்ருமராம் காமாக்ஷி
சந்த்ராதபம்

ஸந்தஸ்ஸந்ததமாமநந்த்யமலதா தல்லக்ஷணம்
லக்ஷ்யதே।

யந்நாஸௌ விதுநோதி தாபமதிகம் நாப்யந்தரம் மாநஸ-
த்வாந்தம் தத்கலு துக்கிநோ வயமமீ கேநேதி
ஜாநீமஹே॥63॥

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
ப்ரஸ்ருமராம்	*பரவியுள்ள*
த்வத் மந்தஸ்மித மஞ்ஜரீம்	*பூங்கொத்துபோன்ற உனது புன்சிரிப்பை*
சந்த்ராதபம்	*நிலாவாக*
ஸந்த:	*பெரியோர்கள்*
ஸந்ததம்	*எப்போதும்*
ஆமநந்தி	*சொல்லுகிறார்கள்*
தல்லக்ஷணம்	*அதற்கு அடையாளமான*
அமலதா	*வெண்மையும்*
லக்ஷ்யதே	*காணப்படுகிறது*
அஸௌ	*இந்த புன்னகையாகிய நிலாவானது*
அதிகம் தாபம்	*அதிகதாபத்தை*

மாநஸ த்வாந்தம்	மனதின் இருளையும்
தத்	அந்த விஷ்யமானது
கேந இதி	எந்தக்காரணத்தினாலென்று
துக்கிந:	துக்கமடைந்துள்ள
அமீ	இந்த
வயம்	நாங்கள்
ந ஜாநீமஹே கலு	அறிந்துகொள்ள முடியவில்லை.

காமாக்ஷி! படருகின்ற பூங்கொத்துபோன்ற உனது புன்னகையைப் பெரியோர்கள் வெண்ணிலவென்று எப்பொழுதும் புகழ்கின்றனர். அதற்கிலக்கணமான வெண்மையும் அங்கு காணப்படுகின்றது. ஆயினும் எமது அதிக தாபத்தையும் அகற்றுவதில்லை. உள்ளத்தின் இருளையும் போக்குவதில்லை. ஆகையால் வருந்துகின்ற நாங்கள் இது ஏன் என்று அறிய இயலாமலிருக்கிறோம்.

'' अस्माकं न दुनोति तापमधिकं धूनोति नाप्यन्तरं त्वान्तं तत्खलुदु:खिनो वयममी केनेति नो विद्महे ''

''அஸ்மாகம் ந துநோதி தாபமதிகம் தூநோதி நாப்யந்தரம் த்வாந்தம் தத் கலு துக்கிநோ வயமமீ கேநேதி நோவித்மஹே'' என்று பாடாந்தரம். அஸ்மாகம் - எங்களுடைய அதிகம் தாபம் ந துநோதி - அதிகமான தாபத்தைப் போக்கடிப்பதில்லை. ஆப்யந்தரம் த்வாந்தம் - உள்ளிருக்கும் இருளையும், ந துநோதி - அகற்றுவதில்லை.......... நவித்மஹே - அறியவில்லை.

नम्रस्य प्रणयप्ररूढकलहच्छेदाय पादाब्जयो:
मन्दं चन्द्रकिशोरशेखरमणे: कामाक्षि रागेण ते।

बन्धूकप्रसवश्रियं जितवतो बंहीयसीं तादृशीं
बिम्बोष्ठस्य रुचिं निरस्य हसितज्योत्स्ना वयस्यायते।।६४।।

நம்ரஸ்ய ப்ரணய ப்ரரூட கலஹ ச்சேதாய பாதாப்ஜயோ:
மந்தம் சந்த்ர கிசோர சேகரமணே: காமாக்ஷி ராகேண தே।
பந்தூக ப்ரஸவ ச்ரியம் ஜிதவதோ பம்ஹீயஸீம் தாத்ருசீம்
பிம்போஷ்டஸ்ய ருசிம் நிரஸ்ய ஹஸித ஜ்யோத்ஸ்நா
வயஸ்யாயதே।।64।।

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
ப்ரணய ப்ரரூட கலகச்சேதாய	*அன்பினால் வளர்ந்த கலஹத்தை அகற்றுவற்காக*
தே	*உன்னுடைய*
பாத அப்ஜயோ:	*தாமரைபோன்ற பாதங்களில்*
மந்தம்	*மெதுவாக*
நம்ரஸ்ய	*வணங்கிய*
சந்த்ர கிசோர சேகரமணே:	*இளம்பிறையைச் சூடாமணியாக அணிந்த பரமசிவனுக்கு*
ராகேண	*சிவப்பினால்*
பந்தூக ப்ரஸவ ச்ரியம்	*செம்பரத்தம் பூவின் ஒளியை*
ஜிதவத:	*ஜயித்த*
பிம்போஷ்டஸ்ய	*கோவப்பழம் போன்ற இதழின் (உதட்டின்)*
தாத்ருசீம்	*அப்படிப்பட்டதும்*
பம்ஹீயஸீம்	*வளர்ந்துள்ளதுமான*
ருசிம்	*காந்தியை*

நிரஸ்ய	விலக்கி
ஹஸிதஜ்யோத்ஸ்நா	புன்சிரிப்பாகிய நிலாவானது
வயஸ்யாயதே	தோழிபோலாகிறது.

அன்பின் காரணத்தால் வளர்ந்த கலஹத்தைப் போக்கத் தாமரை போன்ற உனது பாதங்களில் மெதுவாக வணங்கிய இளம் பிறையைத் தலையணியாய் அணிந்துள்ள பரமசிவனுக்கு, ஹே காமாக்ஷி! உனது நகையெனும் வெண்ணிலவு, சிவப்பால் செம்பரத்தம் பூவின் அழகை வென்ற கோவைப்பழம்போன்ற அவ்விதமான இதழின் அதிக ஒளியைப் போக்கித் தோழிபோலாகின்றது.

காமாக்ஷியானவள் ப்ரனய கலஹத்தால் மந்தஹாஸம் செய்யாமல் இருக்கும் கால், உதட்டின் காந்தி செம்பரத்தம் பூ போல் சிவந்திருக்கிறது. அதைக் கோபக்குறியாக கவி நினைக்கிறார். கோபத்தினால் முகம் சிவப்பது என்பது இயல்பே. சந்த்ரசேகரன் ப்ரணய கலஹத்தை அகற்ற தேவியின் திருவடித் தாமரைகளில் மெதுவாக வணங்குகிறார். அச்சமயம் தேவியின் புன்னகை வெளிவருகிறது, அதைக்கண்டு ஊடல் தீர்ந்ததாக எண்ணுகிறார் பரமசிவன். புன்னகை ஊடலைத்தீர்ப்பதற்குக் காரணமானதால், அதைத் தோழியாக கவி உத்ப்ரேக்ஷிக்கிறார். வெளுப்பான புன்னகை வெளிவரும்போது மூடியிருந்த இதழ் (உதடு) பிரிந்ததும் சிவப்பு நிறம் தங்கும். இதை "ருசிம்நிரஸ்ய" என்கிறார் கவி.

मुक्तानां परिमोचनं विदधतः तत्प्रीतिनिष्पादिनी
भूयो दूरत एव धूतमरुतः तत्पालनं तन्वती।

उद्धूतस्य जलान्तरादविरतं तद्दूरतां जग्मुषी
कामाक्षि स्मितमञ्जरी तव कथं कम्बोस्तुलामश्नुते।।६५।।

முக்தாநாம் பரிமோசநம் விதததஃ தத்ப்ரீதி நிஷ்பாதிநீ
பூயோ தூரத ஏவ தூதமருதஸ்தத் பாலநம் தந்வதீ।
உத்பூதஸ்ய ஜலாந்தராதவிரதம் தத்தூரதாம் ஜக்முஷீ
காமாக்ஷி! ஸ்மிதமஞ்ஜரீ தவ கதம் கம்போஃ
துலாமச்நுதே।।65।।

காமாக்ஷி!	*காமாக்ஷியே*
முக்தாநாம்	*முத்துக்களுக்கு (முக்தர்களுக்கு)*
பரிமோசநம்	*விடுதலையை*
விதததஃ	*செய்கிறதாயும்*
பூயஃ	*அடிக்கடி*
தூரதஃ ஏவ	*தூரத்திலேயே*
தூதமருதஃ	*தள்ளுகிற காற்றுகளை (தேவதைகளை) யுடையதும்*
ஜலாந்தராத்	*ஜலத்தின்(ஜட)மத்தியிலிருந்து*
உத்பூதஸ்ய	*உண்டானதாயுமிருக்கிற*
கம்போஃ	*சங்குக்கு*
தத்ப்ரீதி நிஷ்பாதிநீ	*அந்த முக்தர்களுக்கு ப்ரீதியைக்கொடுப்பதும்*
தத்பாலநம் தந்வதீ	*அந்த தேவதைகளை ரக்ஷணம் செய்வதாயும்*
அவிரதம்	*எப்போதும்*
தத்தூரதாம் ஜக்முஷீ	*அந்த ஜடர்களுக்கு வெகு தூரத்தில் நிற்பதாயுமுள்ள*

தவ ஸ்மித மஞ்ஜரீ	உனது புன்சிரிப்புக்கொத்தானது
துலாம்	ஸாம்யத்தை
கதம்	எப்படி
அச்நுதே	அடையும்?

குறிப்பு: - முக்தாநாம் - என்பதற்கு, முத்துக்கள் என்றும், மோக்ஷம் அடைந்தவர்கள் என்றும் அர்த்தம். ''தூதமருத:'' என்பதற்கு, மருத்துக்களை (வாயுவை) அதிக தூரத்தில் தள்ளிவிடுகிறதும், என்று அர்த்தம்கொண்டு, தத்பாலநம் தந்வதீ என்பதற்கு மருத்துக்களின் அதாவது தேவர்களின் பரிபாலனத்தைச் செய்வதாயும் என்றும் பொருள்கொள்ளல்வேண்டும். ஜலாந்தராத் - என்பதற்கு ஜலத்தின் நடுவிலிருந்து என்றும், **लडयोरभेदः** என்றபடி ஜடர்களின் நடுவிலிருந்து என்றும் பொருள்.

காமாக்ஷி! முத்துக்களை விலக்குவதும், காற்றுக்களைவெகுதூரத்தில் தள்ளுகின்றதும், ஜலத்தின் நடுவில் உண்டாகிறதுமான சங்கோடு, முத்துக்களுக்கு இன்பமூட்டுவதும், (மோக்ஷம் பெற்றவற்கு இன்பமளிப்பதும்) காற்றுக்களை (தேவதைகளை)க் காப்பாற்றுவதும் ஜலத்தில் தோன்றியவற்றிற்கு தூரத்தில் நிற்பதும் (அறிவில்லாதவற்கு) தூரத்தில் நிற்பதும்) ஆன உனது புன்னகைப் பூங்கொத்து எப்படி ஒப்புள்ளதாகும்?

भूयोदूरत एव धूत मनसः - பூயோதூரத ஏவ தூத மநஸ: - என்று பாடாந்தரம் சிறந்ததன்று.

श्रीकामाक्षि तव स्मितद्युतिझरीवैदग्ध्यलीलायितं
पश्यन्तोऽपि निरन्तरं सुविमलं मान्या जगन्मण्डले।

लोकं हासयितुं किमर्थमनिशं प्राकाश्यमातन्वते
मन्दाक्षं विरहय्य वस्तुविभवो मन्दारचन्द्रादय:।।६६।।

ஸ்ரீ காமாக்ஷி தவ ஸ்மித த்யுதி ஜ்ஜரீ வைதக்த்ய லீலாயிதம்
ச்யந்தோऽபி நிரந்தரம் ஸுவிமலம் மாந்யா ஜகந்மண்டலே।
லோகம் ஹாஸயிதும் கிமர்த்தமநிசம் ப்ராகாச்ய மாதந்வதே
மந்தாக்ஷம் விரஹய்ய வஸ்துவிபவோ மந்தார சந்த்ராதய:।।66।।

ஸ்ரீ காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
ஸுவிமலம்	*மிக பரிசுத்தமான*
தவ	*உன்னுடைய*
ஸ்மித -த்யுதி ஜ்ஜரீ	*உனது புன்சிரிப்புக்*
வைதக்த்ய லீலாயிதம்	*காந்திப்பெருக்கின் விலாஸத்தை*
	நிரந்தரம் எப்போதும்
பச்யந்தோऽபி	*பார்க்கிறவர்களாயிருந்தும்*
ஜகந்மண்டலே	*பூலோகத்தில்*
மான்யா:	*கௌரவப்பட்டவைகளும்*
வஸ்து விபவ:	*உயர்ந்த வஸ்துக்களாயுமிருக்கிற*
மந்தார சந்த்ராதய:	*மந்தாரம் சந்திரன் முதலியவை*
லோகம்	*உலகத்தை*
ஹாஸயிதும்	*சிரிக்கச் செய்வதற்கென்று*
மொத்தம்	*எதற்காக*
மந்தாக்ஷம் விரஹய்ய	*வெட்கத்தைவிட்டு*

அநிசம் எப்போதும்

ப்ராகாச்யம் ஆதந்வதே வெளியில் கிளம்புகிறார்கள்.

ஸ்ரீ காமாக்ஷி! உலகின் கண் உயர்ந்த வஸ்துக்கள் என்று கௌரவிக்கப்பட்ட மந்தாரைமலர் சந்திரன் முதலியோர் இடைவிடாது உனது மந்தஹாஸக்கிரணப் பெருக்கின் அழகிய சிறந்த செயல்களைக் கண்ணுற்றுக் கொண்டிருப்பினும், மிகவும் வெட்கத்தைத் துறந்து உலகத்தைச் சிரிக்கச்செய்ய எப்பொழுதும் எதற்காக வெளிப்படவேண்டும்?

सुविमलं मान्या: ஸுவிமலம் மந்யா; - என்ற பாடத்தில் அழுக்கற்றுதுத் துலங்குவதாய்த் தன்னை நினைத்துக்கொண்டிருக்கிற மந்தார சந்த்ராதய: - என்பது பொருள். **सुविमलं मान्यं** - ஸுவிமலம் மாந்யம் - என்ற பாடத்தில் அழுக்கற்றதும், கொண்டாடத் தக்கதுமான ஸ்மித+லீலாயிதம்-என்று பொருள். **विरहय्य मङ्गलतरम्** விரஹய்ய மங்களத்ரம் - என்ற பாடத்தில், தங்களுக்கு மங்களகரமான வெட்கத்தை விட்டு - என்பது பொருள். இந்தப் பாடமே சிறந்தது என பெரியோரின் கொள்கை.

क्षीराब्धेरपि शैलराजतनये त्वन्मन्दहासस्य च
श्रीकामाक्षि वलक्षिमोदयनिधे: किञ्चिद्विदां ब्रूमहे।
एकस्मै पुरुषाय देवि स ददौ लक्ष्मीं कदाचित्पुरा
सर्वेभ्योऽपि ददात्यसौ तु सततं लक्ष्मीं च वागीश्वरीम्।।६७।।

க்ஷீராப்தேரபி சைலராஜ தநயே! த்வந் மந்தஹாஸஸ்ய ச
ஸ்ரீ காமாக்ஷி! வலக்ஷிமோதயநிதே: கிஞ்சித் பிதாம் ப்ரூமஹே।

ஏகஸ்மை புருஷாய தேவி! ஸ ததௌ லக்ஷ்மீம் கதாசித் புரா
ஸர்வேப்யோ(அ)பி ததாத்யஸௌ து ஸததம் லக்ஷ்மீம் ச வாகீச்வரீம்॥67॥

சைலராஜதநயே!	பர்வதராஜ குமாரியான
ஸ்ரீ காமாக்ஷி!	ஸ்ரீ காமாக்ஷியே!
வலக்ஷிம உதய நிதே:	வெளுப்புக்கு இருப்பிடமான
க்ஷீராப்தே: அபி	பால் கடலுக்கும்
த்வந் மந்தஹாஸஸ்ய ச	உன் புன்சிரிப்புக்குமுள்ள
பிதாம்	பேதத்தை
கிஞ்சித்	கொஞ்சம்
ப்ரூமஹே	சொல்லுகிறோம்
ஸ:	அந்தப் பாற்கடலானது
புரா	முன்பு
கதாசித்	ஒரு ஸமயம்
ஏகஸ்மை புருஷாய	ஒரு புருஷனுக்கு
லக்ஷ்மீம் ததௌ	லக்ஷ்மியைக் கொடுத்தது
அஸௌ து	இந்தப் புன்சிரிப்போவென்றால்
ஸததம்	எப்பொழுதும்
ஸர்வேப்ய: அபி	எல்லோருக்கும்
லக்ஷ்மீம்	ஐச்வர்யத்தையும்
வாகீச்வரீம் ச	வித்யையையும்
ததாதி	கொடுக்கிறது.

மலையரசன் மகளாகிய தேவி காமாக்ஷி! வெண்மையின் தோற்றத்திற்கிருப்பிடமாகிய பாற்

கடலுக்கும் உனது புன்முறுவலுக்கும் சிறிது வேற்றுமையைக் கூறுகிறோம். அப்பாற்கடல் முன்பு ஒரு புருஷனுக்கு (விஷ்ணுவுக்கு) லக்ஷ்மியை (பூமகளை) அளித்தது. இப்புன்னகையோவெனில் எல்லோருக்கும் எப்பொழுதும் லக்ஷ்மியையும் (ஸம்பத்தையும்) ஸரஸ்வதியையும் (உயர்ந்த வாக்கையும்) கொடுத்தருளுகிறது.

श्रीकाञ्चीपुररत्नदीपकलिके तान्येव विश्वान्तरे
चाकोराणि चराचरेश्वरि परं धन्यानि मन्यामहे।
कम्पातीरकुटुम्बचङ्क्रमकलाचुञ्चुनि कामाक्षि ते
नित्यं यानि मृदु स्मितेन्दुमहसामास्वादमातन्वते॥६८॥

ஸ்ரீ காஞ்சீபுர ரத்ந தீபகலிகே! தாந்யேவ விச்வாந்தரே
சாகோராணி சராசரேச்வரி! பரம் தந்யாநி மன்யாமஹே।
கம்பாதீர குடும்ப சங்க்ரம கலா சுஞ்சூநி காமாக்ஷி! தே
நித்யம் யாநி ம்ருது ஸ்மிதேந்து மஹஸாமா
ஸ்வாதமாதந்வதே॥68॥

ஸ்ரீ காஞ்சீபுர ரத்நதீப கலிகே	காஞ்சீ பட்டணத்தில் ரத்நதீபச்சுடரும்
சர அசர ஈச்வரி	ஸ்தாவரஜங்கமமயமான ஜகத்திற்கு ஈச்வரியுமான
ஸ்ரீ காமாக்ஷி!	காமாக்ஷியே!
யாநி	எந்த சகோரபக்ஷிக் கூட்டங்கள்
கம்பா தீர குடும்ப சங்க்ரம கலா சுஞ்சூநி	கம்பைக் கரையில் குடும்பத்துடன் நடமாடுவதில் ஸமர்த்தங்களாய்
தே	உனது

ம்ருது ஸ்மித இந்து மஹஸாம்	மிருதுவான புன்சிரிப்பாகிற சந்திரகிரணங்களை
ஆஸ்வாதம் ஆதந்வதே	பருகிக்கொண்டிருக் கின்றனவோ
தாநி	அந்த
சாகோராணி ஏவ	சகோரபக்ஷிக்கூட்டங்களே
விச்வாந்தரே	இந்த உலகில்
பரம் தந்யாநி	மிகவும் அதிர்ஷ்டமுள்ளவை வைகளென்று
மந்யாமஹே	நினைக்கிறோம்.

குறிப்பு: - சகோராணி என்று ஸ்ரீ காமாக்ஷியின் பக்கத்தில் எப்போதும் இருந்துகொண்டு தேவியின் மந்தஸ்மிதத்தினுடைய அம்ருத கிரணங்களால் ஸதா நினைக்கப்பெற்று அழியாப் பரமானந்தத்தில் இருக்கும் அம்பிகையின் பக்தர்களைக் குறிப்பிட்டிருத்தல் காண்க.

ஸ்ரீ காஞ்சீபுர மணிவிளக்குச் சுடரே, ஸகல ஜகதீஸ்வரியாகிய காமாக்ஷியே! கம்பா நதிக்கரையில் குடும்பத்துடன் நடமாடும் திறனுடைய எந்தச் சகோரப் பக்ஷிகள் உனது புன்சிரிப்பென்னும் சந்திரனுடைய ஒளிகளைச் சுவைக்கின்றனவோ, அந்தச் சகோரப் பறவைகளின் கூட்டங்களையே மிகவும் பாக்யம்பெற்றவையெனக் கருதுகிறோம்.

श्री काञ्चीपुर रत्नदीप कलिके तान्येव मेनात्मजे चाकोराणि कुलानि देवि सुतरां धन्यानि मन्यामहे।......चुञ्चूनि चञ्चूपुटैः नित्यम् –

ஸ்ரீ காஞ்சீபுர ரத்நதீப கலிகே தாந்யேவ மேநாத்மஹே சாகோராணி குலாநி தேவி ஸுதராம் தந்யாநி மந்யாமஹே।
.......கஞ்சூநி சஞ்சுபுடை: நித்யம் - என்று பாடாந்தரம், அப்போது சுஞ்சுபுடை: - அலகுகளால், அருந்துகின்றனவோ. தாநி - அந்த, சாகோராணி குலாநி ஏவ - சகோரபக்ஷிகளின் கூட்டங்களே, ஸுதராம் தந்யாநி - மிகவும் புண்யம் செய்தவையென்று, எண்ணுகிறோம் - என்பது பொருள்.

शैत्यप्रक्रममाश्रितोऽपि नमतां जाड्यप्रथां धूनयन्
रागव्यञ्जनपेशलोऽपि गिरिजे वैमल्यमुल्लासयन्।
लीलालापपुर:सरोऽपि सततं वाचंयमान्प्रीणयन्
कामाक्षि स्मितरोचिषां तव समुल्लास: कथं वर्ण्यते।।६९।।

சைத்ய ப்ரக்ரம மாஸ்ரிதோ(அ)பி நமதாம் ஜாட்ய ப்ரதம் தூநயந்
ராக வ்யஞ்ஜந பேசலோ(அ)பி கிரிஜே! வைமல்ய முல்லாஸயந்।
லீலாலாப-புரஸ்ஸரோ(அ)பி ஸததம் வாசம்யமாந் ப்ரீணயந்
காமாக்ஷி! ஸ்மிதரோசிஷாம் தவ ஸமுல்லாஸ: கதம் வர்ண்யதே।।69।।

கிரிஜே!	பர்வத புத்ரியான
காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
சைத்ய ப்ரக்ரமம் ஆச்ரித: அபி	*மிகுந்த குளிர்ச்சியை அடைந்த தாயிருப்பினும்*
நமதாம்	வணங்கினவர்களின்
ஜாட்யப்ரதாம்	*ஜாட்யத்தின் பெயரை*
தூநயந்	*நிவர்த்தி செய்கிறதாயும்*

ராக வ்யஞ்ஜந பேசல: அபி	அநுராகமென்கிற சிவப்பு நிறக்கலப்பினால் மநோரஹரமாயிருப்பினும்
வைமல்யம் உல்லாஸயந்	வெளுப்பு நிறத்தை (பரிசுத்தியை) உண்டாக்குகிறதாயும்
லீலா ஆலாப புரஸ்ஸர: அபி	விளையாட்டு பேச்சுடன் கூடியிருந்தபோதிலும்
ஸததம்	எப்போதும்
வாசம்யமாந்	மௌனிகளை
ப்ரீணயந்	ஸந்தோஷப்படுத்துகிறதா யுமிருக்கிற
தவ	உன்னுடைய
ஸ்மித ரோசிஷாம்	புன்சிரிப்பின் காந்தியினுடைய
ஸமுல்லாஸ:	விலாஸமானது
கதம்	எப்படி
வர்ண்யதே	வர்ணிக்கப்படும்.

பாதாரவிந்த சதகத்தில் ''கதம் வாசாலோபி'' என்ற சுலோகத்தைக் கவனிக்க.

காமாக்ஷி! குளிர்ந்த நிலையை அடைந்திருப்பினும் வணங்குபவர்களுக்குக் குளிர்ச்சியென்ற பேச்சுக்கூட இல்லாமல் செய்துகொண்டும் (அஞ்ஞானத்தைப் போக்கிக் கொண்டும்) சிவப்பைத் தெரிவிப்பதில் ஸமர்த்தமாயினும், (அநுராகத்தெரிவிப்பதாயினும்) வெளுப்பு நிறத்தை வளர்த்துக்கொண்டிருப்பதும், விளையாட்டுப் பேச்சுக்களை (அழகிய பேச்சை) முன்னிட்டுக் கொண்டிருப்பினும் வாக்கெனும் இந்திரியத்தைடக்கிய முனிவர்களைத்

திருப்திசெய்து கொண்டுமிருக்கும் உனது மந்தஹாஸ கிரணங்களின் அழகிய மலர்ச்சி எவ்விதம் வர்ணிக்கப்படும்.

नैर्मल्यं परमं गतोऽपि गिरीशं रागाकुलं चारयन् – 'நைர்மல்யம் பரமம் கதோSபி கிரீஶம் ராகாகுலம் சாரயந் என்று இரண்டாமடிக்குப் பாடாந்தரம். அப்போது பரமம் நைர்மல்யம் - மிகுந்த வெண்மையை, கத: அபி - அடைந்திருப்பினும், கிரிசம் - பரமசிவனை, ராகாகுலம் - சிவப்பு நிறைந்தவராக (ஆசை நிறைந்தவராக), சாரயந் - செய்கின்றதும் என்று பொருள்.

श्रोणीचञ्चलमेखलामुखरितं लीलागतं मन्थरं
भ्रूवल्लीचलनं कटाक्षवलनं मन्दाक्षवीक्षाचणम्।
यद्वैदग्ध्यमुखेन मन्मथरिपुं सम्मोहयन्त्यञ्जसा
श्रीकामाक्षि तव स्मिताय सततं तस्मै नमस्कुर्महे।।७०।।

ச்ரோணீ - சஞ்சல மேகலா முகரிதம் லீலாகதம் மந்தரம்
ப்ரூவல்லீ சலனம் கடாக்ஷ வலநம் மந்தாக்ஷ வீக்ஷாசணம்।
யத்வைதக்த்ய முகேந மந்மத ரிபும் ஸம்மோஹயந்த்ய ஞ்ஜஸா
ஶ்ரீ காமாக்ஷி! தவ ஸ்மிதாய ஸததம் தஸ்மை நமஸ்குர்மஹே।।70।।

ஶ்ரீ காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
ச்ரோணீ சஞ்சல மேகலா முகரிதம்	*இடையில் ஆடும் ஒட்டியாணத்தின் சப்தத்தோடு கூடிய*
லீலாகதம்	*அழகான நடையும்*

மந்தரம்	மனோக்ஞமான
ப்ரூவல்லீ சலநம்	புருவக்குடியின் அசைவும்
மந்தாக்ஷ வீக்ஷாசணம்	வெட்கத்தோடு கூடிய பார்வையில் தேர்ச்சிபெற்ற
கடாக்ஷ வலநம்	கடைக்கண் சுற்றலும்
யத் வைதக்த்ய முகேந	எந்தப் புன்சிரிப்பின் ஸாமர்த்தியமடியாக
மந்மதரிபும்	மன்மத சத்ருவான பரமசிவனை
அஞ்ஞஸா ஸம்மோஹயந்தி	எளிதில் மோஹிக்கும்படி செய்கிறதோ
நன்மை	அப்படிப்பட்ட
நவ ஸ்மிதாய	உனது புன்சிரிப்பின் பொருட்டு
நமஸ்குர்மஹே	நமஸ்கரிக்கின்றோம்.

மேலே 57-58வது ச்லோகங்களில் குறிப்பிட்ட நயம் இங்கே ''மந்மதரிபும் ஸம்மோஹயந்தி'' என்பதிலும் உன்னத்தக்கது.

ஸ்ரீ காமாக்ஷி! இடையில் அசையும் ஒட்டியான ஒலியுடன் கூடிய மெதுவான அழகிய நடையும், புருவக்கொடியின் அசைவும், நாணத்துடன் பார்ப்பதில் தேர்ச்சிப்பெற்ற கடைக்கண் வீச்சும் எந்தப் புன்னகைத் திறமை மூலமாக மன்மத விரோதியாகிய பரமசிவனை எளிதில் மயக்குகின்றனவோ; அந்த உனது புன்சிரிப்பிற்கு எப்பொழுதும் நமஸ்காரம் செய்கின்றோம்.

'श्रोणीचञ्चलमेखलामुखरितम्'' என்பதை லீலாகதத்துக்கு விசேஷணமாக ஆக்காமல், இடையில் ஆடும் ஒட்டியாணத்தின் ஒலியும், அழகிய நடையும் என்றும் சொல்லலாம்.

श्रीकामाक्षि मनोज्ञमन्दहसितज्योतिष्प्ररोहे तव
स्फीतश्वेतिमसार्वभौमसरणिप्रागल्भ्यमभ्येयुषि।
चन्द्रोऽयं युवराजतां कलयते चेटीधुरं चन्द्रिका
गङ्गा सा च सुधाझरी सहचरीसाधर्म्यमालम्बते।।७१।।

ஸ்ரீகாமாக்ஷி! மநோக்ஞ மந்தஹஸித ஜ்யோதிஷ்
ப்ரரோஹே தவ
ஸ்பீத ச்வேதிம ஸார்வபௌம ஸரணி ப்ராகல்ப்ய
மப்யேயுஷி।
சந்த்ரோऽயம் யுவராஜதாம் கலயதே சேடீதுரம் சந்த்ரிகா
கங்கா ஸா ச ஸுதாஜ்ஜரீ ஸஹசரீ ஸாதர்ம்ய
மாலம்பதே।।71।।

ஸ்ரீ காமாக்ஷி!	*ஸ்ரீ காமாக்ஷியே!*
தவ	*உனது*
மநோக்ஞமந்தஹஸித ஜ்யோதிஷ ப்ரரோஹே	*அழகிய மந்தஹாஸ காந்தியின் கொழுந்தானது*
ஸ்பீத ச்வேதிம ஸார்வபௌம ஸரணி ப்ராகல்ப்யம்	*கொழுத்து செழித்த வெண்மையின் மேண்மைகொண்ட அரசாட்சியின் காம்பீர்யத்தை*
அப்யேயுஷி	*அடைந்திருக்கும்போது*
அயம் சந்த்ர:	*இந்த சந்திரன்*

யுவராஜதாம்	இளவரசனாயிருக்கும் தன்மையை
கலயதே	அடைகிறான்.
சந்த்ரிகா	நிலாவானது
சேடீதுரம்	வேலைக்காரியின் நிலைமையை அடைகிறது.
ஸுதாஜ்ஜரீ	அம்ருத ப்ரவாஹமுள்ள
ஸா கங்கா ச	அந்த கங்கையும்
ஸஹசரீ ஸாதர்ம்யம்	பத்தினியாயிருக்கும் ஒற்றுமையை
ஆலம்பதே	அடைகிறது.

ஸ்ரீ காமாக்ஷி! மனதைக்கவரும் உனது மந்தஹாஸம் என்றும் சோதிக்கொழுந்து செழித்த வெண்மையின் சிறந்த ஆட்சித்திறத்தையடைகையில் இந்தச் சந்திரன் இளவரசுப்பட்டத்தை அடைகிறான். நிலவு வேலைக்காரியின் பொறுப்பையும், அமுதப் பெருக்குள்ள அந்த கங்கையும் உயிர்த்துணைவியின் முறையையும் கடைப்பிடிக்கின்றது (அடைகிறது).

"शुद्धा सा च सुधाझरी" "ஶுத்தா ஸா ச ஸுதாஜரீ" என்றும் பாடம். மாசற்ற அந்த அமுதப்பெருக்கும் என்பது பொருள். கங்கையும், அந்த அமுதப்பெருக்கும் ஸஹசரிகளான உயிர்த்துணிவிகளின் முறையைக் கடைப்பிடிக்கின்றன என்றும் பொருள் சொல்லலாம்.

ज्योत्स्ना किं तनुते फलं तनुमतां औष्ण्यप्रशान्तिं विना
त्वन्मन्दस्मितरोचिषा तनुमतां कामाक्षि रोचिष्णुना।

सन्तापोऽपि निवार्यते नववचः(यः) प्राचुर्यमङ्कुर्यते
सौन्दर्यम् परिपूर्यते जगति सा कीर्तिश्च सञ्चार्यते।।७२।।

ஜ்யோத்ஸ்நா கிம் தநுதே பலம் தநுமதா மௌஷ்ண்ய
ப்ரசாந்திம் விநா
த்வந் மந்தஸ்மிதரோசிஷா தநுமதாம் காமாக்ஷி
ரோசிஷ்ணுநா।
ஸந்தாபோ(அ)பி நிவார்யதே நவ வச:(ய:) ப்ராசுர்ய:
மங்கூர்யதே
ஸௌந்தர்யம் பரிபூர்யதே ஜகதி ஸா கீர்த்திச்ச
ஸஞ்சார்யதே।।72।।

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
ஜ்யோத்ஸ்நா	*நிலாவானது*
தனுமதாம்	*மனிதர்களுக்கு*
ஔஷ்ண்ய ப்ரசரந்திம் விநா	*உஷ்ணத்தைக் குறைப்பதைத் தவிர*
கிம் பலம்	*வேற என்ன பலம்*
தநுதே	*செய்கிறது*
ரோசிஷ்ணுநா	*விளங்குகிற*
த்வந் மந்தஸ்மிதா ரோசிஷா	*உனது புன்சிரிப்புக் காந்தியால்*
தநுமதாம்	*பிராணிகளுடைய*
ஸந்தாப: அபி	*ஸந்தாபமும்*
நிவார்யதே	*நிவிருத்திக்கப்படுகிறது*
நவ வச: ப்ராசுர்ய:	*புதிய பேசும்வன்மையும்*
அங்கூர்யதே	*ஆவிர்ப்பவிக்கப்படுகிறது*
ஸௌந்தர்யம்	*அழகும்*
பரிபூர்யதே	*நிரப்பப்படுகிறது*

ஸா கீர்த்தி: ச	அந்தக் கீர்த்தியும்
ஜகதி	உலகில்
ஸஞ்சார்யதே	பரப்பப்படுகிறது.

காமாக்ஷி! நிலவு உஷ்ணத்தைத் தணிப்பதைத் தவிர்த்து வேறு என்ன பயனைப் பிராணிகளுக்கு அளிக்கின்றது. ஜ்வலிக்கும் எனது புன்சிரிப்பின் ஒளியோவெனில் சரீரம் படைத்த மக்களுடைய தாபத்தைக் தணிக்கின்றது, மனிதர்களுக்கு புதிதுபுதிதான, வாக்சாதுர்யத்தை உண்டாக்குகின்றது; ஸௌந்தர்யத்தை நிரப்புகின்றது; உயர்ந்த புகழையும் உலகமெங்கும் பரவும்படி செய்கிறது. ஆதலால் உனது மந்தஹாஸம் நிலவைவிட உயர்ந்தது என்பதில் என்னதடையுண்டு என்பது பொருள்.

நவவய: ப்ராசுர்யம் - என்ற பாடத்தில், இளம் வயதின் (யௌவனத்தின்) மேன்மை தளிர்கின்றது என்பது பொருள்.

वैमल्यं कुमुदश्रियां हिमरुच: कान्त्यैव सन्धुक्ष्यते
ज्योत्स्नारोचिरपि प्रदोषसमयं प्राप्यैव सम्पद्यते।
स्वच्छत्वं नवमौक्तिकस्य परमं संस्कारतो दृश्यते
कामाक्ष्या: स्मितदीधितेर्विशदिमा नैसर्गिको भासते।।७३।।

வைமல்யம் குமுதச்ரியாம் ஹிமருச: காந்த்யைவ ஸந்துஷ்யதே
ஜ்யோத்ஸ்நா ரோசிரபி ப்ரதோஷ ஸமயம் ப்ராப்யைவ ஸம்பத்யதே।

ஸ்வச்சத்வம் நவ மௌக்திகஸ்ய பரமம் ஸம்ஸாரதோ த்ருச்யதே
காமாக்ஷ்யா: ஸ்மித தீதிதே: விஶதிமா நைஸர்கிகோ பாஸதே||73||

குமுத ச்ரியாம்	ஆம்பல்களுக்கு
வைமல்யம்	வெண்மையானது
ஹிமருச:	சந்திரனுடைய
காந்த்யா ஏவ	காந்தியாலேயே
ஸந்துக்ஷ்யதே	வளர்க்கப்படுகிறது
ஜ்யோத்ஸ்நா ரோசி: அபி	ஸாயங்கால வேளையை
ப்ரதோஷஸமயம் ப்ராப்ய ஏவ	அடைந்தேதான்
ஸம்பத்யதே	ஏற்படுகிறது
நவ - மௌக்திகஸ்ய	புதிய முத்துக்கு
பரமம் ஸ்வச்சத்வம்	உயர்ந்த வெண்மையும்
ஸம்ஸ்காரத:	பாடம் செய்வதினாலேயே
த்ருஶ்யதே	காணப்படுகிறது
காமாக்ஷ்யா:	காமாக்ஷியின்
ஸ்மிததீதிதே:	புன்சிரிப்பினுடைய
விஶதிமா	வெண்மையானது
நைஸர்க்கிக:	ஸ்வபாவத்தில் ஏற்பட்டதாகவே
பாஸதே	விளங்குகிறது.

அல்லி மலர்களின் அழகிய வெண்மை மதியின் ஒளியாலேயே வளர்க்கப்படுகின்றது. நிலவின் ஒளியும் இரவையடைவதால் தான் ஏற்படுகிறது.

சீர்மைப்படுத்துவதால் புதிய முத்திற்கு மேலான தூய்மை காணப்படுகின்றது, காமாக்ஷியின் புன்னகைக் கிரணங்களுக்கு இயற்கையாகவே வெண்மை விளங்குகின்றது.

பாதாரவிந்த சதகத்தில் "துநாநம்" என்ற சுலோகத்தில் "அபராதிநம்" என்பதின் கருத்தையும் இங்கே உன்னுக.

प्राकाश्यं परमेश्वरप्रणयिनि त्वन्मन्दहासश्रियः
श्रीकामाक्षि मम क्षिणोतु ममतावैचक्षणीमक्षयाम्।
यद्भीत्येव निलीयते हिमकरो मेघोदरे शुक्तिका-
गर्भे मौक्तिकमण्डली च सरसी मध्ये मृणाली च सा।।७४।।

ப்ராகாச்யம் பரமேச்வர ப்ரணயிநி! த்வந் மந்தஹாஸ ச்ரிய:
ஸ்ரீ காமாக்ஷி! மம க்ஷிணோது மமதா வைசக்ஷணீ மக்ஷயாம்।
யத்பீத்யேவ நிலீயதே ஹிமகரோ மேகோதரே சுக்திகா
கர்ப்பே மௌக்திக மண்டலீ ச ஸரஸீ மத்யே ம்ருணாலீ ச ஸா।।74।।

பரமேச்வர ப்ரணயிநீ!	*பரமசிவன் பத்நியான*
ஸ்ரீ காமாக்ஷி!	*ஸ்ரீ காமாக்ஷியே!*
த்வத் மந்தஹாஸ ஸ்ரீய:	*உனது புனிசிரிப்புக் காந்தியின்*
ப்ரகாச்யம்	*வெண்மையானது*
மம	*என்னுடைய*
அக்ஷயாம்	*அழியாமலிருக்கிற*
மமதா வைசக்ஷணீம்	*அஹங்காரத்தின் திறனை*

க்ஷிணோது	நிவர்த்தி செய்யட்டும்
	எந்தப் புன்சிரிப்பின் காந்தியின்
யத் பீத்யா ஏவ	வெண்மையினின்றும்பயத்தால்
ஹிமகர:	சந்திரன்
மேக உதரே	மேகங்களின் மத்தியிலும்
மௌக்திக மண்டலீ	முத்துக்களின் கூட்டமானது
சுக்திகா - கர்ப்பேசு	முத்துச்சிப்பிகளின் மத்தியிலும்
ஸா ம்ருணாலீ	அந்தத் தாமரைத்தண்டும்
ஸரஸ: மத்யே	குளத்தின் மத்தியிலும்
நிலீயதே	ஒளிந்து கொள்ளுகிறதோ.

பரமசிவனின் காதலியாகிய காமாக்ஷி! எதற்குப் பயந்து சந்திரன் மேகத்தின் நடுவிலும், முத்துக்கூட்டம் சிப்பிகளுக்குள்ளும் புகழ்பெற்ற தாமரைக் கிழங்கு குளத்தின் நடுவேயும் மறைந்து கொள்கிறதோ, அந்த உன்னுடைய மந்தஹாஸ ஒளியின் தோற்றம் அழியாத எனது மமகாரத்தின் திறனை ஒழிக்கவேண்டும்.

हेरम्बे च गुहे च हर्षभरितं वात्सल्यमङ्कूरयन्
मारद्रोहिणि पूरुषे सहभुवं प्रेमाङ्कुरं व्यञ्जयन्।
आनम्रेषु जनेषु पूर्णकरुणावैदग्ध्यमुक्तालयन्
कामाक्षि स्मितमञ्जिमा तव कथङ्कारं मया कथ्यते।।७५।।

ஹேரம்பே ச குஹே ச ஹர்ஷ பரிதம் வாத்ஸல்ய மங்கூரயந்
மார த்ரோஹிணி பூருஷே ஸஹ-புவம் ப்ரேமாங்குரம் வயஞ்ஜயத்।

ஆநம்ரேஷு ஜநேஷு பூர்ண கருணா
வைதக்த்யமுத்தாலயத்
காமாக்ஷி! ஸ்மிதமஞ்ஜிமா தவ கதம் காரம் மயா
கத்யதே॥75॥

காமாக்ஷி!	காமாக்ஷியே!
ஹேரம்பே ச	விநாயகரிடத்திலும்
குஹே ச	ஸுப்ரமண்யரிடத்திலும்
ஹர்ஷ பரிதம்	ஸந்தோஷம் நிரம்பிய
வாத்ஸல்யம்	அன்பை
அங்கூரயந்	வளர்த்து கொண்டும்
மார த்ரோஹிணி	மன்மத சத்ருவான
பூருஷே	பரமபுருஷனான பரமசிவனிடம்
ஸஹபுவம்	இயற்கையிலுண்டான
ப்ரேம - அங்குரம்	பிரீதியின் அங்குரத்தை
வ்யஞ்ஜயந்	வெளிப்படுத்திக் கொண்டும்
ஆநம்ரேஷு	நமஸ்கரிக்கிற
ஜநேஷு	ஜனங்களிடம்
பூர்ண கருணா வைதக்த்யம்	பரிபூர்ணமான கருணையின் மஹிமையை
உத்தாலயந்	அதிகப்படுத்திக்கொண்டுமிருக்கிற
தவ	உன்னுடைய
ஸ்மிதமஞ்ஜிமா	புன்சிரிப்பின் அழகு
கதம் காரம்	எவ்விதமாக

மயா என்னால்

கத்யதே வர்ணிக்க முடியும்.

காமாக்ஷி! கணபதியிடமும் கந்தனிடத்திலும் ஆனந்தம் நிறைந்த அன்பை வளர்க்கின்றதும், மன்மதனைவென்ற சிறந்த புருஷனான பரமசிவனிடம் இயற்கையான அன்பின் அங்குரத்தை வெளிப்படுத்து கின்றதும், தன்னை வணங்கிய ஜனங்களிடம் குன்றாத கருணைத்திறனைத் கொந்தளிக்கச் செய்கின்றதுமான, உனது புன்னகை எவ்விதம் தான் என்னால் வர்ணிக்க இயலும்.

स्मितमञ्जिमा ஸ்மிதமஞ்ஜிமா என்று சிறந்த பாடாந்தரம், புன்சிரிப்புன் அழகு என்று பொருள். இப்பாடத்தில் **अङ्कूरयन्, व्यञ्जयन्, उत्तालयन्** அங்கூரயந், வ்யஞ்சயந், உத்தாளயந் - என்று பாடங் கொள்ளவேண்டும். '**स्मितमञ्जरी**'' என்ற பாடம் சிறந்ததன்று.

संक्रुद्धद्विजराजकोऽप्यविरतं कुर्वन्द्विजैः सङ्गमं
वाणीपद्धतिदूरगो(को)ऽपि सततं तत्साहचर्यम् वहन्।
अश्रान्तं पशुदुर्लभोऽपि कलयन्पत्यौ पशूनां रतिं
श्रीकामाक्षि तव स्मितामृतरसस्यन्दो मयि स्यन्दताम्।।७६।।

ஸம்க்ருத்த த்விஜ ராஜகோऽபி அவிரதம் குர்வந் த்விஜை: ஸங்கமம்
வாணீ பத்ததி தூரகோ(அ)பி ஸததம் தத்ஸாஹசர்யம் வஹந்।
அச்ராந்தம் பசு துர்லபோ(அ)பி கலயந் பத்யௌ பசூநாம் ரதிம்
ஸ்ரீ காமாக்ஷி! தவ ஸ்மிதாம்ருத ரஸ ஸ்யந்தோ மயி ஸ்யந்ததாம்।।76।।

ஸ்ரீ காமாக்ஷி!	ஸ்ரீ காமாக்ஷியே!
ஸம்ஸ்க்ருத்த த்விஜ ராஜ க:	த்விஜராஜனோடு (சந்திரனோடு)
அபி	கோபமுள்ளதாயிருப்பினும்
அவிரதம்	எப்போதும்
த்விஜை:	த்விஜர்களோடு (பற்களோடு)
ஸங்கமம்	சேர்க்கையை
குர்வந்	செய்கிறதாயும்
வாணீ பத்ததி தூரக:	வாக்கின் வழிக்குத் தூரத்திலிருந்த போதிலும்
ஸததம்	எப்போதும்
தத்ஸாஹசர்யம்	அந்த வாணியின் அதாவது ஸரஸ்வதியின் ஸஹவாஸத்தை
வஹந்	வஹிப்பதாயும்
அச்ராந்தம்	எப்போதும்
பசுதுர்லப: அபி	பசுக்களுக்கு (அக்ஞானிக்கு) துர்லபமாயிருந்தபோதிலும்
பசூநாம் பத்யௌ	பசுபதியான பரமசிவனிடத்தில்
ரதிம் கலயந்	பிரீதியைச் செய்வதாயுமிருக்கிற
தவ	உன்னுடைய
ஸ்மித அம்ருத ரஸ ஸ்யந்த:	புன்சிரிப்பாகிற அமிருதத்தின் ரஸப்பெருக்கானது
மயி	என்பேரில்
ஸ்யந்ததாம்	வருஷிக்கட்டும்.

ஸ்ரீ காமாக்ஷி, த்வஜராஜனிடம் (சந்திரனிடம்) சினங்கொண்டிருப்பின்ம், த்விஜர்களுடன் (பற்களுடன்)

சேர்ந்திருக்கின்றதும், வாணியின் வழிக்கு அப்பாலிருந் தாலும் (வார்த்தைகளால் குறிப்பிடமுடியாவிடினும்) வாணியோடு சேர்ந்து வாஸம் செய்கின்றதும் (வார்த்தையோடு முகத்தில் வாஸம் செய்கின்றதும்) பசுக்களுக்கு அடையமுடியாவிடிலும் (அறிவிலிகளால் அடையமுடியாவிடினும்) பசுபதியிடம் (பரமேச் வரனிடம்) ஓயாது அன்பைச் செலுத்துகின்றதுமான உனது புன்னகையெனுமமுதப்பெருக்கு என்மீது பெருக வேண்டும்.

பிராம்மணராஜனிடம் சினங்கொண்டிருப்பது பிராம்மணர்களோடு ஸர்வதா சேர்ந்திருக்கிறது என்று விரோதம். த்விஜம், பற்கள், திவிஜராஜன் வருக்ஷத்திரங்களுக்கு அரசன், சந்திரன், அவனைவிட மிகுந்த வெண்மையுடையது என்று ஸமாதாநம்.

श्रीकामाक्षि महेश्वरे निरुपमप्रेमाङ्कुरप्रक्रमं
नित्यं यः प्रकटीकरोति सहजामुन्निद्रयन्माधुरीम्।
तत्तादृक्तव मन्दहाससुष(महि)मा मातः कथं मानितां
तन्मूर्ध्ना सुरनिमग्नां च कलिकामिन्दोश्च तां निन्दति।।७७।।

ஸ்ரீ காமாக்ஷி! மஹேச்வரே நிருபம ப்ரேமாங்குர ப்ரக்ரமம்
நித்யம் ய: ப்ரகடீகரோதி ஸஹஜா முந்நித்ரயந் மாதுரீம்।
தத்தாத்ருக் தவ மந்தஹாஸ (மஹிமா) ஸுஷமா மாத:
கதம் மாநிதாம்
தந்மூர்த்நா ஸுர நிம்நகாம் ச கலிகா மிந்தோச்ச தாம்
நிந்ததி।।77।।

மாத: — தாயாரான

ஸ்ரீ காமாக்ஷி! — ஸ்ரீ காமாக்ஷியே!

ஸஹஜாம்	ஸ்வபாவத்திலுள்ள
மாதுரீம்	இனிப்பை
உந்நித்ரயந்	வெளிப்படுத்துகிற
ய:	யாதொரு மந்தஹாஸமானது
நித்யம்	எப்போதும்
மஹேச்வரே	மஹேச்வரனிடத்தில்
நிருபம ப்ரேம அங்குர ப்ரக்ரமம்	நிகரற்ற அன்பின் அங்குரத்தின் வளர்ச்சியை
ப்ரகடீகரோது	வெளிப்படுத்துகிறதோ
தத்தாத்ருக்	அப்பேர்ப்பட்ட
தவ	உனது
மந்தஹாஸ - ஸுஷமா / மஹீமா	புன்சிரிப்பின் காந்தியானது / மஹிமை
தன் மூர்த்நா	அந்த பரமசிவனின் சிரஸ்ஸால்
மாநிதாம்	வெகுமானிக்கப்பட்ட
ஸுர நிம்நகாம் ச	தேவ நதியான கங்கையையும்
இந்தோ:	சந்திரனுடைய
தாம் கலிகாம் ச	அந்தக் கலையையும்
கதம் நிந்ததி	ஏன் நிந்திக்கிறது.

தாயே ஸ்ரீ காமாக்ஷி! எது இயற்கையான இனிமையைப் புலப்படுத்திக்கொண்டு மஹேச்வரனிடத்தில் ஒப்பற்ற அன்பின் முளையின் வளர்ச்சியைத் தினமும் வெளிப்படுத்துகின்றதோ; அத்தகைய உன் புன்சிரிப்பின் காந்தி அந்தப் பரம சிவனால் தலையால்

கௌரவிக்கப்பட்ட தேவ கங்கையையும் அந்தச் சந்திரனது கலையையும் ஏன் இகழுகின்றது?

मन्दहास महिमा மந்தஹாஸ மஹிமா - என்ற பாடத்தில் மந்தஹாஸத்தின் மஹிமையென்பது பொருள்.

ये माधुर्यविहारमण्डपभुवो ये शैत्यमुद्राकरा
ये वैशद्यदशाविशेषसुभगास्ते मन्दहासाङ्कुराः।
कामाक्ष्याः सहजं गुणत्रयमिदं पर्यायतः कुर्वतां
वाणीगुम्भनडम्बरं च हृदये कीर्तिप्ररोहे च मे।।७८।।

யே மாதுர்ய விஹார மண்டப புவோ யே
சைத்ய முத்ராகரா:
யே வைசத்ய தசா விசேஷ ஸுபகாஸ்தே
மந்தஹாஸாங்குரா:।
காமாக்ஷ்யா: ஸஹஜம் குணத்ரயமிதம் பர்யாயத:
குர்வதாம்
வாணீ கும்பந டம்பரே ச ஹ்ருதயே கீர்த்தி ப்ரரோஹே ச
மே।।78।।

யே	*எந்த புன்சிரிப்புக்கள்*
மாதுர்ய விஹார மண்டப புவ:	*மாதுர்யத்தின் விளையாடும் மண்டப ஸ்தானங்களோ*
யே	*எவைகள்*
சைத்ய முத்ராகரா:	*குளிர்மையின் முத்ரைக்கு இருப்பிடங்களோ*
யே வைசத்ய தசா விசேஷ ஸுபகா:	*எந்த புன் சிரிப்புகள் நிர்மலமாயிருப்பதாகிய நிலைமையால் மிக மனோக்ஞங்களாயிருக்*

	கின்றனவோ
தே	அந்த
காமாக்ஷ்யா:	காமாக்ஷியினுடைய
மந்தஹாஸ அங்குரா:	புன்சிரிப்பின் அங்குரங்கள்
ஸஹஜம்	ஸ்வபாவத்திலேற்பட்ட
இதம் குண த்ரயம்	இனிமை, குளிமை பரிசுத்தி என்ற இந்த மூன்று குணத்தையும்
பர்யாயத:	வரிசையாக
மே	எனது
வாணீ - கும்பந டம்பரே ச	வாக்குக்களைத் தொடுத்து அமைக்க
ஹ்ருதயே ச	மனதிலும்
கீர்த்தி ப்ரரோஹே ச	யசஸ்ஸின் அபிவிருத்தியிலும்
குர்வதாம்	ஏற்படும்படி செய்யட்டும்.

எவை இனிமையின் விளையாட்டு மண்டபங்களோ, மாறாத குளிர்ச்சிக்கு இருப்பிடங்களோ, வெண்மை நிலையால் அதிக அழகுபெற்றவைகளோ, அந்தக் காமாக்ஷியின் மந்தஹாஸாங்குரங்கள் தமக்கு இயற்கையிலேற்பட்ட இனிமை, தண்மை, வெண்மை என்ற இம் மூன்று குணங்களையும் முறையே எனது கவிதையிலும் (வார்த்தைகளைத் தொடுத்து அமைப்பதிலும்), உள்ளத்திலும், புகழின் வளர்ச்சியிலும் இருக்கச் செய்ய வேண்டும்.

'**ये शैत्य रत्नाकराः**'' ''யே சைத்ய ரத்நாகரா:'' என்ற பாடத்தில், குளிர்மைக்கு ஸமுத்திரமாயிருக்கின்றனவோ - என்பது பொருள்.

कामाक्ष्या मृदुलस्मितांशुनिकरा (द)दाक्षान्तके वीक्षणे
मन्दाक्षग्रहिला हिमद्युतिमयूखाक्षेपदीक्षाङ्कुराः।
दाक्ष्यं पक्ष्मलयन्तु माक्षिकगुडद्राक्षाभवं (समं) वाक्षु मे
सूक्ष्मं मोक्षपथं निरीक्षितुमपि प्रक्षालयेयुर्मनः।।७९।।

காமாக்ஷ்யா ம்ருதுல ஸ்மிதாம்சு நிகரா: தா(த)க்ஷாந்தகே வீக்ஷணே
மந்தாக்ஷ க்ரஹிலா ஹிமத்யுதி மயூகாக்ஷேப தீக்ஷாங்குரா:।
தாக்ஷ்யம் பக்ஷ்மலயந்து மாக்ஷிக குட த்ராக்ஷா பவம் (ஸமம்) வாக்ஷு மே
ஸூக்ஷ்மம் மோக்ஷபதம் நிரீக்ஷிதுமபி ப்ரக்ஷாலயேயுர்மந:।।79।।

தாக்ஷாந்தகே	*தக்ஷசத்ருவான பரமசிவனுடைய*
வீக்ஷணே	*பார்வை ஏற்படும்போது*
மந்தாக்ஷ - க்ரஹிளா:	*வெட்கத்தை அடையக்கூடியவைகளாயும்*
ஹிம த்யுதி மயூக ஆக்ஷேப தீக்ஷா அங்குரா:	*சந்திரனுடைய காந்தியைப் பழிப்பதில் தீக்ஷைகொண்டவைகளுமான*
காமாக்ஷ்யா:	*காமாக்ஷியினுடைய*
ம்ருதுல ஸ்மிதாம்சு நிகார:	*மனோக்ஞமான புன்சிரிப்புக் காந்தியின் கூட்டங்கள் எனது*

வாக்ஷு	வாக்குகளில்
மாக்ஷிக குட த்ராக்ஷா பவம்	தேன், வெல்லம், திராக்ஷை இவைகளிலிருந்து உண்டாகக்கூடிய
தாக்ஷ்யம்	மேன்மையை
பக்ஷ்மலயந்து	அதிகரிக்கச்செய்யட்டும்
அபி	மேலும்
ஸூக்ஷ்மம்	ஸூக்ஷ்மமான
மோக்ஷபதம்	மோக்ஷமார்க்கத்தை
நிரீக்ஷிதுமபி	பார்ப்பதற்கும் கூட
மந:	மனதை
ப்ரக்ஷாலயேயு:	சுத்தப்படுத்தவேணும்.

தக்ஷனது பகைவராகிய பரமசிவன்து பார்வை ஏற்படுகையில் வெட்கத்தை ஏற்கின்றவைகளும், சந்திரனின் கிரணங்களைத் திரஸ்கரிப்பதில் தீக்ஷை பூண்டவைகளுமான காமாக்ஷியின் இளநகை ஒளிக்கதிர் கூட்டங்கள், எனது சொற்களில் தேன், வெல்லம், திராக்ஷை இவைகளின் திறனைத் தளிர்க்கச் செய்யவேண்டும். நுண்ணிய மோக்ஷ வழியைப் பார்ப்பதற்குத் தகுந்தபடி என் மனத்தைச் சுத்தப்படுத்தவும்வேண்டும்.

'த்ராக்ஷாஸமம்' என்ற பாடத்தில், தேன் வெல்லம் த்ராக்ஷைவைகளுக்கு ஒப்பான - என்பது பொருள்.

जात्या शीतलशीतलानि मधुराण्येतानि पूतानि ते
गाङ्गानीव पयांसि देवि पटलान्यल्पस्मितज्योतिषाम्।

एनः पङ्कपरम्परामलिनितामेकाम्रनाथप्रिये
श्रीकामाक्षि परं मदीयधिषणां प्रक्षालयन्तु क्षणात्॥८०॥

ஜாத்யா சீதலசீதலாநி மதுராண்யேதாநி பூதாநி தே
காங்காநீவ பயாம்ஸி தேவி! படலாந்யல்ப ஸ்மித
ஜ்யோதிஷாம்
ஏந: பங்க பரம்பரா மலிநிதாம் ஏகாம்ரநாத ப்ரியே!
ஸ்ரீ காமாக்ஷி! பரம் மதீய திஷணாம் ப்ரக்ஷாலயந்து
க்ஷணாத்॥80॥

ஏகாம்ரநாத ப்ரியே!	ஏகாம்ரேச்வர பத்நியும்
தேவி!	விளங்குகிறவளுமான
ஸ்ரீ காமாக்ஷி!	காமாக்ஷியே!
காங்காநி பயாம்ஸி இவ	கங்கை ஜலம்போல்
ஜாத்யா	ஸ்வபாவத்தினாலேயே
சீதலசீதலாநி	மிகக் குளிர்ந்தவைகளாயும்
மதுராணி	இனியவைகளாயும்
பூதாநி	பரிசுத்தமானவைகளாயுமுள்ள
ஏதாநி	இந்த
தே	உன்னுடைய
அல்ப ஸ்மித ஜ்யோதிஷாம்	மந்தஸ்மித காந்திகளுடைய
படலாநி	ஸமூஹங்கள்
ஏந: பங்க பரம்பரா	பாபஸமூஹமாகிற சேற்றால்
மலிநிதாம்	அழுக்கடைந்துள்ள
மதீய திஷணாம்	எனது புத்தியை
க்ஷணாத்	சீக்கிரத்தில்
பரம்	நன்றாக

ப்ரக்ஷாலயந்து — அலம்பவேண்டும் (பரிசுத்தப் படுத்தட்டும்.)

ஏகாம்ரநாதரின் காதலியாக விளங்குபவளே! கங்கையின் ஜலங்கள்போல் இயற்கையிலேயே மிகக் குளிர்ந்தவைகள்உம், இனிமைபொருந்தியவைகளும், தூயவைகளுமான உனது புன்முறுவலின் காந்திக் கூட்டங்கள் பாபமென்றும் சேற்றுத் தொகுதியால் அழுக்கடைந்திருக்கும் எனது புத்தியைத் தூய அறிவையளித்துத் தாமதமின்றி நன்றாய்ச் சுத்தம் செய்யவேண்டும்.

प्रज्ञानात् सुतरां मदीय धिषणाम् ப்ரஜ்ஞாநாத் ஸுதராம் மதீ யதிஷணாம் - என்ற பாடத்தில், ப்ரஜ்ஞாநாத் - தூய அறிவை கொடுத்து, ஸுதராம் - மிகவும் என்பது பொருள்.

अश्रान्तं परतन्त्रित: पशुपतिस्त्वन्मन्दहासाङ्कुरै:
श्रीकामाक्षि तदीयवर्णसमतासङ्गेन शङ्कामहे।
इन्दुं नाकधुनीं च शेखरयते मालां च धत्ते नवै :
वैकुण्ठैरवकुण्ठनं च कुरुते धूलीचयैर्भास्मनै:।।८१।।

அச்ராந்தம் பரதந்த்ரித: பசுபதி: த்வந் மந்தஹாஸாங்குரை:
ஸ்ரீ காமாக்ஷி! ததீய - வர்ண ஸமதா ஸங்கே ந சங்காமஹே।
இந்தும் நாகதுநீம் ச சேகரயதே மாலாம் ச தத்தே நவை:
வைகுண்ட ரவகுண்டநம் ச குருதே தூலீசயை: பாஸ்மநை:।।81।।

ஸ்ரீ காமாக்ஷி! — காமாக்ஷியே!

அச்ராந்தம் — எப்போதும்

த்வத் மந்தஹாஸ அங்குரை:	உனது புன்சிரிப்பின் கொழுந்துகளால்
பரதந்த்ரித:	பரவசனாக்கப்பட்ட
பசுபதி:	பரமசிவனானவர்
ததீய வர்ண ஸமதா ஸங்கேந	அந்தச்சிரிப்பின் நிறத்துக்கு ஸமமான நிறத்தை அடைந்திருக்கிறது என்கிற எண்ணத்தால்
இந்தும்	சந்திரனையும்
நாகநதீம் ச	கங்கையையும்
சேகரயதே	சூடிக்கொண்டிருக்கிறான்
நவை:	புதிதான
வைகுண்ட:	(பிரமனின்) கபாலங்களால்
மாலாம் ச	மாலையையும்
தத்தே	தரித்துக் கொள்ளுகிறான்
பாஸ்மநை:	விபூதியினுடையதான
தூளீசயை:	தூளி ஸமூஹங்களால்
அவகுண்டநம் ச	பூசிக்கொள்வதையும்
குருதே	செய்துகொள்ளுகிறாரென்று
சங்காமஹே	நினைக்கிறோம்.

ஸ்ரீ காமாக்ஷி! உனது புன்சிரிப்பு முனைகளால் அடிமைப்படுத்தப்பட்ட பசுபதியானவர், சோர்வின்றி அவைகளுக்குச் சமமான நிறத்தைப் பெற்றிருப்பதால் சந்திரனையும், தேவகங்கையையும் தலையணியாகக் கொள்கிறார். பிரமனது புதிய தலையோடுகளாலான

மாலையையணிகின்றார். சாம்பற் புழுதிக்கூட்டங்களால் தனது சரீரத்தைப் பூசிக்கொள்கிறார் என்று நினைக்கிறோம்.

श्रीकामाक्षि भवप्रिये मृदुवच:सौरभ्यमुद्रास्पदं
प्रौढप्रेमलतानवीनकुसुमं मन्दस्मितं तावकम्।
मन्दं कन्दलति प्रियस्य वदनालोके समाभाषणे
श्लक्ष्णे कुड्मलति प्ररूढपुलके चाश्लेषणे फुल्लति॥८२॥

ஸ்ரீ காமாக்ஷி! பவப்ரியே! ம்ருதுவசஸ் ஸௌரப்ய முத்ராஸ்பதம்
ப்ரௌட ப்ரேம லதா நவீந குஸுமம் மந்தஸ்மிதம் தாவகம்!
மந்தம் கந்தலதி ப்ரியஸ்ய வதநாலோகே ஸமாபாஷணே
ச்லக்ஷ்ணே குட்மலதி ப்ரரூட புலகே சாச்லேஷணே புல்லதி॥82॥

பவ ப்ரியே	*சிவபத்நியான*
ஸ்ரீ காமாக்ஷி!	*ஸ்ரீ காமாக்ஷியே!*
ம்ருது வசஸ் ஸௌரப்யமுத்ரா ஆஸ்பதம்	*ம்ருதுவான வார்த்தையின் வாஸனைக்கு இருப்பிடமாயும்*
ப்ரௌட ப்ரேம லதா நவீந குஸுமம்	*வளர்ந்து முற்றிய அன்பெனும் கொடியின் புதிய புஷ்பமாயுமுள்ள*
தாவகம்	*உனது*
மந்தஸ்மிதம்	*புன்சிரிப்பானது*
ப்ரியஸ்ய	*பர்த்தாவினுடைய*
வதந ஆலோகே	*முகத்தைப் பார்க்கும்போது*
மந்தம்	*மெதுவாக*

கந்தலதி	அங்குரிக்கிறது
ச்லக்ஷ்ணே ஸமாபாஷணே	மனோஹரமான பேச்சு ஆரம்பிக்கும்போது
குட்மலதி	மொட்டுவிடுகிறது
ப்ரரூட புலகே	மயிர் கூச்சல் மேலிட்ட
ஆச்லேஷணேஸதி	ஆலிங்கனம் நேரும்போது
புல்லதி	மலர்ந்துவிடுகிறது.

சிவனுடைய காதலியாகிய காமாக்ஷி! மெல்லிய சொற்களின் நறுமணத்திற்கு இருப்பிடமும், முற்றிய அன்பு என்னும் கொடிக்குப் புதுமலரான உனது புன்னகை, காதலனான பரமசிவனின் முகத்தைக் காணுகையில் மெதுவாகத் தளிர்க்கின்றது. இனிய பேச்சு நிகழ்கையில் அரும்பு விடுகின்றது. மயிர் சிலுக்குமாறு அணைத்துக்கொள்கையில் மலர்கின்றது.

किं त्रैस्त्रोतसं अम्बिके परिणतं स्रोतश्चतुर्थम् नवं
पीयूषस्य समस्ततापहरणं किं वा द्वितीयं वपुः।
किंस्विन्नैकटिकं गिरो मधुरिमाभ्यासाय गव्यं/नव्यं पयः
कामाक्षि स्मरशासनप्रियतमे मन्दस्मितं तावकम्।।८३।।

கிம் த்ரைஸ்ரோதஸமம்பிகே பரிணதம் ஸ்ரோதச்சதுர்த்தம் நவம்
பீயூஷஸ்ய ஸமஸ்த தாப ஹரணம் கிம் வா த்விதீயம் வபு:।
கிம்ஸ்விந்நைகடிகம் கிரோ மதுரிமாப்யாஸாய ந(க)வ்யம் பய:
காமாக்ஷி! ஸ்மர - சாஸந ப்ரியதமே மந்தஸ்மிதம் தாவகம்।।83।।

அம்பிகே	தாயாராயும்
ஸ்மர சாஸந ப்ரியதமே	மன்மத சத்ருவான பரமசிவ பத்நியுமான
காமாக்ஷி!	காமாக்ஷியே!
தாவகம்	உனது
மந்தஸ்மிதம்	புன்சிரிப்பானது
நவம்	புதிதாக
பரிணதம்	ஏற்பட்ட
த்ரைஸ்ரோதஸம்	மூன்று வழியில் பிரவஹிக்கும் கங்கையின்
சதுர்த்தம்	நாலாவதான
ஸ்ரோத: கிம்	பிரவாஹமா என்ன?
கிம் வா	அல்லது
ஸமஸ்த தாப ஹரணம்	ஸர்வதாபங்களையும் நிவர்த்தி செய்யக் கூடியதான
பீயூஷஸ்ய	அமிருதத்தினுடைய
த்வீதீயம் வபு:	இரண்டாவது உருவமோ?
கிம்ஸ்வித்	அல்லது
கிர:	உனது வாக்கின்
மதுரிம அப்யாஸாய	இனிமையைப் பழகிக்கொள்ளுவதற்காக
நைகடிகம்	ஸமீபத்தில் உள்ள
நவ்யம் பய:	புதிய பாலோ?
கவ்யம்	பசுவினுடைய பாலோ

மன்மதனையடக்கியவரின் காதலியாகிய காமாக்ஷியே! உனது புன்னகை மூன்றாகப் பிரிந்த கங்கையின் புதிய நான்காவது நீர்பெருக்கோ? அல்லது எல்லத் தாபங்களையும் தவிர்க்கும் அமுதின் இரண்டாவது உருவமோ? அன்றி இனிமையைக் கற்றுக்கொள்ள உனதருகாமையையடைந்த புதிய பாலோ?

நவ்யம் என்ற பாடத்தில் புதிய என்றும், கவ்யம் என்ற பாடத்தில் பசுவினுடைய என்றும் பொருள், ''ஸ்ரீ காஞ்சீபுரநாயக ப்ரியதமே மந்த.....'' என்று பாடாந்தரம். ஸ்ரீ காஞ்சீபுரத்தின் அதிபதியான ஏகாம்ரநாதனின் மனதிற்கிசைந்த மணாட்டியான காமாக்ஷியே என்று பொருள்.

भूषा वक्त्रसरोरुहस्य सहजा वाचां सखी शास्वती
नीवी विभ्रमसन्ततेः पशुपतेः सौधी दृशां पारणा।
जीवातुर्मदनश्रियः शशिरुचेरुच्चाटनी देवता
श्रीकामाक्षि गिरामभूमिमयते हासप्रभामञ्जरी।।८४।।

பூஷா வக்த்ர ஸரோருஹஸ்ய ஸஹஜா வாசாம் ஸகீ
சாச்வதீ
நீவி விப்ரம ஸந்ததே: பசுபதே: ஸௌதீ த்ருசாம் பாரணா।
ஜீவாது: மதந ச்ரிய: ஶஶிருச்சாடநீ தேவதா
ஸ்ரீ காமாக்ஷி! கிராமபூமிமயதே ஹாஸ ப்ரபா மஞ்ஜரீ।।84।।

ஸ்ரீ காமாக்ஷி!	*ஸ்ரீ காமாக்ஷியே!*
வக்த்ர ஸரோருஹஸ்ய	*தாமரைப்பூபோன்ற முகத்திற்கு*
ஸஹஜா	*ஸ்வபாவமாக ஏற்பட்ட*
பூஷா	*அலங்காரமாயும்*

வாசாம்	வாக்குகளுக்கு
சாச்வதீ	விட்டுப்பிரியாத
ஸகீ	தோழியாயும்
விப்ரம ஸந்ததே:	விலாஸராசிகளுக்கு
நீவீ	மத்யம ஸ்தானமாயும்
பசுபதே:	பரமசிவனின்
த்ருசாம்	கண்களுக்கு
ஸௌதீ பாரணா	அமிருதபாரணையாயும்
மதநச்ரிய:	மன்மதசோபைக்கு
ஜீவாது:	உயிர்நாடியாயும்
ஶஶிருசே:	சந்திரகிரணத்திற்கு
உச்சாடநீ தேவதா	துரத்துகிற தேவதையாயுமிருக்கிற
ஹாஸ ப்ரபா மஞ்ஜரீ	புன்சிரிப்புக்காந்தியென்னும் பூங்கொத்து
கிராம்	வாக்குகளுக்கு
அபூமிம்	எட்டாத நிலைமையை
அயதே	அடைகிறது.

ஸ்ரீ காமாக்ஷி! தாமரைபோன்ற முகத்திற்கு இயற்கையலங்காரமாயும், சொற்களுக்கு எப்பொழுதுமுள்ள தோழி யாகவும், அழகிய செஷ்டைத் தொடர்பிற்கு நடுமுடுச்சாகவும் (மத்ய ஸ்தானமாயும்), பரமசிவன் கண்களுக்கு அமிருதத்தாலான உணவாகவும், மன்மதனுடைய செல்வத்திற்கு உயிரளிக்கும் ரஸாயனமாகவும், சந்திரனுடைய ஒளியை விரட்டும் தேவதையாகவும் இருந்துவரும் உனது மந்தஹாஸத்தின்

ஒளிக்கூட்டமாகிய பூங்கொத்து வார்த்தைகளுக்கு எட்டாத நிலையையடைகின்றது.

सूतिः श्वेतिमकन्दलस्य वसतिः शृङ्गारसारश्रियः
पूर्तिः सूक्तिझरीरसस्य लहरी कारुण्यपाथोनिधेः।
वाटी काचन कौसुमी मधुरिमस्वाराज्यलक्ष्म्यास्तव
श्रीकामाक्षि ममास्तु मङ्गलकरी हासप्रभाचातुरी।।८५।।

ஸூதி: ச்வேதிம கந்தலஸ்ய வஸதி: ச்ருங்கார ஸாரச்ரிய:
பூர்த்தி: ஸூக்தி ஜரீ ரஸஸ்ய லஹரீ காருண்ய பாதோநிதே:।
வாடீ காசந கௌஸுமீ மதுரிம ஸ்வாராஜ்ய லக்ஷ்ம்யாஸ்தவ
ஸ்ரீ காமாக்ஷி மமாஸ்து மங்கலகரீ ஹாஸ ப்ரபா சாதுரீ।।85।।

ஸ்ரீ காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
ச்வேதிம கந்தலஸ்ய	*வெண்மை நிறத்தின் தளிருக்கு*
ஸூக்தி:	*உத்பத்தி ஸ்தானமாயும்*
ச்ருங்கார ஸாரச்ரிய:	*ச்ருங்கார ஸாராம்சத்தின் சோலைக்கு*
வஸதி:	*இருப்பிடமாயும்*
ஸூக்தி ஜரீ ரஸஸ்ய	*உயர்ந்த கவிதாரஸப் பெருக்குக்கு*
பூர்த்தி:	*பூர்த்தியைக் கொடுப்பதும்*
காருண்ய பாதோ நிதே:	*தயையாகிற ஸமுத்திரத்திற்கு*
லஹரீ	*அலைபோன்றதாயும்*
மதுரிம ஸ்வாராஜ்ய லக்ஷ்ம்யா:	*இனிமையெனும் ஸ்வாராஜ்ய லக்ஷ்மிக்கு*

காசந	ஓர் உயர்ந்த
கௌஸுமீ வாடீ	புஷ்பச் சோலையாயுமிருக்கிற
தவ	உன்னுடைய
ஹாஸ ப்ரபா சாதுரீ	புன்சிரிப்பின் பொலிவின் திறமை
மம	எனக்கு
மங்களகரீ	க்ஷேமத்தைச் செய்வதாக
அஸ்து	ஆகட்டும்.

ஸ்ரீ காமாக்ஷி! வெண்மையென்னும் தளிரை உண்டுபண்ணுகின்றதும், சிறந்த சிருங்காரத்திற்கு இருப்பிடமும், இனியமொழியெனும் அருவியின் பெருக்கும், கருணையென்ற கடலுக்கு அலைவரிசை யாகவும், இனிமையென்கிற ஸாம்ராஜ்ய லக்ஷ்மிக்கு ஓர் பூஞ்சோலையாகவும் இருக்கின்ற உனது புன்னைகையின் ஒளியானது எனக்கு மங்களங்களைச் செய்யவேண்டும்.

''ஹாஸப்ரபா மஞ்ஜரீ'' என்று பாடாந்தரம். புன்னகையின் காந்தியாகிற பூங்கொத்து - என்பது பொருள்.

उत्तुङ्गस्तनमण्डलस्य विलसल्लावण्यलीलानटी
रङ्गस्य स्फुटमूर्ध्वसीमनि मुहुः प्राकाश्यमभ्येयुषी।
श्रीकामाक्षि तव स्मितद्युतिततिर्बिम्बोष्ठकान्त्यङ्कुरैः
चित्रां विद्रुममुद्रिकां वितनुते मौक्तिकीं वितानश्रियम्॥८६॥

உத்துங்க ஸ்தந மண்டலஸ்ய விலஸல்லாவண்ய லீலா நடீ
ரங்கஸ்ய ஸ்புட மூர்த்வஸீமநி முஹு: ப்ரகாச்யமப்யேயுஷீ।

ஸ்ரீ காமாக்ஷி! தவ ஸ்மிதத்யுதிததி: பிம்போஷ்ட
காந்த்யங்குரை:
சித்ராம் வித்ரும முத்ரிகாம் விதநுதே மௌக்தீம்
விதாநச்ரியம்॥86॥

ஹே காமாக்ஷி!	ஹே காமாக்ஷியே
விலஸத்-லாவன்ய லீலா நட ரங்கஸ்ய	விளங்குகிற அழகாகிய லீலா நாட்டியப் பெண்ணின் நாடக மேடைபோன்ற
உத்துங்க-ஸ்தந-மண்டலஸ்ய ஊர்த்வ ஸீமநி	உயர்ந்த ஸ்தநமண்டலத்தின் மேல் பாகத்தில்
முஹு:	அடிக்கடி
ஸ்புடம் ப்ரகாச்யம்	தெளிவான ப்ரகாசத்தை
அப்யேயுஷீ	அடைகிறதான
தவ	உனது
ஸ்மித-த்யுதி-ததி:	புன்சிரிப்புக்காந்திக் கூட்டமானது
பிம்போஷ்ட காந்தி அங்குரை:	கோவைப்பழம்போன்ற உதட்டின் காந்திகளோடு சேர்ந்து
வித்ரும விதாநச்ரியம்	முத்துப்பந்தலுடைய அழகை செய்கிறது.

ஸ்ரீ காமாக்ஷி! விளங்கும் விப்ரமங்கள் (அழகிய சேஷ்டைகள்) என்ற நடனமாதின் அரங்கமேடையாகிய உயர்ந்த ஸ்தந மண்டலத்தின் மேல்பக்கத்தில் அடிக்கடித் தோன்றும் உனது புன்சிரிப்பின் ஒளித்தொடர், கோவைப்பழம்போன்ற இதழின் ஒளித் தோற்றங்களால் பல

நிறமுள்ளதும் முத்துக்களால் ஆனதுமான அஸ்மானகிரியின் (எடுத்துக்கட்டியின்) அழகை விளைவிக்கின்றது.

जन्तूनां जनिदु:खमृत्युलहरीसन्तापनं कृन्तत:
प्रौढानुग्रहपूर्णशीतलरुचो नित्योदयं बिभ्रत:।
श्रीकामाक्षि विसृत्वरा इव करा हासाङ्कुरास्ते हठात्-
आलोकेन निहन्युरन्धतमसस्तोमस्य मे सन्ततिम्।।८७।।

ஜந்தூநாம் ஜநி துக்க ம்ருத்யுலஹரீ ஸந்தாபநம் க்ருந்தத:
ப்ரௌடாநுக்ரஹ பூர்ண சீதல ருச: நித்யோதயம் பிப்ரத:।
ஸ்ரீ காமாக்ஷி! விஸ்ருத்வரா இவ கரா: ஹாஸாங்குராஸ்தே ஹடாத்
ஆலோகேந நிஹந்யுரந்ததமஸ ஸ்தோமஸ்ய மே ஸந்ததிம்।।87।।

ஸ்ரீ காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
ஜந்தூநாம்	*பிராணிகளுடைய*
ஜநி துக்க ம்ருத்யு லஹரி	*பிறப்பு, துக்கம், மரணம் என்ற*
ஸந்தாபநம்	*அலையின் தாபத்தை*
க்ருந்தத:	*போக்கடிப்பவைகளாயும்*
ப்ரௌட அநுக்ரஹ பூர்ண சீதல	*உயர்ந்த அனுக்ரஹ மென்கிற*
ருச:	*பூர்ண சந்திரனுடைய*
நித்ய உதயம்	*அழிவில்லாத உதயத்தை*
பிப்ரத:	*வஹிப்பவைகளும்*
தே	*உன்னுடைய*
விஸ்ருத்வரா:	*பரவுகிற*
கரா: இவ	*கைகள் போன்றவை- களுமான*

ஹாஸ அங்குரா:	புன்சிரிப்புக்களின் முளைகள்
ஆலோகேந	ஒளியால்
மே	எனது
அந்ததமஸ ஸ்தோமஸ்ய	பெரிய இருட்டுக் கூட்டத்தின்
ஸந்ததிம்	தொடர்ச்சியை
ஹடாத்	பலாத்காரமாக
நிஹந்யு:	விலக்கட்டும்.

ஸ்ரீ காமாக்ஷி! பிராணிகளின் பிறப்பு, துக்கம், சாவு இவைகளின் தொடர்பால் ஏற்படும் தாபத்தைப் போக்குகின்றதும், குன்றாத அருளெனும் பூர்ண சந்திரனுக்கு அழிவற்ற தோற்றத்தைச் செய்கின்றவைகளும், விரித்த கைகள் (அணைத்துக் கொள்ளும் கைகள்) போன்றவைகளுமான புன்னகையின் முளைகள் தமதொளியால் எனது அடர்ந்த இருளின் தொடர்பைப்பலாத்காரமாகவே அழிக்க வேண்டும்.

இந்த ச்லோகத்துக்கு வேறுவிதமாய் பொருள் சொல்லுவது சிறந்தது என்று தோன்றுகிறது. ஜந்தூநாம் - ஜந்துக்களுடைய, ஜநிதுக்கமிருத்யுலஹரீ ஸந்தாபம் - பிறப்பு, துக்கம், இறப்பு இவைகளின் துடர்பால் உண்டாகும் ஸந்தாபத்தை, க்ருந்தத: - அறுப்பதும், நித்ய உதயம் - நித்தியமான உதயத்தை, பிப்ரத: - வஹிப்பதுமான, ப்ரௌட - அநுக்ரஹபூர்ணசீதளருச: - குன்றாத அநுக்ரஹமாகிற பூர்ணசந்த்ரனுடைய, விஸ்ருத்வரா: கரா: - இவ - பரவுகின்ற கிரணங்கள் போன்ற, தே ஹாஸாங்குரா: - உனது ஹாஸாங்குரங்கள் தமது ஒளியால் எனது காடமான இருள் கூட்டத்தை விலக்கவேண்டும்.

ஸ்ரீ காமாக்ஷியின் பூர்ணாநுக்ரஹத்தைப் பூர்ணசந்திரனாக ஒப்பிடுகிறார். பூர்ண சந்திரன் ஜந்துக்களுடைய ஸம்ஸாரத்திலுண்டான தாபத்தைப் போக்காது. இந்தப் பூர்ணாநுக்ரஹமோ, அதைப் போக்கும், பூர்ணசந்த்ரனுக்கு நித்தியம் உதயமில்லை. அநுக்ரஹமோ நித்தியம் உதிக்கும். அப்படிப்பட்ட பூர்ணாநுக்ரஹமாகிற சந்திரனுடைய கிரணங்கள் போலிருக்கின்றன உனது மந்தஹாஸாங்குரங்கள் அவை தமது ஒளியால் எனது அஞ்ஞாநமாகிற இருளைப் பின்பு உண்டாகாமலிருக்கும்படி விலக்கவேண்டும் என்று கவி வேண்டுகிறார்.

க்ருந்தத:, பிப்ரத: - என்ற இரண்டு பதங்களும் முதல்வேற்றுமையின் பன்மையல்ல. ஆறாம் வேற்றுமை, சீதளருச: என்பதற்கு அடைமொழி (விசேஷணம்).

स्वाभाव्यात् तवक्त्रमेव ललितं सन्तोषसम्पादनं
शम्भोः किं पुनरञ्चितस्मितरुचः पाण्डित्यपात्रीकृतम्।
अम्भोजं स्वत एव सर्वजगतां चक्षुःप्रियम्भावुकं
कामाक्षि स्फुरिते शरद्विकसिते कीदृग्विधं भ्राजते॥८८॥

ஸ்வாபாவ்யாத் தவ வக்த்ரமேவ லலிதம்
ஸந்தோஷஸம்பாதநம்
சம்போ: கிம் புந: அஞ்சித ஸ்மிதருச: பாண்டித்ய -
பாத்ரீக்ருதம்।
அம்போஜம் ஸ்வத ஏவ ஸர்வஜகதாம் சக்ஷு: ப்ரியம்
பாவுகம்
காமாக்ஷி! ஸ்புரிதே சரத் விகஸிதே கீத்ருக் விதம்
ப்ராஜதே॥88॥

காமாக்ஷி!	காமாக்ஷியே!
தவ	உனது
லலிதம்	அழகிய
வக்த்ரம்	முகமானது
ஸ்வாபாவ்யாத் ஏவ	இயற்கையாகவே
சம்போ:	பரமசிவனுக்கு
ஸந்தோஷ ஸம்பாதநம்	ஸந்தோஷத்தை உண்டுபண்ணு வதாயிருக்கிறது
அஞ்சித ஸ்மித ருச:	அழகிய புன்சிரிப்பின் காந்தியினுடைய
பாண்டித்ய பாத்ரீக்ருதம்	பாண்டித்யத்திற்கு இருப்பிடமான அந்த முகமானது
கிம்புந:	சொல்லவேண்டுமா?
அம்போஜம்	தாமரைப்பூவானது
ஸ்வத: ஏவ	பிறவியிலேயே
ஸர்வ ஜகதாம்	எல்லா உலகத்திற்கும்
சக்ஷு: பிரியம் பாவுகம்	நேத்திரானந்தத்தை ஊட்டும்
சரத் விகஸிதே	சரத்காலத்திய மலர்தலானது
ஸ்புரிதே	துலங்கும்போது
கீத்ருக்விதம்	எத்தகையதாக
ப்ராஜதே	விளங்கும்? அப்படியே இதுவும்.

காமாக்ஷி! இயற்கையாகவே வனப்புவாய்ந்த உன்னுடைய முகம் பரமசிவனுக்கு இன்பத்தை

விளைவிக்கின்றது. அம்முகமே அழகிய புன்னகையின் திறமைக்கு இருப்பிடமாகச் செய்யப்பட்டுவிட்டால் இன்பத்தை விளைவிக்கும் என்பதில் கேட்கவும் வேண்டுமோ? தாமரை இயற்கையிலேயே எல்லா ஜனங்களுடைய கண்களுக்கு இன்பம் தருகின்றது. சரத்காலத்தின் மலர்ச்சி துலங்கும்பொழுது அத் தாமரை மலர் எவ்விதமாக மிகமிக வேன்மைபெற்று விளங்குமோ, அதுபோல் உன் திருமுகமானது புன்சிரிப்புடன் விளங்கினால் பரம சிவனுக்கு அதிகமான இன்பத்தை அளிக்கின்றது.

पुंभिर्निमलमानसैर्विदधते मैत्रीरसं निर्मलं
कर्तुम् कर्मलयं च निर्मलतमां कीर्तिम् लभन्तेतराम्।
सूक्तिं पक्ष्मलयन्ति निर्मलगुणां यत्तावका: सेवका:
तत्कामाक्षि तव स्मितस्य कलया नैर्मल्यसीमानिधे:॥८९॥

பும்பி: நிர்மல மாநஸை: விததேதே மைத்ரீ ரஸம் நிர்மலம்
கர்த்தும் கர்மலயம் ச நிர்மலதமாம் கீர்த்திம் லபந்தேதராம்।
ஸூக்திம் பக்ஷ்மலயந்தி நிர்மலகுணாம் யத்தாவகா:
ஸேவகா:
தத் காமாக்ஷி தவ ஸ்மிதஸ்ய கலயா நைர்மல்ய
ஸிமாநிதே:॥89॥

காமாக்ஷி!	காமாக்ஷியே!
தாவகா: ஸேவகா:	உனது அடியார்கள்
நிர்மல மானஸை:	பரிசுத்தமான மனதுள்ள
பும்பி:	புருஷர்களோடு
நிர்மலம்	சுத்தமான
மைத்ரீ ரஸம்	ஸ்னேஹ ரஸத்தை

விதததே	செய்கிறார்கள்
கர்மலயம்	கர்மநாசத்தை
கர்த்தும்	அடைவதற்கு
நிர்மலதமாம்	மிகவும் சுத்தமான
கீர்த்திம்	கீர்த்தியையும்
லபந்தேதராம்	அடைகிறார்கள்
நிர்மலகுணாம்	உயர்ந்த குணமுள்ள
ஸூக்திம்	வாக்கை
பக்ஷ்மலயந்தி	வெளிப்படுத்துகிறார்கள் என்பது
யத்	யாதொன்று உண்டோ
தத்	அதெல்லாம்
நைர்மல்ய ஸீமாநிதே:	பரிசுத்தியின் பரம எல்லை ஸ்தானமாயுள்ள
தவ ஸ்மிதஸ்ய	உனது புன்சிரிப்பின்
கலயா	ஒரு கலையின் மஹிமையால் தான்.

காமாக்ஷி! உனது அடியார்கள் தூய மனமுள்ள புருஷர்களுடன் மாசற்ற நட்புக்கொள்ளுகிறார்கள் என்பதும், வினைகளையொழிக்க, தூய புகழையடைகிறார்கள் என்பதும், மிகத்தெளிவுள்ள அழகிய சொற்களைப் பெருகச் செய்கிறார்கள் என்பதும் மாசற்ற தன்மைக் கிருப்பிடமாகிய உனது புன்சிரிப்பின் ஒரு கலையால்தான் (அம்சத்தால் தான்).

''मैत्रीं दृढं निर्मलां लब्ध्वा कर्मलयं च निर्मलतराम्'' (மைத்ரீம்த்ருடம் நிர்மலாம் லப்த்வா கர்மலயம் ச நிர்மலதராம்) என்ற பாடாந்திரத்தில், நிர்மலாம் மாசற்ற, மைத்ரீம் - நட்பை,

த்ருடம் - திடமாக (மாறாமல்) செய்கிறார்கள் என்பதும், கர்மலயம் ச (அதனால்) வினைகளின் நாசத்தை, லப்த்வாச - அடைந்தும், என்பது பொருள்.

आकर्षन्नयनानि नाकिसदसां शैत्येन संस्तम्भयन्
इन्दुं किं च विमोहयन्पशुपतिं विश्वार्तिमुच्चाटयन्।
हिंसन्संसृतिडम्बरं तव शिवे हासाह्वयो मान्त्रिक:
श्रीकामाक्षि मदार्तितापतमसो विद्वेषणे चेष्टताम्।।९०।।

ஆகர்ஷந்நயநாநி நாகி ஸதஸாம் சைத்யேந
ஸம்ஸ்தம்பயந்
இந்தும் கிஞ்ச விமோஹயந் பசுபதிம் விச்வார்த்தி
முச்சாடயந்।
ஹிம்ஸந் ஸம்ஸ்ருதி டம்பரம் தவ சிவே!
ஹாஸாஹ்வயோ மாந்த்ரிக:
ஸ்ரீ காமாக்ஷி! மதார்த்தி தாப தமஸோ வித்வேஷணே
சேஷ்டதாம்।।90।।

சிவே!	*மங்மளமூர்த்தியான*
ஸ்ரீ காமாக்ஷி!	*ஸ்ரீ காமாக்ஷியே!*
நாகி ஸதஸாம்	*விண்ணுலகில் வஸிக்கும் தேவதைகளுடைய*
நயநாநி	*கண்களை*
ஆகர்ஷந்	*ஆகர்ஷணம் செய்கிறவனாயும்*
சைத்யேந	*குளிமையினால்*
இந்தும்	*சந்திரனை*
ஸம்ஸ்தம்பந்	*ஸ்தம்பனம் செய்கிறவனாயும்*
கிஞ்ச	*இன்னும்*

பசுபதிம்	பரமேசுவரனை
விமோஹயந்	மோஹிக்கச் செய்கிரவனாயும்
விச்வார்த்திம்	உலகத்தின் கஷ்டத்தை
உச்சாடயந்	துரத்தியடிப்பவனாயும்
ஸம்ஸ்ருதி டம்பரம்	ஸம்ஸாரக்கொடுமையை
ஹிம்ஸந்	போக்கடிப்பவனுமான
தவ	உன்னுடைய
ஹாஸாஹ்வய:	புன்சிரிப்பு என்கிற பெயருள்ள
மாந்த்ரிக:	மந்திரவாதியானவன்
மத்-ஆர்த்தி-தாப-தமஸ:	என்னுடைய கஷ்டம் ஸந்தாபம், அக்ஞானம் இவைகளை
வித்வேஷணே	போக்கடிக்கும் கார்யத்தில்
சேஷ்டதாம்	ப்ரயத்னப்படட்டும்.

மங்கள உருவாகிய ஸ்ரீ காமாக்ஷி! தேவலோகத்திய ஸபையோர்களின் (தேவதைகளின்) கண்களை ஆகர்ஷிக்கின்றதும் (கவர்கின்றதும்), குளிர்ச்சியால் சந்திரனையும் ஸ்தம்ப்பிக்கச் செய்கின்றதும், (மரத்துப் போகும்படி செய்கின்றதும்), பர்மசிவனை மோஹிக்கச் செய்கின்றதும் (மயங்கும்படி செய்கின்றதும்), உலகத்தோரின் கஷ்டங்களை உச்சாடனம் செய்கின்றதும் (விரட்டுகின்றதும்), ஜனன மரணத்தின் ஆடம்பரத்தை ஹிம்ஸிக்கின்றதும் (ஸம்ஸார நாசத்தைச் செய்கின்றதும்), ஆன உனது புன்சிரிப்பென்னும் மந்திரவாதி என் கஷ்டம், ஸந்தாபம் இருள் இவைகளுடன் த்வேஷணம் செய்வதில் (இவைகளைப் போக்குவதில்) முயலவேண்டும்.

இந்த சுலோகத்தில் தேவியின் புன்சிரிப்பு மந்திரவாதியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இங்கு மந்திரவாதியின் செய்கையைக் கூறும் ஆகர்ஷணம் ஸ்தம்பநம் முதலிய சொற்கள் சிலேடையாகக் குறிக்கப்பட்டுள்ளன.

'मदीयमानस तमोविद्वेषणे' மதீயமாநஸ தமோவித்வேஷணே என்ற பாடத்தில், எனது மனதிலிருக்கும் இருளோடு த்வேஷிப்பதில் என்பது பொருள்.

क्षेपीयः क्षपयन्तु कल्मषभयानि अस्माकमल्पस्मित–
ज्योतिर्मण्डलचङ्क्रमाः तव शिवे कामाक्षि रोचिष्णवः।
पीडाकर्मठकर्मघर्मसमयव्यापारतापानल–
श्रीपाता नवहर्षवर्षणसुधास्रोतस्विनीशीकराः।।९१।।

க்ஷேபீய: க்ஷபயந்து கல்மஷ பயாநி அஸ்மாகமல்பஸ்மித-
ஜ்யோதிர்மண்டல சங்க்ரமாஸ்தவ சிவே! காமாக்ஷி!
ரோசிஷ்ணவ:।

பீடா-கர்மட-கர்ம-கர்மஸமய வ்யாபார-தாபாநல-
ச்ரீபாதா: நவ-வர்ஷ-ஹர்ஷண-ஸுதா-ஸ்ரோதஸ்விநீ
சிகரா: ।।91।।

சிவே! காமாக்ஷி!	மங்களமூர்த்தியான காமாக்ஷியே!
பீடா-கர்மட-கர்ம-கர்ம ஸமய வ்யாபார-தாபாநல-ச்ரீபாதா:	பீடையையே தொழிலாகக் கொண்ட கர்மங்களென்னும் கோடைகாலத்தின் செய்கையாகிற தாபாக்நிக்கு அழிவை உண்டாக்குகிற

	வைகளாகவும்,
நவ வர்ஷ ஹர்ஷண ஸுதா ஸ்ரோதஸ்விநீ-சிகரா:	புதிய வர்ஷத்தினால் ஸந்தோஷிக்கச்செய்கிற அம்ருத அருவியின் துளிகளாயும்
ரோசிஷ்ணவ:	பிரகாசிக்கின்றவைகளும்
தவ	உனது
அல்பஸ்மித ஜ்யோதிர்மண்டல சங்க்ரமா:	மந்தஸ்மித தேஜோமண்டலங்களின் ஸஞ்சாரங்கள்
அஸ்மாகம்	எங்களுடைய
கல்மஷ - பயாநி,	பாப பயங்களை
க்ஷேபீய:	நன்கு
க்ஷபந்து	போக்கடிக்கட்டும்.

மங்கள ரூபிணியான காமாக்ஷி! துன்பத்தையே விளைவிக்கும் கர்மங்கள் என்றும் கோடைகாலத்தின் செய்கைகளாலுண்டான தாபமென்னும் அனலுக்கு அழிவைச் செய்கின்றவைகளும் திவலைகளாகவு மிருக்கின்ற உனது விளங்கும் இளநகையின் ஒளிக்கூட்டத்தின் ஸஞ்சாரங்கள் அதிசீக்கிரத்தில் எங்களது பாபபயங்களை அழிக்கவேண்டும்.

'तापानल श्रीवाता:' ''தாபாநல ஸ்ரீ பாதா:'' என்ற பாடாந்தரத்தில் அக்னிபோல் தபிக்கும் ஸம்ஸாரதாபத்தைப் போக்கும் குளிர்ந்த காற்றாக இருப்பவைகளும் என்று பொருள்.

श्रीकामाक्षि तव स्मितैन्दवमहःपूरे परिस्फूर्जति
प्रौढां वारिधिचातुरीं कलयते भक्तात्मनां प्रातिभम्।
दौर्गत्यप्रसरास्तमःपटलिकासाधर्म्यमाबिभ्रते
किं किं कैरवसाहचर्यपदवीरीत्यां न धत्ते पदम्॥९२॥

ஸ்ரீ காமாக்ஷி! தவ ஸ்மிதைந்தவ மஹ: பூரே பரிஸ்பூர்ஜதி
ப்ரௌடாம் வாரிதி சாதுரீம் கலயதே பக்தாத்மநாம் ப்ராதிபம்।
தௌர்கத்ய ப்ரஸரா: தம: படலிகா ஸாதர்ம்யமாபிப்ரதே
கிம் கிம் கைரவ ஸாஹசர்யபதவீ ரீத்யாம் ந தத்தேபதம்॥92॥

ஸ்ரீ காமாக்ஷி!	*ஸ்ரீ காமாக்ஷியே!*
தவ	*உனது*
ஸ்மித ஐந்தவ மஹ: பூரே	*புன்சிரிப்பாகிற சந்திர ஒளியின் கூட்டமானது*
பரிஸ்பூர்ஜதி	*விளங்கிக்கொண்டிருக்கையில்*
பக்தாத்மநாம்	*பக்தர்களுடைய*
ப்ராதிபம்	*ப்ரதிபையானது*
ப்ரௌடாம்	*கம்பீரமான*
வாரிதி சாதுரீம்	*ஸமுத்திரத்தின் சாதுர்யத்தை*
கலயதே	*அடைகிறது*
தௌர்கத்ய ப்ரஸரா:	*துரதிருஷ்டங்களின் பரவுதல்கள்*
தம: படலிகா ஸாதர்ம்யம்	*இருள் கூட்டத்தின் நிலைமையை*
ஆபிப்ரதே	*அடைகின்றன*

கிம் கிம்	மற்றவை எவை எவைதான்
கைரவ ஸாஹசர்ய	ஆம்பல் புஷ்பத்தின்
பதவீரீத்யாம்	நிலைமையில்
பதம்	இருப்பை
ந தத்தே	அடைவதில்லை ?

ஸ்ரீ காமாக்ஷி! உனது இளநகையென்னும் நிலவுப்பெருக்கு ஒளிருகையில், அடியார்களின் மேல் மேல் தோற்றமுள்ள அறிவு, முதிர்ந்த ஸமுத்திரத்தின் திறமையைக் காட்டுகின்றது. துரதிருஷ்டங்களின் பெருக்குகள் இருள் கூட்டத்தின் ஒத்துமையை யடைகின்றன. மற்ற எவைதான் ஆம்பலுக்கு ஒத்துழை க்கும் வழி முறையைப் பின்பற்றாமலிருக்கின்றன ?

"सर्वं कैरव साहचर्य पदवीरितिं विधत्ते परम्" "ஸர்வம் கைரவ ஸாஹசர்ய பதவீரிதிம் விதத்தே பரம்" என்ற பாடாந்திரத்தில், ஸர்வம் - மற்றவையெல்லாம், கைரவ ஸாஹசர்ய பதவீரிதிம் பரம் - அல்லிக்கு ஒத்துழைக்கும் நிலைமையை ஏற்கின்றது - என்பது பொருள்.

मन्दारादिषु मन्मथारिमहिषि प्राकाश्यरीतिं निजां
कादाचित्कतया विशङ्क्य बहुशो वैशद्यमुद्रागुणः।
श्रीकामाक्षि तदीयसङ्गमकलामन्दीभवत्कौतुकः
सातत्येन तव स्मिते वितनुते स्वैरासनावासनाम्।।९३।।

மந்தாரதிஷு மன்மதாரி மஹிஷி! ப்ரகாஶ்யரீதிம் நிஜாம்
காதாசித்கதயா விசஶங்க்ய பஹுஶோ வைஶத்ய

முத்ராகுண:।

ஸ்ரீ காமாக்ஷி! ததீய-ஸங்கம-கலா-மந்தீபவத்-கௌதுக:
ஸாதத்யேந தவ ஸ்மிதே விதநுதே

ஸ்வைராஸநாவாஸநாம்॥93॥

மன்மத-அரி-மஹிஷி	*மன்மதசத்ருவின் பார்யையான*
ஸ்ரீ காமாக்ஷி!	*ஸ்ரீ காமாக்ஷியே!*
வைசத்ய-முத்ராகுண:	*நிர்மலமான வெளுப்பு குணமானது*
மந்தாராதிஷு	*மந்தாரபுஷ்பம் முதலியவைகளில்*
நிஜாம்	*தன்னுடைய*
ப்ரகாச்யரீதிம்	*ப்ரகாசிக்கும் தன்மையை*
கதாசித்கயா	*எதாவது ஒரு ஸமயத்தில் உண்டாகிறதென்பதாக*
பஹுஶ: விஶங்க்ய:	*அநேகம் தடவை ஊஹித்து அறிந்து*
ததீய-ஸங்கம-கலா-மந்தீ-பவத் கௌதுகம்:	*அவைகளோடு சேருவதில் உத்ஸாஹக்குறைவு உள்ளதாய்*
தவ ஸ்மிதே	*உனது புன்சிரிப்பில்*
ஸாதத்யேந	*ஸ்திரமாக*
ஸ்வைராஸநா வாஸநாம்	*கவலையற்று தொடர்ந்து வஸிப்பதை*
விதநுதே	*செய்து கொண்டிருக்கிறது.*

மன்மதனுடைய எதிரியாகிய பரமசிவனது பட்டராணியாகிய ஸ்ரீ காமாக்ஷி! மந்தாரம் முதலிய மலர்களில் தனது வெளியீடு சில ஸமயங்களில்தான் ஏற்படுமென்று நினைத்து, வெண்மைநிறத்தின் சிறப்பு, அவைகளுடன் சேர்வதில் ஆர்வம் குன்றியாக ஆகி, உனது புன்சிரிப்பில் இடைவிடாது இஷ்டப்படி தொடர்ச்சியாக இருத்தலைச் செய்து கொண்டிருக்கிறது.

कादाचित्कतया विचिन्त्य - *'காதாசித்கதயா விசிந்த்ய' என்ற பாடத்தில், சில ஸமயத்தில்தான் வெளுப்பாகிறதென்று நினைத்து என்று பொருள்.*

इन्धाने भववीतिहोत्रनिवहे कर्मौघचण्डानिल-
प्रौढिम्ना बहुलीकृते निपतितं सन्तापचिन्ताकुलम्।
मातर्माम् परिषिञ्च किञ्चिदमलैः पीयूषवर्षैरिव-
श्रीकामाक्षि तव स्मितद्युतिकणैः शैशिर्यलीलाकरैः॥९४॥

இந்தாநே பவ-வீதிஹோத்ர-நிவஹே
கர்மௌக-சண்டாநில-
ப்ரௌடிம்நா பஹுலீக்ருதே நிபதிதம்
ஸந்தாப- சிந்தா குலம்।
மாதர்மாம் பரிஷிஞ்ச கிஞ்சிதமலை: பீயூஷ-வர்ஷைரிவ
ஸ்ரீ காமாக்ஷி தவ ஸ்மித-த்யுதி-கணை:
சைசிர்ய-லீலாகரை:॥94॥

மாத:	*தாயாரான*
காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
அமலை:	*பரிசுத்தங்களாயும்*

சைசிர்ய லீலாகரை:	குளிர்மையின் விலாஸங்களுக்கு இருப்பிடங்களுமான
தவ	உன்னுடைய
ஸ்மித-த்யுதி-கணை:	புன்சிரிப்பின் காந்திக்கூட்டங்களால்
கர்ம-ஓக-சண்டாநில-ப்ரௌடிம்நா	கர்ம ஸமூஹமென்கிற பெருங்காற்றின் வேகத்தினால்
இந்தாநே	ஜ்வலிப்பதாயும்
பஹுலீக்ருதே	அதிகமாயுமிருக்கிற
பவ-வீதி ஹோத்ர நிவஹே	ஸம்ஸாரமென்னும் அக்னிக் கூட்டத்தில்
நிபதிதம்	விழுந்தவனாயும்
ஸந்தாப-சிந்தா-ஆகுலம்	ஸந்தாபத்தினாலும், கவலையினாலும் கலங்கியிருக்கிற
மாம்	என்னை
பீயூஷ-வர்ஷை:-இவ	அம்ருதவர்ஷங்களினால் போல்
கிஞ்சித்	கொஞ்சம்
பரிஷிஞ்ச	நனைப்பாயாக.

தாயே ஸ்ரீ காமாக்ஷி! ஜ்வலிக்கின்றதும் வினைக்கூட்டமென்னும் கொடுங்காற்றின் வலிமையால் அதிகப்பட்டதுமான ஸம்ஸாரமென்னும் அனற் குவியலில் விழுந்தவனும், ஸந்தாபம் சிந்தை இவைகளால் கலங்கியவனுமான என்னை மாசற்றவைகளும் அமுத மழை போன்றவைகளும் குளிர்ச்சியின் விலாஸத்திற்கு

இருப்பிடமானவை களுமான உனது புன்னகையின் ஒளித்திவலைகளால் சற்று நனைப்பாயாக.

भाषाया रसनाग्रखेलनजुषः शृङ्गारमुद्रासखी–
लीलाजातरतेः सुखेन नियमस्नानाय मेनात्मजे।
श्रीकामाक्षि सुधामयीव शिशिरा स्रोतस्विनी तावकी
गाढानन्दतरङ्गिता विजयते हासप्रभाचातुरी।।९५।।

பாஷாயா: ரஸநாக்ர-கேலந-ஜுஷ: ச்ருங்கார-முத்ராஸகீ-
லீலாஜாத-ரதே: ஸுகேந நியம-ஸ்நாநாய மேநாத்மஜே।
ஸ்ரீ காமாக்ஷி! ஸுதாமயீவ சிசிரா ஸ்ரோதஸ்விநீ தாவகீ
காடாநந்த-தரங்கிதா விஜயதே ஹாஸ-ப்ரபா-சாதுரீ।।95।।

மேநாத்மஜே!	மேனையின் புத்ரியாகிய
ஸ்ரீ காமாக்ஷி!	*ஸ்ரீ காமாக்ஷியே!*
தாவகீ	உனது
ஹாஸ-ப்ரபாசாதுரீ	புன்சிரிப்பின் காந்தியின் திறமையானது
ரஸநா-அக்ர-கேலந-ஜுஷ:	நாக்குநுனியில் விளையாடிக் கொண்டிருக்கிறவளாயும்
ச்ருங்கார-முத்ராஸகீ-லீலா ஜாத-ரதே:	ச்ருங்கார ஸாரமாகிய தோழியுடன் விளையாடு வதில் ஆசையுள்ளவளா யுமிருக்கிற
பாஷாயா:	வாக்கு என்னும் பெண்ணுக்கு ஸுகமாக
நியம-ஸ்நாநாய	நியமத்தோடு ஸ்நாநம் செய்வதற்கு ஏற்பட்ட
காட-ஆநந்த-தரங்கிதா	த்ருடமான ஆனந்தத்தோடு

	அலைபொங்கியதான
சிசிரா	குளிர்ந்த
ஸுதாமயீ	அம்ருதமயமான
ஸ்ரோதஸ்விநீ இவ	நதியைப்போல
விஜயதே	விளங்குகிறது.

மேனையின் புதல்வியாகிய ஸ்ரீ காமாக்ஷி! நாக்கு நுனியில் விளையாடுகின்றதும் சிறந்த ச்ருங்கார மென்னும் தோழியின் அழகிய செய்கைகளில் ஆவல்கொண்டதுமான வாக்கென்னும் வனிதைக்குச் சுகமாக நியமஸ்நானம் செய்வதற்காக அமைந்து ஆழமானதும் ஆனந்த அலைகள் நிரம்பியதும் அமுதாலானது போல் குளிர்ச்சியுள்ளதுமான ஒரு நதியைப்போல் உனது புன்சிரிப்பின் ஒளித்திறம் விளங்குகிறது.

सन्तापं विरलीकरोतु सकलं कामाक्षि मच्चेतना
मज्जन्ती मधुरस्मितामरधुनीकल्लोलजालेषु ते।
नैरन्तर्यमुपेत्य मन्मथमरुल्लोलेषु येषु स्फुटं
प्रेमेन्दुः प्रतिबिम्बितो वितनुते कौतूहलं धूर्जटेः॥९६॥

ஸந்தாபம் விரலீகரோது ஸகலம் காமாக்ஷி! மச்சேதநா
மஜ்ஜந்தீ மதுர-ஸ்மிதாமர-துநீ-கல்லோல-ஜாலேஷு தே
நைரந்தர்ய முபேத்ய மந்மத மருல்லோலேஷு யேஷு
ஸ்புடம்
ப்ரேமேந்து: ப்ரதிபிம்பிதோ விதநுதே கௌதூஹலம்
தூர்ஜடே:॥96॥

காமாக்ஷி!	காமாக்ஷியே!
நைரந்தர்யம் உபேத்ய	இடைவிடாத நிலைமையை அடைந்து
மந்மத-மருத்-லோலேஷு	மன்மதனென்னும் காற்றால் அசைந்து கொண்டிருக்கிற
யேஷு	எந்த அலைகளில்
தூர்ஜடே:	பரமசிவனுடைய
ப்ரேம இந்து:	அன்பு என்னும் சந்திரன்
ஸ்புடம்	நன்றாக
ப்ரதிபிம்பித:	பிரதிபலித்துக்கொண்டு
கௌதூஹலம்	உத்ஸாஹத்தை
விதநுதே	செய்து வருகிறதோ
(தேஷு)	(அப்படிப்பட்ட)
தே	உனது
மதுர-ஸ்மித-அமர துநீ-கல்லோல-ஜாலேஷு	இனிய புன்சிரிப்பெண்கிற தேவ கங்கையின் அலை ஸமூஹத்தில்
மஜ்ஜந்தீ	முழுகுகின்றதான
மத்-சேதநா	எனது மனதானது
ஸகலம்	எல்லாவிதமான
ஸந்தாபம்	தாபத்தையும்
விரலீகரோது	போக்கடித்துக்கொள்ளட்டும்.

காமாக்ஷி! மன்மதன் என்னும் காற்றால் அசைகின்ற எந்தப் புன்சிரிப்பின் அலைகளில் தெளிவுடன் இடைவிடாமல் பிரதிபிம்பித்திருக்கின்ற அன்பெனும் சந்திரன் பரமசிவனுக்கு ஆவலை வளர்க்கின்றதோ, அந்த உன்னுடைய இனிய

சிறிப்பென்னும் தேவகங்கையின் அலைக்கூட்டங்களில் என் மனது மூழ்கி எல்லா ஸந்தாபங்களையும் தணித்துக்கொள்ளட்டும்.

चेत:क्षीरपयोधिमन्थनचलद्रागाख्यमन्थाचल-
क्षोभव्यापृतिसम्भवां जननि ते मन्दस्मितश्रीसुधाम्।
स्वादं स्वादमुदीतकौतुकरसं(सा)नेत्रत्रयी शाङ्करी
श्रीकामाक्षि निरन्तरं परिणमत्यानन्दवीचीमयी।।९७।।

சேத: க்ஷீர பயோதி மந்தந சலத் ராகாக்ய மந்தா சல-
க்ஷோப வாயப்ருதி ஸம்பவாம் ஜநநி! தே
மந்தஸ்மித-ஸ்ரீஸுதாம்।
ஸ்வாதம் ஸ்வாதமுதீத கௌதுகரஸம்(ஸா)நேத்ர த்ரயீ
சாங்கரீ
ஸ்ரீ காமாக்ஷி! நிரந்தரம் பரிணமத்யாநந்த வீசிமயீ।।97।।

ஜநநி! காமாக்ஷி! — *தாயான காமாக்ஷியே!*

சேத: க்ஷீர பயோதி மந்தந சலத் ராகாக்ய மந்தாசல க்ஷோப வ்யாப்ருதி ஸம்பவாம் — *மனதென்றும் க்ஷீரஸமுத்ரத்தைக் கடையும், அநுராகமென்கிற மந்திர பர்வத்தின் கடைவதினால் ஏற்பட்ட*

தே — *உனது*

மந்தஸ்மித ஸ்ரீ ஸுதாம் — *புன்சிரிப்பின் காந்தியாகிற அம்ருதத்தை*

உதீத கௌதுகரஸம் — *அதிக உத்ஸாஹத்துடன் இருக்கும்படி*

ஸ்வாதம் ஸ்வாதம் — *அடிக்கடி அருந்தி*

சாங்கரீ — *பரமசிவனுடையதான*

நேத்ரத்ரயீ	*மூன்று கண்களும்*
நிரந்தரம்	*இடைவிடாமல்*
ஆரணத வீசிமயீ	*ஆனந்த அலையாக*
பரிணமதி	*பரிணமிக்கிறது.*

அன்னையே ஸ்ரீ காமாக்ஷி! மனமெனும் பாலாழியில் மெதுவாய் அசைகின்ற ஆசையென்னும் மந்தரமலையின் கடைவதால் உண்டாகிய புன்னகையின் ஒளி என்ற சிறந்த அமுதைப் பரமசிவனது மூன்று கண்களும் ஆவல்கொண்டு இடைவிடாது பருகிப்பருகி இன்ப அலைகளாக மாறுகின்றன.

आलोके तव पञ्चसायकरिपोः उद्दामकौतूहल–
प्रेङ्खन्मारुतघट्टनप्रचलितात् आनन्ददुग्धाम्बुधेः।
काचिद्वीचिरुदञ्चति प्रतिनवा संवित्प्रोहात्मिका
तां कामाक्षि कवीश्वराः स्मितमिति व्याकुर्वते सर्वदा॥९८॥

ஆலோகே தவ பஞ்சஸாயகரிபோ:
உத்தாம-கௌதூஹல-
ப்ரேங்கந-மாருத-கட்டந ப்ரசலிதாதாநந்த துக்தாம்புதே:।
காசித் வீசிருதஞ்சதி ப்ரதிநவா ஸம்வித்-ப்ரரோஹாத்மிகா
தாம் காமாக்ஷி! கவீச்வரா: ஸ்மிதமிதி வ்யாகுர்வதே
ஸர்வதா॥98॥

காமாக்ஷி!	*காமாக்ஷியே!*
பஞ்ச ஸாயக ரிபோ:	*மன்மத சத்ருவான பரமசிவனுடைய*
ஆலோகே	*பார்வை ஏற்படும்போது*
உத்தாம-கௌதூஹல-	*அதிக உத்ஸாஹமென்கிற*

ப்ரேங்கத் மாருத-கட்டந	காற்றின் மோதலால் அசைந்து
ப்ரசலிதாத்	கொண்டிருக்கிற
ஆநந்த துக்தாம்புதே:	ஆனந்தமென்கிற க்ஷீரஸமுத்ரத்திலிருந்து
ஸம்வித்-ப்ரரோஹாத் மிகா	ஞானத்தின் அங்குரமாகிற
ப்ரதிநவா	புதியதான
காசித்	ஒரு
வீசி:	அலையானது
உதஞ்சதி	உண்டாகிறது
தாம்	அந்த அலையை
கவீச்வரா:	கவிச்ரேஷ்டர்கள்
ஸ்மிதம் இதி	புன்சிரிப்பென்று
ஸர்வதா	எப்போதும்
வ்யாகுர்வதே	விவர்க்கிறார்கள்.

காமாக்ஷி! பஞ்சபாணனது பகைவரான பரமசிவனைப் பார்க்குங்கால் கட்டுக்கடங்காத ஆவல் என்ற காற்றின் மோதுதலால் அசைந்த ஆனந்தமென்னும் பாலாழியிலிருந்து ஞானக்கொழுந்து வடிவமாய் ஓர் புதிய அலை எழுகின்றது. அதைச் சிறந்த கவிகள் எப்பொழுதும் புன்னகையென்று விரித்துக்கூறுகின்றனர்.

सूक्तिः शीलयते किं अद्रितनये मन्दस्मितात्ते मुहुः
माधुर्यागमसंप्रदायं अथवा सूक्तेस्तु मन्दस्मितम्।
इत्थं कामपि गाहते मम मनः सन्देहमार्गभ्रमीं
श्रीकामाक्षि न पारमार्थ्यसरणिस्पूर्तौ निधत्ते पदम्।।९९।।

ஸூக்தி: சீலயதே கிமத்ரி-தநயே! மந்தஸ்மிதாத் தே முஹு:
மாதுர்யாகம-ஸம்ப்ரதாயமதவா ஸூக்தேஸ்த்து(ர்நு) மந்தஸ்மிதம்।
இத்தம் காமபி காஹதே மம மந: ஸந்தேஹ மார்க்க ப்ரமீம்
ஸ்ரீ காமாக்ஷி ந பாரமாத்ய-ஸரணி-ஸ்பூர்த்தௌ நிதத்தே பதம்॥99॥

அத்ரி தநயே!	*பர்வத புத்ரியான!*
ஸ்ரீ காமாக்ஷி!	*ஸ்ரீ காமாக்ஷியே!*
தே	*உன்னுடைய*
ஸூக்தி:	*நல்ல வாக்கானது*
மாதுர்யாகம ஸம்ப்ரதாயம்	*இனிமையென்னும் சாஸ்திரத்தின் உட்கருத்தை*
மந்தஸ்மிதாத்	*உனது புன்சிரிப்பிடமிருந்து*
முஹு:	*அடிக்கடி*
சீலயதே - கிம்	*பழக்கிக்கொள்கிறதா?*
அதவா	*இல்லாவிடில்*
ஸூக்தே:	*நல்ல வாக்கிடமிந்து*
மந்தஸ்மிதம்	*புன்சிரிப்பானது (அதை பழகிக்கொள்கிறதா)*
இத்தம்	*இம்மாதிரி*
மம மந:	*எனது மனதானது*
காம் அபி	*ஒருவிதமான*
ஸந்தேஹ-மார்க்க-ப்ரமீம்	*ஸந்தேஹ வழியின் சுழலை*
காஹதே	*அடைகிறது.*

பாரமார்த்ய-ஸரணி-	*உண்மையான வழி*
ஸ்பூர்தெள	*விளங்குவதில்*
பதம்	*அடியை*
ந நிதத்தே	*வைக்கிறதில்லை.*

மலைகளாகிய ஸ்ரீ காமாக்ஷி! இனிமை என்னும் சாஸ்திரத்தின் கருத்தை, உனது அழகியமொழி புன்னகையினின்று முறைப்படி கற்கின்றதோ? அல்லது சொல்லினின்று புன்முறுவல் பயிலுகின்றதோ, என் மனம் சொல்லமுடியாத ஸந்தேஹமார்க்கத்தில் சுழலுகின்றது. உண்மை வழி விளக்கத்தில் கால் வைப்பதில்லை.

क्रीडालोलकृपासरोरुहमुखीसौधाङ्गणेभ्यः कवि–
श्रेणीवाक्परिपाटिकामृतझरीसूतीगृहेभ्यः शिवे ।
निर्वाणाङ्कुरसार्वभौमपदवीसिंहासनेभ्यस्तव
श्रीकामाक्षि मनोज्ञमन्दहसितज्योतिष्कणेभ्यो नमः ।।१००।।

க்ரீடா லோல க்ருபா ஸரோருஹ முகீ
ஸெளதாங்கணேப்ய: கவி-
ச்ரேணீ வாக்பரிபாடிகாம்ருத ஜரீ ஸூதீ க்ருஹேபய:
சிவே!

நிர்வாணாங்குர ஸார்வபெளம பதவீ
ஸிம்ஹாஸநேப்யஸ்தவ
ஸ்ரீ காமாக்ஷி! மநோக்ஞ மந்த ஹஸித
ஜ்யோதிஷ்கணேப்யோ நம:।।100।।

சிவே!	*மங்களமூர்த்தியான*
ஸ்ரீ காமாக்ஷி!	*ஸ்ரீ காமாக்ஷியே!*
க்ரீடா-லோல	*விளையாட்டில் ஆசையுள்ள*

க்ருபா	கருணையென்கிற
ஸரோருஹமுகீ	தாமரைப் போன்ற முகங்கொண்ட ஸ்திரீயினுடைய
ஸௌதாங்கணேப்ய:	உப்பரிக்கைகளாயும்
கவிச்ரேணீ	கவிகளுடைய கூட்டத்தின்
வாக்பரிபாடிகா	வாக்கு ஸாமர்த்யமென்கிற
அமிர்தஜரீ	அம்ருதப்பெருக்குக்கு
ஸூதீக்ருஹேப்ய:	உத்பத்தி ஸ்தானங்களாயும்
நிர்வாணாங்குர:	மோக்ஷ ஆரம்பமாகிற
ஸார்வபௌமபதவீ	ஸாம்ராஜ்ய வழியின்
ஸிம்ஹாஸநேப்ய:	ஸிம்ஹாஸனங்கள் போன்றவைகளுமான
தவ	உனது
மநோக்ஞ-மந்தஹஸித ஜ்யோதிஷ்கணேப்ய:	அழகிய மந்தஸ்மித ஒளியின் திவிலைகளுக்கு
நம:	நமஸ்காரம்.

மங்களந்தரும் ஸ்ரீ காமாக்ஷி! விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் கருணை என்ற அழகிக்கு (தாமரை முகத்தாளுக்கு) மாளிகையும், கவிக்கூட்டத்தின் சொற்றொடர் என்ற அமுதப்பெருக்குப் பிறப்பிடமும், முக்தியின் தோற்றமென்ற சக்ரவர்த்தி நிலைக்கு அரியணையுமான மனதைக்கவரும் உனது மந்தஹாஸத் தின் ஒளித்திவலைகளுக்கு நமஸ்காரம்.

*****

इमां पञ्चशतीं यस्तु नित्यं भक्तियुतः पठेत्।
श्री कामाक्षि भवेत् तस्य प्रसन्ना च वरप्रदा।।१०१।।

இமாம் பஞ்சஶதீம் யஸ்து நித்யம் பக்தியுத: படேத்।
ஶ்ரீ காமாக்ஷீ பவேத் தஸ்ய ப்ரஸந்நா ச வரப்ரதா।।101।।

இந்த பஞ்சசதியை எவர் நித்யம் பக்தியுடன் படிக்கிறாரோ, அவருக்கு ஸ்ரீ காமாக்ஷீ தேவியானவள் பிரஸன்னையாகி வரங்களையும் கொடுப்பாள்.

*****

श्री काञ्चि नगरी काङ्कोटि पीटाधिपः प्रभुः।
जीङ्गात् जगद्गुरुः सैषः श्री ङ्कूकेन्द्रसरस्वती।।

ஶ்ரீ காஞ்சீ நகரீ காமகோடி பீடாதிப: ப்ரபு:।
ஜீயாத் ஜகத்குரு: ஸைஷ: ஶ்ரீ மூகேந்த்ரஸரஸ்வதீ।।

ஸ்ரீ காஞ்சிநகர காமகோடி பீடாதிபதியும் பிரபுவும், ஜகத்குருவுமான அந்த ஸ்ரீ மூகேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகள், ஸர்வோத்க்ருஷ்டராக விளங்கவேண்டும்.

****

स्तुति शतकम्

ஸ்துதி ஶதகம்

पाण्डित्यं परमेश्वरि स्तुतिविधौ नैवाश्रयन्ते गिरां
वैरिञ्चान्यपि गुम्फनानि विगलद्गर्वाणि शर्वाणि ते।
स्तोतुं त्वां परिफुल्लनीलनलिनश्यामाक्षि कामाक्षि मां
वाचालीकुरुते तथापि नितरां त्वत्पादसेवादरः॥१॥

பாண்டித்யம் பரமேச்வரி ஸ்துதி விதௌ நைவாச்ரயந்தே கிராம்
வைரிஞ்சாந்யபி கும்பநாநி விகலத் கர்வாணி சர்வாணி தே।
ஸ்தோதும் த்வாம் பரிபுல்ல நீல நலின ஶ்யாமாக்ஷி! காமாக்ஷி மாம்
வாசாலீ குருதே ததாபி நிதராம் த்வத்பாத ஸேவாதர:॥1॥

பரமேச்வரி	*பரமேச்வரியாயும்*
சர்வாணி	*பரமசிவபத்நியாயும்*
பரிபுல்ல	*மலர்ந்த*
நீல நளின	*நீலோத்பல புஷ்பம்போல்*
ச்யாம	*கருத்த*
அக்ஷி	*கண்களையுடையவளுமான*
காமாக்ஷி!	*ஹே காமாக்ஷி தேவியே!*
தே	*உன்னுடைய*
ஸ்துதி விதௌ	*ஸ்தோத்ர கார்யத்தில்*
வைரிஞ்சான்யபி	*பிரம்ஹாவினுடையவையான*

கும்பநாநி	கவனங்களும்
கிராம்	வார்த்தைகளுடைய
பாண்டித்யம்	ஸாமர்த்தியத்தை
நைவ ஆச்ரயந்தே	அடையவே இல்லை
விகலத் கர்வாணி	கர்வமிழந்தவைகளாக ஆகிவிட்டன
ததாபி	அப்படியிருந்தும்
த்வத்பாத ஸேவாதர:	உனது திருவடி ஸேவா ருசியானது
த்வாம்	உன்னை
ஸ்தோதும்	ஸ்துதி செய்ய
மாம்	என்னை
நிதராம்	அதிகமாக
வாசாலீ குருதே	வாயாடியாகச் செய்கிறது.

ஏ! காமாக்ஷி தேவியே! பிர்ம்ஹாவிடமுள்ள வேதாதி ஸ்துதிகளும் உன்னை ஸ்தோத்திரம் செய்யும் விஷயத்தில் சக்தியற்று கர்வமிழந்து நிற்கின்றன. அப்படியிருந்தும் உனது திருவடி ஸேவா ருசியானது என்னைத் தூண்டிவிட்டு உனது ஸ்தோத்திரத்தில் வாசாலகனாகச் செய்கிறது.

तापिञ्छस्तबकत्विषे तनुभृतां दारिद्र्यमुद्राद्विषे
संसाराख्यातमोमुषे पुररिपोः वामाङ्कसीमाजुषे।
कम्पातीरमुपेयुषे कवयतां जिह्वाकुटीं जग्मुषे
विश्वत्राणपुषे नमोस्तु सततं तस्मै परञ्ज्योतिषे ।।२।।

தாபிஞ்ச ஸ்தபபகத்விஷே தநுப்ருதாம் தாரித்ரிய
முத்ராத்விஷே
ஸம்ஸாராக்ய தமோமுஷே புரரிபோ: வாமாங்கஸீமா
ஜுஷே।
கம்பாதீர முபேயுஷே கவயதாம் ஜிஹ்வாகுடீம் ஜக்முஷே
விச்வத்ராணபுஷே நமோஸ்து ஸததம் தஸ்மை
பரம்ஜ்யோதிஷே॥2॥

தாபிஞ்ச ஸ்தபகத்விஷே	தாபிஞ்சமென்ற காசாம்பூவின்கொத்துக்கு ஸமமான காந்தியுள்ளதும்
தநுப்ருதாம்	பிராணிகளுடைய
தாரித்ரியம்	ஏழ்மைத்தனமாகிற
முத்ரா	அடையாளத்திற்கு
த்விஷே	எதிரியாயிருப்பதும்
ஸம்ஸாராக்ய	ஸம்ஸாரமென்கிற
தமோமுஷே	இருளைப்போக்குகிறதும்
புரரிபோ:	புர சத்ருவான சிவனுடைய
வாமாங்கஸீமா	இடது பக்கமாகிற இடத்தை
ஜுஷே	அடைந்திருப்பதும்
கம்பாதீரம்	கம்பா நதிக்கரையை
உபேயுஷே	அடைந்துள்ளதும்
கவயதாம்	கவனம் செய்கிறவர்களுடைய
ஜிஹ்வாகுடீம்	நாக்குப் பிரதேசத்தை
ஜக்முஷே	அடைவதும்
விச்வ-த்ராணபுஷே	உலக ரக்ஷணத்தை விருத்தி செய்கிறதுமான

தஸ்மை	அந்த
பரம்ஜ்யோதிஷே	உயர்ந்த ஒளியான காமாக்ஷியாகிற தேஜஸ்ஸின் பொருட்டு
ஸததம்	எப்போதும்
நமோஸ்து	நமஸ்காரமிருக்கட்டும்

தாபிஞ்சப்பூங்கொத்தின் காந்திபோன்றதும், ஏழைத் தனத்தையொழித்து ஸம்ஸார இருளை நீக்குகிறதும், பரமசிவனின் இடது மடியில் வஸிப்பதும், கம்பாதீரத்திலுள்ளதும், கவிகளின் நாக்குகளில் விஜயம் செய்வதும், ஜகத்ரக்ஷணத்தைச் செய்வதுமான அந்த பரஜ்யோதிஸ்ஸுக்கு எப்போதும் நமஸ்காரம்.

ये संध्यारुणयन्ति शंकरजटाकान्तारचन्द्रार्भकं
सिन्दूरन्ति च ये पुरंदरवधूसीमन्तसीमान्तरे।
पुण्यं ये परिपक्वयन्ति भजतां काञ्चीपुरे माममि
पायासुः परमेश्वरप्रणयिनीपादोद्भवाः पांसवः॥३॥

யே ஸந்த்யாருணயந்தி சங்கரஜடா காந்தார சந்திரார்பகம்
ஸிந்தூரந்தி ச யே புரந்தரவதூ ஸீமந்த ஸீமாந்தரே।
புண்யம் யே பரிபக்வயந்தி பஜதாம் காஞ்சீபுரே மாமமி
பாயாஸு: பரமேச்வர ப்ரணயிநீ பாதோத்பவா: பாம்ஸவ:॥

சங்கரஜடா	சிவனுடைய ஜடையாகிற
காந்தார சந்திரார்ப்பகம்	காட்டிலுள்ள சந்திரனாகிற குழந்தையை
யே	எந்த (பாத தூளிகள்)
ஸந்த்யாருணயந்தி	ஸந்தியா கால சிவப்பு நிறமுள்ளதாகச்

	செய்கின்றனவோ
யே	எந்த(பாத தூளிகள்)
புரந்தரவதூ	இந்திர பத்தினியின்
ஸீமந்த ஸீமாந்தரே	கேச மத்ய வகுடின் நடுவில்
ஸிந்தூரந்தி	ஸிந்தூரம்போல் விளங்குகின்றனவோ
யே	எந்த தூளிகள்
காஞ்சீபுரே பஜதாம்	காஞ்சியை ஆச்ரிதர்களுடைய
புண்யம்	க்ஷேமத்தை
பரிபக்வயந்தி	பரிபக்வமடையச் செய்கின்றனவோ
தே	அப்படிப்பட்ட
பரமேச்வரப்ரணயிநீ	பரமசிவன் பத்தினியான காமாக்ஷியினுடைய
பாதோத்பவா:	திருவடிகளில் உண்டான
பாம்ஸவ:	தூளிகள்
மாமபி	என்னையும்
பாயாஸு:	காப்பாற்றட்டும்.

காமாக்ஷி தேவியின் பாததூளி ஸம்பந்தத்தால் சிவ பிரான் ஜடாவாஸியான சந்திரனும் சிவப்பு நிறமாகிறான். இந்திராணியின் சிரஸ்ஸிலுள்ள தலை வகுடு இந்த பாததூளியால் ஸிந்தூரம் தரிப்பது போலாகிறது. காஞ்சியை அடைந்தவர்களுடைய க்ஷேமத்தை இந்த பாத தூளி பரிபக்வமடையச் செய்கிறது. அத்தகைய தூளிகள் என்னையும் ரக்ஷிக்க வேணும்.

कामाडम्बरपूरया शशिरुचा कम्रस्मितानां त्विषा
कामारेरनुरागसिन्धुमधिकं कल्लोलितं तन्वती।
कामाक्षीति समस्तसज्जननुता कल्याणदात्री नृणां
कारुण्याकुलमानसा भगवती कम्पातटे जृम्भते।।४।।

காமாடம்பர பூரயா சசிருசா கம்ரஸ்மிதாநாம் த்விஷா
காமாரேரநுராக ஸிந்து மதிகம் கல்லோலிதம் தந்வதீ।
காமாக்ஷீதி ஸமஸ்த ஸஜ்ஜநநுதா கல்யாணதாத்ரீ நிருணாம்
காருண்யாகுல மானஸா பகவதீ கம்பாதடே ஜ்ரும்பதே।।4।।

காமாடம்பர பூரயா	*மன்மத விலாஸத்தை விருத்தி செய்கிறவளும்*
சசிருசா	*சந்திரன் போன்ற காந்தியுள்ள*
கம்ரஸ்மிதாநாம்	*புன் சிரிப்புக்களுடைய*
ருசா	*ஒளியால்*
காமாரே:	*காமசத்ருவான பகவானுடைய*
அநுராக ஸிந்தும்	*ஆசையாகிற ஸமுத்திரத்தை*
கல்லோலிதம் குர்வதீ	*அலைக் கொண்டதாகச் செய்கிறவளும்*
காமாக்ஷீதி	*காமாக்ஷியென்கிற பெயரால்*
ஸஜ்ஜநநுதா	*பெரியோர்களால் ஸ்துதிக்கப்பட்டவளும்*
நிருணாம்	*மனிதர்களுக்கு*
கல்யாணதாத்ரீ	*க்ஷேமத்தை அளிப்பவளும்*
காருண்யாகுல மானஸா	*கருணையால் நிறைந்த மனதுடையவளுமான*

பகவதீ	ஷட்குண பூர்ணையான, (அந்த) காமாக்ஷிதேவீ
கம்பாதடே	கம்பை நதிக்கரையில்
ஜ்ரும்பதே	களிப்புடன் விளங்குகிறாள்

தன்னுடைய அழகிய சந்திர ஒளிபோன்ற மந்த ஸ்மிதத்தால் பரமசிவனுடைய அநுராகத்தை விருத்தி செய்கிறவளும், ஜனங்களுக்கு க்ஷேமத்தையே அளித்து கருணை நிறைந்த மனதுடன் காமாக்ஷியென்ற பெயரால் பெரியோர்களால் துதிக்கப்பட்ட அந்த தேவியானவள் கம்பா தடத்தில் விளங்குகிறாள்.

कामाक्षीणपराक्रमप्रकटनं संभावयन्ती दृशा
श्यामा क्षीरसहोदरस्मितरुचिप्रक्षालिताशान्तरा।
वामाक्षीजनमौलिभूषणमणिर्वाचां परा देवता
कामाक्षीति विभाति कापि करुणा कम्पातटिन्यास्तटे।।५।।

காமாக்ஷீண பராக்ரமப்ரகடநம் ஸம்பாவயந்தீ த்ருஸா
ஸ்யாமா க்ஷீரஸஹோதரஸ்மிதருசி ப்ரக்ஷாலிதாஸாந்தரா।
வாமாக்ஷீஜநமௌலி பூஷணமணிர்வாசாம் பராதேவதா
காமாக்ஷீதி விபாதி காபி கருணா கம்பா தடிந்யா
ஸ்தடே।।5

த்ருஸா	தனது கண்ணால்
காமாக்ஷீண பராக்ரம	மன்மதனுடைய குறைவற்றதான பராக்ரமத்தின் விலாஸத்தை
ஸம்பாவயந்தி	மதிப்பவளாயும், (யுவதியாயும்)
க்ஷீரஸஹோதரஸ்மிதருசி	பாலுக்கு ஸமமான புன்சிரிப்பின் காந்தியால்

ப்ரக்ஷாலிதா ஸாந்தரா	பரிசுத்த மாக்கப்பட்ட திசைகளையுடையவளாயும்
வாமாக்ஷீஜந	கண்ணழகுள்ள ஸ்திரீகளின்
மௌலி பூஷணமணி:	சிரஸ்ஸின் அலங்காரமணி போலிருப்பவளும்
வாசாம்	வேதாதிவாக்குகளுக்கு
பராதேவதா	உத்கிருஷ்டதேவதையா-யுமிருக்கிற
காமாக்ஷீதி	காமாக்ஷியென்கிற
காபி	ஒரு
கருணா	கருணாமூர்த்தியானது
கம்பா தடிந்யா:	கம்பா நதிக்கரையில்
விபாதி	விளங்குகிறது

தனது கண் விலாஸத்தினால் மன்மத சக்தியை வெளிப்படுத்தி வருகிறவளும், தனது வெளுப்பான புன்சிரிப்பின் காந்தியால் திக்குகளை பரிசுத்தி செய்கிறவளும், கண்ணழகிகளின் சிரோபூஷணம்போல் விளங்குகிறவளும் வேதப்ரதிபாத்யையாயுமுள்ள கருணா மூர்த்தியானது காமாக்ஷி என்ற பெயரால் கம்பா நதிக்கரையில் ப்ரகாசிக்கிறது.

श्यामा काचन चन्द्रिकात्रिभुवने पुण्यात्मनामानने
सीमाशून्यकवित्ववर्षजननी या कापि कादम्बिनी।
मारारातिमनोविमोहनविधौ काचित्तम: कन्दली
कामाक्ष्या: करुणाकटाक्षलहरी कामाय मे कल्पताम्।।६।।

ச்யாமா காசன சந்த்ரிகா த்ரி புவநே புண்யாத்மநா மாநநே
ஸீமாசூன்ய கவித்வவர்ஷ ஜநநீ யா காபி காதம்பினீ।
மாராராதி மநோ விமோஹநவிதௌ காசித்தம: கந்தலீ
காமாக்ஷ்யா: கருணாகடாக்ஷலஹரீ காமாய மே
கல்பதாம்।।

காமாக்ஷ்யா:	*காமாக்ஷியுடைய*
கருணா கடாக்ஷலஹரீ	*கருணை நிறைந்த கடாக்ஷ வரிசையானது*
த்ரிபுவநே	*மூன்று உலகில்*
ச்யாமா	*கருத்த*
சந்திரிகா	*நிலாபோல் இருக்கிறது*
புண்யாத்மநாம்	*ஸுக்ருதம் செய்த கவிகளின்*
ஆநநே	*வாக்கில்*
ஸீமாசூன்ய	*எல்லையற்றதான*
கவித்வ	*கவிதா சக்தியான*
வர்ஷ ஜநநீ	*மழையை உண்டு பண்ணுவதில்*
யா காபி	*ஒரு*
காதம்பினீ	*மேக ஸமூஹம் போலிருக்கிறது*
மாராராதி	*மன்மத சத்ருவான சிவனுடைய*
மனோ விமோஹநவிதௌ	*மனதை மோஹிக்கச்செய்யும் கார்யத்தில்*
காசித்	*ஒரு*
தம: கந்தலீ	*இருள் ஸமூஹம்போலு மிருக்கிறது.(அப்படிப்பட்ட கடாக்ஷமானது)*
மே	*எனக்கும்*

காமாய	இஷ்ட ஸித்திக்காக
கல்பதாம்	உதவ வேண்டும்

காமாக்ஷியின் கடாக்ஷ மஹிமையானது மிகுந்த சக்தி வாய்ந்தது. அது மூன்று உலகிலும், கருத்த நிலாபோலிருக்கிறது. கவிகளின் கவிதா சக்தி மழையை வர்ஷிப்பதில் மேகஸமூஹம் போலிருக்கிறது. மன்மத சத்ருவான பகவானுடைய மனதை மோஹிக்கச் செய்வதில் இருள் கூட்டம் போலிருக்கிறது. இவ்வளவு சக்தி பொருந்திய கடாக்ஷமானது எனது இஷ்டத்தையும் பூர்த்தி செய்ய அருளட்டும்.

प्रौढध्वान्तकदम्बके कुमुदिनीपुण्याङ्कुरं दर्शयन्–
ज्योत्स्नासंगमनेऽपि कोकमिथुनं मिश्रं समुद्भावयन्।
कालिन्दीलहरीदशां प्रकटयन्कम्रां नभस्यद्भुतां
कश्चिन्नेत्रमहोत्सवो विजयते काञ्चीपुरे शूलिनः।।७।।

ப்ரௌடத்வாந்த கதம்பகே குமுதிநீ புண்யாங்குரம் தர்சயந்
ஜ்யோத்ஸ்நா ஸங்கமநேऽபி கோகமிதுனம் மிஸ்ரம் ஸமுத்பாவயந்।
காலிந்தீலஹரீதஸாம் ப்ரகடயந் கம்ராம் நபஸ்யத்புதாம்
கஸ்சிந்நேத்ர மஹோத்ஸவோ விஜயதே காஞ்சீபுரே ஸூலிந:।।

ப்ரௌட	அடர்ந்த
த்வாந்த கதம்பகே	இருட்டு ஸமூஹம்போன்ற கூந்தலில்

குமுதினி புண்யாங்குரம்	குமுத புஷ்பத்தின் புண்யமான சந்திரனுடைய கிரணத்தை (அலங்கார புஷ்பத்தை)
தர்சயன்	காட்டிக்கொண்டும்
ஜ்யோத்ஸ்நா ஸங்கமநேபி	சந்திரிகை போன்று விளங்குகிற புன்சிரிப்பின் சேர்க்கையில்
கோக மிதுனம்	சக்கிரவாக பக்ஷியின் (கண்களின்) மிதுனத்தை
மிச்ரம்	சேர்த்து
ஸமுத்பாவயன்	காட்டிக்கொண்டும்
நபஸி	ஆகாசம் போன்ற இடுப்பின்மேல்
கம்ராம்	மெலிதான
அத்புதாம்	அழகிய
காலிந்தீ லஹரீதசாம்	யமுனை பிரவாஹத்தின், (ரோம ராஜியின்)
தசாம்	இருப்பதை
ப்ரகடயன்	காட்டிக்கொண்டும்
சூலிந:	சூலதாரியான சிவனுடைய
கஸ்சித்	ஒரு
நேத்ர மஹோத்ஸவோ	பெரிய நேத்ராந்தமானது, (காமாக்ஷி!)
காஞ்சீபுரே	காஞ்சியில்
விஜயதே	விளங்குகிறது

காமாக்ஷி தேவியின் கருத்த கூந்தலில் உள்ள அலங்கார புஷ்பமானது மேகத்தின் நடுவிலுள்ள சந்திரன்போல் இருக்கிறது. அவளுடைய புன்சிரிப்பாகிய நிலாவில்

இரண்டு கருத்த கண்களின் சோபையானது சக்ரவாகபக்ஷி மிதுனம் போல் விளங்குகிறது (அல்லது சக்ரவாக பக்ஷி போல் விளங்குபவை ஸ்தனங்கள் என்றும் சொல்லலாம்.) ஆகாசம் போல் ஸூக்ஷ்மமான இடுப்பிலிருந்து உரோமராஜியானது யமுனாநதி பிரவஹிப்பது போல் விளங்குகிறது. இவ்வளவு அதிகமான சோபைகளுடன் கூடிய காமாக்ஷி தேவியின் விலாஸங்கள் சூலபாணியான பகவானுக்கு நேத்ரானந்தமாக காஞ்சியில் விளங்குகிறது.

तन्द्राहीन तमालनीलसुषमै: तारुण्यलीला गृहै:
तारानाथकिशोरलाञ्छितकचै: ताम्रारविन्देक्षणै:।
मात: संश्रयतां मनो मनसिजप्रागल्भ्यनाडिन्धमै:
कम्पातीरचरैर्धनस्तनभरै: पुण्याङ्कुरै: शाङ्करै:॥८॥

தந்த்ராஹீந தமால நீல ஸுஷமை: தாருண்ய லீலாக்ருஹை,
தாராநாத கிசோர லாஞ்சித கசை: தாம்ரார விந்தேக்ஷணை:।
மாத: ஸம்ச்ரயதாம் மநோ மநஸிஜ ப்ராகல்ப்ய நாடிந்தமை:
கம்பாதீர சரை: கநஸ்தநபரை: புண்யாங்குரை: சாங்கரை:॥

மாத:	*தாயே!*
தந்த்ராஹீந	*வதங்காததான*
தமால	*தமால புஷ்பம்போல்*
நீல ஸுஷமை:	*நீலக்காந்தியோடு கூடியவையும்*
தாருண்ய லீலாக்ருஹை:	*யௌவனத்தின் விலாஸக்ருஹங்களும்*
தாராநாத கிசோர	*இளம் சந்திரனாலே*

லாஞ்சித கசை:	பிராசிக்கிற கூந்தல்களுடன் கூடியவைகளும்
தாம்ரார விந்தேக்ஷணை:	செந்தாமரைபோன்ற கண்களுள்ளவைகளும்
மனஸிஜப்ராகல்ப்ய	மன்மதனுடைய கௌரவத்திற்கு
நாடிம்தமை:	புஷ்டியை கொடுப்பவைகளும்
கனஸ்தந பரை:	கடினஸதனங்களுடன் கூடியவைகளுமான
சாங்கரை:	சங்கரனுடைய
புண்யாங்குரை:	அதிர்ஷ்ட அங்குரங்களுடன்
மன:	எனது மனஸானது
ஸம்ச்ரயதாம்	ஒன்றுபடட்டும்

வாடாத தமால புஷ்பங்களின் காந்தியுடன் கூடியவைகளும், யௌவனத்தின் விலாஸபவனம் போன்றவைகளும், பாலசந்திரனுடைய சோபையால் விளங்குகிற கூந்தலை உடையவைகளும், சிவந்த தாமரை போன்ற நேத்ரங்களுள்ளவைகளும், மன்மத விலாஸத்தை விருத்தி செய்கிறவைகளுமான ஸ்ரீ சங்கரனுடைய புண்யங்கள் போன்ற ஸ்ரீ காமாக்ஷியிடம் எனது மனம் ஒன்றுபடட்டும்.

नित्यं निश्चलतामुपेत्य मरुतां रक्षाविधिं पुष्णती
तेज: सञ्चयपाटवेन किरणानुष्णद्युतेर्मुष्णती।
काञ्चीमध्यगतापि दीप्तिजननी विश्वान्तरे जृम्भते
काचिच्चित्रमहो स्मृतापि तमसां निर्वापिका दीपिका।।९।।

நித்யம் நிஶ்சலதாமுபேத்ய மருதாம் ரக்ஷாவிதிம் புஷ்ணதீ।
தேஜஸ்ஸஞ்சய பாடவேந கிரணாநுஷ்ண த்யுதேர் முஷ்ணதீ।
காஞ்சீமத்யகதாபி தீப்திஜனனீ விச்வாந்தரே ஜ்ரும்பதே
காசித்சித்ரமஹோ ஸம்ருதாபி தமஸாம் நிர்வாபிகா தீபிகா॥9॥

நித்யம்	*எப்போதும்*
நிச்சலதாம்	*அசைவில்லாத தன்மையை*
உபேத்ய	*அடைந்தும்*
மருதாம்	*மருத்தேவதைகளுக்கு (காற்றுக்கு)*
ரக்ஷாவிதிம்	*ரக்ஷணத்தை*
புஷ்ணதீ	*அதிகரிப்பதாயும்*
தேஜஸ்ஸஞ்சய பாடவேந	*தனது தேஜஸ் ஸமூஹ ஸாமர்த்தியத்தால்*
உஷ்ணத்யுதே:	*உஷ்ணகிரணனான ஸூர்யனுடைய*
கிரணாந்	*கிரணங்களை*
முஷ்ணதீ	*மறைப்பதும்*
காஞ்சீ-மத்யகதாபி	*காஞ்சீபுர மத்தியிலிருந்தாலும்*
விச்வாந்தரே	*உலக முழுவதிலும்*
தீப்தி ஜநநீ	*பிரகாசத்தை உண்டுபண்ணுகிறதும்*
ஸ்ம்ருதாபி	*நினைக்கப்பட்டவுடனேயே*
தமஸாம்	*இருளுக்கு*

நிர்வாபிகா	*சமனம் செய்கிறதாயுமிருக்கிற*
காசித்	*ஒரு*
சித்ரம்	*அதிசயமான*
தீபிகா	*விளக்கானது*
ஜ்ரும்பதே	*உயர்ந்து விளங்குகிறது*
அஹோ	*ஆச்சர்யம்!*

காமாக்ஷி தேவியை ஓர் விளக்காக உத்ப்ரேக்ஷை செய்து கவி ஸ்துதிக்கிறார். இந்த விளக்கு எப்போதும் அசைவற்றது. மருத்துக்களை அதாவது காற்றை போஷிக்கிறது. ஸூர்ய தேஜஸ்ஸையும் மறைக்கிறது. காஞ்சியில் (ஓட்டியாணத்தில்) இருந்தாலும் உலகம் முழுவதும் ஒளியைப்பரப்புகிறது. நினைத்த மாத்திரத்திலேயே இருளைப் போக்குகிறது. ஸாதாரண தீபம் போலின்றி அதிசய தீபமாக காமாக்ஷி தேவி விளங்குகிறாள். ஆச்சர்யம்!

कान्तैः केशरुचां चयैर्भ्रमरितं मन्दस्मितैः पुष्पितं
कान्त्या पल्लवितं पदाम्बुरुहयोर्नेत्रत्विषा पत्रितम्।
कम्पातीरवनान्तरं विदधती कल्याणजन्मस्थली
काञ्चीमध्यमहामणिर्विजयते काचित्कृपाकन्दली॥१०॥

காந்தை: கேபருசாம் சயை: ப்ரமரிதம் மந்த ஸ்மிதை: புஷ்பிதம்
காந்த்யா பல்லவிதம் பதாம்புருஹாயோ: நேத்ரத்விஷா பத்ரிதம்!
கம்பாதீரவநாந்தரம் விதததீ கல்யாண ஜந்ம ஸ்தலீ
காஞ்சீ மத்ய மஹாமணி: விஜயதே காசித் க்ருபாகந்தலீ॥

கம்பாதீர வநாந்தரம்	கம்பை நதிக்கரையின் வநப்பிரதேசத்தை
காந்தை:	அழகிய
கேஶருசாம் சயை:	கேசங்களின் ஸமூஹ காந்திகளால்
ப்ரமரிதம்	வண்டுகளுடன் கூடியதுபோல்
விததீ	செய்கிறவளாயும்
மந்த ஸ்மிதை:	தனது புன்சிரிப்புக்களால்
புஷ்பிதம்	புஷ்பித்ததுபோல் செய்கிறவர்களும்
பதாம்புருஹயோ:	பாதபத்மங்களின்
காந்த்யா	சோபையால்
பல்லவிதம்	துளிர்த்தது போலவும்
நேத்ரத்விஷா	கண்ணின் காந்தியால்
பத்ரிதம்	இலையுள்ளது போலவும் செய்கிறவளுமான
காசித்	ஓர்
கிருபாகந்தலீ	தாயாநிதியான
கல்யாண ஜந்மஸ்தளீ	மங்களங்களுக்கு உற்பத்தி ஸ்தலமாகிய
காஞ்சீ மத்ய மஹாமணி:	காஞ்சீ மண்டலத்தின் (ஓட்டியாணத்தின்) நடுரத்நமாக காமாக்ஷி தேவி
விஜயதே	ப்ரகாசிக்கிறாள்

கருணாநிதியும் காஞ்சீ மத்யரத்நமாயும் மங்கள ஸ்தான மாயுமிருக்கிற காமாக்ஷிதேவி தனது கேசங்களின் சோபையால் கம்பா தீர உத்யான வநத்தை வண்டுகள்

நிறைந்தது போலவும் புன்சிரிப்பால் புஷ்பித்தது போல வும், பாதகாந்தியால் துளிர்விட்டது போலவும் கண் சோபையால் இலையுள்ளது போலவும் செய்துகொண்டு விளங்குகிறாள்.

राकाचन्द्रसमानकान्तिवदना नाकाधिराजस्तुता
मूकानामपि कुर्वती सुरधुनी नीकाशवाग्वैभवम्।
श्रीकाञ्चीनगरीविहाररसिका शोकापहन्त्री सतां
एका पुण्यपरम्परा पशुपतेराकारिणी राजते।।११।।

ராகாசந்த்ர ஸமாந காந்தி வதநா நாகாதிராஜ ஸ்துதா
மூகாநாமபி குர்வதீ ஸுரதுநீ நீகாஶ வாக்வைபவம்।
ஸ்ரீ காஞ்சீ நகரீ விஹாரரஸிகா ஶோகாபஹந்த்ரீ ஸதாம்
ஏகா புண்ய பரம்பரா பஶுபதே: ஆகாரிணீ ராஜதே।।11।।

ராகாசந்த்ர ஸமாந காந்திவதநா	பௌர்ணிமா சந்திரனுக்கு ஸமான சோபையுள்ளமுகமுள்ளவளும்
நாகாதிராஜ ஸ்துதா	ஸ்வர்க்கலோகாதிபனான இந்திரனால் ஸ்துதிக்கப்பட்டவளும்
மூகாநாமபி	ஊமையர்களுக்குக்கூட
ஸுரதுநீ	கங்கா பிரவாஹத்துக்கு
நீகாஶ	ஸமமான
வாக்வைபவம்	பேச்சின் மஹிமையை
குர்வதீ	கொடுப்பவளாயும்
ஸ்ரீ காஞ்சீ நகரீ விஹாரரஸிகா	காஞ்சீ நகர விலாஸத்தில் ரஸிகையாயும்
ஸதாம்	ஸத்துக்கு
ஶோகாபஹந்தரீ	துக்கத்தை

	போக்குகிறவளாயுமிருக்கிற
ஏகா	ஒரு
பஶுபதே:	பரமேச்வரனுடைய
ஆகாரிணீ	மூர்த்தியுள்ளதான
புண்யபரம்பரா	புண்ய ஸமூஹம் போன்றவளாக காமாக்ஷியானவள்
ராஜதே	விளங்குகிறாள்

பரமேச்வரனுடைய புண்யமே மூர்த்தீகரித்து வந்ததுபோல் தோன்றுகின்ற ஸ்ரீ காமாக்ஷி தேவி, பௌர்ணமி சந்திரன் போன்ற முக தேஜஸ்ஸுடன், இந்திராதிகளால் துதிக்கப்பட்டு, ஊமையர்களுக்குக்கூட அபரிமிதமான வாக்விலாஸத்தைக் கொடுத்துக்கொண்டு காஞ்சீபுரத்தில் விஹரணம் செய்து ஸத்துக்களின் துக்கத் தை விலக்குகிறவளாயும் பிரகாசிக்கிறாள்.

जाता शीतलशैलत: सुकृतिनां दृश्या परं देहिनां
लोकानां क्षणमात्रसंस्मरणत: संतापविच्छेदिनी।
आश्चर्यम् बहुखेलनं वितनुते नैश्चल्यमाबिभ्रती
कम्पायास्तटसीम्नि कापि तटिनी कारुण्य पाथोमयी।।१२।।

ஜாதா ஶீதலஶைலத: ஸுக்ருதிநாம் த்ருஶ்யா பரம் தேஹிநாம்
லோகாநாம் க்ஷணமாத்ர ஸம்ஸ்மரணத: ஸந்தாப விச்சேதிநீ।
ஆஶ்சர்யம் பஹுகேலநம் விதநுதே நைஶ்சல்யமா பிப்ரதீ
கம்பாயாஸ்தடஸீம்நி காபி தடிநீ காருண்ய பாதோமயீ।।12।।

சீதல சைலத:	பனிமலையிலிருந்து
ஜாதா	உண்டானதும்
ஸுக்ருதிநாம்	புண்யசாலிகளான
தேஹிநாம் பரம்	மனிதர்களுக்கு மட்டும்
த்ருஸ்யா	பாக்கத்தக்கதும்
க்ஷணமாத்ர ஸம்ஸ்மரணத:	க்ஷணகாலம் த்யானிப்பதால் மாத்திரமே
லோகாநாம்	ஜனங்களுடைய
ஸந்தாப விச்சேதிநீ	தாபத்தை நீக்குவதுமான
காபி	ஒரு
தடிநீ	நதியானது (காமாக்ஷி)
காருண்ய பாதோமயீ	தயையாகிற ஜலத்தால் நிறைந்து
நைஸ்சல்யம்	அசைவற்ற தன்மையை
ஆபிப்ரதி	அடைந்து
கம்பாயாஸ்தடஸீம்நி	கம்பா நதிக்கரையில்
பஹுகேலநம்	பலவித லீலைகளை
விதநுதே	செய்கிறது
ஆஸ்சர்யம்	ஆச்சர்யம்

காமாக்ஷி தேவியை நதிக்கு ஒப்பிட்டு வர்ணிக்கப் படுகிறது. இந்த நதியானது ஹிமவத் பர்வதத்தில் உண்டாகிறது. புண்யசாலிகளுக்கே இது தென்படும். த்யானித்த மாத்திரத்திலேயே தாபத்தைப்போக்கும், கருணையென்ற ஜலத்தால் நிறம்பியது. இது அசைவற்றிருந்தும் அநேகவித லீலைகளைச் செய்வது ஆச்சரியமாகிறது.

ऐक्यं येन विरच्यते हरतनौ दम्भावपुंभावयो:
रेखा यत्कचसीम्नि शेखरदशां नैशाकरी गाहते।
औन्नत्यं *परमेति येन स महान्मेनासख: सानुमान्-
कम्पातीरविहारिणा सशरणास्तेनैव धाम्ना वयम्।।१३।।

ஐக்யம் யேந விரச்யதே ஹரதநௌ தம்பாவபும் பாவயோ:
ரேகா யத்கச ஸீம்நி சேகரதசாம் நைஶாகரீ காஹதே।
ஔந்நத்யங் பரமேதி யேந ஸ மஹான் மேநாஸக:
ஸாநுமான்
கம்பாதீர விஹாரிணா ஸஶரணா: தேநைவ தாம்நா
வயம்।।13।।

*मुहुरेति (पाठं)

யேந	*எந்த தேஜஸ்ஸால்*
ஹரதநௌ	*பரமசிவன் சரீரத்தில்*
தம்பாவ பும்பாவயோ:	*ஸ்த்ரீ புமான் தன்மையின்*
ஐக்யம்	*ஒன்று சேர்க்கையானது*
விரச்யதே	*செய்யப்படுகிறதோ*
யத்கச ஸீம்நி	*எந்த தேஜஸ்ஸின் கூந்தலில்*
நைஶாகரீ ரேகா	*சந்திர கலையானது,*
சேகரதசாம்	*சிகரமாயிருக்கும் தன்மையை*
காஹதே	*அடைகிறதோ*
யேந	*எந்த தேஜஸ்ஸால்*
ஸ:	*அந்த*
மேனா ஸக:	*மைனாக மலையின் மித்திரனான*

மஹான் ஸாநுமான்	பெரிய ஹிமாலய மலையும்
பரம்	அதிகமாக
ஔந்நத்யம்	உயர்வை
ஏதி	அடைகிறானோ
தேந	அப்படிப்பட்ட
கம்பா தீரவிஹாரிணா	கம்பா நதிக்கரையில் விலாஸிக்கிற
தாம் நைவ	தேஜஸ்ஸாலேயே
வயம்	நாம்
ஸஶரணா:	ரக்ஷகனுள்ளவராகிறோம்

கம்பாதீர விஹாரியான ஒரு தேஜஸ்ஸான காமாக்ஷி தேவியால் நாம் ரக்ஷகனுள்ளவனாக ஆகிறோம். எந்த தேஜஸ்ஸானது தனது மஹிமையால் பரமசிவன் சரீரத்தில் ஸ்திரிபுமான் ஒன்றாகச் சேர்ந்திருக்கிறதோ, எந்த தேஜஸ்ஸின் கூந்தலில் சந்திரரேகையானது சிகரம் போல் விளங்குகிறதோ, மைனாக ஸகாவான ஹிமாலயமும் எந்த தேஜஸ்ஸால் மிகவும் உந்நத நிலைமையை அடைந்ததோ அத்தகைய தேஜஸ்ஸாகிறது காமாக்ஷி தேவியென்று கருத்து, காமாக்ஷியை ஒரு கிரஹத்துக்கு ஒப்பாகச் சொல்லி சிலேஷையும் காட்டப்படுகிறது.

अक्ष्णोश्च स्थनयो: श्रिया श्रवणयोर्बाह्वोश्च मूलं स्पृशन्–
उत्तंसेन मुखेन च प्रतिदिनं द्रुह्यन्पयोजन्मने।
माधुर्येण गिरां गतेन मृदुना हंसाङ्गनां ह्रेपयन्–
काञ्चीसीम्निचकास्ति कोऽपि कवितासंतानबीजाङ्कुर:।।१४।।

அக்ஷ்ணோஸ்ச ஸ்தநயோ: ஸ்ரியா ஸ்ரவணயோ:
பாஹ்வோஸ்ச மூலம் ஸ்ப்ருசன்
உக்தம்ஸேன முகேந ச ப்ரதிதினம் த்ருஹ்யன்
பயோஜந்மநே।
மாதுர்யேண கிராம் கதேந ம்ருதுநா ஹம்ஸாங்கநாம்
ஹ்ரேபயன்
காஞ்சீ ஸீம்நி சகாஸ்தி கோऽபி கவிதாஸந்தான
பீஜாங்குர:॥14॥

அக்ஷ்ணோ:	*கண்களுடைய*
ஶ்ரியா	*காந்தியால்*
ச்ரவணயோ:	*காதுகளுடைய*
மூலம்	*மூலத்தை*
ஸ்ப்ருஸந்	*தொடுவதாயும்*
ஸ்தநயோ:	*ஸ்தனங்களுடைய*
ஸ்ரியா	*சோபையால்*
பாஹ்வோ:	*கைகளுடைய*
மூலம்	*அடியை*
ஸ்ப்ருசந்	*தொட்டுக்கொண்டும்*
உத்தம்ஸேன	*சிரோ பூஷணத்தாலும்*
முகேந	*முகத்தாலும்*
பயோஜன்மநே	*தாமரைக்கு*
பிரதிதினம் த்ருஹ்யன்	*கெடுதி செய்தும்*
கிராம்	*வார்த்தைகளுடைய*
மாதுர்யேண	*இனிமையாலும்*
ம்ருதுநா	*மிருதுவான*
கதேந	*நடையாலும்*

ஹம்ஸாங்கநாம்	*ஹம்ஸ ஸ்திரீயை*
ஹ்ரேபயன்	*லஜ்ஜைப்படச் செய்தும்*
கவிதா-ஸந்தாந-பீஜாங்குர:	*கவிதையாகிற ஸந்தானத்திற்கு விதைமுளைபோல் இருக்கிற*
கோऽபி	*ஒரு வஸ்துவானது, (காமாக்ஷி)*
காஞ்சீ ஸீம்நி	*காஞ்சிக் கரையில்*
சகாஸ்தி	*பிரகாசிக்கிறது*

காது வரையில் பரவியுள்ள கண் அழகுடனும், தோள் வரையில் வியாபித்துள்ள ஸ்தன சோபையுடனும், முகத்தாலும், சிரஸ் மணியாலும், தாமரையைக் கீழ்ப்படுத்தும் லக்ஷணத்துடனும், வாக்மாதுர்யம், நடையழகு இவைகளால் ஸ்திரீ ஹம்ஸத்தை வெட்கப்படச் செய்தும் காஞ்சீபுரத்தில் ஒரு உயர்ந்த வஸ்து விளங்குகிறது. அது கவித்வஸந்தானத்திற்கு விதை போன்றுமிருக்கிறது.

खण्डं चान्द्रमसं वतंसमनिशं काञ्चीपुरे खेलनं
कालायश्छवितस्करीं तनुरुचिं कर्णेजपे लोचने।
तारुण्योष्णनखंपचंस्तनभरं जङ्घास्पृशं कुन्तलं
भाग्यं देशिकसञ्चितं मम कदा संपादयेदम्बिके।।१५।।

கண்டம் சாந்த்ரமஸம் வதம்ஸமநிஶம் காஞ்சீபுரே
கேலநம்
காலாயஶ்சவிதஸ்கரீம் தநுருசிம் கர்ணேஜபே லோசநே।
தாருண்யோஷ்ணநகம்பசம்ஸ்தநபரம் ஜங்காஸ்ப்ருஶம்
குந்தலம்
பாக்யம் தேஶிகஸஞ்சிதம் மம கதா ஸம்பாதயேதம்பிகே।।

அம்பிகே	தாயான காமாக்ஷியே!
மம	எனக்கு
சாந்த்ரமஸம்	சந்திரனுடையதான
கண்டம்	துண்டமானது
அநிஶம்	எப்போதும்
வதம்ஸம்	ஶிரோபூஷணமாயும்
காஞ்சீபுரே	காஞ்சீ நகரில்
கேலநம்	விளையாட்டும்
காலாயஶ்ச விதஸ்கரீம்	கருத்த இரும்பின் சோபையை அபகரிப்பதான
தநுருசிம்	சரீர காந்தியையும்
கர்ணேஜபே	காதுகளுடன் நெருங்கிப் பேசுகிற
லோசநே	கண்களும்
தாருண்யோஷ்ண நகம்பசம்	நகத்தைக்கூட பொசுக்கக் கூடிய சக்தியுள்ள யௌவந மாகிற உஷ்ணத்துடன் கூடிய
ஸ்தநபரம்	ஸ்தநபரமும்
ஜங்காஸ்ப்ருசம்	முழங்காலை ஸ்பர்சிக்கிற
குந்தலம்	கூந்தலும் உள்ள
பாக்யம்	அதிருஷ்டமானது
தேசிக ஸஞ்சிதம்	ஆசார்ய கடாக்ஷத்தால் கிடைத்ததாக
கதா	எப்போது
ஸம்பாதயேத்	ஏற்படுமோ?

கவி இதில் தமக்கு ஸ்ரீ காமாக்ஷி தேவியின் ஸாரூப்ய லாபத்தை பிரார்த்திக்கிறார். சிரஸ்ஸில் சந்திர கலை அலங்காரமும், காஞ்சியில் விஹாரமும், கழுத்தில் சரீர

காந்தியும் காது வரையில் நீண்ட கண்களும், யௌவநத்தால் சோபிக்கிற ஸ்தநபரமும், முழங்கால் வரை நீண்ட தலைமயிரும் உள்ள உருவம் ஏற்படும் பாக்யமானது ஆசார்ய கடாக்ஷத்தால் எப்போது எனக்கு கிடைக்குமோ?

तन्वानं निजकेलिसौधसरणिं नैसर्गिकीणां गिरां
केदारं कविमल्लसूक्तिलहरीसस्यश्रियां शाश्वतम्।
अम्होवञ्चनचुञ्चु किञ्चन भजे काञ्चीपुरीमण्डनं
पर्यायच्छवि पाकशासनमणेः पौष्पेषवं पौरुषम्।।१६।।

தந்வாநம் நிஜகேலி ஸௌத ஸரணிம் நைஸர்க்கிகீணாம் கிராம்
கேதாரம் கவிமல்லஸூக்தி லஹரீ ஸஸ்ய ஶ்ரியாம் ஶாஶ்வதம்।
அம்ஹோ வஞ்சந சுஞ்சு கிஞ்சந பஜே காஞ்சீபுரீ மண்டநம்
பர்யாயச்சவி பாகஶாஸனமணே: பௌஷ்பேஷவம் பௌருஷம்।।16।।

நைஸர்க்கிகீணாம் கிராம்	வேத வாக்குகளை
நிஜகேலி ஸௌதஸரணிம்	தனது விளையாட்டு உப்பரிகை பிரதேசமாக
தந்வாநம்	செய்கிறதாயும்
கவிமல்ல ஸூக்திலஹரீ	கவிச்ரேஷ்டர்களுடைய வாக்பரிவாஹமான
ஸஸ்ய ச்ரியாம்	பயிர் போன்றதற்கு
சாச்வதம்	ஸ்திரமான
கேதாரம்	வயல் போன்றதும்

அம்ஹோவஞ்சன சுஞ்சு	பாபத்தைப் போக்குவதில் ஸமர்த்தமாயும்
பாகஶாஸந மணே:	இந்திர நீல மணிக்கு
பர்யாயச்சவி	ஸமமான காந்தியுள்ளதும்
பௌஷ்பேஷவம்	புஷ்பபாணனான மன்மதனுடைய
பௌருஷம்	பெருமை போன்றதுமான
காஞ்சீபுரீ மண்டநம்	காஞ்சீநகர அலங்காரமாயுள்ள
கிஞ்ச	ஒரு வஸ்துவை
பஜே	சரணமடைகிறேன்

தேவதவாக்குகளின் விளையாட்டு உப்பரிகை போன்றும் கவிதா ஸஸ்யத்திற்கு வயல் போலுள்ளதும், பாபங்களை போக்குவதில் ஸாமர்த்தியமுள்ளதும் இந்திர நீல காந்தி போன்ற தேஜஸ்ஸுள்ளதும் மன்மதனு டைய பெருமை போன்றதுமான காஞ்சீபுரீ அலங்காரமான ஒரு வஸ்துவை சரணமடைகின்றேன்.

आलोके मुखपङ्कजे च दधती सौधाकरीं चातुरीं
चूडालंक्रियमाण पङ्कजवनीवैरागमप्रक्रिया।
मुग्धस्मेरमुखी घनस्तनतटी मूर्छालमध्याश्रिता
काञ्चीसीमनि कामिनी विजयते काचिज्जगन्मोहिनी।।१७।।

ஆலோகே முக பங்கஜே ச தததீ ஸௌதாகரீம் சாதுரீம்
சூடாலங்கிரியமாண பங்கஜவநீவைராகம ப்ரக்ரியா।
முக்த ஸ்மேரமுகீ கனஸ்தனதடீ மூர்ச்சால மத்யாஞ்சிதா
காஞ்சீ ஸீமநி காமிநீ விஜயதே காசித் ஜகந்மோஹிநீ।।17।।

ஆலோகே	பார்வையிலும்
முகபங்கஜே	தாமரை போன்ற முகத்திலும்
ஸௌதாகரீம்	சந்திரனுடையதான
சாதுரீம்	அழகை
ததீ	தரிப்பவளாயும்
சூடாலங்க்ரியமாண	கூந்தலுக்கு அலங்காரமாக்கப்பட்ட
பங்கஜ வநீவைராகமப்ரக்ரியா	தாமரையோடைக்கு எதிரியான சந்திரனுடைய சேர்க்கையை உடையவளாயும்
முக்தஸ்மேரமுகி	அழகாயும் மந்தஸ்மிதமுள்ளதுமான முகமுள்ளவளும்
கனஸ்தனதட	கனமான குசதடமுள்ளவளும்
மூர்ச்சால மத்யாஞ்சிதா	புலப்படாத இடுப்பினால் விளங்குகிறவளுமான
காபி	உயர்ந்த
ஜகந்மோஹினி	ஜகத்தை மோஹிக்கச்செய்கிற
காசித்	ஒரு
காமிநீ	ஸ்திரீயானவள்
காஞ்சி ஸீம்நீ	காஞ்சி எல்லைக்குள்
விஜயதே	விளங்குகிறாள்

பார்வையில் அமிர்தம்போலும், முகத்தில் சந்திரன் போலுமிருக்கிறவளும், சிரஸில் சந்திரனை அலங்கார மாகக்கொண்டவளும் அழகிய புன்சிரிப்புக் கொண்டமுகமுள்ளவளும், கனமான குசதடமுள்ளவளும்,

மிகவும் மெல்லியதான இடுப்பினால் விளங்குகிறவளுமான ஒரு ஸ்திரீ காஞ்சியில் ஜகந்மோஹினியாக விளங்குகிறாள்.

यस्मिन्नम्ब भवत्कटाक्षरजनी मन्देऽपि मन्दस्मित-
ज्योत्स्नासंस्नपिता भवत्यभिमुखी तं प्रत्यहो देहिनम्।
द्राक्षामाक्षिकमाधुरीमदभरव्रीडाकरी वैखरी
कामाक्षि स्वयमातनोत्यभिस्मृतिं वामेक्षणेव क्षणात्।।१८।।

யஸ்மிந்நம்ப! பவத் கடாக்ஷ ரஜநீ மந்தேऽபி மந்தஸ்மித
ஜ்யோத்ஸ்நா ஸம்ஸ்நபிதா பவத்யபிமுகீ தம் ப்ரத்யஹோ தேஹிநம்।
த்ராக்ஷாமாக்ஷிக மாதுரீ மதபர வ்ரீடாகரீ வைகரீ
காமாக்ஷி ஸ்வயமாதநோத்யபி ஸ்ருதிம் வாமேக்ஷணேவ க்ஷணாத்।।18।।

அம்ப!	*காமாக்ஷி!*
யஸ்மிந்	*எந்த*
மந்தேऽபி	*முட்டாளிடமும்*
பவத் கடாக்ஷ ரஜநீ	*உனது கடாக்ஷமாகிற ராத்திரியானது*
மந்தஸ்மிதஜ்யோத்ஸ்நா ஸம்ஸ்நபிதா	*மந்தஸ்மிதமாகிற சந்திரிகையால் முழுகியபடி*
பவதி	*ஏற்படுகிறதோ*
தம் தேஹிநம் ப்ரதி	*அந்த மனிதனைப்பற்றி*
க்ஷணத்	*ஒரு க்ஷணத்தில்*
வைகரீ	*உயர்ந்த வாக்விலாஸமானது*
த்ராக்ஷா மாக்ஷிக மாதுரீ	*திராக்ஷை தேன் இவைகளுடைய ருசியின்*

மதபரவ்ரீடாகரீ	அஹங்காரத்திற்கு வெட்கத்தைக் கொடுக்கக்கூடியதாக
ஸ்வயம்	தானாகவே
வாமேக்ஷணேவ	காமுக ஸ்திரீபோல்
அபிஸ்ருதிம்	வரவை
தனோதி	செய்கிறது

காமாக்ஷி தேவியின் மந்தஸ்மிதமாகிற நிலா நிறைந்த இரவானது எந்த முட்டாளிடமும் படுகிறதோ, அவனுக்கு திராக்ஷை தேன் போன்றவைகளின் ருசியைவிட உயர்ந்ததான வாக்கு விலாஸமான்து தானாகவே க்ஷணத்தில் ஏற்பட்டு விடுகிறது.

कालिन्दीजलकान्तय: स्मितरुचि स्वर्वाहिनीपाथसि
प्रौढध्वान्तरुच: स्फुटाधरमहालौहित्यसंध्योदये।
माणिक्योपलकुण्डलांशुशिखिनि व्यामिश्रधूमश्रिय:
कल्याणैकभुव: कटाक्षसुषमा: कामाक्षि राजन्ति ते।।१९।।

காளிந்தீ ஜல காந்தய: ஸ்மிதருசி ஸ்வர்வாஹிநீ பாதஸி
ப்ரௌடத்வாந்த ருச: ஸ்புடாதர மஹாலௌஹித்ய ஸந்த்யோதயே।
மாணிக்யோபல குண்டலாம்சுசிகினி வியாமிச்ர தூமச்ரிய:
கல்யாணைக புவ: கடாக்ஷ ஸுஷமா: காமாக்ஷி ராஜந்தி தே।।19।।

காமாக்ஷி! தே	காமாக்ஷி! உன்னுடைய
கல்யாணைக புவ:	மங்களங்களுக்கு முக்ய இருப்பிடமான

கடாக்ஷ ஸுஷமா:	கடாக்ஷகாந்திகள்
ஸ்மிதருசி	மந்தஸ்மித காந்தியாகிற
ஸ்வர்வாஹினீ பாதஸி	ஸ்வர்க்க கங்கா பிரவாஹத்தில்
காளிந்தீ ஜல காந்தய:	யமுனா ஜலத்தின் சோபை போலும்
ஸ்புடா தர மஹா	சுத்தமான உதடு காந்தியாகிற
லௌஹித்ய ஸந்த்யோதயே	சிவப்பு நிறமான ஸந்த்யா காலத்தில்
ப்ரௌடத்வாந்த ருச:	அடர்ந்த இருளின் காந்திபோன்ற வைகளாயும்
மாணிக்யோபல	மாணிக்க கல்லு மயமான
குண்டலாம்சுசிகினி	காது குண்டலகாந்தியாகிற அக்நியில்
வ்யாமிஶ்ர தூமஶ்ரிய:	ஸம்பந்தப்பட்ட புகையின் காந்தியை உடையவைகளாயும்
ராஜந்தி	விளங்குகின்றன

மங்கள கரங்களான காமாக்ஷியின் நீல நிறமான கடாக்ஷங்கள், மந்தஸ்மிதமாகிற வெளுத்த கங்கா பிரவாஹத்த்தில் யமுனை கலந்தது போலவும் ஸந்தியாகால சிவப்பு போன்ற உதட்டு சோபையில், கருத்த இருளின் காந்தியை உடையவைகளாயும், மாணிக்ய குண்டல சோபையாகிற அக்னி தேஜஸ்ஸில், புகைக்கூட்டம் போலவும் விளங்குகின்றன.

कलकलरणत्काञ्ची काञ्चीविभूषणमालिका
कचभरलसच्चन्द्रा चन्द्रावतंससधर्मिणी।

कविकुलगिरः श्रावं श्रावं मिलत्पुलकाङ्कुरा
विरचितशिरः कम्पा कम्पातटे जगदम्बिका ।।२०।।

கலகலரணத் காஞ்சீ காஞ்சீ விபூஷண மாலிகா
கசபர லஸத்சந்த்ரா சந்த்ராவதம்ஸ ஸதர்மிணீ।
கவிகுல கிர: ஶ்ராவம் ஶ்ராவம் மிலத்புலகாங்குரா
விரசிதஶிர: கம்பா கம்பாதடே ஜகதம்பிகா।।20।।

கலகலரணத் காஞ்சீ	*சப்திக்கிற ஓட்டியாணமுள்ளவளும்*
காஞ்சீ விபூஷணமாலிகா	*காஞ்சீபுரத்திற்கு அலங்காரமான மாலை போன்றவளும்*
கசபரலஸத் சந்த்ரா	*கூந்தலில் விளங்குகிற சந்திரனை உடையவளும்*
சந்த்ராவதம்ஸ ஸதர்மிணீ	*சந்திரனை சிரோபூஷணமாகக் கொண்ட பரமசிவ பத்நியும்*
கவிகுல கிர:	*கவி குலங்களின் கவிதை வார்த்தைகளை*
ஶ்ராவம் ஶ்ராவம்	*கேட்டுக் கேட்டு*
மிலத்புலகாங்குரா	*மயிர் கூச்சலுள்ளவளும்*
விரசித சிர: கம்பா சிர:	*சிர: கம்பம் செய்து கொண்டிருப்பவளுமான*
ஜகதம்பிகா	*ஜகதம்பிகை*
கம்பாதடே	*கம்பாதடத்தில்*
ஜயதி	*விளங்குகிறாள்*

ஜகதம்பிகையான காமாக்ஷி தேவியானவள், ஓட்டியாணமணியின் ஒலியுடன் காஞ்சிக்கு அலங்கார மாலையாகவும். சிரஸில் சந்திரகலையுடன் விளங்கு கிறாள்.

கவிகள்செய்யும் ஸ்தோத்ரங்களைகேட்டு மயிர் கூச்சலடைந்து அந்த கவிதைகளைக்கேட்டு சிர: கம்பம் செய்து ஆனந்திப்பவளாயும் பிரகாசிக்கிறான்.

सरसवचसां वीची नीचीभवन्मधुमाधुरी
भरितभुवना कीर्तिर्मूर्तिर्मनोभवजित्वरी।
जननि मनसो योग्यम् भोग्यम् नृणां तव जायते
कथमिव विना काञ्चीभूषे कटाक्षतरङ्गितम्।।२१।।

ஸரஸவசஸாம் வீசீ நீசீபவந்மதுமாதுரீ
பரிதபுவநா கீர்த்திர்மூர்த்திர் மனோபவ ஜித்வரீ।
ஜநநி மனஸோ யோக்யம் போக்யம் ந்ருணாம் தவ
ஜாயதே
கதமிவ விநா காஞ்சீபூஷே கடாக்ஷதரங்கிதம்।।21।।

காஞ்சீ பூஷே!	*காஞ்சிக்கு அலங்காரமானவளே*
ஜநநி	*தாயே!*
தவ	*உன்னுடைய*
கடாக்ஷ தரங்கிதம் விநா	*கடாக்ஷ அலை ஸம்பந்தமின்றி*
நீசீபவன் மது மாதுரீ	*கீழ் தரமாக்கப்பட்ட தேனின் மாதுர்யத்தையுடையதான*
ஸரஸ வசஸாம் வீசீ	*ரஸம் நிறைந்த வாக்கு வரிசையும்*
பரித புவநா	*உலகம்பூரித்த*
கீர்த்தி:	*யஶஸ்ஸும்*
மனோபவ ஜித்வரீ	*மன்மன்மதனை ஜயிக்கக்கூடிய*
மூர்த்தி:	*சரீரமும்*
மநஸ: யோக்யம்	*மனதிற்கிசைந்ததான*

போக்யம்	அனுபவ வஸ்துவும்
ந்ருணாம்	மனிதர்களுக்கு
கதமிவ	எப்படித்தான்
ஜாயதே	உண்டாகும்

காஞ்சீ நகர அலங்காரமாயுள்ள, தாயே! உனது கடாக்ஷவீக்ஷணமில்லாமல் மனிதர்களுக்கு, நல்ல ரஸமுள்ள வாக்கும், உலகம் பரவிய கீர்த்தியும், மன்மதனுக்கொப்பான சரீரமும், மனதிற்கு இஷ்டமான போக அநுபவங்களும், எப்படிக் கிடைக்கும்.

भ्रमरितसरित्कूले नीलोत्पलप्रभयाऽऽभया
नतजनतमः खण्डी तुण्डीरसीम्नि विजृम्भते।
अचलतपसामेकः पाकः प्रसूनशरासन–
प्रतिभटमनोहारी नारीकुलैकशिखामणिः।।२२।।

ப்ரமரிதஸரித்கூலே நீலோத்பலப்ரபயா ऽऽபயா
நதஜநதம: கண்டீ துண்டீரஸீம்னி விஜ்ரும்பதே।
அசலதபஸாமேக: பாக: ப்ரஸூனஶராஸன
ப்ரதிபடமனோஹாரீ நாரீகுலைகஶிகாமணி:।।22।।

நீலோத்பல ப்ரபயா	நீலோத்பல புஷ்ப காந்திபோன்ற
ஆபயா	சரீர காந்தியால்
ப்ரமரித ஸரித்கூல:	வண்டு நிறைந்தது போல் நதீரத்தைச் செய்கிறதாயும்
நதஜன தம: கண்டீ	தன்னிடம் வணங்கிய ஜனங்களின் அக்ஞான இருளை கண்டிப்பதாயும்

அசல தபஸாம்	ஹிமாலய பர்வதத்தின் தபஸ்ஸுகளுக்கு
ஏக: பாக:	முக்ய பலனாயும்
ப்ரஸூத ஶராஸன	புஷ்பபாணனான மன்மதனுக்கு
ப்ரதிபட	எதிரியான பரமசிவனுடைய
மனோஹாரீ	மனதை வசீகரிக்கிறதுமான
நாரீகுலைக சிகாமணி:	ஸ்திரீ ஸமூஹத்தின் முக்ய சிகாமணியானது, (காமாக்ஷி)
துண்டீர ஸீம்நி	துண்டீர மண்டல பிரதேசத்தில்
விஜ்ரும்பதே	உயர்ந்து விளங்குகிறது

ஹிமாலயத்தில் தவம் செய்பவனுக்கு பலன் கொடுப்பவனும் மன்மத வைரியின் மனோஹாரியும், ஸ்திரீ ஸமூஹத்தின் சிகாமணியாகவும், விளங்கும் காமாக்ஷி தேவியானவள் தனது நீலோத்பல காந்தியால் பம்பாஸரித் கரையை வண்டுகள் நிறைந்ததுபோல் செய்துகொண்டும் பக்த ஜனங்களின் அக்ஞானத்தை போக்கிக்கொண்டு துண்டீர (காஞ்சீபுர) தேசத்தில் பிரகாசிக்கிறாள்.

मधुरवचना: मन्दस्मेरा: मतङ्गजगामिन:
तरुणिमजुषस्तापिञ्छाभा: तम: परिपन्थिन:।
कुचभरनता: कुर्युर्भद्रं कुरङ्गविलोचना:
कलितकरुणा: काञ्चीभाज: कपालिमहोत्सवा:॥२३॥

மதுர வசநா: மந்தஸ்மேரா: மதங்கஜகாமிந:
தருணிமஜுஷஸ்தாபிஞ்சாபாஸ் தம: பரிபந்தின:।
குசபர நதா: குர்யு: பத்ரம் குரங்க விலோசனா:
கலித கருணா: காஞ்சீபாஜ: கபாலி மஹோத்ஸவா:॥23॥

மதுர வசனா:	இனிமையான பேச்சுள்ளவையும்
மந்தஸ்மேரா:	மந்தஹாஸத்துடன் கூடியவையும்
மதங்க ஜகாமிந:	யானையின் நடைபோன்ற நடையுள்ளவளாயும்
தருணிமஜுஷ:	யௌவனத்தை அடைந்தவையும்
தாபிருசாபா:	காசாம்பூவின் காந்தி போன்றவையும்
தம: பரிபந்தின:	அக்ஞான இருளுக்கு எதிரிகளாயும்
குசபரநதா:	ஸ்தனபாரத்தால் வணங்கியவைகளும்
குரங்க விலோசனா:	மான்களுடைய கண்போன்ற கண் உள்ளவையும்
கலித கருணா:	கருணையுள்ளவையும்
காஞ்சி பாஜ:	காஞ்சியை அடைந்துள்ளவையுமான
கபாலிமஹோத்ஸவா:	கபாலியான பரமசிவனுக்கு ஆனந்தத்தைக்கொடுத்து வருகிற மஹோத்ஸவங்கள்
(காமாக்ஷி)பத்ரம்	க்ஷேமத்தை
குர்யு:	செய்யவேணும்

மதுரவசனமும் மந்தஸ்மிதமும், யானை நடையும், நல்லயௌவநமும் பொருந்தியவையும், அக்ஞானத்தை நீக்குகிற மஹிமையுள்ளவையும், மான் கண்போன்ற கண்ணுள்ளவையும், காருண்யம் நிறைந்தவையுமான

பரமசிவானந்தங்கள் ரூபமான காமாக்ஷிதேவி நமக்கு க்ஷேமத்தைச் செய்யட்டும்.

कमलसुषमाकक्ष्यारोहे विचक्षणवीक्षणा:
कुमुदसुकृतक्रीडाचूडालकुन्तलबन्धुरा:।
रुचिररुचिभिस्तापिञ्छश्रीप्रपञ्चनचुञ्चव:
पुरविजयिन: कम्पातीरे स्फुरन्ति मनोरथा:।।२४।।

கமல ஸுஷமா கக்ஷ்யாரோஹே விசக்ஷண வீக்ஷணா:
குமுத ஸுக்ருத க்ரீடா சூடால குந்தல பந்துரா:।
ருசிரருசிபி: தாபிஞ்ச ஸ்ரீ ப்ரபஞ்சநசுஞ்சவ:
புரவிஜயின: கம்பாதீரே ஸ்புரந்தி மனோரதா:।।24।।

கமல	தாமரைப்பூவின் காந்திக்கு ஸமமான
ஸுஷமாகக்ஷ்யாரோஹே	நிலையில்
விசக்ஷண வீக்ஷணா:	ஸாமர்த்தியமுள்ள கண்களுடையதும்
குமுதஸுக்ருத	ஆம்பல் நேசனான சந்திரனுடைய
க்ரீடா சூடால	விளையாட்டுடன் கூடிய சிகையை உடைய
குந்தல	கேசங்களால்
பந்துரா:	மனோஹரங்களாயிருப் பவையும்
ருசிர ருசிபி:	அழகிய காந்திகளால்
தாபிஞ்சஸ்ரீ	காசாம் பூவின் காந்தியை
ப்ரபஞ்சந சுஞ்சுவ:	வெளிப்படுத்துவதில் ஸாமர்த்தியமுள்ளவையுமான
புரவிஜயிந: மனோரதா:	புரங்களை ஜயித்த பரமேஸ்வரனுடைய மனோரதங்கள்

(காமாக்ஷி) கம்பாதீர	*கம்பா நதிக்கரையில்*
ஸ்புரந்தி	*விளங்குகின்றன*

தாமரைப்பூவின் அழகுக்கு ஸமமான நிலைமையை அடைய ஸாமர்த்தியமுள்ள கடாக்ஷ முள்ளவளும், சிரோ பூஷணமாக விளங்கும் சந்திரனால் விளங்குகிற கேசங்களையுடையவளும், அழகிய சரீர காந்தியால் காசாம்பூவின் சோபையை ப்ரகடனப்படுத்து கிறவளாயுமுள்ள ஸ்ரீ காமாக்ஷி, தேவி திரிபுர விஜயியான பகவானுடைய மனோரதங்களாக கம்பாதீரத்தில் விளங்குகிறாள்.

कलितरतयः काञ्चीलीलाविधौ कविमण्डली–
वचनलहरीवासन्तीनां वसन्तविभूतयः।
कुशलविधये भूयासुर्मे कुरङ्गविलोचनाः
कुसुमविशिखारातेरक्ष्णां कुतूहलविभ्रमाः।।२५।।

கலித ரதய: காஞ்சீ லீலாவிதௌ கவி மண்டலீ
வசந லஹரீ வாஸந்தீநாம் வஸந்த விபூதய:।
குஶல விதயே பூயாஸுர்மே குரங்கவிலோசநா:
குஸும விஶிகாராதேரக்ஷ்ணாம் குதூஹல விப்ரமா:।।25।।

காஞ்சீ லீலாவிதௌ	*காஞ்சியில் க்ரீடை செய்யும் விஷயத்தில்*
கலிதரதய:	*ஆசையுள்ளவையும்*
கவிமண்டலீ	*கவி ஸமூஹத்தினுடைய*
வசந லஹரீ வாஸந்தீநாம்	*வாக்பரம்பரையாகிற புஷ்பக்கொடிகளுக்கு*
வஸந்த விபூதய:	*வஸந்தருது சோபை போன்றவையும்*

குரங்க விலோசனா:	மான்களுடைய கண்போன்ற கண் உள்ளவையும்
குஸுமவிஸிகாராதே:	புஷ்ப பாணனான மன்மதனுக்கு சத்ருவான பரமசிவனுடைய
அக்ஷ்ணாம்	கண்களுக்கு
குதூஹலவிப்ரமா:	ஸந்தோஷத்தைக்கொடுக்கிற (காமாக்ஷியின்) விலாஸங்கள்
மே	எனக்கு
குஶலவிதயே	க்ஷேம கார்யத்தின் பொருட்டு
பூயாஸு:	ஆகவேண்டும்

காஞ்சீ விஹாரத்தில் ஆசையுள்ளவளும், கவிகளின் வாக்ஜரிக்கு வஸந்தருத்து போன்றவளும், மன்மத சத்ருவான மஹேச்வரனுடைய குதூஹல விலாஸ மாயுள்ளவளுமான காமாக்ஷி எனக்கு க்ஷேமங்களை கொடுக்கவேணும்.

कबलिततमस्काण्डास्तुण्डीरमण्डलमण्डना:
सरसिजवनीसंतानानामरुंतुदशेखरा:।
नयनसरणेर्नेदीयांस: कदा नु भवन्ति मे
तरुणजलदश्यामा: शम्भोस्तप: फलविभ्रमा:।।२६।।

கபலித தமஸ் காண்டா: துண்டீர மண்டல மண்டனா:
ஸரஸிஜ வநீ ஸந்தாநாநாமருந்துத சேகரா:।
நயன ஸரணே: நேதீயாம்ஸ: கதா நு பவந்தி மே
தருண ஜலத ஶ்யாமா: ஶம்போ: தப:பல விப்ரமா:।।26।।

கபலித தமஸ் காண்டா:	அக்ஞான இருளை விழுங்குகிறவையும்
துண்டீர மண்டல மண்டநா	துண்டீர தேசத்தை

	அலங்கரிப்பவையும்
ஸரஸிஜ வநீ ஸந்தாநாநாம்	தாமரை வனத்தின் கூட்டங்களுக்கு
அருந்துத சேகரா:	கிலேசத்தைக் கொடுக்கிற சந்திரனை சிரோ பூஷணமாகக் கொண்டவையும்
தருண ஜலத ஶ்யாமா:	நீருண்ட மேகம் போல் நீலநிறமுள்ளவையுமான
சம்போ:	பரமசிவனுடைய
தப: பல விப்ரமா:	தவப்பயனின் விலாஸம் போல் விளங்குகிற வஸ்துவானது
(காமாக்ஷி) மே	என்னுடைய
நயந ஸரணே:	கண் ப்ரதேசத்திற்கு
நேதீயாம்ஸ:	நெருங்கியவைகளாக
கதா நு	எப்போது தான்
பவந்தி	ஆகுமோ!

அக்ஞானமாகிற இருளை நீக்கும் சக்தி பெற்றவையும், துண்டீரமென்கிற காஞ்சீ பிரதேசத்துக்கு அலங்காரமானவையும், தாமரை வநத்திற்கு க்லேசத்தைக் கொடுக்கிற சந்திரனை சிரோ பூஷணமாகக் கொண்டவையும், கருத்த மேககாந்தியாயுள்ளவையுமான பரமசிவனுடைய தவப் பயன்கள் (காமாக்ஷி) எப்போது எனது கண்களுக்கு இலக்காகுமோ?

अचरममिषुं दीनं मीनध्वजस्य मुखश्रिया
सरसिजभुवो यानं म्लानं गतेन च मञ्जुना ।

त्रिदशसदसामन्नं खिन्नं गिरा च वितन्वती
तिलकयति सा कम्पातीरं त्रिलोचनसुन्दरी।।२७।।

அசரமமிஷும் தினம் மீனத்வஜஸ்ய முகஶ்ரியா
ஸரஸிஜ புவோ யாநம் ம்லாநம் கதே ந ச மஞ்ஜுநா।
த்ரிதஶ ஸதஸாமந்நம் கிந்நம் கிரா ச விதந்வதீ
திலகயதி ஸா கம்பா தீரம் த்ரிலோசந ஸுந்தரீ।।27।।

முகஶ்ரியா	தனது முக காந்தியால்
மீன த்வஜஸ்ய	மன்மதனுடைய
அசரமமிஷும்	முதலாவது பாணமான தாமரைபூவை
தீனம்	சோபையற்றதாக
விதந்வதீ	செய்கிறவளாயும்
மஞ்ஜுநா	அழகிய
கதேந	நடையினால்
ஸரஸிஜா புவ:	ப்ரம்ஹாவினுடைய
யாநம்	வாஹநமான ஹம்ஸத்தை
ம்லாநம்	வாடியதாக
கிரா	தனது வாக்கினால்
திரிதஶ ஸதஸாம்	தேவ ஸமூஹத்தின்
அந்நம்	ஆஹாரமான அமிர்தத்தை
கிந்நம்	கீழ்ப்பட்டதாக, (விதந்வதீ - செய்கிறவளுமான,)
த்ரிலோசன ஸுந்தரீ	முக்கண்ணன் அழகியாகிய காமாக்ஷி யானவள்
கம்பாதீரம்	கம்பைக் கரையை
திலகயதி	அலங்கரிக்கச் செய்கிறாள்

தனது முகக் காந்தியால் தாமரைப்பூவை தீனமாயும், அழகிய நடையில் ஹம்ஸத்தை க்லானியுள்ளதாயும், இனிமையான வாக்கினால் தேவாந்நமான அமிர்தத்தைக் கீழ்ப்பட்டதாயும் செய்து கொண்டு முக்கண்ணன் மனைவியான ஸ்ரீ காமாக்ஷி தேவீ கம்பாதீரத்தில் விளங்குகிறாள்.

जननि भुवने चंक्रम्येऽहं कियन्तमनेहसं
कुपुरुषकरभ्रष्टैर्दुष्टैर्धनैः उदरंभरिः।
तरुणकरुणे तन्द्राशून्ये तरङ्गय लोचने
नमति मयि ते किञ्चित्काञ्चीपुरीमणिदीपिके।।२८।।

ஜநநி புவநே சங்க்ரம்யேஹம் கியந்தமநேஹஸம்
குபுருஷகரப்ரஷ்டை: துஷ்டை: தநை: உதரம்பரி:।
தருணகருணே தந்த்ராஶூந்யே தரங்கய லோசநே
நமதி மயி தே கிஞ்சித் காஞ்சீ புரீமணிதீபிகே।।28।।

காஞ்சீபுரீ மணிதீபிகே	*காஞ்சீ பட்டணத்தின் ரத்தினவிளக்குப்போன்ற*
ஜநநி	*தாயே!*
அஹம்	*நான்*
குபுருஷ	*கெட்ட மனிதர்களுடைய*
கர	*கையிலிருந்து*
ப்ரஷ்டை:	*நழுவி விழுந்த*
துஷ்டை:	*தோஷமுள்ள*
தநை:	*பணங்களால்*
உதரம்பரி	*வயிறு வளர்ப்பவனாக*
கியந்தமநேஹஸம்	*எவ்வளவு நாள் தான்*
புவநே	*இவ்வுலகில்*

சங்க்ரம்யே	தடுமாறிக்கொண்டிருப்பேன்!
நமதி	நமஸ்கரிக்கிற
மயி	என்னிடத்தில்
தே	உன்னுடைய
தருண கருணே	முற்றின தயை உள்ளவைகளும்
தந்த்ராமுந்யே	சோம்பலற்றவைகளுமான
லோசநே	கண்களை
கிஞ்சித்	கொஞ்சம்
தரங்கய	வீசுவாயாக

காஞ்சியின் மணிவிளக்குப் போன்ற காமாக்ஷியே! அஸத்துக்களுடைய கையிலிருந்து நழுவிய அல்ப திரவியங்களால் வயிறு வளர்ப்பவனாக நான் எவ்வளவுகாலம் இவ்வுலகில் திரிந்துக் கொண்டிருப்பேன். உனது பக்தனான என்மீது கருணை நிறைந்த உன் கடாக்ஷத்தை சிறிது பரப்புவாயாக.

मुनिजनमनः पेटीरत्नं स्फुरत्करुणानटी
विहरणकलागेहं काञ्चीपुरी मणिभूषणम्।
जगति महतो मोहव्याधेर्नृणां परमौषधं
पुरहरदृशां साफल्यं मे पुरः परिजृम्भताम्।।२९।।

முனிஜந மந: பேடீரத்னம் ஸ்புரத் கருணாநடீ
விஹரணகலா கேஹம் காஞ்சீ புரீமணி பூஷணம்।
ஜகதி மஹதோ மோஹவ்யாதே: ந்ருணாம் பரமௌஷதம்
புரஹர த்ருமாம் ஸாபல்யம் மே புர: பரிஜ்ரும்பதாம்।।29।।

முனிஜந	ரிஷிகளுடைய
மந: பேடீ	மனதாகிறபெட்டியில் இருக்கிற

ரத்னம்	ரத்னமாயும்
ஸ்புரத்	ஜ்வலிக்கிற
கருணாநடீ	தயையாகிற நாட்டிய ஸ்திரீயினுடைய
விஹரண கலா	விளையாட்டு விலாஸத்திற்கு
கேஹம்	இருப்பிடமாயும்
காஞ்சீபுரீ மணிபூஷணம்	காஞ்சீ பட்டணத்திற்கு ரத்தின ஆபரணமாயும்
ஜகதி	உலகில்
ந்ருணாம்	மனிதர்களுடைய
மஹத:	பெரிதான
மோஹவ்யாதே:	அக்ஞானமாகிற வ்யாதிக்கு
பரமௌஷதம்	உயர்ந்த மருந்தாயும்
புரஹர த்ருமோம்	பரமசிவனுடைய கண்களுக்கு
ஸாபல்யம்	பயன் போன்றதுமான வஸ்துவானது
மே	என்னுடைய
புர:	எதிரில்
பரிஜ்ரும்பதாம்	தோன்றி வளரட்டும்

ரிஷிகளுடைய மநஸ்ஸாகிற பெட்டியில் ரத்தினம் போல் வைக்கப்பட்டிருக்கிறதும் கருணைக்கு இருப்பிட மானதும் அக்ஞான வ்யாதிக்கு சிறந்த மருந்து போன்றதும், திரிபுராரியான பரமசிவனுடைய கண்களின் பயன் போன்றதுமான காஞ்சீ பூஷணமான அந்த வஸ்துவானது எனக்கு ப்ரத்யக்ஷமாகவேணும்.

मुनिजनमनोधाम्ने धाम्ने वचोमय जाह्नवी
हिमगिरितट: प्राग्भारायाक्षराय परात्मने।
विहरणजुषे काञ्चीदेशे महेश्वरलोचन
त्रितयसरसक्रीडासौधाङ्गणाय नमो नम:।।३०।।

முனிஜந மனோதாம்நே தாம்நே வசோமய ஜாஹ்நவீ
ஹிமகிங்ச்தட ப்ராக்பாராய அக்ஷராய பராத்மநே।
விஹரண ஜுஷே காஞ்சீ தேஶே மஹேச்வர லோசன
த்ரிதய ஸரஸ்க்ரீடா ஸௌதாங்கணாய நமோ நம:।।30।।

முனிஜந	ரிஷிகளுடைய
மநோதாம்நே தாம்நே	மனதை தங்குமிடமாகக் கொண்டதும்
வசோமய	வாக்காகிற
ஜாஹ்நவீ	கங்கைக்கு
ஹிமகிரிதட ப்ராக்பாராய	ஹிமபர்வதத்தின் கரைப்பிரதேசமாயும்
அக்ஷராய	அழிவற்றதாயும்
பராத்மநே	உயர்ந்த பிருகிருதியாயும்
காஞ்சீ தேஶே	காஞ்சீபுரியில்
விஹரண ஜுஷே	விளையாடல் செய்வதாயும்
மஹேச்வர	பரமசிவனுடைய
லோசன த்ரிதய	மூன்று கண்களுக்கும்
ஸரஸக்ரீடா	க்ரீடா விலாசத்திற்கு ஏற்பட்ட

ஸௌதாங்கணாய	உப்பரிகைப் ப்ரதேசமாயுமிருக்கிற (அந்த வஸ்துவின் பொருட்டு)
நமோ நம:	நமஸ்கரிக்கிறேன்

ரிஷிகளுடைய மனதை இருப்பிடமாகக் கொண்டதும், அழிவற்றதும், பரஸ்வரூபியும், வாக்காகிற கங்கா பிரவாஹத்திற்கு ஹிமாசலமாயும், மஹேச்வரனு டைய கண்களின் க்ரீடா மண்டபம் போன்றதுமான அந்த வஸ்துவுக்கு நமஸ்காரம்.

मरकतरुचां प्रत्यादेशं महेश्वरचक्षुषां–
अमृतलहरीपूरं पारं भवाख्यपयोनिधेः।
सुचरितफलं काञ्चीभाजो जनस्य पचेलिमं
हिमशिखरिणो वंशस्यैकं वतंसमुपास्महे।।३१।।

மரகதருசாம் ப்ரத்யாதேஶம் மஹேச்வர சக்ஷுஷாம்
அம்ருதலஹரீ பூரம் பாரம் பவாக்ய பயோநிதே:।
ஸுசரிதபலம் காஞ்சீபாஜ: ஜனஸ்ய பசேலிமம்
ஹிம ஶிகரிண: வம்சஸ்ய ஏகம் வதம்ஸமுபாஸ்மஹே।।31

மரகதருசாம்	மரகத பச்சையின் காந்திக்கு
ப்ரத்யாதேஶம்	எதிரியாயும்
மஹேச்வரசக்ஷுஷாம்	பரமசிவனுடைய கண்களுக்கு
அம்ருதலஹரீபூரம்	அமிருத தாரையின் ப்ரவாஹமாயும்
பவாக்ய பயோநிதே:	ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்திற்கு
பாரம்	கரையாயும்

காஞ்சீபாஜ:	காஞ்சீயில் இருக்கிற
ஜநஸ்ய	ஜனங்களுக்கு
பசேலிமம்	பக்குவமான
ஸுசரித பலம்	புண்ய பலம் போன்றதாயும்
ஹிமசிகரிண:	ஹிமபர்வதத்தினுடைய
வம்ஶஸ்ய	ஸந்ததிக்கு
ஏகம்	முக்யமான
வதம்ஸம்	அலங்காரமாகிற காமாக்ஷியை
உபாஸ்மஹே	உபாஸிக்கிறோம்

மரகதபச்சைக்கு ஸமமான காந்தி உள்ளதும், மஹேச்வரனுடைய கண்களுக்கு அமிர்தமானதும், ஸம்ஸார ஸமுத்ரத்திற்கு கரையாயும், காஞ்சீ ஜனங்களின் ஸுகிருத பலமாயும், ஹிமவானின் வம்சத்திற்கு முக்ய அலங்காரமாயுமுள்ள வஸ்துவை (காமாக்ஷியை) உபாஸிக்கிறேன்.

प्रणमनदिनारम्भे कम्पानदीसखि तावके
सरसकवितोन्मेषः पूषा सतां समुदञ्चितः।
प्रतिभटमहाप्रौडप्रोद्यत्कवित्वकुमुद्वतीं
नयति तरसा निद्रामुद्रां नगेश्वरकन्यके।।३२।।

ப்ரணமனதிநாரம்பே கம்பாநதீஸகி தாவகே
ஸரஸகவிதோன்மேஷ: பூஷா ஸதாம் ஸமுதஞ்சித:।
ப்ரதிபட மஹாப்ரௌட ப்ரோத்யத் கவித்வ குமுத்வதீம்
நயதி தரஸா நித்ராமுத்ராம் நகேஶ்வர கன்யகே।।32।।

கம்பாநதீ ஸகீ	கம்பை நதியின் தோழியே
நகேஸ்வரகன்யகே	பர்வத ச்ரேஷ்டரின் பெண்ணே

தவகே	உன் ஸம்பந்தமாக
ப்ரணமன தினாரம்பே	நமஸ்கரிக்கும் தின ஆரம்பத்திலேயே
ஸதாம்	கவிகளுக்கு
ஸரஸ கவிதோந்மேஷ:	ரஸமான கவிதையின் உற்பத்தியாகிற
பூஷா	சூரியனானவன்
ஸமுதஞ்சித:	மேல்கிளம்பி
ப்ரதிபட	எதிரியான
மஹாப்ரௌட	மிக உயர்ந்து
ப்ரோத்யத்	ப்ரகாசிக்கிற கவிதையாகிற
குமுத்வதீம்	ஆம்பல் புஷ்பத்தை
நித்ரா முத்ராம்	நித்திரையால் மூடியதாக
தரஸா	சீக்கிரம்
நயதி	செய்கிறது

ஹிமவத் புத்திரியான ஹே காமாக்ஷியே! உன்னை நமஸ்கரித்தவுடனேயே ஸத்துக்களான கவிகளுக்கு ஸரஸகவிதையாகிற சூரியன் உதித்து எதிரிகளுடைய கவிதையாகிற ஆம்பல் புஷ்பத்தை வாடி கண்மூடச் செய்கிறது.

शमितजडिमारम्भा कम्पातटीनिकटेचरी
निहतदुरितस्तोमा सोमार्धमुद्रितकुन्तला।
फलितसुमनोवाञ्छा पाञ्चायुधी परदेवता
सफलयतु मे नेत्रे गोत्रेश्वरप्रियनन्दिनी।।३३।।

ஶமிதஜடிமாரம்பா கம்பாதட நிகடேசரீ
நிஹததுரிதஸ்தோமா ஸோமார்தமுத்ரிதகுந்தலா।
பலிதஸுமனோவாஞ்சா பாஞ்சாயுதீ பரதேவதா
ஸபலயது மே நேத்ரே கோத்ரேஷ்வரப்ரியநந்தினீ॥33॥

ஶமித ஜடிமாம்பா	முட்டாள் தனத்தின் ஆரம்பத்தை போக்குகிறவளும்
கம்பாதட நிகடேசரீ	பம்பைக்கரையின் ஸமீபத்தில் ஸஞ்சரிப்பவளும்
நிஹததுரித ஸ்தோமா	பாப ஸமூஹங்களை நாசமாக்குகிறவளும்
ஸோமார்த்த	அர்த்தசந்திரனால்
முத்ரித	அலங்கரிக்கப்பட்ட
குந்தலா	கேசத்தையுடையவளும்
பலிதஸுமநோ வாஞ்சா	தேவர்களுடைய இஷ்டத்தை பலிக்கச் செய்கிறவளும்
பஞ்சாயுதீ	ஐந்து ஆயுதங்களை தரிப்பவளும்
கோத்ரேச்வரப்ரியநந்திநீ	பரிவத ராஜனின் பிரியபுத்ரியுமான
பரதேவதா	உத்க்ருஷ்ட தேவதையுமான காமாக்ஷியானவள்
மே	என்னுடைய
நேத்ரே	கண்களை
ஸபலயது	பலனுள்ளதாகச் செய்யட்டும்

பர்வத ராஜனின் புத்ரியும், பஞ்சாயுதம் தரித்து பரதேவதையாக விளங்குகிறவளும், அக்ஞானத்தைப் போக்கி பாபத்தை நாசம் செய்கிறவளும், ஸத்துக்களுடைய மனோரதத்தை பூர்த்தி செய்கிறவளும், அர்த்தசந்திர சிரோபூஷணமாயுள்ள காமாக்ஷியானவள் எனக்கு தரிசனம் தந்து என் கண்களை ஸபலமாக்க வேணும்.

मम तु धिषणा पीड्या जाड्यातिरेक कथं त्वया
कुमुदसुषमामैत्रीपात्रीवतंसितकुन्तलाम्।
शमितदुरितस्तम्भां कम्पानदीनिलयामसौ
श्रयति हि गलत्तन्द्रा चन्द्रावतंस सधर्मिणीम्।।३४।।

மம து திஷனா பீட்யா ஜாட்யாதிரேக கதம் த்வயா
குமுத ஸுஷமா மைத்ரீ பாத்ரீ வதம்ஸித குந்தலாம்।
ஶமித துரிதஸ்தம்பாம் கம்பாநதீ நிலயாமஸெள
ஶ்ரயதி ஹி கலத்தந்த்ரா சந்த்ரா வதம்ஸ
ஸதர்மிணீம்।।34।।

ஜாட்யாதிரேக!	*எனது மூடத்தனமாகிற குணமே!*
த்வயா	*உன்னால்*
மம	*என்னுடைய*
திஷணா	*புத்தியானது*
கதம்	*எப்படி*
பீட்யா	*பீடிக்கப்படும்*
அஸெள	*இந்த புத்தியானது*
குமுத ஸுஷமா	*ஆம்பலுடைய*
மைத்ரீ	*ஸ்நேகத்திற்கு*
பாத்ரீ	*பாத்ரமான சந்திர கலையால்*

வதம்ஸித	பூஷணமாக செய்யப்பட்ட
குந்தலாம்	கேசத்தை உடையவளும்
ஶமித துரிதஸ்தம்பாம்	பாபஸமூஹத்தை போக்குகிறவளும்
கம்பாநதீ நிலயாம்	கம்பா நதிக் கரையில் உள்ளவளுமான்,
சந்த்ராவதம்ஸ ஸதர்மிணீம்	சந்திரசேகர பத்நியான காமாக்ஷியையே
கலத்தந்த்ரா	சோம்பலில்லாமல்
ஶ்ரயதி ஹி	ஆச்ரயித்து நிற்கிறதல்லவா!

என்னுடைய மனதானது கம்பாநதீ தீரவாஸினியும், பாப ஸமூஹத்தைப் போக்குகிறவளும், சந்திரனை சிரோ பூஷணமாகக் கொண்டவளும், சந்திரசேகர பத்நியுமான காமாக்ஷியையே ஆச்ரயித்து நிற்பதால், ஜாட்யமென்கிற கெட்ட குணத்தால் ஆக்ரமிக்கப்படவில்லை.

परिमलपरीपाकोद्रेकं पयोमुचि काञ्चने
शिखरिणि पुनर्द्वैधीभावं शशिन्यरुणातपम्।
अपि च जनयन्कम्बोर्लक्ष्मीमनम्बुनि कोऽप्यसौ
कुसुमधनुषः काञ्चीदेशे चकास्ति पराक्रमः।।३५।।

பரிமலபரீபாகோத்ரேகம் பயோமுசி காஞ்சனே
சிகரிணி புனர்த்வைதீபாவம் சசிந்யருணாதபம்।
அபி ச ஜனயன்கம் போர்லக்ஷ்மீமனம்புனி கோபேப்யஸௌ
குஸுமதனுஷ: காஞ்சீதேசே சகாஸ்தி பராக்ரம:।।35।।

பயாமுசி:	மேகத்தில் (கேசத்தில்)
பர்மலபரி பாகோத்ரேகம்	வாஸனையின் ஆதிக்கதையும்
காஞ்சனே சிகரிணி	தங்கமயமான பர்வதத்தில் (ஸ்தனத்தில்)
த்வைதீபாவம்	இரண்டாயிருக்கும் தன்மையையும்
ஸசிநி	சந்திரனில் (முகத்தில்)
அருணாதபம்	சிவந்த வெய்யிலையும்
அபி ச	மேலும்
அநம்புநி -	ஜலமில்லத இடத்தில்
கம்போ:	சங்கினுடைய
லக்ஷ்மீம்	சோபையை
ஜநயன்	உண்டுபண்ணிகொண்டும்
குஸுமதனுஷ:	மன்மதனுடைய
கோபி	ஒரு
பராக்ரம:	ஸாமார்த்தியமானது
காஞ்சீதேஸே	காஞ்சீ பிரதேசத்தில்
சகாஸ்தி	விளங்குகிறது

காஞ்சீ தேசத்தில் பிரகாசிக்கிற காமாக்ஷியானவள் மன்மதனின் அதிசயமான சாமார்த்திய ரூபமாக விளங்குகிறாள். அவளுடைய கேசமாகிற மேகத்தில் உயர்ந்த வாஸனையும் ஸ்தனமாகிற மேரு பர்வதத்தில் இரட்டிப்பும், முகமாகிற சந்திரனைல் சூர்ய காந்தியும், ஜலமில்லத இடத்தில் உண்டான சங்குபோன்ற கழுத்து உள்ளவளாயும் பிரகாசிக்கிறாள்.

पुरदमयितुर्वामोत्सङ्गस्थलेन रसज्ञया
सरसकविताभाजां काञ्चीपुरोदरसीमया।
तटपरिसरैर्नीहाराद्रेर्वचोभिरकृत्रिमैः
किमिव न तुलामस्मच्चेतो महेश्वरि गाहते।।३६।।

புரதமயிது: வாமோத்ஸங்க ஸ்தலேன ரஸக்ஞயா
ஸரஸ கவிதாபாஜாம் காஞ்சீபுரோதர ஸீமயா।
தடபரிஸரை: நீஹாராத்ரே: வசோபிரக்ருத்ரிமை:
கிமிவ ந துலாம்; அஸ்மத்சேதோ மஹேச்வரி காஹதே।।

மஹேச்வரி	*ஈச்வரியான காமாக்ஷியே!*
அஸ்மத்சேத:	*என்னுடைய மனதானது*
புரதமயிது:	*புரசத்ருவான பரமசிவனுடைய*
வாமோத்ஸங்கஸ்தலேன	*இடதுமடிப் பிரதேசத்தோடும்*
ஸரஸ கவிதாபாஜாம்	*ரஸமான கவிதை உள்ளவருடைய*
ரஸக்ஞயா	*நாக்குடனும்*
காஞ்சீபுரோதரஸீமயா	*காஞ்சீ நகர நடு எல்லையுடனும்*
நீஹாராத்ரே:	*ஹிமயமலையினுடைய*
தடபரிஸரை:	*கரைப் பிரதேசங்களோடும்*
அக்ருத்ரிமை:	*செய்யப்படாத*
வசோபி:	*வாக்கான வேதங்களோடும்*
துலாம்	*ஸாம்யத்தை*
கிமிவ ந காஹதே	*ஏன் அடைகிறதில்லை*

காமாக்ஷியே! என்னுடைய மனதானது மஹேச்வரனுடைய இடது மடியோடும், ஸரஸ கவிகளுடைய

நாக்குகளுடனும், காஞ்சீ நகர எல்லையுடனும், ஹிமாலயத்தின் கரையுடனும், வேதங்களுடனும் ஏன் ஸாம்யம் அடையவில்லை.

नयनयुगलीमस्माकीनां कदा नु फलेग्रहीं
विदधति गतौ व्याकुर्वाणा गजेन्द्रचमत्क्रियाम्।
मरकतरुचो माहेशाना: घनस्तननम्रिता:
सुकृतविभवा: प्राञ्च: काञ्चीवतंसधुरन्धरा:।।३७।।

நயநயுகலீமஸ்மாகீநாம் கதா நு பலேக்ரஹீம்
விதததி கதௌ வ்யாகுர்வாணா கஜேந்த்ர சமத்க்ரியாம்।
மரகதருச: மாஹேஶாநா: கநஸ்தன நம்ரிதா:
ஸுக்ருத விபவா: ப்ராஞ்ச: காஞ்சீவதம்ஸ துரந்தரா:।।37।।

கதௌ	*நடையில்*
கஜேந்திர சமத்க்ரியாம்	*யானையின் அழகை*
வ்யாகுர்வாணா:	*வெளிப்படுத்துகிறதும்*
மரகத ருச	*மரகதம்போன்ற காந்தியுள்ளவையும்*
கனஸ்தன நம்ரிதா:	*கனமான ஸ்தனத்தால் வணங்கினவையும்*
காஞ்சீ வதம்ஸ துரந்தரா:	*காஞ்சீக்கு அலங்காரமாயிருக்கும், நிலைமையை வகிப்பதாயும் இருக்கிற*
ப்ராஞ்ச:	*புராதனமான*
மாஹேஶாநா:	*மஹேச்வரனுடையதான*
ஸுக்ருத விபவா	*அதிருஷ்ட விசேஷங்கள்*
அஸ்மாகீநாம்	*என்னுடையதான*

நயனயுகலீம்	இரண்டு கண்களையும்
பலேக்ரஹீம்	பயனை அடைந்ததாக
கதா நு	எப்பொழுது
விதததி	செய்யுமோ

கஜம் போன்ற நடை உள்ளவையும், ஸ்தனபரத்தால் வணங்கியவையும், காஞ்சீ நகர அலங்காரமானவையுமாய் இருக்கிற மஹேச்வரனுடைய புண்ய விசேஷங்கள் (காமாக்ஷி) எப்பொழுது என்னுடைய கண்களை பயனுள்ளவையாகச் செய்யுமோ!

मनसिजयशः पारम्पर्यम्मरन्दझरीसुवां
कविकुलगिरां कन्दं कम्पानदीतटमण्डनम्।
मधुरललितं मत्कं चक्षुर्मनीषिमनोहरं
पुरविजयिनः सर्वस्वं तत्पुरस्कुरुते कदा।।३८।।

மனஸிஜயஶ: பாரம்பர்யம் மரந்த ஜரீஸுவாம்
கவிகுல கிராம் கந்தம் கம்பாநதீதட மண்டநம்।
மதுர லலிதம் மத்கம் சக்ஷு: மநீஷி மனோஹரம்
புரவிஜயின: ஸர்வஸ்வம் தத் புரஸ்குருதே கதா।।38।।

மனஸிஜ	மன்மதனுடைய
யஶ: பாரம்பர்யம்	க்யாதிக்கு பரம்பரையாயும்
மரந்த ஜரீஸுவாம்	அமிருதத்தை பெருக்குகிற
கவிகுல கிராம்	கவிகளுடைய கவனத்திற்கு
கந்தம்	மூலமாயும்
கம்பாநதீதட மண்டனம்	கம்பா நதீதீர அலங்காரமாயுமுள்ள
மதுர லலிதம்	இனிதாயும், சுலபமாயும்

மனீஷி மனோஹரம்	யோகிகளின் மனதைக்கவருகிறதுமான
புர விஜயின:	பரமேச்வரனுடைய
ஸர்வஸ்வம்	ஸகலமுமாய் (ஸகல சொத்துப் போல் விளங்கும்வஸ்து (காமாக்ஷி)
மத்கம் சக்ஷு:	எனது நேத்ரத்தை
கதா	எப்போது
புரஸ்குருதே	எதிரில் கொள்ளுவாய்!

மன்மதனுடைய க்யாதி போன்றவளும், கவிகளின் வாக்ஜரிக்கு மூலமாயும், யோகிகளின் மனோரஞ்ஜகியு மான பரமேச்வரரின் ஸர்வஸ்வம்போன்ற காமாக்ஷிதேவி எப்போது எனது கண்கள் முன் தோன்றுவாளோ!

शिथिलिततमो जालां नीलारविन्दविलोचनां
दहनविलसत्फालां लीला गताश्रित काञ्चिकाम्।
करधृतलसच्छूलां कालारिचित्तहरां परां
मनसिजधनुः शालामेलालकां समुपास्महे।।३९।।

ஶிதிலித தமோ ஜாலாம் நீலாரவிந்த விலோசனாம்
தஹந விலஸத் பாலாம் லீலா கதாச்ரித காஞ்சிகாம்।
கரத்ருத லஸத் சூலாம் காலாரிசித்தஹராம் பராம்
மநஸிஜ தநு: ஶாலாம் ஏலாலகாம் ஸமுபாஸ்மஹே।।39।।

ஶிதிலித	நாசமாக்கப்பட்ட
தமோ ஜாலாம்	இருள் கூட்டத்தை உடையவளும்

நீலாரவிந்த விலோசனாம்	கருநீதல் புஷ்பத்திற்கு ஸமமான நேத்ரங்களையுடையவளும்
தஹந விலாஸத் பாலாம்	அக்நியால் விளங்குகிற நெற்றியுள்ளவளும்
லீலா கதாஸ்ரித காஞ்சிகாம்	விளையாட்டு நடையாக காஞ்சியை அடைந்தவளும்
கரத்ருத லஸத்சூலாம்	கையில் தரிக்கப்பட்ட விளங்குகிற சூலமுள்ளவளும்
காலாரி	கால சத்ருவான சிவனுடைய
சித்தஹராம்	மனதை ஆகர்ஷிக்கிறவளும்
மனஸிஜ தநு: ஶாலாம்	மன்மதனுடைய ஆயுத சாலையாயும்
ஏலாலகாம்	ஏலம் போல் வாஸனையுள்ள கேசமுள்ளவளுமான
பராம்	உத்க்ருஷ்ட தேவதையான காமாக்ஷியை
ஸமுபாஸ்மஹே	உபாஸிக்கிறோம்

அக்ஞான இருளை நீக்குகிறவளும், கருத்த காந்தியுடன் விளங்கும் நேத்ரமுள்ளவளும் நெற்றியில் நெருப்புக்கண் படைத்தவளும், சூலாதாரிணியும் பரமசிவன் மனோஹாரிணியுமான அந்த உத்க்ருஷ்ட தேவதையான காமாக்ஷியை நன்கு உபாஸிக்கிறோம்.

कलालीलाशाला कविकुलवच: कैरववनी
शरज्ज्योत्स्नाधारा शशधरशिंशुश्लाघ्यमुकुटी।
पुनीते न: कम्पापुलिनतटसौहार्दतरला
कदा चक्षुर्मार्गम् कनकगिरिधानुष्कमहिषी।।४०।।

கலா லீலா ஶாலா கவிகுலவச: கைரவவநீ
ஶரத் ஜ்யோத்ஸ்நாதாரா ஶஶதரஶிம்ஶ ச்லாத்யமுகுட।
புனீதே ந: கம்பா புலிநதடஸௌஹார்த்ததரலா
கதா சக்ஷுர்மார்க்கம் கனக கிரிதாநுஷ்க மஹிஷீ॥40॥

கலா லீலா சாலா	*வித்தைகளுக்கு விளையாட்டு மண்டபமாயும்*
கவிகுலவச: கைரவ வநீ	*கவி ஸமூஹத்தின் கவிதா வாக்காகிற ஆம்பல் கூட்டத்திற்கு*
சரத் ஜ்யோத்ஸ்நாதாரா	*சரத் கால நிலா தாரைபோன்றவளும்*
ஶஶதரசிம்சு	*பால சந்திரனால்*
ச்லாக்ய மகுட	*விளங்குகிற சிரஸ்ஸுள்ளவளும்*
கம்பா புனித தட	*கம்பா நதியின் மணல் கரையில்*
ஸௌஹார்த்த தரலா	*ஆசையோடு ஸஞ்சரிப்பவளும்*
கனககிரி	*மேரு மலையை*
தாநுஷ்க மஹிஷீ	*தனுஸ்ஸாகக்கொண்ட பரமேச்வரனுடைய பத்னியான காமாக்ஷியானவள்*
கதா	*எப்போது*
ந:	*நம்முடைய*
சக்ஷுர் மார்க்கம்	*நேத்ர பிரதேசத்தை*
புநீதே	*பரிசுத்தமாக்குவாளோ!*

அறுபத்தி நான்கு கலைகளுக்கும் லீலா மண்டபமாயும், கவிகளுடைய வாக்குக்கு சரத் கால சந்திரிகை போன்றவளும், இளம் சந்திரனால் விளங்குகிற சிரஸ் உடையவளும், கம்பா நதீ தீர மணல் திட்டில் ஸஞ்சரிப்பதில்

ஆசையுள்ளவளும், மேரு மலையை ஆயுதமாகக் கொண்ட பகவானின் பத்னியுமான காமாக்ஷி எப்போது தான் எனது நேத்ர மார்க்கத்தை பரிசுத்தமாக்குவளோ?

नम: स्तान्नम्रेभ्य: स्तनकलशभारेण गुरुणा
दधानेभ्यश्चूडाभरणममृतस्यन्दि शिशिरम्।
सदा वास्तव्येभ्य: सविधभुवि कम्पाख्यसरितो
यशोव्यापारेभ्य: सुकृतविभवेभ्य: रतिपते:।।४१।।

நம: ஸ்தாத் நம்ரேப்ய: ஸ்தநகலசபாரேண குருணா
ததாநேப்ய: சூடாபரணமம்ருத ஸ்யந்தி ஶிஶிரம்।
ஸதாவாஸ்தவ்யேப்ய: ஸவிதபுவி கம்பாக்ய ஸரித:
யஶோ வ்யாபாரேப்ய: ஸுக்ருதவிபவேப்ய: ரதிபதே:।।41

குருணா	பெரிதான
ஸ்தன கலச பாரேண	ஸ்தனங்களின் சுமையால்
நம்ரேப்ய:	வணங்கியவையும்
அம்ருத ஸ்யந்தி	அம்ருதத்தை வர்ஷிப்பதான
ஶிஶிரம்	குளிர்ந்த
சூடாபரணம்	கேச பூஷணத்தை
ததாநேப்ய:	தரிப்பவையும்
கம்பாக்ய ஸரித:	கம்பையென்ற பெயருள்ள நதியின்
ஸவித புவி	ஸமீப தேசத்தில்
ஸதா	எப்போதும்
வாஸ்தவ்யேப்ய:	வஸிப்பவையும்
ரதிபதே:	மன்மதனுடைய
யஶோவ்யாபாரேப்ய:	கீர்த்தியின் காரியங்களாயுமிருக்கிற

ஸுக்ருத விபவேப்ய: — புண்ய விசேஷங்களின் பொருட்டு

நமஸ்தாத் — நமஸ்காரமிருக்கட்டும்

குளிர்ந்த அம்ருதத்தை பெருக்குகிற சிரோபூஷண முள்ளவளும், ஸ்தந பாரத்தால் வணங்கியவளும் கம்பா தீரவாஸியும், மன்மதனின் கீர்த்திகார்யமாயுமிருக்கிற புண்ய விசேஷமாக விளங்கும் காமாக்ஷியின் பொருட்டு எனது நமஸ்காரமிருக்கட்டும்.

असूयन्ती काचिन्मरकतरुचो नाकिमुकुटी
कदम्बं चुम्बन्ती चरणनखचन्द्रांशुपटलैः।
तमोमुद्रां विद्रावयतु मम काञ्चीनिलयना
हरोत्सङ्गश्रीमन्मणिगृह महा दीप कलिका।।४२।।

அஸூயந்தீ காசிந் மரகத ருசோ நாகி முகுட
கதம்பம் சும்பந்தீ சரணநக சந்த்ராம்சு படலை:।
தமோ முத்ராம் வித்ரா வயது மம காஞ்சீ நிலயநா
ஹரோத்ஸங்க ஸ்ரீமந் மணி க்ருஹ மஹா தீபகலிகா।।42।।

மரகத ருச: — மரகத ரத்நத்தின் காந்திக்கு

அஸூயந்தீ — எதிரியாயும்

சரண நக சந்த்ராம்சு படலை: — தனது கால் நகமாகிற சந்திரனின் தேஜஸ் ஸமூஹத்தால்

நாகிமுகுட கதம்பம் — தேவர்களின் கிரீட ஸமூஹத்தை

சும்பந்தீ — ஸ்பர்சிப்பதாயும்

ஹரோத்ஸங்க — சிவனுடைய மடியாகிற

ஸ்ரீமந்மணிக்ருஹ — அழகிய ரத்ந கிரஹத்திற்கும்

மஹா தீபகலிகா — பெரிய விளக்குச்சுடராயுமுள்ள

காசித்	ஒரு
காஞ்சீ நிலயநா	காஞ்சீ வாஸியான தேவதையானது
மம	என்னுடைய
தமோ முத்ராம்	அக்ஞானமாகிற இருள் முடிச்சை
வித்ராவயது	நீக்கட்டும்

மரகத காந்தி போன்ற சரீர காந்தி பொருந்தியவளும் நமஸ்கரிக்கிற தேவர்களின் கிரீடத்தை ஸ்பர்சிக்கிற தனது சரண நக காந்தியை யுடையவளும், பரமசிவனுடைய மடியாகிற மங்கள கிருஹத்தில் மஹா தீபம் போல் விளங்குகிறவளுமான 'காஞ்சீ வாஸி' தேவதையானவள் எனது அக்ஞானமாகிற இருளை நீக்கட்டும்.

अनाद्यन्ता काचित्सुजननयनानन्दजननी
निरुन्धाना कान्तिं निजरुचिविलासैर्जलमुचाम्।
स्मरारेस्तारल्यं मनसि जनयन्ती स्वयमहो
गलत्कम्पा शम्पा परिलसति कम्पापरिसरे।।४३।।

அநாத்யந்தா காசித் ஸுஜந நயநாநந்த ஜநநீ
நிருந்தாநா காந்திம் நிஜருசி: விலாஸை: ஜலமுசாம்।
ஸ்மராரே: தாரல்யம் மநஸி ஜநயந்தீ ஸ்வயமஹோ
கலத்கம்பா ஶம்பா பரிலஸதி கம்பா பரிஸரே।।43।।

அநாத்யந்தா	உத்பத்தி முடிவற்றதும்
ஸுஜந நயநாநந்த ஜநநீ	ஸஜ்ஜனங்களின் கண்களுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதும்
நிஜருசி விலாஸை:	தனது காந்தி விலாஸத்தால்

ஜலமுசாம்	மேகங்களுடைய
காந்திம்	சோபையை
நிருந்தாநா	தடை செய்கிறதாயும்
ஸ்மராரே:	மன்மதனுடைய
மநஸி	மனதில்
தாரல்யம்	சஞ்சலத் தன்மையை
ஜநயந்தீ	உண்டாக்குகிறதும்
கலத்கம்பா	அசைவு அற்றதுமான
காசித்	ஒரு
ஶம்பா	மின்னலானது
(காமாக்ஷி) கம்பா பரிஸரே	கம்பா நதீ ஸமீபத்தில்
ஸ்வயம்	ஸ்வதந்திரமாக (மேகமில்லாமல்)
பரிலஸதி	விளங்குகிறது
அஹோ	ஆச்சர்யம்!

கம்பாநதீதீரத்தில் காமாக்ஷியானவள் ஓர் அதிசய மின்னல் கொடியாக விளங்குகிறாள். இந்த மின்னலுக்கு உத்பத்தி நாசமில்லாமல் ஸ்திரமாயிருக்கிறது. இது ஸஜ்ஜன நேத்திரங்களுக்கு ஆனந்தம் கொடுக்கிறது. அசைவற்றது. தானாகத் தனியாகவே இருக்கிறது. மன்மதன் மனதிற்கு ஆட்டம் கொடுப்பது. இத்தகைய அபூர்வ மின்னலாக காமாக்ஷி விளங்குவது அதிசயமாகிறது.

सुधाडिण्डीरश्रीः स्मितरुचिषु तुण्डीरविषयं
परिष्कुर्वाणासौ परिहसितनीलोत्पलरुचिः।
स्तनाभ्यामानम्रा स्तबकयतु मे काङ्क्षित तरुं
दृशामैशानीनां सुकृतफलपाण्डित्यगरिमा।।४४।।

ஸுதா டிண்டீரஸ்ரீ: ஸ்மிதருசிஷு துண்டீர விஷயம்
பரிஷ்குர்வாணாஸௌ பரிஹஸித நீலோத்பல ருசி:।
ஸ்தநாப்யாமாநம்ரா ஸ்தபகயதுமே காங்க்ஷித தரும்
த்ருஶாமைஶாநீநாம் ஸுக்ருத பல பாண்டித்ய கரிமா॥44॥

ஸ்மித ருசிஷு	*சிரிப்பு காந்தியில்*
ஸுதா டிண்டீரஸ்ரீ:	*அம்ருதத்தின் ஆடைபோன்ற சோபையுள்ளவளும்*
துண்டீர விஷயம்	*துண்டீர பிரதேசமான காஞ்சியை*
பரிஷ்குர்வாணா	*அலங்காரமுள்ளதாகச் செய்கிறவளும்*
பரிஹஸித நீலோத்பல ருசி:	*பரிஹாஸம் செய்யப்பட்ட நீலோத்பல காந்தியை உடையவளும்*
ஸ்தநாப்யாம்	*ஸ்தநங்களால்*
ஆநம்ரா	*சிறிது குனிந்தவளும்*
ஐஶாநீநாம்	*பரமேச்வரனுடையவையான*
த்ருஶாம்	*கண்களுடைய*
ஸுக்ருத பல பாண்டித்யகரிமா	*நற்பயனுடைய பாண்டித்யத்தின் உயர்வாகவும் விளங்குகிற*
அஸௌ	*காமாக்ஷி தேவியானவள்*
மே	*என்னுடைய*
காங்க்ஷித தரும்	*மனோரதமாகிற விருக்ஷத்தை*
ஸ்தபகயது	*புஷ்பமுள்ளதாகச் செய்யட்டும்*

அம்ருதத்தின் ஆடைபோன்ற சிரிப்பு காந்தியுள்ளவளும் நீலோத்பல காந்தியை ஏளனம் செய்கிற சரீர சோபையுள்ளவளும், காஞ்சீ நகரத்தை அலங்கரிப் பவளும்,

பரமேச்வரனுடைய கண்களின் ஸுக்ருதம்போல் விளங்குகிறவளுமான காமாக்ஷிதேவி எனது ஆசையாகிற விருக்ஷத்தை புஷ்பிக்கச் செய்யட்டும்.

कृपाधाराद्रोणी कृपणधिषणानां प्रणमतां
निहन्त्री सन्तापं निगममकुटोत्तंसकलिका।
परा काञ्चीलीलापरिचयवती पर्वतसुता
गिरां नीवी देवी गिरिशपरतन्त्रा विजयते।।४५।।

க்ருபாதாராத்ரோணீ க்ருபணதிஷணானாம் ப்ரணமதாம்
நிஹந்தரீ ஸந்தாபம் நிகம மகுடோத்தம்ஸ கலிகா।
பரா காஞ்சீ லீலா பரிசயவதீ பர்வதஸுதா
கிராம் நீவீ தேவீ கிரிஶ பரதந்த்ரா விஜயதே।।45।।

ப்ரணமதாம்	*நமஸ்கரிக்கிற*
க்ருபண திஷணானாம்	*அக்ஞானிகளுக்கு*
க்ருபாதாராத்ரோணீ	*கருணை தாரை நிறைந்த நீர் தொட்டியாயும்*
ஸந்தாபம்	*ஸம்ஸாராதிதாபத்தை*
நிஹந்த்ரீ	*நீக்குகிறவளாயும்*
நிகம மகுடோத்தம்ஸ கலிகா	*வேதங்களின் சிகரமாகிய வேதங்களின் சிரோபூஷண பூங்கொத்தாயும்*
காஞ்சீ லீலா பரிசயவதீ	*காஞ்சியில் விளையாடுவதில் ஈடுபட்டவளும்*
கிராம் நீவீ	*வாக்குகளுக்கு முடிச்சு ஸ்தானமாயும்*
கிரிஶ பரதந்த்ரா	*பரமசிவனுக்குள்பட்ட வளாயுமிருக்கிற*

பர்வத ஸுதா	*பர்வதபுத்ரியான காமாக்ஷி தேவியானவள்*
பரா	*ஸர்வோத்க்ருஷ்டை யாக*
விஜயதே	*விளங்குகிறாள்*

அக்ஞானிகளுக்கு கருணாப்ரவாஹம் நிறைந்த நீர் தேக்கம் போலிருந்து ஸந்தாபத்தை நீக்குகிறவளும் வேதாந்தங்களுக்கு சிரோபூஷண புஷ்பமாயும், வாக்குகளுக்கு பரம ஸ்தானமாயுமுள்ள பரதேவதையான தேவீ ஸர்வோத்கிருஷ்டை யாக விளங்குகிறாள்.

कवित्वश्रीकन्दः सुकृतपरिपाटी हिमगिरेः
विधात्री विश्वेषां विषमशरवीरध्वजपटी।
सखी कम्पानद्याः पदहसितपाथोजयुगली
पुराणी पायान्नः पुरमथनसाम्राज्यपदवी।।४६।।

கவித்வஸ்ரீ கந்த: ஸுக்ருத பரிபாடீ ஹிமகிரே:
விதாத்ரீ விச்வேஷாம் விஷமஶர வீரத்வஜபடீ।
ஸகீ கம்பாநத்யா: பர ஹஸித பாதோஜ யுகலீ
புராணீ பாயாந்ந: புர மதன ஸாம்ராஜ்ய பதவீ।।46।।

கவித்வஸ்ரீ கந்த:	*கவிதா சோபைக்கு மூல ஸ்தானமாயும்*
ஹிமகிரே:	*ஹிமபர்வதத்தின்*
ஸுக்ருத பரிபாடீ	*அத்ருஷ்டத்தின் சின்னமாயும்*
விஸ்வேஷாம்	*ஜகத்துக்களுக்கு*
விதாத்ரீ	*உத்பத்தி செய்கிறவளும்*
விஷமஶர வீரத்வஜபடீ	*மன்மதனுக்கு வீரத்வஜ படம் போன்றவளும்*

கம்பா நத்யா: ஸகீ	கம்பா நதீக்கு ஸகியாயும்
பதஹஸித பாதோஜயுகலீ	தனது இரு பாதங்களால் ஏளனம் செய்யப்பட்ட தாமரை பூவை உடையவளும்
புரமதன ஸாம்ராஜ்யபதவீ	புராரியான பகவானுடைய ஸாம்ராஜ்ய ஸ்தானம் போன்றவளுமான
புராணீ	ஆத்யந்த ரஹிதமான தேவியானவள்
ந:	நம்மை
பாயாத்	காக்கட்டும்

கவிதா லக்ஷ்மிக்கு மூல ஸ்தானமாயும், ஹிமவா னின் அதிருஷ்டமாயும், ஜகத் ஸிருஷ்டிகர்த்ரீயாகவும், மன்மதனின் த்வஜபடம் போன்றவளும், புராரியான பகவானுடைய ஸாம்ராஜ்யமாயும், தாமரை சோபையை ஏளனம் செய்கிற பதகமலமுள்ளவளுமான புராதந வஸ்துவான காமாக்ஷி தேவி நம்மை ரக்ஷிக்கட்டும்.

दरिद्राणा मध्ये दरदलिततापिञ्छसुषमा:
स्तनाभोगक्लान्तास्तरुणहरिणाङ्काङ्कितकचा:।
हराधीना नानाविबुदमुकुटीचुम्बितपदा:
कदा कम्पातीरे कथय विहरामो गिरिसुते।।४७।।

தரித்ராணா மத்யே தரதலிததாபிஞ்ச ஸுஷமா:
ஸ்தாநாபோக க்லாந்தா: தருணஹரிணாங்காங்கித கசா:।
ஹராதீனா நாநாவிபுத முகுட சும்பிதபதா:
கதா கம்பாதீரே கதய விஹராமோ கிரிஸுதே।।47।।

மத்யே	இடுப்பில்
தரித்ராணா:	சிறுத்தவைகளும்
தரதலித	பூத்த
தாபிஞ்ச	காசாம்பூவினுடைய
ஸுஷமா:	சோபையை உடையவளும்,
ஸ்தநாபோகக்லாந்தா:	ஸ்தனபாரத்தினால் சிரமமடைந்தவைகளும்
தருணஹரிணாங்க	இளம் சந்திரனால்
அங்கிதகசா:	அலங்கரிக்கப்பட்ட கேசத்தை உடையவைகளும்
ஹராதீனா	பரமசிவனுக்கு ஸ்வாதீநமாயும்
நாநாவிபுத	அநேக தேவதைகளின் (வித்வான்கள்)
முகுடசும்பித பதா:	சிரஸ்ஸால் முத்தமிடப்பட்ட பாதங்களையுடையவைகளுமாக
கம்பா தீரே	கம்பை நதிக்கரையில்
கதா	எப்போது
விஹராம:	விளையாடுவோம்
கிரிஸுதே!	பார்வதி தேவியே!
கதய	சொல்லுவாயாக

கவி தனக்கு காமாக்ஷி தேவியின் ஸாரூப்யம் எப்போது கிடைக்குமென்று பிரார்த்திக்கிறார்.

பர்வத புத்ரியான காமாக்ஷி தேவியே! இடுப்பில் சிறுத்தும், காசம்பூவின் காந்தியுள்ளதும், ஸ்தநபாரத்தால் களைப்புற்றதும், சந்திரனை அலங்காரமாகக்கொண்ட கேசமுள்ளதும், தேவர்களின் தலைக்கிரீடத்தால் ஸ்பர்சிக்

கப்பட்ட திருவடியை உடையதுமான ரூபம் பெற்று ஹராதீனமாக நான் கம்பா தீரத்தில் எப்போது விளையாடுவேன்? சொல்லுவாயாக.

वरीवर्तु स्थेमा त्वयि मम गिरां देवि मनसो
नरीनर्तु प्रौढा वदनकमले वाक्यलहरी।
चरीचर्तु प्रज्ञा जननि जडिमा नः परजने
सरीसर्तु स्वैरं जननि मयि कामाक्षि करुणा।।४८।।

வரீவர்த்து ஸ்தேமா த்வயி மம கிராம் தேவி மநஸோ
நரீநர்த்து ப்ரௌடா வதந கமலே வாக்யலஹரீ।
சரீசர்த்து ப்ரக்ஞா ஜநநி ஜடிமா ந: பரஜநே
ஸரீஸர்த்து ஸ்வைரம் ஜநநி மயி காமாக்ஷி கருணா।।48।।

ஜநநி!	*தாயே!*
கிராம் தேவி!	*வாக்தேவியே!*
காமாக்ஷி	*காமாக்ஷி தேவியே!*
மம	*எனது*
மநஸ:	*மனதின்*
ஸ்தேமா	*இருப்பானது*
த்வயி	*உன்னிடம்*
வரீவர்த்து	*ஸ்திரமாயிருக்கட்டும்*
வதந கமலே	*தாமரைபோன்ற வாக்கில்*
ப்ரௌடா	*கம்பீரமான*
வாக்யலஹரீ	*வாக்பிரவாஹமானது*
நரீநர்த்து	*நன்கு நர்த்தனம் செய்யட்டும்*
ப்ரக்ஞாஜனனி!	*அறிவை அளிப்பவளே!*
ந: பரஜநே	*நமது எதிரி ஜனத்திடம்*

ஜடிமா	அக்ஞானமானது
சரீசர்த்து	ஸஞ்சரிக்கட்டும்
கருணா	தயையானது
ஸ்வைரம்	தன்னிச்சைப்படி
மயி	என்னிடம்
ஸரீஸர்த்து	பிரவஹிக்கட்டும்

அக்ஞானத்தை நீக்கி அறிவை அநுக்ரஹிக்கும் தேவியான காமாக்ஷியே! உன்னிடம் எனது மனது ஸ்திரமாக ஊன்றியிருக்கவும், கம்பீரமான வாக் பிரவாஹம் வளரவும், எதிரிகளிடம் அக்ஞானம் நடமாடவும் கருணாப்பிரவாஹம் என்னிடம் பரவவும் நீ அநுக்ரஹிப்பாயாக.

क्षणात्ते कामाक्षि भ्रमरसुषमाशिक्षणगुरुः
कटाक्षव्याक्षेपो मम भवतु मोक्षाय विपदाम्।
नरीनर्तु स्वैरं वचनलहरी निर्जरपुरी
सरिद्वीचीनीचीकरणपटुरास्ये मम सदा।।४९।।

க்ஷணாத்தே காமாக்ஷி! ப்ரமர ஸுஷமாசிக்ஷண குரு:
கடாக்ஷவ்யாக்ஷேபோ மம பவது மோக்ஷாய விபதாம்।
நரீநர்த்து ஸ்வைரம் வசநலஹரீ நிர்ஜ்ஜரபுரீ
ஸரீத்வீசீ நீசீகரண படுராஸ்யே மம ஸதா।।49।।

காமாக்ஷி	காமாக்ஷியே!
ப்ரமர ஸுஷமா	வண்டுகளின் அழகை
சிக்ஷண குரு:	சிக்ஷிப்பதில் ஆசார்யன் போன்ற
தே	உனது
கடாக்ஷ வ்யாக்ஷேப:	கடாக்ஷ பாதமானது

மம	என்னுடைய
விபதாம்	ஆபத்துக்களுடைய
க்ஷணாத்மோக்ஷாய	க்ஷணத்தில் விடுதலையின் பொருட்டு
பவது	ஆகட்டும்
நிர்ஜ்ஜரபுரீ ஸரித்	தேவலோக நதியான கங்கையின்
வீசீநீசீ கரணபடு:	அலையை தாழ்த்துவதில் ஸாமர்த்யமுள்ள
வசநலஹரீ	வாக்பிரவாஹமானது
மம	என்னுடைய
ஆஸ்யே	வாக்கில்
ஸதா	எப்போது
ஸ்வைரம்	ஸ்வதந்திரமாக
நரீநர்த்து	நர்த்தனம் செய்யட்டும்

காமாக்ஷி தேவியே! வண்டுகளின் அழகை சிக்ஷிக்கும் உனது கடைக்கண் பார்வையானது எனது ஆபத்துக்களை நிவர்த்திக்க உதவவேண்டும். கங்கா பிரவாஹத்தை கீழ்ப்படுத்தும் தன்மையுள்ள வாக்ஜரியும் என் வாக்கில் எப்போதும் நர்த்தனம் செய்யவேண்டும்.

पुरस्तान्मे भूयः प्रशमनपरः स्तात्भवरुजां
प्रचारस्ते कम्पातटविहृतिसंपादिनि शिवे ।
इमां याच्ञामूरिकुरु जननि दूरीकुरु तमः
परिपाकं मत्कं सपदि बुधलोकं च नय माम्।। ५०।।

புரஸ்தாந்மே பூய: ப்ரஶமந பர: ஸ்தாத் பவருஜாம்
ப்ரசாரஸ்தே கம்பாதட விஹ்ருதி ஸம்பாதிநி ஶிவே
இமாம் யாச்ஞாமுரீகுரு ஜநநி தூரீகுரு தம:
பரிபாகம் மத்கம் ஸபதி புதலோகம் ச நய மாம்॥50॥

கம்பாதட விஹ்ருதி	*கம்பைக்கரையில் விளையாடல்*
ஸம்பாதிநி!	*செய்கிற*
ஶிவே!	*மங்களகரையான*
ஜநனி	*தாயே!*
தே	*உன்னுடைய*
ப்ரசார:	*ஸஞ்சாரமானது*
மே	*எனது*
புரஸ்தாந்	*முன்னிலையில்*
பூய:	*பெரிய*
பவருஜாம்	*ஸம்ஸார வியாதிக்கு*
ப்ரஶமநபர:	*சமனம் செய்வதாக*
ஸ்தாத்	*இருக்கவேணும்*
இமாம்யாச்ஞாம்	*இந்த பிரார்த்தனையை*
ஊரீகுரு	*அங்கீகரிப்பாயாக*
மத்கம்	*என்னுடையதான*
தம: பரீபாகம்	*அக்ஞான நிவிருத்தியை*
தூரீகுரு	*துரத்துவாயாக*
ஸபதி	*சீக்ரம்*
மாம்	*என்னை*
புதலோகம்	*தேவலோகத்திற்கு*
நய ச	*போகச்செய்வாயாக*

கம்பாநதிக்கரையில் விளையாடுகிற, தாயே! என்னுடைய ஸம்ஸாரவினையைத் தீர்க்கும் உனது ஸஞ்சாரமானது என் முன்பு தோன்றவேணும். இந்த பிரார்த்தனையை அங்கீகரித்து தேவலோகத்திற்கும் என்னைப் போகச் செய்வாயாக.

उदञ्चन्ती काञ्चीनगरनिलये त्वत्करुणया
समृद्धा वाग्धाटी परिहसितमाध्वी कवयताम्।
उपादत्ते मारप्रतिभट जटाजूटमुकुटी–
कुटीरोल्लासिन्या: शतमखतटिन्या जयपटीम्।।५१।।

உதஞ்சந்தீ காஞ்சீநகர நிலயே த்வத்கருணயா
ஸம்ருத்தா வாக்தாடீ பரிஹஸித மாத்வீ கவயதாம்।
உபாதத்தே மாரப்ரதிபட ஜடாஜூட முகுடீ
குடீரோல்லாஸின்யா: ஶதமக தடின்யா ஜயபடீம்।।51।।

காஞ்சீ நகர நிலயே!	காஞ்சீ நகரத்தை வாசஸ்தலமாகக் கொண்ட காமாக்ஷியே!
த்வத்கருணயா	உனது தயையால்
கவயதாம்	கவிகளுக்கு
உதஞ்சந்தீ	உண்டாகிறதும்
ஸம்ருத்தா	அபரிமிதமாயும்
பரிஹஸிதமாத்வீ	பரிஹஸிக்கப்பட்ட அமிர்தத்தையுடையதுமான
வாக்தாடீ	வாக்ஜரியானது
மாரப்ரதிபட	மன்மத எதிரியான பரமேசனுடைய
ஜடாஜூட முகுடீ	சடையான க்ரீடமாகிற

குடிர — பொருந்தில்
உல்லாஸின்யா: — விளங்குகிற
சமமக தடின்யா — தேவேந்திர நதியான கங்கையின்
ஜயபடம் — ஜய த்வஜத்தை
உபாதத்தே — அபஹரிக்கிறது

தேவியினுடைய கருணையால் கவிகளுக்கு உண்டாகும் கவிதா வாக்ஜரியானது அமிர்தத்தையும் திரஸ்கரித்து, வேகத்தில் பரமசிவனின் ஜடையாகிற பொந்தில் விளங்குகிற தேவகங்கையின் வெற்றிக் கொடியையும் அபஹரிக்கிறது.

श्रियं विद्यां बुद्धिं जगति नमतां त्वामथयश:
सुपुत्रान् प्रादत्ते तव झटिति कामाक्षि करुणा।
त्रिलोक्यामाधिक्यं त्रिपुरपरिपन्थिप्रणयिनि
प्रणामस्त्वत्पादे शमितदुरिते किं न कुरुते ।।५२।।

ஶ்ரியம் வித்யாம் புத்திம் ஜகதி நமதாம் த்வாமத யஶ:
ஸுபுத்ரான் ப்ராதத்தே தவ ஜடிதி காமாக்ஷி கருணா।
த்ரிலோக்யா மாதிக்யம் த்ரிபுர பரிபந்தி ப்ரணயிநி!
ப்ரணாம: த்வத்பாதே ஶமித துரிதே கிம் ந குருதே।।52।।

த்ரிபுர பரிபந்தி ப்ரணயிநி! — த்ரிபுராஸுரனுக்கு எதிரியான பரமசிவபத்நியே!
காமாக்ஷி — காமாக்ஷி
ஜகதி — உலகில்
த்வாம் — உன்னை
நமதாம் — வணங்குகிறவர்களுக்கு
தவ — உன்னுடைய

கருணா	கிருபையானது
ஶ்ரியம்	ஸம்பத்தையும்
வித்யாம்	படிப்பையும்
புத்திம்	புத்தியையும்
அத	மேலும்
யஶ:	கீர்த்தியையும்
ஸுபுத்ரான்	ஸத்புத்ரர்களையும்
ஜடிதி	சீக்கிரம்
ப்ராதத்தே	கொடுக்கிறது
(அத) த்ரை லோக்யாம்	(மேலும்) மூன்று உலகிலும்
ஆதிக்யம்	உயர்வையும் கொடுக்கிறது
சமித துரிதே	பாபத்தை நீக்குகிற
த்வத்பாதே	உன் சரணங்களில் செய்யப்படும்
ப்ரணாம:	நமஸ்காரமானது
கிம்	எதைத்தான்
ந குருதே	செய்யவில்லை

காமாக்ஷியை நமஸ்கரிப்பவர்களுக்கு அவளுடைய கருணையானது ஐச்வர்யம், வித்யை, ஞானம் ஸத்புத்ராதிகள் பலவற்றைக் கொடுக்கிறது. த்ரிலோக ஆதிக்யத்தையும் கொடுக்கிறது. காமாக்ஷி தேவியே! உனது திருவடிகளில் செய்யும் நமஸ்காரமானது எந்த க்ஷேமத்தைத்தான் தராது? எல்லாவற்றையும் கொடுக்கும்.

मन: स्तम्भं स्तम्भं गमयदुपकम्पं प्रणमतां
सदालोलं नीलं चिकुरजित लोलम्बनिकरम्।

गिरां दूरं स्मेरं घृतशशिकिशोरं पशुपतेः
दृशां भोग्यं योग्यं तुहिनगिरिभाग्यं विजयते।।५३।।

மனஸ்ஸ்தம்பம் ஸ்தம்பம் கமயத் உபகம்பம் ப்ரணமதாம்
ஸதாலோலம் நீலம் சிகுரஜித லோலம்ப நிகரம்।
கிராம் தூரம் ஸ்மேரம் த்ருத ஶஶி கிஶோரம் பசுபதே:
த்ருஶாம் போக்யம் யோக்யம் துஹிநகிரி பாக்யம்
விஜயதே।।53।।

ப்ரணமதாம்	நமஸ்கரிப்பவர்களுடைய
ஸ்தம்பம் ஸ்தம்பம்	மிகவும் ஸ்தம்பித்திருக்கிற
மன:	மனஸ்ஸை
உபகம்பம்	கம்பாநதிக்கு ஸமீபமாக
கமயத்	சேர்ப்பிப்பதாயும்
ஸதாலோலம்	ஸத்துக்களை ஸந்தோஷப்படுத்துவதாயும்
நீலம்	கருத்ததாயும்
சிகுரஜித	கேசங்களால் ஜயித்த
லோலம்ப நிகரம்	வண்டு ஸமூஹத்தை உடையதும்
கிராம் தூரம்	வாக்குக்கு எட்டாததாயும்
ஸ்மேரம்	அழகாயும்
க்ருத ஶஶி கிசோரம்	சிரஸ்ஸில் தரித்த பாலசந்திரனை உடையதும்
பசுபதே:	பசுபதியான பகவானுடைய
த்ருஶாம்	கண்களுக்கு
போக்யம்	உத்ஸாஹகரமாயும்
யோக்யம்	யோக்யமாயுமிருக்கிற

துஹிந கிரிபாக்யம் — ஹிமவத்பர்வதத்தின் அதிஷ்டமான வஸ்துவானது (காமாக்ஷி)

விஜயதே — விளங்குகிறது

நமஸ்கரிக்கிறவர்களுடைய மந்தமான மனஸைக்கூட கம்பா நதீ ஸமீபம் இழுக்கிறவளும், ஸத்துக்களுக்கு ஆச்ரயமாயும், கறுத்தகேச பாசமுள்ளவளும், வாக்குக்கு எட்டாத மஹிமையுள்ளவளும், பரமசிவனின் கண்களுக்கு போக்யமாயுமுள்ள ஹிமவத் பர்வத பாக்யமான காமாக்ஷிதேவி ஸர்வோத்க்ருஷ்டையாக விளங்குகிறாள்.

घनश्यामान्कामान्तकमहिषि कामाक्षि मधुरान्
दृशां पातानेतानमृतजलशीताननुपमान्।
भवोत्पाते भीते मयि वितर नाथे दृढभवन्
मन:शोके मूके हिमगिरिपताके करुणया।।५४।।

கனஸ்யாமான் காமாந்தக மஹிஷி காமாக்ஷி மதுராந்-
த்ருஸாம் பாதாநேதானம்ருதஜலஸீதானனுபமான்।
பவோத் பாதே பீதே மயி விதர நாதே த்ருடபவந்
மனஸ்ஸோகே மூகே ஹிமகிரிபதாகே கருணயா।।54।।

காமாந்தகமஹிஷி! — மன்மத சத்ருவான பரமசிவபத்நியே

ஹிமகிரிபதாகே! — ஹிமயமலையின் கொடிபோன்றவளும்

நாதே! — லோகநாதையாயுமிருக்கிற காமாக்ஷியே!

கனச்யாமான் — மேகம்போல் கருத்தவையும்

மதுரான்	*இனியவையும்*
அம்ருதஜல சீதான்	*அமிர்தஜலம் போல் குளிர்ந்தவையும்*
அனுபமான்	*இணையற்றவையாயுமிருக்கிற*
த்ருசாம் பாதான்	*கடாக்ஷ வீக்ஷணங்களை*
பவோத்பாதேபீதே -	*ஸம்ஸாரமாகிற ஆபத்தில் பயந்தவனும்*
த்ருடபவன் மனஸ்சோகே	*த்ருடமாக ஏற்பட்டுள்ள மனஸ்சோகமுள்ளவனும்*
மூகே	*ஊமையாயுமிருக்கிற*
மயி	*என்னிடம்*
கருணயா	*க்ருபையால்*
விதர	*வைப்பாயாக*

ஹிமவானின் குலக்கொடியும், மன்மதாந்தக சிவபத்நியும், உலகயஜமானியுமான காமாக்ஷியே! மேகம் போல் கருத்து அழகாயும், அம்ருதம்போல் குளிர்ந்து இணையற்றதாயுமுள்ள உனது கடாக்ஷத்தை ஸம்ஸார ஸங்கடத்தில் பீதியடைந்து பலமான மனஸ்சோக மடைந்துள்ள என்னிடம் தயையால் வீசுவாயாக!

नतानां मन्दानां भवनिगलबन्धाकुलधियां
महान्ध्यं रून्धानां अभिलषितसन्तानलतिकाम्।
चरन्तीं कम्पाया: तटभुवि सवित्रीं त्रिजगतां
स्मरामस्तां नित्यं स्मरमथनजीवातुकलिकाम्।।५५।।

நதாநாம் மந்தாநாம் பவநிகல பந்தாகுல தியாம்
மஹாந்த்யம் ருந்தாநாம் அபிலக்ஷித ஸந்தான லதிகாம்।

சரந்தீம் கம்பாயா: தடபுவி ஸவித்ரீம் த்ரிஜகதாம்
ஸ்மராமஸ்தாம் நித்யம் ஸ்மர மதன ஜீவாது கலிகாம்।।55।।

மந்தானாம்	அக்ஞானிகளாகிய
பவநிகல பந்தாகுலதியாம்	ஸம்ஸாரமாகிற விலங்குக்கட்டுகளால் கலங்கிய மனதுள்ள
நதானாம்	பக்தர்களுடைய
மஹாந்தயம்	பெரிய இருளை
ருந்தானாம்	போக்குகிறவளும்
அபிலஷித ஸந்தான லதிகாம்	விருக்ஷ கொடி போன்றவளும்
கம்பாயா:	கம்பா நதியின்
தடபுவி	கரைபிரதேசத்தில்
சரந்தீம்	உலாத்துகிறவளும்
த்ரிஜகதாம்	மூன்று உலகத்திற்கும்
ஸவித்ரீம்	உத்பத்தி காரியாயும்
ஸ்மரமதனஜீவாது கலிகாம்	மன்மதசத்ருவான மஹேச்வரனுக்கு உயிர் ஊட்டும் பூங்கொத்து போன்றவளுமான
தாம்	அந்த காமாக்ஷிதேவியை
நித்யம்	எப்போதும்
ஸ்மராம:	த்யானிப்போம்

ஸம்ஸாரமாகிற விலங்கின் பந்தத்தால் வருந்திய பக்தர்களுடைய அக்ஞானத்தைப்போக்கி இஷ்ட ஸித்தியை

செய்வதில் கல்பக விருக்ஷக் கொடி போன்றவளும், மூன்று உலக ஸ்ருஷ்டிகாரிணியும் பரமசிவனின் உயிர்ஸ்தானமாயுமுள்ள அந்த ஸ்ரீ காமாக்ஷியை எப்போதும் த்யானிப்போம்.

परा विद्या हृद्याश्रितमदनविद्या मरकत–
प्रभानीला लीलापरवशितशूलायुधमना:।
तम: पूरं दूरं चरणनतपौरंदरपुरी–
मृगाक्षी कामाक्षी कमलतरलाक्षी नयतु मे।।५६।।

பராவித்யா ஹ்ருத்யாச்ரித மதனவித்யா மரகத-
ப்ரபா நீலா லீலா பரவஶித ஶூலாயுத மனா:।
தம: பூரம் தூரம் சரணநத பௌரந்தர புரீ-
ம்ருகாக்ஷீ காமாக்ஷீ கமல தரலாக்ஷீ நயது மே।।56।।

பராவித்யா	*உயர்ந்த ஸ்ரீ வித்யையாயும்*
ஹ்ருத்யா	*மனஸுக்கு இன்பமளிப்பவளும்*
ஸ்ரீதமதன விதயா	*மன்மத வித்யையை கொண்டவளும்*
மரகதப்ரபா நீலா லீலா	*மரகதபச்சைப்போல் கறுத்த நிலையாயிருப்பவளும்*
பரவஶித	*ஸ்வாதீனப்படுத்தப்பட்ட*
ஶூலாயுத மனா:	*சூலபாணி மனதையுடையவளும்*
சரணநத	*தனது திருவடிகளில் வணங்கிய*
பௌரந்தரபுரீ ம்ருகாக்ஷீ	*புரந்தரனான இந்திரனுடைய லோகத்திலுள்ள ஸ்திரீகளையுடையவளும்*
கமலதரலாக்ஷீ	*தாமரைபோல் அழகிய*

	கண்ணுள்ளவளுமான காமாக்ஷீயானவள்
மே	*என்னுடைய*
தம: பூரம்	*பாபக்குவியலை*
தூரம் நயது	*தூரீகரணம் செய்யட்டும்*

உத்கிருஷ்ட ஸ்ரீவித்யாஸ்வரூபிணியும், காமவித்யா ச்ரிதையும், பரமசிவமனஸ்ஸை வசப்படுத்தியவளும், தேவ ஸ்திரீகளால் நமஸ்கரிக்கப்பட்ட திருவடியை உடையவளுமான காமாக்ஷீ தேவி எனது பாபஸமூஹத்தைத் துரத்தியடிக்கட்டும்.

अहंताख्या मत्कं कबलयति हा हन्त हरिणी
हठात्संविद्रूपं हरमहिषि सस्याङ्कुरमसौ।
कटाक्षव्याक्षेपप्रकटहरिपाषाणपटलैः-
इमामुच्चैरुच्चाटय झटिति कामाक्षि कृपया।।५७।।

அஹந்தாக்யா மத்கம் கபலயதி ஹா ஹந்த ஹரிணீ
ஹடாத் ஸம்வித்ரூபம் ஹரமஹிஷி ஸஸ்யாங்குரமஸௌ
கடாக்ஷவ்யாக்ஷேபப்ரகடஹரிபாஷாணபடலை:
இமாம் உச்சைருச்சாடய ஜடிதி காமாக்ஷி க்ருபயா।।57।।

காமாக்ஷியே! ஹரமஹிஷி!	*பரமசிவ பத்நியே!*
அஹந்தாக்யா	*அஹம்பாவமென்ற*
ஹரிணீ	*பெண்மான்*
மத்கம்	*என்னுடையதான*
ஸம்வித்ரூபம்	*ஸம்வித்ரூபமான (ஞான ரூபமான)*
ஸஸ்யாங்குரம்	*பயிர் முளையை*

ஹடாத்	பலாத்காரமாக
கபலயதி	விழுங்குகிறது
ஹா ! ஹந்த!	கஷ்டம்! கஷ்டம்!
இமாம்	இந்த பெண்மானை
கடாக்ஷவ்யாக்ஷேப	உனது கடாக்ஷமாகிற
ப்ரகட ஹரிபாஷாண படலை:	வெளிப்படையான இந்திர நீலக்கற்களின் ஸமூஹத்தால்
க்ருபயா	தயையுடன்
ஜடிதி	சீக்கிரமே (உடனடியாகவே)
உச்சை:	வெகுதூரம்
உச்சாடய	துரத்துவாயாக

என்னுடைய அஹம்பாவமாகிற பெண்மான் ஸம்வித் என்ற பயிரைக் கடித்து விழுங்குகிறது, ஆகையால், காமாக்ஷியே! தயை செய்து உனது கடாக்ஷமாகிற இந்திர நீலகற்களின் வீச்சால் அந்த மானை வெகுதூரம் துரத்திவிடுவாயாக.

बुधे वा मूके वा तव पतति यस्मिन्क्षणमसौ
कटाक्ष: कामाक्षि प्रकटजडिमक्षोदपटिमा।
कथङ्कारं नास्मै करमुकुलचूडालमुकुटा
नमोवाकं ब्रूयुर्नमुचिपरिपन्थिप्रभृतय:॥५८॥

புதே வா மூகே வா தவ பததி யஸ்மின் க்ஷணமஸௌ
கடாக்ஷ: காமாக்ஷி! ப்ரகட ஜடிமக்ஷோத படிமா।
கதம் காரம் நாஸ்மை கரமுகுல சூடால முகுடா
நமோவாகம் ப்ரூயு: நமுசி பரிபந்திப்ரப்ருதய:॥58॥

காமாக்ஷியே! ப்ரகட	பலமான
ஜடிமக்ஷோத படிமா	அஞ்ஞானத்தை அழிப்பதில் ஸாமார்த்தியமுள்ள

தவ	உன்னுடைய
அஸௌ கடாக்ஷ:	இந்த கடாக்ஷமானது
க்ஷணம்	ஒரு க்ஷணமாவது
யஸ்மின்	எந்த
புதே வா	வித்வானிடமோ
மூகே வா	ஊமையிடமோ
பததி	விழுமேயானால்
அஸ்மை	அந்த மனிதன் பொருட்டு
நமுசி பரிபந்தி ப்ரப்ருதய:	நமுசி சத்ருவான இந்திரன் முதலிய தேவர்கள்
கர முகுல சூடால முகுடா	கை அஞ்ஜலியை சிரஸ்ஸில் கிரீடமாகக் கொண்டவர்களாக
நமோவாகம்	நமஸ்கார உக்தியை
கதம் காரம்	எப்படித்தான்
ந ப்ரூயு:	சொல்லாமலிருப்பார்கள்?

காமாக்ஷி தேவியின் கடாக்ஷமானது வித்வானோ, மூகனோ எவன் பேரில் விழுந்தாலும், அந்த உத்தம பக்தனுக்கு இந்த்ராதி தேவர்களும் சிரஸ் மேல் கைகூப்பி நமஸ்கார உக்திகள் சொல்லாமலிருக்கமுடியுமா? அவச்யம் சொல்லுவார்கள்.

प्रतीचीं पश्यामः प्रकटरुचिनीवारकणिका
प्रभासध्रीचीनां प्रदलितषडाधारकमलाम्।
चरन्तीं सौषुम्णे पथि परपदेन्दुप्रविगलत्
सुधार्द्राम् कामाक्षीं परिणतपरञ्ज्योतिरुदयाम्।।५९।।

ப்ரதீசீம் பஶ்யாம: ப்ரகடருசி நீவார கணிகா
ப்ரபா ஸத்ரீசீநாம் ப்ரதலித ஷடாதார கமலாம்।
சரந்தீம் ஸௌஷும்நே பதி பரபதேந்து ப்ரவிகலத்
ஸுதார்த்ராம் காமாக்ஷீம் பரிணத பரஞ்ஜ்யோதிருதயாம்।।

ப்ரகடருசி நீவார கணிகாப்ரபாஸத்ரீசீனாம் — *அதிக காந்தியுள்ள நீவார தான்யத்தின் கணங்களுக்கு ஸமமான காந்தியுள்ளவளும்*

ப்ரதலித ஷடாதார கமலாம் — *மலரச் செய்த ஆறு ஆதார சக்ரங்களான பத்மங்களை உடையவளும்*

ப்ரதீசீம் — *உயர் நோக்கியுள்ளவளும்*

ஸௌஷும்நே பதி — *ஸுஷுமா என்ற மார்க்கத்தில்*

சரந்தீம் — *நடப்பவளாயும்*

பரபத — *உயர்ந்த ஸ்தானமாகிற சிரஸிலுள்ள*

இந்து ப்ரவிகளத் ஸுதார்த்ராம் — *சந்திரனிடமிருந்து பெருகுகிற அமிருதத்தால் நனைந்தவளாயுமிருக்கிற காமாக்ஷியை*

பரிணத பரஞ்ஜ்யோதிருதயாம் — *பக்குவமான பரஞ்ஜோதிஸின் அவதாரமாக*

பஶ்யாம: — *அறிந்தோம்*

உயர்ந்த காந்தியுள்ள நீவாரத்தின் சோபையுள்ளவளும், ஷடாதார கமலத்தை மலரச் செய்கிறவளும், ஸௌஷும்நமார்க்கத்தில் ஸஞ்சரிப்பவளாயும், சிரஸிலுள்ள சந்திர பிம்பத்திலிருந்து பெருகிற அமிர்தத்தால்

நனைந்தவளுமான ஸ்ரீ காமாக்ஷியை பரம்ஜோதிஸ் உதயமாகக் காண்கிறோம்.

जम्भारातिप्रभृतिमुकुटी: पादयो: पीठयन्ती
गुम्फान्वाचां बुधजनकृतान्स्वैरमारामयन्ती।
शम्पालक्ष्मीं मणिगणरुचापातपान् प्रापयन्ती
कम्पातीरे कविपरिषदां जृम्भते भाग्यसीमा।।६०।।

ஜம்பாராதி ப்ரப்ருதி முகுட: பாதயோ: பீடயந்தீ
கும்பாந் வாசாம் புதஜன க்ருதாந் ஸ்வைரமாராமயந்தீ।
ஶம்பா லக்ஷ்மீம் மணிகண ருசா பாதபான் ப்ராபயந்தீ
கம்பாதீரே கவி பரிஷதாம் ஜ்ரும்பதே பாக்யஸீமா।।60।।

ஜம்பாராதி ப்ரப்ருதி முகுட:	*ஜம்பாஸுர சத்ருவான இந்திரன் முதலிய தேவர்களின் க்ரீடங்களை*
பாதயோ:	*தனது திருவடிக்கு*
பீடயந்தி	*பீடமாகச் செய்கிறவர்களும்*
புதஜன க்ருதான்	*வித்வான்களால் செய்யப்பட்ட*
வாசாம் கும்பான்	*கவிதா வாக்குகளை*
ஸ்வைரம்	*இச்சைப்படி*
ஆராமயந்தி	*உத்யான வளம்போல் உல்லாசார்த்தமாக உபயோகிப்பவளும்*
மணிகணருசா	*தனது ஆபரண ஸமூஹக் காந்தியால்*
பாதபான்	*விருக்ஷங்களையும்*
சம்பா லக்ஷ்மீம்	*மின்னல் போன்ற சோபையை*
ப்ராபயந்திம்	*அடையச்செய்கிறவளாயும்*

கவி பரிஷதாம்	கவி ஸமூஹத்தின் பாக்யஸீமா - பாக்ய எல்லையாகிற காமாக்ஷிதேவி
கம்பாதீரே	கம்பா நதிக்கரையில்
ஜ்ரும்பதே	ஓங்கி விளங்குகிறாள்

இந்திராதி தேவர்களுடைய சிரஸ் க்ரீடங்களை தனது சரணங்களுக்கு பீடமாகச் செய்கிறவளும், கவிகளுடைய வாக்கு ரசனாரஸத்தை உத்யானம்போல் அநுபவிப் பவளும், தனது ஆபரண காந்தியால் விருக்ஷங்களைக்கூட மின்னல் சோபையுள்ளதாகச் செய்கிறவளுமாக காமாக்ஷி தேவி கவிகளின் பாக்யமாக கம்பாதீரத்தில் பிரகாசிக்கிறாள்.

चन्द्रापीडां चतुरवदनां चञ्चलापाङ्गलीलां
कुन्दस्मेरां कुचभरनतां कुन्तलोद्धूतभृङ्गाम्।
मारारातेर्मदनशिखिनं मांसलं दीपयन्तीं
कामाक्षीं तां कविकुलगिरां कल्पवल्लीमुपासे।।६१।।

சந்த்ராபீடாம் சதுரவதனாம் சஞ்சலாபாங்கலீலாம்
குந்தஸ்மேராம் குசபரநதாம் குந்தலோத்தூத ப்ருங்காம்।
மாராராதே: மதனசிகினம் மாம்ஸலம் தீபயந்தீம்
காமாக்ஷீம் தாம் கவிகுல கிராம் கல்பவல்லீமுபாஸே।।61।।

சந்த்ராபீடாம்	சந்திரனை சிரோ பூஷணமாகக்கொண்டவளும்
சதுரவதனாம்	அழகிய முகமுள்ளவளும்
சஞ்சலாபாங்க லீலாம்	சஞ்சலமான கடாக்ஷப்பார்வை லீலையுள்ளவளும்
குந்தஸ்மேராம்	ஆம்பல் போன்ற புன் சிரிப்புள்ளவளும்

குசபரநதாம்	ஸ்தனபாரத்தால் வணங்கியவளும்
குந்தலோத்தூத ப்ருங்காம்	கேச சோபையால் துரத்தப்பட்ட வண்டுகளையுடையவளும்
மாராராதே:	மன்மத சத்ருவான சிவனுக்கும்
மதனசிகினம்	மன்மத அக்னியை
மாம்ஸளம்	அதிகமாக
தீபயந்தீம்	விருத்தி செய்கிறவளாயும்
கவிகுல கிராம்	கவி ஸமூஹ வாக்குகளுக்கு
கல்பவல்லீம்	கல்பகக்கொடி போன்றவளுமான
தாம்	அந்த
காமாக்ஷீம்	காமாக்ஷிதேவியை
உபாஸே	உபாஸிக்கிறேன்

சந்திரனை ஆபரணமாகக்கொண்டவளும் அழகிய முகசோபயுள்ளவளும், கேச சோபையால், வண்டினங் களை தோற்கடித்தவளும், மன்மதனைக் கொளுத்திய பரமசிவனுக்கும் மன்மதாக்னியை விருத்தி செய்கிற வளும், கவி ஸமூஹ வாக்குகளுக்கு கல்பகக்கொடி போல் இருப்பவளுமான ஸ்ரீ காமாக்ஷி தேவியை உபாஸிக்கிறேன்.

कालाम्भोदप्रकरसुषमां कान्तिभिस्तर्जयन्ती
कल्याणानामुदयसरणि: कल्पवल्ली कवीनाम्।
कन्दर्पारे: प्रियसहचरी कल्मषाणां निहन्त्री
काञ्चीदेशं तिलकयति सा कापि कारुण्यसीमा।।६२।।

காலாம்போத ப்ரகர ஸுஷமாம் காந்திபிஸ் தர்ஜயந்தீ
கல்யாணாநாமுதய ஸரணி: கல்பவல்லீ கவீநாம்।

கந்தர்ப்பாரே: ப்ரிய ஸஹசரீ கல்மஷாணாம் நிஹந்த்ரீ காஞ்சீதேசம் திலகயதி ஸா காபி காருண்யஸீமா॥62॥

காலாம்போத ப்ரகர ஸுஷமாம்	*க்ருத்த மேக ஸமூஹத்தின் அழகை*
காந்திபி:	*தனது காந்தியால்*
தர்ஜயந்தி	*திரஸ்கரிக்கிறவளும்*
கல்யாணாநாம்	*மங்களங்களுக்கு*
உதய ஸரணி:	*உத்பத்தி மார்க்கமாயும்*
கவீநாம்	*கவிகளுக்கு*
கல்பவல்லீ	*கல்பகவிருக்ஷக் கொடியாயும்*
கந்தர்ப்பாரே:	*மன்மத சத்ருவான பரமசிவனுக்கு*
பிரியஸஹசரீ	*பிரியபத்நியாயும்*
கல்மஷாணாம்	*பாபங்களுக்கு*
நிஹந்த்ரீ	*நாசகாரிணியாயும்*
காருண்ய ஸீமா	*கருணைக்கு எல்லைபீடமாயுள்ள*
காபி	*ஒருவள், (காமாக்ஷி)*
காஞ்சீதேசம்	*காஞ்சீ பிரதேசத்தை*
திலகயதி	*திலகம்போல் அலங்கரிக்க காஞ்சியில் விளங்குகிறாள்*

தனது நீலமேக காந்தியால் கறுமேகங்களையும் கீழ்ப்படுத்துகிறவளும், ஸகல க்ஷேமங்களுக்கும் உத்பத்தி ஸ்தாநமாயும், கவிகளின் கற்பக விருக்ஷமாயும், ஸகல பாபங்களையும் போக்குகிறவளுமான, மன்மத சத்ருவான

பரமசிவன் பத்நியான காமாக்ஷிதேவி கருணையின் எல்லையிடமாகயிருக்கிறாள்.

ऊरीकुर्वन्नुरसिजतटे चातुरीं भूधराणां
पाथोजानां नयनयुगले पारिपन्थ्यं वितन्वन्।
कम्पातीरे विहरति रुचा मोघयन्मेघशैलीं
कोकद्वेषं शिरसि कलयन्कोऽपि विद्याविशेषः।।६३।।

ஊரீகுர்வன் உரஸிஜதடே சாதுரீம் பூதராணாம்
பாதோஜாநாம் நயன யுகலே பாரி பந்த்யம் விதன்வன்।
கம்பாதீரே விஹரதி ருசா மோகயன் மேக ஶைலீம்
கோகத்வேஷம் சிரஸி கலயன் கோபி வித்யா
விசேஷ:।।63।।

உரஸிஜதடே	ஸ்தனப்ரதேசத்தில்
பூதராணம்	மலைகளுடைய
சாதுரீம்	மாதிரியை
ஊரீகுர்வன்	அமைத்துக்கொண்டது
நயனயுகலே	இருகண்களிலும்
பாதோஜாநாம்	தாமரைப்பூக்களுடைய
பாரிபந்த்யம்	சத்ருத் தன்மையை
விதன்வன்	செய்துகொண்டும்
மேகஶைலீம்	மேகக்கூட்டத்தை
மோகயன்	காந்தியால் வீணாக்குகிறதும்
சிரஸி	தலையில்
கோகத்வேஷம்	சக்ரவாக பக்ஷியின் எதிர்ப்பை
கலயன்	வஹிப்பதுமான
கோபி	ஒரு
வித்யா விசேஷ:	வித்யா ஸ்வரூப விசேஷமானது

	(காமாக்ஷி)
கம்பாதீரே	கம்பைக்கரையில்
ருசா	தனது சரீர காந்தியால்
விஹரதி	விளையாடுகிறாள்

கம்பாதீரத்தில் காமாக்ஷி தேவி ஓர் அதிசய வித்யா ஸ்வரூபமாக விளங்குகிறாள். மார்பில் பர்வதங்களின் (ஸ்தனங்கள்) சோபையை தாங்குகிறாள். கண்களில் தாமரை புஷ்பத்தின் எதிரித்தன்மையையும் சிரஸில் சக்கிரவாக பக்ஷியின் த்வேஷத்தையும் தாங்கி நீலமேகங்களையும் காந்தியால் ஜயித்து விளங்குகிறாள்.

काञ्चीलीलापरिचयवती कापि तापिञ्छलक्ष्मी: –
जाड्यारण्ये हुतवहशिखा जन्मभूमि: कृपाया:।
माकन्दश्रीर्मधुरकविताचातुरी कोकिलानां
मार्गे भूयान्मम नयनयोर्मान्मथी कापि विद्या।।६४।।

காஞ்சீலீலா பரிசயவதீ காபி தாபிஞ்ச லக்ஷ்மீ:
ஜாட்யாரண்யே ஹுதவஹஶிகா ஜன்மபூமி: க்ருபாயா:।
மாகந்தஶ்ரீ: மதுர கவிதா சாதுரீ கோகிலாநாம்
மார்க்கேபூயான் மம நயநயோ: மான்மதீ காபி
வித்யா।।64।।

காஞ்சீலீலா பரிசயவதீ	*காஞ்சீபுரத்தில் விளையாடுவதில் ஊக்கமுள்ளவளும்*
காபி தாபிஞ்ச லக்ஷ்மீ:	*இணையற்ற காசாம்பூ சோபையுள்ளவளும்*
ஜாட்யாரண்யே	*அக்ஞானமாகிற காட்டில்*

ஹுதவஹஶிகா	காட்டுத்தீயின் சிகை போன்றவளும்
கிருபாயா:	தயைக்கு
ஜன்மபூமி:	உத்பத்தி ஸ்தானமாயும்
மதுர கவிதா சாதுரீ கோகிலாநாம்	இனிமையான கவிதா சாதுர்யமானது குயில்களுக்கு
மாகந்த ஸ்ரீ:	மாந்துளிர் சோபை போன்றவளுமான
காபி	ஒரு
மான்மதீ	மன்மத ஸம்பந்தமுள்ள
வித்யா	வித்யையான, (காமாக்ஷி)
மம	என்னுடைய
நயனயோ:	கண்களின்
மார்க்கே	வழியில்
பூயாத்	தோன்றவேணும்

காசாம்பூவின் தேஜஸ்ஸை உடையவளும், அக்ஞானமாகிற காட்டிற்கு காட்டுத் தீ போன்றவளும், தயையின் உத்பத்தி ஸ்தானமாயும், கவிதையாகிற குயிலுக்கு மாந்துளிர் போன்றவளுமான மன்மத வித்யா ஸ்வரூபிணியான காமாக்ஷி தேவீ எனது கண்களில் தோன்றவேண்டும்.

सेतुर्मातर्मरकतमयो भक्तिभाजां भवाब्धौ
लीलालोला कुवलयमयी मान्मथी वैजयन्ती।
काञ्चीभूषा पशुपतिदृशां कापि कालाञ्जनाली
मत्कं दु:खं शिथिलयतु ते मञ्जुलापाङ्गमाला।।६५।।

**ஸேதுர்மாத: மரகதமயோ பக்திபாஜாம் பவாப்தௌ
லீலா லோலா குவலயமயீ மான்மதீ வைஜயந்தீ।
காஞ்சீபூஷா பசுபதித்ருஶாம் காபி காலாஞ்ஜநாலீ
மத்கம் துக்கம் ஶிதிலயது தே மஞ்ஜுலா பாங்கமாலா॥65**

மாத:! தாயே! பக்திபாஜாம்	உன்னிடம் பக்தி செய்தவர்களுக்கு
பவாப்தௌ	ஸம்ஸார ஸாகரத்தில்
மரகதமய:	மரகத கற்களால் ஏற்பட்ட
ஸேது:	பாலமாயும்
லீலா லோலா	உல்லாஸத்தால் சஞ்சலமாயும்
குவலயமயீ	குவலய புஷ்பரூபமான
மான்மதீ	மன்மதனுடைய
வைஜயந்தீ	ஜெயக்கொடி போன்றதும்
காஞ்சீ பூஷா	காஞ்சீ நகரத்தை அலங்கரிப்பதும்
பசுபதித்ருஶாம்	பசுபதியான பரமசிவனுடைய கண்களுக்கு
காபி	ஒரு
காலாஞ்சணாலீ	கருப்பு மைக்குச்சியாயுமிருக்கிற
தே	உன்னுடைய
மஞ்சுலா	அழகிய
அபாங்கமாலா	கடைக்கண் பார்வை மாலையானது
மத்கம்	என்னுடையதான

துக்கம்	*துக்கத்தை*
சிதிலயது	*போக்கடிக்கட்டும்*

தாயே! உனது அழகிய கடாக்ஷமாலையானது ஸம்ஸார ஸமுத்திரத்தின் பாலம் போன்றதாயும் மன்மதனின் ஜெயக்கொடியாயும், பரமசிவனின் கண்களுக்கு கருப்பு மையிடும் சலாகைபோலுமுள்ளது. அது எனது துக்கத்தை நீக்கட்டும்.

व्यावृण्वाना: कुवलयदलप्रक्रियावैरमुद्रां
व्याकुर्वाणा मनसिजमहाराजसाम्राज्यलक्ष्मीम्।
काञ्चीलीलाविहृतिरसिके काङ्क्षितं न: क्रियासु:-
बन्धच्छेदे तव नियमिनां बद्धदीक्षा: कटाक्षा:।।६६।।

வ்யாவ்ருண்வானா: குவலய தலப்ரக்ரியா வைரமுத்ராம்
வ்யாகுர்வாணா மனஸிஜ மஹாராஜ ஸாம்ராஜ்ய லக்ஷ்மீம்।
காஞ்சீ லீலா விஹ்ருதி ரஸிகே காங்க்ஷிதம் ந: க்ரியாஸு:
பந்தச்சேதே தவ நியமிநாம் பத்ததீக்ஷா: கடாக்ஷா:।।66।।

காஞ்சீலீலா விஹ்ருதி ரஸிகே!	*காஞ்சியில் லீலா ஸஞ்சார ரஸிகையான தேவியே!*
குவலயதலப்ரக்ரியா வைரமுத்ராம்	*குவலய புஷ்பத்தில் நடவடிக்கையில் சத்ருத் தன்மையை*
வ்யாவ்ருண்வானா:	*விவரிக்கின்றவையும்*
மனஸிஜ மஹாராஜ ஸாம்ராஜ்ய லக்ஷ்மீம்	*மன்மத மஹா ராஜனுனுடைய ஸாம்ராஜ்யமாகிற சோபையை*
வ்யாகுர்வாணா:	*விஸ்தரிப்பவைகளும்*
நியமினாம்	*யோகிகளுடைய*

பந்தச்சேதே	பந்தத்தை அறுப்பதில்
பத்ததீக்ஷா:	தீக்ஷை பெற்றவையுமான
தவ	உன்னுடைய
கடாக்ஷா:	கடாக்ஷங்கள்
ந:	எங்களுடைய
காங்க்ஷிதம்	அபீஷ்டத்தை
க்ரியாஸு:	செய்யட்டும்

காஞ்சீயில் லீலா ஸஞ்சார ரஸிகையான காமாக்ஷியே! மேலும் உனது கடாக்ஷங்கள் குவலய புஷ்ப இதழ்களுடன் வைரமுள்ளவையாயும், மன்மத மஹாராஜனின் ஸாம்ராஜ்ய லக்ஷ்மியாயும் பக்தர்களின் ஸம்ஸார பந்தத்தை சேதிப்பதாயுமிருக்கின்றன. அவை எனது அபீஷ்டங்களை கொடுக்கட்டும்.

कालाम्भोदे *सितरुचि दलं कैतकं दर्शयन्ती
मध्येसौदामिनि मधुलिहां मालिकां राजयन्ती।
हंसारावं विकचकमले मञ्जुमुल्लासयन्ती
कम्पातीरे विलसति नवा कापि कारुण्यलक्ष्मीः।।६७।।

காலாம்போதே ★ஸிதருசி தலம் கைதகம் தர்சயந்தீ
மத்யே ஸௌதாமிநி மதுலிஹாம் மாலிகாம் ராஜயந்தீ।
ஹம்ஸாராவம் விகசகமலே மஞ்ஜு முல்லாஸயந்தீ
கம்பாதீரே விலஸதி நவா காபி காருண்ய லக்ஷ்மீ:।।67।।

***शशिरुचि** *ஶஶிருசி

காலாம்போதே	கருத்தமேகத்தில், (கேசத்தில்)
ஸிதருசி	வெளுத்த காந்தியுள்ள

	(சந்திரனின்)
கைதகம்	தாழம்பூவின்
தளம்	மடலை
தர்சயந்தீ	காட்டுகிறவளும், (சந்திர கலை)
மத்யே ஸௌதாமினி	மின்னல் கொடியின் மத்தியில், (சரீர மத்தியில்)
மதுலிஹாம் மாலிகாம்	வண்டுகளின் வரிசையை (ரோமராஜியை)
ராஜயந்தீ	விளங்கச் செய்கிறவளும்
விகசகமலே	மலர்ந்த தாமரைப்பூவில் (பாதத்தில்)
மஞ்ஜு	இனிமையான
ஹம்ஸாரவம்	ஹம்ஸத்வனியை (சலங்கைகளின் சப்தத்தை)
உல்லாஸயந்தீ	ஆனந்திக்கச் செய்கிறவளுமான ஒரு உயர்ந்த
காருண்யலக்ஷ்மீ:	காருண்ய லக்ஷ்மீயானது
கம்பாதீரே விலஸதி	கம்பாதீரத்தில் விளங்குகிறது

கம்பாதீரத்தில் விளங்குகிற கருணாமூர்த்தியான காமாக்ஷியாகிய காருண்ய லக்ஷ்மீயானவள் விலக்ஷணமான சோபையுடன் விளங்குகிறாள். கூந்தலில் வைக்கப்பட்ட தாழம்பூ மடல் போல் தேவியின் கேசத்திலுள்ள சந்திர கலையாக விளங்குகிறது. சரீரமாகிற மின்னல் கொடியின் மத்தியில் வண்டு ஸமூஹம்போல் பிரகாசிக்கிற ரோமராஜியுடன் சோபிக்கிறாள். மலர்ந்த தாமரைப்பூ போலிருக்கிற திருவடிகளில் சலங்கைகள் மூலமாக

ஹம்ஸத்வனியை உண்டாக்குகிறாள். இத்தகைய தேவி கம்பா நதி தீரத்தில் விளங்குகிறாள்.

चित्रं चित्रं निजमृदुतया भर्त्सयन्पल्लवालीं
पुंसां कामान्भुवि च नियतं पूरयन्पुण्यभाजाम्।
जातः शैलान्न तु जलनिधेः स्वैरसञ्चारशीलः
काञ्चीभूषा कलयतु शिवं कोऽपि चिन्तामणिर्मे।।६८।।

சித்ரம் சித்ரம் நிஜம்ருதுதயா பர்த்ஸயன் பல்லவாலீம்
பும்ஸாம் காமான் புவி ச நியதம் பூரயன் புண்ய பாஜாம்।
ஜாத: ஶைலாந்ந து ஜலநிதே: ஸ்வைர ஸஞ்சாரஶீல:
காஞ்சீபூஷா கலயது ஶிவம் கோபி சிந்தாமணிர்மே।।68।।

நிஜம்ருதுதயா	தனது மிருதுத்தன்மையால்
பல்லவாலீம்	தளிர் ஸமூஹத்தை
பர்த்ஸயன்	திரஸ்கரிக்கிறதும்
புவி:	பூமியிலுள்ள
புண்யபாஜாம்	புண்யத்தைப்பெற்ற
பும்ஸாம்	மனிதர்களுக்கு
காமாந்	அபீஷ்டங்களை
பூரயந்	பூர்த்தி செய்கிறதும்
ஸ்வைர ஸஞ்சார ஶீல:	ஸ்வச்சந்தமாக ஸஞ்சரிப்பதும்
ந து ஜலநிதே:	ஸமுத்திரத்திலில்லாமல்
ஶைலாத்	மலையிலிருந்து
ஜாத:	உண்டானதும்
சித்ரம் சித்ரம்	மிக அதிசயமான
காஞ்சீபூஷா	காஞ்சீபுர அலங்காரமானதுமான
கோऽபி	ஒரு

சிந்தாமணி:	சிந்தாமணியானது (காமாக்ஷி)
மே	எனக்கு
சிவம்	மங்களத்தை
கலயது	செய்யட்டும்

கவி இதில் காமாக்ஷியை ஓர் அதிசய சிந்தா மணியாகவர்ணிக்கிறார். காமாக்ஷியாகிற சிந்தாமணி யானது ஸமுத்திரத்திலி ருந்து உண்டானதில்லை.

ஆனால் மலையிலிருந்து, அதாவது ஹிமவானிடமிருந்து உண்டாகியது. இந்த சிந்தாமணி கல்லாயிருந்தும் தனது மிருதுத்தன்மையால் தளிர்களையும் ஜயிக்கிறது. இது ஆச்சர்யம்! இவ்வாறு அதிசயமான சிந்தாமணியானது புண்யசாலிகளின் இஷ்டத்தை பூர்த்திசெய்து கொண்டு காஞ்சிக்கு (ஒட்டியாணத்திற்கு) அலங்காரமாக விளங்குகிறது. அது எனக்கு மங்களத்தை கொடுக்கவேணும்.

ताम्रम्भोजं जलदनिकटे तत्र बन्धूकपुष्पं
तस्मिन्मल्लीकुसुमसुषमां तत्र वीणानिनादम्।
व्यावृण्वाना सुकृतलहरी कापि काञ्चीनगर्याम्
ऐशानी सा कलयतितरामैन्द्रजालं विलासम्॥६९॥

தாம்ராம் போஜம் ஜலதநிகடே தத்ர பந்தூக புஷ்பம்
தஸ்மின் மல்லீ குஸுமஸுஷமாம் தத்ரவீணா நிநாதம்।
வ்யாவ்ருண்வாநா ஸுக்ருதலஹரீ காபி காஞ்சீ நகர்யாம்
ஐஶாநீ ஸா கலயதிதராம் ஐந்த்ர ஜாலம் விலாஸம்॥69॥

ஜலத நிகடே	மேகத்தின் (கூந்தலின்) ஸமீபத்தில்
தாம்ராம்போஜம்	செந்தாமரைப்பூவையும்

	(முகத்தையும்)
தத்ர	அந்த செந்தாமரையில் (முகத்தில்)
பந்தூகபுஷ்பம்	செம்பரத்தம் பூவை(உதடு)யும்
தஸ்மின்	அந்த செம்பரத்தைப் பூவின் இடையில்
மல்லீ குஸும ஸுஷமாம்	மல்லிகைப்பூவின் (பற்களின்) சோபையையும்
தத்ர	அதில்
வீணாநிநாதம்	வீணையின் த்வனியையும், (இனிய குரல்)
வ்யாவ்ருண்வாநா	விளக்கிக்காட்டுகிறவளும்
ஐஶாநீ	ஈசானன் ஸம்பந்தமுள்ளவளுமான
காபி	ஒரு
ஸுக்ருத லஹரீ	புண்ய பரம்பரையானது (காமாக்ஷி)
காஞ்சீ நகர்யாம்	காஞ்சீ பட்டிணத்தில்
ஐந்த்ரஜாலம்	ஐந்த்ரஜால ஸம்பந்தமான
விலாஸம்	விளையாட்டை
கலயதி-தராம்	நன்றாக செய்கிறாள்

காமாக்ஷிதேவியானவள் காஞ்சீ நகரத்தில் ஈசான ஸம்பந்தம் பெற்ற இந்திரஜால விலாஸம் செய்கிறவள் போல் காணப்படுகிறாள். மேகத்தின் ஸமீபத்தில் ஒரு செந்தாமரைப் பூ; அதில் ஒரு செம்பரத்தம்பூ; அதில் மல்லிகைப் புஷ்பம்; அதில் இனிய வீணா சப்தம். இது ஒரு இந்திரஜால லீலை போலிருக்கிறது. மேகம்போன்ற கருத்த கேச பாசத்தின்கீழ் முகமாகிற செந்தாமரைப்பூ. அதில்

செம்பரத்தம்பூ போன்ற உதடு. அதில் பற்களாகிற மல்லிகை புஷ்பம். அதில் இனிய குரலாகிற வீணா சப்தம், இத்யாதிகள் ஜாலவித்யை போன்றிருக்கின்றன.

आहारांशं त्रिदशसदसां आश्रये चातकानां–
आकाशोपर्यपि च कलयन् आलयद्वन्द्वमेषाम्।
कम्पातीरे विहरतितरां कामधेनुः कवीनां
मन्दस्मेरो मदननिगमप्रक्रियासम्प्रदायः॥७०॥

ஆஹாராம்ஶம் த்ரிதச ஸதஸாம் ஆஶ்ரயே சாதகாநாம்
ஆகாஶோபர்யபிச கலயன் ஆலயத்வந்த்வ மேஷாம்।
கம்பாதீரே விஹரதி தராம் காமதேனு: கவீநாம்
மந்தஸ்மேரோ மதன நிகம ப்ரக்ரியா ஸம்ப்ரதாய:॥70॥

சாதகாநாம்	சாதக பக்ஷிகளுக்கு
ஆச்ரயே	ஆச்ரயமான மேகம்போன்ற கேச பாசத்தில்
த்ரிதச ஸதஸாம்	தேவ ஸமூஹத்தினுடைய
ஆஹாராம்சம்	ஆஹாரமாகிற சந்திர கலையை தரிப்பவளும்
ஆகாசோபரி	ஆகாசம்போல் கண்ணுக்கும்புலப்படாத இடுப்புக்குமேல்
ஏஷாம்	இந்த தேவர்களுக்கு
ஆலயத்வந்த்வம்	இரண்டு ஆலயங்களையும் (ஸ்தனங்களையும்)
கலயன்	வஹித்துக்கொண்டு இருப்பவளும்
கவீநாம்	கவிகளுக்கு

காமதேனு:	காமதேனு போன்றவளும்
மந்தஸ்மேர:	மிருதுவான புன்சிரிப்புடன் கூடியவளும்
மதனநிகமப்ரக்ரியா ஸம்ப்ரதாய:	மன்மத வேதமுறை ஸம்ப்ரதாயம் போன்றவளுமான காமாக்ஷிதேவி
கம்பாதீரே	கம்பாநதிக்கரையில்
விஹரதிதராம்	நன்கு விளையாடுகிறாள்

கவிகளுக்கு காமதேனுபோன்றவளும், மன்மத வேதமுறை ஸம்ப்ரதாயம்போல் இருப்பவளும், தேவர்களின் ஆஹாரமான சந்திர கலையை மேகம் போன்ற கேச பாசத்தில் தரிப்பவளும், ஆகாசம்போல் ஸூக்ஷ்மமான இடுப்புக்கு மேல் இரண்டு தேவாலயங்களை (ஸ்தனங்களை) வஹிப்பவளுமான காமாக்ஷீ கம்பாநதீ தீரத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறாள்.

आर्द्रीभूतैः अविरलकृपैः आत्तलीलाविलासैः
आस्थापूर्णैः अधिकचपलैः अञ्चिताम्भोजशिल्पैः।
कान्तैर्लक्ष्मीललितभवनैः कान्तिकैवल्यसारैः
काश्मल्यं नः कबलयतु सा कामकोटीकटाक्षैः॥७१॥

ஆர்த்ரீபூதை: அவிரல க்ருபை: ஆத்த லீலா விலாஸை:
ஆஸ்தாபூர்ணை ரதிகசபலை ரஞ்சிதாம் போஜ ஶில்பை:।
காந்தைர் லக்ஷ்மீ லலிதபவனை: காந்தி கைவல்யஸாரை:
காஶ்மல்யம் ந: கபலயது ஸா காமகோடீ கடாக்ஷை:॥71॥

ஸா	அந்த
காமகோடீ	காமகோடியான

	காமாக்ஷியானவள்
ஆர்த்ரீபூதை:	கருணாரஸத்தால் நனைந்தவையும்
அவிரல க்ருபை:	இடைவிடாத தயையுள்ளவையும்
ஆத்தலீலா விலாஸை:	லீலா விலாஸத்தோடு கூடியவையும்
ஆஸ்தா பூர்ணை:	அநுக்ரஹம் நிறைந்தவைகளும்
அதிகசபலை:	மிகவும் சஞ்சலங்களும்
அஞ்சித	ஆச்ரயிக்கப்பட்ட
அம்போஜ சில்பை:	தாமரையின் சோபையை உடையவைகளும்
கரந்தை:	அழகுள்ளவையும்
லக்ஷ்மீ லலிதபவநை:	லக்ஷ்மிக்கு அழகிய க்ருஹம்போன்றவையும்
காந்தி கை வல்யஸாரை:	காந்தியின் ஒரே வித ஸாரமானவையாயுமிருக்கிற
கடாக்ஷை:	தனது கடாக்ஷங்களால்
ந:	நம்முடைய
காச்மல்யம்	அழுக்கை
கபலயது	போக்கட்டும்

காமகோடியான ஸ்ரீ காமாக்ஷிதேவீ, கருணை மிகுந்தவையும், சஞ்சலங்களும், தாமரைக்கு ஸமமான வையும், லக்ஷ்மீ விலாஸக்ரஹம் போன்றவையுமான தனது கடாக்ஷங்களால், நமது பாபங்களை போக்க வேணும்.

आधून्वत्यै तरलनयनैः आङ्गजीं वैजयन्तीं
आनन्दिन्यै निजपदजुषां आत्तकाञ्चीपुरायै।

आस्माकीनं हृदयमखिलैः आगमानां प्रपञ्चैः
आराध्यायै स्पृहयतितरां आदिमायै जनन्यै ॥७२॥

ஆதூந்வத்யை தரல நயநை: ஆங்கஜீம் வைஜயந்தீம்
ஆனந்தின்யை நிஜபதஜுஷாம் ஆத்த காஞ்சீபுராயை।
ஆஸ்மாகீனம் ஹ்ருதயமகிலை ராகமானாம் ப்ரபஞ்சைர்-
ஆராத்யாயை ஸ்ப்ருஹயதிதராம் ஆதிமாயை ஜனன்யை॥

தரல நயநை:	சஞ்சலமான நேத்ரங்களால்
ஆங்கஜீம்	அங்கஜனான மன்மதனின்
வைஜயந்தீம்	கௌரவத்தை
ஆதூன்வத்யை	அசைப்பவளும்
நிஜபதஜுஷாம்	தனது திருவடியை அடைந்தவர்களுக்கு
ஆனந்தின்யை	ஆனந்தத்தைக் கொடுப்பவளும்
ஆத்த காஞ்சீபுராயை	காஞ்சீபுரத்தை அடைந்தவளும்
அகிலை:	ஸகலமான
ஆகமாநாம் ப்ரபஞ்சை:	வேத ஸமூஹங்களாலும்
ஆராத்யை	பூஜிக்கத்தக்கவளுமான
ஆதிமாயை ஜனந்யை	ஆதிமாதாவான காமாக்ஷிதேவியிடம்
ஆஸ்மாகீநம் ஹ்ருதயம்	நமது ஹ்ருதயமானது
ஸ்ப்ருஹயதிதராம்	மிகவும் ஆசையுள்ளதாய் இருக்கிறது

ஸகல வேதங்களாலும் பூஜிக்கத்தக்கவளும், தனது சரணங்களையடைந்த பக்தர்களுக்கு ஆனந்தமென்கிற மோக்ஷத்தை அளிப்பவளுமான, உலகத்தின் ஆதிமாதாவான ஸ்ரீ காமாக்ஷியிடம் நமது மனம் ஆச்ரயித்து நிற்கிறது.

दूरं वाचां त्रिदशसदसां दुःखसिन्धोस्तरित्रं
मोहक्ष्वेलक्षितिरुहवने क्रूरतारासिपत्रम्।
कम्पातीर प्रणयि कविभिर्वर्णितोद्यच्चरित्रं
शान्त्यै सेवे सकलविपदां शांकरं तत्कलत्रम्।।७३।।

தூரம் வாசாம் த்ரிதசஸதஸாம் துக்கஸிந்தோஸ்தரித்ரம்
மோஹக்ஷ்வேலக்ஷிதிருஹவனே க்ரூரதாராஸி பத்ரம்।
கம்பாதீர ப்ரணயி கவிபிர் வர்ணிதோத்யத் சரித்திரம்
ஶாந்த்யை ஸேவே ஸகலவிபதாம் ஶாங்கரம் தத்
கலத்ரம்।।73।।

த்ரிதச ஸதஸாம் வாசாம்	தேவர்களுடைய வாக்காகிற வேதங்களுக்கும்
தூரம்	எட்டாததும்
துக்க ஸிந்தோ:	துக்கமாகிற நதிக்கு
தரித்ரம்	தாண்டும் ஓடமாயும்
மோஹக்ஷ்வேலக்ஷிதிருஹவனே	அக்ஞானமாகிற விஷ வ்ருக்ஷத்தின் காட்டுக்கு
க்ரூரதாராஸிபத்ரம்	க்ரூரமான கூருள்ள கத்தியாயும்
கம்பாதீரப்ரணயி	கம்பை நதிக்கரை வாஸத்தில் ஆசையுள்ளதும்
கவிபி:	கவிகளால்
வர்ணிதோத்யத் சரித்ரம்	வர்ணிக்கப்பட்டுள்ள உயர்ந்த சரித்ரத்தையுடையதுமான
தத்	அந்த
சாங்கரம் கலத்ரம்	சங்கரனுடைய மனைவியுமான காமாக்ஷியை
ஸகல விபதாம் சாந்த்யை	எல்லாவித ஆபத்துக்களுடையவும்

சாந்தியின்பொருட்டு

ஸேவே ஸேவிக்கிறேன்

வேத வாக்குகளின் எல்லைக்கும் எட்டாதவளும், அக்ஞானமான, விஷ விருக்ஷத்திற்கு கத்தி போன்ற வளுமான சங்கர தேவியான காமாக்ஷியை ஸகல ஆபத்துக்களும் நீங்க வேண்டி நமஸ்கரிக்கிறேன்.

खण्डीकृत्य प्रकृतिकुटिलं कल्मषं प्रातिभश्री
शुण्डीरत्वं निजपदजुषां शून्यतन्द्रं दिशन्ती।
तुण्डीराख्ये महति विषये स्वर्णवृष्टिप्रदात्री
चण्डी देवी कलयति रतिं चन्द्रचूडालचूडे ॥७४॥

கண்டீக்ருத்ய ப்ரக்ருதி குடிலம் கல்மஷம் ப்ராதிபஸ்ரீ
ஶுண்டீரத்வம் நிஜபதஜுஷாம் ஶூந்யதந்த்ரம் திஶந்தீ।
துண்டீராக்யே மஹதி விஷயே ஸ்வர்ணவ்ருஷ்டி ப்ரதாத்ரீ
சண்டீதேவீ கலயதி ரதிம் சந்த்ர சூடால சூடே ॥ 74 ॥

நிஜபதஜுஷாம்	தனது திருவடியை அண்டியவர்களுக்கு
ப்ரக்ருதிகுடிலம்	ஸ்வபாவத்திலேயே குரூரமான
கல்மஷம்	பாபத்தை
கண்டீக்ருத்ய	போக்கடித்து
ப்ராதி பஶ்ரீ	ஞானத்தோடு கூடிய ஸாமர்த்தியத்தை
ஶுண்டீரத்வம்	
ஶூன்யதந்த்ரம்	ஆலஸ்யமின்றி
திஶந்தீ	கொடுப்பவளும்
துண்டீராக்யே	துண்டீரமென்கிற பெயருள்ள
மஹதி விஷயே	உயர்ந்த தேசத்தில்
ஸ்வர்ண	சுவர்ணமயமான மழையைக்

வ்ருஷ்டிப்ரதாத்ரீ	கொடுத்துக்கொண்டிருப்பவளுமான
சண்டீதேவீ	சண்டீ என்ற பெயருள்ள தேவியான காமாக்ஷியானவள்
சந்த்ர சூடாலசூடே	சந்திரனாகிற சிரோபூஷணத்தை சிரஸ்ஸில் தரித்த பரமசிவனிடம்
ரதிம்	ப்ரேமையை
கலயதி	செய்கிறாள்

தன்னுடைய திருவடிகளை அடைந்த பக்தர்களுடைய குடிலமயமான பாபங்களை நீக்கி நல்ல ஞானத்தைக் கொடுப்பவளும் துண்டீர மண்டலத்தில் ஸுவர்ணவர்ஷம் செய்து தரித்ரத்தை நீக்குகிறவளுமான காமாக்ஷி, பரமசிவனின் சந்திரசூடனிடம் அளவற்ற ப்ரேமையைச் செலுத்தி விளங்கிக்கொண்டிருக்கிறாள்.

येन ख्यातो भवति स गृही पूरुषो मेरुधन्वा
यदृक्कोणे मदननिगमप्राभवं बोभवीति।
यत्प्रीत्यैव त्रिजगदधिपो जृम्भते किंपचानः
कम्पातीरे स जयति महान्कश्चिदोजो विशेषः।।७५।।

யேந க்யாதோ பவதி ஸ க்ருஹீ பூருஷோ மேருதந்வா
யத் த்ருக்கோணே மதன நிகம ப்ராபவம் போபவீதி।
யத்ப்ரீத்யைவ த்ரிஜகததிபோ ஜ்ரும்பதே கிம்பசான:
கம்பாதீரே ஸ ஜயதி மஹான் கஶ்சிதோஜோ
விசேஷ:।।75।।

யேன	எந்த (காமாக்ஷியின் தேஜஸ்ஸால்)
மேருதந்வா	மேரு மலையை வில்லாக

	ஐ ளை ய
ஸ பூருஷ:	அந்த பரமபுருஷனான ஈசன்
க்யாத	ப்ரஸித்தனான
க்ருஹீ	க்ருஹஸ்தனாக
பவதி	விளங்குகிறானோ
யத்க்ருகோணே	எந்த தேஜஸ்ஸின் கடைக்கண்களில்
மதன நிகமப்ராபவம்	மன்மத வேதத்தின் கௌரவமானது
போபவீதி	வெளியாகிறதோ
யத்ப்ரீத்யைவ	எந்த தேஜஸ்ஸின் க்ருபையாலேயே
கிம் பசாந:	தரித்ரன்கூட
த்ரிஜகதிப:	மூன்று லோக யஜமானனாக
ஜ்ரும்பதே	விருத்தியடைகிறானோ
ஸ:	அத்தகைய
கச்சித்	ஒரு
ஓஜோவிசேஷ:	தேஜஸ் விசேஷமாகிற (காமாக்ஷி)
கம்பாதீரே	கம்பைக் கரையில்
மஹான்	பெரிதாக
ஜயதி	விளங்குகிறது

மஹா மேருவை வில்லாகக்கொண்ட பரமசிவனின் பத்நியும் தனது கடாக்ஷ மஹிமையால் மன்மத சாஸ்திர மஹிமையை விளக்குகிறவளும், தனது க்ருபையால் தரித்திரனையும் மூன்று லோகாதிபதியாகச் செய்கிறவளு

மான தேஜோமூர்த்தியான காமாக்ஷீதேவீ கம்பா தீரத்தில் விளங்குகிறாள்.

धन्या धन्या गतिरिह गिरां देवि कामाक्षि यन्मे
निन्द्यां भिन्द्यात्सपदि जडतां कल्मषादुन्मिषन्तीम्।
साध्वी माध्वीरसमधुरता भञ्जनी मञ्जुरीतिः
वाणीवेणी झटिति वृणुतात्स्वर्धुनीस्पर्धिनी माम्।।७६।।

தன்யா தன்யா கதிரிஹ கிராம் தேவி! காமாக்ஷி! யந்மே
நிந்த்யாம் பிந்த்யாத் ஸபதி ஜடதாம்
கல்மஷாதுந்மிஷந்தீம்।
ஸாத்வீ மாத்வீரஸ மதுரதா பஞ்ஜநீ மஞ்ஜுரீதி:
வாணீ வேணீ ஜடிதி வ்ருணுதாத் ஸ்வர்துநீ ஸ்பர்த்திநீ
மாம்।।

தேவி	*காமாக்ஷியே!*
மே	*எனக்கு*
தன்யா தன்யா	*மிகவும் மேலானதாயிருக்கிற*
கிராம்	*கவிதா வாக்குகளுடைய*
கதி:	*பிரவாஹமானது உண்டாகவேணும்*
யத்	*ஏனென்றால்*
கல்மஷாத்	*பாபத்திலிருந்து*
உந்மிஷந்தீம்	*உதிக்கிற*
நிந்த்யாம்	*நிந்திக்கத்தக்க*
மே	*என்னுடைய*
ஜடதாம்	*அக்ஞானத்தை*
ஸபதி	*சீக்கிரம்*

பிந்த்யாத்	போக்கும் மேலும்
ஸாத்வீ	அழகியதும்
மாத்வீரஸ மது ரதாபஞ்ஜநீ	தேனின் ரஸத்திலுள்ள மாதுர்யத்தை தோற்கடிப்பதும்
ஸ்வர்துநீ ஸ்பர்த்திநீ	தேவ கங்கையுடன் சண்டை யிடுவதும்
மஞ்சுரீதி:	அழகிய தோரணையுள்ளதுமான
வாணீ வேணீ	வாக்குகளின் வரிசையானது
மாம்	என்னை
வடிதி	சீக்கிரமே
வ்ருணுதாத்	வரிக்கட்டும்

தேவி காமாக்ஷியே! உனது க்ருபையால் தேனிலும் இனியதும், கங்கா பிரவாஹத்திற்கு ஸமமாயும், பாபத்தினால் ஏற்பட்ட அக்ஞானத்தை நீக்குகிறதாயு முள்ள புனிதமான வாக்கிரியானது என்னை வந்து அடையவேணும்.

यस्या वाटी हृदयकमलं कौसुमी योगभाजां
यस्याः पीठी सततशिशिरा शीकरैर्माकरन्दैः।
यस्याः पेटी श्रुतिपरिचलन्मौलिरत्नस्य काञ्ची
सा मे सोमाभरणमहिषी साधयेत्काङ्क्षितानि।।७७।।

யஸ்யா வாடீ ஹ்ருதயகமலம் கௌஸுமீ யோகபாஜாம்
யஸ்யா: பீடீ ஸததசிசிரா சீகரைர் மாகரந்தை:।
யஸ்யா: பேடீ ச்ருதிபரிசலந் மௌலிரத்னஸ்ய காஞ்சீ
ஸா மே ஸோமாபரண மஹிஷீ ஸாதயேத்
காங்க்ஷிதாநி।।77

யோக பாஜாம்	யோக நிஷ்டர்களுடைய
ஹ்ருதயகமலம்	தாமரைப்பூ போன்ற ஹிருதயமானது
யஸ்யா:	எவளுக்கு
கௌஸுமீ வாடீ	புஷ்பவாடி போன்றிருக்கிறதோ
யஸ்யா:	எவளுடைய
பீடீ	ஆஸன பீடிகையானது
மாகரந்தை:	தேன் பிரவாஹத்தின்
சீகரை:	திவலைகளால்
ஸதத சிசிரா	எப்போதும் சீதளமாயிருக்கிறதோ
ச்ருதிபரிசலத்	வேதத்தில் சொல்லப்படுகிற
மௌலிரத்னஸ்ய	சிரோபூஷணமான
யஸ்யா:	எந்த தேவிக்கு
காஞ்சீ	காஞ்சீபுரமானது
பேடீ	பெட்டிபோலிருக்கிறதோ
ஸா	அப்படிப்பட்ட
ஸோமாபரணமஹிஷீ	சந்திரனை ஆபரணமாகக்கொண்ட சிவனுடைய பத்நியமான காமாக்ஷிதேவி
மே	என்னுடைய
காங்க்ஷிதாநி	இஷ்டங்களை
ஸாதயேத்	பூர்த்தி செய்யட்டும்

யோகிகளுடைய ஹ்ருதயத்தை புஷ்பத்தோட்டமாக உடையவளும், எப்போதும் தேன் பிரவஹிக்கிறதால் குளிர்ந்ததான தாமரைப்பூ ஆஸனத்தையுடையவளும்,

வேதங்களின் சிரோரத்னமாக விளங்குகிறவளும், காஞ்சீ புரம் தனக்குப்பெட்டி போலுள்ளவளுமான அந்த சந்திரா பரண பரமசிவ பத்நியான காமாக்ஷி தேவீ எனது இஷ்டங் களை பூர்த்திசெய்யவேணும்.

एका माता सकल जगतामीयुषी ध्यानमुद्रां
ऐकाम्राधीश्वरचरणयोरेकाताना समिन्धे।
ताटङ्कोद्यन्मणिगणरुचाताम्रकर्णप्रदेशा
तारुण्यश्रीस्तबकिततनुः तापसी कापि बाला ।। ७८।।

ஏகா மாதா ஸகல ஜகதா மீயூஷீ த்யான முத்ராம்-
ஏகாம்ப்ராதீச்வர சரணயோ ரேகதாநா ஸமிந்தே।
தாடங்கோத்யந் மணிகணருசா தாம்ரகர்ணப்ரதேசா
தாருண்யஶ்ரீ ஸ்தபகித தநு: தாபஸீ காபி பாலா।।78।।

தாடங்க	காது குண்டத்திலிருந்து
உத்யத் மணிகணருசா	உண்டாகிற ரத்தி ஸமூஹ காந்தியால்
தாம்ரகர்ண ப்ரதேசா	சிவந்த வர்ணமாயுள்ள காது பிரதேசத்தை உடையவளும்
தாருண்யஶ்ரீ ஸ்தபகித தநு:	யௌவந சோபையால் பூங்கொத்து போன்ற திருமேனியுள்ளவளும்
ஸகல ஜகதாம்	எல்லா உலகங்களுக்கும்
ஏகா மாதா	ஒரே தாயாராயும்
ஏகாம்ராதீச்வர சரணயோ:	ஏகாம்ரநாதனுடைய திருவடிகளில்
ஏகதாநாம்	நிலையுள்ளதான
த்யான முத்ராம்	த்யான முத்ரையை

ஈயுஷீ	அடைந்தவளாயுமிருக்கிற
பாலா தபஸீ	இளம் தாபஸியாக
காபி	ஒருவள் (காமாக்ஷி)
ஸமிந்தே	பிரகாசிக்கிறாள்

ஏகாம்ரநாதனுடைய திருவடியிலேயே நிலைத்த த்யானமுள்ளவளும், யௌவன சோபையால் பூங்கொத்து போல் அழகிட்ட திருமேனியுள்ளவளும், உலகத்திற்கு ஒரே தாயும், காதிலுள்ள குண்டலத்தின் சோபையால் சிவந்து பிரகாசிக்கும் கர்ண பிரதேசத்தையுடைய வளுமான காமாக்ஷிதேவி ஒரு இளம் தாபஸிபோல் விளங்குகிறாள்.

दन्तादन्तिप्रकटनकरी दन्तिभिर्मन्दयानै:
मन्दाराणां मदपरिणतिं मथ्नती मन्दहासै:।
अङ्कूराभ्यां मनसिजतरोरङ्कितोरा: कुचाभ्यां
अन्त:काञ्चि स्फुरति जगतां आदिमा कापि माता।।७९।।

தந்தா தந்தி ப்ரகடனகரீ தந்திபிர் மந்தயானை:
மந்தாராணாம் மதபரிணதிம் மத்நதீ மந்தஹாஸை:।
அங்கூரர்ப்யாம் மநஸிஜதரோ: அங்கிதோரா: குசாப்யாம்
அந்த: காஞ்சி ஸ்புரதி ஜகதாம் ஆதிமா காபி மாதா।।79।।

மந்தயானை:	தனது மந்த கமனங்களால்
தந்திபி:	யானைகளோடு
தந்தா தந்திப்ரகடனகரீ	தந்தத்தினால் நடத்தும் யுத்தத்தை வெளிப்படுத்துகிறவளும்
மந்தஹாஸை:	தனது மந்தஹாஸங்களால்
மந்தாராணாம்	மந்தாரபுஷ்பங்களுடைய

மதபரிணதிம்	கர்வப்பெருக்கை
மத்நதீ	நாசமாக்குபவளும்
மநஸிஜ தரோ:	மன்மதனாகிற விருக்ஷத்தில்
அங்கூராப்யாம்	அங்குரங்கள்போல் விளங்குகிற
குசாப்யாம்	ஸ்தனங்களால்
அங்கிதோரா:	பிரகாசிக்கிறமார்பை
	உடையவளும்
ஜகதாம்	உலகத்திற்கு
ஆதிமா	ஆதிமாதாவாகவுள்ள
காபி	ஒருவள் (காமாக்ஷி)
அந்த: காஞ்சி	காஞ்சீ நகருக்குள்
ஸ்புரதி	விளங்குகிறாள்

தனது அழகிய மந்தகமனங்களால் யானைகளையும் ஜயித்தவளும், மந்தஹாஸங்களால் மந்தார புஷ்பங்களின் கர்வத்தை பங்கம் செய்கிறவளும், மன்மத விருக்ஷத்தின் அங்குரங்கள்போல் விளங்குகிற ஸ்தானங்களால் சோபிக்கிறவளுமான ஆதிமாதா ஸ்ரீ காமாக்ஷீ காஞ்சியில் ப்ரகாசிக்கிறாள்.

त्रियम्बककुटुम्बिनीं त्रिपुरसुन्दरीमिन्दिरां
पुलिन्दपतिसुन्दरीं त्रिपुरभैरवीं भारतीम्।
मतङ्गकुलनायिकां महिषमर्दिनीं मातृकां
भणन्ति विबुधोत्तमा विहृतिमेव कामाक्षि ते।।८०।।

த்ரியம்பக குடும்பினீம் த்ரிபுரஸுந்தரீமிந்திராம்
புலிந்தபதி ஸுந்தரீம் த்ரிபுர பைரவீம் பாரதீம்।
மதங்ககுல நாயிகாம் மஹிஷ மர்த்திநீம் மாத்ருகாம்

பணந்தி விபுதோத்தமா விஹ்ருதிமேவ காமாக்ஷி தே॥80॥

காமாக்ஷி!	காமாக்ஷியே!
தே	உன்னுடைய
விஹ்ருதிமேவ	விலாஸத்தையே
திரியம்பக குடும்பினீம்	முக்கண்ணன் பத்நியான பார்வதியென்றும்
த்ரிபுரஸுந்தரீம்	திரிபுரனின் அழகி என்றும்
இந்திராம்	மஹாலக்ஷ்மியென்றும்
புலிந்தபதி ஸுந்தரீம்	கிராத (வேடன்) ராஜன் பார்யையான கிராதியென்றும்
த்ரிபுர பைரவீம்	த்ரிபுர பைரவியென்றும்
பாரதீம்	பாரதியென்றும்
மதங்ககுல நாயிகாம்	மதங்க குலநாயகியான மாதங்கியென்றும்
மஹிஷமர்த்திநீம்	மஹிஷாஸுரமர்த்திநீயென்றும்
மாத்ருகாம்	அகாராதி அக்ஷரப்ரியபாத்யையான மாதாவாகவும்
விபுதோத்தமா:	வித்வத் சிரேஷ்டர்கள்
பணந்தி	வர்ணித்து சொல்லுகிறார்கள்

ஸ்ரீ காமாக்ஷி தேவியே! கவிகளான வித்வான்கள் உனது விலாஸங்களேயே, பார்வதியென்றும், திரிபுர ஸுந்தரியென்றும், லக்ஷ்மியென்றும், வேட பத்னி யென்றும், திரிபுர பைரவியென்றும், பாரதி யென்றும், மாதங்கியென்றும், மஹிஷாஸுரமர்த்தினியென்றும், அக்ஷர மாத்ருகையென்றும் பலவாறாக வர்ணித்துக் கூறுகிறார்கள்.

महामुनिमनोनटी महितरम्य कम्पातटी
कुटीरकविहारिणी कुटिलबोधसंहारिणी।
सदा भवतु कामिनी सकल देहिनां स्वामिनी
कृपातिशयकिङ्करी मम विभूतये शाङ्करी।।८१।।

மஹாமுனி மனோநடீ மஹிதரம்ய கம்பாதடீ
குடீரக விஹாரிணீ குடிலபோத ஸம்ஹாரிணீ।
ஸதா பவது காமிநீ ஸகல தேஹிநாம் ஸ்வாமிநீ
க்ருபாதிஶய கிங்கரீ மம விபூதயே சாங்கரீ।।81।।

மஹாமுனி மனோநடீ	பெரிய ரிஷிகளின் மனதில் நடிகை போன்றவளும்
மஹிதரம்ய கம்பாதடீ குடீரக விஹாரிணீ	மதிக்கத்தக்க அழகுள்ள கம்பாதடத்திலுள்ள ஆலயத்தில் விஹாரம் செய்பவளும்
குடிலபோத ஸம்ஹாரிணீ	கோணலான அக்ஞானத்தை ஸம்ஹரிப்பவளும்
ஸகல தேவிநாம் ஸ்வாமிநீ	எல்லா பிராணிகளுக்கும் யஜமானியும்
கிருபாதி ஶய கிங்கரீ	கருணையென்கிற அதிசய கிங்கரியை (வேலைக்காரியை) உடையவளுமான
சாங்கரீ காமிநீ	சங்கர பத்நியான ஸ்திரீயானவள்
மம	என்னுடைய
விபூதயே	க்ஷேமத்தின் பொருட்டு
ஸதா பவது	எப்போதுமிருக்கட்டும்

மஹர்ஷிகளின் மனதில் எப்போதும் விலாஸிக் கிறவளும், அழகிய கம்பா நதிக்கரையிலுள்ள ஆலயத்தில் விஹாரம் செய்துகொண்டிருப்பவளும், அக்ஞானத்தை நீக்குகிறவளும் ஸகல ப்ராணிகளுக்கும் ஈச்வரியும், கருணையென்கிற கிங்கரியுடன் கூடியவளு மான சங்கர பத்நியான தேவி எப்போதும் என்னுடைய க்ஷேமத்தைக் கொடுப்பவளாக இருக்கவேணும்.

जडाः प्रकृतिनिर्धनाः जनविलोचनारुंतुदाः
नरा जननि वीक्षणं क्षणमवाप्य कामाक्षि ते।
वचःसु मधुमाधुरीं प्रकटयन्ति पौरन्दरी-
विभूतिषु विडम्बनां वपुषि मान्मथीं प्रक्रियां॥८२॥

ஜடா: ப்ரக்ருதி நிர்த்தனா: ஜனவிலோசனாருந்துதா:
நரா ஜனனி வீக்ஷணம் க்ஷணம் அவாப்ய காமாக்ஷி!தே!
வசஸ்ஸு மது மாதுரீம் ப்ரகடயந்தி பௌரந்தரீ
விபூதிஷு விடம்பநாம் வபுஷி மான்மதீம் ப்ரக்ரீயாம்॥82॥

ஜனனி	*தாயே!*
காமாக்ஷி!	*காமாக்ஷி தேவியே!*
ஜடா:	*மூடர்களாயும்*
ப்ரக்ருதி நிர்த்தனா:	*பிறவியிலேயே தரித்ரர்களாயும்*
ஜநவிலோசனாருந்துதா:	*ஜனங்களுடைய கண்களுக்கு அருவறுப்பைக் கொடுக்கக்கூடிய ரூபமுள்ளவர்களுமான*
நரா:	*மனிதர்கள்*
தே	*உன்னுடைய*
வீக்ஷணம்	*கடாக்ஷத்தை*

க்ஷணம்	க்ஷணமாவது
அவாப்ய	அடைந்து
வசஸ்ஸு	வாக்கில்
மதுமாதுரீம்	தேனின் இனிமையும்
பௌரந்தரீ விபூதிஷு	இந்திரனுடைய ஐஸ்வர்யங்களில்
விடம்பநாம்	அலக்ஷ்யத்தையும்
வபுஷி	சரீரத்தில்
மான்மதீம்	மன்மதனுக்கொப்பான
ப்ரக்ரியாம்	போக்கையும்
ப்ரகடயந்தி	ப்ரகாசப்படுத்துகிறார்கள்

தாயே! காமாக்ஷி! மூடர்களும், தரித்ரர்களும், குரூபிகளும்கூட உனது கடாக்ஷ வீக்ஷணத்தை க்ஷணம் பெற்றால் கூட, தேனுக்கு ஸமமான வாக்கு மஹிமையையும், இந்திரனுடைய ஐஶ்வர்யத்திற்கு மேலான தனத்தையும், மன்மதனுக்கொப்பான சரீர அழகையும் பெருகிறார்கள்.

घनस्तनतटस्फुटस्फुरितकञ्चुली चञ्चली–
कृतत्रिपुरशासना सुजनशीलितोपासना।
दृशोः सरणिमश्नुते मम कदा नु काञ्चीपुरे
परा परमयोगिनां हृदय चित्कला पुष्कला।।८३।।

கனஸ்தன தடஸ்புடத் ஸ்புரித கஞ்சுலீ சஞ்சலீ
க்ருதத்ரிபுர ஶாஸநா ஸுஜந சீலிதோ பாஸநா।
த்ருசோ: ஸரணிமஶ்நுதே மம கதா நு காஞ்சீ புரே
பரா பரமயோகிநாம் ஹ்ருதய சித்கலா புஷ்கலா ।। 83।।

கனஸ்தநதட	கடினமான ஸ்தந பிரதேசத்தில்
ஸ்புட ஸ்புரித	நன்கு விளங்குகிற
கஞ்சுலீ	ரவிக்கையால்
சஞ்சலீ க்ருத	சஞ்சலமாக்கப்பட்ட
த்ரிபுரஶாஸநா	த்ரிபுராரியான பரமேஷ்வரனை உடையவளும்
ஸுஜந ஶீலிதோபாஸநா	ஸத்துக்களுடைய உபாஸனத்தோடு கூடியவளும்
பரமயோகிநாம் ஹ்ருதய	உத்தமயோகிகளுடைய ஹ்ருதயத்தில்
புஷ்கலா	பரிபூர்ணையான
சித்கலா	சைதன்ய மூர்த்தியாயுள்ள தேவியானவள் (காஞ்சீபுரே - காஞ்சீநகரத்தில்)
மம	என்னுடைய
த்ருஶோ:	கண்களின்
ஸரணிம்	மார்க்கத்தை
கதா நு	எப்போது
அஶ்நுதே	அடைவாளோ?

தனது ஸ்தன பிரதேசத்தில் விளங்குகிற கஞ்சுகசோ பையால் பரமசிவனுடைய மனதை வசப்படுத்துகிறவளும், உத்தம யோகிகளால் உபாஸிக்கப்படுகிற வளுமான சிந்மூர்த்தியான காமாக்ஷீதேவீ காஞ்சியில் என் கண்களுக்கு எப்போது புலப்படுவாளோ?

कवीन्द्रहृदयेचरी परिगृहीतकाञ्चीपुरी
निरूढकरुणाझरी निखिललोकरक्षाकरी।
मन:पथदवीयसी मदनशासनप्रेयसी
महागुणगरीयसी मम दृशोऽस्तु नेदीयसी।।८४।।

கவீந்த்ர ஹ்ருதயே சரீ பரிக்ருஹீத காஞ்சீபுரீ
நிருட கருணாஜரீ நிகில லோக ரக்ஷாகரீ।
மந: பததவீயஸீ மதன சாஸந ப்ரேயஸீ
மஹாகுண கரீயஸீ மம த்ருசோ அஸ்து நேதீயஸி।।84।।

கவீந்த்ர ஹ்ருதயேசரீ	கவிச்ரேஷ்டர்களின் மனதில் ஸஞ்சரிப்பவளும்
பரிக்ரஹீத காஞ்சீபுரீ	காஞ்சீபுரியை வஸிக்க இடமாகக் கொண்டவளும்
நிருடகருணாஜரீ	நிறைந்த கருணை ப்ரவாஹமுள்ளவளும்
நிகில லோகரக்ஷாகரீ	ஸகல லோகங்களையும் ரக்ஷிப்பாளும்
மன: பததவீயஸீ	மனஸ்ஸுக்கு எட்டாதவளும்
மதன சாஸன ப்ரேயஸீ	மன்மத சத்ருவான பரமேச்வரனின் காதலியும்
மஹாகுணகரீயஸீ	உத்தம குணங்களால் பெருமையடைந்தவளுமான தேவீ
மம	என்னுடைய
த்ருசோ:	கண்களுக்கு
நேதீயஸீ	நெருங்கியவளாக எப்போது ஆவாளோ?

கவிச்ரேஷ்டர்களின் மனதில் உலாவுகிறவளும், கருணாபிரவாஹ ரூபமாயும் - ஸகல லோகரக்ஷிணியும் மனதிற்கெட்டாத மஹிமையுள்ளவளுமான, மன்மத சத்ரு பிரியையான காமாக்ஷி தேவீ எப்போது என்கண்களுக்கு நெருங்கியவளாவளோ?

धनेन न रमामहे खलजनान्न सेवामहे
न चापलमयामहे भवभयान्न दूयामहे।
स्थिरां तनुमहेतरांमनसि किं च काञ्चीरत–
स्मरान्तक कुटुम्बिनीचरणपल्लवोपासनाम्।।८५।।

தனேந ந ரமாமஹே கலஜநாந் ந ஸேவாமஹே
ந சாபலமயாமஹே பவபயாந் ந தூயாமஹே।
ஸ்திராம்தநுமஹேதராம் மனஸி கிம் ச காஞ்சீரத
ஸ்மராந்தக குடும்பினீ சரணபல்லவோபாஸநாம்।।85।।

தனேந	பணத்தால்
ந ரமாமஹே	திருப்தியடையமாட்டோம்
கலஜநாந்	துஷ்ட ஜனங்களை
ந ஸேவாமஹே	அநுஸரிக்கமாட்டோம்
சாபலம்	சஞ்சலத்தனத்தை
ந அயாமஹே	அடையமாட்டோம்
பவபயாத்	ஸம்ஸாரபயத்திலிருந்து
ந துயாமஹே	கிலேசப்படமாட்டோம்
கிந்து	ஆனால்
காஞ்சீரத	காஞ்சியில் ரஸிக்கிற
ஸ்மராந்ரக குடும்பினீ	மன்மத சத்ருவான பகவானுடைய மனைவியின்

சரணபல்லவோபாஸனாம் — திருவடிகளாகிற துளிர்களின் உபாஸனத்தையே

ஸ்திரம் — உறுதியாக

மனஸி — மனதில்

தநுமஹேதராம் — செய்துகொண்டிருப்போம்

பண ஆசையால் திருப்தியற்றும், துர்ஜன ஸஹவாஸத்தை வெறுத்தும் ஆசையை விட்டும், ஸம்ஸார பயத்தை ஒழித்தும், பரமேச்வரனுடைய பத்நியான காமாக்ஷி தேவியின் திருவடித்தாமரை த்யானத்தையே உறுதியாகச் செய்து வருவோம்.

सुरा: परिजना वपुर्मनसिजाय वैरायते
त्रिविष्टपनितम्बिनीकुचतटी च केलीगिरि:।
गिर: सुरभयो वयस्तरुणिमा दरिद्रस्य वा
कटाक्षसरणौ क्षणं निपतितस्य कामाक्षि ते।।८६।।

ஸுரா: பரிஜநா வபு: மனஸிஜாய வைராயதே
த்ரிவிஷ்டபநிதம்பினீ குசதடீ ச கேலீகிரி:।

கிர: ஸுரபயோ வய: தருணிமா தரித்ரஸ்ய வா
கடாக்ஷஸரணௌ க்ஷணம் நிபதிதஸ்ய காமாக்ஷி தே।।86।।

காமாக்ஷி தே — காமாக்ஷி தேவியே! உன்னுடைய

கடாக்ஷ ஸரணௌ — கடாக்ஷ மார்க்கத்தில்

க்ஷணம் — க்ஷண காலமாவது

நிபதிதஸ்ய — விழுந்தவனுக்கு

தரித்ரஸ்ய வா — தரித்திரனாயிருந்தாலும்

	(இவனுக்கு)
ஸுரா:	தேவர்கள்
பரிஜநா:	வேலைக்காரர்களாகிறார்கள்
வபு:	சரீரமானது
மனஸிஜாய	மன்மதனுக்கு
வைராயதே	எதிரியாகிறது
திரிவிஷ்டபநிதிம்பினீ	தேவஸ்திரீகளுடைய
குசதடீ	ஸ்தநதேசமானது
கேலீ கிரி:	விளையாட்டு பர்வதமாயிருக்கிறது
கிர:	வாக்குகள்
ஸுரபய:	மதுரமாகின்றன
வய:	வயஸ் (வயதும்)
தருணிமா	யௌவனமாகிறது

ஏ! காமாக்ஷி தேவியே! உனது கடாக்ஷ வழியில் ஸம்பந்தப்பட்டவள் தரித்ரனாயிருந்தபோதிலும் அவன் சகல க்ஷேமத்தையும் அடைகிறான் அவனுக்கு தேவர்கள் கிங்கரர்கள், தேவஸ்திரீகளின் போகம், மதுரமான வாக்ஜரி, யௌவனம் இவைகள் கிடைக்கின்றன.

पवित्रय जगत्त्रयीविबुधबोधजीवातुभिः
पुरत्रयविमर्दिनः पुलककञ्चुलीदायिभिः।
भवक्षयविचक्षणैर्व्यसनमोक्षणैर्वीक्षणैः
निरक्षरशिरोमणिं करुणयैव कामाक्षि माम्।।८७।।

பவித்ரய ஜகத்ரயீ விபுதபோத ஜீவாதுபி:
புரத்ரய விமர்த்தின: புலககஞ்சுலீதாயிபி:।

பவக்ஷயவிசக்ஷணை: வ்யஸனமோக்ஷணைர் வீக்ஷணை:
நிரக்ஷர ஶிரோமணிம் கருணயைவ காமாக்ஷி மாம்॥87॥

காமாக்ஷியே! ஜகத்ரயீ	மூன்று லோகத்திலுள்ள
விபுதபோத	ஞானிக்கு
ஜீவாதுபி:	உயிர் ஸ்தானங்களையும்
புரத்ரய விமர்த்தின:	த்ரிபுர ஸம்ஹாரியான பரமேச்வரனுக்கு
புலககஞ்சுலீதாயிபி:	மயிர் கூச்சலாகிற கஞ்சுகத்தை கொடுப்பவையும்
பவக்ஷய விசக்ஷணை:	ஸம்ஸார பந்த நாசத்தில் ஸாமர்த்தியமுள்ளவையும்
வ்யஸந மோக்ஷணை:	துக்கத்தை நீக்குகிறவைகளுமான
வீக்ஷணை:	கடாக்ஷங்களால்
கருணயா ஏவ	தயையால் தான்
நிரக்ஷர ஶிரோமணிம்	அக்ஷரஞானமற்ற
மாம்	என்னை
பவித்ரய	பரிசுத்தனாக்குவாயாக

காமாக்ஷி தேவியே! மூன்று உலகிலுள்ள ஞானிகளுக்கும் உபஜீவ்யமானவையும், பரமேச் வரனுக்கு ஆனந்தமயிர்கூச்சலைக் கொடுப்பவையும், ஸம்ஸாரபந்த நிவிருத்தியில் சக்தியுள்ளவையும், துக்கத்தை நீக்கவல்ல வையுமான உனது கடாக்ஷங்களால் அக்ஞானியான என்னை தயையால் புனிதனாக்குவாயாக.

कदा कलितखेलनाः₁कथमिवाम्ब काञ्चीपुरे
कलायमुकुलत्विषः शुभकदम्ब₂दूर्वाङ्कुराः।
पयोधरभरालसाः कविजनेषु ते बन्धुराः
पचेलिमकृपारसाः मम पतन्ति मार्गे दृशोः॥८८॥

கதா கலித கேலநா:₁கதமிவாம்ப காஞ்சீபுரே
கலாய முகுலத்விஷ: சுபகதம்ப₂தூர்வாங்குரா:।
பயோதர பராலஸா: கவிஜநேஷு தே பந்துரா:
பசேலிம க்ருபாரஸா: மம பதந்தி மார்க்கே த்ருசோ:॥88॥

1.**करुणयैव**, 2.**पूणाङ्कुराः** 1. கருணயைவ, 2. பூர்ணாங்குரா:

அம்ப	*தாயே! காமாக்ஷியே*
தே	*உன்னுடைய*
கலித கேலநா:	*கிரீடையுடன் கூடியவைளும்*
கலாயமுகலத்விஷ:	*காசாம் பூவின் மொட்டுப்போன்ற காந்தியுள்ளவையும்*
சுபகம்ப தூர்வாங்குரா:	*மங்கள ஸமூஹமாகிற புல்லுக்கு முளைபோன்றவையும்*
பயோதர பராலஸா:	*ஸ்தன பாரத்தால் சிரமப்பட்டவையும்*
கவிஜநேஷு	*கவிகளிடம்*
பந்துரா:	*மனோஹரங்களுமான*
பசேலிம க்ருபாரஸா:	*பரிபக்வமான கிருபாரஸங்கள்*
காஞ்சீபுரே	*காஞ்சியில்*
மம	*எனது*

த்ருசோ:	கண்களின்
மார்க்கே	மார்க்கத்தில்
கதமிவ	எப்படி
பதந்தி	விழுமோ?

தாயே! காமாக்ஷி! க்ரீடாரஸம் பொருந்தியவையும், காசாம் பூவைப்போல் அழகிய சோபையுள்ளவையும், மங்களகரங்களும், கவிகளுக்கு மனோஹரங்களுமான க்ருபா ரஸங்கள் என் கண்களில் எப்போது பார்க்கக் கிடைக்குமோ?

अशोध्यमचलोद्भवं हृदयनन्दनं देहिनां
अनर्घमधिकाञ्चि तत्किमपि रत्नमुद्योतते।
अनेन समलंकृता जयति शङ्कराङ्कस्थली
कदास्य मम मानसं व्रजति पेटिकाविभ्रमम्।।८९।।

அசோத்ய மசலோத்பவம் ஹ்ருதய நந்தனம் தேஹிநாம்
அநர்க்கமதிகாஞ்சி தத்கிமபி ரத்ன முத்யோததே।
அநேன ஸமலங்க்ருதா ஜயதி சங்கராங்க ஸ்தலீ
கதாஸ்ய மம மானஸம் வ்ரஜதி பேடிகா விப்ரமம்।।89।।

அசலோத்பவம்	பர்வதத்தில் உண்டானதும்
அசோத்யம்	சுத்தி செய்ய அவச்யமற்றதும்
தேஹிநாம்	பிராணிகளுடைய
ஹ்ருதயநந்தனம்	ஹ்ருதயத்திற்கு ஆனந்தகரமானதும்
அநர்க்கம்	விலை மதிப்பை தாண்டியதுமான
ரத்னம்	ரத்னமானது
அதிகாஞ்சி	காஞ்சியில்

உத்யோததே	விளங்குகிறது
அநேந	இந்த ரத்நத்தால்
சங்கராங்கஸ்தலீ	சங்கருடைய சரீர தேசமானது
ஸமலங்க்ருதா	அலங்கர்க்கப்பட்டதாக
ஜயதி	விளங்குகிறது
அஸ்ய	இந்த ரத்நத்திற்கு
மம மானஸம்	எனது மனதானது
பேடிகா விப்ரமம்	பெட்டியாகிற நிலைமையை
கதா	எப்போது
வ்ரஜதி	அடையப்போகிறதோ?

காமாக்ஷியாகிற உயர்ந்த ரத்னம் காஞ்சியில் விளங்குகிறது. அது மலையில் உண்டாகியது. சாணை முதலிய சுத்தி வேண்டியதில்லை. பிராணிகளின் ஹ்ருதயத்தில் தரிக்கத்தக்கது. இதனால் பகவான் பரமசிவனுடைய திருமேனியே சோபிக்கிறது. இதற்கு எப்போது என் மனஸ் ஒரு பெட்டியாக ஆகப்போகிறதோ?

परामृतझरीप्लुता जयति नित्यमन्तश्चरी
भुवामपि बहिश्चरी परमसंविदेकात्मिका।
महद्भिरपरोक्षिता सततमेव काञ्चीपुरे
ममान्वहमहंमतिर्मनसि कापि माहेश्वरी॥१०॥

பராம்ருத ஜரீப்லுதா ஜயதிநித்யம் அந்தஶ்சரீ
புவாமபி பஹிஶ்சரீ பரமஸம்விதேகாத்மிகா।
மஹத்பிரபரோக்ஷிதா ஸததமேவ காஞ்சீபுரே
மமாந்வஹ மஹம்மதிர்மனஸி காபி மாஹேச்வரீ॥௰॥

பராம்ருத ஜரீப்லுதா	உயர்ந்த அம்ருத ப்ரவாஹத்தினால் நனைந்தவளும்
நித்யம்	எப்போதும்
அந்தப்சரீ	பிராணிகள் ஹ்ருதயத்தில் ஸஞ்சரிப்பவளும்
புவாம்	உலகின்
பஹிப்சரீ	வெளியில் ஸஞ்சரிப்பவளும்
பரமஸம்விதேகாத்மிகா	உத்க்ருஷ்ட ஸம்வித் ஸ்வரூபிணியும்
காஞ்சீபுரே	காஞ்சியில்
மஹத்பி:	பெரியோர்களால்
அந்வஹம்	தினம் தினம்
அப்ரோக்ஷிதா	தர்சிக்கப்பட்டவளுமான
மாஹேச்வரீ	மஹேச்வரனுடைய
அஹம்மதி:	அபேதமான வஸ்துவான காமாக்ஷி
மம	என்னுடைய
மனஸி	மனதில்
ஸததமேவ	எப்போதுமே
ஜயதி	விளங்குகிறாள்

அம்ருத தாரையால் நனைந்தவளும் உலகில் உள்ளும், புறமும் ஸஞ்சரிப்பவளும் ஸம்வித் ஸ்வரூபிணியும், காஞ்சியில் மஹான்களால் தினம் ஸேவிக்கப்பட்டவளும், மஹேச்வரனுடைய அஹம்கார ரூபியான காமாக்ஷி எப்போதும் என் மனதில் விளங்குகிறாள்.

तमोविपिनधाविनं सततमेव काञ्चीपुरे
विहाररसिका परा परमसंविदुर्वीरुहे।
कटाक्षनिगलैर्दृढं हृदयदुष्टदन्तावलं
स्थिरं नयतु मामकं त्रिपुरवैरिसीमन्तिनी।।९१।।

தமோவிபின தாவிநம் ஸததமேவ காஞ்சீபுரே
விஹார ரஸிகா பரா பரமஸம்விதுர்வீருஹே
கடாக்ஷ நிகலைர்த்ருடம் ஹ்ருதய துஷ்டதந்தாவலம்
ஸ்திரம் நயது மாமகம் த்ரிபுரவைரி ஸீமந்தினீ।।91।।

த்ரிபுரவைரி ஸீமந்தனீ	*த்ரிபுராரியான பரமசிவ பத்நியான காமாக்ஷி தேவி*
தமோ-விபிந-தாவினம்	*அக்ஞான இருட்டாகிற காட்டில் ஓடியலைகிறதான*
மாமகம்	*என்னுடைய*
ஹ்ருதய துஷ்டதந்தாவலம்	*மனதாகிற துஷ்டயானையை*
கடாக்ஷநிகலை:	*தனது கடாக்ஷமாகிற சங்கிலிகளால்*
பரமஸம்விதுர்வீருஹே	*பரமமான ஸம்வித் என்கிற மரத்தில்*
ஸததமேவ	*எப்போதும்*
காஞ்சீபுரே விஹாரரஸிகா	*காஞ்சியில் விளையாடுவதில் ஆனந்தமுள்ளவளும்*
பரா	*உத்க்ருஷ்டையுமான காமாக்ஷி தேவி*
த்ருடம்	*கெட்டியாக*
நயது	*கட்டிப்போடட்டும்*

த்ரிபுராரிதேவியும், காஞ்சீ வாஸரஸிகையுமான அந்த உயர்ந்த தேவியானவள் அஞ்ஞான அரண்யத்தில் ஓடியாடிக் கொண்டிருக்கிற எனது மனதாகிற துஷ்ட யானையை தனது கடாக்ஷமென்கிற சங்கிலியால் பக்தியென்கிற மரத்தில் கெட்டியாக கட்டிப் போடட்டும்.

त्वमेव सति चण्डिका त्वमथ देवि चामुण्डिका
त्वमेव परमातृका त्वमसि योगिनीरूपिणी।
त्वमेव किल शाम्भवी त्वमिह कामकोटी जया
त्वमेव विजया त्वयि त्रिजगदम्ब किं ब्रूमहे।।९२।।

த்வமேவ ஸதி சண்டிகா த்வமத தேவீ சாமுண்டிகா
த்வமேவ பரமாத்ருகா த்வமஸி யோகிநீரூபிணீ।
த்வமேவ கில சாம்பவீ தவமிஹ காமகோடீ ஜயா
த்வமேவ விஜயா த்வயி த்ரிஜகதம்ப கிம் ப்ரூமஹே।।92।।

அம்ப	*தாயே!*
தேவி!	*தேவியே!*
ஸதி	*பதிவ்ரதையே!*
த்வமேவ	*நீயே*
சண்டிகா	*சண்டிகாதேவியாயிருக்கிறாய்*
அதத்வம்	*மேலும் நீ*
சாமுண்டிகா	*சாமுண்டிகை*
த்வமேவ	*நீயே*
பரமாத்ருகா	*அக்ஷரஸ்வரூபியானவள்*
த்வம் அசி	*நீயே*
யோகிநீ ரூபிணீ	*யோகிநீ ரூபம் கொண்டவள்*
த்வமேவ	*நீயே*

சாம்பவீ	சம்பு பார்யை
த்வமேவ ஜயா விஜயா	நீயே ஜயா விஜயா
த்வயி	உன்னிடமே
த்ரிஜகத்	மூன்று உலகமுமிருக்கிறது
கிம் ப்ரூமஹே	இந்த அதிசயத்தை என்ன சொல்லுவோம்

தாயே! நீயே ஸகல தேவதா ஸ்வரூபிணியாக இருக்கிறாய். சண்டிகா, சாமுண்டிகா, மாத்ருகா, யோகிநீ, சாம்பவீ, காமகோடி, ஜயா, விஜயா ஆகிய ரூபங்கள் எல்லாம் நீயே! உன்னிடமே மூவுலகும் நிற்கிறது. இந்த அதிசயத்தை எப்படி வர்ணிப்போம்.

परे जननि पार्वति प्रणतपालिनि प्रातिभ–
प्रदात्रि परमेश्वरि त्रिजगदाश्रिते शाश्वते।
त्रियम्बककुटुम्बिनि त्रिपदसङ्गिनि त्रीक्षणे
त्रिशक्तिमयि वीक्षणं मयि निधेहि कामाक्षि ते।।९३।।

பரே ஜனனி பார்வதி ப்ரணதபாலிநி ப்ராதிப–
ப்ரதாத்ரி பரமேச்வரி த்ரிஜகதாஶ்ரிதே ஶாஶ்வதே।
த்ரியம்பக குடும்பினி த்ரிபதஸங்கிநி த்ரீக்ஷணே
த்ரிசக்திமயி வீக்ஷணம் மயி நிதேஹி காமாக்ஷி தே।।93।।

பரே!	உயர்ந்தவளே
பார்வதி	பார்வதியே
ப்ரணதபாலிநி	நமஸ்கரிப்பவனை காப்பவளே
ப்ராதிபப்ரதாத்ரி	ப்ரதிபையென்ற ஞானத்தைக் கொடுப்பவளே
பரமேச்வரீ	பரமேச்வரியே

த்ரிஜகதாஶ்ரிதே	மூன்று உலகங்களுக்கும் ஆச்ரயமாயிருப்பவளே
ஶாஶ்வதே	நித்யமாயிருப்பவளே
த்ரியம்பக குடும்பினி	மூன்று கண்ணுள்ள பகவானின் மனைவியே
த்ரிபத ஸங்கினி	கர்ம, ஞான, பக்தி என்ற ஸ்தானங்களில் ஸம்பந்தப்பட்டவளே
த்ரீக்ஷணே	மூன்று கண்களையுடையவளே
த்ரிசக்திமயி	இச்சை, ஞானம், கிரியை என்ற மூன்று சக்தி ஸ்வரூபிணியே, (காமாக்ஷி)
வீக்ஷணம்	உனது கடாக்ஷத்தை
மயி	என்னிடம்
நிதேஹி	வைப்பாயாக

காமாக்ஷியே, தாயே பர்வதராஜ புத்திரியும், பக்தர்களை ஸம்ரக்ஷிப்பவளும், மூன்று உலகங்களுக்கும் ஆகாரபூதையும் காம, ஞானம், பக்திமார்க்க ஸம்பந்தமுள்ளவளும், இச்சா - ஞான - க்ரியா சக்தி ஸ்வரூபிணியாயுமுள்ள நீ என் பேரில் கடாக்ஷத்தை வைப்பாயாக.

मनोमधुकरोत्सवं विदधती मनीषाजुषां
स्वयंप्रभववैखरी विपिनवीथिकालम्बिनी।
अहो शिशिरिता कृपामधुरसेन कम्पातटे
चराचर विधायिनी चलति कापि चिन्मञ्जरी।।९४।।

மனோமதுகரோத்ஸவம் விதததீ மநீஷாஜுஷாம்
ஸ்வயம்ப்ரபவ வைகரீ விபினவீதிகாலம்பிநீ।

அஹோ ஶிஶிரிதா க்ருபா மதுரஸேந கம்பாதடே
சராசர விதாயிநீ சலதி காபி சின்மஞ்ஜரீ॥94॥

மனீஷாஜுஷாம்	ஞானவான்களுடைய
மனோமது கரோத்ஸவம்	மனதாகிற வண்டுகளுக்கு ஆனந்தத்தை
விதததீ	செய்கிறதும்
ஸ்வயம்ப்ரபவவைகரீ	தானாக உண்டாகிற வேத வாக்காகிற
விபினவீதிகாலம்பிநீ	உத்யான மார்க்கத்தில் விளங்குவதும்
க்ருபாமதுரஸேந	கருணாரஸமாதுர்யத்தால்
ஶிஶிரிதா	குளிர்ச்சியடைந்ததுமான
சின்மஞ்ஜரீ காபி	சித்ஸ்வரூபியான பூங்கொத்து ஒன்று
சராசரவிதாயிநீ	சராசர வஸ்துக்களை ஸ்ருஷ்டி செய்கிறதாக
கம்பாதடே	கம்பைக்கரையில்
சலதி	அசைந்துகொண்டிருக்கிறது
அஹோ!	அதிசயம்

கம்பாநதிக்கரையில் சித்ஸ்வரூபமான ஒரு பூங்கொத்து விளங்குகிறது. அது ஞானிகளின் மனதான வண்டுகளை ஆனந்திக்கச்செய்கிறது, வேத வாக்குகளின் ஆதாரம் பெற்றது. கருணாரஸத்தால் சீதளமாயிருக்கிறது. அது சராசர ஸ்ருஷ்டி செய்கிறது. ஆச்சரியம்!

त्वयैव जगदम्बया भुवनमण्डलं सूयते
त्वयैव करुणार्द्रया तदपि रक्षणं नीयते।

त्वयैव खरकोपया नयनपावके हूयते
त्वयैव सति कामया जगति संततं स्थीयते।।९५।।

த்வயைவ ஜகதம்பயா புவனமண்டலம் ஸூயதே
த்வயைவ கருணார்த்ரயா தத்அபி ரக்ஷணம் நீயதே।
த்வயைவ கரகோபயா நயநபாவகே ஹூயதே
த்வயைவ ஸதி காமயா ஜகதி ஸந்ததம் ஸ்தீயதே।।95।।

ஸதி	ஸதி தேவியே
ஜகதம்பயா	லோகமாதாவான
த்வயைவ	உன்னாலேயே
புவனமண்டலம்	இந்த லோகமானது
ஸூயதே	உண்டு பண்ணப்படுகிறது
தத்அபி	அந்த லோகமானது
கருணார்த்ரய	க்ருபா ரஸம் நிறைந்த
த்வயைவ	உன்னாலேயே
ரக்ஷணம் நீயதே	ரக்ஷிக்கப்படுகிறது
கரகோபயா	உக்ர கோபமுள்ள
த்வயைவ	உன்னாலேயே
நயந பாவகே	கண் அக்னியில்
ஹூயதே	ஹோமம் செய்யப்படுகிறது
காமயா	காமகோடி என்கிற பெயருள்ள
த்வயைவ	உன் மட்டிலுமே
ஜகதி	உலகில்
ஸந்ததம்	சாச்வதமாக
ஸ்தீயதே	இருக்கப்படுகிறது

ஸதி தேவியான காமாக்ஷியே, நீயே இவ்வுலகத் திற்கு ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார காரணமாயிருக்கிறாய். இந்த புவன மண்டலம் உன்னாலேயே ஸ்ருஷ்டிக்கப் படுகிறது. உனது கருணாரஸமாகிற ஈரத்தால் ரக்ஷித்து வளர்க்கப்படுகிறது. பிறகு உக்ர கோபமுள்ள உன்னாலேயே நேத்ராக்நியில் ஹோமம் செய்யப் படுகிறது. இவ்வளவிலும் நீ மட்டும் காமகோடி ரூபத்துடன் சாச்வதமாக விளங்குகிறாய்.

चराचरजगन्मयीं सकलहृन्मयीं चिन्मयीं
गुणत्रयमयीं जगत्त्रयमयीं त्रिधामामयीम्।
परापरमयीं सदा दशदिशां निशाहर्मयीं
परां सततसमन्मयीं मनसि कामकोटीं भजे।।९६।।

சராசர ஜகந்மயீம் ஸகலஹ்ருந்மயீம் சின்மயீம்
குணத்ரயமயீம் ஜகத்ரயமயீம் த்ரிதாமாமயீம்!
பராபரமயீம் ஸதா தசதிஶாம் நிஶாஹர்மயீம்
பராம் ஸததஸமந்மயீம் மநஸி காமகோடீம் பஜே।।96।।

சராசர ஜகந்மயீம்	*சராசரரூப ஜகத்ரூபிணியும்*
ஸகல ஹ்ருந்மயீம்	*ஸகல ஜனங்களின் மனோரூபிணியும்*
சிந்மயீம்	*சித்ஸ்வரூபியும்*
குணத்ரயமயீம்	*ஸத்வம், ரஜஸ், தமஸ், என்ற குணமயீயும்*
ஜகத்ரயமயீம்	*மூன்றுலோக ரூபிணியும்*
த்ரிதாமாமயீம்	*ஸூர்ய சந்த்ர அக்நிமயீயாயும்*
பராபரமயீம்	*பரம் அபரமென்கிற உயர்வுள்ளவளும்*

தஶதிஶாம்	பத்து திக்குகளுக்கும்
நிஶாஹர்மயீம்	இரவு பகல் ரூபிணியும்
பராம்	உத்க்ருஷ்ட
ஸந்மயீம்	ஸத்ஸ்வரூபிணியுமான
காமகோடீம்	காமகோடியை
மனஸி	மனதில்
பஜே	ஸேவிக்கிறேன்

ஸ்தாவர ஜங்கம ஜகத்ரூபிணியும், ஸத்வ ரஜஸ் தமஸ் மூன்று குணம், மூன்றுலகம், மூன்று தேஜஸ், அஹோராத்ரம் இவைகளின் ஸ்வரூபிணியும், ஸத், சித்ஸ்வரூபிணியும் பராபரமயமான ஸ்வரூபிணியுமான காமகோடியை மனதில் ஸேவிக்கிறேன்.

[1]सति जगदम्बिके हरकुटुम्बिनि वक्त्ररुचा
जितशरदम्बुजे घनविडम्बिनि केशरुचा।
परमवलम्बनं भव समादृतकाञ्चिपुरे[2]
मम गतसंविदो जडिमडम्बर ताण्डविनः।।९७।।

[1]ஸதி ஜகதம்பிகே ஹர குடும்பினி வக்த்ரருசா
ஜித ஶரதம்புஜே கன விடம்பினி கேஶருசா।
பரமவலம்பனம் பவ ஸமாத்ருத காஞ்சிபுரே[2]
மம கத ஸம்விதோ ஜடிமடம்பர தாண்டவிந:।।97।।

1 जय, ஜய 2. सदा पररूपधरे, ஸதா பரரூபகரே

ஸதி	ஸதிதேவியே!
ஜகதம்பிகே	ஜகந்மாதாவாயும்
ஹரகுடும்பினி	ஹரனின் மனைவியும்

வக்த்ரருசா	முக காந்தியால்
ஜித சரதம்புஜே	ஜயிக்கப்பட்ட சரத்கால தாமரையையுடையவளும்
கேசருசா	கூந்தலின் காந்தியால்
கன விடம்பினி!	மேகத்தை பரிஹஸிப்பவளும்
ஸமாத்ருதகாஞ்சீபுரே	காஞ்சீபுர வாஸத்தை ஆதரிப்பவளுமான காமாக்ஷியே!
ஜடிமடம்பர தாண்டவிந:	அக்ஞானத்தின் ஆடம்பரத்தால் கூத்தாடுகிறவனும்
கத ஸம்வித:	ஞானத்தை இழந்தவனுமான
மம	எனக்கு
பரம்	உயர்ந்த
அவலம்பனம்	ஆதாரப்பிடிப்பாக
பவ	ஆகவேணும்

ஜகதம்பிகையும் ஹரபத்நியும் சரத்கால தாமரைபோன்ற முகமுள்ளவளும், மேகங்களுக்கு ஸமமான கூந்தலை தரிப்பவளும், காஞ்சீவாஸினியுமான ஏ! ஸதிதேவியே! ஞானத்தையிழந்து அக்ஞான ஆர்ப்பாட்டத்தால் கூத்தாடுகிற எனக்கு நீ பரம ஆதாரமாயிருந்து காப்பாயாக.

भुवनजननि भूषाभूतचन्द्रे नमस्ते
कलुषशमनि कम्पातीरगेहे नमस्ते।
निखिलनिगमवेद्ये नित्यरूपे नमस्ते
परशिवमयि पाशच्छेदहस्ते नमस्ते।।९८।।

புவனஜநநி பூஷாபூதசந்த்ரே நமஸ்தே
கலுஷஶமநி கம்பாதீரகேஹே நமஸ்தே।

நிகில நிகமவேத்யே நித்யரூபே நமஸ்தே
பரசிவமயி! பாஶச்சேதஹஸ்தே நமஸ்தே॥98॥

புவனஜநநி!	உலகத்திற்கு மாதாவே
பூஷாபூகசந்த்ரே	சந்திரனை அலங்காரமாகக் கொண்டவளே
தே	உனக்கு
நம:	நமஸ்காரம்
கலுஷ ஶமநி!	பாபத்தை போக்குகிறவளே!
கம்பாதீரகேஹே	கம்பாநதிக்கரையில் ஆலயம் கொண்டவளே
நமஸ்தே	உனக்கு நமஸ்காரம்
நிகிலநிகமவேத்யே	எல்லா வேதங்களாலும் அறியக்கூடியவளே
நித்யரூபே	சாச்வதமாயிருப்பவளுமான
தே	உனக்கு
நம:	நமஸ்காரம்
பரசிவமயி!	பிரம்ஹசிவரூபிணியும்
பாஶச்சேதஹஸ்தே!	பாஶத்தையும் அங்குசத்தையும் கையில் தரிப்பவளுமான
தே	உனக்கு
நம:	நமஸ்காரம்

சந்திரனை அலங்காரமாகக்கொண்டவளும், ஜகந்மாதாவும், பாபஶமநியும், ஸகல வேத ப்ரதிபாத்யையும், நித்ய ரூபியாயும், பாசாங்குச தாரிணியுமான பரமசிவஸ்வரூபியான உனக்கு நமஸ்காரம்.

क्वणत्काञ्ची काञ्चीपुरमणिविपञ्चीलयझरी
शिर:कम्पा कम्पावसतिरनुकम्पाजलनिधि:।
घनश्यामा श्यामा कठिनकुचसीमा मनसि मे
मृगाक्षी कामाक्षी हरनटनसाक्षी विहरतात्।।९९।।

க்வணத்காஞ்சீ காஞ்சீபுரமணிவிபஞ்சீ லயஜரீ
ஶிர:கம்பா கம்பாவஸதிரநுகம்பாஜலநிதி:।
கனஶ்யாமா ஶ்யாமா கடினகுசஸீமா மநஸி மே
ம்ருகாக்ஷீ காமாக்ஷீ ஹரநடனஸாக்ஷீ விஹரதாத்।।99।।

க்வணத்காஞ்சீ	*சப்திக்கிற ஒட்டியாணமணிந்தவளும்*
காஞ்சீபுரமணிவிபஞ்சீ	*காஞ்சிபுரத்தில் வாசிக்கப்படுகிற ரத்நமய வீணையின்*
லயஜரீ ஶிர: கம்பா	*லயத்த்தில் ஈடுபட்ட சிரக்கம்பத்தோடு இருப்பவளும்*
கம்பாவஸதிரநுகம் பாஜலநிதி:	*கம்பாநதி வாஸியும், கருணைக்கு ஸமுத்ரம் போன்றவளும்*
கனஶ்யாமா	*மேகம்போல் ச்யாமையும்*
ஶ்யாமா	*யௌவநம் பொருந்தியவளும்*
கடினகுசஸீமா	*கடினஸ்தன பிரதேசமுள்ளவளும்*
ம்ருகாக்ஷீ	*மான் கண்போன்ற கண்களுள்ளவளும்*
ஹரநடநஸாக்ஷீ	*ஹரனுடைய தாண்டவத்திற்கு ஸாக்ஷிணியாயுமிருக்கிற*

	காமாக்ஷியானவள்
மே	எனது
மனஸி	ஹ்ருதயத்தில்
விஹரதாத்	விளையாடட்டும்

ஒட்டியாண சப்தத்துடன் கூடியவளும், காஞ்சீபுரியில் வாசிக்கப்படுகிற வீணாரஸத்தை சிரக்கம்பத்தோடு கேட்டு, ஆனந்திப்பவளும், கருணைக்கடலும், ஹரனின் தாண்டவத்திற்கு ஸாக்ஷியாக விளங்குகிற காமாக்ஷி எனது மனதில் விஹாரம் செய்யட்டும்.

समरविजयकोटी साधकानन्दधाटी
***मृदुगुणगणपेटी मुख्यकादम्बवाटी।**
मुनिनुतपरिपाटी मोहिताजाण्डकोटी
परमशिववधूटी पातु मां कामकोटी।।१००।।

ஸமரவிஜயகோடீ ஸாதகானந்ததாடீ
ம்ருதுகுணகணபேடீ முக்யகாதம்பவாடீ।
முனிநுதபரிபாடீ மோஹிதாஜாண்டகோடீ
பரமசிவவதூடீ பாது மாம் காமகோடீ।।100।।

★ **मृदुगुणपरिपेटि** ★ ம்ருதுகுணபரிபேடி

ஸமரவிஜயகோடீ	யுத்த ஜயத்திற்கு கோடிபோன்றவளும்
ஸாதகானந்த தாடீ	உபாஸகர்களுக்கு ஆனந்த பிரவாஹம் போன்றவளும்
ம்ருதுகுணகணபேடீ	நல்லகுணகணங்களுக்கு பெட்டிபோலும்
முக்யகாதம்பவாடீ	உயர்ந்த

	கதம்பவிருக்ஷவாடியுள்ளவளும்
முனிநுதபரிபாடீ	ரிஷிகளால் துதிக்கப்பட்ட நடத்தையுள்ளவளும்
மோஹிதா ஜாண்டகோடீ	மோஹிக்கச் செய்யப்பட்ட பிரம்ஹாண்ட கோடியை உடையவளும்
பரமசிவவதூடீ	பரமசிவபார்யையுமான
காமகோடீ	காமகோடி (காமாக்ஷி தேவியானவள்)
மாம்	என்னை
பாது	ரக்ஷிக்கட்டும்.

யுத்தத்தில் ஜயக்கொடிபோல் விளங்குகிறவளும், உபாஸகர்களுக்கு ஆனந்தகாரிணியாயும், நற்குணங்களு க்கு இருப்பிடமான பெட்டிபோன்றவளும், கதம்பவன வாஸியும், ரிஷிகளால் கொண்டாடப்பட்டவளும், ப்ரம் ஹாண்டங்களை தனது மாயையால் மோஹிக்கச்செய்கிற வளுமான பரமேச்வர பத்நி காமகோடி என்னை ரக்ஷிக்கட்டும்.

परां मनसि भावयन् प्रतिदिनं तु भट्टारिकां
पठन्स्तुतिमिमां जन: प्रचितनामपारायण:।
सुधाकरकलाञ्चित: सुरकदम्बसंसेवित:
कलायमुकुलच्छविर्भवति कामकोटी स्वयम्।।१०१।।

பராம் மனஸி பாவயன் பிரதிதினம் து பட்டாரிகாம்
படன் ஸ்துதிமிமாம் ஜந: ப்ரசிதநாம பாராயண:।
ஸுதாகர கலாஞ்சித: ஸுரகதம்ப ஸம்ஸேவித:
கலாய முகுலச்சவி: பவதி காமகோடீ ஸ்வயம்।।101।।

பராம்	பரதேவதையான
	உயர்ந்த ஸ்திரீயான
பட்டாரிகாம்	காமாக்ஷியை
மனஸி	மனதில்
பாவயன்	த்யானம் செய்துகொண்டு
ப்ரசிதநாமபாராயண:	பரிசயம் செய்யப்பட்ட தேவீ நாமபாராயணத்தை உடைய
ஜன:	மனிதன்
இமாம்	இந்த
ஸ்துதிம்	ஸ்தோத்திரத்தை
பிரதிதினம் படன்	தினமும் படித்தால் (அவன்)
ஸுதாகர கலாஞ்சித:	சந்திரகலையால் அலங்கரிக்கப்பட்டதும்
ஸுரகதம்ப ஸம்ஸேவித:	தேவஸமூஹத்தால் ஸேவிக்கப்பட்டதும்
கலாய முகுலச்சவி:	காசாம்பூமொட்டுக்கு ஸமமுமான சரீர காந்தியுடன்
ஸ்வயம்	தானே
காமகோடீ பவதி	காமகோடி காமாக்ஷியாகி விடுகிறான்

இந்த ஸ்துதிசதக ஸ்தோத்திரத்தை எவன் பிரதி தினம் நாம பாராயணத்துடன் சேர்த்து படிக்கிறானோ அவன் தேவர்களாலும் ஸேவிக்கப்படுவதுடன் சந்திர கலையும் காசாம்பூ தேஜஸ்ஸும் பெற்று காமகோடி காமாக்ஷியாகவே ஆகிவிடுவான்.

इमं परवरप्रदं प्रकृतिपेशलं पावनं
परापरचिदाकृतिप्रकटनप्रदीपायितम् ।
स्तवं पठति नित्यदा मनसि भावयन्नंबिकां
जपैरलमलं मखैरधिकदेहसंशोषणैः

இமம் பரவரப்ரதம் ப்ரக்ருதிபேஶலம் பாவனம்
பராபர சிதாக்ருதி ப்ரகடந ப்ரதீபாயிதம் ।
ஸ்தவம் படதி நித்யதா மனஸி பாவயந் அம்பிகாம்
ஜபைரலம் அலம் மகை: அதிக ஹேம்ஸம்ஶோஷணை:

आर्यामेव विभावयन्मनसि यः पादारविन्दं पुरः
पश्यन्नारभते स्तुतिं स नियतं लब्ध्वा कटाक्षच्छविम् ।
कामाक्ष्या मृदुलस्मितांशुलहरीज्योत्स्नावयस्यान्वितां
आरोहत्यपवर्गसौधवलभीं आनन्दवीचीमयीम् ।।

ஆர்யாமேவ விபாவயன் மநஸி ய: பாதாரவிந்தம் புர:
பஶ்யந் நாரபதே ஸ்துதிதம் ஸநியதம் லப்ப்த்வா
கடாக்ஷச்சவிம் ।
காமாக்ஷ்யா ம்ருதுலஸ்மிதாம்ஶுலஹரீ
ஜ்யோத்ஸாவயஸ்யாந் விதாம்
ஆரோஹத்யபவர்க ஸௌத வலபீம் ஆனந்த வீசீமயிம் ।।

★★★★★★★★★★★★★★

।।इति स्तुतिशतकं सम्पूर्णम्।।

ஸ்துதி சதகம் முற்றிற்று

★★★★★★★★★★★★★

சுபம்

Errata

Page No.	Sloka No.	Line No.	Error	Corrected
17	7		ऐदंपयर्यम्	ऐदंपर्यम्
			निगमानम्	निगमानाम्
38	16		सुरभिबाणजनुषा	सुरभिबाणजुषा
50	27		अप्रनिषदर उत्सवल	उपनिषदर उत्सवल
62	40		वक्षोर्वामा	वक्षोवामा
65	43	2	ஶோணிமகர்வாய	ஶோணிமகர்வாய அஸ்மை ஸமர்ப்யதே
74			க்ரீட	கிரீட
78	50	2	चण्डकरचक्र	चण्डकरशक्र
78			அதச்தஸ்ய	அதஸ்தஸ்ய
83	54		बोधिसिरां	बोधसिराम्
92	60		ஆதிக்ஷத்	ஆதிக்ஷந்
103			பஞ்சப்ரம்ஹாகாராம்	பஞ்சப்ரம்ஹாகாரம்
110	75		रसाधाटी	रसधाटी
111			சிரிஷாபா	சிரீஷாபா
127	89		उर्वीधरीन्द्रकन्ये	उर्वीधरेन्द्रकन्ये
143	99		पञ्जर शुक	पञ्जरगत शुक
			கலபஞ்ஜர	கலபஞ்ஜரகத
146	101		पठतामार्याकटाक्षेण	पठतामार्या कृपाकटाक्षेण
147	1		மோஹாந்தகாரம் நிவஹம்	மோஹாந்தகாரநிவஹம்
175	20		चिन्ध्यगिरि कुटन	विन्ध्यगिरिकुण्ठन

181	23		नटते	नर्तति
182	24		अन्यन्नर्शीतलमतन्द्रयन् (पाठ)	अन्यन्नर्शीतलमतन्द्रयतात्
197	34		லக்ஷ்மீ	லக்ஷ்மீ:
200	36		अन्यत्रिनेत्र मुलभं	अन्यत त्रिनेत्रसुलभं
207	40		पतत्यमृम	पतत्यमृं
217	48		कामेश्वरी	कामेश्वरि
228	55		ओष्ट भ्रूवल्ली	ओष्ठ भ्रूवल्लि
239			ஸக்ருன்னத்வா	ஸக்ருன் நத்வா நத்வா
270	85		भवतमिश्रकदम्बकाना	भवतमिस्रकदम्बकाना
283	94		त्राणेम	त्राणेन
314	9		बन्दुपदवीम्	बन्धुपदवीम्
361	36		किञ्चिन्मणिकटकनादैरिव	किञ्चिन्मणिकटकनादैमृदु
362	37		उदिते உதிதே	उदीते உதீதே
340	24		भ्रुवमकृतकानां	ध्रुवमकृतकानां
344	27		चेतोवन्नखरुचि	चेतोवन्नखररुचि
366	39		மைத்ரீபரசிதம்	மைத்ரீபரிசிதம்
373	43		नलिनरुचिशिक्षापठुतरा	नलिनरुचिशिक्षापटुतरा
			सततमपिगम्या	सततमभिगम्या
384	49		பாதகலீம்	பாதயுகலீம்
385	50		मनोज्ञम्त्वत्पादो	मनोज्ञस्त्वत्पादो
391	53		க்ஜ	தவ
402	59		भास्वतां	भास्वत्तां
418	67		நாத:	நத:

432	75		स्वभावदन्योन्यं शोणिना	स्वभावादन्योन्यं शोणिंना
440	79		பவந்-வலயீ	பவனவலயீ
443	81		वलद्रोही	बलद्रोही
461	91		पाथेधौ	पाथोधौ
465	93		(पाठम्) रुचिरां	तरसा
467	94		रुन्धीधाश्चरणयुगली	रुन्धीथाश्चरणयुगली
474	98		(पाठम्) गजेन्द्र	गजेन्द्रे
474	98		सदा बद्धुं	सदा बन्धुं
			பத்தும்	பந்தும்
476	99		कामाक्ष्या:	कामाक्षि
480			(पाठम्) पादाम्भूजयुगलम्	पादाम्भोजयुगलम्
483	103		भवत्या	भक्त्या
522	19		மாதருணபதி	மாதருபைதி
			சங்கா சங்கா கரீ	சங்காகரீ
535	24		श्रीकाञ्चीपुरनायिके संतूयते (पाठम्)	श्रीकाञ्चीपुरनायिके समतया संस्तूयते
565	39		कर्मग्रन्थिनियन्त्रितैरसुगमं	कर्मग्रन्थिनियन्त्रितैरसुगमं
			मूडस्य (पाठम्)	मूढस्य
578	45		சைதக்த்ய	வைதக்த்ய
596	54		बीजाङ्किरै:	बीजाङ्कुरै:।
			सिन्धुवीचिपृष्तै	सिन्धुवीचिपृषतै
610			श्रीकामाक्षी	श्रीकामाक्षि
613			त्वान्तं	ध्वान्तं
617			सुविमलं मान्या	सुविमलं मन्या

621	68		चुश्रुनि	चुश्रुनि
			ச்ரோணேணீ	ச்ரோணீ
625	70		गिरीशं (पाठम)	गिरिशं
639	78		मुद्राकरा	मुद्राकरा:
647	83		किं त्रैस्रोतसं	किम त्रैस्रोतसं
649			ஶஶிருச்சாடநீ	ஶஶிருசேருச்சாடனீ
656	88		तवक्त्रमेव	तववक्त्रमेव
665			(पाठम) माहचर्य	माहचर्य
674	99		स्पृ र्तीं	स्पूर्तीं
680	2		दारिद्र्य	दारिद्र्य
690	8		संश्रयतां (पाठम्)	सत्क्रियताम्
711			भ्रमरितसरित्कूले	भ्रमरितसरित्कूलो
722	30		ஹிமகிங்சதட	ஹிமகிரிதட
743	47		नानाविबुदमुकुटी	नानाविबुधमुकुटी
747	50		याच्ज्ञामूरिकुरु	याच्ञामूरीकुरु
			परिपाकं	परीपाकं
761	59		पातपान्	पादपान्
787	79		(पाठम्) मनसिजतरो	मनसिजरिपो
803			स्थिरं	चिरं
804	92		त्वमिह (3rd line)	त्वमसि
809	96		परां सततसमन्मयीं	परां सततसन्मयीं
			பராம் ஸததஸமந்மயீம்	பராம் ஸததஸந்மயீம்
817			भावयन्नंबिकां पश्यन्नारभते	भावयन्नम्बिकां पश्यन्नारभते

Jai Ganesh Offset 98401 11457